உலாப் பிரபந்தங்கள்

[தொகுதி-1]



மகாமகோபாத்தியாய டாக்டர் உ.வே.சாமிநாதையர்
நூல் நிலையம்
பெசன்ட் நகர், சென்னை - 90

(1994)

உலாப் பிரபந்தங்கள்

(தொகுதி-1)

பதிப்பாசிரியர்

மகாமகோபாத்தியாய தாக்ஷிணாத்ய கலாநிதி

டாக்டர் உ.வே. சாமிநாதையர்

மகாமகோபாத்தியாய

டாக்டர் உ.வே. சாமிநாதையர் நூல் நிலையம்

பெசன்ட் நகர், சென்னை-600 090.

1994

மகாமகோபாத்தியாய
டாக்டர் உ.வே. சாமிநாதையர்
நூல் நிலைய வெளியீடு எண். 124

நூல் நிலைய முதற்பதிப்பு - 1994; பிரதிகள் 1200

©
**மகாமகோபாத்தியாய
டாக்டர் உ.வே. சாமிநாதையர் நூல் நிலையம்
பெசன்ட் நகர், சென்னை-600 090.**

விலை ரூ. 45/-

Printed at : **Srivenni Graphics**
Offset Printers
Madras-600 041.

பதிப்பாளர் குறிப்பு

''இருந்தமிழே உன்னால் இருந்தேன் இமையோர்
விருந்தமிழ்தம் என்றாலும் வேண்டேன்'' - திருந்த
உதிப்பித்த பன்னூல் ஒளிர அடியேன்
பதிப்பிக்க வேகடைக்கண் பார்.

(ஐயரவர்கள்)

பேதைமுதல் ஏழ்பருவம் பெண்கள் மயக்கமுற
வோதுமறு குற்றானொள் வேலோனென் - றேத
மறக்கலி வெண்பாவின் மாட்டல் உலாவாம்
புறதசாங் கந்தாங்கிப் போற்று.

இச்செய்யுள் உலா இலக்கியம், பற்றிக் கூறுகின்றது. பேதை, பெதும்பை, மங்கை, மடந்தை, அரிவை, தெரிவை, பேரிளம்பெண் என்னும் ஏழு பருவப் பெண்களும் காமுற்று மயங்கத் தலைவன் தெருவில் வந்தான் என்று கலிவெண்பாவால் பாடுவது உலாவாகும். தலைவனின் தசாங்கமும் இதன்கண் இடம்பெறும். காப்பியங்களும் முத்தொள்ளாயிரக் கைக்கிளைப் பாடலும் உலாவரும் தலைவனையும், காதலுறும் தலைவியையும் பற்றிக் கூறுகின்றன.

தலைவனின் தசாங்கம் உலாவில் சிறப்பிக்கப்படுதலைத் தொன்னூல் விளக்கம் முதலிய நூல்கள் கூறுகின்றன. சிதம்பரப் பாட்டியல் தலைவன் இளமைப் பருவத்தினனாக இருத்தல் வேண்டும் என்று கூறுகின்றது. பிரபந்த தீபிகை மத்தகயம், பரி, சிவிகை ஆகியவற்றை உலாவரும் வாகனமாகக் கூறுகின்றது.

ஏழுவகைப் பருவத்துப் பெண்களும் தெருவினில் திருவுலாப்புறத்து வருகின்றவனைக் கண்டு மயங்கி மயல் எய்தியதாகக் கலிவெண்பாவினாலே பாடுவது உலா என்று வழங்கப்பெறும். உலாவென்னும் பிரபந்தம் பாடுவது; முடி புனைந்த மன்னருமாய்

இருபத்தொரு பிராயத்துக்கு உட்பட்டவருக்கும், தேவர்களுக்கும் உலாப் பாடலாம். அல்லாதவர்களுக்கு ஆகாது. '(நவநீதப்பாட்டியலுரை)

டாக்டர் ஐயரவர்கள் எட்டுத் தொகை நூல்களைப் பதிப்பிக்கும்போதும், காப்பிய நூல்களைப் பதிப்பிக்கும்போதும் இடையிடையே பல பிரபந்த நூல்களையும் பதிப்பித்துள்ளார்கள். அவர்கள் பதிப்பித்துள்ள உலா நூல்கள் ஒன்பது. நூல் நிலையம் வெளியிட்ட உலா நூல்கள் ஐந்து.

ஐயரவர்கள் தம் வாழ்நாளில் பதிப்பித்துள்ள எல்லா நூல்களையும் தமிழ் உலகிற்கு அளிக்கவேண்டும் என்ற திட்டத்தின்படி முதலில் உலா நூல்களை மூன்று தொகுதியாகப் பிரித்துக்கொண்டு, முதல் தொகுதியில் **கடம்பர் கோயில் உலா, திருக்கழுக்குன்றத்துலா, திருக்காளத்திநாதருலா, சங்கரலிங்க உலா** என்ற நூல்களைத் தமிழ் உலகிற்கு நூல் நிலையம் அளிக்கின்றது.

1. கடம்பர் கோயில் உலா:

குழித்தலை இரயில்வே நிலையத்திற்கு வடமேற்கே ஒரு கல் தொலைவில் உள்ளது இத்தலம். கண்ணுவ முனிவருக்கும், தேவர்களுக்கும் சிவபெருமான் கடம்ப விருட்சத்தில் தோன்றிக் காட்சி கொடுத்த தலம். கடம்பர் ஐந்து: (1) கோயில் கடம்பன் (2) ஆதிக் கடம்பர் (3) வாழிக்கடம்பர் (4) இளங்கடம்பர் (5) பெருங்கடம்பர். இந்நூலின் முதற்பதிப்பு 1932 ஆம் ஆண்டு ஐயரவர்களால் பதிப்பிக்கப்பெற்றது. 383 கண்ணிகளையுடையது. அப்பரால் பாடப்பெற்ற தலம்.

2. திருக்கழுக்குன்றத்துலா:

ஆசிரியர் - அந்தகக்கவி வீரராகவ முதலியார். மூவராலும் பாடப்பெற்ற தலம். மலையின்மேல் எழுந்தருளியுள்ள பெருமான் வேதகிரீசர். மலையின் அடிவாரத்தில் உள்ள பெருமான் பக்தவற்சலர். இந்நூல் 409 கண்ணிகளையுடையது. 1938 ஆம் ஆண்டு ஐயரவர்கள் பதிப்பித்துள்ளார்கள்.

3. திருக்காளத்திநாதருலா:

ஆசிரியர் - சேறைக் கவிராச பிள்ளை. இந்நூல் 578 கண்ணிகளையுடையது. இத்தலம் ரேணிகுண்டா புகைவண்டி நிலையத்திற்கு வடகிழக்கில் பதினைந்து கல் தொலைவில் உள்ளது. மூவராலும் பாடப்பெற்ற தலம். 1904 ஆம் ஆண்டிலும், 1925 ஆம் ஆண்டிலும் ஐயரவர்கள் பதிப்பித்துள்ளார்கள்.

4. சங்கரலிங்க உலா:

ஆசிரியர் பெயர் தெரியவில்லை. இந்நூல் 312 கண்ணிகளையுடையது. 1933 ஆம் ஆண்டு ஐயரவர்களாலும், 1944 ஆம் ஆண்டு கலியாண சுந்தரையர் அவர்களாலும் பதிப்பிக்கப்பெற்றுள்ளது.

ஐயரவர்கள் பதிப்பித்துள்ள் நூல்களெல்லாம் பதிப்பிக்க வேண்டும் என்று பல அன்பர்கள் கேட்டுக்கொண்டதற்கிணங்க இந்நூலினைத் தமிழுலகிற்கு நூல் நிலையம் அளிக்கின்றது.

வித்துவான் சு. பாலசாரநாதன்
ஆராய்ச்சித் துறை
டாக்டர் உ.வே. சாமிநாதையர் நூல் நிலையம்

பெசன்ட் நகர், சென்னை-90.
23.8.94

இந்நூலில் அடங்கியவை

1. கடம்பர் கோயில் உலா

2. திருக்கழுக்குன்றத்துலா

3. திருக்காளத்திநாதருலா

4. சங்கரலிங்க உலா

கடம்பர்கோயில் உலா

பதிப்பாசிரியர்

மகாமகோபாத்தியாய தாக்ஷிணாத்ய கலாநிதி
டாக்டர் உ.வே. சாமிநாதையர்

மகாமகோபாத்தியாய
டாக்டர் உ.வே. சாமிநாதையர் நூல் நிலையம்
பெசன்ட் நகர், சென்னை-600 090.
1994

டாக்டர் ஐயரவர்கள்
1855—1942

கணபதி துணை

முகவுரை

திருநாவுக்கரசு நாயனார் தேவாரம்

திருச்சிற்றம்பலம்

ஆரியந்தமி ழோடிசை யானவன்
கூரியகுணத் தார்குறி நின்றவன்
காரிகையுடை யான்கடம் பந்துறைச்
சீரியல்பத்தர் சென்றடை மின்களே

தேவாரவைப்பு

''காவிரிசூழ் கடம்பந்துறை யுறைவார் காப்புக்களே.''
''கடைமுடிகானூர் கடம்பந்துறை
கயிலாய நாதனையே காணலாமே''.
மயிலாடுதுறை கடம்பந்துறை யாவடுதுறை
மற்றுந்துறையனைத்தும் வணங்குவோமே'' - **திருநா.**
''பாங்கூ ரெங்கள் பிரானுறையுங் கடம்பந்துறை'' - **சுந்தர.**

காடவர்கோன் திருவெண்பா

அழுகு திரிகுரம்பை யாங்கதுவிட் டாவி
ஒழுகும் பொழுதறிய வொண்ணா - கழுகு
கழித்துண் டலையாமுன் காவிரியின் றென்பாற்
குழித்தண் டலையானைக் கூறு

திருச்சிற்றம்பலம்

உலாவென்னும் தமிழ்ப்பிரபந்தம் பாட்டுடைத் தலைவனது பவனியைச் சிறப்பித்துப் பாடப்படுதலால் இப்பெயர் பெற்றது; உலா பவனி, தலைவன் வீதியிற் பவனிவருகையில் அவ்வீதியின்கணுள்ள பேதை முதற் பேரிளம்பெண் ஈறுகிய ஏழுபருவ மகளிரும் அவனைக்கண்டு காதல் கூர்ந்ததாகக் கலிவெண்பாவாற்

பாடப்படுவது இது. இதன்கண் பாட்டுடைத் தலைவனது பலவகைப் பெருமைகள், ஏழுபருவமகளிர்களின் இயல்பு, அவர்களடைந்த மெய்ப்பாட்டு வகைகள் முதலியன காணப்படும். தத்தம் புலமைத் திறத்திற்கேற்பக் கருத்துக்களைத் தொடர்புபெற அமைத்து விரித்துத் தாம் வழிபடு தெய்வங்கள்மீதும், தம் ஆசிரியர் மீதும், தம்மை ஆதரித்த உபகாரிகள்மீதும் பல புலவர்கள் உலாக்களைப் பாடியிருக்கின்றனர்.

சேரமான் பெருமாணாயனாரால் இயற்றப்பட்ட **ஆதியுலாவும்** **தத்துவராய**ரால் இயற்றப்பெற்ற **ஞானவிநோதன் உலாவும்**, கவிச்சக்கரவர்த்தியாகிய ஒட்டக்கூத்தரால் இயற்றப்பெற்ற **மூவருலாவும்** ஆகிய பழைய நூல்கள் முறையே இம்மூன்று வகைக்கும் உதாரணங்களாக உள்ளவை.

தலங்களிலுள்ள மூர்த்திகளைத் தலைவராகக் கொண்டு பாடப்பட்ட தமிழ்ப் பிரபந்தங்கள் பிற்காலத்து மலிந்தன. அவ்வகையில் உலாக்களும் இயற்றப்பட்டன. ''நன்னெடு வீதியின், மதகளிறூர்தன் முதனிலையாகும்'' **பன்னிருபாட்டியல்**, (சூ 216) என்ற சூத்திரத்தோடு இயையப் பாட்டுடைத் தலைவர்களாகிய அரசர்கள் களிற்றின்மீது பவனிவந்தனரென **மூவருலா**விற் காணப்படுகின்றது. **ஆதியுலா**விற்குச் சிவபெருமான் இடபவாகனத்தின்மீது எழுந்தருளியதாகச் சொல்லப்பட்டுள்ளது. தலசம்பந்தமாகப் பிற்காலத்து இயற்றப்பெற்ற உலாக்களில் அவ்வத்தலத்திலுள்ளநாயகர் (ஸோமாஸ்கந்தர்) திருத்தேரில் எழுந்தருளியதாக அமைக்கப்பட்டுள்ளது. **சொக்கநாதருலாவில்** மட்டும் தேர் முதலிய ஏழுவாகனங்களிற் சொக்கநாதர் ஏழு நாள் உலாப் போந்ததாகக் காணப்படுகின்றது.

*தலசம்பந்தமான உலாக்கள் அவ்வத்தலத்துக்குரிய கணிகையர்களால், தொன்றுதொட்டுப் 'பாடப்பெற்றுவந்தன. உலாக்களிற்கூறப்படும் ஏழு பருவமகளிரும் பொதுமகளிராதலின் இப்பிரபந்தம் அவர்களோடு தொடர்புடையதாயிற்று.

மகளிர்க்குரிய **ஏழு பருவங்களின் இயல்புகள் ஒவ்வோருலாவிலும் வருணிக்கப்படுமேனும் ஒவ்வொன்றும் தனித்தனியான சிறப்புக்களோடு விளங்கும். **பெருங்கதையில் நீராட்டரவம்** என்னும் பகுதியில் இவ்வேழுபருவ மகளிருடைய இயல்புகள் கூறப்பட்டுள்ளன. நிற்க.

---

* இப்பொழுது இந்த வழக்கம் பலதலங்களில் அருகிவிட்டது.

** சொக்கநாதருலா, முகவுரையைப் பார்க்க.

தலவரலாறு

கடம்பர் கோயிலுலாவென்பது சோழநாட்டிற் காவிரியின் தென் கரையிலுள்ளதும் தேவாரம் முதலியவற்றைப் பெற்றதுமாகிய கடம்பர் கோயிலென்னும் தலத்தில் எழுந்தருளியுள்ள சிவபெருமானைத் தலைவராகக் கொண்டு பாடப்பெற்றது. இதனை இயற்றிய ஆசிரியர் இன்னாரென்பது தெரியவில்லை. ஆனாலும் திருத்தேரை, ''திருவா வடுதுறையி, லெம்பிரா னன்ப ரிதயமோ'' (கண்ணி, 84) என்பதனால் அவர் திருவாவடுதுறையாதீனத்து அடியவராகிய ஒரு பெரியவரென்று கருதப்படுகிறார்.

இத்தலத்து மூர்த்தி **கடம்பவனநாதர், சுந்தரேசர், ஸௌந்தர**ரென வழங்கப்பெறுவர்.

அம்பிகையின் திருநாமம் முற்றுமுலையம்மையென்பது (29, 57, 74, 179); இது வடமொழியில் **பாலகுசாம்பிகை** என வழங்கும்.

தலவிருட்சம்: கடம்பமரம், 13,25,41

தீர்த்தம்: காவிரியாறு; 16,34,46,583,61. பிரம தீர்த்தமென்ற ஒரு தீர்த்தமும் உண்டு. **கோவையாரில்,** ''தண்கடம் பைத்தடம் போற் கடுங் கானகந் தண்ணெனவே'' (220) என்று சொல்லப்படும் கடம்பைத் தடம் இதுவாக இருத்தல் கூடுமென்று தோன்றுகிறது.

இத்தலம் கடம்பை, கடம்பந்துறை, கடம்பவனம், தட்சிணகாசி, குழித் தண்டலையெனவும் வழங்கும். பிரமதேவர் வழிபட்டுத் திருக்கோயில் முதலியன அமைத்துத் திருத்தேர்விழாவும் நடத்தினமையாற் **பிரமபுர**மென்றும் (19), சோமகாசுரனிடத்திலிருந்து திருமால் வேதங்களை மீட்டற்குக்காரணமாகிய திருவருளைப் பெற்ற இடமாதலிற் **சதுர்வேதபுரி**யென்றும் (33-6), முருகவேள் பூசித்துப் பேறுபெற்றமையிற் **கந்தபுர**மென்றும் (37) இது பெயர்பெறும். இத்தலத்திற் சத்தகன்னியர் பூசித்து, தம்மைப்பற்றி வருத்திய பிரமகத்தியினின்றும் நீங்கினர் (21-6); வேதசன்மாவென்னும் ஓரந்தணர் தவம்புரிந்து மதுரையில் நிகழ்ந்த திருமணக்கோலத்தை இங்கே தரிசித்தனர் (27-31); அகத்திய முனிவர் பூசித்துப் பேறுபெற்றனர்; 32.

இத்தலத்துத் திருக்கோயிலில், பிரமதேவர், சத்தமாதர்கள், அகத்திய முனிவர் முதலியவர்களுடைய திருவுருவங்கள் தனித்தனியே உள்ளன. *இப்பொழுது கடம்பர் கோயிலைச் சார்ந்ததும், **குழித்தலை** என வழங்குவதுமாகிய ஊரின்கண் உள்ள ஆலயத்தில் எழுந்தருளியிருக்கும் ஸ்வாமியின் திருநாமம் **ஸ்ரீசுந்தரேசுவர**ரென்பது. அம்பிகையின் திருநாமம் **ஸ்ரீமீனாட்சி**யென்பது. இவற்றை நோக்கும்பொழுது கடம்பர்கோயிலிற் சிவபெருமான் திருமணக்கோலம் காட்டியதன் அறிகுறியாக இவ்வாலயம் பண்டைக்காலத்தில் அமைக்கப்பெற்றதென்று கருதப்படுகின்றது.

இத்தலத்திற்குத் திருநாவுக்கரசுநாயனார் அருளிய தேவாரப் பதிகம் ஒன்றும், ஐயடிகள் காடவர்கோன் நாயனார் அருளிய திருவெண்பா ஒன்றும், ஸ்ரீஅருணகிரிநாதர் அருளிச்செய்த திருப்புகழும் உண்டு.

120 ஆம் கண்ணியால் காளத்தியென்பவரால் இயற்றப்பெற்ற அந்தாதி ஒன்று உண்டென்று தெரிகின்றது. மதுரைத் **திருப்பணி மாலை**யால், **பாகை**யென்னும் ஊரிலிருந்த **காளத்தியப்ப முதலியா**ரென்பவர் ஒருவர் மதுரையிற் சில திருப்பணிகள் செய்தாரென்று புலப்படுகின்றது. அவர் இவ்வந்தாதி செய்தவராகக் கருதப்படுகிறார்.

இவையன்றி வடமொழியில் ஒரு புராணம் உண்டு. திருவாரூர் **ஸ்ரீமுத்துஸாமிதீக்ஷி**தரென்னும் சங்கீதவித்வானால் கேதாரகௌளராகத்தில் இயற்றப்பெற்ற மிகச் செவ்விதாகிய, ''நீலகண்டம் பஜே'' என்னும் வடமொழிக் கீர்த்தனம் ஒன்றும் இத்தலத்திற்கு உண்டு.

''சேர்தொண்டை மண்டலத்தோர் செய்தபெரும் புண்ணியமோ, ஈதென்னும் பொற்றடந்தேர்'' (85) என்னுங் கண்ணியால் இத்தலத்தில் அக்காலத்தில் இருந்த சிவபக்திச் செல்வர்களாகிய தொண்டை மண்டல வேளாளர்களால் திருத்தேர் இயற்றப்பெற்றதென்பதும், 86-7 ஆம் கண்ணிகளால் பாகையென்னும் ஊரிலிருந்த **சரவணை**யென்னும் ஒரு செல்வர் இத்தலத்துச் சிவபெருமானுக்குத் திருவாபரணங்கள் செய்து சாத்தினரென்பதும் தெரியவருகின்றன.

---

* இச்செய்தியையும் வேறு சிலவற்றையும் எனக்குத் தெரிவித்தவர், குளித்தலை போர்டு ஹைஸ்கூல் ஸம்ஸ்கிருத பண்டிதர் ப்ரம்மஸ்ரீ அருணாசல சாஸ்திரிகள்.

பாகையென்பது தொண்டை நாட்டில் திருக்கூவமென்னுந்தலத்துக்கு அருகிலுள்ள **பாகசாலை**யென்னும் ஊர். அவ்வூரினராகிய**சரவண முதலியா**ரென்பவர் இற்றைக்குச் சற்றேறக்குறைய 200 வருடங்களுக்கு முன்பு திரிசிராப்பள்ளி நவாபினிடம் மந்திரியாக இருந்தவர். அவர் இத்தலத்தில் இருந்த திருவாவடுதுறை ஆதீனத்து மடத்தில் மடபதியாக இருந்தவர்பால் நேசம் உடையவராக இருந்தார். அவ்விருவர்களும் சேர்ந்து கடம்பந்துறைக் கோயிலைப் புதுப்பித்துத் திருத்தேர், திருவாபரணம் முதலியவை செய்து வைத்திருக்கிறார்கள். மதுரைக் கோயிலிலும், அக்காலத்திலிருந்த **மாணிக்கவாசக தம்பிரா**னென்பவர் மூலமாக இவர் சில கட்டளைகளை நடத்திவந்தார். கலியப்தம். 4790 இல் பல ஜமீன்தார்கள் இவரது சிவபக்தி முதலியவற்றை உணர்ந்து இவருக்குப் பல கிராமங்களைச் செப்புச் சாஸனம் மூலமாக அளித்திருக்கிறார்கள். இவருடைய உருவம் கடம்பந்துறைக்கோயில் தூணில் அமைக்கப்பட்டுள்ளது. கலி. 4890 இல் இவரது பௌத்திரராகிய சரவண முதலியாரென்பவர் காலத்தும் சில நிலங்கள் அவர்களால் கொடுக்கப்பட்டிருக்கின்றனவென்று தெரியவருகின்றது.

நூலாராய்ச்சி

ஏழு பருவமாதர்களுடைய இயல்புகளும், விளையாட்டுக்களும் மரபு வழுவாமல் இந்நூலிற் கூறப்படுகின்றன.

பேதை

ஆசிரியர் பேதையை வருணிக்கையில் மன்மதன் விற்குணத்தைக் கண்டறியா மெல்லரும்பு, தான்உரைக்கும் சொற்குணத்தை ஓராச் சுகப்பிள்ளை யென்று உருவகம் செய்கின்றார். இத்தலத் தொடர்பமைய, ''பொற்கை, உமையார் கடம்பலர்மட் டுண்டறியா வண்டு'' (144-5) என்கின்றார். ''கம்ப ருறையுங் கடவுள்ளஞ் சூதத்தின் , கொம்பி லுறையாக் குயிற்பிள்ளை'' (**ஏகாம்பரநாதருலா**), ''என்னுனைக் கன்று ரிமயத் தராதரத்து, மன்னுத சஞ்சீ வனக்கன்று'' (**திருவானைக்காவுலா**) ''மைதிகழு நீலகண்டன் வாழ்கின்ற புட்பவன, மெய்திவிளையாடா விளஞ்சுரும்பு'' (**திருப்பூவணநாதருலா**) எனப் பிறரும் இங்ஙனமே கூறுதல்காண்க. பின்னும் இவர், ''நீணிலத்து மன்னுங் கலைபொருந்தா மான்கன்று'', ''நீர் பின்னஞ் செயவறியாப் பிள்ளையன்னம்'' எனச் சிலேடை நயம்பட உருவகம் செய்கின்றார். அவளுடைய முடிக்கப்படாத கூந்தலுக்கு எழுவாய் பயனிலையின்றி

முடிக்கப்படாமலிருக்கும் புன்கவிஞருடைய செய்யுளை உவமிக்கின்றார். அவளுடைய இனிய மழலைமொழிக்கு உவமையாகத் தொண்டர்கள் பக்தி பரவசர்களாகி இறைவன்முன் நாத்தழுதழுத்துக் கூறும் துதியைச் சொல்லுதல் அறிந்து மகிழ்தற்குரியது. அவள் பாவையொடு பயிலல் சிற்றிலியற்றிச் சிறுசோறட்டு விளையாடல் முதலிய பேதைப் பருவத்திற்குரிய செயல்களை மரபு வழுவாமல் அமைக்கின்றார். சிறுசோற்றை, ''அரனார்க் கிட்டமுறும், அன்பருலகத் தருந்தா தருந்திடுசிற், றின்பமென'' அவளுண்டாளென் பதனால், அன்பர்களுடைய இயல்பைப் புலப்படுத்துகின்றார். அவள் கடம்பவன நாதரைக் கண்டு இவர் யாரென்று செவிலியரைக் கேட்ப அவர்கள் விடை கூறும் பகுதியில் அவள் பருவத்துக்கேற்ப, ''அண்டங்களைச் சிற்றிலாகச் சமைத்து விளையாடும் பாலன்'' என்னும் பொருள் தோன்றக் கூறிப் பின் பலமுறை பாலனென்னும் பெயர் தொனிக்குமாறு இறைவனுடைய தன்மைகளைஅவர்கள் எடுத்துச் சொல்லுவதாக அமைத்திருக்கின்றார்.

பெதும்பை

பெதும்பை, அன்பு அரும்பினும் அது முற்றாப் பருவத்தினள். இப்பருவம் புனைவதற்கரியதென்பதை, ''பேசு முலாவிற் பெதும்பை புலி'' என்னும் செய்யுட் பகுதியால் அறியலாம். இப்பருவத்தினளை, ''பேதை குணம் பாதிமங்கைப் பெண்குணத்திற் பாதிகலந், தோது பருவ முறு பெதும்பை'' (172) எனத் தகுதிபெற இவ்வாசிரியர் கூறியிருப்பது பாராட்டத் தக்கது. இங்ஙனம் வேறு யாரும் கூறியதாகத் தெரியவில்லை. காதலென்னும் வித்து முளைத்து நெஞ்சைக்கொழு கொம்பாகக் கொண்டு வளருந் தன்மையினளென அவளியல்பைப் புலப்படுத்துகின்றார். அவளது முடிக்கப்பட்ட கூந்தலுக்குத் தவங்கள் பல செய்தும் முடிவுபெறாமல் ஈசனருளெய்துங்காலத்திலே நிறைவேறி முடியுஞ்செயலை உவமையாக்குகின்றார். அவள் நீலம், முத்து, பச்சை, மாணிக்கம், கோமேதகம், வைரம், பவளமென்னும் ஏழுவகை மணிகளாலாகிய ஏழு கழங்குகளை எடுத்து ஆடத் தொடங்கியதாக ஒரு செய்தியை அமைக்கின்றார். இப்பகுதியில் அவ்வேழு கழங்கிற்கும் சிவபெருமானோடு தொடர்புடைய பொருள்களையே உவமை கூறுகின்றார். பெதும்பைப் பருவப் பெண்கள் ஏழு கற்களையேனும் ஏழுகழற்சிக்காய்களையேனும் ஒருவகைப் பாட்டுப்பாடி ஆடுதல் தமிழ்நாட்டு வழக்கு. அப்பாட்டில் ஒன்று முதல் ஏழு எண்வரையுள்ள பொருள்கள் முறையே கூறப்படும். இம்முறையைப் பின்பற்றி இங்கே

ஆசிரியர் ஒன்றுமுதல் ஏழு வரையிலுள்ள எண்கள் அமையத் தலப்பெயரையேனும் தலங்களின் செய்திகளையேனும் எடுத்துக்காட்டுகின்றார். அவ்வகையில் ஒன்றுக்கு **ஏகாம்பரமும்**, இரண்டுக்கு இருவர்தேடும் மலையும், மூன்றுக்குத் திரிசிராப்பள்ளியும், நான்குக்கு நான்மாடக்கூடலும், ஐந்துக்குப் பஞ்சநதியும், ஆறுக்கு ஆறு பெண்கள் அட்டமாசித்திபெற்ற பட்டமங்கையும், ஏழுக்கு ஏழுலகத் தலங்களும் அமைக்கப்படுகின்றன. இவ்வாறு ஏழுகழங்குகளுக்குரிய பாடற்பொருளாகத் தலச் செய்திகள் அமைக்கப்பெற்றிருத்தலைத் திருவானைக்காவுலா, ஏகாம்பரநாதருலா, திருக்காளத்திநாதருலா, இரத்தினகிரி (வாட்போக்கி)யுலா, திருவேங்கடவுலா என்பவற்றிற் காணலாம்.

பெதும்பை, கடம்பவனநாதரைத் தரிசித்ததை, ''மாலளந்து காணு மலையை யிருவிழிக்கோ லாலளந்தாள்'' என்கின்றார். அவள் நிலையைக் கண்ட தாய்மார், ''தன்னை யறியும் தருணம் வந்த தாற்றலைவன், றன்னை மனக்குறிப்பிற் றானறிந்தாள்'' என்று கூறுகின்றனர். இதன்கண், பெதும்பை மங்கைப் பருவத் தன்மை வாய்ந்தனளென்பது குறிப்பிக்கப்படுகின்றது; ''நன்றறிவார் சொன்ன நலந்தோற்று நாண்டோற்று, நின்றறிவு தோற்று நிறைதோற்று நன்றாகக் கைவண்டும் கண்வண்டு மோடக் கலையோட, நெய்விண்ட பூங்குழலா ணின்றொழிந்தாள்'' (பெதும்பை) என **ஆதியுலா**வும், ''மல்கு முவகைக் கலுழி வரவாப், பில்கு... கொங்கைப் புதுவரவும் தோளும் குறைநிரம்ப, மங்கைப் பருவத்தே வாங்கினாள்'' (பெதும்பை) என **இராசராசசோழனுலா**வும், ''உருவமிகப் பாரித் தொளிபடைத்து மற்றைப் பருவ மெனப் புளகம் பாரித்-தொருவாத, பேரழகு நந்தம் பெருமாட்டிக் கெய்தியது'' எனச் **சொக்கநாதருலா**வும் கூறுகின்றன. பெதும்பையின் நிலைகண்ட செவிலியர் இறைவனைநோக்கி, ''மேற்பசப்புக், காட்டுமான் காட்டியிசைக் கானமறியாத வெங்கள், வீட்டுமான் கைக்கொளவோ வீதிவந்தீர்'' என்று கூறும் சொற்களில் சிலேடையும், மானைக்காட்டி மானைப்பிடிப்பதென்னும் வழக்கமும் அமைந்துள்ளன.

மங்கை

மங்கைப் பருவத்தினளை, ''காலையரும்பிப் பகலெல்லாம் போதாகி, மாலை மலருமிந் நோய்'' என்றாற் - போலவே, ''பேதை யரும்பிப் பெதும்பை யந்தப் போதாகி, மாது மலர்ந்த வனப்பினாள்'' என்கின்றார். இக்கருத்து முற்பருவத்து நிலைமையையும் இப்பருவ

நிலைமையையும் புலப்படுத்துகின்றது. 'நாணம், மடம், அச்சம், பயிர்ப்பு என்னும் மந்திரிமார்கள் சூழ நகிலாகிய மகுடத்தைச் சூட்டிப் பெண்கள் மன்மதனுக்குரிய மந்திரங்களையுரைக்க மனமாகிய சிங்காதனத்திலேற்றிச் சிவபெருமானுடைய புகழாகிய அபிஷேகத்தைச் செய்து மூர்த்திகரமுண்டாக்கி மோகமாகிய அரசனுக்குப் பட்டந்தரித்தாள்' என்பதில் அவளது காதல் முற்றிய தன்மையை விளக்குகின்றார். அவள் சிவபெருமான் புகழைப்பாடி அம்மானையாடினளென்பதை, ''அம்மானை யாடிவந்த வம்மானைப் பாடியே, யம்மானை யாடு மளவிலே'' என்று சொற்பின்வருநிலையணிபடச் சொல்லுகின்றார். **திருவானைக்காவுலா**வில் அரிவைப்பருவத்தில் அம்மானை கூறப்படுகின்றது. **திருக்காளத்தி நாதருலா**வில் மங்கைப் பருவத்தில், ''தன்னைமறந் தாட்டுத் தலைபடைத்த வம்மானை, அன்னைதனை யீன்ற மலையம்மானை முன்னைநாட், கொங்கையொரு மூன்றுடைய கொம்பையரு வம்மானை, யங்கையிலே வீற்றிருக்கு மம்மானைக் - கங்கையெனும், அம்மானைப் பெற்ற சடையம்மானைப் பாடியவ, ளம்மானை யாடு மளவிலே'' என வருவதும், **இரத்தினகிரியுலா**வில் மங்கைப் பருவத்திலும் **திருப்பூவணநாதருலா**வில் மங்கைப் பருவத்திலும் அம்மானை கூறப்படும் பகுதிகளும் இதனோடு ஒப்புமை உடையன.

மடந்தை

மடந்தைப் பருவத்திற் பின்னுள்ள செய்தி கூறப்படுகின்றது; மடந்தைப் பருவப் பெண் தன் பாங்கி ஒருத்தியை விளித்து, ''ஓர் ஓவியனை அழைத்துவந்து கடம்பவன நாதர் திருவுருவத்தை எழுதும்படி கூறுவாயாக'' என்றாள். அதற்குப் பாங்கி, ''அப்பெருமானை யாரெழுதவல்லார்? அவரது திருமுடியை எழுதினாலும் அதிலே கங்கையை எவ்வாறு அமைத்தல் கூடும்? திருநெற்றியை வரைந்தாலும் அதிலுள்ள அக்கினிக் கண்ணை எங்ஙனம் எழுதுவான்? மற்ற இரண்டு கண்களைத் தீட்டினாலும் அவற்றில் அருட்பார்வையை எப்படிப் பொருத்தமுடியும்? திருச்செவியில் தோடுகளை எழுதினாலும் அத்தோட்டு வடிவமாகவுள்ள கம்பளாசுவதரர்களென்னும் இசை வல்லார்களின் பாடலைப் புலப்படுத்த முடியுமோ? திருக்கழுத்தை எழுதினாலும் அது வேதத்தை முழங்கும்படி செய்யமுடியுமோ? திருக்கரங்களை எழுதினாலும் அவை உன்னைத் தழுவிக்கொள்ளும்படி செய்வானோ? திருவடிகளை எழுதினாலும் கால்மாறியாடலைக் காட்டமுடியுமோ? அவனை

அறிஞர்களே அறிவார்கள். இப்படிய னிவ்வுருவ னிவ்வண்ணத்தன் ஒப்புடையன், ஆமென் றெழுதவல்லா ரியாரே'' என்று விடை கூறினுள்.

ஓவியத்திற் கடவுளின் திருவுருவை எழுதுவித்துக் கண்டு மகிழும் விருப்பம் மடந்தைக்கு இருந்தமையை இவ்வாசிரியர் கூறுதலைப் போலவே சிலசில வேறுபாடுகளுடன் வெவ்வேறு பருவப் பெண்கள் அங்ஙனம் விரும்புவதைச் சில உலாக்கள் கூறுகின்றன. **ஏகாம்பரநாதருலா**வில் அரிவைப் பருவத்தினள் ஒரு சித்திரசாலையிற்சென்று காஞ்சித் தல சம்பந்தமான வரலாறுகளைப் புலப்படுத்தும் ஓவியங்களைக் கண்டு மகிழ்ந்தாளென்றும், **திருப்பூவணநாதருலா**வில் தெரிவைப்பருவத்தினள் ஓர் ஓவியனை அழைத்துத் திருப்பூவணநாதர் திருவிளையாட்டு முதலியவற்றை எழுதுமாறு செய்து கண்டு களித்தாளென்றும், **சங்கரலிங்க உலா**வில் பேரிளம்பெண் பருவத்தினள் சித்திரசாலையிற்சென்று அங்கே எழுதியிருந்த சங்கரலிங்கத்தின் திருவிளையாடல்களின் உருவத்தைப் பிறருக்குக் காட்டினுளென்றும், **தஞ்சைப் பெருவுடையாருலா**விற் பெதும்பைப் பருவத்தினள் ஓவியன் ஒருவனைக் கண்டு சோமாஸ்கந்த மூர்த்தியின் திருவுருவத்தைத் தீட்டித் தரச்செய்து கண்டாளென்றும் கூறப்பட்ட செய்திகளால் இவ்வழக்கத்தை அறியலாம்.

அரிவை

அரிவையின் வருணனையில் சிலேடையொடுகூடிய தற்குறிப்பேற்ற அணி அமைந்துள்ளது. அவளுடைய கண் மானை மருட்டி வண்டைச் சிறைப்படுத்தி மீனைப் பயமுறுத்தி வனசத்தைப் பங்கமுறச் செய்து குவளையை வனத்தில் ஏற்றி வாரிதியை அதோகதியாகப் பண்ணி விஷத்திற்கு நித்யகண்டமேவும் நிலைகொடுத்து வேல்முனையைச் சத்தியிலையெனவும் கத்தியை உறையிடக் காணுதெனவும் சொல்லச் செய்து கொலைக்குணத்தில் தன்னைநோக்க யமன் தருமனென்னும், பெயரால் வழங்கச் செய்ததென்று புனையும் பகுதியில் அவ்வப்பொருள்களின் இயற்கைத் தன்மையையும் தொழிலையும் பெயரையும் வேறு பொருள்படும்படி தோற்றச் செய்து அமைத்துள்ளார். அவள்குழல், ''சூரியன் வந்தாலும் நீர் என்று வந்தீர்? என்று அஞ்சாமற் கேட்கும் இருளைப் போன்றது'' என்று சொல்வதில் நகைச்சுவை காணப்படுகின்றது.

அவள் ஒரு விறலியை அழைத்துத் தேவர்களுக்குள்ளே வீரம் கருணை அழகு என்னும் மூன்றினாலும் மிக்கவர் யார் என்று கேட்ப' அவ்விறலி காமதகனம், திரிபுசங்காரம், தக்கயாக சங்காரம், பிரமன் தலையைக் கொய்தது, அந்தகாசுர சங்காரம், காலசங்காரம் முதலிய வீரச் செயல்களைச் சொல்லிச் சிவபெருமானது வீரத்தையும், யானை, வண்டு, சிலந்தி, பாம்பு, கரிக்குருவி, பன்றிக் குட்டிகள், எறும்பு முதலிய விலங்கினங்கட்கும் திருவருள் செய்ததைச் சொல்லி அவரது பெருங்கருணையையும்; முனிவர்களும் பெண்மையை அவாவிய பேரழகையுடைய திருமாலே பெண்ணாகி அவாவும் அழகுடையவரென்று சொல்லி அவரது அழகையும் புலப்படுத்தி, ''வீரப் பெருக்கழகன் மென் கருணைச் சீரழகன், ஆரத் திருமேனி யாரழகன்'' (309) ஆகிய அவரே யாவற்றிலும் மிக்கவரென்று வீணை வாசித்தல் முகமாகக் கூறினாளென்ற ஒரு செய்தி காணப்படுகின்றது. இவ்வாறு பாட்டுடைத் தலைவருடைய ஏற்றத்தைப் புலப்படுத்தும் வழக்கு வேறு சில உலாக்களிலும் உண்டு. ஏகாம்பரநாதருலாவில் 'பேரிளம்பெண் அந்தணரொருவரை நோக்கி, ''சிவபெருமான் நிலைக்கும், ஏனைத் தேவர் நிலைக்கும் வாசி கூறுக'' எனக் கேட்க, அவர் சிவபெருமான் பெருமையைப் புலப்படுத்தியதாக அமைத்த செய்தியும்; **திருக்காளத்திநாதருலா**வில் அரிவை விறலியொருத்தியை அழைத்துப் பெண்களை ஆட்கொண்ட அழகுடைய நாயகர்களுக்குள்ளே சிறந்தவர் யாரென்று கேட்ப அவள் ஒவ்வொருவர்க்கும் ஒவ்வொரு குற்றம் கூறிச் சிவபெருமானே சிறந்தவரென நிறுவுவதாக உள்ள செய்தியும்; **இரத்தினகிரியுலா**வில் மடந்தை பாங்கியர்களைப் பார்த்து, 'விண்ணுக்கு மண்ணுக்கும் வேறு முலகுக்குங், கண்ணுக் கினியவராங் காவலரை எண்ணித்தான், சொல்லுவீர்'' என்ன அவர்கள் சிவபெருமானே அத்தகையவரெனக் காரணங்காட்டிப் புலப்படுத்தியதாகக் கூறப்படும் செய்தியும் இவ்வகையைச் சார்ந்தனவே.

தெரிவை

தெரிவைப் பருவத்தில் குறத்தியின் செய்தி ஒன்று சொல்லப்படுகிறது. அதுவருமாறு:

தெரிவை மணிமேடையில் வீற்றிருக்கையில் குறிசொல்லும் குறத்தி ஒருத்தி அங்கே வந்தாள். அவளைக் கண்ட தெரிவை, ''என்

மனக்குறிப்பையறிந்து சொல்வாயாக'' என்றாள். அவள், ''ஒரு வருடம் சொல்வாயாக'' என்றாள். ''பதினோராவது வருடம்'' என்றாள் தெரிவை. அவ்வருடம் 'ஈசுவர' ஆதலின், ''ஈசுவரன்பால் உனக்கு விருப்பம் இருக்கின்றது'' என்றாள். பின் ஒருமாதத்தைச் சொல் என்று அவள் கூற, தெரிவை, ''நான்காவது மாதம்'' என்றாள். அம்மாதம் ஆடியாதலின் ''மன்றாடிமீதில் விருப்பம் உனக்கு இருக்கிறது'' என்றாள். பின்னும் குறத்தி ஒருவாரத்தைக் கேட்க இரண்டாவது வாரமென்றாள். அது சோமவாரமாதலின், ''நீ சோமசேகரனை விரும்புகின்றாய்'' என்றாள் குறத்தி. அவர் வருவாரோ எனத் தெரிவை கேட்ப, ''வந்து அவர் அருள் செய்வார்'' என்று குறத்தி கூறிப் பரிசு பெற்றுச் சென்றாளென்பது.

இவ்வாறு குறத்திபாற் குறிகேட்கும்வழக்கும், உலா நூல்களுள் **சங்கரசோழனுலா**வில் பெதும்பைப் பருவத்தில், ''தூற்று, விசும்பின் மழைகடுப்ப மெய்க்குறஞ்சொன் னூட்குப் பசும்பொன் மழைபொழியப் பார்த்தும்'' எனச் சுருக்கமாகவும், **தஞ்சைப் பெருவுடையாருலா**வில் மடந்தைப் பருவத்தில் குறத்தி தலைவியின் கைரேகையைப் பார்த்துக் குறிசொன்னாள் என்னும் பகுதியில் விரிவாகவும் காணப்படுகின்றது.

பேரிளம்பெண்

பேரிளம்பெண் வருணனையில் அவள் குழலைப் பிராயத்திற்கேற்ப, ''இருட்டறையுட் பல்கணியி லெய்துநிலாக் கூடும், இருட்டனைநே ரூடு நரை யெய்தும் - திருக்குழல்'' என்பார். பூணணிதலையும் மையிடுதலையும் அவள் நீத்தவளென்பார். இவ்வாறே பிற உலாக்களிலும் காணப்படுகின்றது.

அவள் ஒரு பூங்காவை அடைந்து அங்கே உள்ள ஒவ்வொரு மரத்தையும் கண்டு அவ்வம் மரம் தல விருட்சமாகஉள்ள தலத்தை நினைந்து பரவினாளென்கின்றனர். இம்முறை, **திருவானைக்கா உலா**வில் பேரிளம்பெண் பருவத்திலும், **சொக்கநாதருலா**வில் அரிவைப் பருவத்திலும் காணப்படுகின்றது.

பேரிளம்பெண் இறைவரது சேவையையே செய்துகொண்டிருப் பவளென்பது பல உலாக்களிற் கூறப்படும். இவர், ''பரன்சேவை யன்றிப், புதுமை விழிக்குப் பொருந்தாள்'' என்பதில் அக்கருத்தைச் சிலேடையில் நன்கு அமைத்துக் காட்டுகின்றார்.

பிற தலங்கள்

இந்நூலில் பல தலங்களைப் பற்றிய செய்திகள் இடையிடையே கூறப்படுகின்றன.

கடம்பவனநாதர் எழுந்தருளுகையில் இன்ன இன்ன தலத்தையுடையவர் வந்தாரென்று திருச்சின்னம் முழங்கின எனக் கூறப்படும். பகுதியில் பல தலங்களின் பெயர்கள் வேறுதொனிப்பொருள் தோற்றுகின்ற அடைமொழிகளோடு ஆளப்படுகின்றன. இதனை, '**அங்கயற் கண்ணிசார்** கூடலான், **ஆட்டைவிடாப் புலி**யூரான், சண்மதத்துமேலான தந்திவனத்தான், மண்பரவு புற்றிடத்தான், ஆவணத்து முற்றும்விலையாமென்றவன், பூவணத்து வாசப் பொருள், துன்பக் கடல் கடத்துந் தோணிபுரத்தான், இன்பவெள்ளத்து **ஐயாற்றிறை**, தேவி **மருங்கமரும் காஞ்சிபுரன்**, துதிக்கைபெற்ற **வாரணவாசியான்**, பைக்குளடங்காத **மாணிக்கமலையான்**, ஆனந்தத்தேனை அன்பர்க் கூட்டிவைக்கும் ஈங்கோய் மலையெம் பிரான் என்பவற்றாலறியலாகும். இப்பகுதியிற் சொல்லப்பட்ட தலங்கள் முறையே மதுரை, தில்லை, திருவானைக்கா, திருவாரூர், திருவெண்ணெய்நல்லூர், திருப்பூவணம், சீகாழி, திருவையாறு, காஞ்சீபுரம், காசி, இரத்தினகிரி, திருவீங்கோய்மலை என்பன (112-9). பெதும்பை கழங்காடுகையிற் பாடுவதாக அமைத்துள்ள தலங்கள் திருவேகம்பம், திருவண்ணாமலை, திரிசிராப்பள்ளி, மதுரை, திருவையாறு, பட்டமங்கை என்பன. பின்னும் விறலியொருத்தி இறைவர் கருணையைப் புலப்படுத்தற்காக அவரை வழிபட்டு அருள் பெற்ற விலங்கு முதலியவற்றைக் கூறும் வாயிலாகச் சில தலங்கள் குறிப்பிக்கப்படுகின்றன. அவை, திருக்காளத்தி, திருவானைக்கா, ஸ்ரீசைலம், திருவண்டுறை, திருக்குடந்தைக் கீழ்க்கோட்டம், திருநாகேச்சுரம், திருநாகைக்காரோணம், திருப்பாம்புரம், திருப்பாம்பணி, திருக்கேதீச்சுரம், திருவாலவாய், திருக்குற்றாலம், திருவெறும்பீச்சுரம் (303-5) முதலியன.

பேரிளம்பெண், பூங்காவை அடைந்து ஒவ்வொரு மரத்தையுங் கண்டு அவ்வம்மரத்தைத் தமக்குரிய விருட்சமாகப் பெற்ற தலங்களை நினைந்து வழிபட்டதாகக் கூறும்பகுதியில் வந்துள்ளவை; திருப்பைஞ்ஞீலி, திருக்குற்றாலம், திருநெல்வேலி, திருமுல்லைவாயில்,

திருவேகம்பம், திருவாட்போக்கி, திருவீங்கோய்மலே, திருவாலீசம் (அயிலூர்) என்பன. அவள் இன்பத்தைப் பயிரின் விளேவாக உருவகம் செய்யும் பகுதியில், ''காட்சிக் கதிர்தோன்ற, ஏமமுறு நெல்வேலி யீசரே'' எனத் திருநெல்வேலி அதற்கு இயைபுற எடுத்தாளப்படுகின்றது.

கடம்பவிருட்சம், திருமணக்கோலக்காட்சி, சுந்தரரென்னும் திருநாமமென்பவற்ருல், இத்தலம் மதுரையோடு ஒப்புமையுடையதாதலின், அத்தலச் செய்திகள் பல இதன்கண் எடுத்தாளப்படுகின்றன; ''செல்லாருஞ் சோலேத் திருவால வாயதனில், வில்லாரு மிந்திரவி மானத்துட்கல்லானே, சித்தரரு ளாற்கரும்பு தின்னுமந்நாட் டென்னனணி, முத்துவடம் போலுமிள மூரலாள்'' (150-51) என்பதில் திருவாலவாயென்னும் திருநாமமும் இந்திர விமானமும் கல்லானேக்குக் கரும்பருத்திய திருவிளேயாடலும், ''மையேந்து சோலே மதுரை நகர்க்கவுரி, கையேந்துபாலன்'' (167) என்பதில் விருத்தகுமார பாலரான திருவிளேயாடலும், ''மீனக் கொடியன் விரைவிற் பயந்ததால்'' (238) என்பதில் தடாதகைப் பிராட்டி திருவவதாரமும், ''தாண்மாறி ஆட்டுவிக்கப் பாண்டியனு ரல்லவே'' (260) என்பதில் கான்மாறியாடிய திருவிளேயாடலும், ''முன்ஞளிசைவாது சாய்ந்திடவே, எம்பிரான்கூட லிறைவனரு ளாற்செயிக்த, கும்பமுலே மாமயிலே'' (292-3) என்பதில் இசைவாதுவென்ற திருவிளேயாடலும், ''வல்லமையில் லாதகய வாய்தமக்கும் - வெல்லமரில், அன்னே யிழந்த வடலேனக் குட்டிகட்கும் ... அன்புதவி'' (303-5) என்பதில் கரிக்குருவிக்கு உபதேசம் செய்த திருவிளேயாடலும்; பன்றிக் குட்டிக்குப் பால்கொடுத்த திருவிளேயாடலும் குறிக்கப்படுகின்றன.

கடம்பவனநாதருக்குரிய தசாங்கங்கள் 360-ஆங் கண்ணி முதலியவற்றில் மடக்கணி அமையச் சொல்லப்படுகின்றன. அவை வருமாறு:- (1) மலே: கயிலேமலே, (2) ஆறு: காவிரி, (3) நாடு: சோழநாடு, (4) நகர்: கடம்பர்கோயில், (5) மாலே: கொன்றை, (6) குதிரை: வேதம், (7) யானே: அயிராவணம், (8) கொடி: இடபம், (9) முரசு: ஓங்காரம் (10) ஆணே: சந்திரன் முதலியவற்றை நிலேபெயராது ஒழுகச் செய்யும் ஆணே.

சிவபெருமான் பெருமை

இன்னும் சிவபெருமானது பெருமைகளைப் பலவாற்ருனும் எடுத்துப் பாராட்டுவார். 'சக்தியாகவும் சிவமாகவும் அருள்புரியும் தன்மையான்'(1) என்பர். மணமாகவும், மலராகவும் உள்ளவன் (3) என்று இவர் கூறுதல், ''வாச மலரெலா மானாய் நீயே'' என்னும் திருவாக்கையும், ''உள்ளத்தி லுள்ளன் புடையார் கருத்தறியும், வள்ளல்'' என்பது ''மனத்து ணின்ற கருத்தானைக் கருத்தறிந்து முடிப்பான்றன்னை'' என்பதையும் நினைப்பிக்கின்றன. ''பட்டிமையில் லாருளத்தின் பாக்கியமே'' (268) என்பதில் வஞ்சகமில்லாருடைய உள்ளத்தில் வீற்றிருக்குந் தன்மையைப் புலப்படுத்துகின்ருர். ''மெய்யடியான், திங்கட் சுதையெனவே செய்யுமொரு முப்பாலுஞ், சங்கத்தி னூட்டுந் தமிழ்ப்பாலன்'' (167-8) என்பதனாலும், ''தெள்ளுதமிழ்ச் சொல்லே, பொருளே'' (380-81) என்பதனாலும் இறைவருக்குத் தமிழோடுள்ள தொடர்பைக் கூறுகின்ருர்.

பொருளணிகள்

கடம்பவனநாதர் திருவுலாப் போதுதற்கு முன் திருவாடை முதலியன அணிந்துகொள்வதாகக் கூறியுள்ள பகுதியில் (59-68) சிலேடையொடு கூடிய தற்குறிப்பேற்ற அணி அமைந்துள்ளது. திலகம் தீட்டியதை, தேவியோடு சேர்ந்திருக்கச் செய்யும் மன்மதனைக் கோபித்த அக்கினியிருக்கும் வீட்டின் கதவைப் பூட்டி ஒரு முத்திரையிட்டதுபோல இருந்ததென்கின்ருர். திருக்குடை நிழற்றல் முதலியவற்றைச் சொல்லும் பகுதியிலும் ★77-82) அவ்வணி அமைந்துள்ளது. மங்கையர்கள் சாமரை இரட்டியது சிவபிரான் திருமுடியிலுள்ள கங்கை கிரீடத்தால் மறைக்கப்பட்டமையால் அதிற்சென்று விளையாட எண்ணிய அன்னங்கள் அதனைக்காணுமற் சுழல்வது போன்றிருந்தது என்கின்ருர். சூரியோதயத்தைச் சொல்லுகையிலும், அரிவையின் வருணனையிலும் (274-85) அவ்வணியினமைதி காணப்படுகின்றது.

137,147,203,346-7 ஆம் கண்ணிகளில் சிலேடையணி அமைந்துள்ளது. 237-9 ஆம் கண்ணிகளில் கடம்பவனநாதருக்கும் அம்பிகைக்கும் மங்கைக்கும் சிலேடையும், 337-9 ஆங் கண்ணிகளில் மன்மதனுக்கும், வேடனுக்கும் சிலேடையும் காணப்படுகின்றன. சொற்பொருட்பின்வருநிலை (73), சொற்பின்வருநிலை (125, 166-70,

225), நிரனிறை (296-8, 318-21), என்னும் அணிகளும் இடையிடையே உள்ளன.

44-5 ஆங் கண்ணிகளில் இரதம் முதலிய நாற்படைகளின் பெயர்களும், 46 ஆம் கண்ணி முதலியவற்றில் அரசன், மந்திரி, தளகர்த்தன், ஸ்தாஞபதி, ராயசத்தன், அதிகாரி, காரணிகன், கற்பித்தோன், மகாஜனன், பிரவர்த்தகன் என்னும் உத்தியோகப் பெயர்களும், 112 ஆம் கண்ணி முதலியவற்றில் வேறுசில பெயர்களும், 205 ஆம் கண்ணியில் காட்டுமான் என்பதும் தொனியில் அமைந்துள்ளன.

பலவகையான மடக்கணிகளும் (38, 40-42, 126-7, 141, 235, 247, 258, 269-71, 360-67), திரிபும் (காப்பு, 13, 32, 41, 43, 256), சந்தமும் (195-7, 226-7), இன்றியமையாத இடங்களில் வகையுளியும் (34-5, 106, 146), இந்நூலிற் காணப்படும்.

சொல்லாட்சி

மந்த்ரி (46), விக்ரமன், ப்ரபை, சக்ரம் (196), அனுக்ரகம் (197), மந்த்ரம் .(217), சித்ரமணி (291) என வருவன போன்ற ஸம்யுக்தாக்ஷரங்களமைந்த வடசொற்களையும், தீனப்ரவர்த்தகன் (49-50), அங்குரார்ப்பணம் (52), சொர்க்க மத்ய பாதலம் (101), பாதாதிகேசபரியந்தம் (129), சீதள சோம திவாகர லோசன, வேத சொரூப விஞ்ஞேத புராதன, மாருத பாவக மாதவ சாயக, மேரு சராசன வீர சரோருக பாதன் (226-8), வீரப்ரதாபவிசயம் (322) என வருவனபோன்ற வட சொற்றெடர்களையும், வத்திரம், வர்ச்சித்து (59), தெக்கனம் (12), பிரமவத்தி (24), கெங்காதரன் (62), நாதிக்க (162) முதலிய வடசொற்றிரிபுகளையும் ஆளுகின்ருர்.

வச்சு (35), ஆச்சுது (206), தணிச்சு (283) என்பனபோன்ற மரூஉமொழிகள் உரிய இடங்களில் அமைந்துள்ளன. இவர் எடுத்தாண்ட சில அரும்பதங்கள்: திண்டு (88), கும்பு தெம்பு, (141), பாணினி (விறலி)(295), சரி (346), தெரியலர் (பகைவர்) (282), உச்சிதம் (323); பொருந்த என்னும் பொருளில் ஏல என்பதனையும் (104, 177), ஒருங்கே என்னும் பொருளில் ஒருமிக்க என்பதனையும் (106, 191) நன்கமைத்தலென்னும் பொருளில் பாணித்தலென்பதனையும் (118, 252), யானையென்னும் பொருளில் ஓர்கையென்பதையும் (364) இவர் வழங்குகின்ருர்.

ஆசிரியர் இயல்பு

இத்தகைய அரிய நூலை இயற்றிய இவ்வாசிரியர் சிவபக்திச் செல்வமும், சிவபெருமானது கருணையை வியந்து பாராட்டும் தன்மையும், சிவனடியார் பக்தியும், சிவதலங்களில் அன்பும், பல நூலாராய்ச்சியும், ஆசிரிய பக்தியும் உடையவரென்று தெரியவருகின்றது.

இவ்வுலாவின் ஈற்றிற் காணப்படும், 'விருப்பிருக்கும்' என்னும் செய்யுளால் அக்காலத்து அடியார்கள் செய்யும் திருப்பணிகளுக்குச் சிலர் இடையூறு செய்துவந்தார்களென்றும் அதுகண்டு இவர் மிக வருந்தினாரென்றும் தோற்றுகின்றது.

இந்நூல் ஏட்டுப்பிரதி ஒன்று ஏறக்குறைய 50 வருடங்களுக்கு முன்பு **திருவாவடுதுறை** ஆதீனத்துப் புத்தகசாலையிற் கிடைத்தது; அதனைப் பிரதி செய்துகொண்டேன். அதுமுதல் இன்றுவரை தேடியும் வேறு பிரதி கிடைக்கவில்லை. **ஸ்ரீகடம்பவனேசருடைய** திருவருள் கூட்டுவித்ததனால் இப்பொழுது குறிப்புரையுடன் வெளியிடலாயிற்று.

கடம்பர்கோயில் சம்பந்தமான அரிய சில செய்திகளை அவ்வூர் ஆயுர்வேத வைத்தியர் மகா-ள-ள-**ஸ்ரீ எஸ். குருசாமி முதலியாரவர்கள்** அன்புடன் விசாரித்து விளங்கச் செய்தார்கள்.

இதனைப் பதிப்பிக்குங்காலத்து உடனிருந்து பலவகையான உதவிபுரிந்துவந்த உபகாரிகளின் அன்புடைமை மறக்கற்பாலதன்று.

பல வருஷங்களாகத் தேடிச் சேகரித்துப் பரிசோதித்து வைத்திருக்கும் பலவிதமான காரணங்களால் வெளிப்படுத் தாமலிருக்கும் இதைப்போன்ற பிரபந்தங்கள் பல உண்டு. தனித்தனியே வெளிப்படுத்தினால் காலம் நீட்டிக்குமென்று வேறு காரணங்களைக் கருதியும் சிலகாலமாக மாதப் பத்திரிகைகள் மூலம் அவை வெளியிடப்பெற்று வருகின்றன. அவ்விதம் செந்தமிழ்ப் பத்திரிகையில் இக்காலத்து வெளிவரும் நூல்களில் இது மூன்றாவதாகும்.

சென்னை,
4.11.1932

இங்ஙனம்
வே. சாமிநாதையர்

கடம்பர்கோயில் உலா

சித்திவிநாயகர் காப்பு

வெண்பா

பொன்மருவு தென்கடம்பைப் பூரணவி லாசருலா
நன்மதுர மாக நவிற்றவே - என்மனத்து
வஞ்சத் திருப்பதஞ்செய் மைந்துறுசித் திக்களிற்றின்
கஞ்சத் திருப்பதமே காப்பு.

அவையடக்கம்

நன்னிலஞ்சே றாக்கிடினு நன்குமகிழ் வார்முனியார்
செந்நெல்விளை வெய்துஞ் சிறப்புடையோர் - இந்நிலத்தில்
என்சொலிக ழார்புலவோ ரீசனுலா வென்றுகொள்வார்
புன்சொலெனர் கொள்வார் பொருள்.

நூல்

கலிவெண்பா

இறைவன் பெருமை

1 சீர்கொண்ட சத்தி சிவமா யருள் புரியும்
பார்கொண்ட சோதிப் பசுபதியாய் - ஏர்கொண்ட

2 அண்டமா யண்டத்தி னப்பாலா யிப்பாலாய்ப்
பிண்டமாய்ப் பல்லுயிரின் பேதமாய்ப் - பண்டை

குறிப்புரை

காப்பு: பொன் - திருமகள், வஞ்சத்து இருப்பு அதம் செய்; அதம் - அழிவு. மைந்து - வலி

அவையடக்கம்: விளைவைப் பின் எய்தும், சிறப்புடையோர் மகிழ்வாரெனக் கூட்டுக.

3 அருவா யுருவா யருவுருவ மொன்றாய்
மருவாய் மலரின் வடிவாய்ப் - பெருவாழ்வாய்

4 எல்லா வுயிர்களுக்கு மின்பம் புணர்த்திவைக்கும்
வல்லான் கருணை மகாதேவன் - தொல்லைமுது

தல விசேடம்

5 வானோர் துதிக்க மறைமுழங்க வானோரும்
ஏனோரும் வந்து பணிந் தேத்தெடுப்பத் - தேனூரும்

6 வெள்ளி வரையின்மிசை வீற்றிருப்பப் பூங்கமலத்
துள்ளிருப் போனன் புடன் பணிந்து - வள்ளலே

7 அன்பருன்னூற் பெற்ற வழியாப் பெரும்பதவிக்
கென்பதவி சொல்லி னிணையாமோ - மின்பருதி

8 ஒக்குமோ வென்றுற் றுணர்ந்தே னருவருத்து
மிக்க சிருட்டி விரத்தியுற்றேன் - இக்கணமே

9 முத்திப் பதத்தின் முறையுரைக்க வேண்டுமென
அத்த னகைத்தங் கருள்செய்வான் - பித்தொழிந்து

10 வந்தனையே முன்னூண் மறந்தனையே யஞ்சலினிச்
சிந்தனையென் கேளாய் திசைமுகனே - பந்தமற்றோர்

11 இம்மை மறுமையென்ப தெல்லா மறிந்தறிவால்
தம்மையறிந் தெம்மையன்றே தாமறிவார் - செம்மைமனப்

---

3. அரு-அரூபம், அருவுருவம்-ரூபாரூபம். மருவாய்-மணமாகி, மலரின் வடிவாய்: ''வாச மலரெலா மானாய் நீயே'' திருநா. தே.

6. வெள்ளிவரையின்மிசை - கைலைமலையின்மேல், பூங்கமலத்துள் இருப்போன் - பிரமன்; எழுவாய்.

7. மின் பருதி-மின்னலானது சூரியனை.

8. சிருட்டி விரத்தி - படைத்தற்றொழிலில் வெறுப்பை.

9. என-என்று பிரமன் கேட்ப, அத்தன்-சிவபெருமான், பித்து-மயக்கத்தை. கமலத்துள்ளிருப்போன் (6) என (9)

10. இனி அஞ்சல், சிந்தனை-கவலை.

12 பக்குவத்த னல்லையினும் பாரிடத்தின் மேலான
தெக்கண காசியெனுஞ் சீர்பொருந்தும் - மிக்க

13 கடம்பவன மொன்றுளது கண்டாலு முள்ள
மடம்பவநத் தக்கதியும் வாய்க்கும் - இடம்பெரிதாம்

14 அத்தலத்தி னீசென்றரியதவஞ் செய்தக்காற்
கைத்தலத்தி னெல்லிக் கனியெனவே - முத்தி

15 நெறியு நெறிக்கு நிலையான நந்தம்
குறியு மறிவாய் குறித்தங் - குறுதியென

16 வேதன் பணிந்தெழுந்து மேவுபொன்னி நீராடி
மாதவங்கள் செய்து மகமியற்றி-நாதன்

17 அருள்பெற் றணிநகரு மாலயமுஞ் செய்து
மருளகற்று சித்திரையின் மன்னும் - திருவிழாக்

18 கண்டழியாப் பேறுபெற்ற காரணத்தி னாற்கொண்ட
தண்டலை யென்னுந் தனிப்பெயரும் - கொண்ட

19 பிரமபுர மென்னும் பெயரும் படைத்துப்
பரவு கடம்பைப் பதியான் - சுரரை

20 ஒடுக்கும் புகைக்க ணொருவா ளரக்கன்
இடுக்கண் பொறாம லெதிர்த்தே - கடுத்துப்

---

12. அல்லை - அல்லாயாதலால்; இன்னும் அல்லை.

13. உள்ளம்மடம் - மனத்திலுள்ள அறியாமை; உள்ள: பெயரெச்சமுமாம். பவம் - பிறப்பு. நந்த - கெட. கதி - முத்தி.

15. குறி - திருவுருவம்; ஸ்வரூபம். என- என்று கைலையிற் சிவபெருமான் கட்டளையிட.

17. சித்திரையில் - சித்திரைமாதத்தில்; 51 ஆம் கண்ணியைப் பார்க்க.

18. கண்டு - செய்து. தண்டலை: இது குழித்தண்டலையெனவும் வழங்கும்; ''குழித்தண் டலையானைக் கூறு'' என்பர் ஐயடிகள் காடவர்கோன் நாயனார்.

19. கடம்பையென்பது கடம்பர்கோயில், கடம்பந்துறை, கடம்பவன மென்பவற்றுள் ஒன்றன் மரூஉ; 120, 363, 383; கடம்பு-தலவிருட்சம்.

20. அரக்கன் இடுக்கண் - அரக்கன் செய்த துன்பத்தை, கடுத்து - கோபித்து.

21 பொருமயிடற் காய்ந்தாடன் போர்க்குத் துணையாய்
வருதிறலி னோங்குசத்த மாதர் - பெருவலியாற்

22 சாடிப் பொரலுஞ் சலித்து மருண்டுபயந்
தோடிச் செலும்போ தொருவஞ்சம் - நாடியே

23 ஆதித் தனைப்பார்த் தருந்தவஞ்செய் மாமுனிபாற்
பேதித் தவன்மறைந்த பெற்றிதனைச் - சோதித்

24 திடாதே யவனிவனென் றெண்ணி முனியை
அடாது செயப்பிரம வத்தி - விடாது

25 தொடரப்பல் கோடிதலஞ் சூழ்ந்துந் தவிரா
திடர்தொலைக்கு நீபவனத் தென்றாய் - உடனிருக்கும்

26 தன்னை யருச்சிக்கத் தான்மகிழ்ந்து நின்றிடுமேழ்
அன்னையர் பாவ மகற்றினோன் - முன்னைவினை

27 மாசகலும் வேதசன்மா மாமறையோன் செய்தவமும்
பூசனையுங் கண்டவன்முன் போந்தருளிக் - கேசவனை

28 ஒப்பாய் நமதன் புடைமையினால் வேண்டுவதென்
செப்பா யெனவுரைக்கத் தென்மதுரை - மெய்ப்பதியில்

---

21. மயிடற் காய்ந்தாள் - மகிஷாஸுரமர்த்தனி; துர்க்கை. சத்தமாதர் - ஏழு கன்னிகைகள்.

22. சாடி - அடித்து, வஞ்சம் - மாயச்செயலை.

23. அவன் - புகைக் கண்ணரக்கன்.

23-4. சோதித்தடாதே - ஆராயாமல், அவன் இவனென்று - அந்த அரக்கன் இந்த முனிவனென்று, அடாதுசெய - கொல்ல; இது மங்கல வழக்கு. பிரம அத்தி - பிரமஹத்தி.

25. தொடர - ஏழு கன்னியரைத் தொடர. என் தாயென்றது அம்பிகையை.

26. தன்னையென்றது சிவபெருமானை.

27. வேதசன்மாவென்னும் பெயரையுடைய பெரிய அந்தணன்.

27-8. அன்புடைமையினால் கேசவனை ஒப்பாய்; சிவதத்துவ விவேகம் 9 ஆம் செய்யுளைப் பார்க்க.

29 தோன்று மலயத் துவசன்மக ளாய்க்கயற்கண்
மூன்றுமுலை யுற்றவண்முற் றாமுலையாய் - ஏன்றிடப்பின்

30 எந்தை மணஞ்செய் தியன்றதிருக் கல்யாண
சுந்தரனுந் தன்மையிங்குத் தோற்றிடென - அந்தப்

31 படியே தரிசனமும் பாலித்தாட் கொண்டோன்
அடியார்க் கெளியவனுதி - முடியாச்

32 சுகத்தியன் மாமுனிவோர் சூழ்ந்து பரவும்
அகத்தியன் பூசனைசெ ய்யன் - சகத்தசுரச்

33 சோமகன் வேதத் துரகதத்தைப் பாதலத்தில்
ஏமமுறக் கொண்டொளித்தங் கெய்திடலும் - தாமோ

34 தரன்வணங்கி நின்று தவம்புரியச் சைவாத்
திரங்கொடுக்க வாங்கத் திருக்கா - விரியிலவன்

35 மச்சவுரு வாயுததி மார்க்கத்திற் சென்றவன்றுஞ்
சச்செகுத்து மீண்டுதிருச் சந்நிதியில் - வச்சு

36 வணங்கமறை வாயிருந்த மாமறைவாய் தோறும்
இணங்குசதுர் வேதபுரி யீசன் - குணங்கடந்தோன்

---

29. கயற்கண்ணையும் மூன்று தலையையும் உற்றவள்; அங்கயற்கணம்மை, முற்றாமுலை: இத்தலத்து அம்பிகையின் திருநாமம்.

30. எந்தையென்பது முன்னிலையின்கண் வந்தது. என - என்று வேத சன்மா வேண்டிக்கொள்ள.

31. எளியவன் ஆதி.

31-2. முடியாச்சுகத்து - பேரின்பத்தில்.

32-3. அசுரச் சோமகன் - சோமகாசுரன். துரகதம் - குதிரை. அங்கு அப்பாதலத்தில்.

33-4. தாமோதரன் - திருமால். சைவாத்திரம் - பாசுபதாத்திரம். அவன் திருமால்.

35. மச்ச உருவாய் - மீனவடிவமாகி. உததி - கடல், துஞ்ச -இறக்க, வச்சு வேதங்களை வைத்து.

36. மறைவாயிருந்த - கண்ணுக்குப் புலப்படாமல் இருந்த.

37 கந்தவேண் முந்தக் கடிமலரா லர்ச்சித்துப்
புந்திமகிழ் கந்த புரநாதன் - பந்தமுற

38 வல்லார்க்கு முந்துதுற வல்லார்க்கு மில்லார்க்கும்
எல்லார்க்குந் தாயா யினிதளிப்போன் - தொல்லைப்

39 பலிக்குமுனந் தாருவனப் பாவையர்முன் சென்ருேன்
எலிக்கு மரசளிக்கு மெந்தை - புலித்தோல்

40 உடையானெனேயா ளுடையான்சொல் பூதப்
படையான் கணிச்சிப் படையான் - விடையேறு

41 வானனத்தன் வானனத்தன் வந்து துதிக் குஞ்சாம
கானனத்த னீள்கதம்ப கானனத்தன் மீனவிழிப்

42 பாணிகொண்ட சென்னிப் பசுபதிபஞ் சானனத்தன்
பாணிகொண்ட சென்னிப் பரமேட்டி - நாணிகொண்ட

---

37. பந்தம் உற - பாசம் உறுதலினுலே.

38. வல்லார்க்கும் - வல்லமை இல்லாதவர்களுக்கும், துறவல்லார்க்கும் - துறத்தலில் வன்மையை உடையவர்க்கும்; துற: முதனிலைத் தொழிற்பெயர். வல்லார்: 'வல்லார்திறைகொள்வர்; வல்லார் திறைகொடுப்பர்' (இ.கொ. உரை, உதாரணம்.) இல்லார்க்கும் - வறுமையையுடையவர்கட்கும்.

39. பலிக்குச் சென்ருேன். எலிக்கும்: உம்மை இழிவுசிறப்பு. அரசு அரசாட்சியை. இக்கண்ணியிற்குறிப்பிட்டது மகாபலி சக்கரவர்த்தியின் வரலாறு; 'வெண்ணெ யுண்ணவெண்ணபு வந்து, நந்தா விளக்கை நுந்துபு பெயர்த்த, தாவுபுல் லெலிக்கு மூவுல காளஎ, நொய்தினி லளித்த கைவளம் போற்றி'' கோயினுன்மணிமாலை, 40.

39-40. தோல் உடை - தோல் ஆடை, படை - சேனை, ஆயுதம்

40-41. விடையேறுவான். அனத்தன் - பிரமனும். வான நத்தன் - பெருமை பொருந்திய சங்கையுடைய திருமாலும். சாமகானன் அத்தன்.

41-2. மீனவிழிப்பாணி - கங்கை; பாணி - நீர். சென்னியைப் பாணியிற் கொண்டபரமேட்டி; சென்னி - பிரமகபாலம்; பாணி - கை.

43 மாகனக வில்லியிம வானுதவும் வல்லியிடப்
பாகனக வில்லிற் பதிகொண்டோன் - யோகனகன்

44 நாவி லிரதனொரு நால்வேதத் தந்தியான்
தூவெண் சரீரத் துரகத்தான் - மூவுருவன்

45 அம்பலத்து ணினின்றுநட மாடும் பதாதியான்
நம்பலரைப் பார்த்து நகைசெய்தோன் - செம்பொனதிச்

46 சுத்தக் கடம்பந் துறையரசன் றெய்வதமாய்
வைத்தசத்த கோடி மகாமந்த்ரி - அத்துவிதன்

47 தற்பரன் பூத தளகர்த்தன் றாரணியிற்
பற்பலவாந் தாரு பதியினன் - பொற்புற்

48 றொருமூவ ராயசத்த னேங்குகுலத் தோரைக்
கருமத் தடக்குமதி காரி - பெருகுதிறற்

49 கானு காரணிகன் பாடலிலே கற்பித்தோன்
மானசச் சீர்மை மகாசனன் - தீனபிர

---

43. கனகவில்லி - மேருமலையை வில்லாக உடையார். வல்லி - பார்வதி. இடம் பாகன். நக இல்லில் - மலையாகிய வீட்டில்; அக இல்லிலென்று கொண்டு அன்பர்களது இதயமாகிய வீட்டி லெனலும் பொருந்தும். யோகு அனகன்; யோகு - யோகம்.

44. நாவில் இரதன் - நாக்கிற் சுவையாயிருப்பான். வேதத்து அந்தியான் - வேதத்தால் முடிவு செய்யப்படாதவன். சரீரத்து உரகத்தான்; உரகம் - பாம்பு.

45. பதாதியான் -பதத்தையுடைய முதல்வன். நம்பலரை - பகைவரை, பொன்நதி - காவிரியாறு.

44-5. இவற்றில் இரதமுதலிய நால்வகைப் படையுடையானென்னும் பெயர்கள் தோன்றுகின்றன.

46. மந்த்ரி - மந்திரத்தையுடையவன்.

47. பூததளகர்த்தன் - பூதப் படைக்குத் தலைவன்.

48. மூவர்ஆய - மும்மூர்த்திகளாகிய, சத்தன் - உண்மைப் பொருளாக உள்ளவன், கருமத்து - தத்தம் தொழில்களில்.

49. கால் நுகர் அணிகன் - காற்றை உண்ணும் பாம்பாகிய ஆபரணத்தையுடையவன்; அணிகம் - ஆபரணம்; அணி திரிந்து அணிகமாயிற்றென்பர்; (சீவக, 2811, ந.) பாடலில் - இசைக்கு. ஏகல் பித்தோன் - தூதாகப் போதலையுடைய பித்தன்; ''பாதஞ்சிவக்கப் பசுந்தமிழ் வேண்டிப் பரவைதன்பாற், றூதன்று சென்றதென் னூரூர்த் தியாகர்'' (திருவாரூர்க்கோவை). மானசம் - மானஸம். மனத்திலுள்ள தூய்மையாகிய சிறப்பே தனக்குப் பெரிய ஆசனமாக உடையவன்.

50 வர்த்தகன் பண்ணை வகுத்துரைக்கும் பங்காளி
அத்த னமல னமரேசன் - கர்த்தன்முனந்

திருவிழா

51 தோடலருங் கஞ்சன் றொகுத்துப் பணிதிருநாள்
மேடமதிச் சித்திரையின் மேவுதலும் - நாடியே

52 பூணவங்கு ரார்ப்பணமும் பொற்பமைத்துக் காப்பணிந்து
காணுந் துசாரோ கணஞ்செய்து - நாணிறைய

53 ஒன்றிரண்டு மூன்றோ டொருநாலைந் தாறேழும்
சென்றிடப்பி னெட்டாந் திருநாளில் - அன்றுதய

54 காலத் திருவிழாக் கண்டுவந்து வந்தருளி
மாலைவிழா வீதியுலா வந்ததற்பின் - ஞாலமெலாம்

55 போற்றுமணி மண்டபத்திற் பொன்னனையா ராடல்கண்டு
வீற்றிருந்து பொற்கோயின் மேவியே - தோற்றுருவின்

56 மன்மதனைக் கையெடுத்து மண்டலத்தோர் கொண்டாட
மென்மலர்ப்பூம் பள்ளியணை மீதணைந்து - தொன்மையகி

57 லாண்டமு மீன்றமுற்றி லாமுலையென் னம்மையொடு
காண்டகுசோ திக்கடவுள் கண்மலர்ந்து - நீண்டசடைக்

திருமஞ்சனம் கொண்டருளுதல்

58 கங்கைக்கு மேலாகக் காவிரிமேன் மேன்மேன்மை
தங்கத் திருமஞ் சனமாடி - மங்குலொத்த

49-50. தீன பிரவர்த்தகன் - ஏழைகளை நடத்துபவன். பண்ணை - இசையை. பங்கென்றது உமையை. ஆளி - ஆள்பவன்.

46-50. இப்பகுதியில், அரசன், மந்திரி, தளகர்த்தன், தானுபதி ஸ்தானுபதி), ராயசத்தன், கருமாதிகாரி, கரணிகன், கற்பித்தோன் (ஆசிரியன்), மகாசனன், பிரவர்த்தகன், வர்த்தகன் என்னும் பெயர்கள் தோன்றுகின்றன.

51. கஞ்சன் - பிரமன்; கஞ்சம் தாமரை, மேடமதி - சித்திரை மாதம், திருநாள் மேவுதலும்.

52. காப்பு - ரக்ஷை. துசாரோகணம் - கொடியேற்றம்.

54. உவந்து வந்தருளி.

55. பொன்னனையார் - உருத்திரகணிகையர்.

58. கங்கைக்குமேலாக என்றது சிவபெருமான் திருமுடியிற் கங்கை இருத்தலை நினைந்து, மங்குல் - மேகம்.

அலங்காரம்

59 சுத்தக் கறுப்பென் றுஞ் சொன்னீலப் புள்ளியென்றும்
வத்திரங்கொள் வத்திரங்கள் வர்ச்சித்து - மெய்த்ததிக்காம்

60 எட்டாடை மின்னா ரிடைப்பட்ட வென்றுருவிப்
பட்டாடை பீதாம் பரஞ்சாத்தி - இட்டமுடன்

61 ஆதியந்த மில்லா வடிக டிருமுடிமேற்
சோதி மணிமகுடஞ் சூட்டியே - பூதித்

62 திரிபுண் டரமணிந்து சேணா ரிமய
கிரியுதவுங் கன்னிதனைக் கெங்கா - தரனுடனே

63 கூட்டிவைக்கு மாரனைமுன் கோபித்த வக்கினிதன்
வீட்டின் கதவடைத்து மேலிறுகப் - பூட்டி

64 ஒருமுத் திரிபொறித்த தொக்கவே மிக்க
திருநெற்றி யிற்றிலதந் தீட்டிப் - பெருகுதவத்

65 தின்னிசை வீணை யிருவோ ரிசைந்தாடப்
பொன்னூசல் போற்குழைகள் பூட்டியே - மின்னுமணி

---

59. சுத்தக்கறுப்பு - முழுக்கறுப்பு; என்றது யானைத் தோலை; கிருஷ்ணாசினமுமாம். நீலப்புள்ளி யென்றது புலித்தோலை. வத்திரம் - முகம், ஆடை. இரண்டும் தலையோடு கூடியிருத்தலால் 'வத்திரங்கொள் வத்திரம்' என்றார். வர்ச்சித்து - நீக்கி; ''பொல்லா வினைவர்ச்சி யென்றர்ச்சி யேனொரு பூவெடுத்தே'' (பழனி இரட்டைமணிமாலை, 20), மெய்த்த - மெய்யாகிய. திக்கு ஆம் - திசைகளாகிய.

60. மின்னார் இடைப்பட்ட - தாருகாவனத்து மகளிர்களிடையிலே பட்டன; என்றது அவர்களும் திகம்பரராக ஆனமையைப் புலப்படுத்துகின்றது; 'திகம்பரரா நுந்தம்மைச் சேர்ந்தடைந்த யாமும், திகம்பரரே யாகிச் சிறந்தோம்'' திருவிடை உலா.

59-60. எட்டுத் திக்காம் ஆடை - எட்டுத் திசையாகிய ஆடை.

61. அடிகள் - சிவபெருமானுடைய. பூதி - திருநீறு.

64. முத்திரிபொறித்தது - முத்திரையிட்டதை.

65. இருவோர் - கம்பளர், அசுவதரர்; தும்புரு நாரத ரென்பாரு முளர்; ''தோடுவார் காதன்றே தோன்றாத் துணையையர், பாடுவா ரோரிருவர்க் கிட்ட படைவீடே'' (திருப்பாதிரிப்புலியூர்க்கலம்பகம், 16); ''காதி லிரண்டு பேர் கண்டோ ரிரண்டுபேர், ஏதிலாய்க் காணா ரிரண்டுபேர் - பேதைமுலை, உண்ணா ரிரண்டுபே ரோங்குபுலி யூரருக்குப், பெண்ணான பேரிரண்டு பேர்'' (தில்லைக் கலம்பகம், 8), ''காதி லிருவரிசை காத்திருந்து கேட்பனபோற், கோதி லரவக் குழைசாத்தி'' தேவையுலா, 69.

66 மாமாலை முத்து வடமாலை பொன்மாலை
பூமாலை மாலைப் புயத்தணிந்து - தோமறுசீர்

67 இத்தலத்து மான்மியங்க ளெத்தலத்து மின்றெனத்தன்
கைத்தலத்தி னுலுரைக்குங் காட்சியென - வைத்த

68 வரத வபயமு மான்மழுவுங் கொண்ட
கரதலங்கள் சேர்கங் கணமும் - இரவியெனத்

69 தோளணிகண் மார்பந் துளங்குபவீ தம்பதக்கம்
வாளணிகண் முற்றும் வனைந்தருளி - நீளணிகொள்

70 பட்டிகையுஞ் சேர்த்தருண பாதார விந்தமிசைக்
கட்டிசையுஞ் செம்பொற் கழல்புனைந்து - சிட்டர்

71 செவியி னமுதாச் சிலம்புஞ் சிலம்பும்
கவினத் தரித்துக் கனிவாய்ப் - புவிபுகழும்

மகாபூசை

72 அவ்வியமி னெஞ்சத்தி னுதிசைவ ராகமத்தால்
திவ்வியமா பூசை செயமகிழ்ந்து - கவ்வை

திருவீதிக்கு எழுந்தருளல்

73 மறைமுழங்க வந்துதொழு வார்முழங்க மூவர்
முறைமுழங்கச் சங்க முழங்கக் - குறைவிலைந்து

74 துந்துபிகல் லென்று தொனிப்பவகி லாண்டமெல்லாம்
தந்தமுற்றி லாமுலைச மேதனு - எந்தை

75 உலகமெலாங் கண்டுதொழு துய்யவே செம்பொன்
இலகு மணித்திருத்தண் டேறித் - திலகநுதல்

---

66. மாலை புயத்திற்கு அடை.

67. உபவீதம் - பூணுநூல்.

70. பட்டிகை - அரைப்பட்டிகை; இதனை அரியாயோகமென்பர் இளங்கோவடிகள்; சிலப். 14.170. அருணம் - சிவப்பு. கட்டு இசையும் - கட்டுதல் பொருந்தும்.

71. சிலம்பும் சிலம்பும் - ஒலிக்கின்ற சிலம்புகளையும்.

72. கவ்வை - முழக்கம்

73. மூவர்முறை - தேவாரம்; ''மூவர்பாடல்'' 109.

76 மின்னூர்க ளாட விடையின் கொடியிலங்கப்
பொன்னூல வட்டமண்டம் போர்த்தாட - முன்னெடுநாட்

77 பேரரவி னுட்கிடந்த பிள்ளைமதி வாடுமென
ஈர மதிநெஞ் சிரங்கியே - ஆரமுதம்

78 போதத் திரட்டிப் புகட்டுவபோல் வெள்ளியங்காற்
கோதிலா முத்தின் குடைநிழற்ற - ஆதியிலே

79 ஒன்றாய் விரிவா யொடுக்கமாய்ப் பின்விரிவாய்
நின்றா னிலைமையிது நீர்காணும் - என்றுசொல்லித்

80 தேவருக்கும் யாவருக்குஞ் செப்புவபோற் பஞ்சவண்ணப்
பாவாடை மீது பணிமாற - ஓவாது

81 பைத்த மணியும் பனிமதியு முள்ளடங்க
வைத்த கிரீட மறைத்ததனுல் - மொய்த்தனங்கள்

82 கங்கை புகும்வழி காணு சுழல்வனபோல்
மங்கையர்கள் வெண்சா மரையிரட்டத் - துங்க

83 மணிக்கோ புரநிரையின் வாயில் பலசென்
றணிக்கோல வீதி யணைந்து - கணிப்பரிய

திருத்தேரில் எழுந்தருளல்

84 செம்பொற் கிரியோ திருவா வடுதுறையில்
எம்பிரா னன்ப ரிதயமோ - கம்பைநதி

---

76. அண்டம் - ஆகாயத்தை.

80. பஞ்சவண்ணப் பாவாடை - ஒரு விருது; ''பஞ்சவண்ணத்துப் படாகை நுடங்க'' (பெருங்கதை); ''பகற்பந்தம் பஞ்சவண்ணப் பாவாடை யென்னும், விகற்பந்தஞ் சின்னமென்ன மேவும்'' சிவந்தெழுந்த பல்லவராயனுலா.

81. பைத்த - விரிந்த. அன்னங்கள் மொய்த்து.

82. கங்கை புகும் வழி காணு - திருமுடியிலுள்ள கங்கையினிடத்தே செல்லுதற்குரிய வழியைக் காணுதனவாகி, இரட்ட - மாறி அசைப்ப.

81-82. வெண்சாமரைக்கு அன்னங்கள் உவமை.

84. திருவாவடுதுறையில் எம்பிரான் அன்பர் - திருவாவடுதுறையாதீன மடத்திலுள்ள அடியார். சிவபெருமான் எழுந்தருளியித்தற்குரிய இடமாக இருத்தல்பற்றி 'அன்பர் இதயம்' உவமை கூறப்பட்டது.

85 சேர்தொண்டை மண்டலத்தோர் செய்தபெரும் புண்ணியமே
ஈதென்னும் பொற்றடந்தே ரேறியே - நீதிநிறை

86 பாகைச் சரவணைதன் பாக்கியமேன் மேல்வளர
ஓகையுடன் சிந்தை யுவந்தமைத்த - நாகரிகச்

87 சோதி நவமணியின் சுந்தரப்பொன் னாபரணச்
சாதிகள்க பாய்த்தகட்டிற் றாமிலங்கக் - கோதில்லாத்

88 திண்டொழுகு பஞ்சணையுஞ் சீர்பொருந்த வெத்திசையும்
கொண்ட பதாகை குடைவிளங்க - மண்டலத்திற்

89 பல்லா யிரகோடி பானு வுதித்ததென
வில்லார்சிங் காதனத்தில் வீற்றிருப்ப - மல்லாரும்

உடன்வருவோர்

90 தந்தி முகக்கடவுள் சண்முகத்து வேற்கடவுள்
நந்திமுதற் பூதகண நாதருமை - ஐந்துருவ

91 மிக்கசிவன் போற்கடவுள் வேறிலையுண் டென்பவர்க்குத்
தக்கன் மறுதலையே சாட்சியெனும் - உக்கிரனும்

92 பால நயனப் பதினோ ருருத்திரரும்
மாலதிருஞ் சூல வயிரவரும் - மேலிசைத்த

93 கற்றுணையா வுற்ற கடல்கடந்து கற்பனையிற்
சொற்றுணையி னாலமணர் சூழ்கடந்து - நற்றுணையாய்ச்

---

87. கபாய் - கவசம்; ''களிறுதவுக பாய்மிசைப் போர்த்தவள்'' (மீனாட்சியம்மை பிள்ளைத் தமிழ், காப்புப், 10); ''கம்பக் கரடக் களிற்றின் கபாயணிந்த, அம்பொற் புயத்தார்'' சிதம்பரச் செய்யுட்கோவை, 25.

88. பதாகை - பெருங்கொடி.

89. வில் - ஒளி

90. ஐயைந்துருவம் - இருபத்தைந்து மூர்த்தம்.

91. மறுதலை - ஆட்டுத் தலையாகிய வேறு தலை. உக்கிரன் - வீரபத்திரக் கடவுள்.

92. பாலநயனம் நெற்றிக்கண்ணையுடைய. அதிரும் - நடுங்கும்.

93. கல்துணையா - கல்லைத் துணையாகக் கொண்டு. சொற்றுணையினால் - 'சொற்றுணை வேதியன்' என்னும் பதிகத்தால். சூழ் - சூழ்ச்சி.

94 சாரத் திருப்பதிகஞ் சாத்தி மலர்க்கையுழ
வாரப் பணிவிடைகொள் வாக்கிறையும் - பேரறிவால்

95 தேறுஞ் சமயஞ் சிவசமய மொன்றெனவே
கூறும் பரசமய கோளரியும் - வீறொருத்தி

96 வாது நடத்தின் மகிழ்வோனை யாரூரில்
தூது நடத்திவைத்த சுந்தரரும் - மேதகுபேர்

97 ஆனந்த வெள்ளமகத் தாறாக மாறாமல்
ஊனந் தவிர்நயனத் தூற்றெடுக்கத் - தேனுந்து

98 பாவைதிருச் சிற்றம் பலமுடையார் கையெழுத்தாம்
கோவை யுரைத்தெமையாட் கொண்டவரும்-ஓவறுசீர்த்

99 தாதை யடியைத் தடிந்தரனைப் பூசித்துத்
தீதகற்றுந் தண்டித் திருத்தேவும் - மாதவனும்

100 கார்கொண்ட மேனிக் கடவுளுமம் போருகனும்
சீர்கொண்ட விந்த்ராதி தேவருடன் - ஏர்கொண்ட

101 பான்மதியுஞ் சொர்க்கமத்ய பாதலத்து மேற்றுவிளக்
கான வொருபனிரண் டாதவரும் - வானகஞ்சூழ்

---

94. வாக்கிறை - திருநாவுக்கரசு நாயனார்.

95. பரசமயகோளரி - திருஞானசம்பந்த மூர்த்தி நாயனார். வீறு - வீறுகின்ற. ஒருத்தி - பத்திரகாளியின்.

96. நடத்தின் மகிழ்வோனென்றது இறைவன் திருவாலங்காட்டில் ஊர்த்துவதாண்டவம் செய்த செய்தியைக் குறிக்கின்றது.

97. நயனத்தூற்றெடுக்க: ''அழுதடியடைந்தவன்பன்'' (திருவிளை, கடவுள்). என்பர் பரஞ்சோதியார். ''பேரானந்தமுற்றவர்க்கே கண்ணீர் கம்பலையுண்டாகும்'' (தாயுமானவர் பாடல்) என்பது இங்கே கருதற்குரியது. ஊற்றெடுப்ப: ''கண்கள், தொடுமணற் கேணியிற் சுரந்துநீர் பாய'' நால்வர்நான். 4.

98. ஆட்கொண்டவர் - திருவாதவூரடிகள். அவர் கோவையுரைத்தது. ''காதலித்து, நானூறு காரிகையை நல்கினோன் வாசகமும்'' (திருவாரூருலா, 73-4) என்பதனாலும், ''கோவுக்குக், கோவைசொன்ன னுண்டுநெஞ்சே குற்றாலவென்றுமரப், பாவைசொன்ன லுஞ்சொலுமே பாட்டு'' (திருக்குற்றாலச் சிலேடை, அவை). என்பதனாலும் விளங்கும்.

100. ஏர் - எழுச்சி; அழகுமாம்.

102 பூதலத்திற் பேறுபெற்ற புண்ணியரு மெண்ணரிய
பாதலத்து மேலான பன்னகரும் - போதநிறை

103 மோனந் தவாத முனிவோரு மெய்ஞ்ஞான
ஆனந்த சித்த ரனைவோரும் - வானந்தம்

104 ஏலப் புவன மிருநூற் றிருபத்து
நாலிற் கடவுளரு நண்ணியே - கோலமணித்

105 தேர்திகழ்வி மானஞ் சிவிகைமுதற் றங்கடங்கள்
ஊர்தி களினு முவந்தேறப் - பேரொலிசேர்

வாத்தியங்கள்

106 தக்கை யுடுக்கை தடாரிதவில் பேரியொரு
மிக்க முழங்க விருதார்ப்ப - மிக்கதொனி

107 மத்தளங்கைத் தாளவொலி மாரி முழக்கொலிபோல்
தத்தளங்கென் றேபரதஞ் சாதிப்ப - எத்திசையும்

108 தும்புரு வீணை சுரமண்டலம் பாடற்
றம்புரு நாதந் தனியிசைப்ப - உம்பரெல்லாம்

109 ஆர்ப்ப மறைக ளருண்மூவர் பாடலண்டம்
போர்ப்பவிசைத் தன்பர் புறஞ்சூழப் - பார்ப்புறத்தில்

110 இன்று புதுத்தே ரசைந்தழுத்திச் செல்வதனுல்
துன்றுபழந் தேர்வயிறு சூலுளைந்து - நன்றுதவு

---

103. அந்தம் முடிவு.

102-3. போதநிறைமோனம்: ''மோன மென்பது ஞான வரம்பு''. கொன்றை வேந்தன்.

104. ஏல - பொருந்த; 177.

106. ஒருமிக்க - ஒருங்கே; 191. விருது - காளம் முதலியன.

107. தத்தளங்கு: தாளக்கட்டு; ''மத்தளந் தத்த மழலை யொலிததும்பத் தத்தளந் தத்தந் தளங்கவென'' (சிவந்தெழுந்த பல்லவராயனுலா) பரதம் - பரத நூலிற் கூறிய விதி; ஆகுபெயர்.

108. சுரமண்டலம் - ஒருவகை இசைக்கருவி.

109. மூவர் பாடல் - தேவாரங்கள்.

110. பழந்தேர் - பூமி.

111 பைங்குழவி யொன்றீன்ற பான்மையென மேன்மைதரும்
செங்கதிரோன் றேர்கீட் டிசைதோன்றப் - பங்கயப்பூந்

திருச்சின்னம்

112 தாட்டுணையா ளங்கயற்கண் சார்கூட லான்வந்தான்
ஆட்டை விடாப்புலியூ ரான்வந்தான் - நாட்டிவைத்த

113 சண்மதத்து மேலான தந்திவனத் தான்வந்தான்
மண்பரவு புற்றிடத் தான்வந்தான் - உண்மையன்பன்

114 ஆவணத்து முற்றும்விலை யாமென் றவன்வந்தான்
பூவணத்து வாசப் பொருள்வந்தான் மேவினர்தம்

115 துன்பக் கடல்கடத்துந் தோணிபுரத் தான்வந்தான்
இன்பவெள்ளத் தையாற்ற றிறைவந்தான் - நம்பும்

---

111. கீட்டிசை = கீழ்த்திசை; ''கீட்டிசைக்கரியசாத்தனும்'' திருவிளை. திருநகரங்கண்ட. 43.

112-9. இக்கண்ணிகளில் தலங்களின் பெயர்களை அழகுபட அமைத்திருத்தல் அறிந்து இன்புறற்பாலது.

112. கூடல் - மதுரை, மணத்தல். ஆட்டை - நடனத்தை; ஆடென்னும் மிருகத்தை, புலியூர் - சிதம்பரம்; ''நாட்டுக்கு ளாட்டுக்கு நாலுகா லையநின், ஆட்டுக் கிரண்டுகா லானுலும் - நாட்டமுள்ள, சீர்மேவு தில்லைச் சிவனேயிவ் வாட்டை விட்டுப் போமோசொல் லாயப் புலி'' (காளமேகத்தின் வாக்கு); ''அம்புலியூ ரென்னு மணிகொள் சிதம்பரத்தே, வெம்புலியொன் றெந்நாளு மேவுங்கா ணம்மானை, வெம்புலியொன் றெந்நாளு மேவுமே யாமாயின், அம்பலத்தைத் தான்விட் டகலாதோ வம்மானை, ஆட்டைவிட்டு வேங்கை யகலுமோவம்மானை'' (தனிப்பாடல்); ''ஆட்டைப் புலிகாக்கு மம்பலமும்'' விறலிவிடு. 131.

113. மதம் - சமயம்; யானையின் மதமென்பது வேறுபொருள். தந்திவனம் - திருவானைக்கா, மண் - பூவுலகம்; புற்றிடத்தான் - திருவாரூர் வன்மீகநாதர்.

114. ஆவணம் அடிமையோலை, கடைவீதி, பூவணம் - திருப்பூவணமென்னும் தலம், வாசம் - வசித்தல், வாசனை.

115. தோணிபுரம் - சீகாழி.

116 அருங்குமுதச் செவ்வாயறம்வளர்த்த தேவி
மருங்கமருங் காஞ்சிபுரன் வந்தான் - நெருங்குசடா

117 தாரண மாமுனிவோர் தந்தந் துதிக்கைபெற்ற
வாரண வாசி யரன்வந்தான் - பேரணியாய்ப்

118 பாணித் தணிந்தபணிப் பைக்குளடங் காதபெரு
மாணிக்க மாமலை யான்வந்தான் - தாணிறையத்

119 தேங்கோய்வில் லானந்தத் தேனையன்பர்க் கூட்டிவைக்கும்
ஈங்கோயம் மலையெம் பிரான்வந்தான் - தீங்கை

120 அடும்பரமன் காளத்தி யந்தாதி கொண்ட
கடம்பைச் சிவசங் கரனும் - நெடுங்கயிலைக்

121 குன்றுடையான் றெண்டர் குழாமுடையான் வந்தானென்
றென்றுதிருச் சின்ன மெடுத்திசைப்ப - மன்றல்

122 இசைந்ததிருத் தேர்வீதிக் கேகவுடன் கூடி
வசந்தன் றிருத்தேர் மருவப் - பசும்பொன்னிப்

குழாங்கள்

123 பூதலத்துப் பூவையரும் பொன்னுட்டின் மின்னரும்
பாதலத்தி னாககன்னிப் பாவையரும் - சீதமலி

124 கொண்டன் முழக்கங் குறித்தமயிற் கூட்டம்போல்
எண்டிசையுங் கொள்ளா தெதிர்நின்றே - அண்டர்

116. அரு குமுதம். மருங்கு - பக்கம், இடை, காஞ்சி - ஒருநகரம், ஒருவகை மேகலை, முப்பத்திரண்டு தருமங்களும் அம்பிகையாற் காஞ்சியில் வளர்க்கப்பட்டவென்பது இங்கே அறிதற்குரியது.

117. துதிக்கை - துதித்தல், தும்பிக்கை, வாரணவாசி - காசி.

118. பாணித்து - திருந்த அமைத்து; இஃது ஆலயபரிபாஷை; 252. பணிப்பை. ஆபரணப்பை, பாம்பின் படம்.

119. தேங்கு ஓய்வு இல். ஈங்கோய்மலை; இஃது ஈக்களாற் பூசிக்கப்பெற்ற தலம்.

122. வசந்தன் - மன்மதன். அவன் திருத்தேர் - தென்றல்.

122-3. பொன்னிப்பூதலம் - சோழநாடு.

125 பெருமானை மானைப் பிடித்திடுபெம் மானைப்
பெருமானைப் போர்வைப் பிரானை - ஒருமானை

126 ஆகத்து வைத்தவனை யந்தகனை யங்கணம்போல்
ஆகத்து வைத்தவனை யங்கணனை - ஏகத்

127 தொருவனையான் போற்ற வுவந்தானை யென்றும்
ஒருவனையான் றன்னையரு ளோனைக் - கருவிழியாம்

128 உற்பலத்தா லர்ச்சித்தா ருள்ளன் புடன்பணிந்தார்
பற்பலவாத் தோத்திரங்கள் பண்ணினார் - பொற்பமரும்

குழாங்களின் கூற்று

129 பாதாதி கேச பரியந்தம் பார்க்கவிழி
போதாதென் செய்வோ மெனப்புகன்றார் - வேதாதி

130 நூலறியா யாரு நுவலறியா நாடியயன்
மாலறியாத் தேவர் வடிவழகைச் - சாலவே

131 கண்டுதவப் பேறுபெற்றோம் காதலுற்றோம் கொன்றையருள்
கொண்டுதவப் பேறெமக்குக் கூடாதோ - ஒண்டொடியார்

132 எல்லார்க்கு நல்லார்க ளென்ப துமக்கிலையோ
கல்லார்க்கு நெஞ்சு கனியாது - தொல்லுலகில்

---

125. பெரும் ஆனைப்போர்வை. ஒருமானை - உமாதேவியாரை.

126. ஆகத்து வைத்தவனை; ஆகம் - பாதியுடம்பில். அந்தகனை - யமனை, அங்கணம்போல் ஆக -சேறுபோல ஆகும்படி.துவைத்தவனை - மிதித்தவனை.

126-7. ஏகத்தொருவனை: ''யாவையுமா மேகத்தொருவன்'' (திருக்கோவையார், 71). ஒருவு அனையான்றன்னை - நீங்கிய தாயையுடையவனை; தாயில்லாதவனை யென்றபடி.

128. உற்பலம் அருச்சித்தற்குரிய எட்டுமலர்களுள் ஒன்று.

130. அறியா என்ற பெயரெச்சங்கள், தேவர் என்பதைக் கொண்டு முடிந்தன.

131. தவப்பேறு-தவத்தாலடையும் பயன், அருள்கொண்டு உதவ, பேறு பெறுதல்.

132. என்பது - என்று மகளிர் கூறப்படுதல்.

133 தன்னுயிர்போன் மன்னுயிர்க்குத் தானிரங்க வேண்டுமென
முன்ன மனுநூன் முறையுரைத்தீர் - என்ன சொல்வோம்

134 மிஞ்சு மதிப்பகைக்கும் வேளிரதத் தென்றலுக்கும்
அஞ்சா தரவி னணிகொண்டும் - குஞ்சரமாம்

135 கங்குலுக்கு மைந்து கணையரும்புக் கும்வேட்கும்
துங்கவிழி யாமுச் சுடர்கொண்டும் - புங்கவர்க்கா

136 ஆக்கங் கருதி யமர்க்குத் துணிந்தமதன்
போர்க்குனிவில் வாளி புறப்பட்டுத் - தாக்கமுன்பின்

137 பார்த்தீர் விழித்தீர் பயந்தலைக்கொண் டீருடலம்
வேர்த்தீ ரொருபாதி மெய்யானீர் - தோத்திரமாச்

138 சொல்லவோ வேளுமக்குத் தோற்றானோ தோற்றீர்நீர்
அல்லவோ மாலீ தறியானோ - வல்லமையால்

139 ஆண்பெண் ணிருவருமோ ராடைகட்டச் செய்ததுவும்
வீண்பேச்சோ வுங்கள் விளையாட்டோ - நாண்போக்கித்

140 தானையெல்லாம் போக்கித் தரணியிலெங் கொங்கைமத
யானையெல்லாம் வெட்டவெளி யாக்கியே - சேனையெல்லாம்

---

134. சந்திரனையும், தென்றலையும் பாம்பு உண்ணும்; ''தென்காற்று மிந்துவுஞ் சமனே கண்டீர், வீரமா லலங்கா ரர்க்கு விடவரா விடவ ராதோ'' (அழகர் கலம்பகம், 73.) குஞ்சரமாம் - மன்மதனுக்கு யானையாகிய.

135. மன்மதன் கணைகளை அரும்பாகக் கூறுதல் மரபு; ''சுரும்புநாண் கருப்புவி லரும்புக்கணை தூவ'' (மணிமேகலை, 18; 105); ''கரும்புஞ் சுரும்புமரும்பும் பொரும்படைக் காமர்வில்வேள்'' (சிதம்பரச்செய், 74.) இருளுக்குச் சந்திரனாகிய கண்ணும், அரும்புகளுக்குச் சூரியனாகிய கண்ணும், மன்மதனுக்கு அக்கினியாகிய நெற்றிக்கண்ணும் பகை என்று கொள்க, புங்கவர்க்கா - தேவர்களுக்காக.

136. முன் தாக்க.

136-7. பின் பார்த்தீர். பயந்தலைக்கொண்டீர்; பயம் - நீர், அச்சம்; சிலேடை

138. மால் - மயக்கம், ஈது அறியானோ.

139. 'ஓராடை கட்டச்செய்தது' என்றது அர்த்தநாரிசுவரமூர்த்தத்தை நினைந்து,

140. தானை - ஆடை, சேனையென்றது பெண்களை.

141 கும்பிட்டு நம்பகையைக் கும்பிட்ட தென்றுமதன்
தெம்பிட்டுச் சீறிச் சினந்திட்டான் - வம்பிட்டுத்

142 தையலருந் தூற்றினர் சற்றே கடைக்கணித்தால்
மையலரென் றையலர்க்கு வாடோமே - துய்யபுகழ்

143 ஈசரே யென்றென் றெடுத்துப் பலபலவாப்
பேசு மவரி லொருபேதை - பூசன்மதன்

பேதை.

144 விற்குணத்தைக் கண்டறியா மெல்லரும்பு தானுரைக்கும்
சொற்குணத்தை யோராச் சுகப்பிள்ளை - பொற்கை

145 உழையார் கடம்பலர்மட் டுண்டறியா வண்டு
மழையார்ப் புணராத மஞ்ஞை - இழைபுகா

146 மாணிக்க மீசனுக்கு மாரன் பணிந்து வைக்கும்
காணிக்கை யானதங் கக்கட்டி - நீணிலத்து

147 மன்னுங் கலைபொருந்தா மான்கன்று பாற்படுநீர்
பின்னஞ் செயவறியாப் பிள்ளையன்னம் - புன்கவிஞர்

148 பாட்டி னெழுவாய் பயனிலைபோ லொன்றென்று
கூட்டி முடியாக் குழலினள் - வாட்டமுறும்

---

141. கும்பு இட்டு - கூட்டமாகி; கும்பென்பது குழும்பு என்பதன் சிதைவு போலும். நம்பகையை என்றது சிவபெருமானை, இங்ஙனம் நினைந்தவன் மன்மதன். தெம்பு - வன்மை; வழக்கு. வம்பு - பழிமொழி.

142. மை அலர் என்று - குற்றமுள்ள பூக்களென நினைந்து; பாணமாக நினையோம் என்றபடி, ஐ அலர்க்கு - ஐந்து மலர்ப்பாணங்களுக்கு.

144. குணம் - தன்மை, நாணியாகிய வண்டு; நைடதம், அன்னத்தைக் கண்ணுற்ற. 12. சொற்குணங்களாவன; இனிமை மெய்ம்மை முதலியன; குறள். 194, பரிமேல்.

145. உழை - மான். கடம்பு; இத்தல விருட்சம். மட்டு - தேன். மழை ஆர்ப்பு -மேகத்தின் முழக்கத்தை. இழை - ஆபரணத்தில்.

147. கலை - ஆடை, ஆண்மான், பாற்படுநீர் - பாலோடு சேர்ந்த நீர், பகுதிப்பட்ட தன்மை, பின்னஞ்செய - வேறு பிரித்தறிய.

149 அண்டத் தமரரைமுன் னஞ்சலெனக் காத்தசிவன்
கண்டத் தமர்விடம்போற் கண்ணினுள் - மண்டுபுனற்
150 செல்லாருஞ் சோலைத் திருவால வாயதனில்
வில்லாரு மிந்த்ர விமானத்துட் - கல்லானை
151 சித்தரரு ளாற்கரும்பு தின்னுமந்நாட் டென்னனணி
முத்துவடம் போலுமிள மூரலாள் - நத்துலவு
152 பாணிக்குட் சிற்றரும்பாம் பங்கயம்போல் வெற்றிமதன்
தூணிக்கு ளக்கணையின் றோற்றம்போல் - வாணிதொழு
153 நாரிசெங்கை யான்மறைத்த நாத னிருவிழிபோல்
சூரியனிற் சந்த்ரகலை தோய்ந்ததுபோல் - வாரிதியில்
154 பண்டமுத கும்பம் பதிந்திருந்தாற் போலவெளிக்
கொண்டினிமேற் றோன்றுங் குவிமுலையாள் - தொண்டர்
155 அரகர சங்கரவென் றானந்த வின்பக்
குரைகடற்கு ளாகிக் குளித்துப் - பரவசமாய்
156 ஏறுடையான் முன்ன ரிசைநாத் தழுதழுத்துக்
கூறுந் துதிபோற் குதலையாள் - வீறுடைய
157 வள்ள றிருச்சடைமேல் வைத்தபிறை போற்களங்கம்
எள்ளளவு மெய்தா விதயத்தாள் - உள்ளமகிழ்
158 பூவையுடன் பேசியந்தப் பூவைசொன்ன சொல்லைமரப்
பாவைக்குத் தானே பயிற்றுவாள் - ஆவலுடன்

---

149. சிவபிரான் கண்டத்தில் உள்ள விடம் கொல்லுந்தன்மை உடையதன்றாதலின் அஃது இவள் கண்ணுக்கு உவமை கூறப்பட்டது.

150. செல்-மேகம். வில் - ஒளி. இந்த்ரவிமானம் - இந்திரனாலமைக்கப்பட்ட சோமசுந்தரக்கடவுளது விமானம்.

151. சித்தர் - எல்லாம் வல்ல சித்தர். முத்துவடம் - முத்துமாலையை; திருவிளை, 21-23.

152. பாணிக்குள் - நீருக்குள். அக்கணையென்றது தாமரையரும்பாகிய கணையை.

153. நாரி - உமாதேவியார்.

157. இறைவன் அணிந்த பிறைக்குக் களங்கம்இல்லை.

158. பூவை - நாகணவாய்ப்புள்.

159 முத்து வயிர முழுநீலங் கோமேதம்
வித்துரும மாணிக்கம் வெள்ளிசெம்பொன் - இத்தனையும்

160 அட்டி லடுகலங்க ளம்மி யுரலுலக்கை
வட்டிலெனச் சோறு வகுத்தானுற் - கிட்டமுறும்

161 அன்ப ருலகத் தருந்தா தருந்திடுசிற்
றின்பமெனக் கையா லெடுத்துண்டு - நன்கமைந்த

162 வீதிக் கணித்தாக மேவுதலு நூபுரங்கள்
நாதிக்கக் கைத்தாயர் நற்றுயர் - பேதையுடன்

163 சென்று பரனைத் தெரிசித்தா ரவ்வளவில்
இன்றுபுதுத் தேர்மீதி லீங்கிவரார் - என்றலுமே

164 அண்டம் புவன மருஞ்சக்ர வாளகிரி
விண்டலமேழ் பாதலம்பொன் மேருவரை - மண்டலங்கள்

165 சிற்றிலா கச்சமைத்துச் செல்வவிளை யாட்டயரும்
பற்றுக் குதலைமொழி பாலனென - மற்றிவளும்

166 நாடரிய பாலனுட னிருந்து கூடவிளை
யாடநம தில்லி லழையுமெனக் - கோடரத்தில்

167 மையேந்து சோலைமதுரை நகர்க்கவுரி
கையேந்து பாலனருட் காபாலன் - மெய்யடியான்

---

160. வட்டில் - ஒருவகைப் பாத்திரம்; ''பொன்வட்டில் பிடித்துடனே புகப்பெறுவ னுவேனே''; (பெருமாள்திருமொழி); ''கறையடிச் சுவடெனுங் கனக வட்டில்கள்'' காஞ்சிப். திருநகரப். 14.

162. நாதிக்க - முழங்க; ''மணிமுரசம், நாதிக்கும் பாண்டிவள நாட்டினுன்'' விறலிவிடு. 38

165. குதலை மொழி பாலன் - அம்பிகையைப் பாகத்தில் உடையவன்; குதலைமொழி - அம்பிகை; பால் - பாகம்; குதலையை மொழிகின்ற சிறுவனென்பது வேறுபொருள்.

166. கோடரம் - மரக்கிளை.

167. மை - மேகத்தை. கவுரி கையேந்துபாலனென்பதன் வரலாற்றைத் திருவிளையாடல் விருத்தகுமார பாலரானபடலத்தாலுணர்க. காபாலன் - கபாலமென்னும் கூத்துடையவன்; ''காபால மாடுங்கால்'' (கலி. கடவுள்) அடியான் - திருவள்ளுவர்.

168 திங்கட் சுவையெனவே செய்யுமொரு முப்பாலும்
சங்கத்தி னூட்டுந் தமிழ்ப்பாலன் - அங்கசனுக்

169 காமளவு நாமத் தனங்கனெனப் பின்னுமொரு
நாமந் தரித்தநய னப்பாலன் - மாமறைக்கும்

170 அப்பாலுக் கப்பால னன்பாலுன் பாலனேயும்
இப்பால் விளையாட்டி னெய்துமோ - செப்புகெனத்

171 தேர்திரும்ப மற்றோர் தெருவி லிவளைமட
வார்திரும்பக் கொண்டு மனைபுகுந்தார் - மீதொருத்தி

பெதும்பை

172 பேதைகுணம் பாதிமங்கைப் பெண்குணத்திற் பாதிகலந்
தோது பருவ முறுபெதும்பை - காதலெனும்

173 வித்தங் குரித்துவளர் மென்பூஞ் சிறுகொடிக்குச்
சித்தங் கொழுகொம்பாஞ் செய்கையினாள் - மெய்த்தவங்கள்

---

168. திங்கட்சுவை - சந்திரனிடத்துள்ள அமுதம். முப்பால் - திருக்குறள்; மூவகைப்பாலென்பது வேறுபொருள்; ''முப்பாலும், மிஞ்சப் புகட்ட மிகவளர்ந்தாய்'' (தமிழ்விடுதூது; 25). சங்கம் - தமிழ்ச்சங்கம், சங்கு; ''அல்லம தேவன் சரிதத் தீம்பால், புண்ணியர்தஞ் செவிவாயிற் றமிழ்ச்சங்கத் தான்முகந்து புகட்டி னானல்'' (பிரபு. துதிகதி, 11.) தமிழ்ப்பாலன் - தமிழின் பகுதிகளை உடையவன். அங்கசன் - மன்மதன்.

169. நயனப்பாலன் - கண்ணை நெற்றியிலே உடையவன்; பாலம் - நெற்றி.

170. எய்துமோ - வருவானோ

167-70. இப்பகுதியோடு, ''யாவன் பால னிவன்புக லென்றேன். மேவன் பாநகை மேவுறப் புரிந்து, முன்னிவன் பெருமறை மொழிக்கப் பாலன், மன்னிவன் பிராரையின் வளர்கப் பாலன், மூர்த்தி முதலா மொழிமுப் பாலன். சீர்த்திகொ ணீற்றெடு திகழ்கட் பாலன், அறுவகைச் சமயத் தறுவகைப் பாலன், மறுவகை சுருதி மணத்தக பாலன், ஆறு றுய வுவைக்கப் பாலன், மாறு தியற்றி வயக்குகா பாலன் வளர்தரு தெய்வ மனுச்சா பாலன், தளர்வரு கௌரி தனக்கழும் பாலன், தழைதரு மிந்நாட் சைவபரி பாலன், பிழைதரு தன்மையில் பெருந்தவப் பாலன்'' (*அம்பலவாண தேசிகர் கலம்பகம், 51) என்பது ஒப்பு நோக்கற்குரியது.

173. வித்து அங்குரித்து - விதைமுளைத்து.

★ இந்நூல் மகாவித்துவான் ஸ்ரீ மீனாட்சி சுந்தரம்பிள்ளையவர்கள் இயற்றியது.

174 ஈட்டினு மீசனரு ளெய்தி முடிப்பதுபோல்
கூட்டி முடிக்குங் குழலினுள் - நாட்டநுதல்

175 ஏற்குமெம்மான் கைம்மா னினமோ வெனமருண்டு
பார்க்கும் புதியமருட் பார்வையாள் - சீர்க்கமலன்

176 இவ்வளவு செய்தோ மினிநிகரி லாதவெழில்
அவ்வளவு பூரித் தமைப்பதனுக் - கிவ்வாறென்

177 றேலத்தன் சிந்தையுள்ளே யெண்ணி முடிக்குநிகழ்
காலத் தமைந்தமுலைக் கன்னிகையாள் - சாலநிறை

178 விற்பளிங்கு மாளிகையின் மேனிலத்து மின்னனைய
பொற்பளிங்கு வாருமெனப் புந்திமகிழ் - அற்புடைய

179 தன்னனைய பெண்க டனித்தனியே சூழ்ந்திருக்க
வென்னனைமுற் றுமுலைபங் கீசனெழில் - மன்னுதிருக்

180 கந்தரம்போ னீலக் கழங்குங் களங்கமில்லாச்
சந்திரன்போன் முத்தின் றனிக்கழங்கும் - எந்தையுடற்

181 பாதியன்ன பச்சைப் பசுங்கழங்கும் பாதியெழிற்
சோதிமா ணிக்கச் சுடர்க்கழங்கும் - தாதலரும்

182 கொன்றையந்தே னன்னநிறக் கோமே தகக்கழங்கும்
துன்றுகங்கை போல்வயிரச் சொற்கழங்கும் - மன்றுடையான்

183 வேணியன்ன செம்பவழ மென்கழங்கும் பங்கயப்பூம்
பாணி யதனிற் பரிந்தெடுத்து - நீணிலத்துப்

---

175. கைம்மான் மருண்டு பார்க்கும் என இயைக்க.
176. பூரித்து - நிறைத்து.
177. ஏல - பொருந்த. கன்னிகை - அரும்பு.
178. பொற்பள் இங்கு வாரும் என்று அவர்களை அழைக்க.
179. என் அன்னை.
180. கந்தரம் - கழுத்து.
180-81. உடற்பாதி - உமையின் திருவுருவத்தை. பாதி - சிவபெருமானுடைய திருவுருவம்.
182. கோமேதகம் தேனின் நிறமுள்ளது; ''கோமேதகத்தை, மருவுவயிடூரியத்தின் மீது தூய மதுத்துளிமே வியதென்பர்'' திருவால. 25;21.
183. வேணி - சடை. பாணி - கை.

184 பாகாங் குதலைமொழிப் பாவைகுறித் தொன்றையெடுத்
தேகாம் பரத்தி னிசைபாடி - வாகாகக்

185 கூடு மிரண்டெடுத்துக் கொண்டாடி யன்றிருவர்
தேடு மலையின் செயல்பாடி - நாடரிய

186 வள்ளிதழி மூன்றெடுத்து -மன்னு திரிசிராப்
பள்ளி யெனுந்தலத் தைப்பாடி - உள்ளமகிழ்

187 வாடலா ஞலென் றடுத்தெடுத்து நான்மாடக்
கூடல்வளம் பாடிமிகக் கொண்டாடித் - தோடவிழும்

188 கிஞ்சுகப்பூஞ் செவ்வாய்க் கிளிமொழியா ளைந்தெடுத்துப்
பஞ்சநதி மான்மியத்தைப் பாடியே - கஞ்சவிழி

189 அத்திறத்தா லாறெடுத்தன் ருறுமின்ஞ ரட்டமா
சித்திபெற்ற மெய்த்தலத்தின் சீர்பாடிக் - கைத்தலத்தில்

190 ஏழெடுத்துப் பாரிடத்தி லித்தலங்க ளாதியா
ஏழுலகத் தெம்மா னிசைதலங்கள் - சூழுறும்பே

191 றெல்லாங் கடம்பநக ரெய்திஞேர்க் குண்டெனவே
எல்லா மொருமித் தினிதெடுத்துச் - சல்லாப

---

184. பாகு - தேன்பாகு. ஏகாம்பரம் - காஞ்சியிலுள்ள திருவேகம்பமென்னும் தலம்.

185. மலை - திருவண்ணமலை.

186. வள்ளிதழி - பெதும்பை. திரி - மூன்று.

187. நான்மாடக் கூடல் - மதுரை; நான்கு மாடங்கள் கூடிய இடம் என்பது இதன் பொருள்; நான்குமாடங்களாவன கன்னி, கரியமால், காளி.ஆலவாயென்பன; இவற்றைப் பற்றிய வரலாறு மதுரைக் காஞ்சி, 429ம் அடி உரையின் அடிக்குறிப்பால் உணரலாகும்.

188. கிஞ்சுகப்பூ - முள்ளுமுருங்கைப்பூ. பஞ்சநதி - திருவையாறு. கஞ்சவிழி - தாமரைபோன்ற கண்ணையுடைய பெதும்பை.

189. மெய்த்தலம் - பட்ட மங்கை; இது பட்டமங்கலமென இக்காலத்து வழங்கும்; ''பட்ட மங்கையிற் பாங்கா விருந்தங் கட்டமா சித்தி யருளியவதுவும்'' திருவாசகம், கீர்த்தித். 62-3.

191. ஒருமித்து - ஒருங்கே; ''காதலிருவர் கருத்தொருமித்தாதரவு, பட்டதே யின்பம்'' ஔவைபாடல்.

192 மூக்குத்தி முத்தாட முத்து வடமாட
நோக்கிரண்டு மாட நுசுப்பாட - ஆக்கமகள்

193 கொண்டாட மாதுசெங்கை கொண்டாடும் போதிலே
வண்டாடுங் கூந்தலனை மாரதனைக் - கண்டிங்

194 கமைய மமையுமட வன்னமே யென்னும்
அமைய மதனிலெமை யாளும் - உமைபாகன்

195 அத்த னிருத்த னடிக்கண் மலர்க்கணை
வைத்திட மெச்சி மகிழ்ச்சிபெ - றத்திரி

196 விக்ரம னுக்கு மிகுத்த ப்ரபைக்கன
சக்ரம ளித்திடு தற்பரன் - உக்ரம

197 குக்குட முற்ற கொடிக்கர சைச்சொறு
திக்கை யனைத்தரு சிட்டன - னுக்ரக

198 சச்சிதா னந்தச் சதாசிவனம் பொற்றடந்தேர்
விச்சைமணி வீதிதனின் மேவுதலும் - பச்சைமயில்

199 ஆயமன்ன சாய லணியிழைமின் னுருடனே
தாயரும்போற் றிப்பணியத் தான்பணிந்தாள் - தூயனத்தன்

200 மாலளந்து காணு மலையை யிருவிழிக்கோ
லாலளந்தா ளந்த வளப்பறிந்தார் - பாலனைமார்

192-3. நோக்கு - கண்கள், நுசுப்பு - இடை. ஆக்கமகள் - திருமகள், மாது - பெதும்பை. கொண்டு - மேற்கூறிய அம்மானைகளைக் கொண்டு.

194. அமையும் -போதும். அமையம் - சமயம்.

195. மலர்க்கணை - மலர்போன்ற கண்ணை.

195-6. திரிவிக்ரமனுக்கு - திருமாலுக்கு. ப்ரபை - ஒளி. சக்கரம் - சக்கராயுதத்தை.

197. குக்குடம் - கோழி. அரசை - முருகக் கடவுளை. சொல் துதிக்கையனை - விநாயகரை.

198. விச்சை - சிற்பவித்தை.

199. ஆயம் - கூட்டம்.

200. கோல் - அம்பு, அளவுகோல். அளப்பு - அளத்தலை. பால் - பக்கத்துள்ள.

201 தன்னை யறியுந் தருணம்வந்த தாற்றலைவன்
தன்னை மனக்குறிப்பிற் றுனறிந்தாள் - மின்னெனவே

202 எண்ணிய போதி லிவர்பாகம் பச்சையாய்
நண்ணியவா றேது நவிலுமெனக் - கண்மணியே

203 சூலிக்குப் பச்சுடம்புஞ் சொன்முலைப்பா லும்பெருகப்
பாலிக்கு மென்றுசொல்லாற்றி பாராட்டிச் - சேல்விழிப்பெண்

204 மாலையிட வந்தீரிம் மாதினுக்கு நீர்வலிய
மாலையிட வந்ததென்ன மார்க்கமோ - மேல்பசப்புக்

205 காட்டுமான் காட்டியிசைக் கானமறி யாதவெங்கள்
வீட்டுமான் கைக்கொளவோ வீதிவந்தீர் - கேட்டீரோ

206 நன்றுச்சு தையர் நடத்தைவிடர் புல்லருமே
நன்றுச் சரியமென நாடுவார் - என்றென்று

207 செப்பும் விளைதந் திறமெனக்கொண் டேயமுதம்
ஒப்புமிள மூரலுட னேர்வீதிக் - கற்புதனும்

208 செல்லக் கனிவாய்ச் சிறுகுயிலு மின்னுரும்
இல்லத் திருந்தா ரினியொருத்தி - வல்லதிரு

---

202. அனைமார் (200) எண்ணியபோதில். என - என்று பெதும்பை கேட்க.

203. சூலி - சூலத்தையுடைய உமை, கர்ப்பம் உடையவள். பச்சுடம்பு -பச்சை உடம்பு, ஈன்றணிமைத்தாகிய உடம்பு. பாலிக்கும் - அருள்செய்வார். சேல்விழிப்பெண் - அங்கயற்கணம்மை.

203-4. இத்தலத்தில் வேதசன்மாவுக்காகச் சிவபெருமான் மணக்கோலம் காட்டிய வரலாறு இங்கு அறிதற்குரியது; கண்ணணி, 27-31. மாலை - மயக்கத்தை. பசப்பு - பச்சை நிறம். ஏமாற்றுதல் (பாசாங்கு); ''இயல் பசப்பும்'' சரபேந்திர குறவஞ்சி, 30.

205. மானைக்காட்டி மானைப் பிடித்தல் வேடர்கள் வழக்கம். மான் உமாதேவியார். கானம் - சங்கீதம், காடு; சிலேடை. காட்டுமானைக் காட்டி வீட்டுமானைக் கொள்ளவந்தீரென்பது இதிலுள்ள நயம்.

206. நன்று ஆச்சுது; ஆச்சுது - ஆயிற்று; 233. நடத்தை நடை, நடனத்தை, விடர்-விடபுருஷர்கள், விஷத்தையுடைய ஆதிசேடஅவதாரமாகிய பதஞ்சலி முனிவர். புல்லர் - புன்மைக்குணம் உடையவர், புலிக்காலையுடைய வியாக்கிரபாதர்; புல் - புலி. நன்று - மிகுதி.

208. குயில் - பெதும்பை.

209 மங்கைகலை மங்கைமலை மங்கையெனு மூவருமிந்
நங்கைதனைக் கண்டக்கா ணம்பதிகள் - இங்குநமை

210 வஞ்சிப்ப ரென்று மனம்வாக்குக் காயத்தில்
அஞ்சா திருக்கவெழி லார்மங்கை - எஞ்சாது

211 காலை யரும்பிப் பகலெல்லாம் போதாகி
மாலை மலரு மயலென்றுற் - போலவே

212 பேதை யரும்பிப் பெதும்பையந்தப் போதாகி
மாது மலர்ந்த வனப்பினுள் - சோதிமணிப்

213 பன்னுகம் பூண்டோன் பரவையிடைத் தூதுசென்ற
அந்நா ளிருள்போ லளகத்தாள் - உன்னுமல்

214 அன்றுநமை வென்றகண்ணோன் றுமினிச்செய் கையிதென
நின்றுநின்று பார்த்து நினைத்துமதன் - இன்றுசிவன்

215 முக்கணையும் வெல்ல முழுநீல முக்கணையா
இக்கணையோ டெய்வே னெனுங்கண்ணாள் - தக்கதிறல்

216 நாண்மடமச் சம்பயிர்ப்பா நன்மந் திரர்சூழப்
பூண்முலையா மாமகுடம் பொற்பமைத்து - மாணிழைமார்

---

209. பதிகள் - கணவர்கள்

208-10. மனம் - மார்பு; அதிலுள்ளவள் திருமங்கை. வாக்கு - இங்கே நாக்கு; அதிலே உள்ளவள் கலைமங்கை. காயம் - உடம்பு; அதிலே உள்ளவள் மலைமங்கை; நிரனிறை.

211. ''காலை யரும்பிப் பகலெல்லாம் போதாகி, மாலை மலருமிந் நோய்'' என்னும் திருக்குறளை இக்கண்ணி குறித்துச் சுவைததும்ப நிற்கின்றது.

212. மாது - காதல்; சீவக. 356.

213. பல்நாகம் - பல பாம்புகளை.

214. நின்று நின்று பார்த்து - மிக ஆலோசித்து.

215. முக்கணையும் வெல்ல - மூன்று கண்களையும் வெல்ல. தன் கையிலுள்ள நீலமலர்ப்பாணம் ஒன்று; இவள் கண்ணாகிய நீலமலர்ப்பாணம் இரண்டு. முழு நீலம்: ''மாதே முழுநீலங், கொல்லும்'' இரத்தினச் சுருக்கம், 11.

216. மந்திரர் - மந்திரிகள்.

217 அங்கசன் மந்த்ரமெல்லா மாக்கம் பெறவுரைப்பத்
தங்குமனச் சிங்கா தனத்தேற்றி - அங்கணன்றன்

218 சீர்த்தி யபிடேகஞ் செய்து தலைமைபெறு
மூர்த்திகர முண்டாக்கி மோகமெனும் - பார்த்திபனுக்

219 கிட்ட மிருந்தநல்லா ரெல்லாருங் கொண்டாடப்
பட்டந் தரித்த பருவத்தாள் - கட்டிசைந்த

220 செம்பதும ராகச் செழுமணிப்பொன் னுடரங்கில்
அம்பதுமை மின்னு ரருகிருக்க - விம்பவிதழ்

221 அன்னமுன்னந் தாருவனத் தங்கனைமா ரேந்தியபால்
அன்னமென முத்தினணி யம்மானை - தன்னிருகைக்

222 கொண்டா ளிசையாற் குயினுணச் செங்குமுதம்
விண்டா ளெடுத்து விளையாடல் - கண்டோர்கள்

223 துன்றனமூன் றங்கையெனச் சொல்வனசப் பூவிரண்டில்
ஒன்றிருக்க வொன்றெழுவ தொக்குமென - வென்றிமழு

224 வல்லா னுருவெளியின் மாலை யெனத்திரண்டு
பல்லாரங் கன்றெழுந்து பார்ப்பதென - வல்லமைசொல்

225 அம்மானை யாடிவென்ற வம்மானைப் பாடியே
அம்மானை யாடு மளவிலே - எம்மானும்.

---

218. சீர்த்தியாகிய நீரை அபிஷேகம் செய்து; சீர்த்தி வெள்ளை நிறமுடையது; அதனுல் அது வெண்மை நிறமுடைய அபிஷேக தீர்த்தமாகக் கூறப்பட்டது.

217-8. அபிடேகத்தாலும் மந்திரத்தாலும் மூர்த்திகரமுண்டாகுமென்பர்; காஞ்சிப்புராணம், நகரேற்றுப் படலம் 162-70-ஆம் பாடல்களைப் பார்க்க.

219. நல்லார் - பெண்கள், சான்ருேர். கட்டு - கட்டுதல்.

220. பதுமை - திருமகள். விம்பம் - கொவ்வைக்கனி.

221. அன்னம் - மங்கை; எழுவாய். பாலன்னம் - பாற்சோற்றுத் திரளை.

222. செங்குமுதம் விண்டாள் - வாயைத் திறந்து பாடினுள்.

223. துன்று அனம் மூன்று - நெருங்கிய மூன்று அன்னப் பறவைகள்.

225. அ மானை - அந்தக் காளியை; அ: உலகறிசுட்டு. ஆடிவென்ற ஊர்த்துவதாண்டவம் செய்து வெற்றிகொண்ட. அம்மானை - சிவபெருமானை. திருக்காளத்தி நாதருலா, 349; திருப்பூவணநாதருலா, 265.

226 சீதள சோம திவாகர லோசன
வேத சொரூப விநோதபு - ராதன

227 மாருத பாவக மாதவ சாயக
மேரு சராசன வீரச ரோருகப்பொற்

228 பாதன் கயிலைப் பரமன் கடம்பவன
நாதன் றிருவீதி நண்ணுதலும் - மாதுகரத்

229 தம்மனையை வைத்தா ளனமனையார் தங்களுடன்
அம்மனைநின் றேகி யடிபணிந்தாள் - சென்மக்

230 கருவிலியைக் கண்ணாரக் கண்டாள்கண் காணா
உருவிலியைக் காணென் றுறுக்கி - மருமத்

231 தொருகோல் செவிமட் டுறவாங்கி விட்டான்
குருகோ லிடுங்காப்பூங் கோதை - வெருவியே

232 அம்புலி யென்ப தழற்க ணுறும்புலியோ
வம்புரைக்கப் பெண்கண்மட மாணுரோ - கும்பமுனி

233 குன்றிற் பிறந்த குழவியிளங் காலுடலம்
கன்ற வுதைத்திடும்வன் காலாச்சோ - ஒன்றுகுயில்

---

226. சோம திவாகர லோசனம் - சந்திரனையும் சூரியனையும் கண்ணாக உடைய.

227. மாருத பாவக மாதவ சாயகம் - காற்று, நெருப்பு, திருமால் என்னும் மூவராலாகிய அம்பையுடைய; ''வல்வாயெரி காற்றீர்க்கரி கோல்வாசுகி நாண்கல், வில்லாலெயி லெய்தான்'' (திருஞா. தே,) மேருசராசனம் - மேருவாகிய வில்லையுடைய. சரோருகம் - தாமரைமலர்.

229. அ மனை நின்று.

229-30. சென்மக்கருவிலியை - பிறப்பில்லாதவரை. உருவிலி - மன்மதன்; இது தன்மைக்கண் வந்தது. மருமத்து - மார்பில்; நெஞ்சில்

231. ஒருகோல் - ஓரம்பு; என்றது தாமரையரும்பை; அதுவே நெஞ்சிலெய்யப்படுவது; ''நெஞ்சி லரவிந்தம்'' இரத்தினச் சுருக்கம், 37.

232. வம்பு - பழிமொழி. கும்பமுனி - அகத்தியர்.

233. குன்று - பொதியில்மலை. குழவியிளங்கால் - தென்றற் காற்று; ''சிறுகாற் குழந்தாய்கேள்'' (பத்மகிரிநாதர் தென்றல்விடுதூது, 112.) கால் - காற்று, பாதம்.

234 ஓசையெல்லாங் காளகண்டத் துற்றதோ வுள்ளடங்கும்
ஆசையினி யாசைக் கடங்காதோ - பேசுமொழி

235 அஞ்சுகமன் னீரிரவின் யாமமொரு நாலுமினி
அஞ்சுகமோ வாறுகமோ வாரறிவார் - நெஞ்சுகந்து

236. கூட்டிவைக்க வல்லீரோ கூறுமெனத் தெள்ளமுதம்
ஊட்டிவைத்த சொல்லா ருரைசெய்வார் - கேட்டீரோ

237 பாதி யுடம்பாய்ப் பசப்பையுற்ற பெண்பாலாற்
போதவன்னி யத்தமனப் போதுறலாற் - கோதிலா

238 மீனக் கொடியன் விரைவிற் பயந்ததால்
ஊனக் கொடியகரு வுள்ளடையா - மோனர்

239 இமய வரையளித்த வெந்தையனை யென்னும்
உமையு முமையுமே யொத்த - அமைவால்

240 இவளுக் கொருபா லிசையுமெனப் பாகத்
தவளுக் கறியா தமைக்கும் - உவமை

---

234. காளகண்டம் - குயில்; விஷம் பொருந்திய கழுத்தென்பது வேறு பொருள். ஆசைக்கு - திக்குக்களில்.

235. அம் சுகம் அன்னீர்; சுகம் - கிளி. அஞ்சு உகமோ - ஐந்து யுகங்களோ; ''இற்றை நீடிரவொான், றஞ்சுகந் தத்தை விளைக்கும்'' திருவேங்கடத்தந்தாதி, 12.

237-9. சிவபெருமானுக்கும் அம்பிகைக்கும் மங்கைக்கும் சிலேடை.

பசப்பு - பச்சை நிறம், பசலை, வன்னி அத்தம் மன்ன போதுறலால் நெருப்பு கையின்கண் இருக்க வருதலால், கிளி கையின்கண் தங்கியிருப்ப வருதலினல்; அத்தமனப்போது வன்னி உறலால்; வன்னி - நெருப்பாக. மீனக் கொடியன் - மன்மதன், பாண்டியன். விரைவில் - சீக்கிரத்தில், மணம்பொருந்திய பூவாகிய வில்லை. பயந்ததால் - அஞ்சினமையால், பெற்றதால்.

239. இமையவரையளித்த: சிலேடை. எந்தை என்னும் உம்மையும் அனை என்னும் உமாதேவியையும் என முறையே கூட்டுக.

240. ஒருபால் - ஒருபக்கம். என - என்று தோழியர் சொல்ல. பாகத்தவளுக்கு உமைக்கு. அமைக்கும் - அடக்கும்; பெயரெச்சம்.

241 அபய கரத்திலங்க வைந்துருவின் மேலாம்
உபயன்மற்ளுேர் வீதிதனி லுற்ருன் - அபரி

242 மிதமான தாருவன மேவு முனிவோர்
இதமா யிவண்மருவு மின்பம் - உதவாத

243 சங்கைத் தவமே தவஞ்செய்தோ மென்னமன்னும்
மங்கைக்கு மேலான மாமடந்தை - பொங்குகதிர்ச்

மடந்தை

244 சந்திரனுற் சூரியனுற் றள்ளுண் டுடைந்தோடி
வந்து புகுந்து மறைந்துமறைந் - துய்ந்திடவே

245 வானு ரிருட்கு மலரோன் வகுத்துவைத்த
கானு ரரண்போற் கருங்குழலாள் - தேனுரும்

246 சொல்லாண் மதனனுக்குஞ் சொல்லுவாள் புத்திகொங்கை
கல்லாள்கொக் கோகமுற்றுங் கற்றறிந்தாள் - எல்லாம்

240-41. அபயகரமானது போதுமென்று அடக்குதலைக் காட்டினுற் போன்றதென்பது கருத்து; ''கூடுங் கதியொருகாற் கும்பிட்டாற் போதுமென, நாடு மபிநயத்தை நண்ணிற்ருல் - ஓடியகட், காதனுர் காணவொரு கால்காட்டிக் கையமைத்து, நாதனுர் செய்யு நடம்'' (சிதம்பரமும்மணிக்கோவை, 29) என்பதில் அபயக்கை போதுமென்னும் குறிப்பைக் காட்டுவதாகக் கூறப்பட்டிருத்தல் காண்க.

241. ஐந்துரு - பஞ்சகிருத்தியத்திற்குரிய மூர்த்திகளின் உருவங்கள். உபயன் - அருவுருவுடையவர்.

242. முனிவோர்: எழுவாய்.

243. சங்கைத்து - சந்தேகமுடையது. அவமே தவஞ்செய்தோம்; அவமே - வீணுக. மங்கைக்கு - மோகினிக்கு.

245. கானுரரண் - காட்டரண்; குழலுக்குக் காட்டை உவமைகூறுதல் மரபு; ''குழற்கா டேந்துமிள வஞ்சிக் கொடியே'' (மீனுட்சியம்மை பிள்ளைத் தமிழ், வருகைப். 9); ''ஐம்பாற் காடுஞ் சுமக்கும் கரும்பே'' (சகலகலா வல்லிமாலை, 2.) ஆரும் - ஒக்கும்.

246. புத்தி சொல்லுவான். கல் - மலை, கல்லாள்..... கற்றறிந்தாள்: சொன்முரண்.

247 கரும்புருவ வில்லாள் கமழ்கமல வில்லாள்
கரும்புருவ வில்லாள்வேற் கண்ணாள் - அரும்பு

248 நகையா டளிரன் னகையாள் பணிமே
னகையாள் புவிமே னகையாள் - சகமகிழும்

249 பூங்குமுதச் செங்கனிவாய்ப் பூவைதனித் தில்லிருந்தோர்
பாங்கிதனைக் கூவியுயிர்ப் பாங்கியே - ஈங்கெழுதும்

250 ஓவியங்கை வந்த வொருவனைமுற் றுதமுலைத்
தேவி மணாளன் றிருவுருவை - நீவகுப்பாய்

251 என்னப் படத்தி லிசைத்துவா வென்னலுமே
அன்னமன்ன தோழி யறிந்துசொல்வாள் - முன்னவன்றன்

252 வேணி யெழுதவல விஞ்சைகற்று னேனுமதிற்
பாணிதனை யெவ்வாறு பாணிப்பான் - மாணமைந்த

253 நெற்றி யெழுதவல்ல நேர்மைகற்று னேனுமதில்
உற்றகனற் கண்ணெழுத வொண்ணுதே - மற்றுமிரு

254 கண்ணெழுதக் கற்றுனே கற்றுலுந் தண்ணருள்கூர்
வண்ண மமைக்க வசமாமோ - உண்மகிழும்

246-7. எல்லாம் கரும்பு உருவ வில்லாள் - உருவமெல்லாம் கரும்பைப் போன்ற ஒளியையுடையவள்; வில் - ஒளி. கமல இல்லாள் - திருமகளைப் போன்றவள். கரு புருவ வில்லாள் - கருமையாகிய புருவ வில்லையுடையவள்.

248. தளிர் அன்ன கையாள். பணி மேல் நகையாள் -ஆபரணங்களால் மேலாகிய விளக்கத்தையுடையவள். புவி மேனகையாள் - பூமியில்வந்த மேனகை போன்றவள்.

249. தனித்து இல் இருந்து.

249-50. எழுதும் ஓவியம் கைவந்த ஒருவனை - ஓவியம் எழுதுவதில் தேர்ச்சிபெற்ற ஒருத்தனை; ''ஓவியத் துறைகை போய வொருவனை'' (நைடதம், அன்னத்தைக், 6.) வகுப்பாய் - எழுதுவாயாக.

251. என்னலும் - என்று மடந்தை சொன்னவுடன்.

252. விஞ்சை - வித்தையை. பாணி - நீர்; ஆகாய கங்கை. பாணிப்பான் - திருந்த அமைப்பான்; 118. மாண் - மாட்சிமை.

255. தோடெழுத வல்லனென்று சொன்னாலும் வீணைவல்லோர்
பாட லிசைக்கப் படுவதோ - நாடிநின்று

256 செம்பவள வாய்வகுத்துச் செய்தாலு முன்னதர
விம்பவளத் தேனருந்த வேண்டாமோ - நம்பரமன்

257 சுந்தரம்போ லேயெழுதக் கற்றானே யானாலும்
முந்தச் சுருதி முழங்குமோ - வந்தவிஞ்சை

258 யாலிங் னங்கரங்க ளாவெழுதி னாலுமுன்னை
ஆலிங்க னஞ்செயலை யாரமைப்பார் - மாலறியா

259 நித்தன் றிருமார்பு நின்றெழுதி னாலுமுன்மேற்
சித்த மகிழ்வதெனச் செய்யவல - வித்தகனோ

260 தாட்டுணைகள் போலெழுதித் தந்தாலுந் தாண்மாறி
ஆட்டுவிக்கப் பாண்டியனா ரல்லவே - வாட்டடங்கண்

261 மின்னே மணியே விளக்கே விலைமதியாப்
பொன்னேநால் வேதப் பொருளாவான் - தன்னுருவைத்

262 தூரிகையி னாலெழுதச் சொன்னதென்ன புத்தியத்த
நாரிதனைக் காணிலுள நாணாதோ - பேரறிஞர்

---

255. தோடு - ஒருவகைக் காதணி. வீணைவல்லோர் - கம்பளர் அசுவதரர்; 65 - ஆம் கண்ணிக்குறிப்பைப் பார்க்க.

256. அதர விம்ப வளத்தேன் - கீழுதடாகிய கொவ்வைக் கனியின் இனிமையுடைய தேனை.

257. சுருதி - வேதம்; இங்கே சாமகானம்; ''சங்கணி குழையர் சாமம்பாடுவர்'' (திருஞா. தே.); ''மாமலர்த் தெரியலான் மணிமிடற் றிடைக் கிடந்த, சாம கீதம்'' (சீவக. 2038); ''தங் கண்ட, மீதுல ராத சாம வேதமார்ப் பவர்போல்'' (திருவிளை, மாமனை. 23); தக்க. 610-ஆம் தாழிசையுரையின் அடிக்குறிப்பைப் பார்க்க.

257-8. விஞ்சையால் இங்கனம் கரங்களா எழுதினாலும்; இங்கனம் - இங்ஙனம். ஆலிங்கனம் செயலை - தழுவுதலை.

259. வித்தகனோ; ஓகாரம் எதிர்மறை.

262. தூரிகை - எழுதுகோல். அத்த நாரிதனை - பாதி வடிவத்திலுள்ள பெண்ணை; என்றது உமாதேவியாரை.

263 அப்படிய னவ்வுருவ னவ்வணத்த னென்றறிவார்
இப்படிய னிவ்வுருவ னிவ்வணத்தன் - ஒப்புடையன்

264 ஆமென் றெழுதவல்லா ரியாரே மலரிதழித்
தாமந் தரித்தவிண்ணோர் தம்பிரான் - மான்மியஞ்சேர்

265 உள்ளத்தி னுள்ளன் புடையார் கருத்தறியும்
வள்ளல் வலிய வருமென்னத் - தெள்ளமுத

266 வாரி பவள மலைபோன் மலையனைய
தேரின் வரமகிழ்ந்து சென்றணைந்து - பாரினின்று

267 கண்டா ருதித்தாள் கனிந்தாள்பே ராசைமேன்மேற்
கொண்டாள் பணிந்தெழுந்து கும்பிட்டாள் - எண்டிசையும்

268 கட்டிய தானைக் கருணா கரநிதியே
பட்டிமையில் லாருளத்தின் பாக்கியமே - புட்டிலிலே

269 ஐயம் படைத்தவனு லையா பரிகலத்தில்
ஐயம் படைத்தவர்போ லாயினேன் மெய்யணியோ

263-4. ''மைப்படிந்த கண்ணாளுந் தானுங்கச்சி மயானத்தான் வார்சடையா னென்னி னல்லால், ஒப்புடைய னல்ல னொருவ னல்லன் ஓரூரனல்லனோ ருவம னில்லி, அப்படியு மந்நிறமு மவ்வண் ணமும் அவனருளே கண்ணாகக் காணி னல்லால், இப்படிய னிந்நிறத்த னிவ்வண் ணத்தன் இவனிறைவ னென் றெழுதிக காட்டொ ணாதே'' (திருநா, தே.) இதழித்தாமம் - கொன்றை மாலை.

265. வரும் - வருவான்.

267-8. எண்டிசையுங் கட்டிய தானை - திகம்பரம். பட்டிமை - பொய்; ''பட்டிமையும் படிறுமே பேசுகின்றார்'' (திருநா. தே.), ''பாவகஞ் செய்து தீட்டிப் பட்டிமை யோலை யுய்ப்பான்'' (திருவிளை, 30:13) புட்டிலில் - அம்பறாத்தூணியில்.

269. ஐ அம்பு அடைத்தவன் - ஐந்து மலர்ப்பாணங்களைச் செருகி வைத்தவன்; மன்மதன். பரிகலத்தில் ஐயம் படைத்தவர்போல் - பிச்சைப் பாத்திரத்தில் பலியிட்ட தாருகாவன முனிவர் பத்தினிகளைப்போல, ஆயினேன் என்றது காம மயக்கங்கொண்டு ஆடை முதலியவற்றை இழந்ததைக் குறிப்பிட்டபடி, மெய் அணி - முழு உடம்பாகிய ஆபரணம்; என்றது காயாரோகணத்திருவுருவத்தைக் குறிப்பித்தது.

270 டென்பணியுங் கொண்டீ ரிமய மடந்தையைப் போல்
என்பணியுங் கொண்டாலா ரேசுவார் - முன்புபச்சை

271 மாலையளித் தீரெனக்கு மாலையளித் தீரதற்கு
மாலையளித் தீரென்றுல் வாழ்த்தேனே - சூல

272 தரரே யெனவா தரத்தா லுரைக்க
வரதன் மனமகிழ்ந்து மற்றோர் - திருவீதி

273 சென்று னிவளுந் திருமனையிற் புக்கிருந்தாள்
நின்றாரிற் பின்னுமொரு நேரிழையாள் - நன்றிசைந்த

அரிவை

274 மானை மருட்டிவரி வண்டைச் சிறைப்படுத்தி
மீனைப் பயமுறுத்தி விண்டலர்ந்து - தேனூர்

275 வனசத்தைப் பங்கமுற வாட்டிக் குவளை
இனசத் துருவைவன மேற்றிச் - சினமா

276 வடுவை வடுச்செய்து வாருதியோ மேன்மைப்
படுமென் றதோகதியாய்ப் பண்ணிக் - கடுவினுக்கு

---

270. என்பு அணியும் - எலும்பாகிய ஆபரணத்தையும். என் பணியும் கொண்டால் - என்னுடைய குற்றேவலையும் ஏற்றுக்கொண்டால்.

271. மாலை - திருமாலை. அளித்தீர் - காப்பாற்றினீர். எனக்கு மாலை அளித்தீர் - அடியேனுக்கு மயக்கத்தைத் தந்தீர். அதற்கு - அதனை நீக்குதற்கு. மாலை - பூமாலையை.

274. மருட்டி - மருளச்செய்து. சிறை - இறகு; சிறைச்சாலையென்பது மற்றொருபொருள். பயம் - நீர், அச்சம்; ''உன் கண்ணுக்கு மீன்பயங் கொண்டலையும்'' கோடீச்சுரக்கோவை, 23.

275. பங்கம் - சேறு, பழுது; ''புங்கமுறு மம்புயத்தைப் பங்கமுற்ற தென்னவொளிர் முகத்திளுள்'' (சரபேந்திர, குறவஞ்சி, 11.) வனம் - தண்ணீர், காடு; தோற்றவர்கள் காட்டியல் மறைந்திருத்தல் மரபு, ''இனத்தினுட ளும்ப லெழிற்போது தோற்று, வனத்திருக்க மன்னியசெவ் வாயாள்'' (பெருவுடையாருலா, 185) என்பதன் அடிக்குறிப்பைப் பார்க்க. சின - சின்ன; சிறிய; ''சின்னவிடைப் பாகா'' காசிக்கலம். 79.

276. மேன்மைப்படும் - மேன்மையை அடையும், மேலே மேகம்பொருந்தும். அதோகதியாய் - ஆழமுடையதாக, தாழ்ந்த நிலையுடையதாக. கடு-விடம்.

277 நித்யகண்ட மேவு நிலைகொடுத்து வேன்முனைக்குச்
சத்தியிலை யென்னவெற்றி தான்கொண்டு - கத்தி

278 உறையிடக் காணுதென் றுயிரின் கொலைக்கு
மறலிதன்ம னுமெனப்பேர் வைத்து - விறலார்

279 உருவை யுடையா னுடைய கணைபோன்
றரிவை யுறுகண் ணரிவை - பருவமுற்றும்

280 நாளிகே ரத்தினைத் தன் னல்லடிவீழ்த் திச்சக்ர
வாளத்தை யோட்டிநெடு வான்புகுத்தித் - தாளத்தை

281 ஒன்ருென்று தாக்கவிடுத் தோர்தாளிற் ருமரையை
நின்றிடெனத் தண்ட நியமித்துத் - துன்று

---

277. நித்ய கண்டம் - தினந்தோறும் கழுத்தில், தினந்தோறும் வரும் ஆபத்து. சத்தியிலை - வேலினது இலை, ஆற்றலில்லை; ''சுத்தவீ ரத்தரங்கைத் துன்னுவடி வேலதனைச், சத்தியிலை யென்னுந் தடங்கணுள்'' (பெருவுடையாருலா, 225), ''வெற்றி வேலைநீ டிதுசத்தி யிலையென வேலை, சுற்று மாநிலஞ்சொலவுறு துணைமத விழியாள்'' திருவிடைமருதூர்ப்புராணம், தேவவிரதச். 24.

278. உறையிடக்காணுது - உறைக்குள் இட்டால் தோற்ருது, உறைக்கணக்கிடவும் பற்ருது; உறை - ஒருவகை எண்; ''உறையிடத் தேய்ந்திடு மிவ்வந்தி வானத் துடுக்குலமே'' (திருவேங்கடத்தந்தாதி, 34) மறலி - யமன். தன்மன் - தருமராசன், கொலையே யில்லாதவன்; ''கூற்றுவனே யாருங் குலவுந் தருமனெனக் கூற்றை செய்யுந் தடங்கண்ணுள்'' (பெருவுடையாருலா, 183), ''தருமனெனக் கூற்றை யெவருஞ் சொல்லக் கூர்த்த நயனத்தாள்'' (சரபேந்திர, குறவஞ்சி,11), ''இயமனைத் தரும னெனவுயிர் வாட்டி... ... ... இலகு மடக்கொடி கூர்விழி'' திருவிடை. வரகுண. 73.

279. உரு - அழகு. உருவையுடையான் - சிவபெருமான். அரி வை உறு - அரிகளையும் கூர்மையையும் பெற்ற, திருமாலை வைக்கப்பெற்ற.

280. நாளிகேரத்தினை - தேங்காயை. சக்ரவாளத்தை - சக்கரவாகப் பறவையை; ''சோணுடர் போற்றிய செம்பொற் றியாகர் துறைசைவெற்பிற், காணு மருங்குனின் பூணுரக் கொங்கையைக் கண்டழிந்த, நாணுற் புவியி லொரு வர்தங் கண்ணுக்கு நண்ணரிதாய்ச், சேணுர் விசும்பிடைச் சக்கர வாகந் திரிகின்றதே'' திருவாடுதுறைக் கோவை, 22.

280-81. ''மாயைமுலைக் கிணையெனவென் முன்ருலும் வந்ததென வலக்கைத் தாளம், போயிடக்கைத் தாளமதைப் பொருமையினுர் ருக்குதல் போற் புடைத்தொலிப்ப'' (பிரபு லிங்கலீலை, மாயைபூசனை, 50) தண்டம் - தண்டனை.

282 கரியைக் கிரிவைத்துக் கன்னிகா ரத்தைத்
தெரியலர்தூற் றச்சிறுமை செய்து - பரிய

283 மணிச்செப்பை வாயடைத்து வைத்த பணியுள்
தணிச்சொப்பில் கூவிளத்தைச் சாலக் - கணிப்பரிய

284 வித்தையுள்ள வெல்லாம் வெளிப்படுத்தக் கண்டுசிவ
பத்த ரிடத்திருக்கப் பாலித்து - மொய்த்தமலர்ச்

285 செண்டைப் புலர்த்தித் தினகரர் சூழ்ந்திடும்வே
தண்டத்தைப் போரிற் றலைமடக்கிக் - கண்டித்

286 திணைத்திறுகி விம்மி யிறுமாந் திளகிப்
பணைத்துத் திதலை பரந்து - துணைக்கண்

287 கறுத்து வெளியிடையிற் காணு திடையை
ஒறுத்துப் புனைகச் சுவந்து - மறுப்படாச்

288 சந்தச் திமிர்ந்து தரள வடம்புனைந்து
கந்தங் கமழுங் கனதனத்தாள் - அந்தரத்தின்

289 என்றடுத்து வந்தாலு மென்றுவந்தீ ரென்றெதிர்த்து
நின்றடுத்துக் கேட்குமிரு ணோர்குழலாள் - வன்றிறல்சேர்

---

282. கரி - யானை. கிரிவைத்து: தோற்றவர்கள் மலையை அடைவது மரபு. கன்னிகாரத்தை - கோங்கரும்பை. தெரியலர் தூற்ற - யாவரும் தெரியும் மலர்களைப்பொழிய, பகைவர்கள் பழிக்க. பரிய - பருத்த.

283. வாயடைத்து - வாயை மூடி, பேசாமலிருக்கச் செய்து. பணியுள் தணிச்சு - ஆபரணங்களை அதற்குள் தங்கச்செய்து, குற்றேவலில் அடங்கச்செய்து. கூவிளத்தை - வில்வக்கனியை. கணிப்பு அரிய - அளவிடுதற்கரிய.

284. விதை - விதையை, கல்வி. வில்வக் குடுக்கையைத் திருநீறுவைத்துக் கொள்ளுதற்குச் சிவனடியார்கள் பயன்படுத்திக்கொள்வார்கள்.

285. புலர்த்தி - வாடச்செய்து. தினகரர் சூழ்ந்திடும் வேதண்டம் - மேருமலை. தலைமடக்கி - வளையச்செய்து, வெட்கத்தால் தலைகுனியச்செய்து; அது வில்லானபோது வளைந்தமை இங்கே அறியற்பாலது.

286. திதலை - தேமல். 288. சந்தம் - சந்தனம்.

289. என்று - சூரியன். என்று வந்தீர்: ஒரு சமயத்தில் பாம்பு கருடனை நோக்கி, 'சுகமா' என்று கேட்டதை இது நினைப்பிக்கின்றது. காஞ்சிப் பணுதரீச். 5.

290 அங்கோல மாரவே ளாக்கினையுஞ் சக்கரமும்
செங்கோலும் போன்ற திறலினுள் - பொங்குகதிர்ச்

291 சித்ரமணி மேடைதனிற் சிங்கா தனத்திருந்து
வித்தாரப் பாடல் விறலிக்கு - முத்தாரம்

292 பூந்துகில் சந்தம் புனைய வளித்துமகிழ்ந்
தேந்திழையே முன்னு ளிசைவாது - சாய்ந்திடவே

293 எம்பிரான் கூட விறைவனரு ளாற்செயித்த
கும்பமுலை மாமயிலே கூறக்கேள் - உம்பரிலே

294 வீரங் கருணை மிகுந்த சவுந்தரமும்
சேருங் கடவுளர்யார் செப்பென்ன - ஆர்வமுடன்

295 வீணை யிடந்தழீஇ மென்மா டகந்திருத்திப்
பாணினியு மின்னிசையாற் பாடுவாள் - ஆண்மைமிகு

296 காமன் புரத்தைக் கருதார் திரிபுரத்தை
மாமன் சிரத்தைமல ரோன்சிரத்தை - ஏமமுறு

297 அந்தகனை யந்தகனை யாதி யடையலரை
முந்தத் தடிந்த முறைகேட்கின் - விந்தையாம்

298 பார்த்து நகைத்துப் பரிகரித்துக் கிள்ளியுதைத்
தார்த்துவெகு ளாதவிளை யாட்டமரை - நேர்ந்திடவே

---

290. ''அலகில் சுரபதி மதனர்களரசிவர் அவர திகிரியு மனிகமும்... இவர்'' (தக்க. 38) என்பதையும் அதன் உரையையும் பார்க்க.

292. சாய்ந்திட - தோல்வியுற.

292-3. விறலியைப் பாணபத்திரர் மனைவியாகவே எண்ணிக் கூறியது; இங்கேகூறிய வரலாற்றைத் திருவிளையாடற்புராணம் இசைவாதுவென்ற படலத்தா லறியலாகும்.

294. சவுந்தரம் - அழகு. என்ன - என்று அரிவை கேட்ப.

295. மாடகம் - முறுக்காணி. பாணினி - விறலி.

296. புரத்தை - சரீரத்தை. மாமன் - தக்கன். ஏமம் இன்பம்.

297. அந்தகனை - யமனை, அந்தகாசுரனை. ஆதி அடையலர் - முதலாகிய பகைவர்; என்றது யானை, சலந்தரன் முதலியவர்களை.

298. பார்த்தல் முதலியவற்றை நிரனிறையாகக் கொள்க. விளையாட்டமரை விளையாட்டுச் சண்டையை. நேர்த்திட - ஒக்க.

299 எத்தேவர் செய்வா ரிஃதேவ ரான்முடியும்
அத்தேவ ரெல்லா மடலுற்ருல் - மெய்த்துணைகள்

300 கூடுவா ராயுதங்கள் கொள்வார் சமரிலுடைந்
தோடுவார் மீள்வா ருடற்றுவார் - நாடரிய

301 வஞ்சனையால் வெல்வார் மறுத்தக்காற் செய்வதென்னென்
றஞ்சுவார் வீர மறியோமோ - மிஞ்சும்

302 அரிபிரம ரேனுமுன மாணவமுற் ருரேல்
அரிய னரியதவத் தன்பர்க் - குரியனென்று

303 சொல்லுவது நிற்கமுனந் தும்பி சிலந்தியரா
வல்லமையில் லாதகய வாய்தமக்கும் - வெல்லமரில்

304 அன்னை யிழந்த வடலேனக் குட்டிகட்கும்
என்னேயோ ரிக்கு மெறும்புக்கும் - தன்னிடத்தில்

305 அன்புதவி யென்று மழியாப் பெரும்பதவி
பின்புதவி யாள்கருணைப் பெம்மானும் - நம்பரன்காண்

306 பெண்கண்மயக் கற்றதவப் பேரறிவு தானிழந்து
பெண்கள் வடிவெடுத்துப் பேரெழில்கண் - டெண்களிப்பி

307 ஞலே யொருபதிஞ ருயிர மாமுனிவோர்
மாலாய்ப் புணர்ந்ததிரு மாலேபெண் - பாலாய்

---

299. இஃது ஏவரால் முடியும். அடலுற்ருல் - சண்டை செய்யப்புகுந்தால்.
296-303. இவற்றில் வீரம் கூறப்பட்டது.

303. இனி, கருணை கூறப்படும். தும்பி - யானை. அரா - பாம்பு. தும்பி முதலிய மூன்றும் பூசித்துப் பேறுபெற்ற தலம் காளத்தி. தும்பி சிலந்தி இரண்டும் பூசித்துப் பேறுபெற்ற தலம் திருவானைக்கா. தும்பியென்பதற்கு வண்டென்று பொருள்கொண்டு அது பூசித்துப் பேறுபெற்றது ஸ்ரீசைலம். திருவண்டுறை எனக் கொள்க. பாம்பு பூசித்துப் பேறுபெற்ற தலங்கள்: திருக்குடந்தைக் கீழ்க்கோட்டம், திருநாகேச்சுரம், திருநாகைக்காரோணம், திருப்பாம்புரம், திருப்பாம்பணி, திருக்கேதீச்சுரம் முதலியன. கயவாய் - கரிக்குருவி; இது பேறுபெற்ற தலம் திருவாலவாய்.

304. ஏனக்குட்டி - பன்றிக்குட்டிகள்; இவற்றிற்கு அருள்செய்தது திருவாலவாயில். ஓரி - நரி; நரி அருள்பெற்ற தலம் திருக்குற்ருலம். எறும்பு அருள்பெற்ற தலம் திருவெறும்பீச்சுரம்.

308 மருவி னிமவான் மருக னழகுக்
கொருவரிணை யாவாரு முண்டோ - பொரும்விசய

309 வீரப் பெருக்கழகன் மென்கருணைச் சீரழகன்
ஆரத் திருமேனி யாரழகன் - ஓரழகுக்

310 கெவ்வளவு மீச னிணையிலியென் றேயுரைக்கும்
அவ்வளவிற் பல்லியத்தி ஞர்ப்பரவம் - கொவ்வையிதழ்

311 மாது செவியுறலும் வந்ததுதே ரென்றெழுந்தாள்
நாத னடிபணிந்து நாடியே - சீதமலி

312 காவெல்லா மாரன் கணையே கணைமுதிரும்
பூவெல்லா நாணின் பொருத்தமே - மேவுவயல்

313 மேடெல்லா மன்மதன்கை வில்லே குடியிருக்கும்
வீடெல்லாஞ் சேனை விளக்கமே - கூடும்

314 இரவெல்லாம் வேள்களிற்றி னீட்டமே கொல்லைப்
பரவெல்லாம் சொல்வாம் பரியே - தரணியிலே

315 எங்கெங்கே பார்த்தாலு மென்னவெளி கண்டவிடத்
தங்கங்கே தேரு மவனுமே - சங்கரரே

316 தேவரீர் சித்தந் திரும்பிஞ லிக்கணமே
யாவு முறவா யிணங்குமென்று - பாவை

317 புகலக் கடைக்கணித்துப் போந்துபின்ஞேர் வீதி
திகழ வதிலோர் தெரிவை - மகிழும்

தெரிவை

318 அயிலு மயிலு மனமுங் கனமும்
குயிலும் வடமுங் குடமும் - இயலும்

306-8. இவற்றில் அழகு கூறப்பட்டது.
309. ஆரம் - சந்தனம்; முத்துமாம்.
310. ஆர்பரவம்; இருபெயரொட்டு. 312. கா-சோலை. நாண் - வண்டு.
313. வில் - கரும்பு. சேனை - பெண்கள்.
314. களிறு - இருட்டு. பரவு - பரப்பு. பரி - கிளி.
315. தேர் - தென்றல்.
318. அயிலும் - வேலும். அனம் - அன்னப்பறவை. கனம் - மேகம். வடம் ஆவிலை. குடம் - கும்பம். இயலும் - அசைகின்ற.

319 கொடியுந் துடியுங் குளிருந் தளிரும்
படியுமிசைக் காந்தளொடு பாந்தள் - அடிமையெனும்

320 மேன்மைபெறு கண்சாயல் வீதிநடை கூந்தலிசைப்
பான்மை யுதரம் பயோதரங்கள் - வான்மருங்குல்

321 மெல்லடிசெங் கைநிதம்ப மிஞ்சு சவுந்தரஞ்சேர்
வல்லி மதனகலா வல்லியாள் - தொல்லுலகில்

322 வீரப்ர தாப விசயமன்னர் கப்பமிடப்
பாரப்ர தாபம் படைத்தமன்னர் - நேரொக்க

323 வச்ரமணி மேடைதனில் வாளரிச்சிங் காதனத்தில்
இச்சையுடன் வீற்றிருக்கு மேல்வைதனில் - உச்சிதஞ்சேர்

324 அங்குறப்பெண் ணுமொருத்தி யானகுறி சொல்வனென்றே
அங்குறப்பெண் ணரமுத மாயினுள் - பங்கமுறு

325 தோர்ந்தென் மனக்குறிப்பி லொன்றுளது சொல்லெனவே
தேர்ந்து மலைக்குறப்பெண் சிந்தைமகிழ்ந் - தாய்ந்துநன்ருய்

326 ஓர்வருட மோர்மாத மோர்நா ளொருவாரம்
ஆர்வமுடன் சொல்லென் றவளிசைப்பச் - சீர்பொருந்த

327 உன்னும் வருட முரைக்கும் பதினொன்றும்
என்னுமுன்னே யீச்சுரன்மே லிச்சையென்ருள் - பின்னுமவள்

---

319. துடி - உடுக்கை. குளிரும்: பெயரெச்சம்.

320. சாயல் - மென்மை. வீதி - நேரோடல். இசைப் பான்மை - இசைப்பாட்டின் பகுதி. உதரம் - வயிறு. பயோதரங்கள் - கொங்கைகள். வான் பெருமை. மருங்குல் - இடை.

318-20. கண் முதலியவற்றிற்கு அயில் முதலியவற்றை நிரனிறையா உவமை கொள்க. இடைக்குக் கொடியும் துடியும் உவமைகள்.

322. படைத்தமன்னர் - சக்கரவர்த்திகள்.

323. அரிச்சிங்காதனம்: இருபெயரொட்டு. ஏல்வை-காலம். உச்சிதம் மேன்மை.

324. அம் குறப்பெண்ணும் ஒருத்தி. அங்கு உற

325. சொல் என - சொல் என்று தெரிவை சொல்ல.

326. நாள் - நட்சத்திரம், வாரம் - கிழமை, அவள் குறத்தி.

327. பிரபவ முதலிய அறுபதுவருட வரிசையில் பதினொன்றவது ஈசுவர வருடம்.

328 மாதமொரு நாலென்றாண் மன்றுடி தன்மீதிற்
காதலுற்றாற் போலுங் கருத்தென்றாள் - பேதமில்லா

329 நாளினுமோ ராறென்றா ணன்றுதிரு வாதிரையான்
தோளின்மேன் மையலென்று சொல்லினாள் - கோளிலகு

330 வார மிரண்டென்றால் வாழ்சோம சேகரனைச்
சேர மனதிற் சிறந்ததென்றாள் - ஆரணங்கும்

331 ஆமெனது யாகத்தா லந்தக் கரணமுடன்
தாம மளிப்பரோ சாற்றென்ன - மாமயிலே

332 வந்தோர் கணப்பொழுதின் மாலை யுதவுமதிற்
சந்தேக மில்லையெனத் தானுவந்த - விந்தைமிகு

333 பொன்னாடை மின்னுமணிப் பூணுதவு மவ்வளவில்
பன்னாகப் பூணா பரணத்தான் - தன்னெடுந்தேர்

334 மங்கலங்கள் சேர்வீதி மன்னுதலு நன்னுதலும்
அங்கலங்கண் மின்னவெழுந் தாங்கணைந்தாள் - செங்கை

335 மலரைக் குவித்து வதனமலர்ந் தாண்மேல்
மலரைக் குவித்துவிட்டான் மாரன் - அலரெடுத்து

336 நல்லாருந் தூற்றினார் நாண்மடமச் சம்பயிர்ப்பாம்
எல்லாமோர் பக்கத் திருத்திவைத்துச் - சொல்லலுற்றாள்

---

328. நாலாவதுமாதம் ஆடி.

329. ஆறாவது நட்சத்திரம் திருவாதிரை. ஆதிரையான் - சிவபெருமான். கோள் - ஞாயிறு முதலியன.

330. இரண்டாவது வாரம் சோமவாரம்; 'சோம சுந்தர னாரிய வார மாதலாற் சோம வாரம்'' திருவிளை, 14;7.

331. யோகத்தால் - நல்லூழால். அந்தக்கரணமுடன் - மன உவப்புடன் 326 ஆம் கண்ணிமுதலியவற்றில் வருடம் முதலியவற்றைக் கூறியதோடியையு யோகம், கரணம் என்பதையும் தொனிக்கும்படி கூறினார்.

334. அம் கலங்கள் - அழகிய ஆபரணங்கள், ஆங்கு - வீதியில்.

337 வில்லிலே வண்டன் விடுங்கணையிற் றப்பிலிபூ
வில்லிலனே யென்றாலு மெய்திடுவான் - சொல்லிலே

338 கூவென் னுஞ் சின்னமுற்றேன் கூறுமெய்யே யில்லாதோன்
காவென்றால் வந்தடிக்கக் காத்திருப்பான் - தேவரீர்

339 இவ்வே டனைவிட் டெனைவருத்தி னலெவர்க்கும்
ஒவ்வாது நீதி யுடையாரே - எவ்வுலகும்

340 போற்ற வரசுருமை பூண்ட சவுந்தரரே
ஆற்று மயலேனை யாளுமெனக் - கோற்றேடிதான்

341 பேசியபோது பெருமான் றிருவுளத்தில்
நேசம்வைத்தாற் போலமற்றோர் நீள்வீதிக் - கோசைமிகு

342 தூரியம் பேரி தொனிப்பவுற்றான் பெண்மைதனிற்
பேரிளம்பெண் ணனவொரு பேரிளம்பெண் - சேரும்

பேரிளம்பெண்

343 இருட்டறையுட் பல்கணியி னெய்து நிலாக் கூடும்
இருட்டனைநே ருடுநரை யெய்தும் - திருக்குழலாள்

---

337. வண்டன் - வண்டாகிய நாணையுடையவன், துட்டன். தப்பிலி - தப்புதல் இல்லாதவன், இகழ்ச்சிக் குறிப்புப் பெயர். பூவில் இல்லன் - பூவிலுள்ள மனைவியை யுடையான்; திருமால்; இல் - மனைவி. பூவில் இலனே என்றாலும் எய்திடுவான் - பூமியில் நான் இல்லாதவன் என்றாலும் அம்பால் எய்வான்; ''கொள்ளும், பொருளில ராயினும் பொங்கெனப்போந் தெய்யும், அருளின் மறவர்'' திணைமாலை, 84.

338. கூவென்னும் சின்னம் - குயில்; கூகூ வென்னும் குறிப்பு. மெய் - சரீரம், உண்மை. கா-சோலை, காப்பாயாக. வந்து அடிக்க - தென்றல் வீச, வருதலைச் செய்து கொள்ளையடிக்க.

339. வேடனை - வேள் தனை, வேடச்சாதியானை.

340. ஆற்றும் - தாங்கும்.

342. தூரியம் - வாத்தியம். பேரிளம்பெண் - பெரிய இளமையுடைய பெண்; ''காமர் கவினிய பேரிளம் பெண்டிர்'' (மதுரைக்காஞ்சி, 465) என்பதையும் அதனுரையையும் பார்க்க.

343. இருட்டு அறையுள். பல்கணி - சாளரம். இருள் தனை.

344 பூணுற் றிறுகும் புணர்முலைக்குப் பூணிலதாற்
காணுறவே சாய்ந்தசையுங் காட்சியென - நாண்முதலா

345 முற்றுப் பெதும்பை முதற்பருவந் தோறும்விஞ்சை
கற்றுய்ந் தமையாக் கவினமைத்துச் - சொற்ற

346 தெரிவை வரைக்குந் திரட்டிவைத்துப் பார்த்துச்
சரியென்றுற் போலுந் தனத்தாள் - அரிய

347 பதுமை யனையாள் பரன்சேவை யன்றிப்
புதுமை விழிக்குப் பொருந்தாள் - மதுகரங்கள்

348 ஓலமிடும் பூங்காவி லுற்றெுவ் வொருதருவாய்ச்
சாலவெதிர் கண்டுகண்டு தான்மகிழ்ந்தாள் - கோலமிகு

349 மஞ்ஞை யனையமின்னுள் வாழைதனைக் கண்டுதிருப்
பைஞ்ஞீலி யானைப் பரவினுள் - இஞ்ஞாலத்

350 துற்றூர்க் குதவி யுறுபலாக் கண்டுதிருக்
குற்றால நாதனென்று கும்பிட்டாள் - சுற்றியதன்

351 வல்வேலி யாக வளர்வேணுக் கண்டுதிரு
நெல்வேலி யீசனையே நேசித்தாள் - பல்லின்

352 மருமுல்லை வாயாள் வளர்முல்லை கண்டு
திருமுல்லை வாயில்சிந் தித்தாள் - ஒருமாச்

---

344. பூண் - ஆபரணம், தண்டுக்குக் கட்டப்படும் பூண். பேரிளம்பெண். செயற்கை அழகை விடுத்தவளாதலின் அதற்கேற்ப அவளியல்பு கூறப்படும்.

346. சரி: உடன்பாட்டுக் குறிப்பு; சரிவாயாக என்பது மற்றொரு பொருள்.

347. புதுமை - புதிய காட்சி, புதிய அஞ்சனம். மதுகரங்கள் - வண்டுகள்.

348. தரு - மரங்கள்.

349. வாழை திருப்பைஞ்ஞீலித் தலவிருட்சம். பின்னர்க் கூறிய மரங்களை அவ்வத் தலவிருட்சமாகக் கொள்க.

350-51. அதன் வல் வேலியாக - அந்தப் பலாவின் வலிய வேலியாக; வேணு - மூங்கில்; ''வேரல் வேலி வேர்க்கோட் பலவின், சாரனுட'' குறுந்தொகை, 18.

352. முல்லை வாயாள் - முல்லையரும்பு போன்ற பற்களையுடைய வாயுடையாள். முல்லை - முல்லைக்கொடி. முல்லைவாயில் - வடதிருமுல்லைவாயில், தென்றிரு முல்லைவாயிலென்னும் தலங்கள். மா - மாமரம்.

353 செறிவுற் றிடலுஞ் சிவனை முலையாற்
குறியிட் டவளைக் குறித்தாள் - முறியாரும்

354 நிம்பமெதிர் கண்டா ணிமல னிராசலிங்கச்
சம்புவைமுன் கண்டதென்னத் தான்மகிழ்ந்தாள் - உம்பரிசை

355 திந்திருணி கண்டா டிருவீங்கோய் மாமலையில்
எந்தைதனைச் சிந்தைதனி லேத்தினாள் - கந்தநிறை

356 வில்வமெதிர் கண்டாள் விரைந்துசொக்க நாயகிசேர்
சொல்வாலி நாதனெனச் சூழ்ந்திறைஞ்சிப் - பல்லுயிர்க்கும்

357 தன்னடியி னீழ றருவாற்குத் தான்மேலாய்த்
தன்னடியி னீழ றருங்கடம்பை - முன்னுறக்கண்

358 டன்பிற் குழைந்தாங் கடிபணிந்து கைகூப்பி
இன்பமுட னெண்ணுவா ளிக்கடம்பின் - நம்பரமர்

359 கூடலாய் வந்திருந்து கொண்டக்கா லிவ்விடையே
கூடலா மென்று குறித்திடுமுன் - நீடும்

360 கலையா னிடைபிங் கலையான் மலைய
மலையான் கயிலை மலையான் - இலகியவெள்

361 ளேற்றினா னின்பமன்பர்க் கேற்றினா னென்றுயரை
ஆற்றினான் காவிரிப்பே ராற்றினான் - சாற்றுமறைக்

362 காட்டினான் போற்றுநெறி காட்டினான் றன்னுரையை
நாட்டினான் சோழவள நாட்டினான் - ஈட்டும்

---

353. குறியிட்டவள் - அம்பிகை. முறி - தளிர்.

354. நிம்பம் - வேப்பமரம். இராசலிங்கச்சம்பு - இரத்தினகிரீசர்; வாட்போக்கிநாதர்.

355. திந்திருணி - புளியமரம்.

356-57. தலவிருட்சங்களைப் பாராட்டிய முறை, திருவானைக்கா உலாப் பேரிளம்பெண்பருவத்திலும், சொக்கநாதருலா அரிவைப் பருவத்திலும் காணப்படுகின்றது.

359. கூடல் - மதுரை, மணத்தல்; சிலேடை, இவ்விடையே இவ்விடத்திலேயே.

360. கலையான் - மானையுடையவன். மலை அமலையான்.

இதுமுதல் தசாங்கம் கூறப்படும்.

361-2. மறைக்காடு - வேதாரணியம்.

363 துதியா னுதரத் துதியா னிடத்தும்
பதியான் கடம்பைப் பதியான் - சதுர்வேதன்

364 ஆரணியன் மெய்யனடி யர்ரணியன் மாவிரதம்
தாரணியன் பொன்னிதழித் தாரணியன் - ஓர்கை

365 உரியான் பணிவோர்க் குரியானெண் ணுரைப்
பரியானல் வேதப் பரியான் - மருவுசெங்கை

366 வாரணத்தன் கோட்டுவெள்ளை வாரணத்தன் வாணிமரு
வாரணத்தன் போற்றுமயி ராவணத்தன் - பாரப்

367 படியே பொருந்தும் படியே செயும்பூங்
கொடியே புணருங் கொடியான் - நெடிது

368 வழங்கும் புவனத்து மன்னுயிர்க்குந் தானாய்
முழங்குமோங் கார முரசான் - எழுங்கதிசேர்

369 சந்திரனுஞ் சூரியருந் தானவரும் வானவரும்
இந்த்ராதி திக்குக் கிறையவரும் - ஐந்துபெரும்

370 பூதமும் பூதப் புணர்ப்பும் புகன்றசதுர்
வேதமும் வேத விதிவிலக்கும் - போதனல்

---

363. உதரத்து உதியான். இடத் தம்பதியான் - இடப்பாகத்திலே மனைவியையுடையான்; தம்பதி - மனைவி; வழக்கு.

364. ஆரணியன் - பார்வதியையுடையவன். மெய்யன் - உண்மைப் பொருளாக உள்ளவன். அடியார் அணியன் - அன்பர்களுக்கு அருகிலுள்ளவன். மா இரதம் தாரணியன் - பூமியைப் பெரிய இரதமாக உடையவன்; தாரணி - பூமி. இதழித் தார் அணியன் - கொன்றை மாலையை அணிந்தவன். ஓர்கை - ஒருகையையுடைய யானை; அறுகாலென்றதுபோல நின்றது.

365. பரியான் - தாங்கான்.

365-6. செங்கை வாரணத்தன் - செங்கையிற் சங்கையுடையவர்; திருமால். கோடு - நாலுகொம்புடைய. வெள்ளைவாரணத்தன் - வெள்ளை யானையையுடைய இந்திரன். வாணி - கலைமகளை; ஆரணத்தன் - பிரமன். அயிராவணம் இரண்டாயிரந்கொம்பையுடைய யானை; ''அயிராவணமேருதானேறி'' திருநா. தே.

367. படி - பூமிதேவி. கொடி - திருமகள். கொடியான் - துவசத்தையுடையவன்; ''பொறிக்கொடி மார்பிற்கொண் மரைக்கட்கொடி'' திருவிடைமருதுருலா, 143.

370. பூதப்புணர்ப்பு - பௌதிகம். போதன் - பிரமன்.

371 தானே யமைத்த சராசரமு முற்பவத்தில்
ஆன நிலைபெயரா வாணையான் - மோன

372 முனிக்கணங்கள் சூழ்கருணை மூர்த்திநால் வேதத்
தனிப்பொருளெல் லார்க்குந் தலைவன் - குனிப்புடையோன்

373 வந்தா னெனவே மணிச்சின்னந் தானிசைப்பத்
தந்தா ரிடையாளுந் தான்சென்று - முந்திப்

374 பணிந்தா ளெழுந்து பகருமதன் போர்க்குத்
துணிந்தா ளடுத்துநின்று சொல்வாள் - அணியாரும்

375 மெய்யா நிலத்தினிற்கா வேரியம்பு பாய்ச்சியுழு
தையமுறு தேபுளக மங்குரிப்பத் - துய்யதாம்

376 காமப் பயிரிலையாக் காட்சிக் கதிர்தோன்ற
ஏமமுற நெல்வேலி யீசரே - சேமித்து

377 மோக விளைவு முதிரவே ளாண்மைசெய்தால்
போக முமக்கே பொருந்துமே - மாகருணைச்

378 சுந்தரரே யென்னமற்றத் தோகையர்பல் லாண்டிசைப்ப
அந்தரத்தோர் பாதலத்தோ ரம்புவியோர் - செந்தமிழோர்

379 தேனே கனியே செழும்பாகே தெள்ளமுதே
ஊனே யுடலி னுயிர்க்குயிரே - கோனேயெம்

380 உள்ளமே யுள்ளத்தி னுள்ளுணர்வே பேரின்ப
வெள்ளமே வெள்ளை விடைப்பாகா - தெள்ளுதமிழ்ச்

---

372. குனிப்பு - நடனம்

373. தந்து ஆர் - நூலையொத்த.

375. மெய்யாம் நிலத்தினில் - தேகமாகிய நிலத்தில். காவேரியம்பு சோலையிலுள்ள தேனிறைந்த மலர்ப்பாணம், காவிரிநீர், புளகம் - மயிர்சிலிர்த்தல்; அங்குரிப்ப - முளைப்ப.

376.7. காட்சி - தோற்றம். மோகத்தை விளைவாகக் கூறுதற்கேற்ப நெல்வேலியீசர் கூறப்பட்டார். வேளாண்மை - மன்மதனது ஆண்மை, பயிர்த்தொழில், போகம் - இன்பம், விளைவு.

378. என்ன - என்று பேரிளம்பெண் சொல்ல.

380. ''உள்ளமே உள்ளத்தி னுள்ளே நின்ற, கருவே'' தே.

381 சொல்லே பொருளே துதிசே ரிருநிதியே
எல்லே யஞ்ஞான விருளகற்றும் - வல்லானே

382 என்றென்று பன்முறைநின் றேந்த வருளிமதி
ஒன்றொன்று செஞ்சடையா னேர்காலும் - குன்றாத

383 சீருடையான் செல்வச் சிறப்புடையான் றென்கடம்பை
ஊருடையான் போந்தா னுலா.

கடம்பர் கோயில் உலா முற்றுப்பெற்றது.

விருத்தம்

*விருப்பிருக்கு நினதடியார் செய்பணிக்கிங் கிடையூறு விளைக்கும் பாவ

இருப்பிருக்கும் மூடர்தம் திருப்புமன முருக்கிவிடற் கியல்பாய்ச் செங்கை

நெருப்பிருக்கப் படவரவத் துருத்தியுமங் கிருப்பதென்ன நினையா தென்னே

திருப்பிருக்கு மூவிலைவேற் படையுடைய கடம்பவனத் தேவர் தேவே.

380-81. தமிழ்ச்சொல்லே பொருளே: ''சொல்லானைப் பொருளானை'', ''சொல்லுநன் பொருளு மாவர்'' (திருநா. தே.) எல்லே ஒளியே.

382. மதி ஒன்று ஒன்று - ஒரு பிறை பொருந்திய.

★ இந்த விருத்தம், ஏட்டுப்பிரதியில் இந்த உலாவின்பின் எழுதப்பட்டிருந்தது.

கணபதி துணை

அந்தகக்கவி வீரராகவ முதலியார்

இயற்றிய

திருக்கழுக்குன்றத்து உலா

மகாமகோபாத்தியாய தாக்ஷிணாத்யகலாநிதி

டாக்டர் உ. வே. சாமிநாதையரால்

தாம் எழுதிய குறிப்புரை முதலியவற்றுடன்

பதிப்பிக்கப்பெற்றது

இப்புத்தகத்தில் அடங்கியவை உ

1. முகவுரை 1—6

2. திருக்கழுக்குன்றத் தல வரலாறு 7—19

[நூல்கள் முதலியன—சிலாசாஸனச் செய்திகள்—தலத்தின் திருநாமங்கள் — மூர்த்திகள் — தீர்த்தங்கள்—மண்டபங்கள்—பூசித்துப் பேறு பெற்றோர்—தலவிருட்சம்—திருவிழாக்கள்—பிறசெய்திகள்.]

3. அந்தகக்கவி வீரராகவ முதலியார் 20—22

4. ஆராய்ச்சி 23—34

[பிறதலங்கள்—பேதை—பெதும்பை—மங்கை — மடந்தை—அரிவை—தெரிவை—பேரிளம் பெண்—பிற செய்திகள்.]

5. திருக்கழுக்குன்றத்து உலா—மூலமும் குறிப்புரையும் க—சுO

காப்பு	க
தலமகிமை	உ
பிறதலங்கள்	அ
பிற சிறப்புக்கள்	கO
திருவிழா	,,
திருமஞ்சனம் முதலியன	கக
திருவாபரணம் புனைதல்	கஉ
உடன்வருவோர்	கரு
திருத்தேரும் அதில் எழுந்தருளுதலும்	கஅ
குடை முதலியன	,,
வாத்தியங்கள்	உக
திருச்சின்னம்	உஉ
குழாங்கள்	,,
பேதை	உசு
பெதும்பை	ஙஉ
மங்கை	ஙசு
மடந்தை	சO
அரிவை	சரு
தெரிவை	சஅ
பேரிளம்பெண்	ருஙு

உ

கணபதி துணை

முகவுரை

திருச்சிற்றம்பலம்

“ வெள்ள மெல்லாம் விரிசடை மேலோர் விரிகொன்றை
கொள்ள வல்லான் குரைகழ லேத்துஞ் சிறுத்தொண்டர்
உள்ள மெல்லா முள்கிநின் றாங்கே யுடனாடும்
கள்ளம் வல்லான் காதல்செய் கோயில் கழுக்குன்றே.”

(திருஞான சம்பந்தமூர்த்தி நாயனார்.)

திருச்சிற்றம்பலம்

“ மலங்கி னேன்கண்ணி னீரை மாற்றி
மலங்கெ டுத்த பெருந்துறை
விலங்கி னேன்வினைக் கேட னேனினி
மேல்வி ளைவ தறிந்திலேன்
இலங்கு கின்றநின் சேவடிக
ளிரண்டும் வைப்பிட மின்றியே
கலங்கி னேன்கலங் காம லேவந்து
காட்டி னாய்கழுக் குன்றிலே.”

(திருவாசகம்.)

திருச்சிற்றம்பலம்

தொண்டைநாட்டில் தேவாரம் பெற்ற முப்பத்திரண்டு சிவஸ்தலங்களுள் ஒன்றாகிய திருக்கழுக்குன்றத்தில் எழுந்தருளி யிருக்கும் ஸ்ரீ வேதகிரீசர் திருத்தேரிற் பவனி வரும்போது பேதை முதற் பேரிளம்பெண்ணீறாகிய ஏழு பருவ மகளிரும் அவரைக் கண்டு காமுற்றதாக அந்தகக்கவி வீரராகவ முதலியாரென்னும் கவிஞர் பெருமானால் இயற்றப்பெற்றது இவ்வுலா. பல காலமாகத் தமிழ்நாட்டில் கவிஞர்கள் தலங்களின் பெருமைகளை வெளிப்படுத்துவதற்கு உரிய கருவியாக மேற்கொண்ட பிரபந்தங்களுள் உலா ஒன்று. திருத்தேர்விழாவோடு தொடர்புபடுத்தி இயற்றப்பெறுதலின் பெரிய தலங்களிற் பெரும்பாலனவற்றிற்கு உலாக்கள் உள்ளன.

பாட்டுடைத் தலைவன் உலாவருதலைச் சிறப்பித்துப் பாடுதலின் இவ்வகைப் பிரபந்தங்களுக்கு உலாவென்னும் பெயர் அமைந்தது; உலாவைப் பவனியென்றும் கூறுவர்; இவை இந்நூலில்,

" திருவுலாக் காண்பேமை " (142)
" பவனித் திருத்தேரைப் பாரீர் " (129)

எனத் தனித்தனியாகவும்,

" பொற்கழுக்குன் றீசர் பவனித் திருவுலாப் பாட " (காப்பு)

எனச் சேர்ந்தும் வந்திருத்தல் காண்க.

காப்பியங்களில் அவற்றின் தலைவர்கள் உலாவரும் காட்சிகளைப் புனைந்து அமைத்தல் கவி மரபு. முடிபுனைந்தும், மணம்புரிந்தும், வெற்றிபெற்றும் அத்தலைவர்கள் உலாவரும் செய்தியைப் பெருங்கதை, சீவகசிந்தாமணி, கம்பராமாயணம் முதலிய தமிழ்க் காப்பியங்கள் அழகுபெறக் கூறுகின்றன. வடமொழிக் காப்பியங்களிலும் இத்தகைய செய்திகளைக் காணலாகும். பெருங்கதையில், 'நகர் வலங் கொண்டது' என்னுங் காதையில் உதயணன் உலாவந்ததும், மகளிரும் மைந்தரும் தொகைகொண்டு ஈண்டியதும், மகளிர் அலங்காரங்களுடன் வந்து கண்டு மகிழ்ந்ததும், அவருள்,

" உத்தம மகளி ரொழிய மற்றைக்
கன்னிய ரெல்லாங் காமன் றுரந்த
கணையுளங் கழியக் கவினழி வெய்தி "

வருந்தியதும் கூறப்படுகின்றன.

சீவகசிந்தாமணியில், கோவிந்தையாரிலம்பகத்தில், சீவகன் பசுக்களை மீட்டு வீதியில் வரும்போது மகளிர் கண்டு காமுற்ற செய்தி 14 பாடல்களாற் (457-70) சொல்லப்படுகின்றது.

" வார்செலச் செல்ல விம்மும் வனமுலை மகளிர் நோக்கி
ஏர்செலச் செல்ல வேத்தித் தொழுதுதோ டேக்க விப்பாற்
பார்செலச் செல்லச் சிந்திப் பைந்தொடி சொரிந்த நம்பன்
தேர்செலச் செல்லும் வீதி பீர்செலச் செல்லு மன்றே " (469)

என்பதில் அவன் தேர்மீது உலாப்போந்த காலத்து மகளிரது நிலையைச் சுவைபடப் பாடினர் திருத்தக்க தேவர்.

கவிச்சக்கரவர்த்தியாகிய கம்பர் இராமாயணத்தில் இராமபிரான் திருவுலா வந்ததை 'உலாவியற் படலம்' என்னும் பகுதியில் விரிவாகப் பாடியுள்ளார்.

" பேதைமார் முதல்கடைப் பேரிளம் பெண்கடாம்
ஏதியார் மாரவே ளேவவந் தெய்தினர்
ஆதிவா னவர்பிரா னணுகலா லணிகொள்கார்
ஓதியார் வீதிவா யுற்றவா றுரைசெய்வாம் "

(எதிர்கோட்படலம், 34)

என்பதில் பேதைமுதற் பேரிளம்பெண் வரையில் உள்ள ஏழு பருவ மகளிரும் மால்கொள்ளுவதாக உரைக்கும் மரபு புலப் படுததப்படுகின்றது.

இங்ஙனம், தலைவன் உலாவருவதாகக் காப்பியங்களிற் சுருக்கமாக அமைக்கப்படும் செய்தியையே தமக்குரிய பொருளாகக் கொண்டு விரிவுபெற அமைத்த பிரபந்தமே உலாவாகும். தலைவன் பெயர் கூறப்படுதலாலும் அவனைக் கண்டு மகளிர் மாத்திரம் காமுறும் செய்தி உரைப்பதாலும் இது புறப்பொருளைச் சார்ந்த பெண்பாற் கைக்கிளை யுள் அடங்கும் ; பாடாண்டிணைக் குரியதுமாம். அதனால் உலாப்புறம் என்னும் பெயரும் இப்பிரபந்தத்திற்கு உரியதாயிற்று. புறத்தே உலாவரும் செய்தியைக் கூறுதலின் புறவுலா என்றது உலாப்புற மென வந்ததாகச் சிலர் கூறுவர்.

உலாப்பிரபந்தம் கலிவெண்பாவாகிய யாப்பினால் இயற்றப்படு வது. தலைவனைக் காமுறும் ஏழுபருவமகளிரும் *பொதுமகளிராவர். இதனை இலக்கண உரையாசிரியர்களும் பிறரும் புலப்படுத்தி யிருக் கின்றனர்.

தலைவர்கள் தத்தமக்குரிய வாகனங்களில் வந்ததாகக் கூறுதல் பண்டை மரபு. ஆதியுலா, மூவருலா என்பவற்றில் இதனைக் காணலாம். ஏழுபருவமடந்தையருக்கேற்ப ஏழுநாட்களில் ஏழுவகை வாகனங்களில் வந்ததாகச் சொக்கநாதருலா உரைக்கும். தலசம்பந்த மான உலாக்களிற் பெரும்பாலன திருத்தேரில் உலாவந்ததாகவும் ஒரே நாளில் ஏழுபருவமகளிரும் தரிசித்ததாகவும் கூறுகின்றன.

தலமூர்த்தியின் வரலாறு, பெருமை, அம்மூர்த்திக்கு நடை பெறும் அபிடேக ஆராதனைகள், அப்பால் திருத்தேருக்கு எழுந்தரு ளுதல், பலவகை மகளிர் குழாங்கள் அவரைத் தரிசிக்கக் காத்திருந்து தரிசனம் செய்து காமுறுதல் ஆகிய இச்செய்திகள் உலாவின் முற் பகுதியாக அமையும். அதன்பின் முறையே பேதை, பெதும்பை, மங்கை, மடந்தை, அரிவை, தெரிவை, பேரிளம்பெண் என்னும் ஏழு

* மதுரைச் சொக்கநாதருலாவின் முகவுரையையும் திருஇலஞ்சி முருகன் உலா முகவுரையையும் பார்க்க.

பருவமகளிரின் இயல்புகளும் செயல்களும் அவர்கள் மூர்த்தியைத் தரிசித்தலும் அதனால் உண்டான விளைவுகளும் கூறப்படும்.

இந்த அமைப்பு எல்லா உலாக்களுக்கும் பொதுவாயினும், தல சம்பந்தமான செய்திகளை இடையிடையே பிணைத்து இயைபு பெறக் கூறுதலினும், அவ்வந்நூலாசிரியருக்கே உரிய நடையின் அமைதியினும், காலப்போக்கில் உண்டான கருத்துக்களினும் வேறுபாட்டைக் காணலாகும. இவ்வேறுபாட்டு நயமே எத்தனை உலாக்களைப் படித்தாலும் சோர்வின்றி யிருப்பதற்குக் காரணமாகின்றது.

தனித்தனியே உள்ள பல் வேறுபட்ட பொருள்களையுடைய செய்யுட்களாலாகிய தொகுதிபோல் அல்லாமல் தொடர்ந்த பொருளுடையதாய் நெடும்பாட்டால் இயலுதலின் இதனைத் தொடர்நிலைச் செய்யுளுள் ஒன்றாகவே கருதல் தகும். சிறுகாப்பிய வரிசைகளில் ஒன்றுவதற்குரிய இயல்புகள் இதன்பால் உள்ளன.

பன்னிருபாட்டியல் முதலிய பாட்டியல் நூல்களில் உலாவின் இலக்கணம் கூறப்பட்டுள்ளது. மகளிருக்குரிய பருவங்களை ஏழாக வகுத்தல் தமிழ் மரபு. பெருங்கதையில் உள்ள நீராட்டரவம் என்னும் பகுதியில் இவ்வேழு பிரிவினரையும் பற்றிய செய்திகள் வருகின்றன. இப்பருவங்களுக்குரிய காலவரையறை பலவிதமாகக் காணப்படுகின்றது. ஆயினும், உலகியலை அறியாத இளம்பருவம் பேதைப் பருவமென்றும், உலகியலை ஒருவாறு உணர்ந்தும் உணராமலும் உள்ள நிலை பெதும்பைப் பருவமென்றும், காமநுகர்ச்சிக்கு ஏற்புடையது மங்கைப்பருவமென்றும், அந்நுகர்ச்சியில் பயின்றது மடந்தைப் பருவமென்றும், முதிர்ந்தது அரிவைப் பருவமென்றும், மகப்பேற்றையுடைய நிலை தெரிவைப் பருவமென்றும், காமவுணர்ச்சி தளரும் நிலை பேரிளம்பெண் பருவமென்றும் ஒருவாறு அவற்றின் இயல்புகளைக் கூறலாகும். இவ்வேழனுள் உலகியலை உணர்ந்தும் உணராத நிலையை வருணித்தல் அரிதாதலின், "பேசு முலாவிற் பெதும்பைபுலி" என்று ஒருவர் கூறுவர்.

திருக்கழுக்குன்றத்து உலாவாகிய இந்நூல் காப்புச் செய்யுளாகிய வெண்பா ஒன்றையும், சOகூ கண்ணிகளையும் உடையது. கலிவெண்பாவில் ஓரெதுகை அமைந்த இரண்டடிகளை ஒரு கண்ணியென்றல் மரபு;

"முன்னு யகரிலவன் மூதலாக் கண்ணிதொறும்
பொன்னு யிரஞ்சொரிந்த பூபதியும்" (சங்கரசோழனுலா)

" நராதிபன் கூத்தனெதிர் நண்ணியோர் கண்ணிக்
கொராயிரம்பொ னீந்த வுலாவும்" (தமிழ்விடு தூது)

என்பவற்றால் கண்ணியென்னும் பெயர் பண்டைக்காலந்தொட்டே வழக்கிலிருந்து வந்ததென்பது பெறப்படும்.

இந்நூலாசிரியர் அந்தகராயினும், "ஏடாயி ரங்கோடி யெழுதாமற் றன்மனத் தெழுதிப் படித்தது" போலவே புறக்கண்ணாற் காணாத காட்சிகளையெல்லாம் அகக்கண்ணாற் கண்டு கண்ணுடையார் கண்டுரைத்ததுபோலவே இவ்வுலாவிற் காட்சிகளை அமைத்துள்ளார். கவித்துவம் என்னும் கண்ணே அவருக்கு இக்காட்சிகளைக் காண உதவியது. 'ரவியறியாததைக் கவியறிவான்' என்பது இக்கருத்தை வலியுறுத்தும்.

இவ்வுலா எழுதிய பிரதி யொன்று பல வருஷங்களுக்குமுன் திருநெல்வேலி ஸ்ரீ அம்பலவாண கவிராயரவர்கள் வீட்டிற் கிடைத்தது. அது மிகவும் பிழைபட்டும் குறைந்தும் இருந்தது. அப்பால் வேறு பிரதிகள் கிடைத்தன. திருவாவடுதுறை யாதீனத்திற் கிடைத்த பிரதி ஒன்றே பூர்த்தியாகவும், சுத்த பாடமுள்ளதாகவும் இருந்தது. அவற்றை ஆராய்ந்து குறிப்புரை முதலியன எழுதி இப்பொழுது வெளியிடலானேன்.

குறிப்புரையில் தல சம்பந்தமான விஷயங்களுக்கு ஆதாரமாகத் தலபுராணத்திலிருந்து மேற்கோள்கள் காட்டப்பட்டிருக்கின்றன. அவற்றிற்கு நூற்பெயர் குறியாமல் சருக்கப்பெயர்கள்மாத்திரம் காட்டப்பட்டுள்ளன.

தலசம்பந்தமான செய்திகளை அறிந்துகொள்வதற்காகச் சமீப காலத்தில் ஒருமுறை நான் திருக்கழுக்குன்றத்திற்குப் போய்ப் பலரைக் கண்டு விசாரித்தேன். பல அன்பர்கள் பல செய்திகளைக் கூறினார்கள். அவர்களுள் பிருஹ்மஸ்ரீ யக்ஞேசுவர தீக்ஷிதரவர்களும், பிருஹ்மஸ்ரீ வேதாசல குருக்களவர்களும், ஸ்ரீமான் கன்னியப்ப முதலியாரவர்களும் கூறிய அரிய செய்திகள் எனக்கு மிகவும் உபயோகமாக இருந்தன, அன்றியும் அவ்வூரில் உள்ள ஆயுர்வேத வைத்தியராகிய ஸ்ரீமான் நமசிவாயராஜயோகியவர்கள் வெளியிட்டுள்ள "திருக்கழுக்குன்றம் என்னும் உருத்திரகோடித் தலமான்மியம்" என்ற புத்தகத்தினாலும் பல செய்திகளை அறிந்து கொண்டேன்.

திருப்புகழை முதன் முறையாகத் தொகுத்துப் பரிசோதித்து அச்சிற்பதிப்பித்து வெளியிட்டுத் தமிழுலகத்திற்கு உதவிய ஸ்ரீமான் வடக்குப்பட்டு த. சுப்பிரமணிய பிள்ளையவர்களுடைய அருந்தவப் புதல்வர்களும், கலியுகவரதராகிய ஷண்முகப் பெருமானிடத்துப் பக்தி யுடையவர்களும், தமிழ்ப்பாஷாபிமான முள்ளவர்களுமாகிய 'ரிடையர்டு டிஸ்ட்ரிக்ட் முன்ஸீப்' ஸ்ரீமான் வ. சு. சண்முகம் பிள்ளையவர்கள் இந்நூலைப் பதிப்பித்தலில் எனக்குச் சிறிதும் பொருட் கவலையில்லாதபடி உதவிபுரிந்தார்கள். அவர்களிடத்து மிக்க நன்றியறிவுடையேன்.

வழக்கம்போல் இப்புத்தகப் பதிப்பு விஷயத்திலும் ஆராய்தல் ஒப்பு நோக்குதல் முதலிய உதவிகளை, சென்னைக் கிறிஸ்டியன் காலேஜ் ஹைஸ்கூல் தமிழ்ப்பண்டிதர் சிரஞ்சீவி வித்துவான் வி. மு. சுப்பிரமணிய ஐயரும், 'கலைமகள்' துணையாசிரியர் சிரஞ்சீவி வித்துவான் கீ. வா. ஜகந்நாதையரும் செய்தனர். அவர்களுக்கு எல்லா நன்மைகளும் உண்டாகும்வண்ணம் இறைவன் திருவருளைச் சிந்திக்கின்றேன்.

'தியாகராஜ விலாசம்'
திருவேட்டீசுவரன் பேட்டை
27—6—38.

இங்ஙனம்,
வே. சாமிநாதையர்.

திருக்கழுக்குன்றத் தலவரலாறு

நூல்கள் முதலியன

திருக்கழுக்குன்றத்தைப்பற்றிய செய்திகள் இந்நூல் முதலிய அத்தல சம்பந்தமான நூல்களாலும் சாஸனங்களாலும் வேறு நூல்களிலுள்ள சில பகுதிகளாலும் அறியப்படும். அவற்றுள், இப்போது தெரிந்தவை வருமாறு :—

(1) தேவாரம் - மூவரும் அருளிய பதிகங்கள்

(2) திருவாசகம் - திருக்கழுக்குன்றப்பதிகம்

(3) பட்டினத்தார் பாடல்

(4) திருப்புகழ்

(5) தனிப்பாடல்கள்

(6) திருக்கழுக்குன்றப் புராணம் - அந்தகக்கவி வீரராகவ முதலியார் இயற்றியது.

(7) திருக்கழுக்குன்ற மாலை

(8) கழுகாசல சதகம்

(9) திருக்கழுக்குன்றக் கோவை - இராமநாதபுரம் சோமசுந்தரம் பிள்ளை இயற்றியது.

(10) திருக்கழுக்குன்றச் சிலேடை வெண்பா - காஞ்சீபுரம் மகா வித்துவான் சபாபதி முதலியார் இயற்றியது.

(11) வேதகிரீசர் பதிகம் - திருப்போரூர்ச் சிதம்பர சுவாமிகள் இயற்றியது.

(12) திருக்கழுக்குன்றத் தந்தாதி.

(13) மலைமருந்துப் பதிகம்.

சமீபகாலத்தில் சிலர் பாடிய வேறு சில நூல்களும் உண்டு.

வடமொழியில் 32 அத்தியாயங்கள் அடங்கிய தலபுராணம் ஒன்றும், வேதகிரீசுவராஷ்டகம் முதலிய சில துதிநூல்களும் உள்ளன.

இத்தலச் செய்திகளை விரிவாக விளக்கும் புத்தகங்கள், ஆங்கிலத்திலும் தமிழிலும் வசனநடையில் பலரால் எழுதப்பட்டிருக்கின்றன. இற்றைக்கு 61 வருஷங்களுக்குமுன்பு தாது௵ சித்திரைமீ, புரசை அஷ்டாவதானம் சபாபதி முதலியார் இத்தல சரித்திரத்தைச் சுருக்கமாக வசனத்தில் எழுதி வெளியிட்டிருக்கிறார்.

சிலாசாஸனச் செய்திகள்

இத்தலத்திலுள்ள சிலாசாஸனங்கள் அரசாங்கத்தாரால் படியெடுக்கப்பெற்றுப் பதிப்பிக்கப்பட்டிருக்கின்றன. அவற்றுள் ஒன்றிலிருந்து இத்தலம் களத்தூர்க்கோட்டத்துக் களத்தூர் நாட்டைச் சார்ந்ததென்பதும் உலகளந்த சோழபுரமென்னும் பெயர் இதற்குச் சிலகாலம் வழங்கிவந்ததென்பதும் அறியப்படுகின்றன. இங்கே நமிநந்தியடிகள் மடமென்ற பெயரோடு ஒரு மடம் இருந்ததாகத் தெரிகின்றது. ஒரு சாஸனத்தில் இத்தலத்தில் எழுந்தருளியுள்ள சிவபெருமான் திருநாமம் திருமலை ஆளுடைய நாயனாரென்று குறிக்கப்பட்டுள்ளது. ஷண்முகப்பிள்ளையாரென்னும் மூர்த்தியைப் பற்றிய செய்தியொன்று ஒரு சாஸனத்தில் சொல்லப்படுகின்றது.

தலத்தின் திருநாமங்கள்

இத்தலம் வடமொழியில் பக்ஷிதீர்த்தமென்று கூறப்படும். வடநாட்டிற் பெரும்பாலும் இப்பெயரே வழங்கும். இத்தலத்தில் யுகந்தோறும் இவ்விரண்டு கழுகுகள் வேதகிரீசனை வழிபட்டமை பற்றித் திருக்கழுக்குன்றமென்னும் பெயர் இதற்கு உண்டாயிற்று. அப் பெயரே கங்காசலம், கழுகாசலம், கிருத்திரகிரி என்று வேறுபட்டு வழங்கும். இன்றும் தினந்தோறும் உச்சிக்காலத்தில் இரண்டு கழுகுகள் இங்கே வந்து தமக்குக் கொடுக்கப்படும் உணவை உண்டு செல்வதைக் காணலாம். மிகப் பழையகாலந்தொட்டு இந் நிகழ்ச்சி நடைபெற்றுவருகின்றது.

வேதங்கள் நான்கும் இங்கே மலையுருவாக இருத்தலின் இது வேதகிரியென்னும் பெயர்பெறும். மறைக்கோடு, வேதப்பொற்றை, சுருதிமலை என அதன் பரியாய நாமங்கள் இந்நூலில் வழங்கும்.

இந்திரனுக்குச் சாபத்தைப் போக்கிய தலமாதலின் இந்திரபுரியெனவும், கோடி ருத்திரர்கள் பூசித்தமையின் உருத்திரகோடியெனவும், வாழையைத் தலவிருட்சமாகப் பெற்றமையின் கதலிவனமெனவும், சிவபெருமான் வீற்றிருக்கப் பெறுதலின் சிவபுரமெனவும், தன்பாற் செய்யப்பெற்ற தருமங்களில் ஒன்று கோடியாகிப் பயனளித்

தலின் தருமகோடியெனவும், மலைகளுட் சிறந்தமையின் திருமலை யெனவும், பன்னிரு சூரியர்களாலும் பூசிக்கப்பெற்றமையின் தினகர புரி பரிதிபுரியெனவும், கயிலைமலையின் ஒரு சிகரமாதலின் தென்கயிலை தக்ஷிண கைலாஸமெனவும், நந்திவழிபட்டமையின் நந்திபுரியெனவும், திருமால் நலம்பெற்றமையின் நாராயணபுரமெனவும், பிரமதேவன் சாபவிமோசனம் அடைந்தமையின் பிரமபுரியெனவும், வசுக்கள் குறைநீங்கியமையின் வசுபுரியெனவும் வழங்கும். உருத்திரகோடி கிரி நந்திகிரியெனத் திருமலைக்குத் தனிப்பெயர்களும் உண்டு.

இத்தலத்தில் சிவபுரநந்தவனமென ஒன்று உள்ளது. அதனால் இத்தலத்திற்குச் சிவபுரமென்ற பெயர் முற்காலத்து வழக்கில் இருந்ததை அறியலாகும். திருமலை யென்னும் திருநாமம் இந்நூலி லும் சிலாசாஸனத்திலும் காணப்படுகின்றது. அம்பிகையின் திரு நாமமாகிய திருமலைச் சொக்கியென்பதிலிருந்தும் இதனை அறியலா கும். நாராயணபுரமென்பதை வேத நாராயணபுரமென்று கூறு வாரும் உண்டு.

மூர்த்திகள்

விநாயகர்: இந்த ஸ்தலத்தில் அங்கங்கே பல விநாயகர்கள் எழுந்தருளியிருக்கின்றனர். இந்நூலிலும், புராணத்திலும், மற்ற நூல்களிலும் வண்டுவனப் பிள்ளையார் காப்பு உள்ளது. அவர் திரு நாமம் வடமொழியில் பிரமராரண்ய விநாயகரென வழங்கும். இங்கே மலைக்குக் கீழே உள்ள திருக்கோயிலில் இவர் எழுந்தருளி யிருக் கின்றனர். சங்கதீர்த்தத்தின் வடமேற்கில் சந்நிதி விநாயகரென்றும் சண்முக விநாயகரென்றும் இரண்டு மூர்த்திகள் உள்ளனர்; இரட் டைப் பிள்ளையாரென்று ஒருங்கே சேர்த்து வழங்கும் வழக்கமும் இருந்து வருகின்றது. கல்வெட்டில் இவ்விருவருள் ஒருவராகிய சண்முக விநாயகருடைய திருநாமமே காணப்படுகின்றது. அவர் ஆறு திருமுகங்களை உடையவராக விளங்குகின்றனர்.

தேரடியில் தேரடிப்பிள்ளையார் என்னும் விநாயகரும் திருவாவடு துறை மடத்துக்கு நேரில் சொக்கப்பிள்ளையாரென்னும் மூர்த்தியும் உள்ளார். கிரிப்பிரதக்ஷிணசாலையில் சித்தாத்ரி விநாயகர், அன்னக் காவடி மடத்துப் பிள்ளையார், கோடி விநாயகர், முடிகாட்டும் விநாயகர், ஆலடிப் பிள்ளையார் என்னும் மூர்த்திகளைக் காணலாம். சித்தாத்ரி விநாயகர் அகஸ்திய முனிவரால் பிரதிஷ்டை செய்யப் பெற்றவ ரென்பது ஓர் ஐதிஹ்யம்.

சிவபெருமான்: இங்கே திருமலையின்மேலே ஒரு கோயிலும் அடிவாரத்தில் ஒரு கோயிலும் சிறப்புடைய நிலைமையில் உள்ளன. மேலுள்ளதை மலைக்கோயிலென்றும், கீழுள்ளதைத் தாழக் கோயிலென்றும் வழங்குவர்; தாழக் கோயிலென்பது தாழ்வரைக் கோயிலென்பதன் மரூஉவென்று தோற்றுகின்றது. மலையின்மேல் எழுந்தருளிய பெருமான் வேதகிரீசரென்னும் திருநாமம் உடையார். கீழுள்ள கோயிலில் உள்ளவர் பக்தவற்சலரென்னும் திருநாமம் பூண்டவர். இம்மூர்த்தியைச் சுரகுருவென்னும் சோழ அரசன் பிரதிஷ்டை செய்தானென்பர். சங்கதீர்த்தத்திற்குத் தென்கிழக்கு மூலையில் உருத்திரகோடி யென்று வழங்கும் ஆலயம் ஒன்று உண்டு. அஃதுள்ள ஊர் ருத்திரன் கோயிலென்று வழங்குகின்றது. திருமலையாளுடையாரைத் தரிசித்துப் பேறுபெற்ற கோடி உருத்திரர்கள் நிறுவியது அது. உருத்திர கோடீசரென்பது அக் கோயிற் பெருமானது திருநாமம்.

மலையில் எழுந்தருளியுள்ள மூர்த்தியே பிரதானர். அவருடைய திருநாமங்கள் பல.

"பேரா யிரமுடைய பெம்மான் முடிக்கங்கை
ஓரா யிரமுகத்தோ டோடியோ" (கண்ணி, 243)

என்பதனால் இத்தலத்திற்கெனத் தனியே ஸஹஸ்ர நாமம் ஒன்று இருந்ததென்று ஊகிக்க இடமுண்டு. சில பெரிய தலங்களுக்குத் தனியே ஸஹஸ்ர நாமங்கள் உள்ளன. இப்பொழுது இருபத்தைந்து நாமங்களையுடைய அருச்சனை ஒன்று வழக்கில் இருந்து வருகின்றது.

இத்தலத்து மூர்த்திக்குரிய திருநாமங்களுள் உருத்திரகோடீசர், திருமலையாளுடையார், நந்திகிரீசர், வேதகிரீசர் என்பன தலத்தின் பெயரோடு தொடர்புடையன. கங்கபதி, சுரகுருச் சோளேசன் என்பன பூசித்துப் பேறுபெற்றோர் பெயர்களோடு தொடர்புடையன. மலையின் உச்சியில் எழுந்தருளியிருத்தலின் மலைக்கொழுந்தென்னும் திருநாமம் உண்டாயிற்று. மலையின்கண் எழுந்தருளியிருத்தலினாலும், பிறவிப்பிணியை நீக்குதலாலும், இங்கே வந்து பிரதக்ஷிணமும் தரிசனமும் செய்து சிலகாலம் தங்கியிருப்போர்களுடைய நோய் முதலிய நீக்குதற்குக் காரணமாதலாலும் மலைமருந்தென்னும் திருநாமம் இம் மூர்த்திக்கு வழங்குகின்றது.

"அலைமருந் தண்டர்க்கே யண்டர்க்கும் யார்க்கும்
மலைமருந் தாகவந்தான்"

"தோற்றும் பிறப்பாய துன்பநோ யன்பர்க்கு
மாற்றுஞ் சுருதி மலைமருந்தே" (108, 145)

என இந்நூல் பாராட்டுகின்றது.

"வேத கிரிப்பவ ரோக வயித்திய
வேணி முடிக்கனியே" (வேதகிரீசர் பதிகம்)

என்று திருப்போரூர்ச் சிதம்பர சுவாமிகள் கூறுவதும் காண்க.

இத்தலத்தில் அடிவாரத்தே ஓரிடத்தில் உள்ள மண்ணை எடுத்து மருந்துபோல அன்பர்கள் உட்கொண்டும் புறம் பூசியும் நோய் நீங்கப் பெறுவர். அம்மண் மலைமருந்தென்று கூறப்படும். ஆஞ்சநேயர் சஞ்சீவி பருவதத்தைக் கொணருகையில் அதன் ஒரு பகுதி இத்தலத்தில் வீழ்ந்ததென்றும் அதனால் இத்தலத்தில் இத்தகைய அமைப்புக்கள் உள்ளனவென்றும் ஒரு கர்ண பரம்பரையான செய்தி இருந்து வருகிறது. இம் மலையின் ஒரு பகுதிக்குச் சஞ்சீவிக் குன்றென்னும் பெயர் வழங்குகிறது.

"மைவந்ததீ வினைதீரவு மிடர்தீரவு மடிவாரமண்
கைவந்தசோ தனையல்லவோ கழுகாசலா கழுகாசலா"

என்று கழுகாசல சதகம் கூறும்.

இம் மலைமருந்தைப் பாராட்டிக் கட்டளைக் கலித்துறையால் ஒரு பதிகம் பிற்காலத்தில் ஒருவராற் பாடப்பெற்று வழங்குகின்றது.

கள்ளம் வல்லாரென்பது இம் மூர்த்தியின் திருநாமங்களுள் ஒன்று.

"கள்ளம் வல்லான் காதல்செய் கோயில் கழுக்குன்றே"

என்பது திருஞான சம்பந்தமூர்த்தி நாயனார் தேவாரம். முற்கூறிய இருபத்தைந்து திருநாம அருச்சனைகளில் ஒன்று, "தஸ்கரபதயே நம:" என்பது.

கண்ணார்ந்த கற்பகமென்னும் திருநாமம் ஒன்று இந் நூலிலும், கழுகாசலசதகமென்னும் நூலிலும் காணப்படும். திருநாவுக்கரசு நாயனார் தேவாரத்தில்,

"கீர்வலனைக் கழுக்குன்ற மமர்ந்தான் றன்னைக்
கற்பகத்தைக் கண்ணாரக் கண்டே னானே"

என்றுள்ள பகுதியிலிருந்து இத்திருநாமம் எழுந்ததுபோலும்.

கலியுகத்து மெய்யன், பொய்யாத மெய்யன் என்னும் இரண்டு திருநாமங்கள் இவ்வுலர்வில் சொல்லப்படும். வடமொழியருச்சனையில், 'கலியுக பதயே நம:' என்பது ஒரு திருநாமம். மாசிலாமணி

யென்பது மற்றொரு திருநாமம். "அகளங்க மணயே நம:" என்பது அருச்சனை. இறைவருடைய திருமேனி வெள்ளை நிறமுடையது.

இங்கே சுந்தரமூர்த்தி நாயனார் பொன் வேண்டி வந்தாராக அவருக்கு முதலில் சிவபெருமான் ஒளித்தனர்; அதனால் நம்பிக் கொளித்தபிரான் என்னும் திருநாமம் உண்டாயிற்று. பின்னர், சுந்தரர் எம்பிரானைத் தேடிக் கண்டபோது அவருக்குப் பொன்னளித் தனரென்பது ஒரு வரலாறு. "ஸ்வர்ணப்ரதர்" என்று அருச்சனையுள் காணப்படும் திருநாமம் இவ் வரலாற்றைக் குறிப்பதாக அமைந்திருக் கின்றது. பொன்னிட்ட நாதரென்று இது தமிழில் வழங்கும். அன்றியும் ஒரு காலத்தில் அன்பர்கள் பலருக்கு இறைவர் பொன் வழங்கியதாகவும் கூறுவர்;

"திசைமுழுதும் பொன்னிட்டா ரென்கைக்கோ தீயேம்
மிசைமுழுதும் பொன்னிட்டு விட்டீர்" (149)

என்று இவ்வுலாக் கூறும். இதற்கு அறிகுறியாக ஸோமாஸ்கந்த மூர்த்தியின் இடத்திருக்கரத்தில் பொற்கட்டி உள்ளதென்பர்.

வேதகிரீசர் சுந்தரமூர்த்தி நாயனாருக்குப் பொன்னைத் தாராமல் மேற்குக் கோபுரவாயில் வழியாகச் சென்று மறைந்திருப்ப, சுந்தரர் தெற்குக் கோபுரவாயில் வழியாகச் சென்று சிவபெருமானைக் கண்டு பொன் பெற்றனரென்பர். இவ்வரலாற்றின் அடையாளமாக இப் பொழுதும் உத்ஸவத்தின் நாலாந்திருநாளன்று இறைவர் இத்தலத் தின் தென்மேற்கு மூலையிலுள்ள கணக்கர் மண்டபத்தில் வழக்கத் திற்கு மாறாக மேலைக் கோபுர வழியாகச் சென்று எழுந்தருளியிருப்ப, சுந்தரமூர்த்தி நாயனார் யானை வாகனத்தில் அமர்ந்து தெற்குக் கோபுர வழியாகச் சென்று அவரைத் தரிசித்து உபதேசமும் பொன்னும் பெறுதல் நடைபெற்று வருகின்றது.

அம்பிகையின் திருநாமங்கள்: மலைமேல் எழுந்தருளியுள்ள அம்பிகையின் திருநாமங்கள் திருமலைச் சொக்கநாயகி, திருமலைச் சொக்கி, பெண்ணினல்லாள், அணியாதழகிய வம்மை யென வழங்கும். அடிவாரத்தில் உள்ள பக்தவற்சலர் கோயிலில் எழுந்தருளியிருக்கும் அம்பிகையின் திருநாமம் திரிபுரசுந்தரியென்பது.

தீர்த்தங்கள்

இத்தலத்திற்குரிய நதி பாலாறு. அது வடமொழியில் பாஹு லேயு நதி, ஸ்கந்த நதி, குகநதியென வழங்கும். க்ஷீரநதி யென்றும் கூறுவர்.

இங்கே பன்னிரண்டு தீர்த்தங்கள் முக்கியமானவை. அவை இந்திர தீர்த்தம், சம்பு தீர்த்தம், உருத்திரகோடி தீர்த்தம், வசிட்ட தீர்த்தம், மெய்ஞ்ஞான தீர்த்தம், அகத்திய தீர்த்தம், மார்க்கண்ட தீர்த்தம், கோசிக தீர்த்தம், நந்தி தீர்த்தம், வருண தீர்த்தம், அகலிகை தீர்த்தம், சம்பாதி தீர்த்தம் என்பன.

இவற்றுள் சம்பாதி தீர்த்தமென்பது மலையின் மேலுள்ள சுனை. அது பக்ஷிதீர்த்தமெனவும் வழங்கும். அதன்கண் நாயொன்றும் இரணிய சேதாவென்னும் மந்திரியும் மூழ்கிக் குட்ட நோய் நீங்கப் பெற்றாரென்பது புராண வரலாறு. பக்தவற்சலர் கோயிலிலுள்ள தடாகமே நந்தி தீர்த்தமெனப்படும். இதன் கரையில் நந்திதேவருடைய திருவுருவம் உண்டு.

இப்பொழுது ஆண்டராஜன் குளமென்று வழங்குவது விசுவாமித்திர தீர்த்தமென்றும், பிரதக்ஷிண சாலையிலுள்ள கோடி தீர்த்தமென்பதே வருண தீர்த்தமென்றும், பொன்னிட்ட நாதர்குளமென்று வழங்குவதே அகத்திய தீர்த்தமென்றும், சேரான் குளமென்று வழங்குவதே மார்க்கண்டேய தீர்த்தமென்றும் கூறுவர்.

இப் பன்னிரண்டு தீர்த்தங்களையன்றி, இங்கே மிகப் பிரசித்தி பெற்றதும் நன்னீரையுடையதுமாகிய சங்க தீர்த்தமென்னும் பெரிய தடாகம் ஒன்று உண்டு. அதனிடையே நீராழி மண்டபம் அமைந்திருக்கின்றது. பன்னிரண்டு வருஷங்களுக்கு ஒரு முறை அங்கே சங்கதீர்த்த புஷ்கரமென்னும் ஒரு திருநாள் நடைபெறும். கன்னியா ராசியில் குரு வரும் நாளே அது. அக்காலத்தில் மூன்றரைக் கோடி தீர்த்தங்கள் அதன்கண் வந்து ஆடுகின்றனவென்பது ஐதிஹ்யம்.

மார்க்கண்டேயருக்காக அத்தீர்த்தத்தில் சங்கு உண்டானமையின் சங்கதீர்த்தமென்னும் பெயர் அதற்கு அமைந்ததாம். சில வருஷங்களுக்குமுன் அதன்கண் சங்கு உண்டாயிற்றென்பர். அச்சங்கத்தின் படம் திருக்கழுக்குன்ற வரலாறு கூறும் ஒரு புத்தகத்தில் வெளியிடப்பட்டுள்ளது. மார்க்கண்டேயர் அருச்சித்த சிவலிங்கப் பெருமான் மார்க்கண்டேசுவரர் அல்லது தீர்த்தேசுவரர் என்னும் திருநாமத்தோடு அத் தீர்த்தத்தின் கரையில் எழுந்தருளி யிருக்கிறார்.

மண்டபங்கள்

இத்தலத்தில் பழையனவும் புதியனவுமாகிய மண்டபங்கள் பல இருக்கின்றன. மலையின் இடையே 'ஒருகல் மண்டபம்' என

ஒன்று உளது. அதன்கண் சிவலிங்கப் பெருமானும் வேறு சில மூர்த்திகளும் உள்ளனர். சிற்ப வேலைப்பாடுகளமைந்ததாகவும் மிகப் பழமையானதாகவும் பல்லவர் காலத்தில் அமைக்கப்பட்டதாகவும் அம்மண்டபம் காணப்படுகின்றது. அதில் சிலாசாஸனங்கள் இருக்கின்றன.

மலையின் அடிவாரக்கோயிலில் ஆமை மண்டபமென்று ஒன்று உள்ளது. அங்கும் சிறந்த சிற்பங்கள் உள்ளன. இம் மலையில் பல குகைகள் இருக்கின்றன.

பூசித்துப் பேறுபெற்றோர்

இந்தத் தலத்தில் வழிபட்டுத் தாம் வேண்டிய வரங்களைப் பெற்றோரும், தம் பாவங்கள் நீங்கினோரும், தாம் உற்ற சாபம் நீங்கப் பெற்றோரும், வாசம் செய்து இன்புற்றோரும், தரிசனம் செய்து நோய் முதலியன நீங்கப்பெற்றோரும் பலராவர். அவர்களிற் சிலர் பெயர் வருமாறு:—

அகத்தியர், அகலிகை, ஆதியென்னும் முனிவர் (கழுகு), இடி, இந்திரன், இரணியசேதா வென்னும் மந்திரி, உருத்திரர் கோடி, கங்கை முதலிய நதிகள், கணிகையொருத்தி, சடாயு (கழுகு), சண்டன் (கழுகு), சத்தமாதர், சந்திரன், சம்பாதி (கழுகு), சம்பு (கழுகு), சம்புகுத்தன் (கழுகு), சம்புலிங்கமென்னும் பிராமணன், சனக முனிவர், சுரகுருவென்னும் சோழன், திருஞானசம்பந்தர் முதலிய நால்வர், திருமால், திலோத்தமை, நந்திதேவர், நாய் ஒன்று, பன்னிரண்டு சூரியர், பிரசண்டன் (கழுகு), பிரமதேவர், மாகுத்தன் (கழுகு), மார்க்கண்டேயர், முனிக்கணம், யக்ஷன் ஒருவன், வசிட்டர், வசுக்கள் எண்மர், வருணன், விசுவாமித்திரர், வேதங்கள் முதலியோர்.

இவர்களுள் அகத்தியர் பெயரால் ஒரு லிங்கமும் தீர்த்தமும் உள்ளன. இடி பூசிப்பதற்கு அறிகுறியாக இக்காலத்திலும் சில முறை கோயிலில் இடி படிதல் உண்டென்பர்.

" உதையென்னகல் லெறியென்னவில்
லுடனேபிரம் படியென்னமற்
றிதுவன்றியுஞ் சிவனேயுனக்
கிடியுந்தலைப் பொறியேர்வையா" (கழுகாசலசதகம்)

என்பதில் இடி பூசித்த செய்தி குறிக்கப்படுகின்றது.

இத்தலத்தில் முற்காலத்தில் நாச்சிமுத்தென்னும் கணிகை யொருத்தி வாழ்ந்திருந்தாள். அவள் ஒரு வைண்வரால் பாட்டுப்பெற்ற

திருக்கழுக்குன்ற மாலை யென்னும் நூலில் ஒரு செய்யுளைத் தினந் தோறும் கூறி வேதகிரீசரை வழிபட்டு வந்தாள். ஒருநாள் பெருங் காற்றும் மழையும் வந்தமையின் திருக்கோயிலுக்குச் செல்ல இயல வில்லை. "ஐயோ! இன்று எம்பெருமானை வழிபட முடியவில்லையே! என் செய்வேன்! நான் அவர் ஸந்நிதியிற் சென்று தொழும் வகையின் றித் திகைக்கின்றேன். எம்பெருமான் இவ்வீட்டு முற்றத்தில் எழுந் தருளினால் எவ்வளவு ஆனந்தமாகப் பாடி மகிழ்வேன்! இந்தத் தடை களைப் பொருட்படுத்தவேண்டாமே!" என்று வருந்தி, "முற்றத் திலே வந்து முன்னிற்கிலோ" எனவரும் ஒரு செய்யுளைப் பாடத் தொடங்கினாள். அச் செய்யுளிற் பாதி முடிந்தவுடன் வேதகிரீசர் இடபவாகனருடராய் அவள் முற்றத்தில் எழுந்தருளினர். விம்மித மடைந்த கணிகை மற்றப்பாதியைப் பாடி முடித்து அவரை வணங்கி மகிழ்ந்தாள். பிறகு இறைவர் எழுந்தருளும்போது அவரது பிரிவாற்ரு மல் இடபவாகனத்தின் திருவடியைப் பிடித்தாள். அப்படியே இறை வர் அவளைக் கைலாயத்திற்கு அழைத்துச் சென்றனர். அதுகண்டு அங்கே நின்ற மாலையின் ஆசிரியராகிய வைணவரும் நாச்சிமுத்தின் காலைப் பிடித்துக்கொண்டு தாமும் கயிலை புக்கனர். இவ்வரலாறு விளக்கமாக க்ஷேத்திரக் கோவைப் பிள்ளைத்தமிழில்,

"உருக்கமுள வொருதாதி நாச்சிமுத் தென்னுமவள்
ஒருவயி னவன்பாடிய
உயர்கழுக் குன்றமா லைப்ரபந் தத்தினுள்
ஒன்றினுக் கொருகவிதையாய்ச்
சருக்கரை கலந்தபா லமுதமென மலையின்மேல்
தம்பிரான் முன்புபாடச்
சண்டமா ருதமழையி னூற்றப்ப வொருதினம்
தாதிதான் பாடவீசன்
அருக்கனு யிரகோடி யெனவிடையில் வரவிடையின்
அடியைப் பிடிக்குமவளோ
டவளடி பிடிக்குமவ் வயிணவனை யுங்கொண்டு
போய்க்கயிலை வாழவைக்கும்
திருக்கழுக் குன்றமெனும் வேதகிரி வருமுருக
சிறுபறை முழக்கியருளே
சிறியனேன் கேட்கவே யருளுந வொலியெனும்
சிறுபறை முழக்கியருளே"

என்னும் செய்யுளிற் கூறப்பட்டுள்ளது. இச் செய்தியை இந்நூல்,

"வினைமுற்றப் பாட்டொன்று வேட்டோர் கணிகை
மனைமுற்றத் தேவந்தான் வந்தான்"
" ... ... ஆங்கொருத்தி
தேனுக் கெதிருமொரு செய்யுள்போற் செய்யளவும்
மானுக் கெதிர்திரும்பி வாராயே"
" ... ... வேட்டொருபெண்
முற்றத்தி லேவந்து முன்னிற்கி லோவென்று
சொற்றத்தில் வேறுமொரு சொல்லுண்டோ"

(109, 353-4, 383-4)

என்று மூன்றிடங்களிற் கூறும்.

"உனைமுற்றுமே புகழாமலன்
றொருவேசைசொற் கவிபாதியின்
மனைமுற்றமே சென்றுயவள்
வழிபட்டசொற் சரிபட்டதே"

என்று கழுகாசல சதகமும்

"முற்றத்தி லேவந்து தாதிதமி ழைக்கேட்டு
மோட்சங் கொடுத்தலிங்கம்"

என்று திருஇலிங்கப் பதிகம் என்னும் நூலும் இச் செய்தியையே குறிக்கின்றன.

சுரகுருவென்னும் சோழன் மகாபலிபுரத்தில் இருந்து ஆண்டானென்றும் அவனுக்கு நேர்ந்த கோஹத்தி இத்தலத்தில் நீங்கியதென்றும் தலபுராணம் உரைக்கும். அவனுடைய கோஹத்தி தோஷம் ஒரு காக்கையுருவாகச் சென்று வீழ்ந்து ஒரு குன்று வடிவாயிற்றென்றும் அதுவே இப்பொழுது தெற்கே காக்கைக் குன்றென்று வழங்குகின்றதென்றும் கூறுவர்.

" ... ... சென்னிகுலம்
தந்த சுரகுருத் தானை யுடன்வேட்டை
வந்த வனத்தெய்த வாளிபோய்—நந்தி
சவித்த திலோத்தமை தானுண கோவை
அவித்த வினைய தனைத்தும்—நவக்கொடியாய்
நன்குன்ற மன்னனை விட்டு நடுநடுங்கித்
தென்குன்ற மேற்செல்லச் செய்வித்தோன்"

என்பது இவ்வுலா. அடிவாரக் கோயிலில் உள்ள மண்டபத்தில் சுரகுருச் சோழன் வரலாற்றைப் புலப்படுத்தும் சிற்பங்கள் பல உள்ளன.

திருஞான சம்பந்தர் முதலிய மூவரும் இம்மலையே சிவரூப மாதலின் இதன்மேல் ஏறுதற்கு அஞ்சிக் கீழிருந்தபடியே திருப் பதிகங்களைத் திருவாய்மலர்ந்தருளினர். அவர்கள் அங்ஙனம் நின்று பாடிய இடம் மூவர் பேட்டையென வழங்குகின்றது. அவ்விடத்தில் மாணிக்கவாசகரையும் சேர்த்து நால்வருடைய திருவுருவமும் அமைத்த நால்வர் கோயில் என்று ஓராலயம் உண்டு.

மாணிக்கவாசகர் திருப்பெருந்துறையில் தாம் கண்ட குரு மூர்த்தியின் திருக்கோலத்தை இத்தலத்தில் தரிசிக்கப்பெற்று ஒரு பதிகம் பாடியுள்ளார். அதற்கு அறிகுறியாக அடிவாரக் கோயிலில் மாணிக்கவாசகருக்காகக் கிழக்குமுகத் தனிக்கோயிலும் அதற்கெதிரில் திருப்பெருந்துறை யென்று வழங்கும் கோயிலும் உள்ளன. அங்கே பலிபீடமாத்திரம் உள்ளது. மலைவழியினிடையே ஒரு மண்டபத் தில் இரண்டு திருவடிகள் உண்டு. மாணிக்கவாசகர் தாம் கொணர்ந்த திருவடிநிலைகளை இங்கே வைத்துவிட்டனரென்றும் அவையே இவை யென்றும் சிலர் கூறுவர்.

திருமால், பிரமதேவர், இந்திரன் என்னும் மூவரும் இங்கே வழிபட்ட வரலாற்றை நினைப்பூட்டும் அறிகுறிகளாக அவர்களுடைய திருவுருவங்கள் திருமலைக் கோயிற் கருப்பக் கிருகத்தின் சுவர்களிற் பொறிக்கப்பட்டுள்ளன.

தல விருட்சம்

இத்தலத்திற்குரிய விருட்சம் வாழை. அதனால் கதலிவன மென்று இது கூறப்படும்.

"கதலிவன மேவு பெருமாளே"

என்பது திருப்புகழ். ஸ்வாமி கோயிலுக்கும் அம்பிகை கோயி லுக்கும் இடையே வாழைமரம் ஒன்று உளது. இத்தலத்தில் 5-ஆம் திருநாளன்று பகலில் கதலிவாகனக் காட்சி நடைபெற்று வருகின்றது. மலைமேலுள்ள வேதகிரீசப் பெருமான் திருவுருவம் வாழைப் பூவைப் போன்றதாக இருக்கிறதென்றும் மேலே கவசமிடப் பட்டிருக்கின்றதென்றும் தெரியவருகின்றது.

திருவிழாக்கள்

முற்காலத்தில் இத்தலத்தில் ஆடிமாதத்தில் உத்தராட நக்ஷத் திரத்தில் திருத்தேர் விழா நடைபெற்றுவந்தது; இவ்வுலாவினால் இச் செய்தியை அறியலாகும். இப்போது சித்திரை மாதத்தில் நடைபெற்று வருகின்றது. வேதகிரீசர் இத்தலத்திலிருந்து ஒரு

முறை சென்று பார்வதி தேவியாரை மணந்ததாகப் புராணம் கூறும். ஆதலின் இங்கே திருக்கலியாண உத்ஸவம் சிறப்புப்பெற்றது. இப்பொழுது வைகாசி மாதத்திலும், ஆடி மாதத்திலும், பங்குனி மாதத்திலும் திருக்கலியாண உத்ஸவங்கள் நடைபெறுகின்றன.

கார்த்திகை மாதத்தில் கடைசிச் சோமவாரத்தில் திருமலைப் பெருமானுக்கு 1008 சங்காபிஷேகம் நடைபெறும். தை மாதத்தில் பூச நட்சத்திரத்தில் சங்க தீர்த்தத்திலும் மறுநாள் நந்தி தீர்த்தத்திலும் தெப்பத்திருவிழா நடைபெற்று வருகின்றது.

பிற செய்திகள்

இத் தலத்தின் சுற்றளவு ஏழரைக் காதமென்று புராண முதலியன கூறும். இதற்குரிய ஆகமம் காரணமென்பது உலாவிற் காணப்படும் செய்தி; இப்பொழுது பெரும்பாலும் காமிகாகமப் படியே யாவும் நிகழ்த்தப் பெறுகின்றன.

ஸ்ரீ வைஷ்ணவர்கள் இக் கோயிலில் சில கைங்கரியங்களைப் பரம்பரையாகச் செய்து வருகிறார்கள். ஒரு வைஷ்ணவப் பெரியாருக்கு இத்தலத்தில் நன்மை உண்டானதுபற்றி இவ்வழக்கம் இருந்துவருகின்றதாம். தாதாசாரியர் கோபுரமென்று ஒன்று உள்ளது. அது தாதாசாரியரென்னும் ஸ்ரீ வைஷ்ணவப் பெரியாரொருவரால் செய்விக்கப் பெற்றதென்று தெரியவருகின்றது.

கழுகாசல சதகம் என்னும் நூல் எளிய நடையில் பக்திச் சுவை ததும்ப அமைந்திருக்கின்றது. அதனைப் பாடியவர் இன்னாரென்று இப்பொழுது விளங்கவில்லை. அந்நூல் முற்றும் இப்போது கிடைக்கவில்லை. அந்நூலாசிரியர் குன்மநோயால் துன்புற்று மிகவருந்தி இங்கே வந்து ஸ்ரீ வேதகிரீசப் பெருமான் திருவருளால் அக்கொடிய நோயினின்றும் விடுபட்டார்.

“ குடலொன்றிலே வலுரோகமாய்க்
குன்மம்மெனக் கன்மம்பிறந்
தடலொன்றிலே படும்வாதையை
உரைசெய்யவென் றரமோவையா
விடையொன்றிலே றியதெய்வமே
விறல்பாடினூற் குறைதீருமே
கடலொன்றிலேய் விடமுண்டவா
கழுகாசலா கழுகாசலா ”

என்னும் செய்யுள் இங்ஙனம் ஊகிப்பதற்கு ஆதாரமாக உள்ளது.

பழைய காலத்தில் இத்தலத்தின் அதிகாரம் பெரும்பாலும் உருத்திர கணிகையரிடம் இருந்ததென்றும் நாச்சிமுத்து இங்கே முத்தி பெற்ற உரிமையினால் அந்நிலையை அவர்கள் பெற்றிருந்தனரென்றும் சிலர் கூறுவர். ஆறு கணிகையர் தலைமைவகித்தனரென்றும் அவர்களுக்கு ஆறு வட்டத்தாரென்னும் பெயர் வழங்குமென்றும் அவருள் ஒருத்தி முத்திநல்லாளென்றும் அவள் பெயரால் முத்திநல்லாள் சுரோத்திரியமென ஒரு நிலம் உண்டென்றும் தெரியவருகின்றது. கோயிலுக்குரிய கைங்கரியங்கள் செய்யும் கோயிற் கொத்தினர் குறைவின்றி இருந்தனர். ஆதிசைவர்களிலும் ஆறு வட்டத்தாரென்று ஒருவகையினர் இருந்தனராம்.

இங்கே பேரம்பலத் தம்பிரானென்னும் ஒரு பெரியார் இருந்தனர். அவர் திருக்கோயிலில் பல திருப்பணிகளைச் செய்து புகழ்பெற்று விளங்கினார். அவருடைய பிம்பம் இத்தலத்தில் உள்ளதென்பர். சங்கதீர்த்தத்தின் வடகரையில் அவர் மடம் இருக்கிறது.

நாள்தோறும் இத் தலத்திற்கு வரும் கழுகுகளைத் தரிசிக்கப் பல ஊர்களிலிருந்து அன்பர்கள் வந்து செல்கின்றனர். பல வருஷங்களுக்கு முன் இவ் வூருக்கருகில் உள்ள சதுரங்கப் பட்டணத்தில் இருந்த டச்சுக்காரரும், மேல் நாட்டினர் பிறரும் இத் தலத்தைப்பற்றியும், கழுகுகள் தினந்தோறும் வந்து செல்வதைப்பற்றியும் சில குறிப்புக்கள் எழுதி வைத்திருக்கின்றனர்.

கழுகுகளுக்கு உணவு கொடுப்பதற்கென்று பக்ஷி பண்டாரம் என வழங்கும் சைவபரம்பரையினர் இத்தலத்தில் இருந்து வருகின்றனர். சிலகாலம் இவ்வுரிமை செங்குந்தர்களுக்கும் இருந்து வந்ததாகத் தெரிகிறது.

இத்தகைய பெருஞ் சிறப்புடைய இத் திருத்தல மூர்த்தியின் பால் இவ்வூரைச் சூழவிருக்கும் ஊர்களிலுள்ளார் ஈடுபட்டு இம்மூர்த்தியைக் குலதெய்வமாகத் தொழுதுவருகின்றனர். இதைச் சூழ்ந்துள்ள இடங்களில் பலர் வேதாசலம், வேதகிரி, ருத்திரகோடி என்னும் பெயர்களை உடையவர்களாக இருத்தல் இதற்கு ஓர் அறிகுறியாகும்.

அந்தகக்கவி வீரராகவ முதலியார்

" நீழலூர் தேம்பொழி லுழலூர்ப் பதியினன்
மிக்கவே ளாண்குல மேதகு தவமென
இக்கடற் புவியி லெழில்பெற வந்தோன்
கண்ணினு முயர்மனக் கண்ணி னொருவரும்
உண்ணிலா வியற்றமி ழியல்பெலா மகங்கை
யுட்கனி போன்மென வொருங்கினி துணர்ந்தோன்
நட்புறு கலைமக ளடைநவி லுவினன்
சொல்லுவோர் சொல்வன துகளற நோக்குறின்
ஒல்லுவ சிலபல வொல்லா வெனுமொழி
பிற்பட வுட்பரிந் தற்புற யாவரும்
தேவரும் வியப்ப மூவரும் பொருள்பகர்
கண்ட சத்தியைக் காணு துரைத்தாங்
கெண்டரு புலவரு ளிதுமுற் பெற்றுளார்
இத்தகை யோன்று னேயென நுவலும்
அத்தகை நீளிடை யவனியிற் பராவ
ஆனைக் கன்று மணிவள நாடும்
தானப் பெருவளந் தங்கு மீழ
மன்னுட் டரசனின் முன்னுட் பெற்றுள
கவிவீர ராகவ னென்னுங் கவிஞன்."

—புரசை அஷ்டாவதானம் சபாபதி முதலியார்.

கவிவீரராகவ முதலியாரென்னும் புலவர் தொண்டை மண்டலத்தில் உள்ள உழலூர் என்னும் ஊரில் பரம்பரைச் சைவ வேளாளர் குலத்தில் வடுகநாத முதலியாரென்பவருக்குப் புதல்வராகப் பிறந்தார். இவர் 18-ஆம் நூற்றுண்டின் பிற்பாதியில் வாழ்ந்தவர். இவர் புறக்கண் இல்லாதவர்; பிறவியிலேயே கண் இழந்தவரென்று சிலர் கூறுவர்.

இளமை முதல் தமிழ்க் கல்வியில் இவருக்குள்ள ஆர்வம் அளவிறந்ததாக இருந்தது. அதனுல் இவருடைய தந்தையார் இவருக்கு ஏற்ற ஆசிரியர்கள் யார் இருக்கிறுர்களென்று ஆராய்ந்தனர். அக்காலத்தில் காஞ்சீபுரத்தில் பரம்பரைத் தமிழ்ப் புலமை வாய்ந்த பலர் இருந்தனர். கந்தபுராணத்தை இயற்றிய கச்சியப்ப சிவாசாரி

யாருடைய பரம்பரையிற் பிறந்த கச்சியப்பக் குருக்கள் என்பவர் தமிழ் நூலறிவு மிகுதியாகப் பெற்றிருந்தார். வீரராகவ முதலியார் அவரிடத்திலே சென்று இலக்கண இலக்கியங்களைப் படித்தறிந்தார்.

புறக்கண்ணால் உலகத்துக் காட்சிகளைக் கண்டு இன்புறும் நிலையில் இவர் இலராயினும் தமிழ்க் கல்வியாகிய கண்ணால் கவியுலகத்தின் இனிய காட்சிகளை உணர்ந்துணர்ந்து இன்புற்றார்.

தமிழ் நூல்களைப் பயின்று வந்தகாலத்தில் இவருடைய தெளிவான அறிவிலே மறைந்திருந்த கவித்துவம் சிறிது சிறிதாக அரும்பத் தொடங்கிற்று.

கம்பராமாயணத்தில் முதலியார் மிகவும் ஈடுபட்டார். பெரிய புராணம் முதலிய சைவ நூல்களில் இவர்மனம் அழுந்தியது. பல தலவரலாறுகளை அறிந்து சிவபெருமானுடைய பெருங்கருணைத் திறத்தையும் திருவிளையாடல்களையும் உணர்ந்து வந்தார். இவற்றால் இவர்பால் தமிழறிவும் சிவபக்தியும் சேர்ந்து முதிர்ச்சிபெற்று வந்தன. இவர் அவ்வப்பொழுது சில செய்யுட்களை இயற்றிவந்தார். கம்பராமாயணம் முதலிய நூல்களிலுள்ள செய்யுட்களைக் கூறி அவற்றின் பொருளைக் கேட்போர் விரும்பும்வண்ணம் சொல்லும் ஆற்றலும் இவருக்கு உண்டாயிற்று. இடையே சங்கீத வித்துவான் ஒருவரிடம் வீணைப்பயிற்சியும் பெற்றார்.

இவ்வளவு திறமையும் ஒருங்கே இவர்பால் அமைந்திருத்தலையறிந்த அன்பர்கள் நாளடைவில் இவரது பெருமையை உணரத் தலைப்பட்டனர். இவருடைய கவித்துவ சக்தியின் புகழும் பரவத் தொடங்கியது.

இங்ஙனம் இருக்கையில் ஒருநாள் இவர் மனைவி இவரை * அவமதித்தமையால் அது பொறாமல் தம் ஊரைவிட்டுப் புறப்பட்டார். பல ஊர்களுக்குச் சென்று அங்கங்கே உள்ள பிரபுக்களாலும் புலவர்களாலும் உபசரிக்கப்பெற்று இலங்கைக்குச் சென்றார்.

அங்கே அக்காலத்தில் ஆட்சி புரிந்து வந்த பரராசசேகரனென்னும் அரசனிடம் தம்முடைய கவித்திறமையையும் கல்வித் திறமையையும் புலப்படுத்தி யானை, கிராமம், அணிகலங்கள் முதலிய பரிசுகள் பெற்றனர். அம் மன்னன் தமிழ்ப்புலமை வாய்ந்தவனாதலின், இக்கவிஞர்பால் பேரன்பும் பெருமதிப்பும் பூண்டு பாராட்டினான். இவர் அவனைச் சிறப்பித்துப் பல கவிகள் இயற்றினார். அவனும் இவரது புலமையைப் பாராட்டிச் சில செய்யுட்களைக்

* இவ்வரலாறு என்னால் தனியே எழுதப்பட்டிருக்கின்றது.

கூறினன். பரராசசேகரன்மீது இவர் ஒரு வண்ணம் பாடினுரென்று தெரியவருகின்றது.

அப்பால் அவனிடம் விடைபெற்றுக்கொண்டு தம் ஊர் வந்து சேர்ந்தார். இவர் உழலூரிலிருந்து சென்று பூதூரிற் பலகாலம் வாசம் செய்தார். பொன் விளைந்த களத்தூர் என்னும் ஊரிலும் சிலகாலம் இருந்தார். இதனுல் இம் மூன்று ஊர்களையும் இவரோடு சார்த்திக் கூறுவர்.

அக்காலத்தில் தொண்டைநாட்டில் அரசாங்க அதிகாரியாக இருந்த திம்மைய அப்பையனென்பவருடைய வேண்டுகோளின்படி திருக்கழுக்குன்றத்திற்குரிய வடமொழிப் புராணத்தை இவர் ஆராய்ந்து தமிழ்ச் செய்யுளால் இயற்றினுர். பிறகு அத்தல சம்பந்தமாக இவ்வுலாவையும் இயற்றினுர்.

அவ்வப்பொழுது தமிழ்நாடு முழுவதும் இவர் யாத்திரை செய்து அங்கங்கே உள்ளவர்களால் பாராட்டப்பெற்றும், உபகாரிகளைக் கவிமாலை புனைந்து புகழ்ந்தும் வந்தனர். சிலகாலம் திருவாரூரில் இருந்தனர்; அப்போது அத்தலத்திற்கு ஒருலாவை இயற்றினுர். கயத்தாறு என்னும் இடத்திற்குச் சென்று தமிழ்ப் புலமை படைத்த அங்கர் அரசனைப் பாராட்டி ஓர் உலாப்பாடினர். அனந்தை யென்னும் இடத்தில் வாழ்ந்திருந்த சந்திரவாணன் மீது ஒரு கோவை இயற்றினுர். சேயூர் முருகக்கடவுள்மீது இவர் பாடிய பிள்ளைத்தமிழ் ஒன்று உண்டு. அதில் சேறைக் கவிராச பிள்ளை யென்னும் புலவரை இவர் பாராட்டி யிருக்கின்றுர். சேயூர்த் தலசம்பந்தமாக ஒரு கலம்பகமும் இவர் இயற்றினுர். இவரால் பாராட்டப் பெற்றவர்கள்: சேறைக்கவிராச பிள்ளை, பரராசசிங்கம், அரியிலூர்க் கிருஷ்ணைய மழவராயர், குமார ஒப்பிலாத மழவராயர், ஆலூர்த் தீத்தான், சேலம் தாகந்தீர்த்த செழிய தரையன், அனந்தைச் சந்திரவாணன், மயிலைக் காளத்திகிருஷ்ணப்பன், திம்மைய அப்பையன், விசயராசனென்னும் அந்தணன், நந்தியமாணிக்க மென்பவன்.

இவரைப் பாராட்டியவர்கள்: கச்சியப்ப சிவாசாரியர், பரராச சிங்கம், நிரஞ்சனநாதர்.

இவர் அவ்வப்போது உபகாரிகளுக்கு எழுதிய சீட்டுக்கவிகள் பல உண்டு; சிலரைக் குறைகூறிப் பாடிய வசைக்கவிகளும் உண்டு. இவற்றிற் சில தமிழ் நாவலர் சரிதையிற் காணப்படுகின்றன. இவரால் வசை பாடப்பட்டோர்: நாகதேவன், தினகரன், சடையாண்டி.

ஆராய்ச்சி

தமிழ்ப் புலமையும் சிவபக்தியும் ஒருங்கே முதிர்ந்து விளங்கிய இந்நூலாசிரியருடைய வாக்கில் தமிழ்நயமும் பக்திச் சுவையும் மலிந்து விளங்குகின்றன. பக்தியின் மிகுதியினால் எழுந்த செய்யுளாகவே இந்நூலைக் கூறலாகும். சிவபெருமானது திருவிளையாடலைப் பலபடியாகப் பாராட்டவேண்டுமென்ற கருத்துடைய இப்புலவர் இந்நூலின்கண் தலத்தோடு தொடர்புபடுத்தியும், பொதுவகையினாலும் நயமுண்டாகும்படி சிவபிரான் புகழை அமைத்துக் காட்டும் இடங்கள் பல. பிற தலச் செய்திகளையும் அடியார்களின் செயல்களையும் எண்ணி எண்ணி ஏற்ற இடங்களில் பொருத்தி யிருக்கின்றார். தம்முடைய மனத்திலே விஷயங்களை ஒழுங்குபடுத்திக்கொண்டு தமிழ்க் கவி யுருவத்தில் சிவபக்தியாகிய வெள்ளத்தைப் பெருகவிட்டிருக்கும் இவர் ஆற்றல் மிகவும் வியத்தற்குரியது.

இதன்கண் முதலில் திருக்கழுக்குன்றத் தலமகிமை கூறப்படுகின்றது. இத்தல புராணம் பாடியபிறகு இவர் இந்நூலை இயற்றியிருத்தல் வேண்டுமென்று தோற்றுகிறது. புராணத்திலுள்ள செய்திகள் அனைத்தும் இப்பகுதியில் வந்துள்ளன. 22 கண்ணியளவும் இவை கூறப்படுகின்றன. சிவபெருமானைப் புகழும்முகத்தால் இப்பகுதியில் தலப் பெருமைகளை அமைப்பதோடு நில்லாமல், நூலின் இடையிடையே மகளிர் கூற்றிலும் பிறவிடங்களிலும் அவற்றிற் சிலவற்றை அமைத்து விளக்குகின்றனர். இதனால், இவ்வுலாவின் பொது இயல்புகளிலும் சிறப்புச் செய்திகளை இணைத்துக் காட்டும் இவர் ஆற்றல் விளங்கும்.

இத்தலத்தில் கழுகு வழிபடுவதை,

> " ... ... கிருத்திரம்
> ஓரெட்டும் வந்தித் துகந்தோறு மோரிரண்டாய்
> ஈரெட் டுபசாரத் தேத்தினேன் " (9-10).

என்று செய்தியளவாகச் சொல்லிய இப்புலவர் உவமையொன்றையும் இதற்குக் கூட்டி,

> " பொன்மலை யொன்றையிரு வெள்ளிமலை போற்றலெனத்
> தன்மலைச்சம் பாதித் தவர்போற்ற " (96)

என்று கூறினர். சிவபெருமான் அபிடேகங் கொண்டருளிய பின் திருவொற்றுடை சாத்தினர்கள் என்னும்பொழுது இச் செய்தியையே உவமையாக்கி 'இரண்டு கழுகு சிறையால் தழீஇய திறனுக்கு' ஒப்பிடுகின்றார். பெதும்பையுடன் வந்த மாதர் கூற்றில்,

" அங்கப் பணிய ரருளே பொருளென்கை
கங்கப் பிறவிக்கே காணியோ" (205)

என வைத்தார்.

" பன்னிரு ஞாயிறுந் திங்களோர் பன்னிரண்டிற்
பன்னிருபங் கோடும் படிகண்டோன் " (7)

ஆகிய இத்தலத்து மூர்த்தி 'மாணிக்கங்கள் பதித்த குடத்திலிருந்து வீழும் நீரில் திருமஞ்சனமாடுவது கும்பத்துக்குரிய சூரியன் அக் கும்பத்தோடு வந்து நீராட்டுவதை யொத்தது' (37) என்றும், 'பன்னிரண்டு சூரியரும் ஒருங்கமைத்தாற்போன்ற திருமுடியைச் சூடி மகரசூரியனைப்போல மகரக் குழையை யணிந்தனர்' (46-7) என்றும், 'கண்ணாடியில் தம் திருவுருவத்தை நோக்கும்போது அதன்கண் தம் மேனி தெரிதல், சூரியன் தம்மைத் தியானித்துத் தன் உள்ளத்தே தம் உருவம் எழுந்தருளப் பெற்றதுபோலிருந்தது' (64) என்றும் இயைபுறக் கூறுதல் காண்க. சந்தனத்தால் வெப்பமுற்ற மகளிர் அச்சந்தனத்தை இறைவர் அணிந்திருப்பதை யறிந்து, "முன்னமே சூரியர் பன்னிருவர் வெப்பமுள்ள தம் கிரணங்களால் அருச்சித்த போது அவ் வெப்பத்தைப் பொறுத்தருளிய பழக்கத்தினால் சந்தன வெப்பத்தையும் பொறுத்தீரோ" (155) என்று இவ்வரலாற்றை நினைந்து கேட்கின்றனர்.

" ஆதி யரிவந் தருச்சித்தோன் " (4)

என்பதில் திருமால் பூசித்ததை வாளா கூறினர். குழாங்கொண்ட மகளிர் தம்மைக் காமன் துன்புறுத்தலை யொழியாமைக்கு ஒரு காரணம் கற்பித்து, 'தன்னுடைய தந்தையாராகிய திருமாலினது பழியை இப்பெருமான் தீர்த்தனரென்ற விஷயம் தெரிந்ததால் இந்தக் காமன் நம் பழியையும் பொறுத்துவிடுவானென்ற தைரியத்தால் அச்சமின்றித் துன்புறுத்துகின்றான்' (143) என்கின்றனர். தெரிவை பறவைகளை நோக்கி, 'திருமால் இறைவரைப் பூசிக்கும்போது பாற் கடலிலிருந்து பால் கொணர்ந்து அபிஷேகஞ் செய்திருப்பாரே; அந்தப்பாலை என் மேலே வீசி என் மெலிவை அகற்றுவீர்களாக" (339) என்கின்றாள்.

இந்திரன், ஒரு தெய்வமங்கை இழந்த பந்தைத் தேடிச்சென்று அதனைக் கைலையிற் சிவபெருமானருகிற் கண்டு சிவபெருமானைக் கள்வனென்று கூறி அக் குற்றத்தாற் சிறையிலிடப்பெற்றுக் குருவின் வேண்டுகோளால் சிறைதீர்ந்து இத்தலத்தில் பூசித்துப் பாவம் நீங்கினனென்பது தலவரலாறு.

"அசனித் துவசத்தோ னன்றொருத்தி பந்தால்
வசனித்த தீவினையை மாய்த்தோன்" (3)

என்பதில் இச் செய்தி சுருக்கமாகக் காணப்படும். 'சிவபிரான் கிருஷ்ணகந்தம் பூசியருளினர்; அஃது, இந்திரன் பூசித்த காலையில் அவன் மேனியொளி பாய்ந்ததோவென்ற ஐயத்தை உண்டாக்கிற்று. மேலே கொன்றை மாலையைச் சாத்திக் கொண்டபோது அது பொன்னிறமான ஒளியோடு விளங்கியது. இந்திரனது சிறையை நீக்கும்படி வந்து பணிந்த வியாழ பகவானது மேனியொளியோ வென்று சொல்லும்படி அது தோற்றியது' (56-7) என்பதும், குழாங்கள், "அந்தக் காமன் (இந்திரன்) சிறைப்பட்டான் என்பதை நினைந்து அஞ்சாத இக் காமன் (மன்மதன்) ஒருகால் வருவானோ" (150) என்று அஞ்சிக் கூறுவதும் அச்செய்தியைப்பற்றிய நினைவினின்றும் கிளைத்தவை.

மங்கை பந்துவிளையாடுகையில் பாங்கி எறிந்த பந்துகளில் ஒன்றை ஒளித்துவைத்தாள். அதைக் கண்ட பாங்கி, "இதை அரசனுக்குச் சொல்வோம்" என்று கூறி நகைத்தாள். அப்போது மங்கை, "முன்பு ஒரு தெய்வமகள் பந்து இழந்ததையும் அதற்காக இந்திரன் வெகுண்டதையும் அதன்பொருட்டு அவன் தண்டனை பெற்றதையும் நீ படித்ததில்லையோ? நீ அரசனுக்குக் கூறினால் அவன் வெகுளத் தொடங்குவான். அதனால், இந்திரன் பட்டபாடே படுவான்" என்று சாதுர்யமாகக் கூறினாள். இப்பகுதியிலும் பந்துக்காக இந்திரன் சிறையுற்ற செய்தி வேறொரு முறையில் அமைந்திருத்தல் காண்க.

சிவபிரான் திருவாலங்காட்டில் காளியோடு நடனம் புரிந்ததனால் இளைப்புற்றுக் குளிர்ச்சியையுடைய கதலிவனமாகிய இத்தலத்தில் வந்து இளைப்பு நீங்கினரென்பர்;

"சாற்றும் வடவனத்தி லாடித் தனதிளைப்பு
மாற்றுங் கதலி வனத்தினேன்." (20)

குழாங்கொண்ட மகளிர் தம் 'பொற்றுடையால், தூய கதலிவன மீதெனத் தொல்லைநாட், போய பழமை புதுக்குவார்' (115-6)

என்னும் பகுதியில் இத்தலத்திற்குக் கதலிவனமென்னும் பெயருண்மை வேறொரு வகையிற் புலப்படுத்தப்படுகின்றது. 'அக்குழா மகளிர் இறைவரை இடிபூசித்ததாதலின் அதனோடு சேர்ந்து வந்த மின்போலவும் முகில்போலவும் தம் இடையும் கூந்தலும் விளங்க வருவார்' (116-7), 'குயிலின் குரலால் வருத்தமுற்ற அவர்கள் முன்பு பூசித்த இடி இப்போது வந்து பூசித்து வலஞ்செய்தால் இந்தக் குயில் ஒடுங்கிவிடுமே என்பர்' (151) என்னும் பகுதிகள் இடி பூசித்த வரலாற்றைக் குறிக்கின்றன.

"சீர்பூத்த வேதங்க ளெல்லாந் திருமலையா
ஏர்பூத்த ஞாலத் திருத்திேனன்" (1)
"வேத குலாசல, வேதியன்" (31)
"தன்னான் மறையின் சயிலம்" (46)
"உரையிற் சுருதி யொருவரைசெய் தந்த
வரையிற் குடிவந்தான்" (107)

எனப் பல இடங்களில் வேதங்கள் மலையான செய்தியைக் கூறுவர். அம்மலைமேல் இறைவர் எழுந்தருளியிருப்பதை நினைந்து, பேரிளம் பெண் "மன்மதன் வெறும் சோலைகளிலுள்ள அசோகம்பூவை எய்யாமல் உன் சுருதிவெற்பிலுள்ள அசோக மலரைத் தொடுத்தால் நான் அறிவு மாறுபாட்டை அடையேன்" (397) என்று கூறுவதாக அமைப்பர்.

சுரகுருச்சோழனது வரலாற்றோடு தொடர்புடைய செய்திகளை இங்ஙனமே பலபடியாக இந்நூலினிடையே வைத்துள்ளார். அவனது கோஹத்தியை இறைவர் பொறுத்த செய்தியைக் குழாங்கொண்ட மகளிர் கூற்றில்,

"கோவை வதைத்த கொலைபொறுத்தீ ரிவ்வுலகிற்
பாவையர் கன்றருமை பார்ப்பீரோ" (154)

என்று அமைத்தனர். தம்முடைய கைவளையை இழந்த அவர்கள சிலேடை நயம்பட இதனைக் கூறுகின்றனர். கன்றென்பது பசுவின் கன்றுக்கும் வளைக்கும் பெயர். 'ஒரு பசுவையே கொன்ற பாவத்தைப் பெரிதாகக் கருதாத நீர், அதன்கன்றின் அருமையைப் பார்ப்பது அரிது' என்று தோற்றும்படி அவர் உரைத்தனர்.

மாயீகனென்னும் அரக்கனை மார்க்கண்டேயமுனிவர் பன்றியுருவாகச் சபித்த செய்தியை அரிவைகூற்றில்,

"திண்ணரக்கர் சேயைச் சினந்த முனிசாபம்
கண்ணரக்கர் சேய்க்குங் கலவாதோ" (308)

என வைத்தார். அரக்கர் சேய் என்பது வெவ்வேறு பொருளில் வந்ததாயினும் சொல்லளவில் ஒன்றுபட்டுச் சுவையுறநிற்றலைக்காண்க. (கண்ணரக்கர் - அரக்குப்போலச் சிவந்த கண்ணையுடைய திருமால்; அவர் சேய் - மன்மதன்.)

"வேதம் இவரைக் கள்ளம் வல்லார் என்று போற்றுகின்றது. அவ் வேதம் இல்லாததைச் சொல்லாது. உள்ளதையே கூறியது. அதற்கு நம் நிலையே சான்றாகும். இவர் நம்மை மறித்து நம்முடைய பழைய அறிவைப் பறித்துக்கொண்டார். இத்தகைய கள்வரைத் தண்டியாது விடுதல் தகுதியன்று. எல்லோரும் கூடிச் சுற்றிக்கொண்டு பிடித்துக் கட்டிவிடலாம்" (140-41) என்பது குழாங்கொண்ட மகளிர் கூற்று. இத்தலத்துப் பெருமான் திருநாமம் கள்ளம்வல்லானென்ற நினைவில் எழுந்தது இது. அம் மகளிர் மிக்க பசலையைக்கொண்டனர். அதனைக் குறித்து,

> "திசைமுழுதும் பொன்னிட்டா ரென்கைக்கோ தீயேம்
> மிசைமுழுதும் பொன்னிட்டு விட்டீர்" (149)

என்று அவர்கள் முறையிடுகின்றனர். பொன் என்பது தங்கமென்றும் பசலையென்றும் பொருள்பட்டுச் சொல்லளவால் ஒன்றுகத் தோற்றிநின்றது.

இப்படியே, பெதும்பையின் கூந்தலுக்கு உவமை கூறுவாராய்,

> "...பாணினிய மாதவரோதி
> முடித்தென்ன வோதி முடிப்பாள்" (189)

என்று முனிவர் இத்தலத்தில் பாணினீய வியாகரணத்தை ஓதித் தெளிந்த கதையையும், "நிசாசரராகிய அசுரர்களைக் கொன்ற கோடி ருத்திரரை ஏவினால் எம்மை வருத்தும் நிசாசரனாகிய சந்திரனது போர் அடங்காதா?" (307) என்ற அரிவை கூற்றில் கோடி ருத்திரர் பூசித்த கதையையும், "அன்று ஓர் அமைச்சனுக்கு இருந்த வெண்பொன்னின் நிறத்தையுடைய குட்டத்தைப் போக்கிய நீ என்னுடைய பொன்னிறம் பெற்ற பசலையைப் போக்குதல் கூடாதோ" (310) என்ற அவள் முறையீட்டில் இரணியசேதா குட்டநோய் நீங்கிய கதையையும்,

> "மண்ணி னதியடங்கக் கண்டநின் மாதீர்த்தம்
> கண்ணி னதியடங்கக் காணாதோ" (311)

என்பதில் தீர்த்தச் செய்தியையும், "பிரமதேவன் தன் இருக்கையாகிய தாமரையிலிருந்து எடுத்த தேனை இறைவருக்கு அபிடேகம் செய்

திருப்பான். பறவைகளே, அதை உங்கள் சிறகுகளினால் நனைத்துக் கொணர்ந்து என் வெப்பந்தீர வீசுவீர்களாக'' (338) என்ற தெரிவை கூற்றில் பிரமன் பூசித்த வரலாற்றையும் எடுத்தாள்கின்றார். இப்படி தீய மலையின்மேல் மூவர் ஏற அஞ்சியது (351), ஒரு கணிகை இறைவரைப் புகழ்ந்து பாடியது (354), நந்திதீர்த்தச் செய்தி (398), சம்பாதிச்சுனை வரலாறு (399) என்பவற்றையும் இடையிடையே அமைத்திருக்கின்றார்.

பிற தலங்கள்

23-ஆம் கண்ணி முதல் 29-ஆம் கண்ணிவரையில் வேறு பல தலங்களில் சிவபெருமான் எழுந்தருளியிருப்பதை மடக்கணி அமையக் கூறி யிருக்கின்றார். இம்மரபு வேறு சில உலாக்களிலும் காணப்படுகின்றது. வேறு இடங்களிலும் பிறதலச் செய்திகள் வந்துள்ளன. திருவாரூரில் தியாகேசர் பொன் வழங்குவதும் (23), அத்தலத்தில் திருவந்திக் காப்பு விசேஷமுடையதென்பதும் (167), அங்கே திருநீலகண்ட யாழ்ப்பாணருக்காக வடமதிலில் ஒரு வாயில் செய்வித்ததும் (367) ஆகிய செய்திகள் இந்நாலில் வந்துள்ளன. காசியென்னும் திருப்பதியில் இறைவர் எழுந்தருளி யிருப்பதும் (24, 409), திருத்தில்லையில் அம்பலத்தில் எழுந்தருளியிருப்பதும் (25), அத்தலம் அர்த்தயாம விசேஷமுடையதென்பதும் (167), அங்கே பலவகைப் பேறுகள் பெறப்படுமென்பதும் (325), அங்கே இறைவர் திருநடம்புரிவதும் (393-4) கூறப்படுகின்றன. திருவாலவாய்த் திருப்பதியின் பெருமையும் (26), அங்கே சிவபெருமான் அருளால் கரிக்குருவியும் நாரையும் முத்திபெற்ற செய்தியும் (206), கதம்பவனமென்னும் பெயரால் அது வழங்குவதும் (366) அங்கங்கே உள்ள பகுதிகளால் உணரலாகும். செந்நிறமுடையது (27), திருமாலும் பிரமனும் அடிமுடி தேடினர் (207), தட்டுப்புழுகால் அபிஷேகம் நடைபெறும் (334), சோணை யென்னும் பெயருடையது (408) என்பவை அண்ணாமலையைப்பற்றி இதிற் கண்ட செய்திகள். காளத்தி வரையின்கண் இறைவன் திருக்கோயில் கொண்டெழுந்தருளியதும் (28,409), சிலந்தியும் பாம்பும் களிறும் பூசித்தமையும் (208), கண்ணப்பர் பச்சிலையிட்டு வழிபட்டதும் (331) இதிற் பாராட்டப் பெறுகின்றன. தொண்டைநாட்டிற் றலைமைபெற்ற தலமாகிய காஞ்சியைப்பற்றியும் பல செய்திகள் வருகின்றன (29,280,400,409.) இங்ஙனமே திருப்பனந்தாள் (157), திருவாலங்காடு (216), சிராமலை

(332), இமாசலம் (333), வாட்போக்கி (335), திருமுல்லைவாயில் (401), திருநெல்வேலி (152, 294, 402), திருப்பாசூர் (152, 294, 402), திருவிடைமருதூர் (407), திருச்சோற்றுத்துறை (408), திருவாரத்துறை (408), திருக்கோணாசலம் (408), தண்டலை நீணெறி (408), திருக்கோளிலி (408), சீகாழி (408) என்னும் தலச் செய்திகளும் பலபடியாகப் பாராட்டப்படுகின்றன.

30-ஆம் கண்ணிமுதல் 33-ஆம் கண்ணிவரையில் சிவபெருமானுடைய பொது இயல்புகள் சொல்லப்படுகின்றன. அப்பால் ஆடி மாதத்தில் திருவிழாத் தொடக்கம், சிவபெருமான் திருமஞ்சனம் ஆடல், திருவாபரணம் புனைதல், பிற உபசாரங்களைப் பெறுதல் என்பன கூறப்படும். இப்பகுதியில் தற்குறிப்பேற்றம் முதலிய அணிகள் அமைந்துள்ளன. பின்பு இறைவர் திருத்தேருக்கு எழுந்தருளும்போது உடன்வருவோர்கள் இன்னாரென்பது கூறப்படுகின்றது.

நந்திகேசுவரர், சண்டேச நாயனார், திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரமூர்த்தி, மாணிக்கவாசகர், சேரமான் பெருமாள் நாயனார், சுரகுருச் சோழன், வரகுணபாண்டியர், திருத்தொண்டத்தொகுதி, கோயிற்காரியஞ் செய்வோர், பிராமணர், சைவமுனிவர், பூத கணங்கள், பணிவிடை செய்வோர் முதலியோர் உடன்வந்தாரென்பர்.

பின்னர் இறைவர் திருத்தேரில் எழுந்தருளுவதும், கவிகை கவித்து ஓங்குவதும், சாமரை முதலியன வீசுவதும், பிறதேவர்கள் தம் தம் வாகனத்தில் எழுந்தருளுவதும் சொல்லப்படுகின்றன. 'பல் வகை வாத்தியங்களும் திருச்சின்னமும் ஒலிக்கின்றன. பல விடங்களில் வாழும் மாதர்கள் எம்பெருமானைத் தரிசித்து மயலுறுகின்றனர்; முறையிடுகின்றனர்' என்ற செய்திக்குப் பிறகு ஏழு பருவமகளிர் இயல்பு முதலியன அமைக்கப்பட்டுள்ளன.

பேதை

பேதை, கூடாத கூந்தலும் மருட்பார்வை இல்லாத கண்ணும் உடையாள். அவள் கூறும் குதலைச் சொற்களைத் தாய் அறிந்து மகிழ்கின்றாள். அவள் தன் கையில் ஒரு பாவையை வைத்து விளையாடும் இயல்பினள். பால் நுகரும் பருவத்தாள்.

வீதியில் சிற்றில் அமைத்து விளையாடுகையில் கிளிவடிவம் ஒன்றை எழுதி இன்புறுகிறாள்; உடனே பேதைப் பருவத்தன்மையினால், "ஐயோ! இந்தக் கிளியைப் பருந்து தூக்கிக்கொண்டு போய்விடும்;

நான் எடுத்து வீட்டிற்குக் கொண்டு செல்வேன்'' என்று கூறி எடுக்கின்றாள். இயலவில்லை. உடனே அழுகின்றாள். அப்பொழுது தேர் அவ்வீதி வழியே வருகின்றது. பேதை தன் தாய்மார்களுடன் சென்று அவர்கள் தொழுவதைப் பார்த்துத் தானும் தொழுகின்றாள். பிறகு தாயரை நோக்கி, "இவர் ஆர்?" என்று கேட்கின்றாள். அவர்கள் இறைவரை ஒரு கற்கண்டுக் கட்டியாக உருவகம் செய்து கூறுகிறார்கள். "அப்படியானால் நான் சிறிது தின்ன எனக்குக் கிடைக்குமோ?" என்று பேதை கேட்கிறாள். அவர்கள்,

> "பாடப் பரியப் பலகா லிருகாலும்
> சூடத் தனிகருதச் சூழ்போதத்—தேடத்
> தெரிசிப்ப வுண்ணின்று தித்திப்ப தல்லாற்
> பரிசிப்ப மாந்தப் படுமோ?"

என்று விடையிறுக்கின்றனர். திருத்தேர் அத்தெருவை விட்டகலு கின்றது.

பெதும்பை

பெதும்பைப் பருவப் பெண் முத்தால் அமைத்த சிற்றிலில் வீற்றிருந்து கழலாடுகின்றாள். அப்பொழுது வேதகிரீசர் திருத்தேர் வரவைத் தோழிமார் அறிவிப்ப, அவள் உடனே எழுகின்றாள். அவளால் வளர்க்கப்படுகின்ற பறவைகளும் மானும் உடன் செல்லத் தொடங்குகின்றன. அவற்றைப் பெதும்பை வாராமல் தடுத்து மேற் செல்லும்போது உடனிருப்போர் அவையும் உடன்வரலாகுமென்று காரணங்காட்டிக் கூறிப் பல பறவைகளும் விலங்குகளும் பல தலங் களில் சிவபெருமானை வழிபட்டுப் பேறுபெற்ற வரலாறுகளைக் கூறுகின்றனர். அதுகேட்ட பெதும்பை அவற்றையும் உட னழைத்துச்சென்று கழுக்குன்றவாணரைத் தரிசித்து மீள்கின்றாள்.

மங்கை

அழகு முதிர்ந்து செவ்விபெற்ற பருவத்தினளாகிய மங்கை தோழியரோடு பந்தாடுகின்றாள். அப்பொழுது கழுக்குன்றுடைய பிரான் திருத்தேரில் வரவே, சென்று 'வாழியரென்றேத்தி வணங்குகின்றாள்'; அவர்பால் மயல்பூண்டு உடல் இளைப்ப, காம மயக்கத்தால் சோர்வு பெற்றுத் தன் மாடத்திற்கு மீண்டு இறைவரை நினைந்து உருகுகின்றாள்.

மடந்தை

அழகு மிக்க மடந்தை பாவையர் எம்மருங்கும் பாராட்ட ஒரு சோலையில் ஊசலாடுகின்றாள். ஆடும்பொழுது கழுக்குன்றுடையாருக்குரிய தசாங்கங்களைப் பாடுகின்றனள். அப்பொழுது அவள் ஆடியது போதுமென்று உடனுள்ளார் கூறுங்கால் இறைவர் திருத்தேர் வருகின்றது. மடந்தை ஊசலைவிட்டு இறங்கி ஓடித் தொழுது, காம மயக்கமுற்று, வளையல் முதலியவற்றை இழக்கின்றாள். தேர் அப்பாற் செல்கின்றது. மடந்தை தன்னுடைய நிலையை நினைந்து இரங்குகின்றாள். "சந்திரன் எனக்கு அக்கினிபோல இருக்கின்றது; அதனையே தமக்குக் கண்ணும் முடியுமாகக்கொண்ட இறைவருக்கு இதன்கொடுமையைக் கூறுதல் பொருத்தமாகுமா? தம்முடைய கண்ணைச் சிறிது விழித்துப் பார்த்தால் ஓடிப்போகின்ற இரவு ஒரு யுகம் போல இருக்கிறதென்று நாம் சொன்னால் அவர் நம்புவாரா? தம்முடைய நெற்றிக்கண்ணால் வெந்து விழுந்த காமனை யமன்போல இருக்கின்றானென்று சொன்னால் அவர் அவ்வார்த்தையை மதிப்பாரா? பெருவெள்ளமாகிய கங்கை நீரைத் தம் சடாபாரத்துள் சுருக்கிவைத்த பெருமான் நம் கண்ணீரைப் பெரிதென்று கருதுவாரா? எப்பொழுதும் தம் திருச்செவிகளில் யாழ்வாசிக்கும் கந்தர்வர்களை வைத்துக்கொண்டு அவர்கள் இசையினால் இன்புறும் அவரிடம் இசைதீது என்று சொன்னால் ஏற்பாரா? ஆனாய நாயனாருடைய வேய்ங்குழலிசையைக் கேட்டு மகிழ்ந்த அவர் திருச்செவிகள் எனக்குத் துன்பத்தைத் தரும் இந்தக் குழலிசையைப் பிழையாக உணருமோ? வீதிகள் தோறும் தம்முடைய இடபத்தின் மணி ஒலிக்கும்படி எழுந்தருளும் இப்பெருமான் நமக்கு இந்த ஆன்மணியோசை துன்பத்தை உண்டாக்குமென்று நினைப்பாரா? தம்முடைய ஆபரணமாகிய பாம்புக்கு உணவாகும் தென்றல் எமக்கு மரணத்தை விளைவிக்கின்றது என்று அவரிடம் கூறுதல் பொருத்தமாகுமோ? எப்பொழுதும் குயில் கூவிக்கொண்டிருக்கும் மாமரத்தின் அடியில் எழுந்தருளியிருப்பவருக்குக் குயிலோசை துன்பத்தைத் தருகின்றதென்பது மாறுபாடன்றோ? பாற்கடல் முழுவதையும் ஒரு குழந்தையினால் பருகச் செய்த இவருக்குச் சமுத்திரத்தின் கொடுமை விளங்குமோ? கிடைத்த பிச்சை உணவைப் பெரிதாகக் கருதி உண்ணும் இவரிடம் எம் உயர்ந்த உணவு விடமென்று சொன்னால் அது மெய்யாகுமா? பிள்ளைப் பழிக்கு அஞ்சாத வஞ்சகராகிய இவர் பெண்பழிக்கு அஞ்சுவாரா?" என்று அவள் உரைக்கின்றாள்.

அரிவை

அரிவை மன்மதனை அருகிலே அழைத்து, "எந்தவிளையாட்டை இப்பொழுது ஆடுவோம்?" என்று கேட்க அவன் "அம்மனை விளையாடலாம்" என்கின்றான். அம்மனை இயற்றித் தருகவென்று அவள் கூற, அவன் பல இடங்களில் உண்டாகும் முத்துக்களை எடுத்துக் கூறி, "இவற்றால் அம்மனை செய்தல் நினக்கு விருப்பமோ?" என்று கேட்கின்றான். அவள் அவையெல்லாவற்றையும் மறுத்து, சிவபிரான் மூங்கிலடியிற்றோன்றியவராதலின் மூங்கிலில் உண்டாகிய முத்தினால் செய்துதரச் சொல்லி அவ்வம்மனைகளை ஆடுகின்றாள். அப்பொழுது திருத்தேர் திருவீதியில் வருவதை அறிந்து சென்று சிவபிரானைப் பணிகின்றாள்; பணிந்து காமமயக்கத்தால் துன்புற்றுத் தனக்கு அருள் செய்ய வேண்டுமென்று முறையிட்டுச் சோர்கின்றாள். அப்பால் தோழியர் அவளை வீட்டுக்குக் கொண்டு சென்று மலரமளியிற் சேர்க்கின்றனர்.

தெரிவை

பாங்கியரும் சேடியரும் பாராட்டப் பேரியாழ் வாங்கி நிலாமுற்றத்தில் தெரிவை அமர்ந்திருக்கின்றாள். அப்பொழுது அங்கே ஒரு விறலி வந்து அவளைப் புகழ்ந்து பாடி நிற்பத் தனக்கு இறைவர் திருவருள் கிடைக்குமோவென்று அவளை வினவுகின்றாள். விறலி சிவபிரான் அருள்வாரென்று கூற, மகிழ்ச்சியுற்று அவளுக்குப் பரிசு வழங்கிப் பின் பாங்கியருடன் திருக்கழுக்குன்றத்தை வலம் வருகின்றாள். வருங்கால் அங்கே காணப்பட்ட பறவைகளைக் கண்டு காம மயக்கத்தால் வருந்தி, அடிவாரத்துக்கு வந்து வணங்கும்போது இறைவர் திருத்தேர் தெருவில் வருகின்றது. தெரிவை சென்று தரிசித்து மயக்கமடையவே, பாங்கியர் சிவபெருமானைப் போற்றி யிரந்து கொன்றைமாலையை வாங்கிக்கொணர்ந்து அவளுக்கு ஈகின்றனர். அவள் அதனை அணிந்து மகிழ்ச்சியடைகின்றாள்.

பேரிளம்பெண்

பேரிளம்பெண் மலர், ஆபரணங்கள் முதலியவற்றை அணியாத இயல்பினள். விறலியரும் கூத்தரும் தன்னை இசைப்பாட்டுப் பாடிப் புகழும்போதெல்லாம், "கீதம் சிவபெருமானுக்கு உரியதன்றோ?" எனக் கூறி அவருக்கும் இசைக்கும் உள்ள தொடர்பை எடுத்தியம்பி அவர்கள் தன்னைப் பாடுதலை ஏற்றுக்கொள்வதற்கு அஞ்சுகின்றாள்.

தான் செய்யுஞ் செயல்களிலெல்லாம் சிவனடியார் செயல்களை நினைவு கூர்ந்து பாராட்டுகின்றாள். யாழில் தேவாரம் முதலியவற்றை வாசித்து அன்பு ததும்ப உருகும்போது இறைவர் திருத்தேர் வீதியினிடத்தே வரவும், அவள் விரைந்து சென்று பொய்யாத மெய்யர் திருமுன்னர் வீழ்ந்தெழுகின்றாள்; எழுந்து அவரைத் துதித்து முறையிடுகின்றாள். சிவபிரான் அவளுக்குக் கடைக்கணோக்கருள்செய்து செல்லுகின்றார். இங்ஙனம் திருவுலா முடிவுறுகின்றது.

இவ்வாறு ஏழுபருவமகளிருடைய இயல்பும், விளையாடல்களும் பிறவும் இவ்வாசிரியரால் அழகாகச் சொல்லப்படுகின்றன.

பிற செய்திகள்

இவராற் பாராட்டப்பெற்ற நாயன்மார்கள்: திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரமூர்த்தி நாயனார், சண்டேசர், சேரமான் பெருமாள் நாயனார், ஆனாயர், சிறுத்தொண்டர், மானக்கஞ்சாறர், கண்ணப்பர், இளையான்குடிமாறர், பசுபதி, நரசிங்கமுனையரையர், இடங்கழியார், கலியர், நமிநந்தி, கணம்புல்லர், முருகநாயனார், கணநாதர், குங்குலியக்கலயர், நேசர், அரிவாட்டாயர், காரைக்காலம்மையார், மூர்த்தியார்.

அரிவைப்பருவத்தில் முத்துப் பிறக்கும் இடங்கள் இன்னவையென்பதை யறிந்து புலப்படுத்தியவை: பசு, சந்திரன், மேகம், யானைக்கொம்பு, தாமரை, கரும்பு, மூங்கில்.

வேதகிரீசர் தசாங்கங்கள் மடந்தைப்பருவத்தில் சொல்லப்படும்; அவை வருமாறு:—

(1) மலை—வேதாசலம், (2) நதி—சுகநதி, (3) மாலை—கொன்றை, (4) நாடு—தொண்டைநாடு, (5) நகர்—சிவபுரம், (6) பரி—வேதம், (7) யானை—அயிராவணம், (8) முரசு—வெற்றிமுரசு, (9) கொடி—இடபம், (10) ஆணை—அண்டகோடியை ஆளும் ஆணை.

உவமை, உருவகம், தற்குறிப்பேற்றம், சிலேடை முதலிய பொருளணிகளும் யமகம், சந்தம் முதலியனவும் இதில் இடையிடையே உள்ளன. வடமொழிப் பெயர்ச்சொற்களிலிருந்து வினைச்சொல்லை ஆக்கி வழங்கும் வழக்கம் பல நாளாகத் தமிழில் இருந்து வருகின்றது. வசனமென்பதிலிருந்து வசனி (3) என்பதும், கோபம் என்பதிலிருந்து கோபி (5) என்பதும் வந்தது காண்க. இத்தகைய சொற்கள் சில இவ்வுலாவிற் காணப்படும்: அவை: சாவித்து (5),

செவித்த (6), சவித்த (11,13), மானித்து (265), கலகித்து (297) என்பன. ஓரிடத்தில் விறலியைக் கிதை (323) என்று கூறுகின்றார்.

இவ்வுலாவையும் பிற உலாக்களையும் படிக்கும்போது அவற்றில் உள்ள அமைப்புக்களும் சுவைகளும் இதிலும் நிரம்பி யிருப்பதை உணரலாகும். இதனைப் பாடிய புலவர் கண்ணில்லாரென்ற குறை இவர் செய்யுட்களினால் அறிந்துகொள்ள இயலாது. கண்ணுடைய புலவர் சிலர் பாடிய செய்திகளுக்கு இவர் கூறுவன சில இடங்களில் உயர்வாகவே உள்ளன. இதனால் இவர் தம் அகத்தே சிருட்டி செய்து கொண்ட கற்பனையுலகத்தில், அகக்கண்ணால் கண்ட காட்சிகளைத் தம் கவியினால் எடுத்துக் காட்டுகின்றாரென்பதை நன்கு அறியலாகும். வேதகிரீசர் திருத்தேர் விழா, புறத்தே நடைபெறினும் அம்மூர்த்தியையும் அவ்விழாக் காட்சிகளையும் இவர் கண்ணாற் கண்டு இன்புறும் இயல்பு இலராயினர்; இதனால் இவருக்குக் குறையொன்றும் இல்லை. இவர் தாமே ஒரு திருத்தேர் விழாவை அகத்துள் சிருட்டித்து அங்கே தேரோட்டுவித்து வேதகிரீசரைத் தரிசித்து மகளிரையும் அவர் இன்பதுன்பங்களையும் புனைந்து கண்டு இன்புற்றதோடு நமக்கும் காட்டுகின்றார். புறத்தே நடைபெறும் வேதகிரீசர் திருவுலா ஒரு குறித்த காலத்தில் ஓரிடத்தில் கண்ணுடையார் கண்டு இன்புறுவது; இதுவோ எவ்விடத்திலும் எக்காலத்திலும் தமிழுடையார் அறிந்து இன்புறுவதாக அமைந்து விளங்குகின்றது.

உ

கணபதி துணை

திருக்கழுக்குன்றத்து உலா

காப்பு

(வண்டுவனப் பிள்ளையார்)

புவனிக் கொருமுதலாம் பொற்கழுக்குன் றீசர்
பவனித் திருவுலாப் பாட—க்கவிநடத்தும்
பண்டுவனத் தந்தாமப் பாம்பமளிப் பாம்புதொழும்
வண்டுவனத் தந்தா வளம்.

குறிப்புரை

காப்பு: கழுக்குன்று - கழுகு பூசித்த மலை; கழுகு குன்றென்பது கழுக்குன்றென மருவிற்று; கிருதயுகத்திற் சண்டன் பிரசண்டனென்பவரும், திரேதாயுகத்திற் சம்பாதி சடாயுவென்பவரும், துவாபரயுகத்திற் சம்புகுத்தன் மாகுத்தனென்பவரும், கலியுகத்திற் சம்பு ஆதியென்பவரும் கழுகு வடிவத்தோடு இத்தலத்திற் சிவபெருமானைப் பூசித்துப் பேறு பெற்றமையால் இம்மலை இப்பெயர் பெற்றது; இதனால் இது கங்காசலமென்றும் பெயர் பெறும்; கங்கம் - கழுகு (**திருக்கழுக்குன்றப் புராணம்**, கங்காசலச். பூடா விருத்தா கதை, 8, 9); இந்நூல் ௯-௧௦, ௧௧௧, ௨௦௫-ஆம் கண்ணிகளாலும் இதனை உணர்க. பவனி - உலாவருதல் (௧௨௧, ௧௧௭, ௨௮௬; **திருப்பூவண. உலா**, 454.) திருவுலா :- உலா என்னும் பிரபந்தம். கவி - செய்யுளை. வனத்து அம் தாமத்து - திருத்துழாயாலாகிய அழகிய மாலையையும்; வனம் - திருத்துழாய். பாம்பு அமளி - ஆதிசேடனாகிய படுக்கையையும் உடைய. பாம்பு - பாம்பு வடிவங்கொண்ட திருமால்; திருமால் பாம்பு வடிவமடைந்ததும், விநாயகரால் அது நீங்கப் பெற்றதும் **கந்த புராணம்**, அனந்தன் சாபநீங்கு படலத்தால் விளங்கும். வண்டுவனத் தந்தாவளம் - வண்டுவனப்பிள்ளையார்; இவர் இத்தல விநாயகர்; தந்தாவளம் - யானை. இவர் ஸ்ரீபக்தவத்ஸலப் பெருமானாலயத்தில் ஸோமாஸ்கந்த மூர்த்தியின் பின்னே கோயில் கொண்டு எழுந்தருளியுள்ளார். பிரமராரணிய விநாயகரென்பது வடமொழிப் பெயர்; இத்தலம் முன்பு காடாக இருந்த போது ஓரிடத்தில் தேனீக்கள் மிகுதியாக மொய்க்க, அவ்விடத்தைச் சோதித்

நூல்

(தலமகிமை)

சீர்பூத்த வேதங்க ளெல்லாந் திருமலையா
வர்பூத்த ஞாலத் திருத்திறேன் - போர்பூத்த
உ. கோடி யுருத்திரர்முன் பூசித்தோன் கோநந்தி
வாடி யிருமுறைபோய் வந்தித்தோன் - நீடும்

அப் பார்த்தபோது இவர் காணப்பட்டமையின் இப்பெயர் அமைந்ததென்பர்; "மாவேழம் படைத்தவண்டு வனவேழம் புரக்கவென்று வணக்கஞ் செய்வாம்" (திருக்கழுக்குன்றப். பாயிரம், 3.)

தந்தாவளம் கவியை நடத்தும் என இயைக்க.

நூல்

க - உஉ. இக்கண்ணிகளால் தலமகிமை கூறப்படும்.

க. வேதங்கள் மலைவடிவங்கொண்டு சிவபெருமானைத் தாங்கி நிற்றலின் திருக்கழுக்குன்று, வேதாசலம், வேதகிரியெனப் பெயர் பெற்றது (கOஎ, கக அ; வேதகிரிச். 22.) ஏர் - எழுச்சி.

உ. உலகத்தை வருத்திய அசுரர்களையெல்லாம் சிவபெருமானிடத்துத் தோன்றிய கோடியுருத்திரர்கள் கொன்று இங்கு வந்து பூசித்து அப்பாவத்தைப் போக்கிப் பேறு பெற்றனரென்பது உருத்திரகோடிச் சருக்கக்கதை. இதனால் இத்தலத்திற்கு உருத்திரகோடியென்றும், கிரிக்கு உருத்திர கோடி கிரியென்றும், இறைவனுக்கு உருத்திரகோடீசுவரனென்றும், தேவிக்கு உருத்திர கோடீசுவரியென்றும், தீர்த்தத்திற்கு உருத்திரகோடி தீர்த்தமென்றும் பெயர் உண்டாயின (௩Oஎ; வேதகிரிச். 10; உருத்திரகோடிச். 53.)

நந்தி இருமுறை பூசித்தது: (க) திருநந்திதேவர் சிவநிந்தை செய்த கருடனை வருத்த அதனையறிந்து அவனை விட்டுவிடென்ற சிவபெருமான் கட்டளையைக் கோபத்தால் மறுத்துப் பாவமுற்று அப்பாற் கோபந்தணிந்து அவர் இட்ட கட்டளைப்படி இங்கு வந்து தவஞ்செய்து அப்பாவத்தைப் போக்கிக் கொண்டனர் (௩Oக); இது காருடச் சருக்கத்தாலுணரப்படும்.

(உ) நந்திதேவர் கோலோகத்திற் காமபரவசராயிருந்து சிவபெருமானாற் கோபிக்கப்பெற்று இங்கே வந்து தவஞ்செய்து அப்பாவத்தைப் போக்கினர் (நந்திதவச். 63); இக்காரணங்களால் இத்தலம் நந்திபுரியென்றும், இம்மலை நந்திகிரியென்றும் பெயர் பெற்றன (ஷை. 62.) பூசித்தோன், வந்தித்தோனென்பன செயப்பாட்டு வினையாலணையும் பெயர்கள்; பின்வருவனவற்றையும் இப்படியே கொள்க.

௩. அசனித் துவசத்தோ னன்றொருத்தி பந்தால்
வசனித்த தீவினையை மாய்த்தோன் - உசனகுலத்
௪. தாதி முனிபன்னி யாவிக் கொலைதொலைய
ஆதி யரிவந் தருச்சித்தோன் - போதனுக்கும்
௫. சாவித் திரிபுரிந்து சாவித் திடப்பட்ட
ஆவித் துயர மறவறுத்தோன் - கோவித்துத்
௬. தெய்வப் பசுவசவோ ரெண்மர்தமை யுஞ்செவித்த
எவ்வக் கொடுமை யிடர்கெடுத்தோன் - வெவ்விய

---

௩. அசனித்துவசன் - இந்திரன்; அசனி - இடி; "இயலும் கொடியிடியேறும் - உயரியே, தேவா சனமுன் சிறந்துபல கண்ணுடி, ஓவா திமைத் திமையோ ரூர்வேந்தும்" (அஉ - ௩) என்பர் பின். வசனித்த - சொல்லிய. ஒரு வித்தியாதரனால் பந்தை யிழந்த தெய்வமங்கை ஒருத்தியின் வேண்டுகோளால், இந்திரன் அப்பந்தைத் தேடித் தருதற்குச் சென்று வெள்ளி மலையை அடைந்து உமாதேவியாரோடு வேறு வேடம் பூண்டு சூதாடுபவர்போல் எழுந்தருளியிருந்த சிவபெருமான் பக்கத்தில் அஃது இருக்கக்கண்டு, "திருடன் போல்வாய், இப்பந்தைக் கொடு" என்று சினந்து கேட்டு அவராற் சிறையில் வைப்பிக்கப்பட்டு, குருவின் வேண்டுகோளால் அச்சிறையினின்று நீங்கி இறைவன் கட்டளையால் இத்தலத்தை அடைந்து சிவபெருமானைப் பூசித்து அப்பாவம் ஒழிந்தனன்; இதனால் இத்தலம் இந்திரபுரியென்று பெயர் பெறும் (இக - எ; இந்திரச்.)

௩ - ௪. உசன குலத்து ஆதிமுனி - பிருகு முனிவர்; உசனவன் - சுக்கிரன். பன்னி = பத்தினி - மனைவி. தன்பால் அடைக்கலம் புகுந்த அசுரர்களைக் கொல்லாத வண்ணம் தடுத்த பிருகுமுனிவருடைய மனைவியைக் கொன்ற பாவமும் அம்முனிவர் இட்ட சாபமும் போதற்குத் திருமால் இங்கே வந்து பூசித்தனரென்பது நாராயணச் சருக்கக்கதை; இதனால் இத்தலம் நாராயணபுரி யெனப்படும் (இடு - ௬, க௩௦-௩௧, க௪உ - ௩, ௩௩அ - ௯.) போதனுக்கும் - பிரமனுக்கும்; உம்மை இறந்தது தழுவியது.

௫. தம்முடைய மனைவிகளுள் கலைமகளையே விரும்பி நடுவுநிலைமை குன்றிய பிரமதேவர் வேதாதிகாரத்தினின்றும் நீங்கும்படி சாவித்திரியாற் சபிக்கப்பட்டுத் துன்புற்றுத் திருமாலைச் சரணமடைந்து அவருடைய கட்டளையால் இங்கே வந்து வழிபட்டு எல்லாத் துன்பமும் ஒழிந்தாரென்பது சதுமுகச் சருக்கக்கதை. இதனால் இத்தலம் பிரமபுரியென்று பெயர் பெற்றது (க௩உ; ௩௩அ.) சாவித்திடல் - சபித்திடல்; நீட்டல் விகாரம். கோவித்து - கோபித்து.

௬. தெய்வப் பசு - காமதேனு; மேருமலையில் வசிட்ட முனிவரின் ஆச்சிரமத்தில் மேய்ந்துகொண்டிருந்த காமதேனுவின் பாலை அட்டவசுக்களில் எட்டாமவன் மனைவியான மாலினியென்பவள் விரும்பினள். அது தெரிந்த

எ. பன்னிரு ஞாயிறுந் திங்களோர் பன்னிரண்டிற்
பன்னிருபங் கோடும் படிகண்டோன் - முன்னாட்

அ. பனிக்கணம் போன்மதுரப் பாணினியங் காண
முனிக்கணந் தாழ்ந்த முதலோன் - தன்க்கு

அவன் அதனை வலிந்து பிடித்துக் கறக்கத் தொடங்கினன். அதனால் அப்பசு சினந்து அவனையும், அச்செயலைக் கண்டு விலக்காமல் நின்ற மற்றை யெழுவரையும் நூறு வருடம் காசிமயானத்தில் புலையர்களாய் இருக்கும்படி சபித்து அவ்விழிவு தீருவதற்கு வழியும் கூறியது. அவர்கள் அங்ஙனமே காசிமயானத்திற் குறித்த கால அளவு இருந்து அவ்விழிவு தீருதற்கு நாரத முனிவரால் அறிவுறுத்தப்பட்டு அவருடன் வந்து, இங்கே தவம் செய்து கொண்டிருந்த மார்க்கண்டேய முனிவரால் விதிகளைத் தெரிந்துகொண்டு இறைவனைப் பூசித்துப் பேறு பெற்றனர். இது காமதேனுச் சருக்கத்தாலும் வசுதேவச் சருக்கத்தாலும் அறியப்படும். இதனால் இத்தலம் வசுபுரி யெனப்படும். செவித்த - சபித்த; இச்சொல் மோனைபற்றித் திரிந்து நின்றது.

எ. வைகருத்தன் முதலிய சூரியர் பன்னிருவரும் தினங்களையுண்டாக்குவேம் யாம்யாமென்று தம்முட் பிணக்குற்றுப் பிரமதேவரை யடைந்து அவரால் சிவபெருமானுடைய திருவருட் குறிப்பை அறிந்து சித்திரை முதலிய மாதங்கள் பன்னிரண்டனுள் ஒவ்வொன்றில் ஒவ்வொருவராக முறையே உதிக்கும்படி அவராற் கட்டளையிடப்பெற்று அவ்வாறு உதிப்பாராய்ப் பின், மந்தேகர் முதலிய அசுரரால் தடையுண்டு, பிரமதேவரால் அனுப்பப்பட்டு இத்தலத்தையடைந்து அத்தடை தீர்தற்குரிய வழியைப் பெற்று ஒவ்வொரு மாதத்திற்கு ஒவ்வொருவராக உதிப்பாராயினர். இக்காரணம்பற்றி இத்தலம் தினகர புரியென்று பெயர் பெற்றது. பன்னிரண்டு சூரியர்களின் பெயர்களாவன : (1) வைகருத்தன் (2) விவசுவான் (3) மார்த்தாண்டன் (4) பாற்கரன் (5) இரவி (6) உலகப் பிரகாசன் (7) சாக்கி (8) சுவிக்கிரமன் (9) ஆதித்தன் (10) சூரன் (11) அஞ்சுமாலி (12) திவாகரன் என்பன. தினகரச். 19. (௩௫-அ, ௪௬-எ, ௬௩-௪, ௧௰௪-௫, ௩௪உ.) ஞாயிறு, திங்கள்பன்னிரண்டிற் பணியவென்பது ஒரு நயம்.

அ. பன் இக்கு அண் அம் போல் - சொல்லப்படுகின்ற கரும்பிற் பொருந்திய இரதநீரைப்போன்ற. பாணினியம் - பாணினி முனிவராற் செய்யப்பட்ட வியாகரண நூல். சிதம்பரத்துள்ள சிற்சபையிற் பாணினீயவியாகரணம் கேட்டற்கு முயன்ற முனிவர் சிலர் அங்கே சிவபெருமானால் உபதேசிக்கப் பெற்றும் தெளிவடையாமையால், இங்கே வந்து சிவானுக்கிரகத்தால் தெளிவாக உணர்ந்தார்களென்பது முனிகணச் சருக்கக்கதை. இதுபற்றி இத்தலம் முனிகணபுரியென்று பெயர் பெற்றது (௧அ அ-௯:) காண - அறிய.

௯. விருப்பின் மலைமகளை வேட்டொருகால் வேதப்
பொருப்பி னெடிதுகுடி புக்கோன் - கிருத்திரம்

௧௦. ஓரெட்டும் வந்தித் துகந்தோறு மோரிரண்டாய்
ஈரெட் டுபசாரத் தேத்திஞன் - பேரறிவு

௧௧. மன்னு மொருமுனி வன்சபித்த மாயீகன்
என்னு மொருமிருக வேனத்தைச் - சென்னிகுலம்

௧௨. தந்த சுரகுருத் தானை யுடன்வேட்டை
வந்த வனத்தெய்த வாளிபோய் - நந்தி

௧௩. சவித்த திலோத்தமை தானுன கோவை
அவித்த வினைய் தனைத்தும் - நவக்கொடியாய்

௧௪. நன்குன்ற மன்னுனை விட்டு நடுநடுங்கித்
தென்குன்ற மேற்செல்லச் செய்வித்தோன் - தன்காயம்

---

௯. உமாதேவியைச் சிவபெருமான் கைலையங்கிரியிலிருந்து சென்று இமயமலையில் மணந்தருளியதன்றி, ஒரு காலத்தில் இம்மலையிலிருந்தும் சென்று மணந்து மீண்டு வந்து இங்கே எழுந்தருளியிருந்தனர் (திருமணச். 1); இச் சரித்திரம் இத்தலத்து வடமொழிப் புராணத்தின் 21-ஆம் அத்தியாயத்திற் கூறப்பட்டுள்ளதென்பர். கிருத்திரம் - கழுகு.

௧௦. ஈரெட்டு உபசாரம் - பதினுறுவகை உபசாரம்; ஷோடஸோபசாரம். கழுகுகள் யுகந்தோறும் இரண்டிரண்டாய்ப் பூசித்ததைக் காப்பின் குறிப்பால் அறிக.

௧௧. முனிவன் - மார்க்கண்டேயர். திருக்கழுக்குன்றத்தைச் சார்ந்த காட்டில் இவர் தவஞ்செய்து கொண்டிருக்கையில் மாயீகனென்னும் அரக்கனொருவன் பன்றி வடிவங்கொண்டு ஆங்குள்ள விலங்குகளை வருத்தக் கண்டு அவன் வரலாற்றை யறிந்து, "நீ எப்பொழுதும் இவ்வடிவங்கொண்டே திரி" என்று இவர் சபித்தனர்; பின்பு அவன் வருந்திக் குறையிரப்ப, "வேட்டையாடுதற்கு வரும் சுரகுருவென்னும் சோழனுடைய அம்பால் இவ்வடிவம் தொலைந்து பழைய வடிவம் பெறுவாய்" என்று சாபவிடை செய்தனரென்பது மாயீகச் சருக்கக்கதை; (௧௯௨, ௩௦அ.) சென்னிகுலம் - சோழகுலம்.

௧௨. சுரகுரு - மகாபலி புரத்தி (மல்லையி)லிருந்து அரசாண்ட ஒரு சோழனென்று புராணம் கூறும். தானை - சேனை. வாளி - அம்பு.

௧௩. சவித்த - சபித்த. கோ - பசு. வினையது - வினை; அது: பகுதிப் பொருள் விகுதி. நவக்கொடியாய் - புதிய காக்கையாகி.

௧௨-௪. சிவபெருமானுடைய கட்டளையை மறுத்த பாவத்தை ஒழித்துக் கொள்ளுதற்கு இந்த மலைச்சாரலில் வந்து நந்திதேவர் தவஞ் செய்துகொண் டிருக்கையில் அதனை யழித்தற்குப் பசு வடிவங்கொண்டு வந்த திலோத்தமை,

கரு. போர்த்துடைய குட்டம் பொருகாய்க்கு மந்திரிக்கும்
தீர்த்துடைய சம்பாதி தீர்த்தத்தோன்-பேர்த்தடங்கா

கசு. தாழுமா கங்கைநதி யாதி நதியனைத்தும்
தாழுமீ ராறு தடாகத்தோன் - ஏழுலகும்

அவ்வடிவமாகவே இருக்கும்படி அவராற் சபிக்கப்பட்டு, "கலியுகத்தொடக்கத்தில் இங்கே வேட்டையாடுதற்கு வரும் சுரகுருவென்னும் சோழவரசன் எய்த அம்பால் இவ்வடிவம் நீங்கப்பெறுவாய்" என்று அவராற் சாபவிடையும் பெற்றாள் (கருக - ச, ககக ; நந்திதவச்.)

கக-ச. வனத்தில் மாயீகளுகிய பன்றியைச் சுரகுரு எய்த அம்பு போய்த் திலோத்தமையாகிய பசுவைக் கொல்ல அதனாலுண்டாகிய பாவமெல்லாம் காக்கைவடிவங்கொண்டு அவனை விட்டு நீங்கித் தெற்கேயுள்ள மலையிற் சென்று விழும்படி செய்வித்தோன்; காக்கை விழுந்தமலை காக்கைக்குன்றென்று இப்பொழுது வழங்கப்படுகின்றது (எச, ககஉ ; சுரகுருச். 9.) காயம் - உடம்பு.

கரு. சுரகுருவினுடன் வந்த வேடர்களுடைய நாயொன்று **சம்பாதி தீர்த்தத்தில்** முழுகிப் பொன்வடிவம் பெற்றதென்று தீர்த்தச் சருக்கம் முதற் செய்யுளாலும், அதைக்கண்டு வியந்த இரணியசேதாவென்னும் மந்திரியொருவன் அந்தத்தீர்த்தத்தில் நீராடித் தனக்கிருந்த குட்டநோய் நீங்கப்பெற்றானென்று ஷ சருக்கம் 2-ஆம் செய்யுள் முதலியவற்றாலும் தெரிகின்றது (௩0௧ - ௧0.) குட்டம் - வெண்குட்டம். மந்திரி - சுரகுருவின் மந்திரி. சம்பாதி தீர்த்தம் - சம்பு ஆதி என்னும் இரண்டு முனிவர் உண்டாக்கிய தீர்த்தம்.

கசு. ஈராறு தடாகங்கள் : (1) இந்திரதீர்த்தம் (2) சம்புதீர்த்தம் (3) உருத்திரகோடி தீர்த்தம் (4) வசிட்ட தீர்த்தம் (5) மெய்ஞ்ஞான தீர்த்தம் (6) அகத்திய தீர்த்தம் (7) மார்க்கண்ட தீர்த்தம் (8) கோசிக தீர்த்தம் (9) நந்தி தீர்த்தம் (10) வருண தீர்த்தம் (11) அகலிகை தீர்த்தம் (12) சம்பாதி தீர்த்தம் (௩கக); இவை இருக்கும் திசைகள்,

"திருமலைக்குக் கீழ்ப்புலத்தொன் றிந்திரமாப் பொய்கை
தென்கீழ்ச்சம் புருத்திரகோ டித்தடமென் றிரண்டாம்
அரிதுதென்பால் வயிட்டமொன்று நிருதியின்மெய்ஞ் ஞானம்
அகத்தியமார்க் கண்டமுடன் கோசிகநான் கமரும்
மருவுகுட பானந்தி வருணமிரண் டிலங்கும்
வடமேலை யகலிகையொன் றிக்கிரிவான் முகட்டில்
இருவரும்யாங் கண்டதொன் றுண் டெமதுபெய ரதுவாம்
இத்திறம்பன் னிருதீர்த்த மெவ்வினையுந் தொக்கும்"

(தீர்த்தச். 38)

என்னும் செய்யுளால் விளங்கும்.

௧௭. பண்ணிய வாறாறு பன்மா லயர்முதலாம்
புண்ணிய ரெண்ணிறந்தோர் பூசித்தோன் - பண்ணும்

௧௮. ஒருதருமங் கோடியா யோங்கித்தன் னாரும்
வருதரும் கோடியாய் வாய்த்தோன் - சுருதி

௧௯. உரைக்குவடு தன்னடுவே யொண்கயிலைத் தொல்லை
வரைக்குவடு மொன்றெடுத்து வைத்தோன் - தரைக்கதிக்

௨௦. சாற்றும் வடவனத்தி லாடித் தனதிளைப்பு
மாற்றுங் கதலி வனத்திறைவன் - கூற்றிலார்

௨௧. யாவ ரெனுக்குமத் தெய்தினு முய்தலாற்
றேவர் புறஞ்சூழ் சிவபுரத்தோன் - மேவும்

---

௧௭. ஆறாறு பன்மாலயர் - முப்பத்தாறு பிரமர்.

௧௮. தருமகோடி - இது திருக்கழுக்குன்றத்தின் பெயர் (தல விசிட்டச். 3.)

௧௮ - ௧௯. சுருதி உரைக்குவடு - வேதகிரி. குவடு - சிகரம்; சிவபெருமான் திருநந்திதேவரைக் கயிலையினின்றும் மூன்று சிகரங்களைப் பெயர்த்து வைக்கும் வண்ணம் கட்டளையிட, அவர் அங்ஙனமே மூன்றைப் பெயர்த்து ஸ்ரீ சைலத்திலும் ஸ்ரீ காளத்தியிலும் திருக்கழுக்குன்றத்திலும் வைத்தனரென்பது புராணவரலாறு; ஆதலால் இத்தலம் தென்கயிலை யென்றும் வழங்கும் (தல விசிட்டச். 4-5.)

௨௦. வடவனம் - திருவாலங்காடு. ஆடி - காளியோடு நடமாடி. கதலி வனம் - இத்தலத்தின் பெயர்; இத்தல விருட்சம் வாழை; திருவிழாவில் 5-ஆம் நாளன்று பகலில் வாழை விருட்சவாகனம் உண்டு. வாழை இப்போதும் இங்கே இருக்கின்றது; "தூய கதலிவன மீதெனத் தொல்லைநாட், போய பழமை புதுக்குவார்" (௧௧௯) என்பர் பின். ஆடலின் இளைப்பைக் கதலிவனம் குளிர்ச்சியாற் போக்கு மென்றபடி; "எம்மையன், தீதலைத் தகற்று மால வனத்தெதிர் சினத்த காளி, வாதலைத் தாடி யிந்த வரையின்வந் திளைப்பு மாய்த்தான்" (தல விசிட்டச். 6); "கழுகுதொழு வேத கிரிசிகரி வீறு கதிருலவு வாசல் நிறைவானோர் கடலொலிய தான மறைதமிழ்க ளோது கதலிவன மேவுபெருமாளே" (திருப்புகழ், 325.)

௨௧. சிவபுரம் - இத்தலத்தின் திருநாமம். சிவபுர நந்தவனமென்று ஒரு நந்தவனம் இங்கே மலைக்குத் தென்புறத்தே உண்டு. "இவையுமன்றிச் சிவபுரந்தென் கயிலை, ஒண்கதலி வனந்தரும கோடியுமென் றுரைக்கும்", "சிந்தருச் சடையான் வைகச் சிவபுர மெனவுஞ் செப்பும்" (தல விசிட்டச். 1, 3.)

௨௨. புரிக்குந் தனைமுன்னம் பூசித்தோர் நாமம்
கிரிக்குங் கிளரக் கிளர்ந்தோன் - திரைக்குழாம்

(பிற தலங்கள்)

௨௩. ஆடகத்தி யாகத்தென் னாரூரான் மேல்விளங்கும்
ஆடகத்தி யாகத்தென் னாரூரான் - சூடகியார்

௨௪. காம ரமளியிசை காசியா னீங்கவருள்
காம ரமளியிசை காசியான் - நேமிவாய்

௨௫. அஞ்சனமே கண்டவிடத் தம்பலத்தான் முத்திதரும்
அஞ்சனமே கண்டவிடத் தம்பலத்தான் - கஞ்சத்து

௨௬. வாசத் திருவால வாயினான் போற்றிசெயும்
வாசத் திருவால வாயினான் - வீசியகை

---

௨௨. புரிக்கும் - ஊருக்கும். பூசித்தோர் - கோடியுருத்திரர் முதலியோர்; ௨, உரையைப் பார்க்க (தல விசிட்டச். 1.)

௨௨-௩. திரைக்குழாம் ஆடு அகத்தி ஆகம் தென் ஆர் ஊர் ஆன்மேல் விளங்கும் - அலையின் கூட்டங்கள் ஆடுகின்ற பாற்கடலாகிய இடத்தையுடைய திருமகளை மார்பில் உடைய அழகு நிறைந்த (திருமாலாகிய) ஊர்ந்துவரும் இடபத்தின்மேல் விளங்கும்; தென் - அழகு. ஆடகத்தியாகத்தென் ஆரூரான் - ஆடகத் தியாகத்தையுடைய தெற்கிலுள்ள திருவாரூரை யுடையவர்; ஆடகம் - பொன். ஸ்ரீ தியாகராசப் பெருமான் அடிக்காயிரம் பொன் சொரிபவராதலின், 'ஆடகத்தியாகத் தென்னாரூரான்' என்றார்; "ஏரேறு செம்பொ னடிக்கா யிரநல்கி யெப்பொழுதும், தேரேறு கின்றவர்" (**ஆரூர்க்கோவை, 475.**)

௨௩-௪. சூடகியார் காமர் அமளி இசை காசு யான் நீங்க அருள் - வளைகளை யணிந்த மகளிரது அழகிய படுக்கையில் இசைதலாலுண்டாகிய குற்றத்தை யான் நீங்கும்படி அருள்புரிகின்ற. காமரம் அளி இசை காசியான் - காமரமென்னும் பண்ணை வண்டுகள் ஒலிக்கும் காசியென்னும் திருப்பதியை யுடையவர்; அமளி - படுக்கை; காசு - குற்றம்; அளி - வண்டு.

௨௪-௫. நேமிவாய் அம் சனம் கண்டவிடத்து அம் பலத்தான் - கடல் சூழ்ந்த பூமியிலுள்ள அழகிய சனங்கள் வந்து கண்டவிடத்துக் கொடுக்கும் அழகிய பலத்தை யுடையவன். முத்தி தரும் அஞ்சனம் ஏ கண்டவிடத்து அம்பலத்தான் - முத்தியைக் கொடுக்கும் மைபோலும் விடத்தைக் கண்டத்தில் வைத்தருளிய திருவம்பலத்தை யுடையவன். ஏய் என்பது ஏ என நின்றது; தொகுத்தல்.

௨௫ - ௬. கஞ்சத்து வாசம் திருவாலவாயினான் போற்றிசெயும் - தாமரை மலரில் தங்குதல் பொருந்திய திருமகளையும் வாலை வாயில் வைத்த பாம்புப்

உஎ. மாஞரத் தண்ணு மலேத்தலேயான் மால்யானே
மாஞரத் தண்ணு மலேத்தலேயான் - ஆஞத

உஅ. மாமயிற்கா ளத்தி வரையிடத்தான் மீதாடு
மாமயிற்கா ளத்தி வரையிடத்தான் - யாமத்து

உகூ. மாறு நிழற்காஞ்சி மாவிருப்பான் றங்கைதொழு
மாறு நிழற்காஞ்சி மாவிருப்பான் - சீறி

படுக்கையையும் உடைய திருமால் துதிக்கும்; வாசம் திருவாலவாயிஞன்- சிறந்த மணம் பொருந்திய திருவாலவாயென்னும் திருப்பதியை யுடையவர்; வாலவாய் - பாம்பு; "வாலினேச் சுந்த ரேசன் வலத்திரு மருங்கு வைத்துக், கோலமா ருடலே நீள நிமிர்த்தெல்லே குன்று வாறு, சாலமுன் வலம தாகத் தன்னுடைச் செலவி ஞற்சூழ்ந், தாலவாய் வைத்துக் காட்டிற் றிடத்திரு மருங்கி ஞங்கு", "அந்தத் திருப்பதிக் கெல்லே நாமம், மாசற வன்று முன்ஞ வாலவா யெனவ ழங்க, ஆசற வாயை முன்னிட் டாலவா யெனவுஞ் சொன்ஞர்" (திருவால. சஎ: 10-11.)

உசா ¹- எ. வீசிய கை மான் ஆர தண் ஆம் அலே தலேயான் - வீசிய கையில் மான் விளங்கக் குளிர்ந்ததான கங்கையை அணிந்த தலேயையுடையவர். மால் யானே மான் ஆர் அத்து அண்ணுமலேத் தலேயான் - பெரிய யானேயும் மான் களும் நிறைந்த சிவந்த நிறம் பெற்ற அண்ணுமலேயின் உச்சியார்; அத்து - செந்நிறம்.

உஎ - அ. ஆஞத மாமயின் காளத்தி வரை இடத்தான் - நீங்காத பேரழ கினேயுடைய கரிய நிறம் பொருந்திய உமாதேவியாரை வரைந்த இடப் பாகத்தை யுடையவர்; மாமயின் = மாமையின்; போலி; மாமை - பேரழகு. வரைதல் - தனக்கென வரையறுத்து உரிமையாக்கிக் கோடல். மா மயில் மீது ஆடும் காளத்தி வரையிடத்தான் - பெருமை பொருந்திய மயில் மேலே ஆடப்பெற்ற திருக்காளத்திமலேயை இடமாக உடையவர்.

உஅ - கூ. யாமத்து மாறும் நிழல் காஞ்சி மா விருப்பான் தங்கை தொழும் - இரவுக்குப் பகையாகிய ஒளியையுடைய காஞ்சியென்னும் ஆபரணத்தை அணிந்த திருமகளிடத்து மிக்க விருப்பத்தையுடைய திருமாலின் தங்கை யாகிய உமாதேவியார் வழிபட்ட; மா - திருமகள். நிழல் மாறு காஞ்சி மா இருப்பான் நிழல் சாயாத காஞ்சிச் சோலேயிலுள்ள மா விருட்சத்தின் கீழே எழுந்தருளி யிருத்தலேயுடையவர். யாமத்தும் நிழல் மாறு - இரவிலும் ஒளி மாருத எனினுமாம்; நிழல் - ஒளி.

(பிற சிறப்புக்கள்)

௩0. உலகை முழுது முழுத துவசன்
அலகை யனிக னனகன் - இலகமலன்

௩௧. மூதகி லாதியின் மூல பராபரன்
வேத குலாசல வேதியன் - ஆதி

௩௨. ஒருத்தன் விருத்த னுருத்திர னத்தன்
நிருத்த னாத்த நிறத்தன் - விரத்த

௩௩. ஒழுக்கில் வயக்கி லுரத்தில் வரத்தில்
வழுக்கில் கழுக்குன்ற வாணன் - கழற்கமலம்

(திருவிழா)

௩௪. சூடிச் சுரநாடுந் துண்டீர நாடுஞ்சூழ்
ஆடித் திருநாளி லாங்கொருநாள் - ஓடி

௩௫. அலவ னியங்கு மருக்கன் கணிச்சி
வலவன் விழாத்தன் மதிநாள் - உலவுதலைப்

---

௩0. திருமாலாகிய விடைக் கொடியினர்; 'உலகை முழுதும் உழுத' என்றது வராகாவதாரத்தைச் சுட்டிக் கூறியது. அலகை - பூதம். அனிகம் - சேனை. இலகு அமலன்.

௩௧. முது அகில ஆதியின் - பழமையாகிய உலகமுதலியவற்றின்.

௩௨ - ௩. நிருத்தன் - தாண்டவத்தையுடையவர். அரத்த நிறத்தன் - செந்நிறத்தை யுடையவர். விரத்த ஒழுக்கு - துறவொழுக்கம்; விரத்தம் - விரக்தம். வயக்கில் - விளக்கத்தில். உரம் - வன்மை. வழுக்கு - குற்றம்.

௩௪. துண்டீர நாடு - தொண்டை நாடு; துண்டீர னென்னும் அரசனால் ஆளப்பட்டமையின் தொண்டை நாடு துண்டீர நாடென்றும் பெயர் பெறும்; "முக்கணன் கணநா தர்க்குண் முதன்மைத்துண் டீர னுண்டு, மிக்கதுண் டீர நாடாய்" (நாட்டுச். 2.) ஆடித்திருவிழா இத்தலத்திற் பண்டைக்காலத்தில் நடைபெற்று வந்ததென்று தெரிகின்றது; "தரிசித்தார்க், காடியிற் காட்டும் விழவிற் கணிகோலம், ஆடியிற் காட்டி யருளியபின்", "நினைத்தி ராடக்கால், சென்றுதவி யாகச் செலுத்தாயே" (சு௫, ௩௫௨.)

௩௫. அலவன் இயங்கும் அருக்கன் - கடகராசியைத் தன் பங்காகக் கொண்டு அதிற் செல்லும் சூரியன். கணிச்சிவலவ்வன் - சிவபெருமான்; கணிச்சி - மழுவாயுதம். விழா தன் மதி நாள் - விழாவில் தனது மாதமாகிய ஆடியில் உள்ள நாட்களில்,

௩௬. பெற்றன ழுய்ந்தனம் பேறு திருவரினும்
உற்றன மென்றுங் குதிசெய்ய - மற்றதற்பின்

(திருமஞ்சனம் முதலியன)

௩௭. கும்பத்து வெய்யோனுங் கும்பத் துடனடைந்து
நம்பர்க்கு நீராட்டு நன்கென்னச் - செம்பொன்

௩௮. மணியி னிரைநிரைத்த வாசத் தசும்பின்
அணியி னபிடேக மாடித் - துணைவியிரு

௩௯. வெங்கை வளைக்குறிபோல் வேறுமுள தோவென்று
கங்கை தவழ்ந்தறியுங் காட்சியும் - தங்கள்

௪0. குறையாற் பெருவிருப்பங் கொண்டிரண்டு கங்கம்
சிறையாற் றழீஇய திறனும் - நிறைகடந்த

௪௧. மாயத் தொருதூண் வயிற்றிற் பிறந்தநர
சீயத் துரிபோர்த்த செவ்வியும் - மேயத்

௪௨. தியங்கு முகின்மேருச் சேருவது மேய்ப்பத்
தயங்குதிரு வொற்றுடை சாத்திப் - பயன்கோடி

௩௬. ஆறு இருவரினும் பேறு உற்றனம் - பன்னிரண்டு சூரியர்களுக்குள்ளும் யாமே பேறு பெற்றேம்.

௩௫-௬. வலவன் உலவுதலைப் பெற்றனமென்று அருக்கன் உதிசெய்ய என இயைக்க.

௩௭-௮. கும்பத்து வெய்யோன் - கும்பராசியைத் தன் பங்காகப் பெற்ற சூரியன். நீராட்டும் - திருமஞ்சனம் செய்வான்; நன்கு நீராட்டுமென்ன மாற்றிப் பொருள் கொள்க. தசும்பு - குடம். தசும்பிற் பதிக்கப்பட்டுள்ள மாணிக்கங்களின் தொகுதிக்குச் சூரியன் உவமை.

௩௯. வெகை - விருப்பமுள்ள கை; வெம்மை - விருப்பம். வளைக்குறி - காஞ்சிபுரத்தில் உமாதேவியார் தழுவியதால் உண்டான வளைத்தழும்பு. (பி-ம்.) வேறு முளதென்று.

௪0. கங்கம் - கழுகு.

௪௧. மாயத்து - மாயத்தால். நரசீயத்து உரி - நரசிங்கத்தின் தோல். சிவபெருமான் சிங்கத்தோலை அணிந்திருத்தல்; "சிங்கத் துரிமூடுதிர்" (**தே. சுந்தர.**); "ஒழித்தசிங்க வுரிபுயத்தி னுத்தரீயமாகவே" (**திருவண்ணாமலைப் புராணம்**, திருவவதாரச். 6.) மேய - மேய்வதற்கு.

௪௨. தியங்கும் முகில் - கலங்குகின்ற வெள்ளை மேகம். ஏய்ப்ப - ஒப்ப. திருவொற்றுடை - ஈரம் புலர ஒற்றும் ஆடை.

சங. தேறுஞ் சிவவேத தேசிகராற் காரணத்துக்
கூறுந் திறம்பூசை கொண்டதற்பின் - சீறுமதன்

(திருவாபரணம் புனைதல்)

சச. விண்ணிற் குடையும் விடுதேரு முண்டுறுதற்
கண்ணிற் குதவுதிருக் காப்பணிந்து - புண்ணியற்கு

சரு. முன்னுடைய வாடை முடைநீக்க வேநான்கு
பொன்னுடைய வாடை புடைவீக்கி - என்னுடையான்

சசு. தன்னான் மறையின் சயிலத் தலைகூடும்
மூந்நால் வரும்போன் முடிசூடி - அந்நாள்

சஎ. மகரத் தொருபங்காய் வைகுகதிர் மான
மகரக் குழைதயங்க வைத்து - முகின்மருங்கு

சஅ. முத்துமிழு மாறுபோன் முத்த வடஞ்சுடரின்
கொத்துமிழு மாமிடறு கோத்தணிந்து - துத்தி

நக - சஉ. வெண்மையான திருவொற்றுடைக்குக் கங்கையும், கழுகின் சிறகுகளும், நரசிங்கத்தின் தோலும், வெள்ளை மேகமும் உவமைகள்.

சங. சிவவேத தேசிகர் - ஆதிசைவர். காரணத்து - காரணாகமத்தில்; இப்போது இத்தலத்திற் பூசை முதலியன காமிகாகம விதிப்படி நடைபெறுவதாகத் தெரிகின்றது.

சச. குடை - சந்திரன். தேர் - தென்றல். காப்பு - பாம்பாகிய ரக்ஷை (கநச.) கண்ணிற்கு உதவு - மன்மதனை மட்டும் எரித்த கண்ணிற்கு இவற்றை உண்டு உதவிபுரிகின்ற; நெற்றிக் கண்ணால் மன்மதன்மட்டும் எரிக்கப்பட்டானென்பது, " சமனடுங்கிட வுதைந்தவர் வெகுண்டு சுடவே, களங்கமற வெந்தது நமன்சடல மென்றனர் கரும்புகை யொழிந்ததலவே " (**அழகர்கலம். 94**) என்பதனாலும் விளங்கும்.

சரு. முன் உடைய ஆடை - புலித்தோல். முடை - நாற்றம். நால்வகைப் பொன் - சாம்பூநதம், சாதரூபம், ஆடகம், கிளிச்சிறை யென்பன.

(**பி - ம்.**) முகநான்கும் விற்பதொரு.

சசு. நான்மறையின் சயிலத்தலை - வேதகிரியில். மூந்நால்வர் - பன்னிரண்டு சூரியர்கள். கிரீடத்திற்குச் சூரியன் உவமை.

சஎ. மகரத்து ஒரு பங்காய் வைகு கதிர் - மகரராசியைத் தன்னுடைய ஒரு பங்காகக் கொண்டு தங்கியிருக்கும் சூரியனை. முகில் முத்துப்பிறக்கும் இடங்களுள் ஒன்று; எழுவாய்.

(**பி - ம்.**) தாழ வைத்து.

சஅ. மாமிடறு - கரிய கழுத்து, மிடற்றுக்கு மேகம் உவமை. துத்தி படப்பொறி.

௪௯. உரகனகஞ் சூழ்ந்தென்ன வொண்புயமா ணிக்கச்
சுரகனக கேயூரஞ் சூழ்ந்து - திருமார்பிற்

௫0. கோடு மிழுமுத்தக் கண்டிகை கோலமருப்
பாடு மழகி னழகார்த்தி - வீடச்

௫௧. சலந்தரனைக் கொய்திகிரி தன்கையிற்கோத் தென்னப்
பொலந்தரு செங்கடகம் பூட்டிக் - கலந்து

௫௨. புகழுஞ் சுரர்க்கு நரர்க்குமிருள் போகத்
திகழுந் தரளத் திரளால் - மகவாம்

௫௩. பகட்டுதரஞ் சூழ்சங்க பாலனைப் போல
அகட்டுதர பந்தன மார்த்துப் - பகட்டுடலம்

௫௪. தேய்ப்பச் சசியைச் சினநமனைக் காலுதையின்
வீய்ப்பக் குருதி விரிந்தென்னச் - சேப்பின்

௫௫. ஒழுங்கழலுஞ் சோதி யுதிபதும ராகச்
செழுங்கழலும் பொற்சிலம்புஞ் சேர்த்தித் - தொழுங்கண்ணன்

௫௬. போற்றக் குலிசனிவர் போந்தொளி பாய்ந்தமையே
சாற்றத் திருச்சாந்து தான்சாத்திப் - போற்றலனுய்ச்

---

௪௯. உரகன் நகத்தைச் சூழ்ந்தென்ன; உரகன் - ஆதிசேடன்; நகம் - மேருமலை. தோள்வளைக்கு ஆதிசேடன் உவமை.

௫0. கோடு - சங்கம். கோலமருப்பு - பன்றிக்கொம்பு. பன்றியின் கொம்பு திருமார்பிலுள்ளது. அழகின் - அழகைப்போல.

(பி - ம்.) அழகாற்றி.

௫௧. திகிரி - சக்கரம். கடகத்துக்குச் சக்கரம் உவமை.

௫௨-௩. மகவாம் பகடு - விநாயகக்கடவுள். பகட்டின் உதரத்தை. சங்க பாலனென்னும் பாம்பு விநாயகருடைய உதரபந்தனமாக உள்ளதென்பது நூற்றுணிபு (கந்த. காப்பு. 1.) அகடு - வயிறு.

௫௩-௪. சசியைப் பகட்டுடலம் தேய்ப்ப; சசி - சந்திரன். சேப்பு - செம்மை (ஆப்பனூர்ப் புராணம், பாயிரம், 3.) குருதி பதுமராகச் சோதிக்கு உவமை.

௫௫. சோதி உதிக்கின்ற பதுமராகம் பதித்த கழல். கண்ணன் - திருமால்.

௫௬. போற்று அக் குலிசன். இந்திரன் நிறம் கறுப்பு. திருச்சாந்து - கிருஷ்ண கந்தம்; கருஞ்சாந்து. போற்றலனுய் - பகைவனுகி.

௫௫-௬. திருச்சாந்தின் கரியநிறத்திற்குத் திருமால், இந்திரன் இவ்விருவரது நிறம் உவமை. இவ்விருவரும் இத்தலத்தில் சிவபெருமானைப் பூசித்தவர்கள்.

ருஎ. சென்ற மகவான் சிறைதுறப்பச் சேவித்து
நின்ற குருவி னிழலெறிப்போ - அன்றவுணர்

ருஅ. ஊருக் கெனவாங்கி யோங்கியநா ளாகத்து
மேருக் கிரிதிரிந்த விம்பமோ - பூரிச்

ருகூ. செருக்குந் திருமேனித் திக்கணிந்த பொற்பூண்
உருக்கி னொழுகு மொழுக்கோ - பெருக்க

கூ0. இமையா டகந்தன்னு லீன்றாள் பதியென்
றமையா தணைத்த வணைப்போ - நமையாண்டு

கூக. நல்கு மலைச்சொக்க நாயகியார் சொர்க்கத்து
மல்கு மரிசனத்து வண்ணமோ - பல்கால்

கூஉ. அறிய வரிதரிதென் றண்டருங்கண் டேத்த
நறியவித ழித்தாம நாற்றிச் - செறியத்

கூங. திருவா சிகைவகுத்துச் சேண்முகடு முட்டப்
பெருவாசக் குய்தவழப் பெய்து - பருதி

கூச. தெரிசித்து மேனி தியானித்த வாறே
புரிசித்த மீதுவந்தாற் போலத் - தரிசித்தார்க்

ருஎ. மகவான் - இந்திரன். குரு - வியாழபகவான். சிவபெருமானாற் சிறையில் வைக்கப்பட்ட இந்திரனைப் பிருகஸ்பதி சிவபெருமானைத் துதித்து மீட்டனரென்பது இந்திரச்சருக்கக் கதை.

ருஅ. ஊருக்கு - திரிபுரங்களை எரித்தற்கு. வாங்கி - வளைத்து. ஆகத்து - மார்பிடத்தில். விம்பம் - நிழல்.

(பி - ம்.) கிரிதெரிந்த.

கூ0. ஆடக இமையம் - பொன்மயமான இமயமலை. தன்னால் ஈன்றாள் - உமாதேவியார்; தன்னென்றது இமயமலையை.

(பி - ம்.) ஈந்த குலமென்.

கூக. நல்கும் - தண்ணளி செய்யும். மலைச்சொக்கநாயகி - தேவியின் திருநாமம் (கூக); "திருமலைச் சொக்கி பாகன்" (தலவிசேடச். 22.) சொர்க்கம் - நகில். அரிசனம் - மஞ்சள்.

கூஉ. இதழித் தாமம் - கொன்றைமாலையை.

கூங. குய் - நறும்புகை. பருதி - சூரியன்.

கூச. சூரியன் இத்தலத்திற் பூசித்துப் பேறுபெற்றவன். புரி சித்தமீது - விரும்பிய அவன் மனத்தின்கண்.

கூரு. காடியிற் காட்டும் விழவிற் கணிகோலம்
ஆடியிற் காட்டி யருளியபின் - பாடி

கூசு. இமிழுஞ் சுருதியு மெங்குரவர் நால்வர்
தமிழுஞ் திருச்செவி சார்த்தி - அமுதத்

(உடன்வருவோர்)

கூஎ. தலையூ ணிமையவர் தம்மைநம்மை யாண்ட
சிலையூ ணருந்தவத்தோன் சேயும் - தலைவர்க்குச்

கூஅ. சிந்தையைச் செல்வித்தோர் தீங்குநன் கென்றுணரத்
தந்தையைக் காய்ந்த தனயனும் - முந்தைநாள்

கூகூ. அப்புத் தழலரவ மங்கம் பனைகதவு
வெப்புத் தமிழறிய விட்டோனும் - அப்பகைஞர்

எ0. வேழம் புயங்க விடமடு நீறுழி
ஆழந் தனக்கன்பா மன்போனும் - தோழமையாய்க்

கூரு. ஆடி - ஒரு மாதம், கண்ணாடி. ஆடி விழா: ஙச, ஙருஉ.

கூசு. சுருதி - வேதம். குரவர் நால்வர் - சைவசமயாசாரியர் நால்வர். தமிழ் - தேவாரமும் திருவாசகமும்.

கூஎ. தலையூண் - முதன்மையாகிய உணவு. சிலையூண் அருந்தவத்தோன் - சிலாதமுனிவர்; இவர் கற்களையே உணவாகக் கொண்டிருந்தவர். சேய் - திருநந்தி தேவர்.

கூஅ. தீங்கும் நன்கு - தீமையும் நன்மையாம். தனயன் - சண்டேச நாயனர்.

கூகூ. அப்பு - வையையாற்று நீர். தழல் - நெருப்பு. அரவம் - பாம்பின் விடம்; ஆகுபெயர். அங்கம் - எலும்பு. பனை - பனைமரங்கள். கதவு - அப்பரால் திறக்கப்பட்ட கதவு. வெப்பு - சுரநோய். வையையாற்றுநீரில் இட்ட திருப்பாசுரம் எதிரேறச் செய்தமையால் அப்புவும், திருப்பதிகத்தை நெருப்பிலிடவும் அழியாமையால் தழலும், திருமருகலில் வணிகனைத் தீண்டிய பாம்பின் விடத்தைத் தீர்த்தமையால் அரவமும், மயிலாப்பூரில் எலும்பைப் பெண்ணாக்கினமையால் அங்கமும், திருவோத்தூரில் ஆண்பனையைப் பெண்பனையாக்கினமையால் பனையும், வேதாரணியத்தில் கதவைச் சாத்திக்கொள்ளும்படி பாடினமையால் கதவும், கூன்பாண்டியனுக்கு வந்த சுரநோயைத் திருநீற்றுப் பதிகத்தாற் போக்கினமையால் வெப்பும் தமிழறிந்தன. தமிழ் அறியவிட்டோன் - திருஞானசம்பந்தமூர்த்தி நாயனர். பகைஞர் - சமணர்.

எ0. வேழம் - கொல்லும்பொருட்டுச் சமணர் அனுப்பிய யானை. புயங்க விடம் - உணவோடு கலந்த பாம்பின் விடம். அடு நீறு - இட்ட சுண்ணாம்புக்

எக. காவிரி முத்தநதி பூத கணங்கரவு
கோவிரு காலேவல் கொண்டோனும் - தேவர்கோன்

எஉ. காலு நரிப்பரி மீதேற்றிக் கங்கைமுடி
மேலும் புவியேற்று மேலோனும் - நூலிமைக்கும்

எ௩. ஆகத் திருநாவ லூரனயி ராபதத்துப்
போகப் புரவியிற்போம் பூழியனும் - வேகத்தாற்

எச. காதிய் கோவ்தமோர் காக மெனப்போகச்
சோதியை வந்தித்த சோழனும் - காதல்

காளவாய். ஆழி ஆழம் - சமணர் கல்லோடு கட்டியிட்ட கடலின் ஆழம். வேழம் முதலியவை தனக்கு அன்பாகப் பெற்ருனென்றது, திருநாவுக்கரசு நாயனரை. தோழமையாய் - நட்பாகி.

எக. முத்தநதி - மணிமுத்த நதி. கரவு - முதலை. கோ இருகால் - சிவ பெருமானுடைய இரண்டு திருவடிகள். வழிவிலகச் செய்தமையால் திருவை யாற்றிற் காவிரியையும், விருத்தாசலத்தில் சிவபெருமான் அருளிய பொன்னை யிட்டமையால் மணிமுத்தநதியையும், குண்டையூர்கிழார் அளித்த நெல்லைத் திருவாரூருக்குக் கொண்டுவந்ததனுல் பூதகணங்களையும், அவிநாசியில் விழுங்கிய பிள்ளையை உமிழச்செய்தமையால் முதலையையும், பரவைநாச்சி யாரின் ஊடலைத் தீர்க்கும்பொருட்டுச் சிவபெருமானை இருமுறை தூதாக ஏவினமையால் அவருடைய இரண்டு திருவடிகளையும் ஏவல்கொண்டார்; ஏவல்கொண்டோன் - சுந்தரமூர்த்திநாயனர்.

எக-உ. தேவர்கோன் கால் - சிவபெருமான் திருவடிகளை. நரிப்பரி மீதேற்றி: "ஏற்றினை நரிப்பரிமீ தேற்றி னானை" (பாயிரம், 9.) புவி - மண்ணை. மேலோன் - திருவாதவூரடிகள். நூல் - பூணூல்.

எ௩. ஆகம் - மார்பு. திருநாவலூரன் - சுந்தரமூர்த்திநாயனர். அயிராபதம் - வெள்ளை யானை. போக - கயிலைக்குச் செல்ல. பூழியன் - சேரமான்பெருமா ளுயனர்; இப்பெயர் பாண்டியர்களுக்குப் பெயராக வழங்குகின் றது; சேரர்க்கும் முன்பு வழங்கிவந்ததென்பது பின்வரும் ஆதாரங்களால் தெரிகின்றது; "மிதியற் செருப்பிற் பூழியர் கோவே", "பூழியர் மெய்ம்மறை", "பூழியர் கோவே பொலந்தேர்ப் பொறைய", "எழாஅத் துணைத்தோட் பூழியர் மெய்ம்மறை" (பதிற். உக, எ௩, அச, கூ0.)

எச. காதிய - கொன்றதனுலுண்டான. கோவதம் - கோஹத்தி. சோழன் - சாருருவென்பவன்; கக - ச - ஆம் கண்ணிகளையும் அவற்றின் குறிப்பையும் பார்க்க.

எரு. முதுகுலத் தேவியை முன்மருதர்க் கீந்த
விதுகுலப் பாண்டியர் வேந்தும் - முதலாக

எசு. மெய்க்குந் திருத்தொண்ட வெள்ளமுஞ் செய்வினைக்கு
வைக்குந் திருத்தொண்ட வாரியும் - இக்கின்றஞ்சும்

எஎ. தானச் சுருதி குலத்தவருஞ் சைவத்து
ஞானத் தவவேட நாயகரும் - ஏனைப்

எஅ. பரிகரத் தெண்டிரையு மண்டமெல்லாம் புக்காழ்த்
தரிகரப் பூதோ ததியும் - பரியாளம்

எகூ. இன்னம் பிறவுஞ்சூழ்ந் தெங்குந் துதிமுழக்கப்
பொன்னந் திருக்கோ புரநீங்கி - மின்மதடம்

எரு. மருதர்க்கு - இடைமருதவாணர்க்கு. விதுகுலம் - சந்திரகுலம். வேந்து - வரகுணபாண்டியர்; "விரும்பின கொடுக்கை பரம்பரற் கென்று, புரிகுழற் றேவியைப் பரிவுடன் கொடுத்த, பெரிய வன்பின் வரகுண தேவரும்" (**திருவிடை. மும்மணிக். 28**); "அளக பாரமு மதிதன பாரமுந் தோய்ந்த, களப வண்டலுங் கண்ணிணைக் கெண்டையுங் கண்டே, இளகு நெஞ்சமோ டெம்பிராற் கிவட்கு மென்னைப், புளகி தஞ்செய்து மனைவியைக் கொடுபுறப் பட்டான்", "கோயி லிற்புகுந் திடைமரு தாவெனக் கூவ, வாயி லைத்திறந் திறைவனும் வரகுண வென்னத், தாயி லுந்நல சங்கரா வுனக்கிவ டகுமேல், ஆயி னுய்குவ னல்லதுய் யேனென வறைந்தான்" (**பழைய திருவிடைமருதூர்ப்புராணம்.**)

எசு. செய்வினைக்கு - திருக்கோயிலின் அகம்படித் தொண்டுக்கு. தொண்டவாரி - தொண்டர்களாகிய கடல்.

எஎ. தானம் - உதாத்தம் முதலிய ஸ்வரஸ்தானம். சுருதிகுலத்தவர் - வேதியர். சுருதி குலத்தைவரெனவும் பாடம்; அதற்கு, கௌசிகர், காசிபர், பரத்துவாசர், கௌதமர், அகஸ்தியர் ஆகிய ஐந்து முனிவருடைய கோத்திரங்களிற் பிறந்த ஆதிசைவர்களென்று கொள்க. சைவத்துத் தவவேட நாயகர் - சைவமுனிவர்; "வேதகிரி மூதூர் வைகுஞ் சிந்தைநான்மறைச் சைவத் திறநெறி நின்றோர்" (பாயிரம், 10.)

(**பி - ம்.**) சுருதிகுலச் சைவருஞ்.

எஅ. பரிகரம் - பணிவிடைசெய்வோர் தொகுதி. தரிகரம் - தாங்குகின்ற கைகளையுடைய. பூதோததி = பூத உததி - பூதங்களாகிய கடல். பரியாளம் - பரிவாரம்; "ஆயி ணர்பரி யாள மடைந்ததே" (**சீவக. 949.**)

எகூ. (**பி - ம்.**) எங்கும் புடைநெருங்கப்.

எகூ-அஎ. **'மீன்மதடம்' என்பது முதல் திருத்தேருக்கும் திருமால், பிரமன், இந்திரன் என்பவர்க்கும் முறையே சிலேடை.**

(திருத்தேரும் அதில் எழுந்தருளுதலும்)

அ0. தூக்க மணியரவஞ் சூழாழி யச்சங்கம்
ஆக்க வடமடுத்தோ ரச்சுதனும் - மாக்கமலம்

அக. பூதப்பா ரேபடைத்தும் போர்ச்சா ரதிசார்ந்தும்
வேதப்பா ராட்டு விரிஞ்சனும் - சீதப்

அஉ. புயலுஞ் சசியும் புணர்ந்தம் பரத்தின்
இயலுங் கொடியிடி யேறும் - உயரியே

அ௩. தேவா சனமுன் சிறந்துபல கண்ணுடி
ஓவா திமைத்திமையோ ரேர்வேந்தும் - தேவாய்

அச. மூதிருந் தமதுருவ மூன்று மொருமித்
தெதிரு மொருதிருத்தே ரேறி - மதியைத்தன்

(குடை முதலியன)

அரு. மேலிற் புயங்கம் விசும்பிடைப்போய்த் தாயென்னக்
காலிற் கவிகை கவித்தோங்கச் - சாலத்தன்

அ0. தூக்கம் - தொங்கக் கட்டிய சல்லி முதலியவை, நித்திரை. மணியரவம் - மணிகளின் ஒலி, மாணிக்கத்தையுடைய பாம்பு. சூழாழி அச்சங்கம் - சுற்றுகின்ற உருளைகளும், அச்சாகிய அங்கமும்; சூழ்ந்த சக்கரமும் அழகிய பாஞ்சசன்னியமும்; அ - அழகு; "அப்பாஞ்ச சன்னியமும் பல்லாண்டே" என்றார் **பெரியாழ்வாரும்**. ஆக்கவடம் - உண்டாக்குதலையுடைய கயிறுகள்; ஆக்கத்தையுடைய ஆலிலை; வடம் - ஆகுபெயர்.

அ0-அக. மாக்கமலமும் பூதப்பாரும் தேர் உறுப்புக்கள்; பெரிய கமலத்தையும் பூதமாகிய பூமியையும். சாரதி சார்ந்தும் - சாரதியைச் சார்ந்தும், சாரதியாகச் சார்ந்தும். விரிஞ்சன் - பிரமதேவன்.

அஉ-௩. புயல் - மேகம். சசி - சந்திரன், இந்திராணி. கொடி இடியேறு - கொடிகளும் இடிக்கின்ற இடபமும், கொடியாகிய இடியேறு; இந்திரனுக்கு இடிக்கொடி உரியது; "அசனித்துவசத்தோன்" (௩) என்றார் முன்னும். தேவாசனம் - அவி, தேவருக்குரிய ஆசனம்; தேர்த்தட்டின்மீதுள்ள மூன்று ஆசனங்களுள் இடையிலுள்ளது இது. தேவ அசனமென்றும், தேவ ஆசனமென்றும் பிரித்துப் பொருள் கொள்க. பல கண்ணுடி ஓவாது இமைத்து - பல கண்ணாடிகள் ஒழியாமல் ஒளி வீசப்பெற்று, பல விழிகள் நாடி ஒழியாமல் இமைக்கப்பெற்று. வேந்து மென்பதன் பின் ஆகிய என ஒரு சொல் வருவிக்க.

(பி - ம்.) சிறந்த நிலைக்கண்ணாடி.

அச-ரு. குடைக்குப் பூர்ணசந்திரனும், அதன் காம்பிற்குப் பாம்பும் உவமைகள். புயங்கம் - பாம்பு. தாயென்ன - தாவியதுபோல. கால் - காம்பு. கவிகை - குடை.

௮௬. மேனியைத் தீயென்னும் வேட்கையு மேனியரா
ஆனியைச் செய்யுமென மச்சமும் - தானினையாப்

௮௭. பண்ணிய சாமரைக்கால் பட்டால வட்டக்கால்
அண்ணியு நீங்கியு மாங்குழலப் - பண்ணவர்க்கா

௮௮. ஊற்றுக் கடல்கடைந்தோன் றூனென்ப தூண்மையா
ஏற்றுப் படாகை ரவிமூடத் - தோற்றமாம்

௮௯. கோழியான் றோகையுங் குஞ்சரத்தா னாகுவும்
ஆழியான் புள்ளு மயன்ககமும் - ஏழு

௯0. சகத்தர் வணக்குந் தருங்காரி நாம
யுகத்தர் சுவாவு முவாவும் - நகைத்தோடும்

௯௧. ஆறிருவர் பன்னொருவர் தேரு மடல்விடையும்
வேறிருவ ரெண்மர் விமானமும் - கூறும்

௯௨. பொருவின் மதிக்கடவுள் புத்தாரத் தேரும்
திருவின் மகன்பவனத் தேரும் - இருநாற்

---

௮௬. ஆனி—ஹானி - கேடு; அதாவது உண்டுவிடுதல். காற்றையே உணவாகக் கொள்ளுதலால் பாம்பிற்கு வாதாசனமென்று ஒரு பெயருண்டு. நினையா - நினைந்து.

௮௭. கால் - காற்று. பட்டு ஆலவட்டம் - பட்டாலாகிய விசிறி. அண்ணியும் - நெருங்கியும்.

௮௮. ஏற்றுப்படாகை - இடபமாகிய பெருங்கொடி; படாகை - பெருங்கொடி. திருமால் பாரத யுத்தத்தில் சூரியனைச் சக்கரத்தால் மறைத்தாரென்பது ஒரு கதை; திருமாலாகிய இடபக்கொடி.

௮௯. கோழியான் - கோழிக்கொடியை உடைய முருகக்கடவுள். தோகை - மயில். குஞ்சரத்தான் - விநாயகக் கடவுள். ஆகு - பெருச்சாளி. புள் - கருடன். ககம் - பறவை; இங்கே அன்னப் பறவை.

௯0. காரியென்பது வைரவருக்கும் ஐயனருக்கும் பெயர். யுகத்தர் - இருவர்; யுகம் - இரண்டு. சுவா - நாய். உவா - யானை; நிரனிறை; "பாடுமிரு, காரிப் பெயரோர் கருஞா ளியுங்களிறும்" (**திருவாரூருலா, 108-9.**)

௯௧. ஆறிருவர் - துவாதசாதித்தர். பன்னொருவர் - ஏகாதசருத்திரர்; "சிட்டருக்குப் பன்னொன்கு தீதாகும்" (**தனிப்.**) என்புழிப் போல. இருவர் - மருத்துவர்கள். எண்மர் - அட்டவசுக்கள்.

௯௨. புது ஆரம் தேர் - புதிய முத்துவிமானம்; "சீதக் கதிர்முத்தின் றேர்மீதிற் புட்பகத்தேர், மீதிற் பெருந்தோழன் மேவிவர" (**பூவண. உலா, 76.**) திருவின்மகன் - மன்மதன். பவனத்தேர் - தென்றற்காற்றாகிய தேர்; பவனம் - காற்று.

கூங. புரவர் பகட்டாடு போத்தழன் மீனம்
பரவு கலைபுட் பகமான் - அரனயனத்

கூச. தேவா லுகைத்தேக வீரோன் பதுகணத்துத்
தேவா திபர்முதலோர் சேவிப்பப் - பூவான்

கூரு. முழுது முழங்க முனிவரெழு மோரும்
தொழுது பெரிதாசி சொல்லக் - குழகனைப்

கூசு. பொன்மலை யொன்றையிரு வெள்ளிமலை போற்றலெனத்
தன்மலைச்சம் பாதித் தவர்போற்றச் - சொன்மான்

கூஎ. திருமா னிலமான் சிகராரிக் கின்பம்
தருமான் மயிடத் தலைமான் - ஒருமித்

கூஅ. தெழுமகளிர் காளி யிடாகினிக் டீர்த்தச்
செழுமகளி ரெல்லாத் திரளும் - குழுமி

கூகூ. அணியா தழகிய வம்மை மருங்கிற்
பணியா தரவிற் பரவத் - தணியாத

கூஉ-ங. இருநாற் புரவர் - இந்திரன் முதலிய எட்டுத் திக்குப்பாலகர்; புரவர் - பாதுகாத்தலையுடையவர். பகடு - யானை. போத்து - எருமைக்கடா. அழன் - பிணம். நிருதி பிணமாகிய வாகனமுடையவன். கலை - மான்; இது வாயுவின் வாகனம். ஆன் - இடபம். அரன் நயனத்து - அரனுடைய விழியின்.

கூச. ஏவால் - ஏவலால்; கட்டளையால். பூ வான் - பூமியும் வானும்.

கூரு. ஆசி - வாழ்த்து. குழகனை - சிவபெருமானை.

கூசு. பொன்மலை சிவபெருமானுக்கும், இரண்டு வெள்ளிமலைகள் கழுகு வடிவங்கொண்ட இரண்டு முனிவர்களுக்கும் உவமைகள். சம்பாதித்தவர் - சம்பு ஆதி என்னும் பெயரையுடைய இரண்டு முனிவர்கள். சொல்மான் - கலைமகள்.

கூஎ. நிலமான் - பூமிதேவி. சிகராரி - இந்திரன்; மலையைச் சிறகரிந்த மைபற்றி இங்ஙனம் கூறினர். அவனுக்கு இன்பம் தரும் மான் - இந்திராணி. மயிடத்தலைமான் - எருமைத் தலையின்மீதுள்ள துர்க்கை.

கூஅ. எழுமகளிர் - சத்தமாதர். இடாகினிகள் - காளியின் ஏவல் செய்வோர்கள். தீர்த்தச் செழுமகளிர் - தீர்த்த கன்னியர்.

கூகூ. அணியாதழகிய அம்மை - திருமலைச் சொக்கநாயகி; இத்தலத்து அம்பிகையின் திருநாமம். பணி அதரவின்.

கOO. இன்வை யகத்துகளா லெல்லார் மணிமுடியும
முன்வையை கட்டு முடியாகத் - தொன்மை

கOக. நரவெள்ளக் கண்மழை வெள்ளத்தை நான்கு
சுரவெள்ளப் பூமழை தூர்ப்ப - இருவர்

கO௨. சுருக்கா விசையின் மணிகரைந்து சோர்ந்து
திருக்கா தரவுகணந் தீர - ஒருக்கட்

(வாத்தியங்கள்)

கOந. பதலை முழாமுருடு பம்பை படகம்
முதலிய தோற்கருவி மொய்ப்பும் - மதுரிய

கOச. சோதி வலம்புரி தூய சலஞ்சலம்
ஆதிய வெண்சங்க வங்கமும் - கீதப்

கOO. இன் வையகம் - இனிய பூமியின். வையை கட்டும் முடியென்றது, சிவபெருமான் திருமுடியை. அது மண்ணோடு கூடியிருந்ததென்பது இங்கே அறிதற்பாலது. எல்லார் முடியிலும் புழுதி படிந்ததென்பது கருத்து.

கOக. நான்கு சுர வெள்ளம் - ஆதித்தர், உருத்திரர், வசுக்கள், மருத்துவர் என நால்வகையான தேவர்களின் கூட்டங்கள்; "நால்வேறு தேவர்" (மணி. க : 37.) இருவர் - கம்பளர் அசுவதரரென்ற இரண்டு நாகர்கள். இவர்கள் சரசுவதி தேவியைக் குறித்துத் தவஞ்செய்து வரம்பெற்று இசையில் வல்லவர்களாய்ப் பின் சிவபெருமானைக் குறித்துத் தவஞ்செய்து ஸாமகானம் முதலியவற்றால் வழிபட்டு அவருடைய திருவருளால் அவருடைய திருச்செவிகளிரண்டிலும் தோடுகளாகத் தங்கிக் கானஞ்செய்து மகிழ்விக்கின்றாரென்பது புராணகதை (உஎகூ, ௩௬௩ - ச); "தோடுவார் காதன்றே தோன்றாத் துணையையர், பாடுவா ரோரிருவர்க் கிட்ட படைவீடே" (திருப்பாதிரிப் புலியூர்க் கலம்பகம், 16); "காதி லிரண்டுபேர்" (தில்லைக்கலம். 8.)

கO௨. சிறந்த இசையால் கல்லும் கரையுமென்பது நூற்றுணிபாதலால் மணிகரைந்து சோர்ந்தென்றார்; "வாழொப்பி லாதவன் சேயொப்பி லாத மழவ்திசை, ஆழிக் கடல்விட்டு நீபாடுங் காலத் தரிசெலுங்கால், நீழற் கவுத்துவ நீத்துச்செல் வானந்த நீண்மணிதான், காழொப் பினுமின் னிசைகேட்குங் காற்கரைந் தேருமென்றே" (தமிழ்நா. 235) என்பது இந்நூலாசிரியர் வாக்கு. காது அரவு - காதுகளிலுள்ள பாம்புகள்.

கO௨-௩. ஒருக்கட் பதலை - ஒரு பக்கத்தையுடைய பதலையென்னும் வாத்தியம்; "பதலை யொருகண் பையெண வியக்குமின்" (புறநா. கடு௨ : 17.) முருடு - ஒருவகை வாத்தியம். மதுரிய - இனித்த.

கOச. சலஞ்சலம் - ஒருவகைச் சங்கு.

க0ரு. பெருமகரச் செங்கோட்டுப் பேரிச் சகோடக்
கருமகரச் செய்யாழ்க் கணமும் - உருகத்தம்

க0சு. வீடுறைநி பண்டை யுயிர்சென் றெனமையுடையான்
பாடுறை வெய்தும் படியார்ப்பக் - கோடில்

(திருச்சின்னம்)

க0எ. உரையிற் சுருதி யொருவரைசெய் தந்த
வரையிற் குடிவந்தான் வந்தான் - பரவை

க0அ. அலைமருந் தண்டர்க்கே யண்டர்க்கும் யார்க்கும்
மலைமருந் தாகவந்தான் வந்தான் - தொலையா

க0கூ. வினைமுற்றப் பாட்டொன்று வேட்டோர் கணிகை
மனைமுற்றத் தேவந்தான் வந்தான் - எனமுன்

ககO. முழங்குதிருச் சின்ன முறைமுறைநின் றூத
வழங்குதிரு வீதி வரலும் - தொழும்பாய்

(குழாங்கள்)

ககக. நமது பதத்திறைவர் நன்கடைந்தா ரின்னும்
எமது கதிக்குமதென் றெய்தும் - திமிராரி

ககஉ. சீதன் வருணன் குலிசன் றிசையளந்த
பாதன் வனசன் பதமாதர் - ஆதி

க0ரு. மகரயாழ், செங்கோட்டுயாழ், பேரியாழ், சகோடயாழ். கருமகரம் - தொழில்களைச் செய்வனவாகிய கரத்திலுள்ள.

க0சு. பண்டை உயிரென்றது யாழ் முதலியவற்றைச்செய்த மரங்களிலிருந்த ஓரறிவுயிரை. கோடு இல் - கோணுதல் இல்லாத.

க0எ. சுருதியை வரையாகச் செய்து; சுருதி - வேதம்; வரை - மலை, பரவை - திருப்பாற்கடல்.

க0அ. அலைமருந்து அண்டர்க்கே உரியது. மலைமருந்து : இறைவன் திருநாமத்துள் ஒன்று; "சுருதி மலைமருந்தே" (கசஙி.)

க0கூ. வேட்டு - விரும்பி; "ஆங்கொருத்தி, தேனுக் கெதிருமொரு செய்யுள்போற் செய்வளவும், மானுக் கெதிர்திரும்பி வாராயே", "வேட்டொருபெண், முற்றத்தி லேவந்து முன்னிற்கி லோவென்று, சொற்றத்தில் வேறுமொரு சொல்லுண்டோ" (கூ ௫௩-௪, கூஅகூ-௪) என்பர் பின்.

ககO. தொழும்பு - அடிமை.

ககக. எமது கதிக்கும் அது - எம்முடைய பிறப்புக்கும் அத்தொழும்பே உரியது. திமிராரி - சூரியன்; திமிரம் - இருட்டு.

ககஉ. சீதன் - சந்திரன். குலிசன் - இந்திரன். திசை அளந்த பாதன் - திருமால். வனசன் - பிரமதேவர்.

கக௩. அரமாதர் சேடி யகமாதர் நாக
வரமாதர் மாலுழந்து வாழ்த்த - நரமாதர்

கக௪. ஈட்டமு மீண்டி யிருமருங்கும் பொன்மாடக
கூட்டமுஞ் சாளரமுங் கோபுரமும் - ஆட்டரங்கு

கக௫. முற்றமும் பெண்கடல்வாய் மூழ்கத் தமதாயச்
சுற்றமுந் தாமுந் தொகாநிற்பார் - பொற்றுடையால்

கக௬. தூய கதலிவன மீதெனத் தொல்லைநாட்
போய பழமை புதுக்குவார் - நாயகனைச்

கக௭. சேரு மிடிபுடன் சேர்கின்ற மின்முகிலாய்ச்
சோரு மருங்களகஞ் சூழ்போவார் - பாரிற்

கக௮. கலையின் மறைக்கிரிதங் கோவெனக்கண் டீண்டு
மலையின் முலைநெருக்கம் வாய்ப்பார் - உலகனைத்தும்

கக௯. கண்ணுங் கழுகிரண்டு போனமையுங் காப்பாரென்
றண்ணுஞ் சகோரங்க ளாய்ப்பொலிவார் - ஒண்ணுதலும்

க௨௦. சோளற்கு வில்லாய்த்தஞ் சுற்றம் வதைத்தவதை
மாளக் குனிதனுவாய் மாணுவார் - ஆளும்

க௨க. மலைக்கொழுந்து மோலி மதிக்கொழுந்து மாரீர்
அலைக்கொழுந்துங் கொன்றை யடுக்கும் - புலத்தை

௧கக-உ சூரியர் முதலியோர் இத்தலத்து வழிபட்டுப் பேறு பெற்றோர்.

கக௩. சேடி - வித்தியாதர நகரம்.

கக௪. மாடக்கூட்டம் - மாடங்களின் தொகுதி. சாளரம் - பலகணி.

கக௬. கதலிவனம் : இத்தலத்தின் திருநாமங்களுள் ஒன்று.

கக௭. இத்தலத்தில் இடி பூசித்ததென்பர் (க௫0-௫க.) இடை மின்னலும், கூந்தல் முகிலும்.

கக௮. தம்மென்றது மலைகளை. கோ - தலைவன். (பி - ம்.) உலகலைக்கும்.

கக௯. கண்ணும் - கருதுகின்ற.

க௨0. சோளன் - சுரகுரு. வதை - கோவதை. நுதல் தனுவாய் மாணுவார்; தனு - வில்.

க௨க. மலைக்கொழுந்து : இறைவன் திருநாமம், "மறைக்கொழுந்தை வெள்ளி மலைக்கொழுந்தை மௌலிப், பிறைக்கொழுந்தை வைத்த பிரானை" (**விக்கிரம சோழனுலா**, 42.) புலம் - அறிவு.

கஉஉ. நெகிழ்க்குந் திருநெற்றி நீற்றி னிலாவும்
முகிழ்க்கு முறுவன் முகமும் - நகைக்குழையின்

கஉங. தூக்குந் திருமுக்கட் சோதியு மூதண்டம்
காக்குந் திருநீல கண்டமும் - ஆக்கும்

கஉச. அவைய வரத வழன்மழுமான் கையும்
பவைய திருத்தோட் பணைப்பும் - தவழருவி

கஉரு. முந்நூலு மார்பமு மூதராக் கச்சுடையும்
பொன்னூ புரமும் பொலன்கழலும் - பன்னூறு

கஉசு. செவ்வி யிளஞாயி றுய திருவழகும்
வெளவி யுவந்துவந்து வந்திப்பார் - நௌவி

கஉஎ. விழியிற் களிதிளைப்ப வெண்முத்தங் கால்வார்
மொழியிற் றுதிகுழறி மொய்ப்பார் - செழுமேருக்

கஉஅ. குன்று பிடியு முழையுங் குழாமயிலும்
சென்று வளைந்தெனத் தேர்வளைவார் - அன்று

கஉகூ. புவனித் திருத்தேர் புகுந்தார் புகுந்த
பவனித் திருத்தேரைப் பாரீர் - உவணைப்

கஙo. புரிய னருச்சித்த போதிவருக் கீந்த
பரிய சுரரத்னம் பாரீர் - கரியோனும்

கஉஉ. நீற்றின் நிலா: "நிலாவை, வழியவார்த் தாலன்ன மாநீற்றூர்" (நள. கடவுள்.) (பி - ம்.) முறுவற் செம்முகமும்.

கஉச. பவைய - பிரபையையுடைய; பவை = பிரபை - ஒளி; "தாம மல்லிகை மாலைச் சயம்பவை" (சூளாமணி, இரதநூபுரச். 32.)

கஉரு. அராக்கச்சு - பாம்பாகிய கச்சு; "கச்சைசே ரரவர் போலும்" (தே. திருநா.)

கஉசு. நௌவி - நௌவி மான்.

கஉஎ-அ முத்தம் - கண்ணீர்த்துளி; "பூப்போ லுண்கண் புலம்புமுத் துறைப்ப" (முல்லைப். 23.) மேருமலை தேருக்கு உவமை. குன்று - குன்றை. அன்று - திரிபுரமெரித்த காலத்தில். பிடி முதலியன மலையில் வாழ்வன.

கஉகூ. புவனித்திருத்தேர் - பூமியாகிய அழகிய தேர். பவனி - உலா. உவணை - தேவலோகம்,

கஙo. கரியோன் - திருமால்.

கரு௧. பாணிக்க முன்னம் பணிந்தணிந்த பாற்கடலின்
மாணிக்க ராசி வடம்பாரீர் - பேணிப்

கரு௨. பிரமர்மேற் காலம் பிறந்தகத்து முத்தம்
பரமர்மேற் சாத்தியது பாரீர் - இரவகற்றும்

கருரு. வெங்கருவி வானோர் மிலைந்த வுபயகிரிப்
பொங்கருவி வாள்வயிரப் பூண்பாரீர் - மங்கைமீர்

கரு௪. ஏன வெயிறு பிறையென் றிருவேட்கை
ஆன திருக்காப் பதுபாரீர் - மேனிமிர்ந்து

கருரு. தாமத் திடப்பாகத் தாமந் தழையென்று
வாமத் துழைதிறக்கும் வாய்பாரீர் - காமுற்றாள்

கருசு. ஓர்கண் ணடங்கினு மொள்ளமுகிற் பல்கோடி
பேர்கண் ணடங்கார் பெரிதென்பார் - வார்சடையாற்

கருஎ. கன்றுமா லாயோ ரணிந்ததொரு கண்ணனந்தம்
இன்றுமா லாயோ ரிவர்க்கென்பார் - அன்றுமால்

கரு௧. பாணிக்க - அலங்கரிக்க; இச்சொல் சைவ சம்பிரதாயத்தில் வழங்குகின்றது. ராசி - கூட்டம்.

கரு௨. பிறந்தகத்து முத்தம் - தாம்பிறந்த இடமாகிய தாமரையில் தோன்றிய முத்து. இரவு அகற்றும் - இராத்திரியைப் போக்கும்.

கருரு. வானோர் - சூரியர் பன்னிருவர்; எழுவாய்; வாள் - ஒளி. உபயகிரி - உதயகிரி, அத்தமனகிரி. மிலைந்த வயிரப் பூணென இயைக்க.

(பி - ம்.) மிலைந்த வுதயகிரிப்.

கரு௪. ஏன வெயிறு - பன்றிக் கொம்பு. இரு வேட்கை - உண்ண வேண்டுமென்ற பெரிய ஆசை. காப்பு - பாம்பாலாகிய கங்கணம்.

கருரு. தாமத்து - மாலையையுடைய. இடப்பாகத் தாமம் - இடப்பக்கத்துள்ள அம்பிகையின் பசுமைநிறத்தை; தாமம் - ஒளி. ஒளியைப் பச்சிலையென்று எண்ணி. வாமத்து - இடப்பாகத்திலுள்ள. உழை - மான். காமுற்றாள் - உமா தேவியாரது.

கருசு. ஓர் கண் - ஒருவிழியில். பல்கோடி பேர் - பலகோடி மாதர்களுடைய.

கருஎ. மாலாயோர் - திருமால். ஒருகண் - ஒருவிழி. அநந்தம் - பல. மாலாயோர் இன்று இவர்க்கு அணிந்த கண்கள் பல; மாலாயோர் - காமமயக்கம் கொண்ட மகளிர்.

கருஅ. ஆனார் விழிக்கே யணிந்து மரியரிவர்
மானார் விழிக்கெளியர் வந்தென்பார் - மேனிகணக்

கருகூ. கில்லாத் திருக்கோல மென்பதோ விக்கோலம்
இல்லாத் திசைகாணும் யாமென்பார் - இல்லாது

கசo. சொல்லா தருமறைநந் தொல்லறிவு மிக்கள்ளம்
வல்லார் பறித்தார் மறித்தென்பார் - நல்லாழி

கசக. வட்டத் தொருகள்ளம் வல்லாரை நாங்கூடிக்
கட்டத் தகாதோ கவர்ந்தென்பார் - அட்டின்னம்

கசஉ. தீய்த்தாலுந் தீய்ப்பார் திருவுலாக் காண்பேமை
மாய்த்தாலென் றஞ்சான் மதனென்பார் - போய்த்தாதைக்

கசங. கேறு பழியைப் பொறுத்தாரன் றீதறிந்தால்
வேறு வெருவுமோ வேளென்பார் - மாறி

கசச. ஒருபோது கங்குல்வந் தோங்கா திரவிக்
கிருபோதுந் தந்திலரோ வென்பார் - திருமுன்போய்த்

கசரு. தோற்றும் பிறப்பாய துன்பநோ யன்பர்க்கு
மாற்றுஞ் சுருதி மலைமருந்தே - வேற்றுத்

கருஅ. வந்து : ஒரு சொல் நடை. "மண்வைத்த குக்ஷி வளைவைத்த செங்கைமால், கண்வைத்துங் காணக் கழலினான்" (**திருவிடை. உலா, 17.**)

கசo. கள்ளம் வல்லார் : இறைவன் திருநாமம் ; "வேதங்கள் விழி பனிப்ப மெய்புளக மரும்பக், கைப்பதும முகிழ்த்தெமது காற்பதுமத் திறைஞ்சிக் கள்ளம்வல்லாய் கள்ளம்வல்லா யெனக்கசிந்தோ விடுமால்", "வினைத் தொழிலிற் கள்வரெல்லாஞ் சிலர்க்கொளித்துஞ் சிலர்க்கு வெளிநின்றும் வழிபறித்து விரவுவரா தலினாற், கனைத்தமறை யறிந்தெம்மைக் கள்ளம் வல்லா யெனும்" (வேதகிரிச். 27-8) ; "கள்ளம் வல்லான் காதல்செய் கோயில் கழுக்குன்றே" (**தே. திருஞா.**) மறித்து - தடுத்து.

கசo-சக. ஆழி வட்டத்து - கடல் சூழ்ந்த பூமியில்.

கசஉ. மன்மதன் அஞ்சாமற் போர்செய்கின்றானென்பது கருத்து.

கசங. பழி - பிருகு முனிவருடைய மனைவியைக் கொன்றது முதலியன. ஈது - திருமாலின் பழியைத் தீர்த்தது.

(**பி - ம்.**) துடைத்த வெளிதறிந்தால் ; மாறு.

கசச. இருபோதும் - இரவையும் பகலையும்.

கசரு. மலைமருந்து : கசஅ ; "வேற்று மருந்தால் விடாதவெம் பிறவியை, மாற்று மருந்தா மலைமேன் மருந்தா" (**அருணைக்கலம். 1.**)

கச௬. திருவின்றே தண்டர் சிகாமணி யாக
மருவுமா சில்லா மணியே - இருவினையும்

கச௭. வீட்டிய வாதவூ ராளிக்கு மெய்விளங்கக்
காட்டிய கண்ணார்ந்த கற்பகமே - சூட்டிய

கச௮. நும்மருக் கொன்றை யலது நுமதாசை
மம்மருக் கொன்றையு மாற்றறியேம் - உம்மைத்

கச௯. திசைமுழுதும் பொன்னிட்டா ரென்கைக்கோ தீயேம்
மிசைமுழுதும் பொன்னிட்டு விட்டீர் - சசிதழுவும்

கரு௦. அக்காம னெய்திய வெஞ்சிறையை யஞ்சாத
இக்கா மனுமொருகா லெய்துமே - முக்காலும்

கருக. பூசித் திடிவலஞ்சூழ் போதுவதிப் போதாகிற்
கூசிக் குயிலொடுக்கங் கொள்ளுமே - ஈசரே

கச௭. மெய் - திருமேனியை. திருவாதவூரடிகளுக்குத் திருப்பெருந் துறையிற் காட்டிய கோலத்தைச் சிவபெருமான் இங்கே காட்டி யருளினர்; "கழுக்குன்றத் தரிபிரமர் காணானைக் கண்டானை" (பாயிரம், 9); "காணொணாதொர் கோல நீவந்து காட்டி னாய்கழுக் குன்றிலே" (திருவாசகம்.) கண்ணார்ந்த கற்பகம்: இறைவன் திருநாமம்; "கழுக்குன்றத் தமர்ந்தான் றன்னைக் கற்பகத்தைக் கண்ணாரக் கண்டே னானே" (தே. திருநா.); "கண்ணார்ந்தகற் பகமல்லவோ கழுகாசலா கழுகாசலா" (கழுகாசல சதகம், 18.)

கச௮. மரு கொன்றை அலது - வாசனையையுடைய கொன்றை மாலையை யல்லாமல். மம்மருக்கு - மயக்கத்தைப் போக்குதற்கு. மாற்று - பரிகாரம்.

கச௯. திசைமுழுதும் பொன்னிட்டார்: இத்தலத்தில் இறைவன் ஒரு காலத்தில் அன்பர்களுக்கு மிகுதியாகப் பொன்னை அளித்தருளினரென்றும் அதற்கு அறிகுறியாக ஸோமாஸ்கந்த மூர்த்தியின் இடத் திருக்கரத்தில் பொற் கட்டியொன்று உள்ளதென்றும் பெரியோர் கூறுவர். பொன் - பசலை. சசி - இந்திராணி.

கரு௦. அ கா மன் - அந்த இந்திரன்; கா - கற்பகச்சோலை. இ காமன் - இந்த மன்மதன். எய்துமே: ஏகாரம், வினா. இந்திரன் சிறையிலிடப்பட்டதை, ௩-ஆம் கண்ணியின் குறிப்பாலுணர்க.

கருக. இடிமுழக்கத்திற்குக் குயில் அஞ்சும்; இடி இத்தலத்தில் வழி பட்டதென்பர்; ககஎ, குறிப்பைப் பார்க்க.

கருஉ. ஆயர்வாய் வேயி னகட்டிற் சிலகாலம்
மேயதோ தீயாக மேயினீர் - மாயனுநீர்

கருங. விண்ணோன் முகனுநீ ரென்றறிய வெவ்வினையேம்
கண்ணாழி யுட்கமலங் கைக்கொண்டீர் - விண்ணணங்காம்

கருச. கோவை வதைத்த கொலைபொறுத்தீ ரிவ்வுலகிற்
பாவையர் கன்றருமை பார்ப்பீரோ - மாவெய்யோர்

கருரு. மின்கை யருச்சித்து மெய்பழுகி யோவொருவர்
முன்கை நறுஞ்சாந்த மூழ்கினீர் - வன்கண்

கருசு. தரிக்கு மதியைநீர் தாள்பொறுத்துத் தேய்த்தீர்
எரிக்கு மடம்பயின்றோ வென்பார் - திருப்பனசைத்

கருஎ. தாடகை யாடையைத் தாங்கியது பொய்யாக
ஆடக வாடை யவிழ்ந்துழல்வார் - ஊடடங்கும்

கருஉ. ஆயர்வாய் வேய் - இடையர் வாயில் வைத்து ஊதும் புல்லாங்குழல்; “ஆயர்வாய் வேயோ வழல்” (தண்டி. சூ. 15, மேற்.). திருநெல்வேலியிலும் திருப்பாசூரிலும் சிவபெருமான் மூங்கிலிற்றோன்றியவரென்பது பற்றி ‘வேயி னகட்டிற் சிலகால மேயதோ’ என்றார். தீ ஆகம் - நெருப்பாகிய திருமேனி.

கருங. கண்ணாழி - கண்ணாகிய கடல். உட்கமலம் - இதய கமலம். திருமாலுக்கு ஆழியும், பிரமதேவர்க்குக் கமலமும் உரியன; நிரனிறை. கண்ணாகிய கடலிலுள்ள நீரையென்பது மற்றொரு பொருள். விண்ணணங்கு - திலோத்தமை.

கருங-ச. கோவை - பசுவை. கன்று - வளையல், பசுவின் கன்று; “முன்னாளே, அக்கன்று போக்குதிரு வாரூர்த் தெருவென்று, இக்கன்று போக்க வந்தேம் யாமென்பார்” (திருவாரூருலா, 167-8.) வெய்யோர் - சூரியர்.

கருரு. ஒருவர் - மூர்த்தி நாயனார். சந்தனம் தமக்கு வெப்பஞ் செய்தலால் இங்ஙனம் கூறினார்.

கருசு. சந்திரன் தம்மைச் சுடுகின்றதென்பது கருத்து. திருப்பனசை திருப்பனந்தாள்.

கருஎ. தாடகை - திருப்பனந்தாளில் எழுந்தருளிய ஸ்ரீ அருணசடேசுவரரை வழிபட்ட ஒரு பெண். அவள் ஒரு நாள் மாலை சாத்தும்போது ஆடை அவிழ அதனை இருகைகளாலும் இடுக்கிக்கொண்ட அவளுடைய நிலையைக் கண்ட இறைவன் தம் திருமேனி சாய்ந்து அவள் கையிலிருந்த மாலையை அணிந்தருளினரென்பது வரலாறு; “சிலைச்சிக்கு மதனெரிய விழிதிறந்த திருப்பனந்தாட் சிவனே யந்தோ, வலைச்சிக்கு விடநினையே னும்மையுநான்

கருஅ. ஆல மிடற்றி னழகொழுகிப் போர்த்தென்ன
நீல மலர்க்க ணிரைநிரைப்பார் - சாலவும்

கருகூ. தீதுறுவா ரிந்தத் திறநாணும் பூணும்போய்ப்
பேதுறுவா ராகப் பிறிதொருத்தி - மீதுறைய

(பேதை)

ககூO. வீடா மதிவருவ தோர்ந்து வெருவியிருள்
கூடா தகன்றனைய கூந்தலும் - ஆடா

ககூக. ஒழுங்கு தலைப்பட்ட வுபயவாட் கண்ணும்
கொழுங்குதலை தாய்தேற்றுங் கூற்றும் - விழுந்தெழுகைச்

ககூஉ. செம்பானு மானு மெயிறுஞ் சிறுதாழைப்
பைம்பாளை யொத்த பணைமார்பும் - செம்போ

ககூந. துறுவ தொருகுரவா மொண்பாவைக் கையும்
பெறுவ தொருபருவப் பேதை - இறுகும்

வயப்படுத்த மாட்டே னங்தோ, குலைச்சிக்கோ ரன்னமின்னுங் காணாத சடை மௌலி குலைந்து போன, கலைச்சிக்கு விளைந்ததுவுங் கலைபணுக்கு நிமிர்ந்ததுவுங் கண்டுந் தானே" (பழையபாட்டு.)

கருஅ. கண்களுக்கு ஆலம் உவமை; ஆலம் - விடம். மலர்க்கண்களின் நிரையைத் திருமேனியிலே நிரைப்பார்.

கருகூ. பேது - மயக்கம். பிறிது, வேறென்னும் பொருளில் வந்தது; "முன்னாப் பிறிதொருத்தி மொய்பக் கிழந்தமையும்" (உஉச); "பேதிப்பா ராகப் பிறிதொருத்தி" (திருவாரூருலா, 186.)

ககூO. வீடா - இருப்பிடமாக எண்ணி. மதி யென்றது முகத்தை. ஆடா - வெல்லாமல்.

ககூக. ஒழுங்கு - மருட்பார்வைமுதலியன இல்லாமை. உபயம் - இரண்டு. கூற்று - வார்த்தை. விழுந்தெழுகை - விழுந்து எழுதலால்.

ககூஉ. பானு மானும் - அத்தமித்துப் பின் உதிக்கும் சூரியனை ஒக்கும்; "துஞ்சி, விழுந்த கதிரே யெழல்போல் விழுந்த, தெழுந்ததென லொக்கு மெயிற்றாள்" (வேங்கை யுலா, 150-151.) தாழைப்பாளை - தென்னம்பாளை; அது முதிர்ந்தக்கால் இளநீரைத் தோற்றுவிப்பது.

ககூந. பாவைக் கை - பாவையைத் தாங்கிய கை. பாவையைத் தாங்கி யிருத்தலால் குரவாகிய கை; குரவம்பூ, பாவைபோல்வது.

கசுச. முலையிணை தாய்க்கு முகிலீரந் தீரா
மலையிணை செய்தருந்தும் வாயாள் - பலவண்டல்

கசுரு. ஊதைவருங் காலை மிதிலை யுழுநிலத்துக்
கோதைவரும் கோலமாங் கோலத்தாள் - வீதிவாய்ப்

கசுசு. பாரா விடுங்கிளியைப் பாறெடுக்கு மென்றெடுத்து
வாரா தொழிய மனத்தழிவாள் - ஆரூர்த்

கசுஎ. திருவந்திக் காப்புந் திருத்தில்லை யெல்லை
மருவந்திப் பிற்பொழுதை வாழ்வும் - இருசேய்

கசுஅ. பொருப்பு மடந்தையுடன் பொற்கழுக் குன்றத்
திருப்பு மெனவிருக்கு மெம்மான் - தெருப்போதப்

கசுகூ. போந்து திருத்தாயர் பூவார்ந்த சேவடியைச்
சேர்ந்து தொழத்தொழுத செங்கையளாய்க் - காந்தித்

களo. துவரார் சடைமௌலித் தொல்லோனை நோக்கி
இவரா ருரைமின்க ளென்றாள் - அவளொருத்தி

கசுச. "மாமலை யணைந்த கொண்மூப் போலவும், தாய்முலை தழுவிய குழவி போலவும்" (பட். 95-6); "தாய்முலை தழுவிய குழவி போலவும், மாமலை தழுவிய மஞ்சு போலவும்" (சீவக. 100) என்பவை இங்கே நினைத்தற் குரியன. வாய்வைத்தலின் நகில் ஈரமாதல்பற்றி இவ்வுவமை கூறினார். வண்டல் - மகளிர் விளையாட்டு.

கசுரு. ஊதை - காற்று. கோதை - சீதை. புழுதி படிந்த மேனியுள்ள பேதைக்குப் படைச்சாலில் எழுந்த சீதை உவமை.

(பி - ம்.) ஓதைவருங்காலை.

கசுசு. பாரால் - பூமியில்; உருபு மயக்கம். பாறு - பருந்து.

கசுஎ. திருவாரூரில் திருவந்திக்காப்புக்காலத்திலும் திருத்தில்லையில் அர்த்தயாமத்திலும் மட்டும் தங்கி யிருப்பார்; இரண்டு குமாரர்களோடும் உமாதேவியாரோடும் இங்கே அனவரதமும் சிவபெருமான் எழுந்தருளி யிருப்பா ரென்பது புராணவரலாறு; "ஆத லாற்கம லாலயத் தந்தியங் காப்பும், கோதி லாமணி மன்றத்தி யாமமுங் குடியாப், போது மத்தனை யேயலா தில்லையெப் பொழுதும், வேத வெற்பிடை மலைமடந் தையொடும்வீற் றிருப்போம்", "சொக்கியெனுந் திருமலையாள் மடந்தையொடும் புதல்வரொடுஞ் சுருதிக் குன்றிற், புக்கனன்" (உருத்திரகோடிச். 56, நந்திதவச். 62); "யாமத்தே, தில்லையா ருருந் திருவந்திக் காப்புக்கே, தொல்லையா ரூருந் தொழுநின்றான்" (திருவாரூருலா, 203 - 4.)

களo. துவர் ஆர் - பவளநிறம் பொருந்திய. ஒருத்தி - உமாதேவியார்.

௧௭௧. ஒட்டிய தன்பாற் குரிய் தெனப்பெரிது
கட்டிய தீங்கருப்புக் கட்டிகாண் - எட்டிய

௧௭௨. கன்னலந் தூய கனதனுச் செற்றதுகாண்
இன்னலங் கோதை யிகந்ததுகாண் - மின்னனையாய்

௧௭௩. மாற்றின் மறுகு மதன்கடத்திற் காய்ந்ததுகாண்
சாற்றி லளவிறப்பச் சார்ந்ததுகாண் - தோற்றிய

௧௭௪. ஆலக் களத்தி லமைத்ததுகா ணன்றியும்
வேலைப் படியிரத மேயதுகாண் - நாவிருகைப்

௧௭௫. பாகான் முதிர்ந்து பதத்ததிக மானதுகாண்
தோகாய் நிறைதூக்கந் தொக்கதுகாண் - நாகேசன்

௧௭௬. பைகளாற் சூழ்ந்ததுகாண் பாவாய் பணிகென்று
மெய்களாற் றுயர் விளம்புதலும் - தையலும்

௧௭௭. தேரில் வருகருப்புக் கட்டி சிறிதெளியேன்
வாரி நுகர வருங்கொலென - நேரிழையாய்

௧௭௮. பாடப் பரியப் பலகா லிருகாலும்
சூடத் தனிகருதச் சூழ்போதத் - தேடத்

---

௧௭௧ - ௧௭௮. சிவபெருமானுக்கும் கருப்புக்கட்டிக்கும் சிலேடை.

௧௭௧. தீங்கருப்புக் கட்டியென்றது இறைவனை; ௧௭௭, ௩௫. ஒட்டிய தன் பாற்கு - சேர்ந்த தன் பகுதிக்கு, காய்ச்சப்பட்டு வற்றிய தன் பாலுக்கு.

௧௭௨. தனு - வில், உடம்பு. கோதை - குற்றத்தை, சக்கையை.

௧௭௩. கடம் - உடம்பு, குடம். சாற்றில் - சொல்லுமிடத்தில், இரசத்தில்.

௧௭௪. ஆலக்களத்தில் அமைத்தது - விடத்தைத் தன் கண்டத்தில் கொண்டது, ஆலையையுடைய இடத்தில் செய்யப்பட்டது; ஆல் = ஆலம் - விடம்; கடைக்குறை. வேலைப்படி இரதம் - கடல் சூழ்ந்த பூமியாகிய தேர், கடலை யொத்த சாறு; படி - பூமி, ஒப்பு. ஏழுகடல்களுள் கருப்பஞ்சாற்றுக் கடல் ஒன்று.

௧௭௫. பாகு - பாகன், வெல்லப்பாகு. பதம் - பதவி, பக்குவம். நிறை தூக்கம் - நிறைந்த ஆடுதல், நிறையும் தூக்கமும்; தூக்கம் - ஒரு நிறுத்தலளவை.

௧௭௬. பை - படம், கோணிப்பை. மெய்களால் - உண்மைச் சொற்களால்.

௧௭௭. என - என்று பேதை கேட்ப.

௧௭௮. பரிய - அன்புகூர. இருகாலும் சூட - இரண்டு திருவடிகளையும் சூட.

௧௭௯. தெரிசிப்ப வுண்ணின்று தித்திப்ப தல்லாற்
பரிசிப்ப மாந்தப் படுமோ - விரிநிலத்தோர்

௧௮௦. உண்டு வெறுப்பதுபோ லன்றுகா ணென்றுவகை
கொண்டு தமரமரக் கூறுதலும் - ஒண்டொடிக்கு

௧௮௧. நோக்குந் திருநகையு நான்மார் பகலத்து
வீக்குங் கடுக்கையும் வீசாமே - மாக்குருகும்

௧௮௨. சீறுடை யுந்தனக்குத் தெள்ளமுதிற் கொள்ளாமே
நீறுடி யத்தெருவை நீத்தொழிந்தான் - வேறறியா

௧௮௩. வல்லியு மில்லத் தகல வரிகருப்பு
வில்லியு மவ்வெல்லை விட்டகன்றான் - கொல்லியம்

(பெதும்பை)

௧௮௪. பாவை பொருவும் பருவத் தொருபெதும்பை
பூவை வளர்கொம்பர் போல்வளர்வாள் - ஓவியத்திற்

௧௮௫. பார்வைக் கமையும் பரிசன்றிப் பாயல்வாய்ச்
சேர்வைக் கமையாத செவ்வியாள் - மார்வின்

௧௮௬. முகிழா முலைதனது பாவையு மோய்மார்
நெகிழா முலைதானு நீத்தாள் - அகவனசம்

---

௧௭௯. பரிசிப்ப மாந்த - தொடவும் உண்ணவும்.

௧௭௮-௯. "பார்த்தாலும் நினைத்தாலும் படித்தாலும் படிக்கப் பக்கநின்று கேட்டாலும் பரிந்துணர்ந் தாலும், ஈர்த்தாலும் பிடித்தாலுங் கட்டியணைத் தாலு மித்தனைக்குந் தித்திக்கு மினித்தசுவைக் கரும்பே" (இராமலிங்க. பாடல்.)

௧௮௦. அமர - முற்ற; "மண் ணுண்டிருந்தோர், அமர" (அரங்கத். 31.)

௧௮௧. கடுக்கை - கொன்றை மாலை. வீசாமே - கொடாமல். பேதையைப் பாராமலும் சிரியாமலும். குருகு - வளை.

௧௮௨. சீறுடை - சிற்றுடை.

௧௮௩-௪. கொல்லியம்பாவை - கொல்லிப் பாவையைப் போன்ற பெதும்பை; "வல்வில் லோரி கொல்லிக் குடவரைப், பாவையின்" (குறுந். ௪௦௦ : 5-6.) ஓவியத்தின் - சித்திரப்பாவையைப்போல்.

௧௮௫. பார்வைக்கு - கண்ணாற் பார்த்து இன்புறுதற்கு. சேர்வைக்கு - சேர்தலுக்கு. மார்வு - மார்பு.

௧௮௬. மோய்மார் - தாய்மார். பாவைக்குத் தான் பால்கொடுத்தலையும், தான் தாய்மாரின் பாலுண்ணுதலையும் நீத்தனள்.

௧௮௭. போர்க்கு மதன்முளரி போதும் படியெட்டிப்
பார்க்கும தன்ன பணைமுலையாள் - ஆர்க்கும்

௧௮௮. தரியா வுலகளப்பத் தாரைகரத் தேற்ற
கரியா னனையகடைக் கண்ணாள் - சொரிதேன்

௧௮௯. வடித்தன்ன பாணினிய மாதவ ரோதி
முடித்தென்ன வோதி முடிப்பாள் - தடுத்தெம்மை

௧௯௦. ஆளுடையா னாளா யரிபிரமர் சேவிக்குந்
தாளுடையான் வேதகிரிச் சாரல்வாய் - ஆளுடையான்

௧௯௧. சேத்தந்த சாபத் தமையுந் திலோத்தமையாம்
கோத்தந்த மீந்த குளிர்முத்தும் - பூத்த

௧௯௨. மதிய நிலவெறிக்கு மாயீகப் பன்றி
முதிய வயக்கோட்டு முத்தும் - கதிரொழுகத்

௧௯௩. தன்னுயம் வாரிச் சமைத்தவொரு சிற்றிலின்கண்
மின்னு யவர்போற்ற வீற்றிருந்து - முன்னோன்

௧௯௪. அரும்பொற் கழலாடு மாடலைப் பாடி
இரும்பொற் கழலாடு மெல்லை - விரைந்தொருத்தி

---

௧௮௭. மதன்முளரி போர்க்குப் போதும்படியை ; முளரி - தாமரைப்பூ. "முட்டித் துறவாம் பறவைமயன் முடியிற் படுதன் மெல்லமைறைந், தெட்டிப் பார்ப்ப தெனமார்பி னிடங்கொண் டெழுந்த விளமுலைகள்" (பிரபு. மாயை யுற்பத்தி. 56.)

௧௮௮. தாரை - மாவலி வார்த்த தாரைநீர். கரியான் - வாமன வடிவங் கொண்ட திருமால்.

௧௮௯. ஓதி முடித்தல் - படித்து முடித்தல், கூந்தலை முடித்தல் ; அ - ஆம் கண்ணியின் குறிப்பைப் பார்க்க.

௧௯௧. சே - திருநந்தி தேவர். கோ - பசு. தந்தம் - பல். திலோத்தமை யாம் கோ : ௧௨ - ௩. பசுவின்பல் முத்துப் பிறக்கும் இடங்களுள் ஒன்று.

௧௯௨. மாயீகப் பன்றி : ௧௧-௪. பன்றிக்கொம்பு முத்துப் பிறக்கும் இடங்களுள் ஒன்று.

௧௯௩. சமைத்த - அமைத்த. வீற்றிருந்து - கவலையின்றி யிருந்து.

௧௯௪. கழல் - திருவடி. பொற்கழல் - பொன்னாற் செய்த கழற்சிக்காய ; "செறியரிச் சிலம்பிற் குறுந்தொடி மகளிர், பொலஞ்செய் கழங்கிற் றெற்றி யாடும்" (புறநா. ௩௬ : 3-4.)

௧௯௫. ஊதியது சங்க மொலித்தது பொற்சின்னம்
மோதின பேரி முழாவாரி - நீதிச்

௧௯௬. சுரகுருத் தண்டகத் தொண்டர்கள் வாயாற்
பரகுருத் தேர்முன் பரந்த - துருக

௧௯௭. மறையோசை கேட்டது வந்ததுநம் வீதிக்
கிறையோன் றிருப்பவனி யென்றாள் - நறையோதி

௧௯௮. தானுந் தமரு மெழுந்து தனதுபுள் ளும்
மானுங் கலையும் வரன்மாற்றிக் - கானடையே

௧௯௯. நீடாது போதலுமப் பிள்ளைக ணின்றிரங்கக்
கோடாது நோக்கிக் குழாமெல்லாம் - ஆடலான்

௨௦௦. சென்னிப் பகீரதிக் கன்னஞ் சிறுபிறைக்குக்
கன்னிச் சகோரங் களிக்குங்காண் - மின்னும்

௨௦௧. வலக்க ணிடக்கண் மகிழ்ச்சியை வாகம்
புலக்க ணரிணம் புகுங்காண் - கொலைக்கணிச்சி

௨௦௨. மல்லற் புகையைத் தமது வகையென்று
புல்லக் கபோதங்கள் போதுங்காண் - பல்கிளியும்

---

௧௯௫. (பி - ம்.) மோதியது.

௧௯௬. சுரகுருந் தண்டகம் - சுரகுருவால் ஆளப்பட்ட தொண்டை நாடு. பரகு உரு - சொல்லுகின்ற இசைபபாட்டுக்கள்; பரகு: திசைச்சொல் (தெலுங்கு.) உரு - இசைப் பாட்டு; உருப்படியென இக்காலத்து வழங்கும்.

௧௯௮. கால் நடையாக.

௧௯௯. அப்பிள்ளைகள் - மேற்கூறிய மான்கன்றும் பறவைக் குஞ்சுகளும்; "கொள்ளைகொள் காமன் கொடும்பகைக்குக் கூசித்தன், பிள்ளைகளோடிருந்து பேசுவாள்" (மூவேந். உலா, 206.) குழாம் எல்லாம் - ஆயத்தா ரெல்லாரும்; இது, "கொண்டு வருதி வருதியென" (௨௪௦) என்பதனோடு முடியும்.

௨௦௦. அன்னம் கங்கையில் வாழ்வது; "மேவிப்பூங் கங்கையுள் விளைந்த வன்னமே" (சீவக. 1017.) சகோரம் நிலவையுண்ணும் பறவை.

௨௦௧. வலக்கண் - சூரியன். இடக்கண் - சந்திரன். வாகம் - சக்கரவாகமென்னும் பறவை; இது சூரியகிரணத்தை உண்பது. புலக்கண் அரிணம் - முல்லை நிலத்தின்கண் உள்ள மான். மான் சந்திரனைக் கண்டால் மகிழும். கணிச்சி - மழுவினுடைய.

௨௦௨. கபோதங்கள் - மாடப்புறாக்கள்; இவை புகையைத் தமது இனமென்று கருதும்; "ஒள்ளகிற் புகைதிரண்ட தொக்குமா மணிப்புறா" (சீவக.

உ0ங. தாமத் திதழித் தமனிய வண்ணத்தை
ஏமத் தினையென்ன வேமுறுங்காண் - வாமத்து

உ0ச. மானைக் கலைசென்று காண மழைமிடறென்
றேனைக் கலிங்கமயி லெய்துங்காண் - வானத்தோர்

உ0ரு. அங்கப் பணிய ரருளே பொருளென்கை
கங்கப் பிறவிக்கே காணியோ - நங்கோன்

உ0சு. உறவை யுறப்பெற் றுருகுவது கூடற்
பறவை யிரண்டற்கே பங்கோ - மறைநாலும்

உ0எ. நன்ன ரடிமுடியை நாடுவது கேழற்கும்
அன்ன மதற்குமே யாட்சியோ - முன்னர்

உ0அ. நெடிய கயிலைமலை நீள்சிலந்தி பாம்பு
கொடிய களிறிவைக்கே கூறோ - மடவாய்

உ0கூ. நினையடைந்த மன்னுயிரு நின்பொருட்டா லின்பந்
தனையடைந்து வாழ்கை தவறோ - இனியவற்றைக்

---

70) ; "செந்நெ ருப்பினைத் தகடு செய்துபார் செய்த தொக்குமச் செந்த ரைப்பரப், பந்நெ ருப்பினிற் புகைதி ரண்டதொப் பல்ல தொப்புறா வதனி டைப்புறா" (கலிங்கத். 69.)

உ0ங. ஏமுறும் = ஏமம் உறும் - இன்ப மடையும். தினைக்கதிர் பொன் னிற முடையது ; அதனைக் கிளி விரும்பும். வாமம் - இடப்பாகம்.

உ0ச. மிடற்றை மழை பெய்யும் மேகமென்று எண்ணி. கலிங்கமும் மயி லும் ; கலிங்கம் - வானம்பாடி.

உ0ரு. அங்கப்பணியர் - என்பாகிய ஆபரணத்தை உடையவர். கங்கப் பிறவி - கழுகின் பிறப்பு. காணியோ - உரிமையோ.

உ0சு. கூடல் - மதுரை. பறவை இரண்டு - கரிக்குருவியும், நாரையும் ; இவ்விரண்டும் மதுரையிற் பேறு பெற்றவை.

உ0எ. கேழல் - பன்றி.

உ0அ. கயிலைமலை-தென்கைலாயமான திருக்காளத்திமலை. திருக்காளத்தி மலை சிலந்தியும் பாம்பும் யானையுமாகிய இவற்றிற்கே உரிய பங்கோ. இம் மூன் றும் திருக்காளத்தியில் இறைவனை வழிபட்டு முத்திபெற்றவைகள். இத்தலமும் கயிலை யெனப்படுதலால் இங்ஙனம் கூறினர்.

உகO. கொண்டு வருதி வருதியெனக் கொண்டுபோய்
கண்டு திருத்தேர்முன் கைம்முகிழ்த்தாள் - திண்டோளை

உகக. மொய்த்து விரிந்ததிரு நீற்று முதுநிலவில்
வைத்து மடக்கு மடநோக்கம் - தத்தித்

உகஉ. திரைகுதிக்கும் பாற்கட லோடித் திரும்பிக்
கரைகுதிக்குஞ் செஞ்சேல் கடுத்தாள் - விரிகயத்து

உகங. வேமா டகப்பாவை தோய்ந்தென்ன மெய்தோய்ந்த
காமா னலமுங் கடிதோய்ந்தாள் - மாமாரன்

உகச. பூவர் சரம்பூட்டி மீட்டான் புராந்தகனுந்
தேவ ருடனத் தெருவகன்றான் - பாவையைச்

உகரு. சீறு வெயிலனிச்ச நீழல்வாய்ச் சேர்த்தென்னக்
கூறு மகளிர் கொடுநடந்தார் - வேறொருத்தி

(மங்கை)

உகசு. மங்கை வடவனத்து வாதாளன் மாதாளக்
கொங்கை மறைத்தணிய கூறையாள் - வெங்கட்

உகஎ. கொலைகற் றணிய கொழுங்கயற் கண்ணாள்
கலைகற் றணிய கருத்தாள் - மலரளகம்

உகO. கொண்டுபோய் - மான்முதலியவற்றையும் உடன்கொண்டுபோய்.

உகஉ. (பி - ம்.) எரியகத்து.

உகக-உ. திருநீற்றின் ஒளிக்குப் பாற்கடல் உவமை. நோக்கம் சேல் கடுத்தாள்; நோக்கம் - கண்.

உகஉ-ங. விரிகயத்துத் தோய்ந்தென்ன. காம அனலம் - காமமாகிய நெருப்பு. கடிது - விரைவில்.

உகச. பூவர் - பூ; அர்: பகுதிப்பொருள் விகுதி; "பூவர் சோலையக் கயிலையிற் புகுந்தவப் பொழுதே", "பூவர்சே வடிச்சுவட்டிற் பூப்பொழிந் திறைஞ்சி" (கைலாயச். 5, தலவிசிட்டச். 18); "பூவர் சோலை, புகுவலென் றெண்ணினான்" (சீவக. 1328.)

உகரு. வெயில் அனிச்சம் - வெயிலிலுள்ள அனிச்சப்பூவை.

உகசு. வடவனம் - திருவாலங்காடு. அந்தத் தலத்திற் சிவபெருமான் காளியோடு வாதஞ் செய்து ஊர்த்துவ தாண்டவமாடினமையின் வாதாளன் என்றார். அணிய - அண்ணிய; பின்வருவனவற்றிற்கும் இங்ஙனமே பொருள் கொள்க; "பிறந்தணிய கிள்ளை பெருத்தாயர் கொங்கை, மறந்தணிய செவ்வி மடமான்" (இராசராச. 116.) கூறை - மேலாடை.

உகஎ. கலை - பொதுமகளிர்க்குரிய நூல்கள்; **மணிமேகலை, உ:** 18 - 32-ஆம் அடிகளாலும், "யாழ்முத லாக வறுபத் தொருநான், கேரிள மக

உ௧௮. பின்சாய்த் தணிய பிடராள் மடநாண்
முன்சாய்த் தணிய முகத்தினாள் - மின்சூழ்

உ௧௯. நிலப்பதும ராக நிறையறையைப் பண்டைப்
பொலப்பதும ராகமெனப் போந்து - மலைச்சொக்க

உ௨௦. நாயகி நாயக னம்வீதிக் காயிர
வாயகி யாரன் வருந்துணையும் - தாயர்முன்

உ௨௧. பாங்கியை யாடுதும் பந்தென்று கைப்பந்து
வாங்கி யெறிந்தாடும் வாதாட்டிற் - பாங்கி

உ௨௨. எறிந்தவையி லொன்றொளித் தேந்திழையெல் லோரும்
செறிந்தவையிற் புன்முறுவல் செய்தாள் - அறிந்தவளும்

உ௨௩. பந்து கரந்தது பார்த்திபர்க் கோலிடுதும்
இந்து நுதலி யெனநகைத்தாள் - செந்திருவும்

உ௨௪. முன்னர்ப் பிறிதொருத்தி மொய்பந் திழந்தமையும்
பின்னர்க் குலிசன் வெருண்டமையும் - அன்னவன்

உ௨௫. பட்ட குறையும் படுசிறையு நந்தலத்தின்
இட்ட கதையோதிற் றில்லையோ - பட்ட

ளிர்க் கியற்கையென் றெண்ணிக், கலையுற வருத்த காமக் கேள்வி" (பெருங். ௧. 35 : 84-6) என்னும் பகுதியாலும் இவை விளங்கும்.

உ௧௯. பொலப் பதுமராகம் - பொன்னாலாகிய சிவந்த தாமரைப்பூ. என - என்று சொல்லும்படி. மங்கையைத் திருமகளாகக் கூறியபடி; "செந்திரு" (உ௨௩) என்பர் பின்.

உ௧௯-உ௨௦. மலைச் சொக்கநாயகி : அம்பிகையின் திருநாமம். ஆயிரவாய் அகி ஆரன் - ஆயிரம் வாயையுடைய பாம்பாகிய ஆதிசேடனை மார்பில் மாலையாக உடையவர்.

உ௨௨. எறிந்தவையில் - எறிந்த பந்துகளுள். ஒன்றை ஒளித்து. ஏந்திழை - மங்கை; எழுவாய். செறிந்தவையில் = செறிந்த அவையில்; தொகுத்தல் விகாரம். அவள் - பாங்கி. செந்திரு - மங்கை.

உ௨௪. பிறிது வேறென்னும் பொருளில் வந்தது. ஒருத்தி - ஒரு தெய்வப் பெண். குலிசன் வெருண்டமை - இந்திரன் சிவபெருமானைக் கோபித்தமை.

உ௨௫. தலத்தின் இட்ட கதை - தலவரலாறு; ௩-ஆம் கண்ணியின் குறிப்பைப் பார்க்க.

௨௨௬. குறையவர்க் கன்றிக் குவலயங் காக்கும்
இறையவற்கும் வேண்டிற்றே யென்றாள் - முறையே

௨௨௭. இருவரு மித்திற மின்பவினை யாட்டிற்
பொருவரு மாறே புகலத் - திருவரும்

௨௨௮. வெள்ளத் தெழுந்த பகலை யிரவாக்கும்
தெய்வப் பெரிய திகிரிக்கும் - வெளவம்

௨௨௯. அடைத்துளா ஞபிபிறந் தாவிபல கோடி
படைத்துளான் பாசப் படைக்கும் - புடைக்கிரியை

௨௩0. வீட்டி வலனை விழுத்தி விருத்திரனை
ஓட்டிய வச்சிரா யுதத்திற்கும் - பாட்டனைத்தும்

௨௩௧. ஓது நெறியே யுயிர்செலுத்திச் செல்லாரை
மோதும் யமதண்ட மூரிக்கும் - ஓதஞ்சூழ்

௨௩௨. வேலா வலயத்தும் வேற்றண்ட சாலத்தும்
தோலா வலிகொடுக்குஞ் சூலத்தான் - ஆலாலம்

௨௩௩. உண்டான் கழுக்குன் றுடையா னெமையடிமை
கொண்டான் மறுகு குறுகுதலும் - தண்டாது

௨௩௪. பண்டு பணிந்த பருவத் திருவத்துக்
கொண்டு பெயர்ந்த குறுந்தொடியும் - வெண்டுகிலும்

---

௨௨௬. அவர்க்கு அன்றி-சிவபெருமானுக்குக் கூறுதலன்றி. இறையவற்கு-அரசனுக்கு. வேண்டிற்றே : வேண்டாவென்றபடி.

௨௨௭. பொரு அருமாறு - ஒப்பில்லாத வண்ணம்.

௨௨௮. திருமால் சக்கரத்தாற் சூரியனை மறைத்தது பாரத கதை. திகிரிக்கும் - திருமாலின் சக்கரத்திற்கும். வெளவம் - கடலை.
(பி - ம்.) வெளவத்துலகிற்.

௨௨௯. அடைத்துளான் - திருமாலினுடைய. பாசம் - பிரம பாசம்.

௨௨௯-௨௩0. கிரியின் பக்கத்தை வெட்டி வீழ்த்தி ; வீட்டி - வீழ்த்தி. வலன் : ஓரசுரன். விருத்திரன் - விருத்திராசுரன் ; இவர்களை இந்திரன் கொன்றதை, முறையே **திருவிளை.** மாணிக்கம் விற்ற படலத்தாலும், இந்திரன் பழிதீர்த்த படலத்தாலும் அறிக. பாட்டு - வேதம்.

௨௩௧. மூரி யமதண்டம் - வன்மையையுடைய யமதண்டம்.

௨௩௨. வேலா வலயம் - பூமி. வேறு அண்டசாலத்தும் - வேறு அண்டங்களின் தொகுதியிலும்; சாலம் - தொகுதி.

௨௩௪. பருவம் - பெதும்பைப் பருவம்.

உ௩௫. இன்னங் கொடுபெயர்து மென்றகருத் தன்றியே
பின்னம் பறிபோம் பிழையறியாள் - முன்னம்

உ௩௬. பனிப்பகழி மீட்டமை பார்த்தா ளநங்கன்
இனிப்பகழி மீளாமை யெண்ணாள் - கனிக்கிளவித்

உ௩௭. தோழியருந் தானும்போய்த் தொண்டர்க ளையகனை
வாழியரென் றேத்தி வணங்கினாள் - வீழுங்காற்

உ௩௮. பூரித் தகலும் பொலன்கச்சு மெய்ம்மெலியப்
பாரித் தகலும் பலகலையும் - நேராய்

உ௩௯. நெரிந்த சிலகுருகு நீணிலமான் கொள்ளச்
சரிந்த சிலகுருகுந் தந்தாள் - பெருந்தகையும்

உ௪௦. தேரை மறுமறுகிற் செல்விப்பச் செல்வியும்
ஓரை யுடன்மாடத் தூட்புகுந்தாள் - பார்வை

உ௪௧. நனவு பிரியாமை நாதாந்தச் சோதி
கனவு பிரியாமை கண்டாள் - அனநடையார்

உ௪௨. கண்ணைத் தனையுங் கடலென்ப தெம்பெருமான்
வண்ணப் பவள வனம்புக்கோ - விண்ணவரிற்

உ௪௩. பேரா யிரமுடைய பெம்மான் முடிக்கங்கை
ஓரா யிரமுகத்தோ டோடியோ - ஈரப்

உ௩௫. பின்னம் - பின்பு ; அம் ; பகுதிப் பொருள் விகுதி. பறிபோம் - நீங்கும் ; "பார்ப்பான் கதையும் பறிபோச்சே" (தனிப்.) முன்னமென்றது இவளது பெதும்பைப் பருவத்தை.

உ௩௬. அநங்கன் - மன்மதன்.

உ௩௮. (பி - ம்.) மெய்ம்மெலிவும்.

உ௩௮-௯. மகிழ்ச்சியாற்பூரித்து விரகத்தால் இளைத்தாளென்பது கருத்து. பாரித்து - பெரிதாகி. மகிழ்ச்சியால் வளை நெரிந்தது ; விரகத்தால் அது சரிந்தது. குருகு - வளையல்.

உ௪௦. ஓரை - மகளிர் விளையாட்டு ; இங்கே மகளிருக்கு ஆயிற்று ; ஆகு பெயர்.

உ௪௧. பிரியாமை - பிரியாமல்.

உ௪௨. பவளவனம் - பவளக்காடு ; என்றது சடையை.

உ௪௩. கங்கை ஆயிரமுகமுடைய தென்பர் ; "கங்கை, துறைகொ ளாயிர முகமுஞ் சுழல" (கல். ௧௮ : 8-9); தக்க. 417-ஆம் கண்ணியின் உரையைப் பார்க்க.

உ௪௪. பிறையு முழிதந்தோ பேராமை மீனம்
நிறையு முறுப்பா னிவந்தோ - செறிவிற்

உ௪௫. குழையா மகரங் குடிகொண்டோ நாகத்
துழையாம் விடைத்திருமா லுற்றோ - அழகிய

உ௪௬. கண்ட விடநீலங் கைகலந்தோ வென்றென்று
விண்ட கலுழி விழிபொழிந்தாள் - ஒண்டொடி

(மடந்தை)

உ௪௭. மற்றொருத்தி தெய்வ மடந்தை மலர்க்கோயில்
முற்றொருத்தி பின்செல்ல முன்செல்வாள் - சுற்றும்

உ௪௮. பரிந்த புதுமின் படாமுகிலு மெங்கும்
விரிந்த முகிற்படா மின்னும் - பெருந்தடக்

உ௪௯. கைம்மருங் கெய்தாக் கரிக்கோடு மக்கோடு
மொய்ம்மருங் கெய்தா முரட்கையும் - விம்மும்

உ௫௦. இசைபிறவா யாழு மிருமகர யாழின்
மிசைபிறவாப் பேரிசை வீக்கும் - திசைதுளங்க

உ௫௧. நஞ்சுமி ழாததொரு நாகமு நாகத்தின்
நெஞ்சுமி ழாத நெடுநஞ்சும் - கஞ்சன்

உ௪௪. ஆமையின் ஓடும் மீனத்தின் கண்ணும் சிவபெருமான் அணிந்தவை. செறி வில் - செறிந்த ஒளியையுடைய.

உ௪௫. விடைத்திருமால் - விடையாகிய திருமால். திருமால் கடலில் உறங்குபவர்.

உ௪௬. கலுழி - கலங்கிய கண்ணீர்.

உ௪உ-௬. மகளிர்கண்களைக் கடலாகக் கூறுதல் பொருந்து மென்பாளாய்ச் சிவபெருமானுடைய உறுப்புக்களில் அணிந்த பொருள்களை அக்கடலிலுள்ள பொருள்களாக உருவகஞ் செய்து கூறினள்.

உ௪௭. மலர்க்கோயில் முற்று ஒருத்தி - திருமகள்.

உ௪௮. மின் படா முகில் - மின்னல் உண்டாகாத மேகம்; என்றது கூந்தலை. முகிற்படா மின் - இடை.

உ௪௯. கை - துதிக்கை. கரிக்கோடு - கொங்கை. முரட்கை - தொடை.

உ௫௦. யாழ் - முன்கை. இசையின் வீக்கு - இசையின் மிகுதி; என்றது வார்த்தையை; வீக்கு - மிகுதி; இது வீக்கமெனவும் வழங்கும் "என்னினி, வேறியாம் புகல்வது நிலவின் வீக்கமே" (கம்ப. உண்டாட்டுப். 3.)

உ௫௧. நாகம் - அல்குல். நஞ்சு - கண்ணின் விழி. கஞ்சன் - பிரமதேவன்.

உருஉ. நயக்க வவயவமாச் செய்திந்த ஞாலம்
வியக்க வகுத்ததிரு மெய்யாள் - புயற்காவில்

உருங. அம்மணி கண்ட னழகொத் தொழுகுமொரு
செம்மணி யூசலைச் சேர்ந்ததற்பின் - அம்மனையும்

உருச. பந்து முறுப்பே பரிசிக்கும் பேறளித்தாய்
முந்து மிதற்கே முழுதளித்தாய் - முந்தைநாட்

உருரு. பூவைநின் னூசல் புரிந்ததவம் யாதென்று
பர்வைய ரெம்மருங்கும் பாராட்ட - ஆவலாய்த்

உருசு. தொல்லை மலர்க்கமலத் தோகையைத் தோகையென்
றெல்லை யெடுத்தாங் கினிதேத்தித் - தொல்லைமறைக்

உருஎ. கோடுங் குகநதியுங் கொன்றையுந் தண்டீர
நாடுஞ் சிவபுரமு நாற்பரியும் - கோடிரண்

உருஅ. டாயிர வேழமு மாடற் பெருமுரசும்
மாயிரு ஞால வயிற்றேறும் - தூயண்ட

உசஅ-உருஉ. மடந்தையின் கூந்தல் முதலிய அவயவங்களை விலக்குருவக மென்னும் அணியமைய இங்ஙனம் கூறினர்.

உருங. அழகு - செந்நிறம்; செம்மணி ஊசல் - மாணிக்க ஊசல்.

உருச. இதற்கென்றது ஊசலை.

உருசு. கமலத்தோகை - திருமகள்; இங்கே மடந்தை. தோகை - மயில்போன்றவள்; சோலையில் இருத்தலால் மயிலாகக் கூறினர்.

உருசு-சு. இக்கண்ணிகளில் தசாங்கம் கூறப்படும்.

உருசு-எ. மறைக்கோடு - வேதகிரி. குகநதி - ஸ்கந்த நதி; இது பாகு லேய நதியென்று வடநூலில் வழங்கும். "ஓவிலாக் குகநதிக்கே யுத்தரத் தரையா மென்ப" (வேதகிரிச். 7); இதனை இக்காலத்தார் பாலாறென்பர். தண்டீர நாடு - தொண்டை நாடு; நூச - ஆம் கண்ணியின் உரையைப் பார்க்க. சிவபுரம் - திருக்கழுக்குன்ற நகரம். நாற்பரி - நான்கு வேதங்களாகிய குதிரைகள்.

உருஎ-அ. கோடு இரண்டாயிர வேழம் - ஐராவணமென்னும் யானை; கோடு - கொம்பு. ஆடற்பெரு முரசு - வெற்றி முரசு. பூமியை வயிற்றிலே யுடைய திருமாலாகிய ஏறு; இடபக்கொடி.

௨௫௯. கோடிநெடி தாண்டு குலாயதிரு வாணையும்
பாடியினி தாடும் பருவத்தே - கோடியர்

௨௬௦. சென்னியர் சூதர் சிலதர் சிலதியர்
கன்னியை வாழியெனக் கைகூப்பி - அன்னமே

௨௬௧. மண்ணிற் பிறந்த மலர்த்திருவே யத்திருவின்
கண்ணிற் பிறந்த கவுத்துவமே - பெண்ணமுதே

௨௬௨. மாமடந்தை நின்மேனி வாடிற் புறங்கொடுத்த
பூமடந்தை மெய்யிணையாப் போகாதோ - மாமுலையும்

௨௬௩. பொற்றூழ் வடமு மசையப் பொறுமலோசிந்
திற்றுன் மருங்கு லிரண்டுண்டோ - சுற்றிய

௨௬௪. மாலை யவிழக் குழலவிழின் மாரிபோய்
வேலை யகில மெலியாதோ - கோல்வளையாய்

௨௬௫. தானை முலைக்கச் சவிழத் தனித்தனியெட்
டானையு மானித் தகலாவோ - மாநிலம்

௨௬௬. ஏற்ற வரவு னிடையிற் கலாபாரம்
ஆற்ற முழங்கி னனுங்காதோ - போற்றும்

---

௨௫௯. கோடியர் - கூத்தர்.

௨௬௦. சென்னியர் - பாணர். சூதர் - நின்றேத்துவார். சிலதர் - ஏவல் செய்யும் ஆடவர். சிலதியர் - ஏவல் செய்யும் மகளிர்.

௨௬௧. கண்ணின் - கண்ணைப்போல.

௨௬௨. மடந்தை: அண்மை விளி. புறங்கொடுத்த - அழகுக்குத் தோற்ற. பூமடந்தை - திருமகளது.

௨௬௩. மருங்குல் இற்றல் - இடை ஒடிந்தால்; “சேமவிடை யின் றென்று தேராத” (வெங்கை யுலா, 279.)

௨௬௪. அவிழ்ந்த கூந்தலைக் காணின் அஞ்சி மேகம் தோன்றுதாதலால் ‘மாரிபோய்’ என்றார்; போய் - போக.

(பி - ம்.) குழலவிழ்ந்து மாரிபோல்.

௨௬௫. தானையும் கச்சும் அவிழ; தானை - மேலாடை. மானித்து மானங்கொண்டு; நாணி.

௨௬௬. அரவு - ஆதிசேடன். அனுங்காதோ - வருந்தாதோ. பாம்பு கலாபாரத்தின் ஒலியைக் கேட்பின் இடியென்று நினைந்து துன்பமடையு மென்றபடி.

உசுஎ. திலக மணியாயிச் செய்கைநீ செய்தால்
உலக முறுக ணுறுமோ - பலமொழிந்தென்

உசுஅ. அம்மை யமையு மமையுமெனுங் காலத்துச்
செம்மேரு வீரச் சிலைவல்லான் - நம்மைவந்

உசுகூ. தாண்ட திருமலை யாளுடையா னற்பரியும்
பூண்ட திருத்தேரிற் போதுதலும் - ஈண்டிவளும்

உஎ0. ஊசலை விட்டிழிந் தோடித் தொழுதுமதன்
பூசலை விட்டுப் புறஞ்செல்லாள் - ஆசை

உஎக. உழந்தா டொடியுந் துகிலு முடனே
இழந்தாள் கடந்ததுதே ரிப்பால் - விழைந்திடக்

உஎஉ. கண்ணு முடியுமெனக் கைக்கொண்ட திங்களைநாம்
பண்ணுந் தழலென்கை பாங்காமோ - கண்வலத்தைச்

உஎங. சற்றே விழிப்பினுந் தங்காத கங்குலை
உற்றே யுகமென்ப துட்கொளுமோ - நெற்றிக்கண்

உஎச. காதித்தான் வெந்துதிருங் காம னியமனென
வாதித்தா னென்னின் மதிக்குமோ - மோதிய

உஎரு. தெண்ணீர் கரந்த சிரத்தார் திருவுளநம்
கண்ணீர் பெரிதாக் கருதுமோ - பண்ணீர்மை

உஎசு. யாழிசை யுண்ணின் றதிருஞ் திருச்செவிக்கீழ்
ஏழிசை நீதென்று மேற்குமோ - சூழடவி

உசுஎ. உறுகண் - துன்பத்தை.

உசுகூ. திருமலையாளுடையான்: இறைவன் திருநாமம். நாற்பரி பூண்ட தேர்: "கோட்டிற் செய்த கொடுஞ்சி நெடுந்தேர்..........பால்புரை புரவி நால்குடன் பூட்டி" (பொருந. 163-5.)

உஎக-உ. இடக்கண்ணும் முடியும். சிவபெருமானுக்குச் சந்திரன் கிரீடமாக உள்ளதென்பது சந்திரமௌலீசரென்னும் திருநாமத்தாலும் அறியப்படும். கண்வலத்தை - வலக்கண்ணான சூரியனை.

உஎங. விழிப்பினும் - விழித்தாலும். கங்குல் - இராப்பொழுது.

உஎச. காதி = காத - எரிப்ப. (பி - ம்.) மதியாமோ.

உஎரு. (பி - ம்.) பெரிதென்கை கைக்கொளுமோ.

உஎசு. இரண்டு நாகர்கள் தோட்டின் வடிவங் கொண்டு திருச்செவிகளில் தங்கியிருந்து இசைபாடுகின்றனரென்பது புராண வரலாறு; ஙகூங-ச.

உஎஎ. மீது திரிதந்த வாளுயர் வேய்பொறுத்த
காது கழைபிழையாக் காணுமோ - வீதிதொறும்

உஎஅ. அவ்வான் மணிகறங்கச் செல்வா ரகமுநமக்
கிவ்வான் மணிசுடுமென் றெண்ணுமோ - வெவ்வா

உஎகூ. பரண மருந்தப் படுவிக்குந் தென்றல்
மரண மெமக்கென்றால் வாய்ப்போ - முரணுது

உஅ0. வீறு குயின்மா வடிக்காஞ்சி மேயாற்கு
மாறு குயிலென்றான் மாறன்றே - ஊறிய

உஅக. பாற்கடல் சேயாற் பருகுவித்தார் நெஞ்சமும்
கார்க்கடல் வேகங் கணிக்குமோ - மேற்கடிஞை

உஅஉ. ஐய மெடுத்தூ ணயின்றார்க் கெமதூணை
வெய்ய விடமென்னின் மெய்யாமோ - தையன்மீர்

உஅ௩. பிள்ளைப் பழிக்கஞ்சா வஞ்சகர்க்குப் பெண்பிறந்தேம்
கொள்ளைப் பழிக்குமனங் கூசுமோ - வள்ளலுக்

உஅச. கெவ்வாறு தூதுவிடுத் தெவ்வா றிதுதெளிவித்
தெவ்வா றிருந்துய்வ தென்றயர்ந்தாள் - அவ்வீதி

உஎஎ. வேய், கழை - வேய்ங்குழலின் இசை ; ஆகுபெயர்.

உஎஅ. ஆன்மணி - இடபத்தின் கழுத்திற் கட்டிய மணி. செல்வார் பிச்சைக்குச் செல்வார் ; "நீறேறுந் திருமேனி நெடும்பகலே நிலவெறிப்ப, ஏறேறிக் கடைதோறு மிடுபலிக்கு வருதிரால்" (தொல். செய். 146, பேர். மேற்.)

உஎஅ-கூ. ஆபரணம் - பாம்பு. மரணம் - மரணத்தைச் செய்வது.

உஅ0. குயில் மாமரத்தில் வாழ்வது. மா - வேதமாகிய மாமரம். காஞ்சி - காஞ்சிபுரம்.

உஅக. சேய் - உபமன்யு முனிவர். கடிஞை - பிச்சைப்பாத்திரத்தில்.

உஅஉ. பிச்சை யெடுத்துண்ணும் உணவு அமுதம்போல் இருக்குமென் பது கருத்து.

உஎஉ-அஉ. சந்திரன், இரவு, மன்மதன், இசை, வேய்ங்குழலோசை, ஆன்மணியொலி, தென்றல், குயிலோசை, கடலோசையென்பன துன்பம் செய்தலையும், உணவு நஞ்சுபோன்றிருத்தலையும் மடந்தை புலப்படுத்தினள்.

உஅ௩. பிள்ளைப்பழி - சிறுத்தொண்டநாயனருடைய பிள்ளையைக் கொல்வித்த பழி ; "பிள்ளைப் பழிகொண்டார் பெண்பழிக்கு நாணுவரோ, கொள்ளைப் பழிகொள் கொடியரென்பார்" (திருவிடை. உலா, 293.)

(அரிவை)

உஅரு. மற்றை யரிவை யொருத்தி வரவேதப்
பொற்றை யருவிப் புதுவயிரம் - கற்றைச்

உஅசு. சடையார் பவனி தமனிய வீதிக்
கிடையார வாரித் தெழுமுன் - புடைநின்ற

உஅஎ. வேளை யருகழைத் தேதுவிளை யாடுதும்
காளை விளம்பென்னக் காமனும் - தாளிறைஞ்சி

உஅஅ. அம்மனை யென்றா னணங்கவனை யம்மனைசெய்
தெம்மனை யாடரங்கத் திகென்றாள் - அம்மனைக்குக்

உஅகூ. கொள்ளத் தகுவதுகோல் கோவருண் முத்தென்றான்
எள்ளத் தகுவ திதுவென்றாள் - தெள்ளமுதச்

உகூ0. சோமப் பதமுத்தோ வென்றானச் சோமபதம்
ஏமப் பதமோ வெமக்கென்றாள் - மீமிசையிற்

உகூக கொண்டல் கரிமருப்பு முத்தோ குறிப்பென்றான்
அண்டர்க் கரசு மனைத்தென்றாள் - தண்டுளவக்

உகூஉ. கோலத் தயன்வனசத் தொண்முத்தோ கூறென்றான்
ஞாலத் தவையு நவையென்றாள் - கோலேந்தும்

உகூ௩. வேயுந் தமியன்கை வின்முத்தோ சொல்கென்றான்
நீயும் புறக்கடவு ணீக்கென்றாள் - வேயீன்ற

உஅரு. வேதப் பொற்றை - வேதாசலம். அருவி: "கல்லில் வெள்ளை யருவித் தண்கழுக் குன்றினை" (சுந்தர. தே.)

உஅஎ. காளை: அண்மைவிளி.

உஅஅ. அணங்கு - அரிவை.

(பி - ம்.) ஆடரங்கிற் கேகென்றாள்.

உஅகூ. கோ - பசு; காமதேனுவுமாம்; கக்க.

உகூ0. சோமப் பதம் - சந்திர பதம். ஏமப்பதம் - இன்பத்தை யுடைய பதவி. சந்திரனிடத்திலிருந்து முத்து உண்டாகும் என்பர்.

உகூக. கொண்டல் - மேகம். கரி - ஐராவதம் என்னும் யானை. அண்டர்க்கு அரசு - இந்திரபதவி.

உகூக-உ. துளவக் கோலத்து - திருத்துழாயை அணிந்த ஆதிவராகத்தின்; கோலம் - பன்றி. அயன் வனசத்து - பிரமதேவருடைய தாமரைப் பூவினது; "பிரமர்மேற் காலம் பிறந்தகத்து முத்தம், பரமர்மேற் சாத்தியது பாரீர்" (கூஉ) என்றார்.முன்னும். நவை - குற்றம். கோல் - அம்பு.

உகூ௩. வில் - _ கரும்பு. வேய் - மூங்கில்.

௨௯௪. முத்த மினிதோ மொழிகென்றான் முத்திருக்கண்
அத்தன் வடிவிதுவே யாமென்றாள் - முத்ததனாற்
௨௯௫. பண்ணித் திருமுன் பணிந்து மதனுதவக்
கண்ணிக் குழலி கவர்ந்தாட - விண்முகிலும்
௨௯௬. அல்லும் புகுந்த சசியொத் தளகத்தே
புல்லுந் தொழிலிற் புகாநின்றும் - மெல்லக்
௨௯௭. கடல்வழங்குந் திங்களைப் போலக் கலகித்
தடல்வழங்குங் கண்ணே டடுத்தும் - முடிவிலா
௨௯௮. ஞானத் திருமூர்த்தி நன்மகுடத் திந்துவை
· மானத் தனத்தே வயங்கியும் - மீன
௨௯௯. வெளியிடை யம்புலியின் வெண்டாளக் காஞ்சி
ஒளியிடை நீங்கா துழன்றும் - தெளிமதியம்
௩00. ஓகையைச் சூழ்ந்தென் னுடனுதித்தா ளென்றுதிருத்
தோகையைச் சூழ்ந்ததெனச் சூழ்போந்தும் - ஆகத்தின்
௩0௧. ஒன்று முறப்பி ணைழிதரா தம்மனைகள்
சென்று திரிதருஞ் செவ்விக்கண் - மன்றத்
௩0௨. திறையோன் சுரகுருச்சோ ளேசனகி லேசன்
பொறையோன் திருவுலாப் போத - இறையும்
௩0௩. தரியா தெழுந்து தமரோட வோடிப்
புரியா தாவிற் புகுந்தாள் - விரிசடையிற்
௩0௪. கங்கா சலத்தலையான் கைத்தலையான் முத்தலைவேற்
கங்கா சலத்தலையான் கால்பணிந்தாள் - அங்கட்

௨௯௩-௪. திருநெல்வேலியிலும் திருப்பாசூரிலும் சிவபெருமான் மூங்கிலடியிற் றோன்றியவராதலின் வேய்முத்தென்று பாராட்டப் பெறுவர்.

௨௯௫. கண்ணி - தலையிற் சூடும் மாலை; புறநா. ௧ : 1.

௨௯௫-௬. முகிலும் அல்லும் கூந்தலுக்கு உவமை. சசி - சந்திரன்.

௨௯௭. கலகித்து - கலகஞ் செய்து. கண்ணுக்குக் கடல் உவமை.

௨௯௯. அம்புலியின் - சந்திரனைப் போல. காஞ்சி - ஒருவகை மேகலை. ஒளியிடை - ஒளியை யுடைய இடை. இடைக்கு ஆகாயம் உவமை.

௩0௨. சுரகுருச் சோளேசன்: இறைவன் திருநாமம்; சுரகுரு என்னும் சோழன் வழிபட்டமையால் இத் திருநாமம் அமைந்தது.

௩0௪. கங்காசலத்து அலையான்; கங்காசலம் - கங்கைநீர். கைத்தலை முத்தலை வேலான் என விகுதி பிரித்துக் கூட்டுக. கங்காசலம் - திருக்கழுக்குன்றம்.

௩0௫. கழுகு தொழவீற் றிருந்தோன் கருணை
ஒழுகு திருமுகம்பார்த் துய்ந்தாள் - விழிகளுழ்ந்தாள்

௩0௬. பேச விடங்காண் பரியபெரும் பேரழகா
தேச விடங்கா சிவலோகா - நீசிறிது

௩0௭. கோவ நிசாசரப்போர் கொல்கோடி ருத்திரரை
ஏவ நிசாசரப்போ ரேகாதோ - ஆவியடும்

௩0௮. திண்ணரக்கர் சேயைச் சினந்த முனிசாபம்
கண்ணரக்கர் சேய்க்குங் கலவாதோ - எண்ணாத

௩0௯. வென்றிக் கலுழற்குன் வெள்ளேறு செய்வருத்தம்
அன்றிற்கு மென்குயிற்கு மாகாதோ - அன்றமைச்சன்

௩௧0. வெண்பொ னிறந்தீர்த்த வெண்சுனையால் வெவ்வினையேன்
ஒண்பொ னிறந்தீர்க்க வொண்ணாதோ - எண்படா

௩௧௧. மண்ணி னதியடங்கக் கண்டநின் மாதீர்த்தம்
கண்ணி னதியடங்கக் காணாதோ - அண்ணலே

௩௧௨. என்றுற் றுயர்ந்தா ளிவளை யிருளைகொடு
சென்றாண் மலரமளி சேர்த்திருள் - பின்றை

௩0௫. கழுகு தொழ வீற்றிருந்தோன் : காப்பின் குறிப்புரையைப் பார்க்க.

௩0௬. பேச - பேசுதற்கு. தேச விடங்கர் : ஸோமாஸ்கந்தமூர்த்தியின் திருநாமம் ; "சோதி விடங்கர்" (திருக்காளத்தி. உலா, 74) என்பது போல ; தேசம் - ஒளி.

௩0௭. நிசாசரப்போர் - அசுரரின் சண்டை, சந்திரனுடைய போர்.

௩0௮. அரக்கர் சேய் - மாயீகனென்னும் அரக்கன் (௧௧, ௧௩௨.) முனி - மார்க்கண்டேயர். கண் அரக்கர் சேய் - சிவந்த கண்களையுடைய திருமாலின் மகனான மன்மதன்.

௩0௯. வென்றிக் கலுழன் - முன்பு வெற்றியையுடைய கருடன்.

௩0௯-௧0. அமைச்சன் - சுரகுருவின் மந்திரியான இரணிய சேதாவென்பவன். வெண்பொன் - வெள்ளி. சுனை - சம்பாதி தீர்த்தம்.

௩௧௧. தீர்த்தம் - பன்னிரண்டு தீர்த்தங்கள் ; இவற்றின் விரிவை ௧௬-ஆம் கண்ணியின் குறிப்புரையால் உணரலாகும். கண்ணின் நதியென்றது ஆருகப் பெருகும் கண்ணீரை.

(பி - ம்.) அடங்கக் காவாதோ.

௩௧௨. இருளை - தோழி.

(தெரிவை)

ருகரு. ஒருத்தி தெரிவை யுலகுபதி னாலும்
வருத்தி மனங்கவர வல்லாள் - அருத்தியிற்

ருகச. பாங்கியர் சேடியர் பாராட்டப் பேரியாழ்
வாங்கி யரமியத்து வைகுதலும் - ஆங்கொரு

ருகரு. பாடகி வந்து பணிந்து பணிமொழிமுன்
சூடக முன்கைத் துணைகூப்பி - ஆடக

ருகசு. வெற்பும் கயிலைப் மேதகைய நீலகிரிப்
பொற்பு முலையாப் புகல்புகழ்ந்தாள் - நற்பாவை

ருகஎ. ஏந்து பரன்மீ திடுங்குங் குமசீறு
சாந்து படுங்கொ றனத்தென்றாள் - ஏந்தும்

ருகஅ. மிசையா யிழைசொல்லே மெல்லென் விறலி
இசையா யிசைவ திசைத்தாள் - ஒசிமருங்குல்

ருகக. மாது தமியேன் மொழியு மழுவலான்
காது புகுங்கொலெனக் காதலித்தாள் - மாதங்கி

ருஉ0. மௌவ னகைக்கிருகண் மாதிரமெ லாமளந்து
பௌவ நிகர்ப்பது பாடினாள் - அவ்வணிதை

ருகரு. அருத்தி - ஆசை.

ருகச. பாங்கியர் - உயிர்த்தோழியர். சேடியர் - பணிப்பெண்கள். அரமியத்து - நிலாமுற்றத்தில்.

ருகரு. பாடகி - விறலி. சூடகம் - வளை.

(பி - ம்.) சூடக மென்கை.

ருகரு-சு. ஆடக வெற்பு - மேருமலை. நீலகிரிப் பொற்பு - அழகிய இந்திரநீல பருப்பதம்; பொற்பு நீலகிரி என மாற்றி இயைத்துப் பொருள் கொள்க; பொற்பு : பொருப்பென்பதன் விகாரமுமாம்.

ருகசு-எ. மேரு முதலிய மூன்றும் சிவபெருமான் வீற்றிருக்கும் மலைகளாதலின் அவர் திருமேனியில் அணிந்த குங்குமம் முதலியன அவற்றிற் படுமென்பது கருத்து.

ருகஅ. ஆயிழை சொல் இசையாகப் பொருந்துவதைக் கூறினாள்; அவள் சொல் இசையைப்போல இன்பம் பயப்பதென்றபடி.

ருகக. மாது - தெரிவை காதில் இசை புகுவதை நினைந்து இங்ஙனம் கூறினாள். மாதங்கி - பாடினி.

ருஉ0. மௌவல் நகை : தெரிவை; அன்மொழித்தொகை.

௩௨௧. ஏர்சூழ் கருமென்கட் ணொங்கோ னுடைநோக்கித்
தேர்சூழ் கருங்கோலெனச் செப்பினாள் - பேரிசையாள்

௩௨௨. வன்னக் கவிரிதழி வாளகந் தாருவனம்
என்னப் பலகாலு மேத்தினாள் - அன்னமுமென்

௩௨௩. காதற் சுரும்போதி காமவிளை யாட்டமலன்
போதற் கெழுங்கோலெனப் போற்றினாள் - கீதையும்

௩௨௪. போற்றுந் திருவேட்கை நோக்கிப் புரிசடையான்
ஆற்றும் பணிவுக் கருளுங்காண் - நாற்றிசையும்

௩௨௫. மன்றிற் பெறுதுமந்த மன்றிற் பெருப்பேறும்
குன்றிற் பெறுதுமெனக் கூறுங்காண் - அன்றியும்

௩௨௬. காதல்செய் கோயில் கழுக்குன் றெனக்கடைகாப்
போதல்செய் திட்ட துறுதிகாண் - கோதாய்

௩௨௭. எழுகா தரைவட்ட மேழ்புவன வட்டம்
தொழுகாதன் மிக்குத் தொழுங்காண் - எழுதிநீ

௩௨௮. என்று முடித்தா ளிவளுக் கவளும்பொற்
குன்றும் விடையுங் கொடுத்தெழுந்தாள் - தன்றுணையோர்

---

௩௨௧. உடை யென்றது திசையை. தேர் - பூமியை.

௩௨௨. கவிர் இதழி - முள்ளு முருங்கை மலரைப் போன்ற இதழை யுடைய தெரிவையினது. அன்னம் - தெரிவை.

௩௨௩. சுரும்போதியென்றது விறலியை; விளி. விளையாட்டை யுடைய அமலன். கீதை - இசைப்பாட்டை யுடையவள்; விறலி.

௩௨௪. நாற்றிசை - உலகம்; எழுவாய்.

௩௨௪-௫. மன்று - தில்லைச்சிற்றம்பலம். குன்று - திருக்கழுக்குன்றம். நாற்றிசையும் கூறுமென முடிக்க. (பி - ம்.) பெரிதுவந்த மன்றே பெருவரமும்.

௩௨௬. "காதல்செய் கோயில் கழுக்குன்றே" (திருஞா. தே.) கடைகாப்பு - இங்கே தேவாரம்.

௩௨௭. எழுகாதரை வட்டம்: "இந்தவே தாச லஞ்சூ ழெல்லையே ழரைக்கா தத்தும்" (தலவிசிட்டச். 3); ஏழரைக் காதவட்டமென மாறுக காது - காதம்; கடைக்குறை. எழுதி - எழுவாயாக.

௩௨௮. இவளுக்கு - விறலிக்கு. பொற்குன்றென்றது பரிசாக அளித்த பொற்குவியலை. விடை - செலவு. துணையோர் - தோழியர்.

(பி - ம்.) மொழியவிவளுக்கு.

௧௨௯. வெள்ளம் புறஞ்சூழ வேத கிரிப்புறஞ்சூழ்ந்
துள்ளம் புறஞ்சூ ழுலகையளாய் - வெள்ளமே

௧௩௦. பொங்கி வருமுடியார் வைகும் புறவரைவாய்த்
தங்கி வருமயில்கா டத்தைகாள் - அங்குள்ள

௧௩௧. காளத்தி வேடனிடுங் கைப்பா சிலையேனும்
ஆளத் தினங்கொடுவந் தாற்றிலீர் - நாளும்

௧௩௨. சிராமலைச் செவ்வந்தித் தேம்போதொன் றேனும்
இராமலை யாதுபணிக் கில்லீர் - பராவும்

௧௩௩. இமைய வசலத் திமசலமுங் கூழை
அமைய முகந்திறைத்தீ ரல்லீர் - நமையுடையான்

௧௩௪. விட்டுப் பிரியா வருணகிரி மீதொழுகும்
தட்டுப் புழுகருவி தந்திலீர் - கிட்டரிய

௧௩௫. மாணிக்க வெற்பிற் பொசிவாசி மஞ்சனநீர்
பேணிக் கொணர்ந்தெனக்குப் பெய்திலீர் - தானுவின்

---

௧௨௯. உள்ளம் புறம் சூழ் - உள்ளத்தும் புறத்தும் சூழ்ந்த.

௧௩௦. புறவரை - வெளியேயுள்ள மலைகளாகிய தலங்கள்.

௧௩௧. பாசிலை - பச்சையிலை காமமயக்கத்தால் வெம்மை யுடையா ளாயினமையின் பச்சிலை கொண்டுவந்து ஆற்றுதல் கூறினள்.

௧௩௨. செவ்வந்திபோது சிராமலையில் விசேடமுடையது. இரா மலை யாது - இராக்காலம் வந்து என்னுடன் மாறுபடாதபடி.

௧௩௩. இமைய அசலம் - இமயமலை. இம சலம் - பனிநீர். கூழை - கூந்தலில்.

௧௩௪. தட்டுப் புழுகு - தட்டி எடுக்கப்படும் புழுகு; "தட்டிய புழு கிளைந்துமெய்ப் பனிநீர் துளைந்தன" (அருணைக்கலம். 13); "தட்டுப் புழுகு சவாது பனிநீரும்" (தென்றல்விடு தூது, 55.) இதன் விரிவை **அருணகிரிப் புராணம்**, தராதிபன் புழுகு சாத்திய சருக்கத்தாலுணர்க.

௧௩௫. மாணிக்க வெற்பு - இரத்தினகிரி; வாட்போக்கி. பொசிவாசி - பொசிந்த தண்ணீரின் குறை; "ஆண்டவன்போய்க், கொண்டுவரு மாயி ரத்தைக் கூறுங்தொள் ளாயிரமாக், கண்டுபொசி வாசிக் கணக்குரைத்தே", "சொன்னபொசி வாசியறி தூநலத்தா லெவ்வுலகும், மன்னுபொசி வாசியென வைகினேன்", "பொசிவாசி கொள்வீர் புனலுகவே கண்கள், கசிவாசி தீரக் கருதீர்", "பேணிப், பொசிவாசி கொள்வார்க்குப் பூவையர்க ணீரே, விசு வாச மென்று விடாதே" (இரத்தினகிரியுலா, 23, 27, 162, 329-30); "சூரியரா யிரகோடி தோன்றியபோற் சுடர்மணிக்காக், காரியல்கண் டீனப்

௫௩௬. அம்மலை யென்னு மவையெவைக்கு மேம்பட்ட
இம்மலை யின்க ணினிப்போகீர் - கைம்மலை

௫௩௭. வெள்ளை நிறத்தா னபிடேக மேகநீர்க்
கொள்ளையி னள்ளிக் கொடுதெளியீர் - தெள்ளிய

௫௩௮. வேத னருச்சித்த வேரி முளரித்தேன்
சீத மளைந்து சிறையறையீர் - மாதவனும்

௫௩௯. பூசித்த பாலாழிப் பாசிற் புரள்வெள்ளம்
வீசித் தமியேன் மெலிவகற்றீர் - பேசுவதென்

௫௪௦. ஈரத் துமதுபுகல் யானென் றிரங்கியடி
வாரத் தணங்கு வணங்குதலும் - போரப்

௫௪௧. பெருவரந் தந்தென்னப் பெண்ணினல்லாள் பாகன்
தெருவர வந்தத் திருவும் - நிருதர்

௫௪௨. சிதைய வொருபன் னிருகதிருஞ் செம்மாந்
துதைய கிரிகலந்த தொப்பப் - புதையிருள்போம்

௫௪௩. ஆணிக் கனகா பரணத் தருணமுலை
மாணிக்கம் விட்டெறிப்ப வந்தெதிர்ந்தாள் - பாணி

பொன்னிக் கடநீரா யிரமாட்டப், பூரியெனப் பாத்திரத்திற் பொசிவாசி தர முனிந்த, ஆரியமன் னனைநாளு மகக்கமலத் திருத்துவாம்" (**வாட்போக்கிப் புராணம்**, பாயிரம், 15.) மஞ்சன நீர் - திருமஞ்சனத்திற்காக ஆரியர் கொண்டு வரும் காவிரிநீர்.

௫௩௬-௭. கைம்மலை வெள்ளைநிறத்தான் - வெள்ளை யானையையுடைய இந்திரன்; வெள்ளைநிறக் கைம்மலையென மாறுக.

௫௩௮. சிறை - சிறகு.

௫௪௦. ஈரம் - அன்பு. புகல் - அடைக்கலம். அடிவாரத்து - மலையின் அடிவாரத்தில். போர - மிக; "போரத்தாழ் வானசடம் போட்டு" (**நாற்றெட்டுத் திருப்பதி**. காப்பு, 4.)

௫௪௧. பெண்ணினல்லாள்: அம்பிகையின் திருநாமம்; "பெண்ணினல் லாளொடும் பெருவிடைப் பரியொடும், அண்ணலும் கோடிசூ ரியரையொத் தண்மினன்" (தினகரச். 10); "பெண்ணினல் லாளையொரு பாகமிணையல் செய்யா" (**தே. திருஞா.**) நிருதர் - சூரியனது தேரைத் தடுக்கும் மந்தேகரென்னும் அசுரர்.

௫௪௨-௩. மாணிக்கத்திற்குப் பன்னிரு சூரியர்களும் உவமை. ஒளியை விட்டெறிப்பவென ஒரு சொல்வருவித்துப் பொருளுரைக்க.

௫௪௩-௪. ஆணிக்கனகம் - ஆணிப்பொன். பாணி முகிழ்த்தாள் - கைகளைக் குவித்து வணங்கினாள்.

௫௪௪. முகிழ்த்தா டுதித்தாண் முதுதீ யரக்கின்
நெகிழ்த்தாண் மனத்தையெதிர் நின்றாள் - நகைக்குடையும்

௫௪௫. பேரியுந் தேரும் பெருஞ்சே னையுங்கருணை
வாரியும் போயகல மாதர்போய்ப் - பார்முதலா

௫௪௬. எண்ணிய வண்டங்க ளெல்லா மொளிவிளங்கப்
பண்ணிய மெய்ஞ்ஞான பானுவே - விண்ணதியும்

௫௪௭. ஒக்கச் சிறுபிறையும் பாப்பிறையு மூர்கின்ற
முக்கட் பவள முதுகுன்றே - அக்குவடக்

௫௪௮. கொந்துசூழ் தாரகையுங் குஞ்சரத் தோலிருளும்
வந்துசூழ் செவ்வந்தி வானமே - நந்துசூழ்

௫௪௯. செய்யற் பரவைத் திரைவாய் விடமடுத்து
மெய்யர்க் கமுதளிக்கு மேகமே - வையத்துச்

௫௫௦. சூழும் பரசமயத் தொல்கோடி யாறும்போய்த்
தாழும் பரம சமுத்திரமே - வாழியாய்

௫௫௧. நின்கிரிக்கு மூவர் புகவஞ்சி நின்றமைமெய்ம்
மின்கிரிக்கு நீயும் விளைத்தாயே - தென்கிரிக்கால்

௫௪௪. அரக்கின், மனத்தை நெகிழ்த்தாள். நகை - ஒளி.

௫௪௫. கருணைவாரி யென்றது சிவபெருமானை.

௫௪௭. பாம்பு இறை. அக்கு வடம் - சங்குமணியாலாகிய வடம்.

௫௪௮. யானைத்தோலுக்கு இருள்: "புதையிருளி னெழுகின்ற புகர் முகயா னையினுரிவைப் போர்வை போர்த்த, உதையகிரி யெனுங்கடவுள்" (கம்ப. மதிலைக்காட்சிப். 150.)

௫௪௯. (பி - ம்.) அமுதொழுகும்.

௫௪௮ - ௯. நந்து சூழ்செய்யல் - சங்கு சூழுதலை யுடைய. பரவை - திருப்பாற்கடல்.

௫௫௦. தாழும் - தங்கும். இதனோடு, "மடங்கும் பரசமய வாத நதிவந், திடங்கக் கருங்கடலு மானேன்" (அழகர் கிள்ளைவிடு. 92) என்பது ஒப்பு நோக்கற்பாலது.

௫௫௧. மூவர் - திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் முதலிய மூவர்; இத் தலத்திலுள்ள மலையை மிதிக்க அஞ்சிய மூவரும் கீழே நின்று இத்தலத்தைப் பாடினர்; அங்ஙனம் பாடிய இடம் இத்தலத்திற்குத் தென்கிழக்கில் மூவர் பேட்டையென இப்போதும் வழங்குகின்றது. மின் கிரி - கொங்கை. விளைத்தா யென்றது அதனை நீங்கியின்றதைக் குறித்தபடி. தென் கிரி - பொதியின்மலை. கால் - காற்று; தென்றல்.

௩௫௨. நின்றுதவி யாது நினதுத்தி ராடக்கால்
சென்றுதவி யாகச் செலுத்தாயே - வென்றிப்போர்

௩௫௩. ஆங்கருப்பு வில்லைமுறித் தாட்டப்பெற் றாலலது
தீங்கருப்புக் கட்டிநீ சேராயே - ஆங்கொருத்தி

௩௫௪. தேனுக் கெதிருமொரு செய்யுள்போற் செய்வளவும்
மானுக் கெதிர்திரும்பி வாராயே - ஆனக்கால்

௩௫௫. மல்கப் புனைகொன்றை யேனும் வழங்கென்று
நல்கக் கொணர்ந்திவட்கு நல்கினார் - மெல்லியலும்

௩௫௬. தார்க்கனக வண்ணந் தரித்துத் தரியாது
மேற்கனக வண்ணம் விடுத்துய்ந்தாள் - கார்க்கண்டன்

(பேரிளம்பெண்)

௩௫௭. இத்தேர் வளைபோந் தெருவத் தெதிரொருத்தி
அத்தேர் வளையொப் பரிதென்பாள் - எத்திசையும்

௩௫௮. முன்ன ரமைத்தோ னமைக்கு முறைதேறிப்
பின்ன ரமைத்தவொரு பேரிளம்பெண் - சென்னி

௩௫௯. வகுத்த மலர்துறந்த வார்கோதை கோதை
உகுத்த மலர்ச்சோலை யொப்பாள் - நகக்கயிலைப்

---

௩௫௨. உத்திராடக் கால் - ஆடிமாதத்தில் அடிக்கும் காற்று. ஆடிமாதத்தில் முன்பு இத்தலத்தில் பிரமோத்ஸவம் நடைபெற்று வந்ததைச் சுட்டியது இது.

௩௫௩. கருப்பு வில் - மன்மதனுடைய கரும்பாகிய வில். ஆட்டப் பெற்றால் - அலைக்கப் பெற்றால், ஆலையில் ஆட்டப் பெற்றால். தீங்கருப்புக் கட்டி : இறைவன் திருநாமம்; "ஒட்டிய தன்பாற் குரிய தெனப்பெரிது, கட்டிய தீங்கருப்புக் கட்டிகாண்" (௧௭௧) என்றார் முன்னும்.

௩௫௫. என்று - என்றுகூறி. இவட்கு - தெரிவைக்கு. மாதர் (௩௪௫) நல்கினார் (௩௫௫) என முடிக்க.

௩௫௬. தார் - கொன்றை மாலையினது. மேற் கனகவண்ணம் தரியாது - தன்மேற் பசலைநிறத்தைத் தரியாமல்.

௩௫௭. தேர் வளைபோம் - தேர் வளைந்து செல்லும். தேர் வளை - தேரை வலம்வருதல்.

௩௫௮. அமைத்தோன் - பிரமதேவன்.

௩௫௯. வார்கோதை - பேரிளம்பெண். கோதை, மலரை உகுத்த சோலையை ஒப்பவள்; கோதை - கூந்தல்; பூவணியாமைபற்றி இங்ஙனம் கூறினார். நகக்கயிலை; கயிலை நகமெனமாறுக.

௩௬0. பாலாந் தழன்மேனிப் பண்புங் கழுக்குன்றின்
மேலாஞ் சிவன்வெள்ளை மேனியும் - நீலக்
௩௬௧. களமானு மெய்தினெனக் கண்டொளித்த தென்ன
வளமான் விழிக்கெழுதா மையாள் - இளவரையாய்ச்
௩௬௨. சூழ்ந்தவை யெல்லாந் தூரந்துபெரு விந்தம்போய்
வீழ்ந்தமை பார்த்தனைய வெம்முலையாள் - தாழ்ந்து
௩௬௩. வருபா டினியர் வயிரியர் தற்சூழ்ந்
திருபாடு பாடும்போ தெல்லாம் - அரனிருகா
௩௬௪. தேறியதும் வேணிவிற கேற்றியதுஞ் சேரற்குக்
கூறியதன் னோலைதரக் கொண்டதுவும் - பேறுபெற
௩௬௫. வெவ்வா ளிராவணன்முன் வேதத்திற் பாடியதும்
அவ்வாணி நாரதன்மாட் டாடியதும் - கைவீணை
௩௬௬. ஆதிக் கதம்பவனத் தம்மைநம்மை யாளுடைய
சோதிக் கமுதே சுரப்பதுவும் - பாதியிரா
௩௬௭. ஆரூர் வடபுரிசை யன்பாற் றிறந்ததுவும்
ஏரூர் வடநிழற்கீ ழெய்தியதும் - ஆராயின்

௩௬0-௬௧. இறைவன் திருமேனியைத் தான் பார்த்தால் அம்மேனி கரியநிறத்தை அடையுமென்று கண்ணிற்கு மையெழுதிலள்; நீலக்களம் மானும் - நீலநிறமுள்ள கழுத்தை ஒக்கும்.

௩௬௩. பாடினியர் - விறலியர். வயிரியர் - கூத்தர். இருபாடு - இரண்டு பக்கமும்.

௩௬௩ - ௬௮. **இக்கண்ணிகளில் சிவபெருமானுக்கும் இசைக்கும் உள்ள தொடர்பு சொல்லப்படும்.**

௩௬௩ - ௪. சிவபெருமான் திருச் செவியில் எப்பொழுதும் இசைபாடும் கந்தருவர் இருவர் இருப்பதை எண்ணி 'இருகாதேறியதும்' என்றார். வேணி - சடையில். சேரற்கு - சேரமான் பெருமாள் நாயனாருக்கு. ஓலை : 'மதிமலி புரிசை' என்னும் முதற்குறிப்புடைய திருமுகப்பாசுரம்.

௩௬௫. (பி - ம்.) அவ்வாணி நாரதன் பாட்டு.

௩௬௬. கதம்பவனம் - மதுரை. மதுரை அம்பிகையின் அந்தப்புரஸ்தலமென்பது இங்கே அறியத்தக்கது.

௩௬௭. ஆரூர் வடபுரிசை திறந்தது : சந்நிதியில் வந்து யாழ் வாசிக்க வேண்டுமென்று திருநீலகண்டயாழ்ப்பாண நாயனார் நிரம்பப் பிரார்த்தித்தபொழுது, ஸ்ரீவன்மீகநாதர் வடமதிலில் ஒரு வாயில் செய்வித்து அவ்வழியே வருவித்து யாழ் வாசிக்கச்செய்து கேட்டருளினரென்பது பழைய வரலாறு; இதனை, "கோயில் வாயில் முன்னடைந்து கூற்றஞ் செற்ற பெருந்திறலும்

௬௬அ. இன்னவர் கீதமென் றேத்தித் தனைத்தினமும்
அன்னவர் பாடுதலை யஞ்சுவாள் - முன்னடிக்கும்

௬௬௯. கண்ணுளர் கூத்துங் கலியுகத்து மெய்யன்செய்
பண்ணுளர் கூத்தாய்ப் பரவெடுப்பாள் - தண்ணிய

௬எ0. வேயிற் குழலையு மேனுளா னுயர்தம்
வாயிற் குழலிதென்று வந்திப்பாள் - ஆயம்

௬எக. வடியளகங் கோதுங்கான் மானக்கஞ் சாறன்
கொடியளகப் பேறுகந்து கூறும் - நெடிது

௬எ௨. கடுங்கணை போற்றினுற் கண்ணப்பன் கண்ணில்
இடுங்கணை கண்ணென் றிரங்கும் - அடுந்தொழிலைப்

௬எ௩. பெட்டான் முளைசமைத்தாள் பிட்டமைத்தாள் பிள்ளையறுத்
தட்டாளட் டூணை யறமென்னும் - பட்டத்து

தாயி னல்ல பெருங்கருணை யடியார்க் களிக்குந் தண்ணளியும், ஏயுங் கருவி யிற்றொடுத்தாங் கிட்டுப் பாடக் கேட்டங்கண், வாயில் வேறு வடதிசையில் வகுப்பப் புகுந்து வணங்கினார்" (பெரிய. திருநீலகண்ட. 8); "திருநீல கண்டத்துப் பெரும்பாணன் றிருமூலட் டானன் முன்னே, பெருகார்வத் துடனேயாழ் வாசிக்கப் பெறுவேனோ வென்கை பேசி, உரமாரும் வடமதிலி லொருவாய்தல் செய்வித்துள் வரவு மேவித், திருவாரூர்த் திருமூலட் டானனை வன் யாழ்கேட்டுச் சிறப்புச் செய்தான்" (கமலாலய மான்மியம், திருவாரூர்ச் 38) என்பவற்றாலும், "புரிசைவட, வாயிலா னீலகண்டப் பாணர் வரவமைத்த சாயலார் கந்தருவத் தையலரும்" (திருவாரூருலா, 130-31) என்னும் இந் நூலாசிரியர் வாக்காலும் அறியலாம். வடநிழற் கீழ் எய்தியது - தட்சிணா மூர்த்தியாகக் கல்லாலமரத்தின்கீழ் எழுந்தருளியிருந்தது. தட்சிணாமூர்த்தியின் பேதங்களுள் வீணாதட்சிணாமூர்த்தி ஒருவர்; "எம்மிறை நல்வீணை வாசிக்குமே" (தே. திருநா.)

௬௬௯. கண்ணுளர் - கூத்தர். கலியுகத்து மெய்யன்: இறைவன் திருநாமம். பண் உளர் கூத்து - பாட்டைப் பாடியாடும் நடனம்.

௬எ0 - அ0. இக் கண்ணிகளில் பேரிளம்பெண்ணுக்கு நாயன்மார்களிடத்திலுள்ள பேரன்பு கூறப்படும்.

௬எக. மானக்கஞ்சாறர் தம்முடைய மகளின் கூந்தலை மாவிரத மதத்தராகி வந்த இறைவனுக்குப் பஞ்சவடியாகும்பொருட்டு அரிந்து கொடுத்தவர்.

௬எ௨. பிறருக்குத் துன்பம் விளைத்தலின் கடுங்கணென்றார். கண்ணில் - காளத்தியப்பருடைய கண்ணில்.

௬எ௩. பெட்டால் - விரும்பினால். முளை சமைத்தாள் - இளையான்குடி மாற நாயனாருடைய தேவியார்; இவர் நென்முளையை வறுத்துக் குத்திச்

௧௭௪. மின்னா ருடனீர் விளையாட் டயருங்கால்
தென்னார் பசுபதியைச் சேவிக்கும் - பொன்னாடிற்

௧௭௫. செஞ்சாலி பார்க்கினர சிங்க முனையனை
அஞ்சா விடங்கழியை யாதரிக்கும் - செஞ்சுடரைக்

௧௭௬. கண்டாற் கலியனமி நந்தி கணம்புல்லன்
தொண்டாற் பெரிதுந் துதியோதும் - வண்டார்ப்ப

௧௭௭. மொய்ம்மலர் கொய்யின் முருகன் கணநாதன்
கைம்மலர்த் தாமமே காமிக்கும் - மெய்ம்மணக்கும்

௧௭௮. ஆவிகாண் டோறுங் கலைய னருணேசன்
நீவிகாண் டோறு நினைந்தேத்தும் - மாவடுவைத்

சமைத்தவர். பிட்டமைத்தாள் - செம்மனச்செல்வி. பிள்ளையறுத்து அட்டாள் - சிறுத்தொண்டர் தேவியாரான வெண்காட்டு நங்கையார். அட்டூண் - அட்ட ஊண். பட்டம் - குளம்.

௧௭௪. தென் - அழகு பசுபதி - உருத்திர பசுபதி நாயனார்; இவர் கழுத்தளவான தண்ணீரில் நின்று ஸ்ரீ ருத்திரத்தை உருவேற்றிப் பேறுபெற்றவர்.

௧௭௪-௫. பொன் நாடின் நரசிங்க முனையரையரையும், சாலிபார்க்கின் இடங்கழிநாயனாரையும் ஆதரிப்பாள்.; சாலி-நெல். நரசிங்கமுனையரையர் திருவாதிரைதோறும் சிவனடியார்களுக்குப் பொன்னளித்து வந்தவர். இடங்கழியார்: நாள்தோறும் சிவனடியார்களுக்குத் திருவமுதளித்து வந்த இவர் ஒரு நாள் அதற்கு முட்டுப்பாடு நேர அரசனுடைய கொட்டகாரத்தில் நெல்லைத் திருட முயன்றபோது காவலாளர் இவரைப் பிடித்து அரசன் முன்னே நிறுத்தினர்; அரசன் இவருடைய தொண்டின் பெருமையை அறிந்து நெற்களஞ்சியத்தையும் கருவூலத்தையும் இவரது விருப்பத்தின்படி சிவனடியார்களுக்கு அளித்தனன் (**பெரிய. இடங்கழி.**) சுடரை - தீபத்தை.

௧௭௬. கலியன் - கலிய நாயனார்; திருவொற்றியூரில் இவர் திருவிளக்குப் பணி செய்து வந்தவர். நமிநந்தி: திருவாரூர் அரநெறி யென்னுந் தலத்தில் நீரை ஊற்றி விளக்கேற்றியவர். கணம்புல்லன்: கணம்புல்ல நாயனார்; சிதம்பரத்திலுள்ள திருப்புலீச்சரத்தில் (இளமையாக்கினார் கோயிலில்) கணம்புல்லால் திருவிளக்கிட்டவர்.

௧௭௭. முருகன் - முருக நாயனார். கணநாதன் - கணநாத நாயனார். இருவரும் முறையே திருப்புகலூரிலும் சீகாழியிலும் புட்பப்பணி இயற்றி வந்தவர்கள்.

௧௭௮. ஆவி - புகை. கலையன் - குங்குலியக்கலய நாயனார். நேசன் - நேச நாயனார்; இவர் அடியார்களுக்கு உடை, கீள், கோவணம் முதலியவை உதவி வந்தவர். நீவி - ஆடையை.

௩௭௯. தண்கனியை நோக்கினுற் றாயனைப்பே யம்மையை
எண்கனியச் சிந்தித் திசைபாடும் - ஒண்கரத்துச்

௩௮௦. சேர்த்திய சந்தனத்தின் மாந்திய தீம்பாலின்
மூர்த்தியைத் தண்டியை முன்போற்றும் - சீர்த்திருவும்

௩௮௧. இவ்வழி பாட்டிற் பொழுதுகழித் திட்டதொரு
வெவ்வழிப் பொற்பீட மீதிருந்து - செவ்வழியின்

௩௮௨. ஓதினு ணம்பிக் கொளித்தபிரான் செந்தமிழ்ப்பாட்
டேதினல் வந்தெய்து மென்றிரங்கக் - காதலியும்

௩௮௩. காட்டினை யென்றொருவன் கண்டதிரு வாசகப்
பாட்டினை விட்டுமொரு பாட்டுண்டோ - வேட்டொருபெண்

௩௮௪. முற்றத்தி லேவந்து முன்னிற்கி லோவென்று
சொற்றத்தில் வேறுமொரு சொல்லுண்டோ - அற்றைநாட்

௩௭௮-௯. மாவடுவை நோக்கினுல் தாயனையும், மாங்கனியை நோக்கினுல் பேயம்மையையும் காதலிப்பாள் ; நிரனிறை. தாயன் - அரிவாட்டாய நாயனுர் ; இவர் நெல்லரிசி, மாவடு, கீரை என்பவற்றைக் கொண்டு சென்று இறைவனுக்கு அமுது செய்வித்தவர். பேயம்மை - காரைக்காலம்மையார்.

(பி - ம்.) எண்கனிய நேசித்து

௩௮௦. மூர்த்தி - மூர்த்தி நாயனுர் ; இவர் சந்தனக்காப்பு அளித்தவர். தண்டி - சண்டேச நாயனுர் ; இவர் பாலை அபிடேகம் செய்துவந்தவர்.

௩௮௧. இட்டதொரு பொற்பீடம். வெவ்வழி - விருப்பமுள்ள இடத்தில் உள்ள. செவ்வழி - செவ்வழிப் பண்.

௩௮௨. நம்பி - சுந்தரமூர்த்தி நாயனுர். சுந்தரமூர்த்தி நாயனுர் இத்தலத்திற்கு வந்தபோது பொன்னைப்பெற விரும்பினர். இறைவன் அதனை உடனே கொடாமல் மேற்குக் கோபுரவாயில் வழியாகச் சென்று மறைந்திருந்தனரென்றும், பின்பு சுந்தரர் தெற்குக் கோபுர வழியாகச் சென்று இறைவனைக் கண்டு பொன் பெற்றுரென்றும் கூறுவர். இத்தலத்தின் தென்மேற்கு மூலையிலுள்ள கணக்கர் மண்டபத்தில் 4-ஆந் திருநாளன்று இறைவன் நாகவாகனத்தில் வேய்ங்குழலல்லாத வாத்தியங்கள் ஒன்றுமில்லாமல் மேலைக்கோபுர வழியாகச் சென்று எழுந்தருளி யிருப்ப, சுந்தரமூர்த்தி நாயனுர் யானை வாகனத்தில் அமர்ந்து தெற்குக் கோபுர வழியாகச் சென்று இறைவனைக் கண்டு உபதேசமும் பொன்னும் பெறுதல் இப்பொழுதும் நடைபெற்று வருகின்ற தென்பர். ஏதினுல் பிரான் வந்தெய்தும்.

(பி - ம்.) என்றேத்த.

௩௮௩. ஒருவன் - ஸ்ரீ மாணிக்க வாசகர்.

௩௮௩-௪. இத்தலத்திற் பண்டைக்காலத்திற் சிவபத்திச் செல்வம் வாய்ந்த உருத்திர கணிகையொருத்தி, " கழுக்குன்றவாணரே, அடிச்சியின் இல்

ஙஅரு. சொற்றார்க்கு மன்றியத் தொல்லைத் தமிழ்மாலை
கற்றார்க்குந் தெய்விகங் காணுங்காண் - முற்றிழாய்

ஙஅசா. பாடு மெனவிறைஞ்சப் பைந்தேன் றுளிதுளிப்ப
மாடக நல்யாழில் வாசித்து - நீடிருகண்

ஙஅஎ. பாயு மருவிதடைப் பட்டுத் தெறியாது
சாயு முலைக்கட் சரிந்தோட - வாயிற்

ஙஅஅ. குதலை குழறக் குறுவேர் வரும்ப
விதலை மனத்தயரும் வேலை - பதலை

ஙஅகூ. முரசந் தழங்க முழங்குதிருச் சின்னம்
கரசங்க சாலங் கறங்க - அரசிவ

ஙகூ0. சங்கரவோ வென்றுலக மெல்லாந் தமரிப்ப
அங்கர மாய னயன்கூப்பப் - புங்கவர்

ஙகூக. பூமாரி தொண்டர் விழிமாரி போர்மாரன்
ஏமாரி தம்மி லெதிர்மலைப்பத் - தூமென்

ஙகூஉ. கவரி கவிகை கடவுள ரூர்தி
உவரி கொடியிட மோங்கப் - புவனி

ஙகூங. உருத்திர கோடீச னுத்தமநந் தீசன்
கிருத்திர வேத கிரீசன் - திருத்தில்லை

ஙகூச. ஆடுவா னென்னையழைத் தாடரவக் கிண்கிணிக்கால்
சூடுவான் வீதிவாய்த் தோன்றுதலும் - பாடிய

லத்தின் முற்றத்தில் வந்து காட்சி கொடுத்தருளவேண்டும்" என்று ஒரு செய்யுளை இயற்றிப் பிரார்த்தித்த பொழுது இறைவன் கருணை கூர்ந்து அங்கே எழுந்தருளிக் காட்சி கொடுத்து அவனை ஆட்கொண்டனரென்று ஒரு சரித்திரம் வழங்குகின்றது. அச்செய்யுள் இப்பொழுது அகப்படவில்லை. இந்நூல், க0அ-கூ, ஙருங-ச-ஆம் கண்ணிகளாலும் இச்செய்தி புலப்படும்.

ஙஅசா. மாடகம் - முறுக்காணி.

ஙஅஅ. விதலை - நடுக்கம்.

ஙஅகூ. கர சங்க சாலம் - கையில் வைத்துள்ள சங்கங்களின் கூட்டம்.

ஙகூ0. தமரிப்ப - ஒலிக்க. மாயனும் அயனும் அம் கரம் கூப்ப.

ஙகூக. ஏ மாரி - அம்பாகிய மழை.

ஙகூஉ. ஊர்தி உவரி - வாகனங்களாகிய கடல்; உவரி - கடல்.

ஙகூங. கிருத்திரம் - கழுகு.

௩௯௫. தையல் விரைந்து தமரோடும் பொய்யாத
மெய்யன் திருமுன்னர் வீழ்ந்தெழுந்தாள் - ஐயா

௩௯௬. அனகா சுருதிநகா வாரப் பனகா
கனகா சலமடந்தை காந்தா - முனிகாமன்

௩௯௭. வேறுதொடா துன்சுருதி வெற்பி லசோகெடுத்து
மாறுதொடுத் தாலறிவு மாறிலேன் - வேறுலகிற்

௩௯௮. கூர்த்த மரைதுரந்து கோவியா துன்னந்தி
தீர்த்த மரைதுரந்தாற் சிந்தியேன் - பேர்த்தொரு

௩௯௯. தண்காவி யைவிடா துன்சிகரத் தாழ்சுனையின்
ஒண்காவி விட்டா லுயிர்விடேன் - வண்காவிற்

௪௦௦. சூத மலரைச் சொரியாதுன் னேகம்ப
சாத மலர்சொரிந்தாற் றாழ்கிலேன் - பேதமர்

௪௦௧. மாமுல்லை யெய்யாம னின்முல்லை வாயில்வாய்ப்
பூமுல்லை யெய்தாற் புலம்பெய்தேன் - ஆமுல்லைப்

௪௦௨. பைங்கழை யூதாதுன் பாசூர்நெல் வேலியின்
வெங்கழை யூதினன் மெய்சோரேன் - பொங்கிய

---

௩௯௫. தையல் - இங்கே பேரிளம்பெண். பொய்யாத மெய்யன் : இறைவன் திருநாமம் ; "கலியுகத்து மெய்யன்" (௩௬௯) என்பது போல.

௩௯௬. சுருதி நகா - வேதாசலத்தை யுடையீர் ; நகம் - மலை. ஆரப் பனகா - பாம்பாகிய மாலையை யுடையீர் ; பனகம் = பன்னகம் - பாம்பு. கனகா சல மடந்தை - உமாதேவியார் ; கனகாசலம் - இமயமலை. முனி காமன் - கோபிக்கின்ற மன்மதன்.

௩௯௭. தொடாது - பிரயோகியாமல். சுருதி வெற்பில் - திருக்கழுக்குன்றத்தில்.

௩௯௮. மரை - தாமரைமலரை. நந்தி தீர்த்தத்திலுள்ள தாமரைமல்லரை ; இத்தீர்த்தம் ஸ்ரீ பக்த வத்ஸலப் பெருமான் கோயிலுள் வடபுறத்தே யுள்ளது.

௩௯௯. காவி - நீலோற்பல மலர். சுனை - சம்பாதி தீர்த்தம்; இது மலையின் மேலுள்ளது. நீலமலர் கொல்லும் குணமுடையதாதலின் இங்ஙனம் கூறினள்.

௪௦௦. சூதமலர் - மாம்பூ. ஏகம்ப சாத மலர் - காஞ்சீபுரத்திலுள்ள ஏகாம்பரத்தில் தோன்றிய மலர் ; சாதம் - பிறப்பு. பேது - மயக்கம்.

௪௦௧ - ௨. முல்லைவாயில் - தொண்டை நாட்டிலுள்ள வட திருமுல்லைவாயிலென்னும் தலம். ஆ முல்லைப் பைங்கழை - பசுக்களையுடைய முல்லை நிலத்திற்குரிய பசிய வேய்ங்குழல். பாசூரிலும் திருநெல்வேலியிலும் இறைவன் மூங்கிலடியில் எழுந்தருளி யிருக்கின்றனர்.

௪0௩. நீலாழி யாராது நின்மடைப் பள்ளியெனும்
பாலாழி யார்த்தாற் பருவரேன் - காலிச்

௪0௪. சுரவி மணியொலியா தேற்றுத் தொகுதி
விரவி மணியொலித்தால வெம்பேன் - பரிகரித்

௪0௫. திவ்வகை யேனு மெனக்குப் பணித்திலையேல்
உய்வகை யில்லை யுயிர்க்கென்றாள் - எய்வகையின்

௪0௬. வேளும் பிறவும் வெருவப் பெருமகளை
ஆளுங் கடைக்க ணருள்செய்தான் - நீளும்

௪0௭. தெருவத் தினைய திறமிறைஞ்சி யேழு
பருவத் தவரும் பரவ - மருதத்தான்

௪0௮. சோணையான் சோற்றுத் துறையா னரத்துறையான்
கோணையான் றண்டலையான் கோளிலியான் - தோணியான்

௪0௯. கச்சியான் காசியான் காளத்தி யான்கழுக்குன்
றச்சியான் போந்தா னுலா.

---

௪0௩. ஆராது - ஒலியாமல். பாலாழியை மடைப்பள்ளி யென்றது, சிவபெருமான் உண்ட நஞ்சு தோன்றியமைபற்றி. பாலாழி - பாற்கடல். பருவரேன் - துன்பமடையேன்.

௪0௪. சுரவி - பசு. ஏறு சிவபெருமான் வாகனமாதலின். இங்ஙனம் கூறினாள்.

௪0௬. வேள் - மன்மதன். பெருமகளை - பேரிளம் பெண்ணை.

௪0௭. மருதத்தான் - திருவிடைமருதூரில் மருதமரத்தின்கீழ் எழுந்தருளியுள்ளவர்.

௪0௮. சோணை - அண்ணாமலை; இது சோணசைலமென்பதன் மரூஉ. அரத்துறை - தென்வாயிலரத்துறை. கோணை - திருக்கோணமலை; இது கோணசைலமென்பதன் மரூஉ; இலங்கையிலுள்ள ஒரு தலம். தண்டலை - தண்டலை நீணெறி. தோணியான் - சீகாழியின்கண் தோணியில் வீற்றிருப்பவர்.

கச்சி காஞ்சீபுரம்

உ

கணபதி துணை

சேறைக் கவிராசபிள்ளை
இயற்றிய

திருக்காளத்தி நாதருலா

பதிப்பாசிரியர்

மகாமகோபாத்தியாய தாக்ஷிணாத்திய கலாநிதி
டாக்டர் உ. வே. சாமிநாதையரவர்கள்

மகாமகோபாத்தியாய
டாக்டர் உ. வே. சாமிநாதையர் நூல்நிலையம்
பெசன்ட் நகர், சென்னை-90

உ

கணபதி துணை.

முகவுரை

"காளத்தி காணப் பெற்ற கண்களே கண்க ளென்றுங்
காளத்தி நகருக் கேகுங் கால்களே கால்க ளென்றுங்
காளத்தி புகுங்க ருத்தே கருத்தென் றுங் கைகள் நாமக்
காளத்தி புகழு நாவே நாவென்றுங் கற்றோர் சொல்வர்."

உலாவென்பது, தமிழ்ப்பாஷைக்குரிய தொண்ணூற்றாறு வகைப் பிரபந்தங்களுள் ஒருவகைநூல்; ஒருதலைவன், *பேதைமுதற் பேரிளம்பெண் ஈறாகிய ஏழுபருவ மகளிர்களும் தன்னைக்கண்டு காதல்கூரும்படி † வீதியிற் பவனிபோந்தானென்று கலிவெண்பாவாற் கூறல்வேண்டுமென்பது அந்நூலுக்குரியவிதி. இதனை, "திறந்தெரிந்த பேதை முதலெழுவர் செய்கை, மறந்தயர வந்தான் மறுகென்-றறைந்தகலி, வெண்பா வுலாவாம்" என்னும் வச்சணந்திமாலையால் உணர்க. இப்பிரபந்தத்தின் இலக்கணவிரிவு, பன்னிருபாட்டியல்முதலிய பழைய பாட்டியல்களில் விளங்கக் காணப்படும்.

தாம் வழிபடுதற்குரிய கடவுளர்மீதும் தம்மைஆதரித்த தலைவர்கள்மீதும் பண்டைக்காலந்தொடங்கிப் பெரியோர்கள் செய்துபோந்த பற்பல உலாக்கள் இத்தமிழ்நாட்டில் வழங்கிவருகின்றன. ஆதியுலா முதலியவைகளும், மூவருலா முதலியவைகளும் மேற்கூறிய இரு பகுதிகளுக்கும் முறையே உதாரணங்களாகும்; அவற்றுள்,

திருக்காளத்திநாதருலாவென்பது, திருக்காளத்தியிற் கோயில்கொண்டெழுந்தருளியிருக்கும் சிவபெருமான்மீது சேறைக்கவிராசபிள்ளையென்னும் கவிஞர்பெருமான் இயற்றியது; இதில், ௬௭௮-கண்ணிகள் உள்ளன.

பாட்டுடைத்தலைவராகிய திருக்காளத்திநாதருடைய பெருங்கருணைத்திறமும், இத்தலவிசேடமும், தீர்த்தவிசேடங்களும், இங்கேவழிபட்டுப் பேறுபெற்ற மெய்யன்பர்களுடைய அருமை பெருமைகளும், வேறுதலங்களின் விசேடங்களும், பழைய சிவபுராணங்களிலுள்ள விசேட சரித்திரங்களும், தேவார திருவாசகமுதலிய அருட்பாக்களிலுள்ள அருமைப்பிரயோகங்களும், பொருளை வருத்தமின்றி இனிது விளக்கும் பலவகையான மடக்கணிகள், சிலேடைகள், கேட்டோர் வியத்தற்குரிய தொனிகள் முதலியனவும், அக்காலத்தில் இத்தலத்திலிருந்தமடங்கள் இன்னவென்பதும், இத்திருக்கோயிற்குரிய பலவகையான திருத்தொண்டு செய்துபோந்தவர்கள் இன்ன இன்னவகையாரென்பதும், பிறவும் இந்நூலிற் காணலாகும்.

---

*பேதைமுதல் ஏழுபருவமாதர்களாவார்: பேதை, பெதும்பை, மங்கை, மடந்தை, அரிவை, தெரிவை, பேரிளம்பெண் என்பவர்கள்.

† வீதியென்றது இங்கே உருத்திரகணிகையர்வீதியை; ௬௫௫-ஙு.

எனக்குத் தோற்றியவளவு ஏதோ ஒருவாறு குறித்திருக்கும் அரும்பதவுரையை அறிஞர்கள் பொறுத்து அங்கீகரிப்பார்களென்று நம்புகிறேன்; சிலகண்ணிகளின் கருத்து விளங்காமையால், அவற்றிற்குப் பொருளெழுதவில்லை. ௬௬-ஆம் கண்ணியிற் சிவபெருமான் இத்தலத்தில் ஆகாயவடிவாக எழுந்தருளியிருக்கின்றனரென்று கூறியிருப்பதற்குத் தக்கஆதாரம் கிடைக்கவில்லை.

கையெழுத்துப் பிரதிகளுள் ஒன்றன் தலைப்பில்மட்டும் இந்நூல் இரட்டையர்களியற்றியதென்று எழுதப்பட்டிருந்தது; சேறைக் கவிராசபிள்ளை இயற்றியதாகத் தக்க ஆதாரங்கள் கிடைத்தமையாலும் அவரியற்றிய வேறு உலாக்களுக்கும் இதற்குமுள்ள (பிம்பப் பிரதிபிம்பம்போன்ற) நடையொற்றுமையாலும் இரட்டையர்களுடைய செய்யுணடைக்கும் இதற்குமுள்ள வேறுபாட்டினாலும் இஃது இவரியற்றியதென்றே நிச்சயிக்கலாயிற்று.

இந்நூல் ஸம்பந்தமாக அறியவேண்டியவற்றை அறிந்துகொள்ளுதற்கு நான் முன்பு திருக்காளத்திக்குப் போயிருந்தபொழுது அங்கே மானேசராக இருந்த ஸ்ரீ ஏ. எஸ். பொன்னுஸாமி ஐயரவர்கள் வேண்டிய சகாயம் செய்தார்கள்.

இந்நூற் பரிசோதனை முதலியவற்றிற்கு அக்காலத்தில் உடனிருந்தவர்களுள் சென்னை நியூயிங்டன் ஸ்கூல் தமிழ்ப்பண்டிதராக இருந்த ஸ்ரீ திரு. கிருஷ்ணையரவர்கள் மிக்கஅன்புடன் செய்துவந்த பேருதவி மறக்கற்பாலதன்று.

அரும்பதவுரையும் பாடபேதங்களும் படிப்பவர்களுக்கு உபயோகமாக இருக்குமென்று கருதி இந்தப்பதிப்பில் மூலபாகமுள்ள அந்தஅந்தப்பக்கங்களில் அடிக்குறிப்பாகப்பதிப்பிக்கப்பெற்றுள்ளன.

இப்பதிப்பின் பரிசோதனைக்குத் திருக்கைலாய பரம்பரைத் திருவாவடுதுறை யாதீனத்துப் பிரதி ௧-ம், திருநெல்வேலி மேலை ரதவீதி ஸ்ரீ அம்பலவாண கவிராயரவர்கள் வீட்டுப் பிரதி ௧-ம், மேலகரம், ஸ்ரீ சண்பகக் குற்றாலக்கவிராயரவர்கள் வீட்டுப்பிரதி ௧-ம், சென்னை, சூளை, ஸ்ரீ அப்பன்செட்டியாரவர்கள் வீட்டுப் பிரதி ௧-ம், மன்னார்கோயில் தாலூகா, நொச்சியூர், ஸ்ரீ வைத்தியலிங்க சேர்வைகாரரவர்கள் வீட்டுப்பிரதி ௧-ம், ஸ்ரீ கனகசபைச் சேர்வைகாரரவர்கள் வீட்டுப் பிரதி ௧-ம், சென்னை, ஸ்ரீ தோ. வே. திருநாகேசுவர முதலியாரவர்கள் வீட்டுப் பிரதி ௧-ம், சென்னை, ஸ்ரீ முத்துக்குமாரசாமி முதலியாரவர்கள் வீட்டுப் பிரதி ௧-ம் கிடைத்தன.

மேலேகாட்டிய உபகாரிகளை நான் எப்போதும் ஞாபகத்தில் வைத்திருப்பதையன்றி அவர்களுக்கு யான் செய்யக்கூடியது யாது?

சென்னை,
20—6—25.

இங்ஙனம்,
வே. சாமிநாதையன்.

நூலாசிரியர் வரலாறு.

இந்நூலாசிரியராகிய சேறைக் கவிராசபிள்ளையின் இயற்பெயர் இன்னதென்று தெரியவில்லை; வீரைக்கவிராசபண்டிதர், செங்கோட்டைக்கவிராசபண்டாரமென்னும் பெயர்களை நோக்குங்கால், பண்டைக்காலத்திற் சிலருக்குக் கவிராசரென்றே இயற்பெயர் இருந்ததாகத் தெரிகின்றது.

சேறைக்கவிராச பிள்ளையென்று இவர்பெயர் வழங்குதலால், இவரது ஊர் சேறையென்று தெரிகின்றது; சேறையென்பது சோழநாட்டிலுள்ளதும் தேவாரம் பெற்றதுமாகிய திருச்சேறையென்பதோ அல்லது சேற்றூரென்பதன் மரூஉவோ யாதும் தெரிந்திலது. இந்நாட்டிற் சேற்றூரென்றுபெயருள்ள ஊர்கள் பலவுள்ளன. இவர், ஒருசமயத்திற் பாண்டிநாட்டினரைநோக்கி, 'இந்தத் தேசப் புலவர் மனத்துக் கிடியென வந்தேன்காண்' (ரு) என்று கூறியிருத்தலின், பாண்டிநாட்டினரல்லரென்று கருதப்படுகிறார்.

இவர் சாதியாற் கருணீகர்; இதனை, 'கருணீகன் சேறைக் கவிராசராசன்' (ங) என்பதனு லுணர்க.

சைவசமயம் பூண்டொழுகியவர்; முருகக்கடவுளை உபாசித்து மந்திரசித்திபெற்றவர்.

தமிழிலக்கண இலக்கிய நூல்களிலும் சைவசித்தாந்த சாஸ்திரங்களிலும் சிவபுராணங்களிலும் மிக்க பயிற்சியுள்ளவர். சொல்லினிமை பொருளினிமை வாய்ந்த அதிவிசித்திரகரமான செய்யுட்கள்செய்தலில் வல்லவர். இவருடைய செய்யுட்கள் செம்பாகமானவைகள். இவர் இன்னராதல் இவருடைய நூல்களுள் ஏதேனும் ஒருபாகத்தைப் படித்தறியும் விவேகிகளுக்கு நன்குபுலப்படும்.

தமிழ்ப்புலவர்கள்பால் மிக்க வணக்கமுடையவர்; வாதுக்கு வந்தோர்களை வென்று அடக்கும் ஆற்றலுமுடையவர்; ச, ரு.

செய்யுட்களை விரைந்துசெய்யும் ஆற்றலுடையவராயிருந்தமையின் ஆசுகவிராசரென்றும், அங்ஙனம்பாடும் புலவர்பலரினும் மேம்பட்டு விளங்கினமையின் ஆசுகவிராசராசரென்றும், ஆசுகவிராசசிங்கமென்றும், வண்ணம் பாடுதலில் மிக்க ஆற்றலுடையவராக இருந்தமையின் வண்ணக்களஞ்சியமென்றும் வழங்கப்பெறுவர். இவர் வண்ணம்பாடுதலில் மிக்க ஆற்றலுடையவரென்பதற்கு "சிலைக்காம னுடலெரிய" என்னும் திருவண்ணாமலையார் வண்ணத்தில் உ-ஆம் கலையிற் சிவஸ்தலப்பெயர்களை அடைமொழியின்றி அமைத்திருத்தலே போதிய சான்றாகவுள்ளது.

திருக்காளத்தியிலிருந்தவரும் செங்குந்தர் மரபினரும் சிவபத்திச் செல்வம் வாய்ந்தவருமாகிய வேங்கடராசமுதலியாரென்னும் பிரபுவின் அருமைப் புலவராகவிருந்து அவரால் அன்புடன் ஆதரிக்கப்பெற்று அந்தத்தலத்திற் பெரும்பாலுகதங்கிக் காலங்கழித்தவர். அவர்பால் மிக்க நன்றியறிவுடையவர்; 'தகைகிண கயிலையில்வாழ், செங்குக் தக்குல வேங்கட ராயன் திருவாசற்புலவன்' (ரு)எனத் தம்மை இவர் புலப்படுத்தியிருத்தலால் இதனையுணர்க. திருக்காளத்திநாதருலாவைச் செய்வித்தவர் மேற்கூறிய பிரபுவாகவேயிருக்க வேண்டுமென்றும் இதனுல் தெரிகிறது. அந்தப் பிரபுவினுலும் பிறகொடையாளிகளாலும் பல்லக்குவரிசை முதலியனவும் மிக்க பரிசில்களும் பெற்றவர்.

பாண்டிநாட்டிலிருந்த சீவில்லிமாறருடைய பரம்பரையைச் சார்ந்தவரும் இராமபாண்டியரென்று பெயர்பெற்றவருமாகிய சிற்றரசரொருவரிடம் சென்று விரைவாகப்பாடும் தம்முடைய ஆற்றலைப் புலப்படுத்தி அவரை வியப்புறச்செய்து பலபரிசில்கள் பெற்றுமீண்டவர்; ரு.

திருவண்ணாமலைநாதர்மீது வண்ணம்பாடிக்கொண்டு அரங்கேற்றுதற்காக அத்தலத்திற்கு இவர் பலசிறப்புடன் சென்றாரென்றும், அக்காலத்தல் அவ்வூரிலிருந்த உண்ணாமுலையெல்லப்பநயினாரென்னும் தமிழ்ப்புலவர் இவர் வரவைக்கண்டு அஞ்சி ஒதுங்கி மறைந்தாரென்றும், அதுதெரிந்த பரமேசுவரப்புலவரென்பவர் அவரை அவமதித்துக்கூறினரென்றும் தெரிகின்றன; சு.

அந்தகக்கவி வீரராகவமுதலியார், தாமியற்றிய *சேயூர் முருகன்பிள்ளைத்தமிழில் (அம்புலி. ௪௦) 'தவிராத' என்னுஞ் செய்யுளில் இவர்செய்த சேயூர் முருகனுலாவைப் பாராட்டிக்கூறியிருத்தலால், இவருடைய காலம் அவருடையகாலத்திற்கு முந்தியதென்று தெரிகின்றது. தமிழ்நாவலர்சரிதையில் அம்முதலியாருடைய செய்யுட்களுக்கு முன்னே இவருடைய செய்யுட்கள் வைக்கப்பெற்றிருத்தலும் இதனை வலியுறுத்தும். தமிழ்நாட்டிலும் ஈழநாட்டிலும் கவிஞர்பெருமானென்று புகழ்படைத்து விளங்கிய அம்முதலியார் மேற்கூறியசெய்யுளில் திருமுருகாற்றுப்படை, திருப்புகழ், கந்தபுராணமாகிய இவற்றின்வரிசைகளில இவரியற்றிய உலாவின்பெயரை வைத்திருத்தலன்றி, 'திருவுலாவைக்கற்றுருகலாம்' என்றும் அருமையாகப் பாராட்டிக்கூறியிருத்தல் இவருடைய வாக்கின் உயர்வையும் அதன் நடையின் இனிமையையும் அதிலமைந்துள்ள பத்திச்சுவையையும் விளங்கச்செய்கின்றது.

மேற்கூறிய சேயூர் முருகனுலாவில், 'சேறைக் கவிராசன், சொன்னவுலாப்படித்துச் சோதிபெறத் தாலாட்டி' (உ)என்று கூறியிருத்தலையும், திருக்காளத்திநாதர் இட்டகாமியமாலையில், "செவிராசியம்'' என்னும் ௭௭-ஆம் செய்யுளில், 'புவிராச பாண்டியன் சித்தத்துக் கேற்பப் புகன்ற சித்ர, கவிராசராச கயிலா புரேசகங் காளத்தியே' என்று துதித்திருத்தலையும் பிறசெய்யுட்களில் இங்ஙனங்கூறியிருத்தலையும் நோக்குகையில் தம்முடைய வாக்கில் தம்முடைய பெயரையும் தம்முடையசெய்யுணயத்தையும் எந்தவகையாகவாவது எடுத்துக்காட்டும் ஒருவகைவழக்கம் இவருக்கிருந்ததென்று தெரிகின்றது.

திருவண்ணாமலைப் பரமேசுவரப்புலவர், உண்ணாமுலை எல்லப்பநயினார் முதலியோர்கள் இவர்காலத்திருந்த புலவர்கள்.

திருக்காளத்திநாதருலா, திருக்காளத்திநாதர் இட்டகாமியமாலை, சேயூர்முருகனுலா, திருவாட்போக்கிநாதருலா, திருவண்ணாமலையார்வண்ணம் ஆகிய இநநூல்களும் சிலதனிப்பாடல்களும் இவராற்செய்யப்பெற்றனவென்று தெரிகின்றன.

திருக்காளத்திநாதருலாவில் ௭அ-ஆம் கண்ணிமுதலியவற்றிற் காலவிசேடப்பெயர்களும், அ௬-ஆம் கண்ணிமுதலியவற்றில பன்னிரண்டு இராசிப்பெயர்களும், ௬௦-ஆம் கண்ணிமுதலியவற்றிற் பநத்திநாற் காரியப்போருள்கள் பலவற்றின் பெயர்களும், ௨௭௦-ஆம் கண்ணிமுதலியவற்றிற் பலவகையான நீர்நிலைப்பெயர்களும ௩௭௨-ஆம் கண்ணிமுதலியவற்றில் ஸ்தலப்

* இந்நூல் பதிப்பிக்கப்பெற்றுள்ளது.

நூலாசிரியர் வரலாறு.

பெயர்களும் தொனிக்கும்படி இவர்பாடியிருத்தலையும், பின்னும் ஆங்காங்கு அமைத்துள்ள செம்பாகமான பலவகை அடிமடக்குகள், சிலேடைகள் முதலிய வற்றையும், சிவோத்கருஷங்களையும் உற்றுநோக்குகையில், இவருடைய செய்யுள்நடை திருவானைக்காவுலாவுடையவராகிய காளமேகப்புலவருடைய அதிவிசித்திரகரமான செய்யுள்நடைபோல மதிக்கப்படுகின்றது.

இவ்வரலாறு, கர்ணபரம்பரைச்செய்தியாலும் சில பழையசெய்யுட்களாலும்தெரிந்து எழுதப்பெற்றது. அச்செய்யுட்கள் வருமாறு:—

சேயூர் முருகன்பிள்ளைத்தமிழ், அம்புலிப். கO.

க. தவிராத வெவ்வினை தவிர்க்குமுரு காறுந்
தரித்தா றெழுத்தோதலாஞ்
சந்நிதிக் கருணைகிரி நாதன் றிருப்புகழ்ச்
சந்தம் புகழ்ந்துய்யலாம்
புவிராசன் வளவன் கழுக்குன்றன் வளமைபுரி
புண்ணியத் தரிசிக்கலாம்
பொருசூர னைப்பொருங் கதைமுதற் கந்தப்
புராணக் கடற்காணலாங்
கவிராச ஸிப்பிரான் மிசைசெய்த திருவுலாக்
கலிவெள்ளை கற்றுருகலாங்
கவிவீர ராகவன் சொற்றபிள் ளைக்கவி
கலம்பகக் கவிவினவலா
மவிராட கக்கோயில் புக்குவிளை யாடலா
மம்புலீ யாடவாவே
மயிலவன் செய்கையின் மயிலவன் கந்தனுட
னம்புலீ யாடவாவே.

* சேயூர் முருகனுலா, கண்ணி, கருஉ - ரு.

உ. செவிரா சியங்கடந்த சேறைக் - கவிராசன்
சொன்ன வுலாப்படித்துச் சோதிபெறத் தாலாட்டிக்
கன்ன லதிந்தந்திக் காப்பேற்றி - யன்னநடை
காட்டியிகட காட்டியுடை காட்டிவிழி காட்டிமொழி
காட்டியியல் காட்டிமயல் காட்டியே - நாட்டவரைப்
பூவரடி யாராக்கிப் புன்முறுவ லாலுருக்குந்
தேவ ரடியார் திறஞ்சூழ.

ஷ உலாச்சிறப்புப்பாயிரம்: வெண்பா.

ங. கொற்றவரெண் செய்யூர்க் குமர.........
கற்றவரெல்லாங் களிக்கவே - வெற்றிக்
கருணேசன் சேறைக் கவிராச ராசன்
..........................சொன்ன வுலா.

---

* இவ்வுலாவைத் தந்துதவியவர், ம-ா-ா-ஸ்ரீ, க. குப்புசாமி முதலியார் அவர்கள், B.A.

தமிழ்நாவலர் சரிதை.

ஆசுகவிராசசிங்கம், கடிகையாரைப்பாடியது: வெண்பா.

ச. செந்தமிழோர் தங்களிரு சீபாத தூளிபொர
வந்த புலவோர்த மார்பாணி - கந்த
னடிகையா ரப்பரவு மாசுகவி ராசன்
கடிகையார் கோலா கலன்.

பாண்டியராசா ஆரென்று கேட்டபோது இவர் பாடியது: விருத்தம்.

ரு. தென்பா ராளு மறிவிற் குறுமுனி தெக்கிண கயிலையில்வாழ்
செங்குந் தக்குல வேங்கட ராயன் திருவா சற்புலவ
னென்பேர் வண்ணக் கட்சிய தன்றி யெதிர்த்தவர் மார்பாணி
யிந்தத் தேசப் புலவர்ம னத்துக் கிடியென வந்தேன்கா
ணுன்பால் யான்வர வாசற் காரர்க் குத்தா ரம்பண்ணி
யுள்ளுக் கென்னை யழைப்பித் தாசி லுரைக்குங் கவிதைகள்கேட்
டென்பால் வரிசைகள் பரிசில்க ணல்கி யிரட்சித் திடவேணு
மிராமா சீவிலி மாறு பாண்டிய ராச வரோதயனே.

திருவண்ணாமலையிற் பரமேசுவரப்புலவர் பாடியது:
கட்டளைக்கலித்துறை.

சு. கண்ணூர் மதிக்குங் கவிராச சிங்கங் கடந்துதிரு
வண்ணா மலையப்பர் மேல்வண்ணம் பாடிமுத் தாலத்திகொண்
டெண்ணா யிரமட வார்சூழப் பல்லக்கி லேறிவந்தா
னுண்ணா முலையெல்லன் மூலைக டோறு மொதுங்கினனே.

பழையதனிப்பாடல்: வெண்பா.

எ. ஆறுமுக னணை யவனடியார் தம்மாணை
ஏறு மயிலாணை யென்னாணை - வீறுபுகழ்
தேறு கவிராச ராசன் திருவாணை
ஏறிய வாறே யிறங்கு.

இந்தவெண்பா, நல்லபாம்புதீண்டப்பெற்று ஒருவர் மயங்கியபோது விஷ வேகத்தை இறக்குதற்கு இவருடைய மாணாக்கரொருவர் சொன்னதென்பது கர்ணபரம்பரைச்செய்தி.

[குறிப்பு :—(க) முருகாறு-திருமுருகாற்றுப்படை. வளவன் கழுக்குன்றன் - சேயூர்க்கோயிலிற் திருப்பணிசெய்த ஒருபிரபு. திருவுலா - சேயூர் முருகனுலா. பிள்ளைக்கவி - சேயூர்முருகன் பிள்ளைத்தமிழ். கலம்பகம் - சேயூர் முருகன் கலம்பகம். செய்கை - செய்யூரென்பதன்மரூஉ; சேயூர்க்குச் செய்யூரென்றும் பெயருண்டு. (உ) ராசிபம்-இரகசியம். உலா-சேயூர்முருகனுலா. கன்னல்-நாழிகை. (௩) கருணேசன் - கருணீகச்சாதியாருடையதலைவர். (ச) கடிகையார் - கடிகைப்புலவர். (ரு) தக்கிண கயிலை-திருக்காளத்தி. வண்ணக்கட்சி-வண்ணக்களஞ்சியம்; கட்சி - கூடு. உத்தாரம் - கட்டளை ; உலக வழக்கு. ஆசில் - விரைவில். (சு) கண்ணூர் - பகைவர். கடந்து - பகைவரை வென்று. உண்ணாமுலையெல்லன் - உண்ணாமுலையெல்லப்பநயினாரென்னும் புலவர்.

திருக்காளத்திநாதருலா ஆராய்ச்சி.

இத்தலத்திற்குரிய விசேடங்களைப் பலவகையாக இந்நூலுள் ஆசிரியர் அமைத்திருத்தல் மிகவும் இன்புறற்பாலது; ஒவ்வொன்றற்கும் பின்னுள்ள எண்களாற் சுட்டப்படும் கண்ணிகளைப் படித்தலால் விளங்கும்.

இத்தலமுள்ள நாடு ஆற்றூர் வள்நாடு. கண்ணி-௯௨, ௫௩௭.

ஸ்தலவிநாயகர்:—அஞ்சத்திவிநாயகர்; இப்பெயர் ஐஞ்சந்தியென்றதன் மரூஉ; காப்பு, ௫௩௯.

ஸ்வாமியின் திருநாமங்கள்:—ஸ்ரீகாளத்திநாதர்.—சிலந்தி காளனென்னும் பாம்பு, யானை என்னும் இம்மூன்றாலும் வழிபடப்பெற்றவரென்பது இதன் பொருள்; திருக்காளத்திநாதர், ௭௭, ௫௩௭; அழைத்து வாழ்வித்தவர், ௭௬, ௨௪௧; ஆயிரநாமத்தவர், ௩௫, ௨௦௬; ஆராவமுதர், ௭௬, ௨௮௩, ௨௯௫, ௫௫௮; ஆல், ௫௫௭; ஐந்துகொழுந்து, ௩௦௭; கணநாதர், ௨௭௫; கரும்பு, ௨௮௪; கல்லாலடிக்கரும்பு; ௨௨௧, ௨௭௯, ௩௦௭; கல்லாலடியார் (கல்லாலடி), ௫௮, ௯௦, ௧௧௦, ௩௦௩, ௪௦௦, ௪௨௯, ௪௪௦, ௪௮௭, ௫௪௧, ௫௭௪; கல்லாலின் கனி, ௨௩௮; காபாலி, ௫௮, ௩௩௧; காளத்தி, ௪௬; காளத்தியானை, ௧௪௬, ௪௫௭, ௫௫௫; சார்ந்தாரைக்காத்தவர், ௭௪, ௨௦௩, ௨௩௯, ௫௦௬, ௫௫௯; சேர்ந்தார்க்கினியோர், ௨௦௩; சோதிப்பெருந்தேவர், ௨௦௫; சோதிவிடங்கர், ௭௪, ௨௦௫, ௩௭௦, ௫௭௭; தருமமுனாத்தவர், ௫௦௬; தென்கைலைநாயகர், ௧௫, ௫௩௬; பச்சிமவாயிற்பரமர், ௬௫, ௭௬, ௪௯௧; புலி, ௮௫, ௨௦௬, ௪௯௦; மலைக்கொழுந்து, ௨௦௭, ௩௧௯, ௫௫௩: செவ்வந்திப்புராணம், திருமலைச்சருக்கம், ௪௮, ௪௯-ஆம் பாடல்களைப்பார்க்க; மாணிக்கச்சோதிமலை, ௨௦௧; மும்முடிச்சோழபுரமூர்த்தி, ௬௪; மெய்த்தேவர், ௭௪; யானைத்துணை, ௨௦௪; வரந்தருவார், ௪௧௧, ௫௪௧. ஸோமாஸ்கந்தமூர்த்தி திருநாமம்:—சோதிவிடங்கர்.

அம்பிகையின் திருநாமங்கள்:—ஞானப்பூங்கோதை: இப்பெயர் ஞானப்பூவெனவும், ஞானமெனவும் வழங்கும், ௭௩, ௧௧௧, ௨௩௭, ௫௬௬; வண்டார்குழலாள், ௫௯, ௫௬௭.

பீடங்கள்: திருக்காளத்திநாதரது பீடம்.—ஆகமபீடம். தக்ஷிணாமூர்த்தியின்பீடம்:—வைதிக பீடமெனவும், தென்பீடமெனவும் வழங்கும், ௧௩௫.

ஸ்தலத்தின் திருநாமங்கள்:—கண்ணப்பபுரம், ௯௫; கயிலை, ௨௫௦, ௩௧௯, ௪௮௦; திருக்காளத்தி, ௪௬; தென்கயிலை=தக்ஷிண கைலாஸம், ௯, ௧௧௫, ௨௯௫; மும்முடிச்சோழபுரம், ௬௪.

தீர்த்தங்கள்:—பொன்முகரியாறு, ௧௫-௨௩, ௧௩௪, ௧௪௧, ௨௫௮, ௩௦௮, ௪௯௨, ௫௩௬, ௫௬௩; அரகரதீர்த்தம், ௩௫; உருத்திரதீர்த்தம், ௩௭; மகாகாளிதீர்த்தம், ௩௬; மகாமோகினிதீர்த்தம், ௩௬; மணிகன்னிகை அல்லது மணிகர்ணிகை, ௩௮; மாயூரச்சுனை, ௩௬; மார்க்கண்டதீர்த்தம், ௩௬, வச்சிரதீர்த்தம், ௩௪.

விருக்ஷம்:—அகண்டவில்வம், ௧௦௧; கல்லால்: இது சிலைவடம், கனகக்கல்லாலெனவும் வழங்கும்; ௫௮, ௧௧௦, ௨௨௧, ௨௩௮, ௨௭௯, ௩௦௩, ௩௦௭, ௪௦௦, ௪௨௯, ௪௪௦, ௪௮௭, ௫௧௧, ௫௪௧, ௫௫௭, ௫௭௪.

மலைகள்:—அகத்தியமலை, ௧௩; துர்க்கைமலை, ௩௪; தென்கைலைமலை, ௯, ௧௧௫, ௧௧௯, ௧௪௯, ௫௩௬; நீலமலை, ௩௭.

வழிபட்டுப்பேறுபெற்றோர்:—அக்கினிப்பிரமன், ௨௭; அரிச்சந்திரன், ௪௫௩; அருச்சுனன், ௪௫௩; ஆதிசேடன், ௨௩௪, ௫௭௬; இந்திரன், ௨௬;

கண்ணப்பர், ௪௭-௫௨, ௧௨௦, ௧௪௦, ௧௮௬, ௨௦௪, ௨௨௩, ௨௨௬, ௨௪௭, ௨௫௪, ௨௬௩, ௩௫௦, ௩௯௫, ௪௦௮, ௪௮௪, ௫௨௬, ௫௬௫, ௫௭௬; **கன்னியிருவர்**, ௫௬, ௧௨௧, ௧௮௮, ௩௬௯, ௫௨௧, ௫௭௬; காளனென்னும்பாம்பு, ௪௧-௬, ௧௨௧, ௧௪௯, ௧௮௫, ௨௩௬, ௨௪௫, ௨௯௨, ௩௯௩, ௩௯௬, ௪௮௦, ௪௮௭, ௫௨௪; கௌசிகர், ௨௮; சனகாதிகள், ௨௮, ௧௧௧; சித்திரசேனன், ௨௯, ௫௭௫; சிலந்தி = சிலம்பி, ௩௯-௪௦, ௧௩௧, ௧௮௫, ௩௦௯, ௩௯௭, ௪௮௩, ௫௨௬, ௫௭௬; சிலந்தி முதலிய எண்மர், ௩௦௯; சிவகோசரியார் = சிவகோசன், ௪௯, ௫௨, ௧௮௭, ௨௦௩, ௨௪௯, ௫௭௫; சுந்தரபாண்டியன், ௬௫; சோழர்மூவர், ௬௩, ௧௯௦; திருமால், ௧௧, ௧௨௨, ௫௩௭; துர்க்கை, ௩௪; நக்கீரர், ௫௪, ௧௮௭, ௨௪௮, ௪௮௯, ௫௨௩, ௫௬௪, ௫௭௬; நீலை, ௨௬; பகீரதன், ௪௫௩; பிரமன், ௧௭-௨௩, ௪௯௦, ௫௩௭; மகாகாளி, ௩௬; மணிமான், ௨௯, ௫௭௫; முசுகுந்தன், ௨௬; மூகனொருவன், ௫௪௬; யாதவன், ௬௬-௭௨, ௧௧௧; யானை, ௪௧-௬, ௧௨௧, ௧௪௦, ௧௮௬, ௨௩௬, ௨௪௬, ௩௯௪, ௫௧௧; ௫௨௨, ௫௭௫; வசிட்டர், ௨௮; ஸரஸ்வதீ, ௨௪, ௩௬௮, ௫௩௬, ௫௬௪.

மடங்கள்:—பதினெண்மடம், ௧௯௪; பாத்துவாசாச்சிரமம், ௩௭; **மணி** கங்கை மடம், ௧௯௩; வடமடம், ௧௯௩.

திருத்தொண்டு பூண்டொழுகியவர்கள்:—ஆறுகொத்தார், ௧௯௪; எட்டுக்கொத்து இளையநாயக்கர்கள், ௧௯௭; கோயிற் கணக்கர், ௧௯௬; சிட்டயராமன், ௧௯௨; பத்துக்குடி வேதபாரகர், ௧௯௫; மந்திரவோலைக்கணக்கர், ௧௯௬.

விசேடச் செயல்கள்:—தென்கைலையை வலம்வருதல், ௩௮, ௫௨௬; மேற்குச் சாளரவாயிலின் வழியே திருக்காளத்திநாதரைத் தரிசித்தல், ௫௨௪.

இத்தலத்திற்குரிய ஆகமமும் தேவாரமுதலியனவும் வருமாறு:—

ஆகமம்:—காரணம், ௧௩௬, ௧௯௫.

தேவாரம்: **திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார்:**—சந்தமாரகிலொடு - கொல்லி; வானவர்கடானவர்கள் - சாதாரி. **திருநாவுக்கரசு நாயனார்:**—விற்றூணொன் றில்லாத - திருத்தாண்டகம். **சுந்தரமூர்த்தி நாயனார்:**—செண்டாடும் விடையாய் - நட்டராகம்.

௧௧-ஆம் திருமுறை: **நக்கீரதேவநாயனார்:**—கயிலைபாதி காளத்திபாதித் திருவந்தாதி, போற்றிக்கலிவெண்பா, கண்ணப்பதேவர் திருமறம். **கல்லாடதேவநாயனார்:**—கண்ணப்பதேவர் திருமறம்.

புராணங்கள்.

வடமொழி:—தக்ஷிண கைலாஸ மகாத்மிய முதலாகிய புராணங்கள்-௭.

தெலுங்கு:—தூர்ஜடிகவி இயற்றிய புராணம்-௧, [இதன் மொழிபெயர்ப்பே தமிழ்ச் சீகாளத்திப்புராணம்.]

தமிழ்:—திருக்காளத்திப்புராணம் - ௧; சீகாளத்திப்புராணம் - ௧.

தமிழ்ப் பிரபந்தங்கள்:—திருக்காளத்திநாதர் இட்டகாமியமாலை, செய்யுள் - ௧௦௦; திருக்காளத்திக்கோவை; திருக்காளத்திநாதர் கட்டளைக்கலிப்பா - செய்யுள், ௨௦; திருக்காளத்திநாதர் பதிகம்-௧; வடமொழியில் இத்தலத்திற்கேயுரிய ஸஹஸ்ரநாமமும் பலவகைத் துதிகளும், தமிழிற் பல தனிப்பாடல்களும் உள்ளன.

திருக்காளத்திநாதர் துணை.

உ

கணபதிதுணை.

திருக்காளத்திநாதருலா.

காப்பு.

நேரிசைவெண்பா.

ஐஞ்சந்திவிநாயகர்.

காருலா வுஞ்சோலைக் காளத்தி யாள்வார்க்குச்
சீருலா விண்ணப்பஞ் செய்யவே - பாரில்
விளங்கருளஞ் [1]சந்தியான் வேழமுக [2]மானான்
களங்கருளஞ் சந்தியான் காப்பு.

நூல்.

௧. சீர்பூண்ட ஞானச் [3]சிறப்பிற் பராபரமா
யார்பூண்ட கொள்கைக்கு மாதியா - யேர்பூண்ட

௨. மூலமாய் மூலத்தின் [4]முப்பொருளா யப்பாலைக்
கோலமாய்க் கோலக் [5]குணக்குன்றாய்க் - [6]காலமாய்ச்

௩. சண்டமா யங்[7]கடந்து தன்வேலை [8]யைந்தியற்றிப்
பிண்டமா [9]யாட்டுவிக்கும் போராள - னண்டங்க

தலவிசேடம்.

௪. ளாணியா கச்சமைத்த வன்றே தனக்கமைத்த
காணியா குந்தென் கயிலாயன் - பேணி

௫. வடகயிலா யத்தொருநாள் வானோ ரயன்மா
[10]லடகயிலா யத்தோ ரவைக்கே - புடையிருந்த

௬. மாதேவி நின்றுதனை வாழ்த்தியே நின்பதிக
ளேதேது பாரி லெனக்கேட்க - மேதினிமே

(காப்பு.)—விளங்கு அருள் அஞ்சந்தியான். களங்கர் உளம் சந்தியான்.

௩. சண்டம் - கொடுமை. வேலை யைந்து - பஞ்சகிருத்தியம்.

௫. அடகு அயில் ஆயத்தோர் - இலைகளை உண்ணுகின்ற கூட்டத்தா ராகிய முனிவர்.

(பிரதிபேதம்.) 1 'சந்தியார்' 2 'ஆனார்' 3 'சிறப்பின்' 4 'முற்பொருள்' 5 'குலக்குன்றாய்' 6 'சீலமாய்ச்' 7 'கடந்துதான்புரியுமவ்வேலை' 8 'ஐந்தியற்றப்' 'ஆக்குவிக்கும்' 10 'அடகயில்வார்போற்றும்'

எ. லாயிரத்தெட் டெண்டுபதி யாய்ந்தாய்ந் தவற்றெடுத்த
நாயகமா கும்பதிக ளன்கவற்று - ணீயெம்மைக்

அ. கூடிவினை யாடுவது [1] கோலவட காசியிலே
யாடல் புரிவதுபொன் னம்பலத்தே - நீடுமுது

கூ. குன்றிற் குலாவல் குடும்பத் துடனிருக்கை
[2] தென்றிக் கயிலையிலே சேயிழையா - யென்றலுமே

கO. வேத வியாதன் விடைகொண்டு காசிபுகப்
போதன் மூதிய பொருப்பேற - மாதவத்தோர்

கக. மன்றுதொழத் தன்னெதிரே மாலிரண்டு யோசனையி
னின்றுதொழுங் கல்லாலி னீழலான் - மன்றலுமை

கஉ. யம்மை மணத்தி லருள்கொண்டு [3]தெற்கில்வருஞ்
செம்மை முனியயனைச் சென்றேத்தி - யிம்மை

கங. [4] யகத்தியமாக் குன்றி லமைத்த நதியாய்ப்
பகுத்தபெருங் கங்கையிலோர் [5]பங்காய்த் - தொகுத்த

கச. மருவா ரிருகரையு மாகடலின் மட்டாய்த்
திருவார் சிவாலயங்கள் செய்தே - சுரர்முனிவர்

கரு. சீலத் தவம்புரியச் செம்பொன் கொழித்துநடந்
தாலிக்கும் பொன்முகரி யாற்றினன் - பாலர்

கசு. சதுரா னனற்குமொழித் தையலுக்கு [6]மூன்று
பதினு யிரர்பிறந்தேழ் பாரு - மதிரப்

கஎ. பரதாரங் கொண்டரக்கர் பல்கோடி நல்கி
விரதா திகளழிக்க விண்ணோர் - கருதிவிதி

அ - கூ. முதுகுன்று - விருத்தாசலம். தென்றி - தெற்கு; "தென்றி யரக்கனைக், குன்றிற் சண்டைமன், அன்று செரித்தவா, நின்று நினையினே" தே.

கO. போதன் - பிரமன்.

கக. மன்று - சிதம்பரம். மால்இரண்டு யோசனையில் நின்றுதொழு மிடம் திருவேங்கடமலை; 'தொழுதெதிரே கோடேறி, நின்ற முராரி' என்பர் பின்னும்; கஉஉ.

கஉ. முனி-அகத்தியர். கங. பங்கு-கூறு. கரு. ஆலிக்கும்-முழங்கும்.

கசு. மொழித்தையல் - கலைமகள். அதிர - நடுங்க.

கரு - சு. பாலர் பிறந்து.

(பி - ம்.) 1 'கொற்றமணிக்காஞ்சியிலே' 2 'தென்றற்கயிலை' 3 'தெற்கு வருஞ்' 4 'அகத்திய மாங் குன்றி லமைத்த' 5 'பாங்காய்-மிகுத்த' 6 'மும் மைப் பதினுயிரர்'

கஅ. யானேனைக் [1]கண்டுரைக்க வாங்கவனுந் [2]தன்னவரைத்
தானோர் மகவின்று சாடென்னப் - போனோன்

கசு. கடிந்தவரைக் [3]கொல்லத்தன் காளையர்க ளெல்லா
மடிந்த[4]பம்ம கத்தி வரலும் - படிந்தரனைப்

உ0. பூசித்தா லன்றியிது போகாதென் றஞ்செழுத்தும்
பேசித் தவஞ்செய் பிரமற்கா - மாசி

உக. வரமகத்திற் [5]றோன்றியே மற்றவனைச் சூழ்ந்த
பிரமகத்தி யைப்போக்கப் [6]பின்னுந் - திரமகத்திற்

உஉ. [7] பொன்முகரி யாடியவன் புத்திரன்வேண் டிப்போற்ற
நன்மகவை [8]யீந்தந்த நாளிலே - நின்முகரி

உங. யாடிவலஞ் செய்தோ ரனைவர்க்கு மைந்தர்களு
நாடியது நல்கென்ன [9]நல்கினோ - னீடுதவப்

உச. பாங்கலனோ டோவாது பாடி யவன்சபிக்க
மூங்கைவடி வாய்வெண் முளரியா - ளீங்கிறைஞ்சத்

உரு. [10]தாக்குகொடுஞ் சாபந் தவிர்த்துச் சகலகலை
[11]வாக்குவி யாக வரந்தந்தோன் - கோக்குலிசத்

உசு. திந்திரன்பூ சித்தருளு மெம்பிரா னீலையெனுந்
[12]தந்திரமா சத்திதொழுந் தம்பிரா - னந்தமுசு

உள. குந்தன் பணிவான் குளி[13]ரக் கினிப்பிரபன்
வந்தன் புடனே வழிபட்டோன் - [14]சந்தன்

கஅ. மகவு - உக்கிரன். கசு. பம்மகத்தி - பிரஹ்மகத்தி.

உக. மகம்-மகநக்ஷத்திரம்; இஃது இத்தலத்தில் மிக்க விசேடமுடையது.

உஉ. நன்மகவை - ரிபுவென்னும் முனிவரனை.

கசு - உங. பிரமதேவர்க்குப் புத்திரர் முப்பதினுயிரவர் பிறந்தது முதலியவற்றை, சீகாளத்தி. நான்முகச்சருக்கத்தாலுணர்க.

உஉ - ங. ஈந்து நல்கினேன்.

உச. பாங்கலன் - ஒருமுனிவர். வெண்முளரியாள் - கலைமகள்.

உசு. நீலை - ஒருயோகினி மங்கை; "அமர, ருலக மாக்தருள் யோகினி நீலையென்பவளும்", "கற்பக நறுநீழல், வள்ளலு நீலையெனும் யோகினி மடவரலும்" என்பவை திருக்காளத்திப்புராணம்.

உள. அக்கினிப்பிரபன் - ஓர்அசுரன்; "ஆத ரந்திக ழக்கினிப் பிரபனு மசுரன்" என்பதனாலுணர்க; திருக்கா. சந்தன் - அகத்தியமுனிவர்.

(பி - ம்.) 1'கண்டுதொழ' 2'மற்றவரை' 3'கொல்லென்னக்' 4'பிரமத்தி'; 'பிர்ம்மகத்தி' 5 'தோன்றி மலரயனை' 6 'பின்னும்-பரமகத்து' 7'அவன்போற்ற முகரிபுவர' 8 'ஈயவந்தநாளிலே' 9 'நல்கினேன்-பாடவிகல்' 10'தாக்கியசாபம்' 11'வாக்குவியாகும்படிக்கு வாய்தந்தோன்' 12'சந்திரன்மா சத்தி' 13'அக்கினிப் பகவன்' 14'சந்த'

௨௮. வசிட்டன் கவுசிகன்முன் வாசவனை வைத
விசிட்டன் சனகாதி மேலோர் - கசட்டறிவு

௨௯. சென்றமணி மான்[1]வீணைச் சித்திரசே னன்பணிவான்
குன்றமணி மாசித்தி கூட்டுவோன் - கன்றையூ

௩௰ ராரூரி லேபுவியா யானைக்கா விற்புனலாய்ச்
சீரு ரருணையிலே செந்தீயாய்ப் - [2]பேரூரு

௩௧. மேகாம் பரத்தி லியங்கொலியாய்த் தன்னாரி
லாகாய மாய்நிற்கு மாடலான் - மாகாயம்

௩௨. பொன்னுக்குந் தன்னூற்றிற் பொன்றிற் [3]பரமுத்தி
யின்னார்க்கென் னும விளிதளிப்போன் - முன்னாளிற்

௩௩. கல்லென்ற தாருகனைக் காளி தனைவகுத்துக்
கொல்லென்று விட்டான் குழையிட்டான் - வல்லியிடைத்

௩௪. துற்கை யிருந்து தொழுமலையா னிந்திரனார்
செற்குலிசத் தாற்கண்ட தீர்த்தத்தா - னிற்கு

௩௫. மரகர[4]தீர்த் தத்தி லமர்ந்தருள்வான் பேரா
யிர[5]முடையன் பொற்கோயி லீசன் - பரமளிக்கு

---

௨௮. வைதவிசிட்டன் - கௌதமர்; விசிட்டன் - விசேடமுடையவர்.

௨௯. சென்ற - நீங்கிய. மணிமான் - ஓர் இயக்கன்; சித்திரசேனன்-ஒரு கந்தருவன்; "திகழ்மணிமான் முன்னியக்கர்", "இனிய சித்திர சேனன் முன்னையா றிசையிற் பணிவிசும்பிடைக் கந்தரு வரும்பணிந் தனரால்" என்பவற்றாலுணர்க; திருக்கா. குன்றம் அனைணி மாசித்தி கூட்டுவோன்; தென்கயிலைக்குத்தெற்கே ஸித்தாசலமென்ற மலையொன்று உள்ளது; "அட்ட மா சித்திகளணைதரு காளத்தி" என்பது, திருஞா. தே. கொல்லி. ௧௧.

௩௧. ஒலி - காற்று.

௩௩. "வல்லைவரு காளியை வகுத்துவலி யாகிமிகு தாரகனைநீ, கொல்லெனவிடுத்தருள் புரிந்தசிவன் மேவுமலை...............காளத்திமலையே" என்பது, திருஞா. தே. திருவிராகம், ௩.

௩௪. மலை - கனகதுர்க்காம்பாமலை; இது தென்கைலைக்கு வடக்குள்ளது. செல் - இடி. தீர்த்தம் - வச்சிரதீர்த்தம்.

௩௫. அரகரதீர்த்தம் - ஹரஹரனென்பவன் உண்டாக்கியதீர்த்தம்; சிவத்திரவியங்களை அபகரித்த கொடும்பாவத்தால் நரகத்திற்கிடந்து துன்புற்ற கரபனென்னும் ஆதிசைவனொருவன் தன்னைக்கண்டு சகியாமல் சாகக்கடவென்னு முனிவர் ஹரஹரவென்று கூறியதைக்கேட்டு அப்பாவம் ஒழியப்பெற்று ஹரஹரனென்று பெயருள்ள ஓர் ஆதிசைவனாகப்பிறந்து இத்தலத்தையடைந்து வழி

(பி - ம்.) [1]'பெரியசித்திரசேனன்' [2]'பேரூராம்' [3]'கபாலமுத்தி' [4]'தீர்த்தத் தமர்ந்தருள்வான்' [5] 'உடையபொற்'

௩௬. மார்க்கண்டன் மாகாளி மாமோ கினித்தடத்தான்
சேர்க்கு [1]மயூரத் திருச்சுனையா - ரூர்க்கு

௩௭. முருத்திரதீர்த் தத்தா னுயர்நீல வெற்பான்
பாத்துவச னாச்சிரமப் பாங்கான் - [2]கருத்தொலைக்கு

௩௮. மென்மணி[3]கங் கைத்தடத்தா னீங்கிவையெல் லாஞ்சூழ்ந்த
தன்மலையைத் தான்சூழுந் தன்மையான் - கன்மமற

௩௯. நெஞ்சிலந்தி லண்ணனே நித்தா வெனப்போற்றிச்
செஞ்சிலந்தி நூலினாற் செய்கோயில் - பஞ்சிலங்கு

பட்டு அவன் உண்டாக்கியது. அங்கே சென்றோர், ஹரஹரவென்றால் தாரையாகத் தீர்த்தம் மேலேயிருந்துவிழுமென்றும் சொல்வதுண்டு; "உரைதரு மதன் வடபா லோங்கரு வித்தாரை, யரகரவெனின்வீழு மாகரதீர்த்தமெனுச், சுரர் முனி வரர்சொற்றார்" என்பதனாலுணர்க; திருக்கா. பேராயிரமுடையன் - ஆயிரம்திருநாமங்களையுடையவர்; திருக்காளத்திநாதருக்குத் தனியே ஒருஸஹஸ்ரநாமமுள்ளது; அன்றி, மூலத்தானத்துக்குத்தெற்கே ரு-நாழிகை வழித்தூரத்திலுள்ள தருமக்ஷேத்திரத்தில் எழுந்தருளிய ஸஹஸ்ரலிங்கேசுவரரென்னும் சிவலிங்கப்பெருமானை இம்மொழி கூறியதாகவும் ஊகித்தற்கிடமுண்டு.

௩௬. மயூரத்திருச்சுனை - மயூரன்பொருட்டு உண்டாக்கியசுனை; கேரளதேயத்திற் பிறந்தவனும் பொருளைவிரும்பித் தந்தையைக்கொன்ற மகாபாவியுமான மயூரனென்பவன் அப்பாவத்தால் வருந்தி இத்தலத்தையடைந்தபொழுது சிவபெருமான் கருணைகூர்ந்து விருத்தப்பிராமணவடிவங்கொண்டு தோன்றி அவன்பாவத்தை ஒழித்தற்பொருட்டுத் தமது தண்டத்தால் மலையைக்குத்தி உண்டாக்கப்பெற்றது.

௩௭. உருத்திரதீரத்தம் - திருக்காளத்தீசர் சந்நிதியிலுள்ளது. நீலவெற்பு - நீலமலை; இது மூலத்தானத்திற்குத் தெற்கேயுள்ளது; வைரவக்கடவுளெழுந்தருளியிருத்தலின், வைரவமலையென்றும் வழங்கும். பாத்துவச னாச்சிரமம் - பரத்துவாசமுனிவர் தவஞ்செய்த ஆச்சிரமம். இது மூலத்தானத்திற்கு அக்கினி மூலையில் மலையின்மேலுள்ளது. இதற்கு அருகே அம்முனிவரால் உண்டாக்கப்பெற்ற பரத்துவாசதீர்த்தமும் அதன் அக்கினிமூலையில் அவர் பூசித்த பரத்துவாசலிங்கமுமிருக்கின்றன.

௩௮. எல் - ஒளி. மணிகங்கைத்தடம் - மணிகர்ணிகாதீர்த்தம். இது மூலத்தானத்திற்குத்தெற்கே ஓர் அம்புவீழெல்லையிலுள்ளது. மாசிமாதத்தில் நடக்கும் பிரஹ்மோத்ஸவத்தில், கூ-ஆம் திருநாளிலும் மகா சங்கிராந்தியிலும் திருக்காளத்திநாதர் வேட்டைக்கோலத்தோடு தென்கயிலைமலையைச்சூழ எழுந்தருளிவருதல் இயல்பு. இது மிருகயாவிநோதமென வழங்கும்.

௩௯. நெஞ்சில் அந்தி வண்ணனே.

(பி - ம்.) 1 'மாயூரத் திருச்சுனை' 2 'திருத்தமுதல்' 3 'கங்கைத்தலத்தான்'

௪0. தீபம் படவதுதன் சீவன் [1]விடத்தோன்றி
நீபங் கயத்தாளி னில்லென்றேன் - கோபக்

௪௧. கடுவரிக்கா ளன்மணியைக் கல்லென்று தள்ளித்
தடமதக்கைந் நீராட்டித் தந்தி - யிடுமலரைச்

௪௨. செற்றையெனப் பாம்பிகழச் செய்ந்நாளின் மற்றிரண்டு
மொற்றை யொருநா ளுவாவரலும் - புற்றரவ

௪௩. மூக்கிற் புகுந்து முடிகுடைய வெய்யவிடந்
தாக்கித் தலைமண்டை [2]தான்கொண்டு - மாக்கிரியை

௪௪. முட்டிநா கப்பெட்டி முத்துமா ணிக்கத்தின்
பெட்டிபோற் கும்பம் பிளந்திரண்டும் - [3]பட்டளவிற்

௪௫. கைந்நாகம் பைந்நாக கங்கணம்பூ ணப்[4]பொருமப்
பைந்நாகங் கைந்நாகப் பட்[5]டுடுக்க - [6]முன்னாகித்

௪௬. தாளிற் கலந்தவற்றாற் [7]றன்பேருங் கொண்டேருங்
காளத்தி யூராகக் கற்பித்தோ - னீளத்

௪௭. திருவார் சடையிற் செருப்பு[8]க்கா னீட்டி
யருவாது வாய்[9]நீர்கொண் டாட்டி - மருவாரும்

௪௮. பச்சிலையைச் சூட்டிப் பசித்ததெனச் சீராட்டி
யெச்சி லிறைச்சி யினிதூட்டி - வைச்சிருந்த

௪௯. [10]சீரன்ப னன்பைச் சிவகோச னேமறைந்து
[11]பாரென் றிருத்தியொரு பார்வைக்கே - சோரிவிடச்

---

௪0. அது சிலந்தி.

௪௧. கடுவையும் வரியையுமுடைய காளனென்னும் பாம்பு.

௪௨. செற்றை - செத்தை. இரண்டும் செய்நாளில். உவா - யானை.

௪௪. யானையின்மத்தகம் உடைந்தபொழுது முத்தும் பாம்பின்தலையிலிருந்த மாணிக்கமும் வெளிப்பட்டன. கும்பம் - யானையின் மத்தகம்.

௪௫. கைந்நாகம் - யானை. பைந்நாகம் - பாம்பு. இந்த இரண்டும் சிவசாரூபம் உற்றன.

௪௬. அவற்றாற் கொண்டருளிய திருநாமம் காளத்திநாதரென்பது.

௩௧ - ௪௬. சிலந்தி, காளன், யானை இவைகள் சிவபெருமானை வழிபட்டு முத்திபெற்ற கதைகளைச் சீகாளத்தி. சீகாளத்திச் சருக்கத்தாலுணர்க.

௪௯. அன்பன் - கண்ணப்பநாயனூர். பார்வைக்கு-பார்வையினிடத்தே.

(பி - ம்.) 1'பட' 2'தான்கொள்ள' 3'பட்டதற்பின்' 4 'பொருதும்', பொருந்தப்' 5'உடுக்கச்-செய்ந்நாளில்' 6'முன்னாளில்' 7'தன்னைப்பே ரிட்டோருங்' 8 'காழீட்டி' 9'நீரினூட்டி' 10'சீரனவனன்பை' 11'பாரென்றிருக்க'

௫௦. சென்றடியான் கண்டு தியங்கி மயங்கிமருந்
தொன்றிலுமா ரூம லுபாயம்போய் - [1] நின்றிடந்து
௫௧. தூயவிழி [2]யப்பியிடச் சோரிபோய் [3]மற்றைவிழி
பாய வவனுங்கண் பாய்ச்சாமுன் - வாய்திறந்து
௫௨. கண்ணப்பா வென்றுருகிக் கண்டமறை யோனுடனே
வண்ணப்பா தங்கொடுத்து வாழ்வித்தோ - [4]னண்ணிக்
௫௩. கயிலை மலைபாதி காளத்தி பாதி
பயிலுமறை நூறெரிந்து பாடிச் - [5] சயிலமிசை
௫௪. யந்தாதி [6] கீர னருளத் திருமேனி
யிந்தாதி யாக மெனத்தந்தோ - னந்தாத
௫௫. [7] பாண்டிவள நாட்டிலுயர் பாவலனைப் போலவே
யீண்டி யிருங்கதியை யெய்தவே - வேண்டி
௫௬. வரும்புண்ட ரீகவிழி [8] மானுரைத் தாளி
லிரும்புண்ட நீராக்கு மெங்கோன் - சுரும்புண்ட
௫௭. பொன்னின் சரணப் புகலியார் வேந்தனுக்குச்
சின்னங் கொடுத்த சிவபிரான் - [9] வன்னமறைத்

---

௫௦. இடந்து - பெயர்த்து. ௫௨. மறையோன் - சிவகோசரியார்.

௪௭ - ௫௨. "வாய்கலச மாகவழி பாடுசெயும் வேடன்மல ராகுநயனங், காய்கணையி னாலிடந் தீசனடி கூடுகா ளத்தி மலையே" என்பது திருஞா. தே. திருவிரா. ௪. கண்ணப்பநாயனார் சரிதத்தைப் பெரியபு. கண்ணப்பநாயனார் புராணத்தாலும், சீகாளத்தி. கண்ணப்பச் சருக்கத்தாலுமுணர்க.

௫௩ - ௪. அந்தாதி-கயிலைபாதி காளத்திபாதித் திருவந்தாதி. கீரன்-நக்கீரர். தியாகம் இந்தாவெனத் திருமேனி தந்தோன்; "இந்தாவிஃதோர் கிளங்குழவி" கந்த. வள்ளி. ௯௫. நக்கீரர் சரிதத்தைச் சீகாளத்தி. நக்கீரச் சருக்கத்தாலுணர்க; "சங்கத்தோன் வேண்டச் சரீரத்தையேயுதவித், தங்கத் தியாகியெனத் தோன் றுமக்கு" என்பது, இரத்தினகிரியுலா.

௫௫. பாவலன் - நக்கீரர்.

௫௬. புண்டரீக விழிமானுர் - மதுரையிலிருந்த மாணிக்கவல்லியென்னும் பரத்தையின் புதல்வியர்களும் முறையே அமிர்தலதை, காந்திமதியென்னும் பெயரையுடையவர்களுமாகிய இரண்டு கன்னியர்கள். இரும்பு - நெருப்பிற் பழுக்கக்காய்ச்சிய இரும்பு; "ஏதிலேன் மனத்துக்கோ ரிரும்புண்ட நீரை" தேவாரம். சுந்தா. பிரமபுரம். இவர்கள் முத்திபெற்ற சரிதையை, சீகாளத்தி. கன்னியர்கதைச் சருக்கத்தாலுணர்க.

௫௭. புகலியார் வேந்தன் - திருஞானசம்பந்தமூர்த்திநாயனுர்.

(பி - ம்.) 1 'நின்றளவில்' 2 'அப்பிவிட' 3 'மற்றைக்கண்' 4 'எண்ணிக்' 5 'சயிலமடை' 6 'கீரற் கருளாற் சரீரத்தை' 7 'பாண்டியனுர் நாட்டிலுந்தன் பாரத்திருவடியை, ஈண்டித் திருவடியி லேதவே' 8 'மானுரை யிவ்வாறு' 9 'முன்னமறைத்'

ருஅ. தேவார வாகீசர் செம்பொற்கல் லாலடியிற்
[1] காவாலி யென்ற கணநாத - நாவலான்

ருகூ. கொண்டாட வண்டார் [2] குழலா ளுடன்புகுந்து
செண்டா டியவிடையான் சீருடையான் - பண்டைநாற்

சூo. பண்ணை [3] மறைத்தோதப் பாகவத னம்மானைக்
கண்ணை மறைத்தோதக் கண்ணீந்தோன் - விண்ணவரும்

சூக. [4] பூசச்சூ ழுந்திருமேற் பூச்சினன் [5] பூசலிடு
மோசைக் கலிங்க னுயிருண்டோன் - வாசவனூர்

சூஉ. பொன்னுலகைப் பூஞ்சோலை பூவுலக மாக்கவே
மன்னிவள [6] ராற்றூர் வளநாடன் - முன்னே

சூங. மதிவிக்ர மச்சோழன் வண்குலோத் துங்கன்
றுதிபெற்ற ராசேந்த்ர சோழன் - கதிபெற்ற

சூச. செம்மையர்க ளாகத் திருப்பணிக ளாற்பணியு
மும்முடிச் சோழபுர மூர்த்தியான் - மெய்ம்மைக்

சூரு. கனசுந் தரமாறன் கண்டமணி வாய்தற்
புனிதன்கண் ணப்ப புரத்தா - னனகனணி

சூசூ. யாதவற்குத் தால மிடுவாளைப் புல்கிநீ
போதியெனப் போதுபோய்ப் போந்தாளை - யாதவனுஞ்

சூஎ. சீரளகங் கொய்யத் திரும்பிவந்து நைவாளைத்
தாராளகங் கூடத் தடவியே - பேரவென

ருஅ. "கல்லாலின் கீழிருந்த காபாலிகாண்" என்பது, திருநா. தே. திருத்தா. அ. கணநாதன் - ஷெ. க, ங, ச; சுந். தே. க, ங, கo. நாவலான் - சுந்தரமூர்த்திநாயனர்.

ருகூ. 'செண்டாடிய விடையான்' என்பர் பின்னும்; ஙருo. "செண்டாடும் விடையாய் சிவ னேயென் செழுஞ்சுடரே,வண்டா ருங்குழலா ளுமை பாக மகிழ்ந்தவனே" என்பது, சுந். தே. க.

சூo. அம்மானை போன்ற கண்; "புகழாத வைணவர்தம் விழிமறைத்துப் பின்பு புகழவிழி தந்திடுமலே" என்பது, சுப்பிரமணியக்கடவுள் க்ஷேத்திரக்கோவைப் பிள்ளைத்தமிழ், திருக்காளத்தி, சிறுபறை, கூ.

சூரு. வரகுணபாண்டியர் வழிபட்டனரென்று வடமொழிப்புராணம் தெரிவிக்கின்றது.

சூசூ. யாதவன் - நாராயண நகரத்தரசன்.

சூஎ. கூட - வளர. பேர - செல்லுக.

(பி - ம்.) 1 'காபாலி யென்னுங்' 2 'குழலாருடன் புகழ்ந்த' 3 'மறைத்தோதுகின்ற பாகவதத் தம்மானை' 4 'பூசச்சுடுந்திரு' 5 'பூசியிடும்' 6 'ஆற்றுவளநாடன்'

௬௮. வந்தானைக் கூந்தல் வருவித்தா ராரென்னத்
தந்தாரைச் சொல்லவிறை தாள்போற்றி - யெந்தாய்

௬௯. தலமே தெனக்[1]கயிலைச் சங்கமனு முன்னை
நலமேவப் பண்ண [2]நடந்தே - முலகி

௭௦. [3] லிரும்பெல்லாங் கூட்டென் றிரதவா தஞ்செய்
தரும்பொ னளகேச னுக்கித் - திரும்பவுந்தன்

௭௧. கோபுரங்கண் மண்டபங்கள் [4]கோயில் வலமேறு
மாபுரங்கொள் வீதி மணித்தேர்கள் - சோபனங்க

௭௨. ளாகத் திருப்பணிகொண் டந்தத்தி லேயவனை
யோகக் கதவுதிறந் துட்கொண்டோன் - [5]பாகத்து

௭௩. நாலெட் டறம்வளர்க்கு ஞானப்பூங் கோதையிடு
மாலைக்கு வாய்த்த மணவாளன் - சூலத்தன்

௭௪. மெய்த்தேவன் சோதி விடங்க னிருநான்கு
கைத்தேவன் சார்ந்தாரைக் காத்தபிரான் - மொய்த்தேறு

௭௫. நாகநில யத்திமையோர் நாயகன் மாலிடப்
வாகன தேவன் மகதேவன் - சேகரித்த

௭௬. பச்சிம வாயிற் பரமனு ராவமுதன்
மெச்சி யழைத்துவாழ் வித்தருள்வோ - [6]னச்சன்

௭௭. கயிலாய மேவினான் காளத்தி யாள்வா
னுயர்திருக்கா ளத்தி யுடையான் - பயனறிந்து

பலவகைச் சொல்லணிகள்.

௭௮. [7] சொல்வார்க் கணுவன் றுடியன் [8]கலைகாட்டான்
மல்வாய்த்த பேய்க்கணத்தான் மாத்திரையா - னெல்லைக்

---

௭௧. சோபனம் = சோபானம் - படி.

௬௯ - ௭௨. இக்கண்ணிகளிலுள்ள கதையை, ஸ்ரீகாளத்தி. விடசங்கமச் சருக்கத்தாலும், சிலந்திமுதல முற்கதைச்சருக்கத்தாலுமுணர்க.

௭௩. ஞானப்பூங்கோதை: அம்பிகையின் திருநாமம்.

௭௫. நாகநிலயம் - விண்ணுலகம்.

௭௬. பச்சிமவாயில் - மேற்குவாயில். அச்சன் - அத்தன். [ஐய ஆடை.

௭௭. திருக்கு ஆள் அத்தி உடை - திருக்கையுடைய யானையின் தோலா

௭௮. அணுவன் - அண்ணுவார். துடி - உடுக்கை. கலைகாட்டான் - நூல்களாற் காட்டப்படாதவர். பேய்க்கணம் - பேயின்கூட்டம். மாத்திரை - மிக்க அலைகளையுடைய கங்கை. எல்லை - சூரியனை.

(பி - ம்.) 1 'கயிலைச்சங்கரனும்' 2 'நடந்தேமென்-முலகில்' 3 'இரும்பை யெல்லாங்கூட்டி' 4 'கோயி லலையேறு மாபுரங்கள்' 5 'பாகத்தில்' 6 'சச்சன்' 7 'சொல்வார்க் கிலவன்' 8 'கலைக்காட்டன்'

எகூ. கடிகையா னண்பகலான் காலையுச்சி வைத்தா
[1] னடியிரவன் செவ்வந்தி [2] நாத - னெடிய

அ0. வுருத்திதியன் வார [3] னொருவனன்பு காணத்
திருத்திய னக்கத் திரத்தன் - [4] மருத்தடைத்து

அக. வைத்தமக [5] யோகன் கரணன் மறமிகுத்துப்
[6] பத்திபுரி யோரையுள்ளான் பஞ்சாங்கன் - சத்தியென்னு

அ௨. மாத னுவாவருடன் [7]வாலுகத்தன் கற்பத்தன்
தாதுண் சடைச்சுரும்பர்ச் சங்காரன் - [8]போதுநீர்

அங. வைகைக் கெதிரே வருமேடன் [9]சைவத்தார்க்
குய்கை மறையோ ருபநிடவன் - செய்கை

எகூ. கடி கையான் - கடிந்த கையையுடையவர். நண்பு அகலப்பெறாத கண்ணப்பநாயனாருடைய காலை உச்சியில் வைத்துக்கொண்டவர். நடி இரவன்- இரவில் நடிப்பவர். செவ்வந்திநாதரென்பது திருச்சிராப்பள்ளியிற் கோயில் கொண்டருளிய சிவபெருமானுடைய திருநாமம்.

எகூ-அ0. நெடிய உருத் திதியன் வாரன்-நீண்ட வடிவத்தையும் காத்தற் றொழிலையுமுடைய திருமாலிடத்தே அன்புள்ளவர்; 'முகுந்தப் பிரியர்' என்பது சிவபெருமானுடைய திருநாமங்களுளொன்று. ஒருவன் - கண்ணப்பர். திருத்தியன் - திருப்தியையடைந்தோர்; திருத்தியவரென்றுமாம். அக்கு அத்திரத்தான் - (நெற்றிக்)கண்ணாகிய அஸ்திரத்தையுடையவர். மருத்து - காற்று.

அக. மகயோகம் - சிவயோகம். கரணன் - காரணமாகவுள்ளவர். பத்தி புரியோரை உள்ளான் - பத்திசெய்யாதவர்களை நினையாதவர். பஞ்சாங்கம் - ஐந்து அங்கங்கள்; தேவாரம், திருவாசகம், திருவிசைப்பா, திருப்பல்லாண்டு, பெரியபுராணம் என்னும் அருட்பாக்கள் ஐந்தையும் ஐந்தங்கமென்றல் மரபு; பரவிய அங்கமெனினும் பொருந்தும்.

அக - உ. சத்தியெனு மாதன் - உமையென்கிற மாதையுடையவர். உவாவருடன் - யானையால் திருமஞ்சனம் செய்யப்பெற்றவர். வாலுகம் - வெண் மணலாற்செய்த திருவுருவம்; என்றது ஸைகதலிங்கத்தை. கற்பம் - திருநீற்றுவகையுள் ஒன்று. சுரும்பர் சங்க ஆரன் - வண்டின் கூட்டத்தையுடைய ஆரத்தை அணிந்தவர்.

எஅ - அ௨. இக்கண்ணிகளில் முறையே அணு, துடி, கலை, காட்டை, கணம், மாத்திரை, எல்லை, கடிகை, நண்பகல், காலை, உச்சி, இரவு, அந்தி. திதி, வாரம், நக்ஷத்திரம், யோகம், கரணம், ஓரை, மாதம், உவா, வருடம், உகம், கற்பம், சங்காரமென்னும் காலவிசேடப்பெயர்களும் பஞ்சாங்கமென்னும் பெயரும் தொனித்தல் காண்க.

அங. வரும் ஏடு. உபநிடவன் - உபநிடதத்தையுடையவர்.

(பி - ம்.) 1'நடையிரவன்' 2 'நாதன்-படியைக், கவரொண் படையெடுத்துக் காக்குந்திதியான், மவுனன் கயிலைவடி வாளன் - சுவையூ, னருத்தியிடுங் கண்ணப்ப னன்பறிய வேண்டித், திருத்தியன்' 3'ஒருத்தனன்பு' 4'கருத்தடைத்து' 5 'யோககரணன்' 6 'பத்திபுரிவோரை' 7 'மாலுகத்தன்' 8 'மோதுநீர்' 9 'சைவத்தாலுய்கை'

அச. யிதமிதுநந் தொண்டற் கெனத்தூது சென்றோன்
கதிரொளிவீ சுங்கற் கடக - னுதயகலைச்

அரு. சிங்கப் புலியன் சிலர்க்கன் னியனானோன்
சொங்கொண்ட சங்கத் துலாத்தினு - னங்கை

அசு. விரிச்சிகத்தா ராதிப்பான் வீணைத் தனுசன்
கரத்திலிசை பாய்மகரக் காதான் - புரத்தகையன்

அஎ. விற்சாத கும்பன் விதிக்குமீ னங்கெடுத்தோ
னெற்சாம கீத விராசியான் - பொற்சாயற்

அஅ. கையே றியதலையான் கண்ணே றியநுதலான்
மெய்யே றியநாவான் மேற்காலான் - செய்யார்

அகூ. திருமுல்லை வாயான் சிறந்தகுட மூக்கான்
கருமங்கு மஞ்சைக் களத்தா - னருமந்த

அச. நந்தொண்டனுக்கு இஃது இதம்; தொண்டன் - சுந்தரமூர்த்தி நாயனார். கற்கடகன் - மாணிக்கங்கள்பதித்த அத்தகடகங்களையுடையவர்.

அச - ரு. உதயம் சிங்கம் கலை புலியன் - தானிலுதித்த சிங்கத்தோலாகிய ஆடையையுடைய புலிபோல்வார்; "சிங்கத்துரிமூடுதிர்" தேவாரம். "தம்பத்துதித்த சிங்கந் தான்நருமுட் சாத்தணிவார்" திருவிடை மருதூருலா, நகூகூ. சிவபெருமானைத் தெய்வவியாக்கிரமென்றல் மரபாதலின், 'புலியன்' என்றார். இங்ஙனம் கூறுதலை இந்நூலில் உ0கூ, சகூ0-ஆம் கண்ணிகளிலும் காண்க. இனி, உதயகலை - உண்டாகிய ஆடையை, சிங்கு அப்புலியன் - குறைந்த அந்தப் புலியினின்றும் பெற்றவரெனினுமாம். அன்பில்லாத சிலர்க்கு அந்நியரானோர். சொம் - பொருள்; என்றது சங்க மண்டபத்துக்கு எதிரே தூக்கிய பொற்கிழியை. சங்கத்து உலாத்தினன்; "சங்கத் துலாத்துஞ் சரணத்தான்" என்பது செய்யூருலா.

அசு. விரிச்சு (விரித்து) இகத்து ஆராதிப்பான்; இகம் - இம்மை. வீணையையுடைய தனுசன் - இராவணன். தகையன் - தடைசெய்தவன்.

அஎ. சாதகும்ப வில்லன் - பொன்னலாகிய மேருவில்லார். விதிக்கும் ஈனம் கெடுத்தோன். இராசி - கூட்டம்.

அந - எ. இக்கண்ணிகளில் முறையே மேடமுதலிய இராசிகள் பன்னிரண்டின் பெயரும் அமைந்துள்ளன.

அஎ - அ. பொற்சாயற் கையென்றது வரகுணபாண்டியரின் தேவியாருடையகையினை; சிவபெருமான் திருமுடிமீது அப்பெண்மணியாருடைய திருக்கையேறிய சரிதத்தை, மருதவனப்புராணம், வரகுணச்சருக்கம், அரு-ஆம் செய்யுள் முதலியவற்றாலுணர்க; கையிலேறிய தலையென்றுவிரித்து, தலை பிரமகபாலமெனினுமாம். மேற்காலானென்றது ஊர்த்துவ தாண்டவமூர்த்தியை.

அகூ. திருமுல்லைவாய் - திருமுல்லைவாயில். குடமூக்கு-கும்பகோணம். அஞ்சைக்களம் - திருவஞ்சைக்களம்; மஞ்சு ஐ களம் - மேகம்போன்ற அழகிய கண்டமென்றுமாம். இக்கண்ணியில் தலப்பெயர்களை அவயவப் பெயர்கள் போலத் தோற்றும்படி அமைத்திருக்கும் அழகு வியக்கற்பாலது.

கூO. பச்சை வடத்தான் பலகலைமேற் கட்டியா
னச்சிறுபா கைக்குள்ளே யாட்கொண்டோ - னச்சரவப்

கூக. [1] பேரணையான் பாகன் பெருங்காழிச் சட்டையான்
பாரியகச் சூரான் பவந்தடுப்பான் - [2]கீரநறுந்

கூஉ. துப்பட்டி யாட்டினான் துண்டப்புள் பூசித்தான்
முப்பத் திரண்டறமு முட்டாதா - னெப்பொழுதுங்

கூங. கோவணத்தான் போர்வையான் கோயிலிலே தேவரெலா
[3] மேவி விளைத்தபரி வேட்டியா - னேவருக்கு

கூச. மந்திரவஞ் சக்கரத்தான் மாற்கருளஞ் சக்கரத்தான்
[4] றந்திரவீ ணைக்கனகஞ் சக்கரத்தான் - மூந்திவரும்

கூரு. காலகா லன்பலநூல் காட்டினான் காட்டினு
னுலகா லன்பழசை யாட்டினான் - கோலநான்

கூO. பச்சைவடம் - ஆலமரம். பலகலைகளைப் பண்டைக்காலத்தில் உண் டாக்கியவர். அச்சிறுபாகை-அச்சிறுபாக்கம். ஆட் கொண்டோரென்பது அத் தலத்தில் ஸ்வாமியின் திருநாமம்; "அச்சிறுபாக்கமதாட்சி கொண்டாரே" என் பது, திருஞா. தே; "என்புற்ற வணிமார்ப ரெல்லையிலா வாட்சிபுரிந், தன்புற்று மகிழ்ந்ததிரு வச்சிறுபாக் கத்தணைந்தார்" என்பது பெரியபு. திருஞா. கOகங.

கூO - கூக. அரவப்பேரணையான் - திருமால். காழி - சீகாழி. சட்டை யான் - சட்டைநாதர். கச்சூர் - திருக்கச்சூர். பவம் - பாவம். கீரம் - பால்.

கூஉ. துப்புஅட்டி - தூய்மையான பொருள்களைச் சொரிந்து; ஆட்டினான்- அடியவர்களால் திருமஞ்சனம் செய்யப்பெற்றவர். துண்டப்புள்-கூரிய மூக் கினையுடைய கழுகு; கழுகு பூசித்த கதையைத் திருக்கழுக்குன்றப்புராணம், கங்காசலச் சருக்கத்தாலுணர்க. 'சம்பாதிபோற்றினூர்' என்பர்பின்னும்;கூகக.

கூங. கோ வண்ணத்தான்-கிரணம்பொருந்திய திருமேனியையுடையவர். போர் வையான் - போரையொழிப்பவர். பரிவேட்டி - வலம்வருதல்; இது பரி வேஷ்டிதமென்னும் வடமொழிச்சிதைவு.

கூO-கூங. இவற்றில் பச்சைவடம், கலை, மேற்கட்டி, சிறுபாகை, அணை, பாகு, சட்டை, கச்சு, பவந்தம், துப்பட்டி, துண்டம், கோவணம், போர்வை, வேட்டியென்னும் பருத்திநூற்காரியப்பொருள்களின் விசேடப்பெயர்கள் தொனித்தல் காண்க. பவந்தம் - திரை.

கூச - ககO. இக்கண்ணிகளில் பலவகையான மடக்கணிகள் வந்திருத்தல் காண்க.

கூச. மந்திரமாகிய அஞ்சக்கரம் - பஞ்சாக்ஷரம். மாலுக்கு அருளிய அழகிய சக்கராயுதம். வீணையைத் தாங்கிய திருக்கரம்.

கூரு. காலசங்காரர்; மிருத்தியுஞ்சயேசுவரரென்று இங்கே ஒரு மூர்த்தி யுளராதலின் அதுபற்றி, "காலகாலன்" என்றுரென்றுமாம். பலநூல்களைச்

(பி-ம்.) [1]'பேரணையான்றந்த' [2]'கீரனறுங்', 'கீைரநறுங்' [3]'மேவிவளைந்த', 'மேவிவிழைந்த' [4]'தந்திரிவீணை'

௯௬. மாடன்மா டன்மதனை மாட்டினான் மாட்டினான்
வேடன்வே டன்முயலை வீட்டினான் - மூடர்களைச்

௯௭. சோதியான் சோதியான் றோலைத்தோ லாக்கினா
னாதியான் மாலைமா லாக்கினான் - பாதிதுகி

௯௮. ராகத்தா னாகத்தா னம்பினா னம்பினா
[1] னாகத்தா னாகத்தா னம்பினான் - [2]சேகில்

௯௯. கெழுமிவள ராகாச கேசன் மகேசன்
[3] பழகி யறிபாசன் பாச - னழகார்

௪௦௦. நகுவெண் [4]டலையனா னந்த னனந்தன்
[5] றகுசெங் கனற்சந்தன் சந்த - னகிலங்

௪௦௧. கடிவில்லன் வில்லன் கதனல்ல னல்லன்
வடிவங் குழைவல்லன் வல்ல - னடியார்

செய்தருளியவர். பின்னுள்ள காடு - மயானம். பழசை - பழையனூர் திருவாலங்காடு; அத்தலத்தைப் பழனையென்பது பழவழக்காதலின், சோழநாட்டிற் காவிரிநதியின் தென்கரைக்கண்ணதாகிய திருப்பழையாற்றிலுள்ள தலங்களுள் ஒன்றாகிய ஆறைவடதளியென்னும் தலமுமாம்; பழையாறு - பழசையென வழங்குகின்றது. அதிற் சிவபெருமான் நடனஞ்செய்ததாக அத்தலபுராணங் கூறும்.

௯௫ - ௯௬. நன்மாடம் - மதுரை. மாடன் - பொன்னிறமுடையவர்; மாடு - பொன்; "பொன்பனைத் தன்னவிறை" திருச். ௨௧௯. மாட்டினான் - மாளச்செய்தவர், இடபவாகனமுடையவர். வேடனது வேடமுடையவர். முயல் - முயலகன். வீட்டினான் - வீழ்த்தினார்.

௯௭. சோதியான் - சோதியாதவர், ஒளியையுடையவர். தோல்-யானை. மால் - திருமால், மயக்கம்.

௯௭ - ௮. பாதி துகிர் ஆகத் தான் ஆகத்தான் - பாதிவடிவம் பவழம் போலத் தோற்றும்வண்ணம் திருமேனிகொண்டருளியவர். அம்பினான் அம்பினான் - கடலிற்றுயிலும் திருமாலை அம்பாகவுடையவர். நாகம்-மலை, பாம்பு.

௯௮ - ௯. சேகு-குற்றம்; சேகில் ஆகாசகேசன்; "ஆகாசகேசனை மாபுருடனை மாகேச்சுரனை யடையா நின்றேன்" ஆனைக்காப். பாசம்-அன்பு, பேய்.

௪௦௦. ஆனந்தன் அனந்தன். கனற்சந்தன் - கனல்போலும் அழகுடையவர். சந்தன் - வேதத்தையுடையவர்.

௪௦௧. கடியும்வில் - பிநாகம். வில்லம் - வில்வம். கதன் அல்லன் நல்லன்; குழை வல்லன் - உமாதேவியார்க்குக் குழைந்த வன்மையையுடையவர்; குழைதற்குக் காரணமாகிய வல்லை (கொங்கையை) யுடையவரெனினுமாம். வல்லம் - ஒரு திருப்பதி.

(பி - ம்.) 1 'நாகத்தா னம்பினா னம்பினான்' 2 'சேகிற்' 3 'பழகியெறி', 4 'தலையின்' 5 'தருகன்னச் சந்தனஞ்'

௧௦௨. [1] பணியும் பணியான் பணியும் பணியா
னணியு மணியா னணியா - னணிய

௧௦௩. மலையான் மலையான் மலையா னிலவின்
கலையான் கலையான் கலையான் - புலையகலுங்

௧௦௪. கேதாரன் கொக்கினிற கேதாரன் மூவிரட்டி
யாதார னெவ்வுயிர்க்கு மாதாரன் - வேதா

௧௦௫. மதித்தவளத் தண்ணு மலையான் கனலா
மதித்தவளத் தண்ணு மலையான் - விதித்ததிருக்

௧௦௬. கச்சாலை யானுடுங் கம்பத்தா [2]னுடுதுர
கச்சாலை யானுடுங் கம்பத்தான் - விச்சான்

௧௦௭. திருப்பாசை யானடங்குஞ் சித்தான் பவுரி
திருப்பாசை யானடங்குஞ் சித்தான் - றருப்போ

௧௦௮. விரங்கு[3]கயி லாயமலை யேற்றான் பலபு
ளிரங்குகயி லாயமலை யேற்றான் - மருங்கு

---

௧௦௨. பணி - தொண்டு, பாம்பு, ஆபரணம். அணியான் - அழகியவர். அண்ணியவர்.

௧௦௨ - ௩. அணி அமலையான். மலை - பருப்பதம், மலையான் - மாறுபாடில்லாதவர். கலை - பிறை, நூல்கள். கலையான் - கலைதலில்லாதவர்.

௧௦௪. கேதாரம் - ஒரு திருப்பதி. கொக்கின் இறகையே மாலையாக வுடையவர்; மலர் விசேடமாகிய கொக்கிறகுமாம்.

௧௦௫. மதி தவளம் தண் ஆம் அலையான் - திருமால். மதித்த வளத்து அண்ணுமலை.

௧௦௬. கச்சாலையான் - காஞ்சிக்கண்ணதாகிய கச்சபாலயத்தையுடையவர்; "கச்சிக்கச்சாலமும்" தண்டி. உரை - மேற். ஆடும் கம் பத்தான் னாடு துரகச் சாலையான் - பகைவரை வெல்லும் இராவணனது நாட்டினைக் குதிரைச்சாலை யாகவுடையவர் ; கம் - தலை ; இராவணன் வேதத்தில் வல்லவனென்றும் அதனால் இலங்கையில் வேதங்கள் மிக்கு வழங்கினவென்றும் கூறுவர். சிவ பெருமானுக்கு வேதத்தைக்குதிரையென்றல்மரபு. நாடும் கம்பத்தான்; கம்பம்- திருவேகம்பம். விச்சு = வித்து - விதை.

௧௦௭. திருப்பாசை-திருப்பாசூர். அடங்கும் சித்தான். பவுரி-கூத்தின் விகற்பம்; திருப்பு ஆசையான்; ஆசை - திசை. நடம் குஞ்சித்தான்.

௧௦௭ - ௮. தருவைப்போலே இரங்குகின்ற திருக்கரத்தில் ஆய்கின்ற சோற்றை ஏற்றருளியவர். பலபுட்கள் ஒலிக்கின்ற கைலாயமலையையும் இடபத்தையுமுடையவர்.

௧௦௮ - ௯. மருங்கு தர வரத்தினன் - மருங்கே தருதற்கு வரத்தை யுடையார்; வரதக் கரத்தினர். கடு கைத்து ஆரான் - விடத்தை வெறுத்து உண்ணுதவர்; விருப்பத்தோடு உண்டவர். பிறவியாகிய தாராவிற்கு அரம்போன் றவர்; தாரா - உலோகவகையில் ஒன்று. கடுக்கைத்தார் - கொன்றைமாலை.

(பி - ம்.) [1]'பணியும் பணியும்' [2]'காட்டுதுர', 'நீடுதுர' [3]'கயிலாயவலை'

க0கூ. தாவரத்தி ஞன்கடுக்கைத் தாரான் பிறவித்
தாவரத்தி ஞன்கடுக்கைத் தாரான் - விரவியபொற்

ககo. கல்லா வடியான் கடாவினுன் போர்வென்ருன்
கல்லா வடியான் கடாவினு - னல்லாவி

ககக. ஞல்வர்க்கும் போதித்தான் ஞானத்தின் பாகத்தான்
மால்வர்க்கஞ் சோதித்தான் மாயத்தா - னால்வர்க்க

ககஉ. மேலானுன் மேலாேனுர் வீடானுன் வீடாதோர்
பாலானு [1]னென்னுவின் பாலானுன் - வாலாருந்

ககந. [2] தும்பையன் சண்பையன் [3]சுந்தரன் சந்தரன்
சம்புவண் டன்சிவன் சங்கரன் - சிம்புளன்

ககச. வானனிலந் தீநனிலம் வாரியெனு மைந்தொகைதா
ஞனவன் பேதமு மானவன் - மீனவன்

ககரு. பற்கன் விசிட்டன் பரம பதமென்னுந்
[4] தெற்கண் கயிலைச் செகநாதன் - முற்கோலி

ககசு. வேதப் பெருமான் விதித்த பெருமாசி
மாதத் திருநாளின் மற்றெருநா - ளாதி

ககஎ. புரண பரஞ்சோதி பொன்மண் டபத்தே
முரணகல வீற்றிருந்து முன்னுட் - [5]பொருளுதவத்

ககஅ. திண்காப் பணிகரத்திற் சிந்தா மணிகளுமிழ்
வண்காப் பணிந்தருளி மற்றைநா - ளொண்கதிரோன்

கககூ. றென்கயிலா யம்பணிந்து செல்வான் வடவெள்ளிப்
பொன்கயிலா யம்பணியப் போனதற்பி - னன்கருணைக்

ககo. கடாவினுன் போர் - யமனுடையபோரை. அடியான் கல்லாற் கடாவினுன்; அடியான் - சாக்கியநாயனுர்.

ககக. ஞானம் - ஞானப்பூங்கோதையம்மை.

ககஉ. நாவின்பால் - நாவினிடத்தே. வால் - வெள்ளை.

ககந. சந்து - தூது. அண்டன் - தேவர்.

ககச. மீனவன் - சுந்தரபாண்டியராக எழுந்தருளியிருந்தவர்.

ககசு. வேதப்பெருமான் - பிரமன்.

ககஎ. புரணம்=ஸ்புரணம் - தோன்றுதல்.

ககஎ - அ. பிறருக்குப் பொருளை உதவுதற்குத் திண்ணிய கா முன்னுட் பணித்தகரம்; கா-கற்பகம். சிந்தாமணிகளை உமிழுகின்ற வளவிய காப்பு-சர்ப்பரகைஷ.

கககூ. செல்வான் - சூரியன். சூரியாஸ்தமயத்தின்பின்பு.

கககூ - உகூ. 'நன்கருணை' என்பது முதல் 'நீலத்திருச்சாந்துசாத்தி'

(பி - ம்.) 1 'என்னுவிற் பாலானுன்' 2 'தும்பையன் சண்பகன் சுந்தரன் சங்கினன்' 3 'சுந்தரன் றந்திரன்' 4 'தெற்கின்கயிலை' 5 'இரணியமெய்த்திண்'

நீலத்திருச்சாந்துக் காப்பு.

கஉ0. கள்ளவிழிக் கண்மணிதான் கண்ணப்பன் கண்மணிக்கா
வுள்ளொதுங்கி மேல்வந் துதித்ததெனு - [1] நள்ளருளின்

கஉக. கோலத்தி லே[2]கலந்த கோளரவி ஞாலமென
நீலக் கரிமதத்தி னீரென்னப் - பாலடைந்தார்

கஉஉ. துன்றளக மென்னத் தொழுதெதிரே கோடேறி
நின்ற முராரி நிழலென்னச் - சென்றுவலே

கஉங. முன்கை[3]யபி ராமி முளரிக் கலங்கரித்த
மென்கடக நீலமணி விம்பமெனத் - தன்களங்கந்

கஉச. திங்கள் சொரிந்ததெனச் சித்தசவே ளன்றெரியப்
பொங்குவிழி யின்னும் புகைந்ததென - [4]வங்குரித்து

கஉரு. வெங்கோபங் கொண்டெழுந்த வீரன் கருவெள்ளைச்
செங்கோ கனகத்துத் தேனென்னத் - துங்கத்

கஉசு. திருவிற் குனித்துச் செருமுகத்தே வாங்கும்
புருவத் திடைநாண் புரளக் - கரியகணை

கஉஎ. வைத்ததெனக் காமன் வடிவழகை வாங்கிவைத்த
சித்ரமெனக் கங்கை செயலெல்லா - மெத்தெனவே

கஉஅ. யொற்றிருந்து கேட்கு முமையென்னத் தேவருடன்
மற்றவரைக் காத்த மறுவென்ன - நெற்றித்

கஉகூ. திலகமுற நீலத் திருச்சாந்து சாத்தி
யலகிலணி பூண்ட வழகா - யுலக

கங0. மொருமூன்று நான்மறையு மும்பர்களும் போற்றத்
திருவீதி போந்து திரும்பி - யருளியபின்

கஙக. பண்பட்ட நூற்சிலந்தி பத்திமையா லுண்மகிழ
வெண்பட்டு நூலாடை மேற்சாத்திக் - கண்பனிப்பக்

என்பது இறுதியாக ஒருதொடர் ; அ - ஆம் திருநாளிரவில் திருச்சாந்தணிதல் கூறப்படுகின்றது; இது கிருஷ்ணகந்தோத்ஸவமெனப்படும்.

கஉக. பாலடைந்தார் - மதுரைக்கன்னியர்கள்.

கஉரு. வீரன் - வீரபத்திரர். தேன் - வண்டு.

கஉசு. கரியகணை - திருமாலாகிய அம்பு.

கஉஅ. காத்த மறு - விடம்.

(பி - ம்.) 1 'கள்ளிருளின்' 2 'கரந்த' 3 'அபிராம முளரிக்கு' 4 'அங்குரிக்க', 'அங்குதித்து'

கஙஉ. கற்பூரஞ் சாத்திக் [1]கலவைகுளி ரச்சாத்திச்
சொற்பூந் தவளத் தொடைசாத்தி - நற்புடையில்

கஙங. வெண்சா மரையிரட்ட வேயுறுதோ ளாற்பரித்துத்
தண்சாய ஞமகளிர் சங்கமாய்ப் - பண்சாரச்

கஙச. செந்தீபக் கஞ்சந் திரண்டலரப் பொன்முகரி
யிந்தீ வரமுண் டுளந்தென்றல் - வந்துலவத்

கஙரு. திங்க ணிலாவெறிப்பத் தென்பீட முன்றிலிலே
யங்க ணுலாப்போந் தருளியபி - னெங்கள்பெருஞ்

கஙசு. சைவ மறையோர் சதுமறையின் காரணத்துத்
தெய்வமகா பூசை செலுத்துதலுங் - கையி

கஙஎ. லரும்பள்ளி வேளெய்ய வன்றவனைப் [2]பாரா
வரும்பள்ளி வாச மணுகி - விரும்பி

கஙஅ. யகிலாண்ட மீன்றாளை [3]யவ்விருளிற் கூடி
யகிலாண்ட பூண்முலைப்போ ராடி - மிகவுறங்கிச்

கஙகூ. செங்கதிரோன் கைமலரச் செந்தா மரைமலர
மங்கையுடன் [4]செங்கண் மலர்ந்தருளிக் - கங்கைநீர்

கசo. கண்ணப்பன் வாய்நீர் கரியுமிழ்நீர் கண்ணப்பன்
வண்ணச் [5]செருப்பணிந்த வார்சடைமே - லெண்ணத்திற்

கசக. புக்கார் பவங்கடியும் பொன்முகரி நீராடி
மிக்கான பூசை விதிகொண்டு - திக்காடை

கஙஉ. இக்கண்ணிமுதல் வெள்ளைசாத்துதல் கூறுகின்றார். தவளத்தொடை - தும்பைமாலை; இஃது இத்தலத்தில் மிக்க விசேடமுடையது.

கஙங. தோளாற் பரித்து நாமகளிர் சங்கமாய்ச் சாமரை இரட்டவென்க. சாமரையிரட்டுமகளிர் வெள்ளணியணிந்திருத்தலின், கலைமகள் போல்வாரென்பார், 'நாமகளிர்' என்றார்; திருமகள் போல்வாரை, 'இந்திரைகள்' என்பர்பின்; உ0கூ.

கஙரு. தென்பீடம்- தக்ஷிணாமூர்த்தியின்பீடம்; இது வைதிகபீடமெனப் பயி படும்.

கஙசு. காரணம் - காரணாகமம்.

கஙஎ. அரும்பை அள்ளி. பள்ளி - படுக்கை.

கஙஅ. அகிலாண்டம் - எல்லாஅண்டங்களையும். அகில் ஆண்ட - அகிற்புகையை ஆண்ட.

கஙகூ. கை=கரம் - கிரணம்.

(பி-ம்.) [1]'கலவைத் தளிர்சாத்தி' [2]'பாராது' [3]'அன்றிருளிற்' [4]'சேக்கை வளர்ந்தருளி' [5]'செருப்பிருந்த'

கசஉ. மண்டுகரி யேற மதவாடை கொம்புகொளப்
புண்டரிக வாடை பொறிதாக்கக் - கண்டிகழா

கசங. நீவிக் கலைசாத்தி நீடிலையி லேழுலகைப்
பூவிட்ட கச்சுப் புறத்தார்த்து - மூவுருவு

கசச. மொன்றுதல் காட்டு முபவீத மார்பணிந்து
பொன்றாத தொல்லைப் பொருளெல்லாஞ் - சென்று

கசரு. முடியு மிடத்தே முடிபுனைந்து சேணூர்
சடையு மிளம்பிறையுந் தாழப் - பிடியிடஞ்சே

கசசு. ரிக்கயிலைக் காளத்தி யானைக் கியலோடை
தக்கதெனப் பட்டந் தரித்தருளி - நக்கருக்குத்

கசஎ. தேங்குழையுந் தோடுஞ் சிலையிடத்தி லுள்ளவெனப்
பூங்குழையுந் [1]தோடும் புடைசூட்டி - மூங்கிற்

கசஅ. [2] சகோதரரென் றூரத் தழீஇக் கழுத்துமுத்த
[3] மகோததிநீ லத்தை மறைக்கக் - ககோதரநற்

கசகூ. பையரா மெய்க்குளுமிழ் பன்மா மணிவடம்போற்
செய்ய[4]மா ணிக்கவடஞ் சேர்ந்திலங்க - வெய்யிற்

கருo. கணைத்தணியாய்ப் பல்லுலகாய்க் கங்கைப் படியாய்
மணிப்பதக்க ராசி மலியப் - பணிக்கிரணப்

கருக. பாந்தளின் மலைவலியைப் பார்த்துச் சுழலவிட்டுப்
போந்ததெனை வாகு புரிவயங்கக் - காந்தி

கசஉ. மதவாடை - யானைத்தோலாகிய ஆடை. புண்டரிகவாடை - புலித்தோலாகிய ஆடை. 'கரியேற', 'கொம்புகொள', 'பொறிதாக்க' என்பன சிலேடைகள்.

கசங. ஆதிசேடனாகிய கச்சு.

கசசு. காளத்தியானையென்பது இத்தலத்தில் ஸ்வாமியின் திருநாமம். ஓடை - நெற்றிப்பட்டம்.

கசஎ. குழை, தோடு என்பன ஆபரணவிசேடங்கள்; இவற்றிற்கு முறையே தளிர், பூவிதழெனவேறு பொருளுங்கொள்க. சிலை - மலை.

கசஎ - அ. சிவபெருமான் மூங்கிலிற்றோன்றியவராதலின், அவரைச் சகோதரரென்று முத்தம் கருதியதென்றார். மகோததிநீலம் - விடம். ககோதரம் = காகோதரம் - பாம்பு.

கசகூ. அரா - காளமென்னும் பாம்பு.

கருக. வாகுபுரி - வாகுவலயம்.

(பி - ம்.) 1'தோடும் புறத்தார்த்து' 2'சகோதரனென்று' 3'மகோதரநீலத்தை' 4'மாணிக்கஞ்சிறந்திலங்க'

௧௫௨. யுருக்கொள்வல யத்துமணி [1]யொன்பதின்ம ருற்ற
திருப்பதிக மென்னத் திகழ - மருப்பதத்துச்
௧௫௩. சந்திரனு மந்தகனுந் [2]தாருகனை வென்றாளுஞ்
சிந்தை யதிரச் சிலம்பதிர - வந்தரத்திற்
௧௫௪. கோத்தபெரு வெள்ளங் குடிக்கப் பசிகொண்டு
காத்திருந்த வங்கி கரத்தோங்கக் - கோத்திரத்தி
௧௫௫. லம்மை மருங்கிற் கலந்துதலை மோதுவபோற்
சும்மைகொடு செங்கைத் துடிதுடிப்பக் - கொம்மைத்
௧௫௬. தனங்களுடை யார்வீதி சார்வளவு நில்லென்
றனங்களை[3]யங் கோர்கை யமைக்கப் - புனைந்தமணிப்
௧௫௭. பச்சைக் கொழுந்தைப் பசும்புற் கொழுந்தெனவே
[4] நச்சிக் கரநவ்வி நாநீட்ட - மெச்சு
௧௫௮. பணியாட நீராடப் பைங்குவளை மாலை
யணியாடப் பொன்னிதழி யாட - மணமுண்டு
௧௫௯. வண்டாடக் கோடிதலை மாலையா டச்சுருதி
கொண்டாடத் [5]தேவர்குழாங் கூத்தாடச் - சண்ட
௧௬௦. முரசதிரத் தெய்வ முழவதிர [6]நாக
சுரமதிரச் சங்கந் தொனிப்ப - வரையரையன்
௧௬௧. மாக்கற் பகவல்லி வானிக் கிரணவிழி
தாக்கத் திருவாடு தண்டேறி - நோக்கினுற்
௧௬௨. சீறுமத னுக்குதவி செய்யவோ வென்றணுகிக்
கூறு மதி[7]போற் குடைநிழற்றத் - தேறமுத
௧௬௩. லன்னமா ஞான்கண் டதிசயித்துப் [8]பார்த்துழல
வன்னமா வெண்சா மரையசையத் - தின்னை
௧௬௪. யலக்கணற வாழ்த்து மடியார் பவத்தை
விலக்குவபோ லாலவட்டம் வீசத் - துலக்குமணி

---

௧௫௨. ஒன்பதின்மர்-திருவிசைப்பாக்களை அருளிச்செய்த திருமாளிகைத் தேவர் முதலியோர்.

௧௫௨ - ௩. பதத்து அதிர. தேய்ப்புண்டமையாற் சந்திரனும், உதையுண்டமையால் யமனும், கூத்தில் தோல்வியுற்றமையால். காளியும் சிந்தை நடுங்கினர்.

௧௫௪. கோத்திரம் - மலை. ௧௫௫. துடி - உடுக்கை.

௧௫௭. நவ்வி - மான்.

(பி - ம்.) 1'ஒன்பதுகளுற்ற' 2 'தாருகனைக் காய்த்தாளுஞ்' 3 'ஓர் செங்கை' 4 'நச்சுக் கிரநவ்வி' 5 'தொண்டர்குழாங்' 6 'நாகசுரமதிரச் சங்கந்தழங்க', செம்பொனரசதிரச் சங்கமதிர' 7'போல்வெண் குடைநிழற்ற' 8'பார்க்கவுழல்'

கசுரு. யம்பொற் [1]களாசி யடைப்பைவரக் கஞ்சுகிகள்
செம்பொன் மணிவேத் திரம்பிறங்க - வெம்பரித்

கசுசு. தேசு பெறுங்கனகத் திண்கோ புரநிரையின்
வாசல் பலகடந்து வந்தருளி - வீசுகதி

கசுஎ. ராழியாற் பொற்கொடியா லாடகப் பொற்றொடையால்
வாழி மணிவடத்தான் மாலையாற் - கேழ்கிளருஞ்

கசுஅ. சங்க [2]மணிகும்பந் தாங்கலாற் பாகத்துச்
செங்கணெடு மாலனைய தேரேறி - மங்கையுடன்

கசுகூ. சங்கு திமிலை தடாரி குடமுழா
மங்கல கீத மகர[3]யாழ் - பொங்கிய

கஎ0. சச்சரி பேரி தலைமயங்கிக் கம்பிக்கப்
பிச்ச வணிகள் பிறங்கியிட - வுச்சியிலே

கஎக. [4] யண்சந் திரனைவென் றண்டவற்குச் சந்திரன்போல்
வெண்சந் திரவட்ட மேலாடக் - கண்சாத்து

கஎஉ. [5] வள்ள லநுபமத்து மாலுமய னுங்கருடப்
புள்ளுமன்னப் புள்ளும் பொலிந்தேறத் - தள்ளிக்

கஎங. [6] கிரியி னரியுமெரி கின்றவனும் வெள்ளைக்
[7] கரியு மரியுங் கடவப் - பெரிய

கஎச. தடமையுரு வானவனுந் தானவனும் பொற்பா
ரிட[8]மையிட மேறி யிறைஞ்சக் - குடதிசையிற்

கசுரு. களாசி - காளாஞ்சி. கஞ்சுகிகள் - சட்டையிட்டோர்.
கசுஅ. மங்கையுடன் தேரிலேறி.
கசுஎ - அ. தேருக்கும் திருமாலுக்கும் சிலேடை: ஆழி - உருளை, சக்கரம். பொற்கொடி - பொன்னாலாகிய துவசம், திருமகள். மணிவடம் - அழகிய (இழுக்கும்) வடம், இரத்தினமாலை. சங்கம், மணி, கும்பம் ஆகிய இவற்றை; குடக்கூத்து ஆடியபொழுது திருமால் கும்பந்தாங்கினர்.
கஎ0. கம்பிக்க - அதிர்ந்து முழங்க; 'கம்பிக்குந் தெய்வமுரசு' என்பர் பின்னும்; ருச0.
கஎக. சந்திரவட்டம் - ஒருவகைவிருது.
கஎஉ. அநுபமத்துமால் - ஒப்பற்றமால்.
கஎங. கிரியின் அரி - இந்திரன். எரிகின்றவன் - அக்கினி. அரி-ஆடு.
கஎச. மை உரு வானவன்-யமன். தானவன் - நிருதி. பாரிடம் - பூதம்; மயிடம்=மகிஷம் - எருமைக்கடா; எதிர்நிரனிறை.

(பி - ம்.) [1]'காளாஞ்சி' [2]'மணிக்கும்பம்' [3]'யாழ்செங்கோடு' [4]'அண்சந்திரன்வளர வாண்டவர்க்கு, 'அஞ்சந் திரற்குவே றண்டவர்க்கு', [5] 'வள்ளலனுமத்துவச' [6]'கிரியுமரியும்' [7]'கரியுமறியுங் கடாவ' [8]'மயிட'

கஎரு. காமேனறு நீர்க்கரசைக் கந்தச் சமீரணனை
மீனேறு மானேறு மேற்கொள்ள - [1]ஊனுருகிச்

கஎசு. சுற்றமா கக்கலந்த தோழனுந் [2]தோழனும்
பெற்றவிமா னத்தேறிப் பின்செல்ல - வொற்றைமருப்

கஎஎ. பாளிதுடி யாளி[3]யெனு மாதார பூதர்பெருச்
சாளியினு ஞாளியினுந் தாளூன்ற - வேனு

கஎஅ. நயச்செண் டடிப்பவனு நற்புடைக்கே சொற்கே
கயத்துங் கயத்துங் களிப்ப - வியற்காளி

கஎகூ. துங்கக் கலையேறச் சூலிநெடும் பேயேறச்
சிங்கத்தி லேறச் செழுங்கன்னி - சங்கமா

கஅ0. யோரெழுவ ரோரெண்ம ரொன்பதின்ம ரோர்பதின்மர்
பாராப் பதினொருவர் பன்னிருவ - ரீரெழுவர்

கஅக. தத்தம் விமானந் தமிலேறக் கந்தருவர்
சித்தர் முனிவர் திரண்டேத்த - முத்தமிழாற்

கஅஉ. பல்லக்கைப் பெண்ணாகப் பாடினோன் வெண்டரளப்
பல்லக்கி லேயிருந்து பண்பாடக் - கல்லொக்க

கஅங. மேனாண் மிதந்தானை மெய்க்கா வணமேந்த
மானா வலினரசை மாவேந்தக் - [4]கான

கஎரு. நீர்க்கரசு - வருணன். சமீரணன்-வாயு. மீனேறு - சுறாமீன். மானேறு - கலைமான்.

கஎசு. தோழனும் தோழனும் - குபேரனும் ஈசானனும்; சாரூபம்பெற்றவ னாதலின், ஈசானனைத் தோழனென்றார். பெற்றவிமானம் - பெற்றுக்கொண்ட விமானம், இடபமாகிய விமானம்; எதிர்நிரனிறையாகப் பெற்றமும் விமானமு மெனக் கொள்ளினுமாம்.

கஎசு - எ. விநாயகரும் வைரவக்கடவுளும். ஞாளி - நாய்.

கஎஅ. செண்டடிப்பவன் - ஐயனார். செண்டு - ஒருவகைப் படைக்கலம். புடைக்கு - பக்கத்தில். சொல் - புகழ். கேகயம் - மயில். கயம் - யானை.

கஎகூ. கலை - கலைமான்.

கஅ0. எழுவர் - ஏழுமுனிவர்; சத்தகன்னியருமாம். எண்மர் - அட்ட வசுக்கள். ஒன்பதின்மர் - நவக்கிரகதேவர்; பதின்மர் - தசப்பிரமர். பதி னொருவர் - ஏகாதச உருத்திரர். பன்னிருவர் - துவாதசாதித்தர். ஈரெழு வர் - பதினான்கு மனுக்கள்.

கஅஉ. பல் அக்கு - பலவாகிய என்புகள். பாடினோன் - திருஞானசம் பந்தர்.

கஅங. மிதந்தான் - திருநாவுக்கரசர். அரசு - சுந்தரமூர்த்திநாயனார்.

(பி - ம்.) 1 'வானூருஞ்' 2 'தோழனும் பொற், பெற்ற' 3 'எனு மாபூதர் பூதர்' 4 'கானோர்'

௧௮௪. நரிக்குதிரை கொண்டோ ரனரவா கனத்தே
1 தரிக்கமணித் தண்டேறத் தன்டி - திருக்கழலை

௧௮௫. நூலின்வழி 2கண்டோரு கொர்தீன்ற கற்சமத்திக்
கோலுஞ் சிவபதத்தைக் 3கொண்டோரும் - காலிரண்டுங்

௧௮௬. தாவென்ன வெற்பிற் றலைமோதி 4நின்றோருஞ்
சீவன்செல் கண்வழியே 5சென்றோரும் - பாவனைக்கு

௧௮௭. ணண்பாக வேகம்பி நான்வந்தே னென்றோனும்
வெண்பா 6விளக்கேற்றும் வித்தகனும் - பெண்பாகம்

௧௮௮. பெண்களுடைமையெனப் பேரின்பம் பெற்றோருங்
கண்களிக்கக் கேட்கத்திற் காட்சிதரப் - 7பண்களித்துப்

௧௮௯. பாடியுமர்ச் சித்தும் பணிந்தும் பதம்பெறும்பல்
கோடி யடியார் குழாங்கொள்ள - நாடளித்த

௧௯௦. சோழ ரிருமருங்குஞ் சூழ்ந்துவரத் தொண்டையரும்
8 பூழியருங் கேரளரும் போற்றிசெய - வூழி

௧௯௧. யெழுபிறப்புந் தானறுத்த யாதவர்கோ னின்று
செழுமணிப்பொற் செங்கோல் செலுத்தத் - தொழுகோயிற்

௧௯௨. சட்டமிடத் தோன்றிச் சதகோடி வைபவஞ்செய்
9 சிட்டய ராமனின்று சேவித்துக் - கிட்ட

௧௮௪. தண்டி - தண்டீசர்.

௧௮௫. நூலின் வழிகண்டோர் - சிலந்தியாக இருந்து வழிபட்டதேவர். கொண்டோர் - காளனென்னும் பாம்பாக இருந்து வழிபட்டதேவர்.

௧௮௬. தலைமோதி நின்றோர் - யானையாக இருந்து வழிபட்டதேவர். சென்றோர் - கண்ணப்பநாயனுர்.

௧௮௭. வந்தேனென்றோன் - சிவகோசரியார். வித்தகன் - நக்கீரர்; 'நந்தாவிளக்கெனவே நக்கீரர் சொன்னதிரு, வந்தாதி யேகாதணி' என்பர் பின்னும்; ௫௨௩;"சொல்லும் பொருளுமே தூத்திரியு செய்யுமா, நல்விடுஞ்சி லென்னுடைய நாவாகச் - சொல்லரிய, வெண்பா விளக்கா வியன்கயிலை மேலிருந்த, பெண்பாகற் கேற்றினேன் பெற்று" என்று இவர் கூறியிருத்தலால் இவரை வெண்பாவிளக்கேற்றும் வித்தகர் என்றார்; கயிலைபாதி காளத்திபாதித் திருவந்தாதி, க.

௧௮௮. பெற்றோர் - மதுரைக்கன்னியரிருவர்.

௧௯௦. தொண்டையர் - ஆதொண்டைமானுடைய பரம்பரையரசர்.

(பி - ம்.) 1'தருக்க' 2'கண்டோனும்' 3'கொண்டோனும்' 4'நின்றோனும்' 5'சென்றோனும்-பூவுலகில்' 6'விளக்கேத்தும் வித்தகரும்' 7'பண்களிக்கப்' 8'பூழியரு மருக்கு' 9 'சிட்ட ருயரநின்று சேவிப்ப'

௧௯௩. வடமடத்து மாமுனியு மாமணி கங்கைத்
திடமடத்து வாழ்தே சிகனுங் - கடலனைய

௧௯௪. கொண்டற் கொடை[1]யாறு கொத்தாரும் வெண்ணீற்று
வண்டற் பதினெண் மடத்தாரும் - [2]பண்டாரத்துச்

௧௯௫. [3] சுத்தச் சிவாகமத்துத் தொல்லைநூற் காரணத்துப்
பத்துக் குடி[4]வேத பாரகரு - மத்தனருள்

௧௯௬. [5] வைத்தியகோ யிற்கணக்கு மந்திரவோ லைக்கணக்கு
[6] முத்திரிக்குங் கூர முறையாரும் - பத்திபுரி

௧௯௭. யெட்டுக்கொத் தான விளையநா யக்கர்களும்
வட்டக் களபமுலை வண்ணவா - யிட்ட

௧௯௮. சிறுபத்தி முல்லைநகைத் [7]தேவரடி யார்க
ளறுபத்து நாலுவகை யாரு - முறுதியின்மற்

௧௯௯. றுள்ள வடியாரு மோங்கு தமிழோருந்
தெள்ளிய பாடகருஞ் சேவிப்பக் - கள்ளமதன்

௨௦௦. பூமழையு மேற்சொரிபொற் பூமழையு மந்தணர்கைப்
பூமழையு மண்டம் [8]பொதிந்தேற - மாமறுகி

---

௧௯௩. வடமடம் - சங்கர முனிமடம்; இஃது இத்தலத்திற் காலிகோபுரத்திற்கு வடக்கே மேற்குத் திருவீதிக்குமேற்கே கருங்கல்மண்டப வடிவாக இப்பொழுதுள்ளது. மாமணி கங்கைத்திடமடம் - மணிகர்ணிகேசுவரமடம். இது திருக்கோயிலுக்குத் தெற்கேயுள்ளது.

௧௯௪. ஆறுகொத்தார் - யானைமுதலியவற்றிற்கு இடபமுத்திரைபோடுவோராகிய முத்திராதிகாரிகள் முதலிய ஆறுவகையினர். பதினெண்மடத்தார் - சிவாகமபத்ததிகள் பதினெட்டும் இயற்றிய சிவாசாரியர்கள் பதினெண்மர்களுடைய பரம்பரையினர்; அப்பதினெண்மர்களாவார்: துர்வாஸசிவர், பைங்களசிவர், உக்ரஜ்யோதி, ஸ்ரீகண்டர், விஷ்ணுகண்டர், ஸம்போதர், வித்யாகண்டர், இராமகண்டர், ஞானசிவர், ஞானசங்கரர், ஸோமசம்பு, ப்ரஹ்மசம்பு, திரிலோசனசிவர், அகோரசிவர், வருணசிவர், ப்ரஸாதசிவர், இராமநாதசிவர், ஈசானசிவரென்பவர்கள்; "பதினெண் மடத்திற் பயிலு - முதலிகளும்" என்றார் திருவானைக்காவுலாவுடையாரும்.

௧௯௬. மந்திரவோலைக்கணக்குமுத்திரித்தல் - வேதாகமங்களை யெழுதுதல். கூரமுறையார் - கூரமென்னும் ஊரிலிருந்துவந்த முறையையுடையோரென்பர்.

௧௯௭. எட்டுககொத்தான இளையநாயக்கர் - திருவபிடேகத்திற்குப் பால் கொணர்தல் முதலிய எட்டுவகைத்தொண்டிற்கு உரியவர்கள்.

௧௯௮. தேவரடியார்கள் - உருத்திரகணிகையர்கள்.

(பி - ம்.) [1]'ஆறுகோத்திரரும்' [2]'பண்டைநூற்' [3]'சுத்தசிவாகமத்துத்' [4] 'வேதபாரகரும்' [5] 'வைத்தகோயிற்' [6] 'உத்தரிக்குங் கூலமுடையாரும்' [7] 'தேவரடியாரறு' [8] 'பொலிந்தேற', 'பொலிந்தோங்க'

உ0க. லாணிக் கனகத் தமைத்தசிலே யான்வந்தான்
மாணிக்கச் சோதி மலேவந்தான் - பாணிதனிற்
உ0உ. [1] பத்துப் பிறப்பிற் பகழிப் பிரான்வந்தான்
[2] செத்துப் பிறவாத தேவன்வந்தா - [3]னித்திரையிற்
உ0௩. சார்ந்தாரைக் காத்த தயாவா ரிதிவந்தான்
சேர்ந்தார்க் கினிய சிவன்வந்தான் - கூர்ந்தசிவ
உ0ச. [4] நம்பிக்கு முன்னின்ற நம்பிக்கை யான்வந்தான்
றும்பிக்கை யானேத் துணேவந்தான் - செம்பவளச்
உ0ரு. சோதிப் பெருந்தேவன் சோதி விடங்கன்வந்தான்
போதிக்க வொண்ணுப் பொருள்வந்தான் - கோதற்ற
உ0சு. வாயிரநா மத்தான்வந் தானன்று செங்காட்டிற்
போயிரந்த பிள்ளேப் புலிவந்தா - னேயமென்றும்
உ0எ. வைத்த மலேக்[5]கொழுந்தான் வந்தான்வந் தானென்று
பத்திபுரி சின்னம் பணிமாறத் - துத்திவரி

குழாங்கள்.

உ0அ. [6] நாக ருலகமணி நாக நிதம்பியரும்
பாக ருலகமொழிப் பாகரு - மேகமணி
உ0கூ. சந்திரனே போன்றமுக சந்திரலோ கத்தாரு
மிந்திர னூ ரிந்திரைக ளெல்லாருங் - கந்தருவ
உகO. கன்னியருஞ் சித்தரிளங் கன்னியருங் கின்னரர்தங்
கன்னியருங் கிம்புருட கன்னியரும் - பொன்னின்
உகக. சிலேவா ழுநங்க சிலேப்புருவத் தாரு
[7] மலேவா ழலேயளகத் தாரு - நிலேயாய
உகஉ. கண்ண னுலகமலர்க் கண்ணுரும் பூலோக
வண்ண மகளிர் வடிவெய்திப் - பண்ணேயா

---

* உ0உ. திருமாலாகிய பகழி.
உ0௩ - ச. சிவநம்பி - சிவகோசரியார்.
உ0அ. பாகருலகம் - பிரமனுலகம்.
உ0கூ. இந்திரைகள்-திருமகள்போன்ற மங்கையர்கள்; அரம்பையர்களு [மாம்.
உகO - கக. பொன்னின்சிலே - மேருமலே. அலேவாழ் அலேஅளகத்தார் - நீரரமகளிர்.

(பி - ம்.) 1'பத்துப்பிறப்புப்' 2'செத்துப் பிறவாச்சிவன்' 3'இத்தரையிற்' 4 'நம்பிக்குந் திண்ணனுக்கும்' 5'கொழுந்தன்' 6'நாக குலத்திலுள்ள நாக' 7 'அலேவாழ் முகிலளகத்தாரும்'

உகங. யீட்டு மரவிற் கிடங்கொடுத்த தென்னென்று
கூட்டமிடுங் தோகைக் குழாங்களோ - காட்டுமுன்னே

உகச. யெங்க ணதியை யிவராடக்க லென்னென்று
பொங்கி வருமெகினப் புட்களோ - பங்கமகத்

உகரு. தோடு முழையை யுரித்தா ரிவரென்று
தாடி வருமானின் சங்கமோ - சூடேற்றி

உகசு. மீனக் கொடியானை வென்றகொடி யாரெனச்சூழ்
கானக் குயிலின் கணங்களோ - யானை

உகஎ. பிடித்தபிடி யாயுரித்த பேராள னேப்பின்
பிடித்த பிடியின் பெருக்கோ - சடைக்கு

உகஅ. விளைத்தமதி சிக்கியதென் றெவ்வுடுவுங் கூடி
வளைத்தனவோ வென்று மருளக் - களித்துமணி

உகக. மாளிகையிற் சூளிகையின் மண்டபத்திற் கோபுரத்தி
லாளிநிரை முற்றத்தி லாடரங்கிற் - சாளரத்தின்

உஉ0. மாடத்தி லாலயத்தின் மாமகர தோரணத்திற்
கூடத்திற் கூடிக் கொடியிடையீ - ரோடிவருங்

குழாமகளிர் கூற்று.

உஉக. கல்லா லடியிற் கரும்பினிர தந்தன்னை
யெல்லாருங் கண்ணு லினிதருந்தீர் - பொல்லாத

உஉஉ. வாலால முண்டிலகை யாளு மடையாளக்
கோலா கலக்குறியைக் கும்பிடீர் - காலா

உகங. அரவு - காளன்; பூண்களாகிய பாம்புகளுமாம்.

உகச. அன்னப்பறவை கங்கையில் வாழ்தற்குரியது. மகம்-தக்கனுடைய யாகம்.

உகரு. தாடி = தாவடி - தாண்டி; தொகுத்தல். உகசு. யானையை.

உகசு. குயில் மன்மதனுக்குக் காளம். கானம் - காடு, இசை.

உகஅ. உடு - நக்ஷத்திரம்.

உகக. சூளிகை - மாளிகையின்மேலுள்ள அறை. ஆளி - அத்தியாளி: "அறைகுழுநிரைத்தெற்றி" திருவிளை. உ0: எ.

உஉ0. மகர தோரணம் - மகரதோரணத்தையுடையவாயில்.

உஉக. கரும்பு - திருக்காளத்திநாதர். இரதம் - தேர், சாறு.

உஉஉ. கால் - கண்ணப்பருடைய பாதம்.

௨௨௩. துளைத்தமுடி யார்வந் துலாத்துமது பாரீர்
பளைத்திரு வாபரணம் பாரீ - ரதற்கடங்கா

௨௨௪. வெண்மதியைப் பாரீரவ் வெண்மதிபோற் சிக்காமற்
றெண்மதியை நன்றூப் பிடித்திடீர் - திண்மலையா

௨௨௫. யிச்சுதர்கள் வீறிளு ரீத்[1]தேவி யார்க்கின்னம்
பச்சுடம்பென் பாலென் பகர்ந்திடீ - ரெச்சி

௨௨௬. லிறைச்சிநுகர் வோமென் றெலும்பணிய வேண்டா
மறைச்சுவிடீ ரென்று வணங்கீர் - குறிச்சணிய

௨௨௭. விந்தத் திருவுரத்துக் கேனக்கொம் பென்கொங்கைத்
தந்திக்கொம் பாகாதோ தான்கேளீர் - [2]முந்தியதா

௨௨௮. யோங்கியவோங் காரத்தி னுட்பொருளாய் நின்றதுபோற்
[3] றேங்கு[4]திரு வாசியினைச் சேவியீ - ராங்கார

௨௨௯. மாலு மயனு மதிக்கமிதிக் கப்பெற்ற
காலின் முயலகனைக் கைதொழீர் - கோலியெதிர்

௨௩0. நில்லீ ரெனவெதிரே நிற்பார் கதிரோனைப்
பல்லீருங் கையைப் பரவுவார் - வல்லி

௨௩௧. திருத்தோடு நிற்கச் சிவந்தபா திக்குக்
கருத்தோடு நெஞ்சங் கரைவா - ரிருத்தோனே

௨௩௨. வில்லடி[5]மே லேயிருந்த மெல்லடியா ளாரென்பார்
வல்லடியோ வந்த வரத்தென்பார் - நல்லடியான்

௨௩௩. கண்கனையு மட்டுங் கரையாத கன்னெஞ்சம்
பெண்களையோ நாடுமெனப் பேசுவார் - திண்கிரணத்

---

௨௨௩. உலாத்தல் - பவனிவருதல். "சங்கத்துலாத்தினான்" என்றார் முன்னும்; ௮௫. திருவாபரணம் - நாகாபரணம். அதற்கு - அப்பாம்பிற்கு.

௨௨௫. பால் - பக்கம்.

௨௨௬. இக்கண்ணியின் முதலடியில், "ஆட்டைத்தான் தின்கிறான் எலும்பையும் கழுத்திற் போட்டுக்கொள்ளல் வேண்டுமோ" என்னும் பழமொழியின் கருத்து அமைந்துள்ளது. குறிச்சு - குறித்து.

௨௨௭. ஏனக்கொம்பு - பன்றிக்கொம்பு.

௨௩௧. திருத்தோடு - திருத்தத்தோடு. எருத்து - இடபம்.

௨௩௨. அருச்சுனன் வில்லடி. மெல்லடியாளென்றது கங்கையை. நல்லடியான் கண்ணப்பர். 'வல்லடி வரத்து' என்பது ஒருபழமொழி.

(பி - ம்.) 1 'தேவிமார்' 2'முந்தித்தான்' 3'தேன்கொடிரு மாலிகையைச் சேவியீர்' 4'திருவாசிகையைத் தெண்டனிடீர்' 5'மேலேயிருந்த'

உ௩௪. தெண்மணிக ளேசாத்திச் சேடன்பூ சித்தவர்மேற்
கண்மணிக ளேசாத்திக் காட்டுவா - ருண்மயங்கிப்

உ௩௫. பூசலா மென்றாலும் பூசலாஞ் சந்தனத்திற்
பேசலா மோவென்று பேசுவா - ராசையா

உ௩௬. லத்தியா னேமுருவா லக்காள னேரானேம்
பத்தியா லாளீர் பரிந்தென்பார் - புத்தியெல்லாம்

உ௩௭. போயிங்கு வீர்ஞானப் [1]பூவையணைந் தீரினிநீர்க்
[2] காயையணை யீரென்று கண்பிசைவார் - நேயங்

உ௩௮. கனியார்கல் லாலின் கனியார் மடவார்க்
இனியா ரினியாரிங் கென்பார் - முனியாம

உ௩௯. லேத்தவரு மெங்கட் கிரங்கீரோ சார்ந்தாரைக்
காத்தவரே யென்று கழறுவார் - பூத்த

உ௪௦. பணியிதழி மார்பெமக்கே பங்கென்று கேட்கக்
கனியிதழி மாரைக் கடிவார் - தினமு

உ௪௧. மழைத்துவாழ் வித்தவரே யானுன் மடவீ
ரிழைப்பரோ வெம்மைநமக் கென்பார் - தழைத்தசுரைக்

உ௪௨. காய்வீணை யிட்டீரே கைத்தாய ராலெமக்கு
வாய்வீணை யிட்டீரென் வந்தென்பார் - பாய்வார்போற்

உ௪௩. பாணிமா னுக்கெதிரே பார்வைமா னைத்துரப்பார்
நாணிமா னித்தோமே நாமென்பார் - பூஞ்சே

உ௪௪. றுறுவார் வட்டத்தி னுளமூச லாடப்
பெறுவா ரிவரிலொரு பேதை - குறுகாத

உ௩௪. சேடன் - ஆதிசேடன்; ஆதிசேடன் பூசித்தமை, திருக்காளத்தி புராணத்துள்ள, பலரும் சிலந்தியும் பூசித்த அத்தியாயத்தில் ௩௫-ஆம் செய்யுளால் விளங்குகின்றது; 'சேடனடைந்த சிவபிரான்' என்பர் பின்னும்; ௫௭௬.

உ௩௫. அன்னத்திற் சந்துபேசலாமோ.

உ௩௬. அத்தி - கடல், யானை. உருவால் - கரியநிறத்தால்.

உ௩௭. ஞானப்பூ-ஞானப்பூங்கோதையம்மை. பூவையணைவீர் காயையணைத்தாலென்னகுறை?

உ௩௮. இனியார் - இனித்தலில்லார், இனியாராவார்?

உ௪௦. பணியிதழி - குளிர்ந்தகொன்றைப்பூ. கனியிதழிமார் - கொவ்வைக்கனிபோன்ற அதரத்தையுடையவர்.

உ௪௨. வீணையிட்டீர் - வீணையையணிந்தீர். வாய்வீணை - வீண்மொழிகளை.

உ௪௩. பாணி - கை. மானித்தோம் - பெருமையுறச்செய்தோம்.

(பி - ம்.) 1 'பூவையணிந்தீர் 2 'காயையணையீர்.

பேதை.

உசரு. தாயிற் சிறந்தாரைச் சாரும் புயங்கேசன்
[1] வாயிற் பெருதவிள மாணிக்க - நாயனார்

உசசு. செம்பொற் சரணஞ் செறியுங் களியானைக்
கொம்பிற் பிறவாக் [2] குறுந்தாள - நம்பனார்

உசஎ. [3] வேட்டிருக்கத் திண்ணனார் வேட்டம்போய்க் கொண்டுவரு
சூட்டிறைச்சி தோயாச் சுவைச்சிறுதே - னூட்டியத்தர் [ஞ்

உசஅ. தண்டா மரையடிசேர் சங்கத்தோ னந்தாதி
யண்டா முழுச்சிற் றலங்காரந் - தொண்டாகித்

உசகூ. தண்கயிலை யாரைத் [4] தழுவுஞ் சிவகோசன்
வண்கைப் புகுதா மருக்கொழுந்து - வெண்கிரணச்

உருo. [5] சோமன் செறிசடையார் சொற்கயிலை வீதிதொறுங்
காமன் வளையாக் கருப்புமுளை - யீமனார்

உருக. கங்கைக் கரைக்காமன் [6] காவிபோற் கூடலிலே
வெங்கழுவிற் புக்கார் விரதம்போ - லங்கவரைச்

உருஉ. சொல்லா மகத்திற் சுரரெடுத்த வாயுதம்போற்
கல்லாக் கொலைபடைத்த கண்ணினு - ளெல்லார்க்குந்

உருந. தம்பிரான் பாலொடுங்குந் தக்கோ ரிருவருமா
யம்பினு கத்தொடுங்கு மண்டமுமாய்ச் - சம்பந்தன்

உருச. வண்ணக் குடத்தென்பு வைத்தெழுப்பு மங்கையுமாய்த்
திண்ணற் கொளித்திருக்குஞ் செங்கையுமாய்க்-கண்ணினுரு

உசரு. புயங்கேசன் - காளன். உசஅ. சங்கத்தோன் - நக்கீரர்.

உசகூ. சிவகோசன் - சிவகோசரியார்.

உருக. கங்கைக்கரையில் மன்மதனது நீலமலர்ப்பாணம் கொலைசெய்த வில்லாததென்றபடி; காமனையெரித்த இடம் கங்கைக்கரை. கங்கைக்கரை யென்பதற்கு இந்தத்தலத்தில் உள்ள மணிகர்ணிகையின் கரையெனினும்பொருந்தும். கழுவிற்புக்கார் - சமணர்; அவர்கள் விரதம் கொல்லாமை. அவரை - சிவபெருமானை.

உருஉ. மகம் - தக்கன் யாகம்.

உருந. தக்கோரிருவர் - பிரமனும் திருமாலும்; மதுரைக்கன்னியரிருவருமாம். அம்பு - திருமால். ஆகம் - உடம்பு.

(பி - ம்.) [1]'வாயிற் பிறவாத' [2]'குளிர்தாளம்' [3]'வேட்டிருக்குக்' [4]'தழுவும் புயங்கேசன்' [5]'சோமனெறிசடை' [6]'காவியம்போல்'

உருரு. மண்டத் தமரு மருஞ்சக்ர வாகமுமாய்த்
துண்டப் பணிவாய்ச் சுடர்களுமாய்த் - தெண்டிரைவா

உருசு. யான்ற[1]வமு தக்குடமு மாகவிருந் திருந்தினிமேற்
றோன்றி வளருந் துணைமுலையா - [2]னோன்றுவிட

உருஎ. முண்டார் திருச்சடைமே லுன்மத்த முண்குதலை
வண்டாய் மிழற்று மழலையாள் - சண்டேசன்

உருஅ. போற்றும் பரமனார் பொன்கொழிக்கும் பொன்முகரி
யாற்றி னறல்போ லளகத்தாள் - கூற்றிலே

உருகூ. யாங்கவுரி யல்லா தரும்பியவெண் ணுன்கறமுந்
தாங்க முயன்றனைய தந்தத்தாள் - பாங்கியென

உசுo நின்றுதனை நீங்கா நிழலை யுடன்கொண்டு
சென்று மனைபுகுந்து தேடுவாள் - முன்றிலிலே

உசுக. மெத்துமணற் சிற்றில் விருந்தருந்த வாவென்று
சித்திரத்தி னோடொல்கிச் செப்புவாள் - கைத்தாயை

உசுஉ. நீங்கிப் பிரியா ணிலைக்கண்ணா டிப்பொருளை
வாங்கித்தா வென்று வருத்துவா - ளாங்கருணை

உசுங. யாய்நீர்மை வேட னபிடேக மேனியைப்போல்
வாய்நீ ரமுதொழுகு மார்பினா - டேய்நீர்மை

உசுச. வள்ள லடியார் மனம்போ லணுவளவுங்
கள்ள மடையாக் கருத்தினாள் - கிள்ளையுடன்

உசுரு. றூவித் தனைவளர்க்குந் தாயரள கச்சுரும்பை
நாவற் கனியெனவே நச்சுவாள் - பாவனையி

உசுசு. லென்னிலா [3]ஞானவெளி யேகாந்த யோகியைப்போற்
றன்னிலே தான்பேசுந் தன்மையா - ளன்னைமார்

உசுஎ. மாணிக்கக் கல்லால் வயிடூ ரியமணியா
லாணிக் கனகத்தா லாரத்தாற் - பேணிக்

உருரு. அண்டம்-முட்டை; ஆகாயமுமாம். துண்டப்பணி-இராகுகேது.
உருஎ. உன்மத்தம்-ஊமத்தமலர். உருஅ. கூறு-திருமேனியின்பங்கு.
உருகூ. தந்தம்-பல்; பற்கள் முப்பத்திரண்டு. உசுக. மெத்து-நிரம்பிய.
உசுங. வேடன் - கண்ணப்பர். மேனி - சிவபெருமானது திருமேனி.
உசுசு. எல் நிலாம் - ஒளிவிளங்கும்.
(பி - ம்.) [1]'அமுதக்குடமாயாகத்திருந்து' [2]'ஏன்றவிட' [3]'ஞானஜோதி'

உ௬அ. கொழுங்கமுகு நாட்டிக் குலாவியமுற் றத்தே
செழும்பவளப் பொன்னூசல் செய்ய - வெழுந்திவளு

உ௬௯. மென்னை மணியூச லேற்று மெனவேற்றி
யன்னையர்க ளாட்டு மளவிலே - சின்னங்க

உ௭0. ளார்ப்ப மணிமுழவ மார்ப்ப வலம்புரிக
ளார்ப்ப வருமறைக ளார்ப்பவே - போர்க்கடலா

உ௭௧. னென்றுங் கழியான்பச் சேரியா னீர்க்குளத்தான்
கன்றுந்து மாற்கின்னுங் கால்வாயா - னின்றுதனை

உ௭௨. [1] யேத்தத் தரவா னிருங்கி ணறுந்தாரான்
[2] சாத்தியநீர் வற்றாத் தடாகத்தான் - கோத்த

உ௭௩. புரமடுவான் முத்தி புகற்கேணி யாவான்
சுரரிதய வாவியிலே தோய்வா - [3]னிரவலர்நோ

உ௭௪. யாற்றினான் சூலத் தகழுதிரங் கைத்தலையி
லூற்றினு னன்னினைவி லோடையா - னூற்றெட்டுத்

உ௭௫. தாளத்தி லாடுதிருத் தாளன் கயிலாயன்
காளத்தி நாதன கணநாதன் - வேளத்தன்

உ௭௬. கற்றைச் சடையன் கனகக் கொடியாடும்
வெற்றித் திருத்தேர்மேன் மேவுதலுங் - கொற்றமதன்

உ௭௭. மாசிப் புதுத்தேர் மருவினான் மற்றிவளு
மீசன் பழந்தேர்க் கிறங்கினு - ளேசத்தின்

உ௭0 - ௭௪. இக்கண்ணிகளிலே கடல், கழி, ஏரி, நீர்க்குளம், கால்வாய், தரவு, கிணறு, நீர்வற்றாத்தடாகம், மடு, கேணி, வாவி, ஆறு, அகழ், ஊற்று, ஓடை என்னும் பெயர்கள் தொனித்தல் காண்க.

உ௭0. போர்க்கு அடலான்.

உ௭௧. கழியான் - நீங்காதவர். பச்சேரி= பசுமை ஏரி - பசிய அழகையுடைய உமாதேவியார். நீர்க்குளத்தான்-தேம்பாகுபோல்வார்; குளநீரெனக; குளம் - வெல்லம். கால்வாயான் - இட்டுதற்கரிய திருவடியையுடையார்.

உ௭௨. தரவான் - நீக்காதவர். இன்னுகின்ற நறியதார். நீர் - குணம். தடாகம் - பெரிய உடம்பு.

உ௭௩. புரம் அடுவான். முத்திபுகற்கு ஏணியாவான். இதய ஆவி.

உ௭௪. ஆற்றினான் - தணித்தவர். அகழ்தலாலுண்டாகிய உதிரம். நல்லநினைவில் ஓடுகின்ற அழகிடவர்; "மலர்மிசையேகினான்" என்பது திருக்குறள், ௩.

உ௭௪ - ௫. நூற்றெட்டுத் தாளம் - சச்சபுடமுதலியன.

உ௭௭. மாசிப்புதுத்தேர் - மாசிமாதத்திலே தோன்றும் தென்றல். இங்கே திருவிழா மாசிமாதமென்பது அறியற்பாலது. பழந்தேர் - பூமி.

(பி - ம்.) 1 'ஏற்றத் தரவான்' 2 'சாற்றியநீர்' 3 'புரவலனோய்'

௨௭௮. முத்தேர் நகையாரு முன்கொண்டு போய்த்தொழுதா
ரொத்தே தொழுதங் குழையோரை - யித்தேரி

௨௭௯. வாரொன்றுள் கல்லா லடிக்கரும்பென் றாதனைத்
தாரு [1]மெனக்கென்பாளைத் தாய்மாருங் - காரிகையே

௨௮௦. யிந்தக் கரும்பெவர்க்கு மெய்தாக் கரும்புகா
ணந்தவயன் மாலுக் கரிதுதான் - செந்தமிழ்சே

௨௮௧. ராலவா யிற்பண்டு மாடுங்கா ணாடியுங்கல்
லாலை யடைந்துமழி யாதுகாண் - சாலவொரு

௨௮௨. சற்றுங்கோ தில்லைக்காண் சாற்றி லதிகங்காண்
சிற்றின்பர் [2]நாவிற்சே ராதுகாண் - முற்றும்பே

௨௮௩. ரின்பப் பெருக்கங்கா ணிச்சை கடந்தேறு
மன்பர்க்கோ ராரா வமுதங்கா - ணென்பளவிற்

௨௮௪. றேருங் கரும்புந் தெருவகல நின்றமட
வாருங் கரும்பு மனைபுகுந்தார் - போர்மதனு

௨௮௫. மிக்கரும்புக் கென்கரும்பை யீந்தானு மீவனெனக்
கைக்கரும்பைக் கொண்டு கடிதகன்றா - ளொக்குமே

௨௮௬. பாலற் கவன்றந்தை [3]பாற்கடலீந் தாரையா
ராலைக் கரும்பளித்தா னன்றென்பார் - மேலொருத்தி

௨௮௦-௨௮௩. சிவபெருமானுக்கும் கரும்புக்கும் சிலேடை. இங்கே வயல், ஆலையாடல், கல்லாலை, கோது, சாறு எனக் கரும்பிற்கேற்ற மொழிகள் அமைந்திருத்தல் காண்க.

௨௮௦. அந்த அயனுக்கும் மாலுக்கும்.

௨௮௧. ஆலைவாய் = ஆலவாய்-மதுரை. கல்லாலை-கல்லாலாகிய ஆலையை, கல்லாலமரத்தை.

௨௮௨. கோது - குற்றம், சக்கை. சாற்றில் - இரதத்தில், திருவிழாவில் அல்லது சொல்லுமிடத்தில்.

௨௮௪. தேரும் கரும்பும் - தேரும் சிவபெருமானும். கரும்பு - பேதை.

௨௮௫. இக்கரும்புக்கு - இந்தக் கரும்புபோல்வாளுக்கு.

௨௮௬. பாலற்கு-உபமந்யுமுனிவருக்கு. அவன் - மன்மதனுடைய; "பாலுக்குப் பாலகன் வேண்டி யழுதிடப் பாற்கட லீந்தபிரான்" திருப்பல்லாண்டு. கடலையீந்தவர் கரும்பையளித்தால் அன்றென்பார் ஆரென்க.

(பி - ம்.) 1 'எனக்கென்னத்' 2 'நாவிற் செறியாகாண்' 3 'பாற்கடலை யீந்தாரார்'

பெதும்பை.

உஅஎ. தக்க வெழிற்பெதும்பை தாதுநீங் காமுகுளப்
புக்குவப்போ தன்ன பருவத்தாள் - கைக்கு

உஅஅ. ளளவுமதன் செங்கோற் [1]சுகப்படா னேனு
மிளவரசு [2]நாட்கொண் டிருந்தாள் - களபவிளங்

உஅகூ. குன்ற முலையார் குறிப்பறியுங் கொள்கையாள்
கன்று தளிர்கோதுங் கல்வியா - ளொன்றியசெம்

உகூ௦. பொன்னை யறியப் புழுகறியப் பூவறியத்
தன்னை யறியுந் தறுவாயா - ளன்னமா

உகூக. [3] ராலி னடையா ளலையே றிளவன்னக்
காலி னடை[4]சிறிது கைவந்தாள் - கோலமத

உகூஉ. வெற்புவரு மட்டுமிறை வெண்ணிலொடுங் கிப்பார்க்குஞ்
சற்ப முகத்துமுனை தன்னைப்போற் - புற்புதம்போற்

உகூங. சித்தர்கடங் கையிற் சிவலிங்கம் போற்சிறிது
முத்திவரத் தோற்று முலையினா - ளத்தனுவே

உகூச. ளேழுலகு மோரிலக்கா வெய்ய வெனக்கினிமே
லேழு [5]கணையா மெனுங்கண்ணாள் - குழலகோர்

உகூரு. பூராயக் காட்சியே போதுமெனத் தென்கயிலை
யாரா [6]வமுத ரணிகொண்டான் - பாரிரந்த

உகூகா. தெண்டிரைமா லென்னச் சிறுகிக் கருகியடிக்
கொண்டுவள ராநின்ற கூந்தலா - [7]ளொண்டொடியா

உகூஎ. [8] ளொத்துக்கண் மையெழுதி யோதிகோ திப்பின்னி
நித்திலம்பூட் டத்தரித்து நின்றிடுவாள் - சித்தசன்றன்

உகூஅ. வாம்பரியுங் காகளமு மானத்[9]தே ருங்குணமும்
பூம்பகழி யும்பயிலும் பூங்காவி - லாம்பளிக்கு

உஅஎ. போது-மலரும்பருவமுள்ள அரும்பு. உகூ௦. தறுவாய்-சமயம்.

உகூக - உ. மதவெற்பு - யானை. இறை - சிவபெருமான். சற்பம் = சர்ப்பம் - காளன்.

உகூங. முத்து இவர. உகூரு. பூராயம் - விருப்பம்.

உகூஅ. பரி - கிளி. காகளம் - குயில். தேர் - தென்றல். குணம் - நாண். பகழி - மலர்.

(பி - ம்.) 1 'அகப்படாதென்ன' 2 'தான்கொண் டெழுந்தாள்' 3 'ஆலி னடையா ளலையாற்றிள' 4 'சிறுத்து' 5 'கணைபென்ன வெழுங்கண்ணாள்' 6 'அமுதரணி யாட்கொண்டாள்' 7 'ஒண்டொடியார்' 8 'ஒத்திலங்கு மை யெழுதி யோதியைக்கோ திப்பின்னி' 9'தேருங்குடையும்'

௨௯௯. மண்டபத்திற் சோதி [1]மணிக்காந்த வேதிகையிற்
புண்டரிக மான்போற் பொலிந்தேறி - வெண்டாள

௩00. மூர லொளிவீசு முத்தின் பருங்கழங்கும்
காரளக நீலக் கருங்கழங்கு - மாரமுதச்

௩0௧. சேமவித ழைப்போற் சிவந்தபவ ழக்கழங்குங்
காம ருகிர்வயிரக் கற்கழங்குந் - தாமமலர்க்

௩0௨. கைச்செம் பதுமரா கக்கழங்கும் பொற்கழங்கும்
பச்சை மயிலியலின் பைங்கழங்கு - மெச்சவெடுத்

௩0௩. தொன்றென் றுலகமெலா மொன்றா யொடுங்கிவிடு
மன்றுமுள கல்லா லடிபாடி - நன்றென்

௩0௪. றிரண்டென் றெழிலடியா ரீடேற நல்கும்
பரந்தவிரு பாதங்கள் பாடி - கிரந்தாமு

௩0௫. மூன்றென்று மூன்று முதலிகளுந் தாம்புகழுஞ்
சான்ற சுருதித் தமிழ்பாடி - யான்றவொரு

௩0௬. நாலென்று மாசிமக நாடோறுந் தெண்டனிடு
மூல மறையின் முடிபாடிச் - சாலவே

௩0௭. யஞ்சென்று கல்லா லடியிற் கரும்பினுய
ரஞ்சு கொழுந்தி னடிபாடி - [2]நெஞ்சுருகி

௩0௮. யாறென்று நாளு மமரர்புகுந் தாருடி
நீறணியும் பொன்முகரி நீர்பாடி - வீறுடனே

௩0௯. யேழென்று முன்சிலந்தி யெய்தொளியைப் பின்கூடி
வாழு மெழுவர் வளம்பாடிக் - கேழின்

---

௩00. மூரல் ஒளிவீசும் - மூரலைப்போல் வெள்ளொளியைவீசும்; பின்னும் இப்படியே கொள்க.

௩0௧. உகிர் - நகம். ௩0௨. கையைப்போற் செம்மைநிறமுள்ள.

௩0௫. மூன்று முதலிகள் - திருஞானசம்பந்தமூர்த்திநாயனார் முதலிய மூவர்; "மூவாத பேரன்பின் மூவர் முதலிகளுந், தேவாரஞ் செய்த திருப்பாட்டும்" என்பது திருவேகாம்பரநாதருலா.

௩0௭. கரும்பு - சிவபெருமான். ஐந்துதலைகளையுடைய நாகலிங்கமாக எழுந்தருளியிருத்தலின், திருக்காளத்திநாதரை, 'அஞ்சுகொழுந்து' என்பர்.

௩0௮. ஆறு, சிலேடை.

௩0௯. எழுவர் - காளன், யானை, கண்ணப்பர், சிவகோசரியார், நக்கீரர், கன்னியரிருவர்.

(பி - ம்.) 1 'மணிக்காந்தி' 2 'விஞ்சவே'

௩௱௧௰. மிசையேழு மாட விழியாட நாவி
விசையேழு மாட விருந்தா - ளசையுமின்னூர்

௩௱௧௧. போது மடமயிலே போது மெனச்செங்கைப்
1 போதின் விளையாடல்விடும் போதிலே - பூதப்

௩௱௧௨. படையான் பணித்தொடையான் பாணிச் சடையா
னுடையான் புலித்தோ லுடையான் - விடையான்

௩௱௧௩. 2 கழைத்தாயன் கண்டங் கரியா னருளுங்
கழைத்தாயன் கண்டங் கரியான் - குழைக்காதன்

௩௱௧௪. வேதப் பரியினான் வேத னுமலியான்
வேதப் பொருளினான் வேதாந்த - நாதன்

௩௱௧௫. குடங்கையணி தீயன் குளிர்த்தகயி லாயன்
றடம்பணில மாயன்சகாயன் - கடம்பவன

௩௱௧௬. னன்கழ லாடி நமன்கழல வேதாக்கும்
பொன்கழ லாடிதேர் போந்திடலுந் - தன்கழலை

௩௱௧௭. யேழு பிறப்பு மெறிவ தெனவெறிந்தா
டோழிமார் தாய்மார் தொழத்தொழுதாள் - 3கீழிற்

௩௱௧௮. படிகிரையு மால்பிரமன் பல்வெளியுங் காணு
வடிமுடியைக் கண்ணு லளந்தாண் - முடியிற்

௩௱௧௯. கலைக்கொழுந்து சூடுங் கயிலாயச் செம்பொன்
4 மலைக்கொழுந்தின் மார்பிலே வைக்க - முலைக்கொழுந்து

௩௱௨௰. போதா தெனச்சிறிது புந்தியிலே சிந்திப்பாண்
மாதா யரைப்பார்த்து மாதிவளா - ராதிக்

௩௱௨௧. கிசைய வினிதிருந்தா ளென்னையொரு பாவி
லிசைய விருத்துமென வன்னூர் - வசமோ

௩௱௧௨. பாணி - நீர்.

௩௱௧௩. கழை தாயன் கண் தங்கு அரியான் - வேய்குழலை உரியதாகக் கொண்ட திருமாலினுடைய விழிதங்கப்பெற்ற அரியவர். கழை தாயன் - மூங்கிலைத் தாயாகவுடையவர். கண்டம் கரியான்.

௩௱௧௬. நன்கு அழலில் ஆடியவர்.

௩௱௧௮. படிகிரையில் மாலும் பல்வெளியில் பிரமனும் காணாத.

௩௱௧௯. கலைக்கொழுந்து - பிறை.

(பி - ம்.) 1 'போதில் விளையாடும் போதிலே' 2 'கழைக்காயன் கண்டங்' 3 'கீழும், படிகிரையு மாலயனும் பல்லுயிருங் காணு' 4 'மலைக்கொழுந்தன் மீதிலே வைக்க'

௩௨௨. மலைக்கு மலைகொடுத்த வாருய்க் கயிலை
மலைக்கு மலைகொடுத்த [1]மானை - விலக்கியொரு

௩௨௩. மாதளிப்பா ருண்டோ மயிலேயென் பாரைநீ
ரேதறிவீர் பாரீ ரிவர்வேணி - [2]மீதிவளை

௩௨௪. யென்றவர்க்குக் கையா லிசைவித்தா ளவ்வளவிற்
சென்றது திண்டேர் செலநோக்கி - நின்றபே

௩௨௫. ராசை யுடையீ ரறியாச் சிறியானை
யாசையுடை யாருக்குள் ளாக்கினீர் - சீசியுமைச்

௩௨௬. சொல்லாது சொல்லியலர் தூற்ருேமோ தோற்றீர்போம்.
[3] புல்லா லிலையெடுத்துப் போடோமோ - சல்லாபக்

௩௨௭. கல்லினெறிந் தாறலைப்புக் காணோமோ கைகொட்டி
யெல்லவரு மம்பலத்தி லேற்ருேமோ - [4]நல்லுடம்பைக்

௩௨௮. குத்துடம்பு செய்யோமோ கூத்தாடல் காணோமோ
[5] நித்தமொரு காலி னிறுத்தோமோ - கற்றவர்முன்

௩௨௯. [6] சங்கித் திடோமோ தலையி லடியோமோ
பங்கச் செருப்பேந்தப் பண்ணோமோ - செங்கைவிரன்

௩௩௦. மூக்கிலே தான்வைத்து முந்திச் செவிபுதைத்து
வாக்கிலே நன்ருக வையோமோ - நோக்கியுமைக்

---

௩௨௨. கயிலைமலைக்கு - கயிலையிலெழுந்தருளிய சிவபெருமானுக்கு.

௩௨௩. வேணிமீது இவளைப்பாரீர்.

௩௨௪. என்று அவர்க்கு. நின்றபேர் - நின்ற மங்கையர்கள்.

௩௨௫ - ௩௩௪. 'ஸ்வாமீ, தொண்டுபூண்டொழுகும் அடியேங்களைத் தேவரீர் ஆட்கொள்ளாமையினுல் இன்ன இன்ன அபசாரங்களைச்செய்தேனும் தேவரீருடைய திருவருளைப் பெறுதற்குரிய ஆற்றலுடையேம்; பண்டைக்காலத்தில் அவ்வபசாரங்களியற்றியவர்களை விரைந்து ஆளவில்லையா' என்று உண்மையடியார்களுடைய செயற்கருஞ் செய்கைகளும் சிவபெருமானுடைய பெருங்கருணைத்திறமும் நன்குபுலப்படும்படி கூறுவாளாயினள்.

௩௨௫. ஆசையுடையீர் - திக்காகிய ஆடையையுடையீர்.

௩௨௬. அலர் - பழிமொழி, மலர். புல்லையுடைமையால் தோற்றீரென்க.

௩௨௮. குத்துடம்பு - குத்தப்பட்டவுடம்பு.

௩௨௯. சங்கித்திட்டவர் - நக்கீரர். தலையில் அடித்தவன் - அருச்சுனன். செருப்பேந்தப் பண்ணியவர் - கண்ணப்ப நாயனூர்.

(பி - ம்.) [1]'மான்மேல்' [2] 'மீதொருத்தி' [3]'புல்லாலிலை' [4] 'கல்லுடம்பிற்-குற்றுடம்பு செய்யோமோ கூத்தாட்டம்': குற்றுடம்பு-குறுமையான வுடம்பு; திருக்குற்றுலத்தில் திருமால் சிவபெருமானனது ஈண்டு அறியற்பாலது [5]'நிற்ற மொரு' [6] 'சக்கத் திடோமோ'

௩௩௧. காபாலி யென்றோமோ காட்டஞ் சுமந்தோமோ
வாபோவென் றேவி வருந்தோமோ - பாப

௩௩௨. [1] மதிச்சுமட ராக்கோமோ மன்றூடி றூலு
[2] மெதிர்த்தகொடு நஞ்சை யிடோமோ - புதைத்திவற்றைப்

௩௩௩. பொய்தானென் றீரேற் புறம்பிடோ மோபண்டு
செய்தாரை யேதேனுஞ் செய்தீரோ - கைதவத்தை

௩௩௪. யேழைக்குக் [3]காட்டுவீ ரீடேறு வீரதனால்
வாழு மிரப்பகன்று வாழுமென - யாழுரையைக்

௩௩௫. கொண்டு மனைபுகுந்தார் கோலவே ளப்பருவங்
கண்டு சிறிதுசில காணுண்போல் - விண்டகன்றான்

மங்கை.

௩௩௬. வேறொருத்தி பூமங்கை வெண்டா மரைமங்கை
தேறு மிமயச் செயமங்கை - கூறுமொரு

௩௩௭. [4] மும்மங்கை யர்க்கடந்து மூவரைமெய்க் காவலிடுஞ்
செம்மங்கை யாகிவளர் சீர்மங்கை - வெம்மைவிட

௩௩௮. மன்றே தரித்தா னமுதகலா மண்டலமே
யின்றே யெழுந்த தெனுங்கண்ணாண் - மன்றேறி

௩௩௯. [5] யாடும்பரதத் தவன் சுரதக் கூத்தினுக்குக்
[6] கூடுமிரு தாளக் குவிமுலையாள் - பாடகக்காற்

௩௪0. பொற்றொடியாள் பாகன் [7]புகன்றுபுக வீணையுள்ளாள்
பற்றுதுடி யுள்ளாள் பணியுள்ளாண் - முற்றிவளை

௩௩௧. திருநாவுக்கரசு நாயனார், பாணபத்திரர், சுந்தரமூர்த்தி நாயனார்.

௩௩௨. மதியாகிய சுமையடையையுடையவர்.

௩௩௩. புறம்பென்றது விறன்மிண்டநாயனார் கூறிய 'புறகு' என்னும் மொழியை; 'புறம்புக்குள்ளானன்' என்பர் பின்னும்; ௫௪௫.

௩௨௪, ௩௩௫. மின்றபேர் மனைபுகுந்தார்.

௩௪0. வீணை, துடி, பணியென்றது இவளுடைய உறுப்பின் விசேடங்களை.

(பி - ம்.) [1]'மதித்தவடர்'—தவடர் - பகைவர். [2]'இதத்தோடு நஞ்சை யிடோமோ' [3] 'காட்டினீர்' [4] மும்மங்கையுங்கடந்து' [5] 'ஆடும் தத்தா னவன் சுரதக்கூத்தாடக்' [6]'கூடியன தாளக்' [7]'புணர்ந்துபுகல்'

௩௪௧. * [1]மோசைமுதற் கங்காளன் முன்னூக்கப் பின்னூக்கு
மாசையிருட் டன்ன வளகத்தாள் - மாசில்

௩௪௨. * [2]விடைபிரிந்த வோதிமத்தின் மென்பெடைபோ லன்னை
யிடைபிரிந்து சேரு மினத்தாள் - கொடிமகரச்

௩௪௩. * சித்தச வேந்தன் சிறந்தகலை நூல்படித்துப்
புத்தரங்கி லேறப் பொருந்துவாண் - மத்தகத்துக்

௩௪௪. *கண்பொடிசெய் தானங்கோ [3]காற்பொடிசெய் தானிலையே
பெண்பெருமா னுக்கென்னும் பெற்றியாள் - பண்பிலவ

௩௪௫. னெய்யு மலரு மெழிலோ தியினலருஞ்
செய்யுஞ் செயலறியுஞ் செய்கையாள் - பெய்வளைக்கைத்

௩௪௬. தோழியருந் தானுமிளந் தோகைக் குழாமெனவே
[4] யேழுநிலைக் குன்றத் தினிலேறி - வேள்வியிலே

௩௪௭. தன்னைமறந் தாட்டுத் தலைபடைத்த வம்மானை
யன்னைதனை யீன்றமலை யம்மானை - முன்னைநாட்

௩௪௮. கொங்கையொரு மூன்றுடைய கொம்பையரு ளம்மானை
யங்கையிலே வீற்றிருக்கு மம்மானைக் - கங்கையெனு

௩௪௯. மம்மானைப் பெற்றசடை யம்மானைப் பாடியவ
ளம்மானை யாடு மளவிலே - கைம்மானைச்

௩௫௦. சீரா டியதுடையான் செண்டா டியவிடையான்
[5] வேரா டியசடையான் வேடன்வாய் - நீராடிப்

௩௫௧. பாலாடி நெய்யாடிப் பண்டைத்தீ யாடியயன்
மாலாடி நின்று[6]தொழ மன்றாடி - [7]மேலாடி

---

௩௪௧. மோசை-விரலணி; "ஒள்ளிழை மகளி ரிலங்குவளைத் தொடீஇ, மெல்விரன் மோசை" என்பது நற்றிணை, ௧௮௮; மோசை யென்பது வாழையின் பெயராதலின், வாழைமாத்தினடியிலெழுந்தருளிய கங்காளரேனினுமாம். முன்னூக்க - முன்னே செலுத்த. ஆசையாகிய இருட்டு.

௩௪௭. ஆட்டுத்தலைபடைத்த அம்மான் - தக்கன். அன்னை - உமாதேவியார்.

௩௪௮. கொம்பு - தடாதகாதேவியார். வீற்றிருக்கும் அந்த மானை.

௩௪௯. கைம்மான் - விநாயகக்கடவுள்.

௩௫௧. மேலாடி - எங்கும் வியாபித்தவர்.

(பி-ம்.) 1'மோசமுறக்' 2'விடைபிரித்த' 3'காற்பொடியொவ் வானித்தப்' 4 'ஏழுநிலைக்' 5 வேரோடிய' 6 'தொழு' 7 'மேலாடு'

* இக்கண்ணிகள் ஒரேபிரதியில்மட்டுமிருந்தன.

௩௫௨. செம்பொற் கொடியாடுந் தேர்மீது தோன்றுதலு
மம்பொற் கொடியாட லாங்கொழிந்தா - ளெம்பிரான்

௩௫௩. பாதம் பணிந்தாள்பின் பார்வையிலே யம்பணிந்தாள்
போதம் [1]பணிந்தாள் புழுங்கினாள் - காத

௩௫௪. லடிமூள முத்தணிக ளத்தனையு நீறாப்
பொடிமூ டியதழலைப் போன்றா - ளுடையானைக்

௩௫௫. கண்ட பொழுதே கறுத்தான் கறுத்தவே
[2] ளண்ட வரிதினியென் றஞ்சுவாள் - [3]விண்டிவளுந்

௩௫௬. தாதியரை நோக்கித் தமியேனை யாள்வாரோ
[4] மாதினிடத் தாரென்றாண் மற்றவருங் - கோதையே

௩௫௭. வண்டிலங்கு மேனியிலே வாழு [5]மடவரலைக்
கண்டிலையோ நெஞ்சங் கரந்தாயோ - பண்டுநீ

௩௫௮. கற்றகலை யெல்லாங் கழன்ற கலையுடனே
யற்றவோ நின்னை யவர்கொண்டா - லுற்றணைக்க

௩௫௯. மாமியா ருண்டோ மலையிற் பெருநீலி
யாமவளுஞ் சக்களத்தி யாகாளோ - காமிக்கை

௩௬0. தோற்சேலைக் கோபிச்சைச் சோற்றுக்கோ வோட்டுக்கோ
மேற்சாம்பற் கோசுடலை வீட்டிற்கோ - நாற்சந்தி

௩௬௧ யம்பலத்துக் கோவெலும்பி னாபரணம் பூணுகைக்கோ
வெம்பணிமாலைக்கோபேய் வேலைக்கோ - சம்பந்த

௩௬௨. நல்லிடத்திற் சோதித்தாய் நம்போ லியரிருக்கு
மில்லறத்திற் கித்தனையு மேற்குமோ - வல்லனுமிவ்

௩௬௩. வாண்டா ரொருவர்க் ககப்படுவ ரோ[6]வல்லர்
[7] காண்டாயே யன்றிந்தக் கள்வரே - வேண்டினாற்

---

௩௫௨. அம்பொற் கொடி - மங்கை. ஆடல் - விளையாடல்.
௩௫௩. அம்பு - நீர். போது அம்பு - மலர்ப்பாணம்.
௩௫௮. கற்றகலை - கற்றநூல்கள். கழன்ற கலை - ஆடை.
௩௫௯. காமிக்கை - விரும்புதல்.
௩௬௩. காண்டாய் - கண்டாய். வேண்டினால் - பிரார்த்தனையினால்.

(பி-ம்.) 1 'பணிந்தாள் புலனழிந்தாள்' 2 'அண்டவருமினி' 3 'விண்டவரும்' 4 'மாதினிடத் தாரென்ன' 5 'மடவாரைக் கண்டனையே நெஞ்சங் கரைந்தாயோ' 6 'அல்லல்' 7 'காண்டாயெனுமிந்தக் கள்வரை'.

௩௬௪. [1] சீரூ ரரியுரத்துச் செங்கமல மங்கைக்கா
வாரூரி லேசென் றருளன்பு - [2]மாரூர

௩௬௫. னாசைப் பரவைதனை யப்பரவை மங்கைமுன்னே
நேசத் துடனே நிகழ்த்தன்பும் - பாச

௩௬௬. வலைச்சேரி யிற்பிறந்த மங்கைக்கா வந்நா
ளலைக்கே வலைவீசு மன்பும் - தலைக்கொண்ட

௩௬௭. கங்கைதனை யேவிவரும் கம்பையின்மே லோர்மங்கை
கொங்கை தழுவக் குழையன்பு - மிங்கே

௩௬௮. சகலகலை மங்கை தவம்புரிந்து போற்ற
வகில கலையருளு மன்பு - நிகரில்லாப்

௩௬௯. பாகொத்த செய்யமொழிப் பாண்டிவள மங்கையரை
யாகத்தி லேவைத் தருளன்பு - நீகருதி

௩௭௦. மாதவத்தைச் [3]செய்தாலம் மங்கையர்போல் வாயென்றே
யாதரித்துத் தேற்று மளவிலே - சோதி

௩௭௧. விடங்கர் விடங்களித்தார் வேணியர்பொற் றிண்டோ
ரடைந்த தயல்வீதிக் கப்பால் - மடந்தை

மடந்தை.

௩௭௨. கரியகுழற் கள்ளினத்தாள் கார்ப்புருவ நெற்றி
யரியதிரு விற்கோல மானாள் - வரிபரந்த

௩௭௩. காமர் விழியாலங் காட்டினா னாசிகுமிழ்
மாமலரோ டெட்பூ வணத்தினாள் - சோமகலை

௩௭௪. நன்னிலவே யன்ன நகைமுல்லை வாயினாள்
கன்னமணி [4]வள்ளைக் கருகாதாள் - பன்னியபுள்

---

௩௬௪. ஆரூரன் - சுந்தரமூர்த்திநாயனார்.

௩௬௫. ஆசைப்பரவை - ஆசைக்கடல்.

௩௬௮. சகலகலை மங்கை - ஸரஸ்வதி தேவி. ௩௭௧. விடம் - நீர்.

௩௭௨-௯. இக்கண்ணிகளில் கள்ளில், விற்கோலம் (கூவம்,) ஆலங்காடு, பூவணம், நன்னிலம், முல்லைவாயில், திருக்கருகாவூர், கூடல், வேணுபுரம், கமலாலயம், திருச்செங்கோடு, ஆலக்கோயில், வலஞ்சுழி, குறுக்கை, மாணிக்கநாகம் (திருவாட்போக்கி), அரம்பைவனம் (திருப்பைஞ்ஞீலி), திருமருகல், கஞ்சனூர், கச்சபாலயமென்னும் திருப்பதிகளின் பெயர்கள் தொனித்தல் காண்க.

௩௭௨. கள் இனம் - வண்டின் கூட்டம். விற்கோலம் - வில்லின் அழகு.

௩௭௩. ஆலம் - விடம். எட்பூவின் வண்ணத்தினாள். [வாயினாள்.

௩௭௪. நிலவு - சந்திரிகை. நகை - பல்; நகையாகிய முல்லையையுடைய

(பி - ம்.) 1 'சீரூர் பரிபுரத்து' 2 'ஓரூரன்' 3 'செய்துவரு மங்கையர்களா கென்றே' 4 'வள்ளைக்கருக்காதாள்'

௩௭௫. சாற்றுங் களந்தனக்குச் சங்கநேர் கூடலாள்
போற்றுந்தோள் வேணு புரத்தினாள் - கோற்றொடிக்கை

௩௭௬. மேவுகமலாலயத்தாள் [1]விம்முமூலச் செங்கோட்டாள்
கோவுதர மாமாலக் கோயிலா - ளாவலா

௩௭௭. லூற்றுலகெ லாமுழுகு முந்தி வலஞ்சுழியாள்
சிற்றிடை[2]நூ லாங்குறுக்கை சிந்திப்பாள் - வெற்றிசெறி

௩௭௮. வன்ன மணியல்குன் மாணிக்க நாகத்தா
[3] ளன்ன துடையி னரம்பையாள் - கன்னியர்கைக்

௩௭௯. கஞ்ச மிசையிற் [4]கணைக்கால் வராலினத்தாள்
பஞ்சடியி னாற்கச்ச பாலயத்தாள் - செஞ்சொலாள்

௩௮௦. பூணு மழகும் [5]புறப்பொருளுந் தன்னிழலிற்
காண வழகெறிக்குங் காந்தியாள் - வீணைமொழிப்

௩௮௧. பாங்கியரே [6]யானும் பணிந்துறங்கும் பாயலிலே
யீங்கொருவ ரென்கனவி லெய்தினா - ராங்கவரை

வினாவிடை.

௩௮௨. யாரென்றே னொன்றறிய லாரென்றா ரெத்தரோ
நீரென்றேன் சென்னியிலே நீரென்றார் - பாருமிவர்

௩௮௩. பந்தென்றே னின்குதிபூம் பந்தென்றார் வெண்ணீறோ
சந்தென்றேன் போய்வந்தேன் சந்தென்றா - ரெந்தவூர்

௩௮௪. நாடென்றே னல்லுறவே நாடென்றார் கையிலே
யோடென்றேன் கோபமா யோடென்றார் - போடிமிது

௩௮௫. கோதென்றே னீயதரங் கோதென்றா ரிங்குண்டோ
வாதென்றே னாடினேன் வாதென்றா - ரேதுசடைப்

௩௮௬. புல்லென்றேன் வந்திறுகப் புல்லென்றார் நெஞ்சிவர்க்குக்
கல்லென்றே னேசமினிக் கல்லென்றார் - நல்லதிவர்

---

௩௭௫. சங்கம் - சங்கு. சங்கம் நேர்கூடுதலையுடையாள். வேணுபுரம்-மூங்கிலின் உரு.

௩௭௬. கோடு - யானைக்கொம்பு.

௩௭௭. ஆங்கு உறுக்கை - அங்கே கோபித்தலை.

௩௭௮. அரம்பை - வாழை. ௩௮௨. ஆர் - யாவர், ஆத்தி.

௩௮௩. பந்து - சுற்றம், கந்துகம். சந்து - சந்தனம், தூது.

(பி - ம்.) 1 'விம்பமூலை' 2 'நூலாங்கொறுக்கை சிந்திப்பாள்' 3 'பன்னு துடையின் பரம்பையாள்' 4 'கணைக்கால் மகரத்தாள்' 5 'புறம் பொருளும்' 6 'நானும்'

௩௮௭. வம்பென்றே னின்முலைக்கே வம்பென்றா றெண்ணியதே
னம்பென்றே னம்மையே நம்பென்றார் - கெம்புமிவர்

௩௮௮. வாக்கென்றே னாமனைய வாக்கென்றா ராருடனே
தாக்கென்றேன் கொங்கையொடு தாக்கென்றார்-[1]போக்கரென்

௩௮௯. போமென்றே னால்வேதம் போமென்றார் [2]பித்தரிவ
ரோமென்றே னேதுமறியோ மென்றார் - தாமரைக்கைத்

௩௯0. தீயேதென் றேன்காமத் தீயென்றார் கண்விழித்தேன்
போயே மறைந்தார் புறம்போகா - ராயவரைச்

௩௯௧. சொல்லி யருளுமெனத் தோகையே கோகிலமே
மெல்லியலே கொம்பே விரைத்தேனே - வல்லியே

௩௯௨. பொன்னே யிளமானே பூவையே பொற்கிளியே
மின்னே யநங்கன் விசயமே - யன்னமே

௩௯௩. கேளுநன் கனவு கிடையாக் கனவுகா
[3] னாளுநந் துணையிறைவ னானுன்காண் - காளனுடன்

௩௯௪. செங்கையத்தி பூசித்த தெய்வத் திருவுடம்புன்
கொங்கையத்தி பூசைதனைக் கொள்ளுங்காண் - சங்கரனை

௩௯௫. நற்கனிவாய்ப் பூசித்தா னன்கனிவாய் நீர்போலுன்
பொற்கனிவாய் நீரும் புலப்படுங்காண் - கற்கனிந்து

௩௯௬. நல்குநா கத்தை நயந்தபிரான் [4]பேரருளுன்
னல்குனா கத்தை யறியுங்காண் - செல்கோயிற்

௩௯௭. சேமநா விற்செய் சிலந்தியையாட் கொண்டவனுங்
காமநா விற்குங் கனிவான்காண் - டாமதியா

௩௯௮. னென்று பொருள்விரிக்கு மெல்லைக்க ணெவ்வுலகுஞ்
சென்று பணியரனார் சிற்பரனார் - குன்றதனிற்

௩௯௯. சம்பாதி போற்றினார் சங்கார நீற்றினார்
பம்பா நதியார் பரகதியார் - [5]செம்பொற்

௪00. சிலைவடத்தார் கஞ்சன் சிரமடர்த்தார் விண்ணோர்
தலைவடத்தா ரந்தகனைச் சாய்த்தா - ருலைவடர்த்தா

---

௩௮௭. நம்பு - இச்சை, விரும்பு. ௩௮௯. ஓம் - ஆம்.

௩௯௮. குன்று - திருக்கழுக்குன்றம்.

௩௯௯. பம்பாநதி - காஞ்சீபுரத்துள்ள நதிகளில் ஒன்று.

௪00. சிலைவடம் - கல்லாலமரம்.

(பி - ம்.) 1'போக்கரோ' 2'பித்தரிவ, ராமென்றே னேதுமறியாமென்றார்' 3 'ஆளுநந் துறையிறைவ ராணர்காண்' 4 'பேரருளால்' 5 'அம்பொற்'

௪0௧. ரன்பர்க்குத் தோற்றுவா ரையர்கா ளத்தியா
ரின்பத் திருத்தேர்மே லெய்துதலு - முன்பிரவிற்

௪0௨. கண்ணாரக் கண்ட கனவை வரக்கண்டாள்
பெண்ணா மவர்க்கிதுவே பேறென்று - ரெண்ணியவர்

௪0௩. தம்மைப்போற் செங்கைத் தளிர்முடிமேற் சூட்டினா
ளம்மைக்கண் மஞ்சனநீ ராட்டினாள் - வெம்மைமனம்

௪0௪. பித்தேறி னாள்பெண் பிணைத்தேறி னாள[1]ம்பூங்
கொத்தேறி யங்கங் குழைந்திட்டாள் - புத்தரசை

௪0௫. மீளத்தி யாணியீர் [2]வேதாத் தியானத்தீர்
காளத்தி யாரே கடிதென்று - டோளிற்

௪0௬. கொதிகொ ளரவக் கொடும்பசிக்கு மாதர்
மதியை யிரையிடவோ வந்தீர் - புதிய

௪0௭. வுடம்போ டுயிரோ டுலாவுநரைப் பூண்ட
வடம்போல [3]வாக்கிடவோ வந்தீர் - படிந்து

௪0௮. பரவு மிருவர்விழி பற்றும லெங்கள்
வரிவிழியுங் கைக்கொளவோ வந்தீர் - கருதி

௪0௯. யெலிக்கு முடியிடுநீ ரின்றே யிவளைப்
புலிக்கு முடியிடவோ போந்தீர் - பலிக்கு

௪௰. மொருமாலை வேண்டி யொருமாலைக் கஞ்சும்
பெருமாலை நீக்கீர் பிரானே - யுருகி

௪௰௧. வருவார்க்குப் பேசி வரத்தருவீ ரன்றே
திருவாய் மலரீர் சிவனே - துருவி

௪௰௨. யெரிகால் விடம்போ லிருள்வந்தா லென்ன
பரிகாரஞ் சொல்வீர் பரனே - யரிவளர்த்த

௪௰௩. வெற்றிக் கணைக்காமன் வெஞ்[4]சாபப் போர்க்குநீர்
நெற்றிக் கணைக்காட்டி னில்லென்னீர் - முற்றும்

---

௪0௪. பிணை-பின்னை. ஐம்பூங்கொத்து - ஐங்கணை. புத்தரசு-மன்மதன்.
௪0௭. பூண்டவடம் - என்புமாலை.
௪0௮. இருவர்: திருமாலும் கண்ணப்பநாயனாரும்.
௪0௯. எலியென்றது மாவலியாகவந்த எலியை. புல் இக்கு-புன்மையையுடைய கரும்பு வில்.
௪௰. மாலை - பூமாலை, மாலைக்காலம், மயக்கத்தை.
௪௰௩. நெற்றிக்கண்ணை.
(பி - ம்.) 1‘அம்பின், கொத்தேறி’ 2‘வேதத் தியானத்தீர்’ 3‘ஆக்கவோ’ 4 ‘சாபம் போக்கினீர்’

௪௧௪. பொருளாள ராயிருந்தும் பூண்டவினை கொண்டீட
ரருளாளர் சேசலமென் ருளீர் - மருளாமனென்

௪௧௫. பிள்ளைப் பழிபோதும் பெண்பழிவேண் டாமென்னுங்
கிள்ளைக் குரவிரக்கங் கேளாதே - தள்ளி

௪௧௬. நடந்தா ரிவளிங்கே [1]நன்மாம்போ னின்ருண்
மடந்தா [2]யெனவனைத்து மாஞர் - கடந்ததற்பின்

அரிவை.

௪௧௭. ஆரமுத வண்ணைத் தலங்காரத் தாரியத்தைச்
சீருடனே தோய்த்துத் திசைமுகத்தோன் - பாரிற்

௪௧௮. சதிராக வோவியத்தைச் சஞ்சரிக்கக் கீறு
[3] மதிரூப லேகை யரிவை - புதியவுருப்

௪௧௯. பத்தனையுந் தத்தமிலே யாபரணம் போலுடலுக்
கொத்[4]தழகு பொங்க வொழுகுவாண் - மெத்து

௪௨௦. மதுர விளந்தென்றன் மன்றலிளங் காவி
னிதழி லிளமெல் லியலாண் - முதியபகி

௪௨௧. ரண்ட மலைய வகிலாண்ட முங்குலையக்
கண்ட வரிபிரமர் கண்மூடப் - பண்டைநா

௪௨௨. ளோரம் பனைப்பெற்று ரேகிப் பலிக்காடும்
பேரந்த காரப் பெருங்குழலாள் - சூரஞ்சத்

௪௨௩. தாண்டும் விடைப்புனிதன் சங்கார தாண்டவத்திற்
பூண்ட பிநாகப் புருவத்தாள் - பாண்டரங்கன்

௪௨௪. [5] பூசலிலே முன்பு புவனமெல்லாஞ் சுட்டெரிக்கும்
பாசு பதமனைய பார்வையா - ளீசன்

௪௨௫. மிகைத்தபுரந் தூளாக வில்வளைத்துச் சற்றே
[6] நகைத்தநகை யன்ன நகையாள் - பகைத்தெண்

௪௨௬. பகட்டைத் திசையொதுக்கிப் பண்டையய னண்ட
முகட்டையிடித் தன்ன முலையாள் - வருத்தகலை

௪௨௭. யோதுசம யங்க ளுணராமற் குத்திபடும்
வாதுபொரு ளொத்த மருங்கினாள் - பூதலத்தி

---

௪௧௪. சலம் என் - தணியாக்கோபத்துக்குக் காரணம்யாது?
௪௨௨. பலிக்கு - சாம்பலின்கண். ௪௨௭. குத்தி - குஸ்திப்போர்.
(பி - ம்.) 1'நன்மான்போல்' 2'எனவளைத்தார்' 3'அதிருபரேகை' 4'அழகு
செய்' 5'பூசலிடு முன்னே' 6'நகைத்தமுகை'

௪௨அ. லாதாரச் சேடனுமஞ் சல்குலாள் கூர்மத்தைப்
பாதாளத் தேதூரத்தும் பாதத்தாள் - மேதினிமேற்

௪௨௯. கல்லா லடிபோற் கடவுளரு நான்முகனு
மெல்லாரு மேத்து மெழிலினாள் - பொல்லாக்

௪௩௦. கறைபற்றி யீரெண் கலையோன் குறைய
வறுபத்து நாலுகலை [1]யார்ந்தா - ணிறைவுற்

௪௩௧. [2] றநங்கவதி காரியிருந் தங்கரங்க போகந்
தினங்கருதிச் செய்யச் சிறந்தா - ளினஞ்சூழ

௪௩௨. முன்னாட் செழுநிலா முற்றத் தரியணைமேற்
பொன்னாட்டி லிந்த்ராணி போலேறித் - தன்னைக்

௪௩௩. குறுகி யொருவிறலி கொண்டாடச் சாந்து
நறுவிரையும் பூமலரு நல்கி - விறலியே

௪௩௪. நாரியரை யாட்கொண்ட நாயகர்க்குள் ளேசிறந்த
பேரழகு நாயகரார் பேசென்ன - நேரிழையே

௪௩௫. தாயி லறம்புரிந்த தங்கைக்கு மாறாய
சேயிழையா ளுண்மைதனைச் செப்புதுமோ - தூய

௪௩௬. முகமிழந்து தன்மனைவி மூக்கிழந்து பின்ன
மகமகிழ்வா னைச்சொல்ல லாமோ - மகமதிலே

௪௩௭. தேய்ந்தானைப் பல்லொடியச் சென்றானைப் பூங்குயிலாய்ப்
பாய்ந்தானைப் பேசிற் பழுதன்றோ - காய்ந்தவிழி

௪௩அ. னீறாயி னானை நிறத்திலுதை பட்டானைக்
கூறான கையானைக் கூறுதுமோ - தேறி

௪௩௯. லருத்தியுள்ள பெண்ணுக்கு மாணுக்கு நாதன்
பெருத்த சிவனேகாண் பெண்ணே - கருத்துனக்கென்

௪௩௦. ஈரெண் கலையோன் - சந்திரன். இம்மகளிர்க்குரிய கலைகள் அறு பத்துநான்கென்பதை, ம ணி. உ-ஆம் அடிக்குறிப்புரையாலுமுணர்க.

௪௩௧. அநங்கனுகிய அதிகாரி.

௪௩௨. முன்னாள் - திருத்தேர்ப்பவனியினது முதனாளில். [திருமால்,

௪௩௫. மாறானமை - மோகினியாகிவந்து தழுவினமை. சேயிழையாள்-

௪௩௬. அகமகிழ்வான்-பிரமன். ௪௩௭. சந்திரன், சூரியன், இந்திரன்.

௪௩அ. மன்மதன், யமன், அக்கினி.

(பி - ம்.) 1 'ஆய்ந்தாள்' 2 'அநங்கனதி காரியிருந் தந்தரங்க போகச்'

௪௪௦. சொல்லென்ற போதே சுடுதென்ற லேதென்று
ளல்லென்ற பாவிக் ககப்பட்டாள் - கல்லால்

௪௪௧. விரவிதேர் வந்தாலு மெல்லியலீர் நம்மூர்க்
கிரவிதேர் வாராதிங் கென்றாள் - கரதலத்தி

௪௪௨. லன்று [1]திருவிளையாட் டாடினாள் கண்புதைத்த
தின்று முளதோ விறைக்கென்றாள் - கொன்றைக்

௪௪௩. கிணைவிழியின் முத்துகுத்தா ளெய்யாதே யென்று
கணைமதனைத் தாழுங் கதைபோ - லணைமேல்

௪௪௪. விழுந்தா ளெழுந்[2]தஞ்சு வேதாவின் கற்பங்
கழிந்தாளிற் கங்குல் கழிந்தா . ளெழுந்தாள்பி

௪௪௫. னேனைக் கருங்குழலீ ரின்றைக்கெவ் வாறுபெரு
மானைப் பிடிக்க வகையென்றாள் - கானக்

௪௪௬. குழலிலே கண்ணிவைத்தாள் கொங்கையில்வா ரிட்டாள்
விழியை[3]வலை யாய்த்திரைய வீசினாள் - பொழுதுணர்ந்து

௪௪௭. நின்றாள் வழிநோக்கி நிற்பா [4]ணிலையறியச்
சென்றாடு தீர்த்தன் சிராப்பளியான் - கன்றுப்பூ

௪௪௮. ரொள்ளிய தாணு [5]வொருதாணு பாலாழிப்
பள்ள னயனெழுந்த பாக்கத்தான் - றள்ளித்தன்

௪௪௯. குன்ற மிடந்தவனைக் கொல்லாமற் பாரிடந்த
பன்றி சபதம் [6]பரிகரித்தா - னன்றறியாப்

௪௫௦. பாணனிடத் தொன்றியருட் பாணனைக்காத் தான்வடநூற்
பாணனியாழ்ப் பாணன்பண் பாடினான் - சேணகரா

---

௪௪௧. விரவி - விரவியவர்.

௪௪௨. கண்புதைத்தது - உமாதேவியார் திருக்கண்புதைத்த திருவிளையாடல். இச்சரிதையை, காஞ்சிப். திருக்கண்புதைத்த படலத்தாலுணர்க.

௪௪௫ - ௬. பெருமான், குழல், கண்ணி, வார் இவைகள் சிலேடை.

௪௪௮. தாணு - நடுதறி; ஸ்வாமியின் திருநாமம்; "கன்றுப்பூர் நடுதறியைக் காணலாமே" என்பதனாலுமுணர்க; திருநா. தே. பாலாழிப் பள்ளன் - பாற்கடலில் துயில்பவராகிய திருமால்.

௪௪௯ - ௫௦. னன்றறியாப்பாணன் - ஏமநாதன். அருட்பாணன் - பாணபத்திரர். வடநூற்பாணன் - வடநூற்புலவர். யாழ்ப்பாணன் - திருநீலகண்டயாழ்ப்பாணர்.

(பி - ம்.) 1 'திருவிளையாட் டானநாள் கண்புதைப்பது' 2 'அஞ்சிவேதாவின்' 3 'வலை யாய்த்திரைய விட்டாள்' 4 'நிலையறிவான்' 5 'ஒருபாலன் பாலாழி' 6 பரிகரித்தான் பன்றேறி'

சருக. னப்பாலைக் கப்பாலா னப்பாலற் கேவளைவா
னிப்பால னண்டமிறுத் தெண்கையான் - [1]மூப்பாலா

சருஉ. முத்தியான் முத்தியான் [2]மூத்தா வணமகிழ்வான்
மத்தியா னக்கதிரின் வைகுவான் - பத்தி

சருந. யரிச்சந் திரனை யருச்சுனனைத் தன்கண்
கரிச்ச பகீரதனைக் காத்தான் - றரிச்ச

சருச. மரிச்சவரை யென்று மரிப்பியா னண்ட
மரிச்சரிச்ச தூளே யணிவான் - விரிச்சிருவர்

சருரு. பாடுஞ் செவியான் பாத்தையடை யார்செவியா
னாடுஞ் செவியா னருட்செவியான் - காடணுகிப்

சருசா. பன்னியர்கள் கூறை பறித்தான் பசுங்கனக
மின்னியநற் றேரேறி மேவினான் - முன்னிவனுந்

சருஎ. தானை கொடுநடந்து தாக்கினான் காளத்தி
யானை வலையி லகப்படுமோ - வானமுய்ய

சருஅ. வெம்புர கேசரியை வெள்ளுகிரி னுலள்ளுஞ்
சிம்பு ளொருவருக்குச் சிக்குமோ - வம்புதெரி

சருகூ. வெஞ்சாப வேடன் விழிபறித்தே [3]யுட்புகுத்தும்
பஞ்சா னனந்தான் பயப்படுமோ - கஞ்சநறும்

சசா0. பூவிற் புலிநகத்தன் பொற்கைநகத் தாலுறக்கு
மாவிற் புலியொருவர்க் கஞ்சுமோ - நாவிலிவள்

சருக. அப்பாலன் - திருவிரிஞ்சைத் தலத்திலிருந்த சிவசர்மாவென்னும் ஆதிசைவச்சிறுவன்; இவனுக்குச் சிவபெருமான் வளைந்தருளியதைத் திருவிரிஞ்சைப்புராணம், பாலனுக்குத் திருமுடிவளைத்த சருக்கத்தாலுணர்க.

சருக - உ. மூப்பாலாம் முத்தி-சாலோகமுதலிய பதமுத்திகள்; முத்தி - பரமுத்தி.

சருந. 'தன் கண்கரிச்ச' என்றது தவத்தால் வருந்தியதைப் புலப்படுத்துகின்றது.

சருச. மரிச்சவரை - மரித்தவரை. இருவர் - கம்பளர், அச்சுவதரர்.

சருரு. பாத்தையடையார் செவியான்-முத்தியையடைவதற்கு உரிமையில்லாதவர்களால் ஜபிக்கப்படாதவர். செவி = செவ்வி - அழகு, சமயம். காடு - தேவதாருவனம்.

சருஎ. தானை - சேனை, ஆடை.

சசா0. பூவிற் புலி - தாமரைப்பூவிற்பொருந்திய பிரமதேவர். உறக்கும் - கிள்ளும். ஆவிற் புலி - சிவபெருமான்.

(பி - ம்.) [1]'மூப்பாலான்' [2]'மூத்தா ளணைமகிழ்வான்': மூன்று திருவடிகளையுடைய பிருங்கிமுனிவரை மகிழ்பவர். [3]'உட்புகுத்தப்', 'உட்கொண்ட'.

௪௬௧. பன்கலைகற் றுண்டோ பயமுறுத்தப் [1]போய்ப்பயந்தா
டன்கலையுந் தோற்று டரங்கித்தாள் - புன்கலைகள்

௪௬௨. போலே பெருமானும் புன்முறுவல் செய்துதேர்
மேலேக மற்றை விழாவீதிப் - பாலொருத்தி

தெரிவை.

௪௬௩. யக்கமல வேதா வழகம்பு ராசியிலே
தக்க மதிமந் தரநாட்டி - மிக்க

௪௬௪. காணவடம் பூட்டிக் கலையாற் கடையத்
திருவவதா ரஞ்செய் தெரிவை - சுருதிபணி

௪௬௫. நங்கயிலைக் குன்று நறைக்காந் தருமனைய
செங்களபக் கொங்கையாள் செங்கையா - லிங்கிதவேள்

௪௬௬. [2] வில்லி னிவர்நாரி மென்கதலித் தண்டனைய
வல்லி யுரோமத்தாள் வாமத்தாள் - சில்பொழுதி

௪௬௭. லல்கு மிமையோ ரமுதுஞ் சிவனமுது
நல்குமத ரோட்டத்தா ளூட்டத்தாள் - புல்காமல்

௪௬௮. வண்டகலுஞ் சண்பகமு மாயோன் வலம்புரியுங்
கண்டனைய துண்டத்தாள் கண்டத்தாள் - வெண்டரளச்

௪௬௯. சோதிக் கழையெனவே [3]சூதக் குழையெனவே
சாத்திக்குந் தோளினு டாளினாள் - சீதளித்த

௪௭௦. நீண்மண் டிலத்து நிலாவு மிருளும்போற்
கேழ்மந்த காசத்தாள் கேசத்தாள் - சூழ்மணியின்

௪௭௧. மைக்கொண்ட மாதளையும் பங்கயமு மென்றுலகோர்
கைக்கொண்ட தந்தத்தாள் கந்தத்தாள் - செய்க்குண்

௪௭௨. மடையோதி மப்பெடைக்கும் வஞ்சிக் கொடிக்கு
மிடையா நடையா ளிடையாள் - படைமதனால்

௪௭௩. வாசித்தார் கொங்கைகளை வாசித்தார் கூந்தலுக்கு
வாசித்தார் கொய்பூ வனத்திலே - தூசினிடை

---

௪௬௧. உண்டோ - பயன் உண்டோ. தன் கலையும் - தனது ஆடையையும்.

௪௬௬. நாரி - வண்டு. வாமம் - தொடை.

௪௬௭. சிவனமுது - விடம். ௪௬௮. துண்டம் - மூக்கு.

௪௭௧. கந்தம்-மணம். ௪௭௨. இடையா - பின்னிடாத.

௪௭௩. கொங்கைகளை மணக்கச்செய்த மகளிர். வாசித்தார் = வாசிகைத் தார் - கோக்கும் மாலைகளுக்குரிய பூ.

(பி - ம்.) [1]'போய்ப்புகுந்தாள்' [2]'வில்லின் வரிநாரி' [3]'சூதத்தளிரெனவே'

௪௭௪. கண்டு கொடிகள் கடிது மரமேற
வண்டு விழியின் [1]மறைவெய்தத் - தொண்டையிதழ்

௪௭௫. தன்னை யுறநோக்கித் தத்தை முகஞ்சிவப்பக்
கன்னி மயில்[2]வெருவிக் கண்பரப்ப - வன்னமுலை

௪௭௬. வற்கண்டு கூட்டமிட [3]மஞ்சரிகள் கண்டனைய
சொற்கண்டு நைந்துகனி சோர்ந்துவிழ - நிற்குங்

௪௭௭. கிளைத்தோளைக் கண்டு கிளைவளைய மூரன்
முளைக்கே முலைகண் முகிழ்ப்ப - வளைக்கடகப்

௪௭௮. [4] பாணித் திரள்கண்டு பல்லவங்கள் கை[5]குலைப்ப
மாணிக்கப் பீடத்தில் வந்தேறி - நீணிலத்தி

௪௭௯. லஞ்சு மவற்றையெலா [6]மஞ்ச லெனவழைத்து
வஞ்ச வசந்தனைநீ வாவென்று - விஞ்சியவென்

௪௮௦. றுசை யுரைபோ யருட்கயிலை யார்க்கென்ன
மாசுணமுண் டஞ்சுவேன் மற்றென்னப் - பூசலிடுங்

௪௮௧. கோகிலத்தை யேகென்னக் கோகிலமு மும்பர்கோன்
மாகுயிலாய்ப் பட்ட வகைசொல்ல - மோகத்தை

௪௮௨. யிட்டமத னேபோ யிசையென்ன மற்றவனுஞ்
[7] துட்ட நயனஞ் சுடுமென்னக் - கிட்டிமால்

௪௮௩. வண்டு பகரென்ன வண்சிலந்தி நூல்பிணிக்கி
னண்டி விடுவிப்பா ராரென்னத் - தண்டலையிற்

௪௮௪. [8] பூவைகா ளன்றில்காள் போமென்ன வேடனுளன்
பாவையறி யாயோ பகரென்னக் - கோவித்து

௪௮௫. மாங்குயிலின் மெய்கருக வண்டு பொறியுண்ண
[9] தேங்கன்றில் பூவை [10]சிறையெய்த - [11]வேங்கித்

௪௮௬. தூரத்து[12]மிளங் காற்றுழலச் சூறைகொளும் பஞ்ச
சரத்தனரு வாகச் சபித்துத் - திருத்திழையீர்

---

௪௭௬. மஞ்சரிகள் கூட்டமிட.

௪௭௭. கிளை - மூங்கில். முலை - முல்லைக்கொடி.

௪௭௯. வசந்தன் - தென்றல்.

(பி - ம்.) 1 'மறைவெய்த' 2 'வெரிஇற் கண்புதைப்ப' 3 'மஞ்சரியைக் கண்டளகம்' 4 'பாணித் தளிர் கண்டு' 5 'குலைய' 6 'அஞ்சலென நிறுத்தி' 7 'சுட்டநயனம்' 8 'பூவைகா ளன்பர்பாற்' 9 'தேங்கணத்திற் பூவை திரை யெய்த' 10 'பூவை திரண்டேற' 11 'ஓங்கித்' 12 'இளங்கால் சுழல'

சஅஎ. பொல்லா மரத்தின் பொழிலைத் துறந்துபோய்க்
கல்லா லடியதனைக் காண்பேமோ - நல்லபணி

சஅஅ. மத்தகத்தின் மீதிலே மாணிக்க மிட்டவர்க்கு
1 முத்தமிட நாமு முயல்வேமோ - பத்திநூல்

சஅகூ. கீரனை வைக்கொண்டு கேட்டார் தொடைநமது
கீரநா வைக்கொண்டு கேட்பேமோ - தாரணியி

சகூ0. லவ்வே தனைநினைந்தா ளையரே யாசையெனு
மிவ்வே தனைநினையீ ரென்பேமோ - செவ்வேயாய்

சகூக. மெச்சிமவான் றன்மகளார் வேந்தை மடலெழுதிப்
பச்சிமவா சற்படிந்து பார்ப்பேமோ - நிச்சயித்துக்

சகூஉ. காம்ருவு நீழற் 2கரைமுகரி நீர்க்கனக
மாமணலிற் கூடல் வளைப்பேமோ - நாமெலாஞ்

சகூங. சொல்லீ ரெனவவருஞ் சோகமே னிப்பொழுதே
வல்லீ பவனி வருவரெனு - மெல்லைக்கண்

சகூச. வட்டக் குடையநந்த 3மாமன் மகத்திமையோ
4 ரிட்டத் தினைக்கெடுத்தாரென்றூட - முட்டத்தன்

சகூரு. 5 சீத விழியென்று சீர்ப்பதத்தை முன்பணியுஞ்
சோதி மலரைச் சுமப்பானும் - போதிலே

சகூசா. 6 தங்கித் தனது தலையென்று பிச்சைகொளுந்
7 தூங்கக் கலத்தைச் சுமப்பானுஞ் - 8செங்கையிலே

சகூஎ. யாபரணந் தன்னை யருளிற் சுமப்பானுந்
தாபதரும் போற்றத் தடந்தேரிற் - பூபரண

சகூஅ. குண்டலத்தான் 9சைலங் குடிகொண்டா னோர்மூன்று
மண்டலத்தான் மூவிரண்டு மண்டலத்தான் - 10கண்ட

சஅஅ. மத்தகம் - தலை. முத்தமென்பது சிலேடை.
சஅகூ. கீரம்-கிளி சகூ0. வேதனை - பிரமனை, துன்பம்.
சகூக. பச்சிமவாசல் - மேற்குவாயில். சகூஉ. கூடல் - கூடற்சுழி.
சகூரு. சுமப்பான் - திருமால். சகூசா. சுமப்பான் - பிரமன்.
சகூஎ - அ. பூபரண குண்டலம் - ஆதிசேடனாகிய குண்டலம்.
சகூஅ. சைலம் - ஸ்ரீசைலம்.

(பி - ம்.) 1 'முத்தமிட்டு' 2 'கனமுகரி' 3 'மாசிமகத்து' 4 'இட்டத்தினி தெடுத்தார்' 5 'சீறவிழி யொன்றிடந்து சீர்ப்பதத்தி லேயணியுஞ்' 6 'தங்கித் இடக்குந் தலை', 'தங்கித் தனக்குத் தலையென்றே' 7 'தூங்கக் கமலஞ் சுமப்பானும்' 8 'செங்கையினில்' 9 'சைலங்' 10 'கண்டச்'

சசுகூ. சலந்தரனைக் கொன்றான் சதாசிவனாய் நின்றா
னலந்த [1]வடியாரை யாள்வான் - பலந்தருநற்

௫௦௦. காளகண்டன் விண்ணோர்கள் கண்டன் சசிகண்ட
னீளகண்டன் கண்ணீன்ற நெற்றியான் - கீளுடையான்

௫௦க. பூனை [2]யணிசடையன் போற்றிமால் பூசிக்க
வானையுமி ழாழி வழங்கினோ - னானுந்

௫௦௨. திடத்தொடுவந் தானிவனுந் தேருக்குத் தேரும்
வடத்துக்கு நேரே வடமுங் - கொடிக்குக்

௫௦௩. கொடியுங் கொடுவந்தாள் கும்பமெதி ரிட்டாள்
வடிவஞ்[3]சுக் கேயுண்ட மாற்றா - னிடையிலே

௫௦௪. யெய்தா னிவளொருத்தி யென்செய்வா ளெய்தவனை
வைதாள் சிவன்கண்ணை வாழ்த்தினாள் - கைதா

௫௦௫. னயர்த்தாள்பொன் பூண்டா ளவர்மேனி தீண்ட
வியர்த்தாள் பெருமூச்சு விட்டா - ளுயிர்த்தா

௫௦௬. டருமமுறைத் தீரென்றாள் சார்ந்தாரைக் [4]காத்தார்
விருதுவிடா தேமயிலை மீட்டார் - தெருவகல

பேரிளம்பெண்.

௫௦௭. மண்ணரசர் விண்ணரசர் மாற்றரசர் போற்றுபெரும்
பெண்ணரசெ லாம்பணியும் பெரிளம்பெ - ணண்ணி

௫௦௮. யியலு [5]மிசையுளீ ரெண்ணிரண்டுங் கண்டு
மயிலுங் குயிலு மருவாள் - புயலொழுங்கு

௫௦௯. தீரத் தெழுதலிலாத் தெண்டிரைபோ லஞ்சனங்க
[6] ளோரத் தெழுதாத வொண்கண்ணாள் - சேரத்

---

௫௦௦. விண்ணோர்கள் கண்டன் - தேவர்களைச் சிக்ஷித்து நடத்துபவர். நீள் அகண்டன். கீள் - இலங்கோடு.

௫௦௩. சுக்குண்ணல் - பொடியாதல். மாற்றான் - மன்மதன்.

௫௦௬. விருது - சார்ந்தாரைக் காத்தாரென்னும் சிறப்புப்பெயர்.

௫௦௮. இசையுள் ஈரெண்ணிரண்டு - முப்பத்திரண்டு இராகம்.

(பி - ம்.) 1 அடியவரை' 2 'அணியன் புருடமான் பூசித்தான், காளைய னன்பகலாக் கண்ணினான்', புருடமான் - புருஷமிருகம். சிவபெருமானைப் புருஷமிருகம். பூசித்துப் பேறுபெற்றதலம் திருமழபாடி; இக்கதையை அத் தல புராணத்தாலுணர்க' 3'சிக்கே யுண்ட, சுக்கேயிட்ட' 4'காத்த' 5'இசையுமீ ரெண்ணிரண்டும்' 6'ஓரத் தெழுதவிலா'

௫௧௦. திருத்தி யெவர்க்குஞ் செவிபொதிந்த விண்ணோ
ரருத்தி யசனவச னத்தா - ளொருத்தி

௫௧௧. மூலைவளைத்த மார்பர்க்கோ முன்னிற்பே மென்று
தலைவளைத்து நின்றபடி தானோ - [1]சிலைவடத்தா

௫௧௨. ரெம்மலையுந் தாழவா ழிக்[2]கயிலை யைத்தாமுஞ்
செம்மையுட னேவணக்கஞ் செய்தவோ - தம்மி

௫௧௩. லுருக்கமறக் காணிக் குடன்[3]பிறந்த மல்லா
னெருக்கியுடன் சாய்ந்த நிலையோ - செருக்கி

௫௧௪. வரிவண் புளக மலையான பேரதே
சரிவுந் தருமென்று தானோ - [4]தெரியாதார்

௫௧௫. பொய்யென்பா ரிவ்விடையைப் பொய்யோமெய் யோவென்று
பையவிறங்கி யெட்டிப் பார்த்தவோ - மெய்யா

௫௧௬. [5] மிடையொடியு மிங்கே யிருக்கொணா தென்று
படியி லிடந்தேடும் பண்போ - நடுவே

௫௧௭. யெழுகளியர் வாழ்வி லிறுமாந்தார்க் கவ்வாழ்
வொழிய முடிவளைத்தற் கொப்போ - விழியினாற்

௫௧௮. [6] சிங்கத்தைப் பார்க்கச் சிறிதிழிந்து பின்னிடைந்த
வெங்கும்ப மாவின் விகாரமோ - பொங்கப்

௫௧௯. பொருப்பை வளைத்தானைப் போர்பொருவே மென்று
விருப்பு[7]லகோ டாநின்ற வீறோ - மருப்பானை

௫௨௦. யுற்றிறைஞ்சு மாகண் டெல்வளைத்த வோவென்னச்
சற்றிறைஞ்சி நின்ற தனதடத்தாள் - கற்றைக்

௫௨௧. கரிய குழற்கிரண்டு கன்னியரே சேரு
மிருகழலே சூடுமல ரென்றுஞ் - சரிவறினு

௫௨௨. மற்புதமாங் கொங்கைக் கடலானை பூசித்த
பொற்புடைய மேனியே பூணென்றுஞ் - சொற்பதத்தி

௫௨௩. னந்தா விளக்கெனவே நக்கீரர் சொன்னதிரு
வந்தாதி யேகா தணியென்றும் - புந்தியுடன்

---

௫௧௦. விண்ணோரசனம் - அமுதம். ஒருத்தி - உமை.

(பி-ம்.) 1‘சிலைவடத்தால்’ 2‘இக்கயிலைக்குத்’ 3‘பிறந்தோமென்று’ 4‘தெரியாத’ 5‘இடையு மிடையிங்கே’ 6‘சிங்கத்தைப் பார்க்கச் சிறிதிழிந்து செல்லாத’ 7 ‘உலகோடாநின்ற’

௫௨௪. மெய்க்காளன் பூசித்தார் மேற்சா ளரந்தொழுகை
கைக்கா கியகங் கணமென்றுந் - திக்கெலா

௫௨௫. மின்னுதற்குச் செய்கோயில் வெள்ளிவட்டி னன்னீரே
தன்னுதற்குச் சித்தூரந் தாமென்றும் - பன்னுதற்கு

௫௨௬. [1] வான்சிலம்பி பூசித்தார் வண்சிலம்பைச் சூழுவதே
தேன்சிலம்பு பூந்தாட் சிலம்பென்று - மூன்சுவைத்தார்

௫௨௭. நற்பணிகள் செய்வதுவே நம்பணிக ளாமென்றும்
பொற்பணிகள் பூணாத பொற்பினாள் - கற்பகத்தி

௫௨௮. னேடலங்கு மாலை யிளம்பாளைத் தேமாலை
நீடரங்க மூத்த நிலாமாலை - யாடரங்கிற்

௫௨௯. சோதி வயிரச் சுடரின் றவிசேறித்
தாதி யொருத்தி தனைநோக்கி - வேதிகையிற்

௫௩௦. சந்தமாப் பன்மணிக டன்முன் பரப்பென்ன
வந்த மணிக ளவைபரப்ப - முந்தி

௫௩௧. நிறைகூ டலைவளைத்தா னீலத்தைக் கண்டா
ளிறையோன் களங்கண்டே னென்றாள் - பிறகினிய

௫௩௨. செம்பவளங் கண்டா டிருமேனி கண்டதுபோ
லும்பர்பிரா னாழகை யுன்னினாள் - கொம்பனையாள்

௫௩௩. பச்சைதனைக் கண்டாளோர் பாதியையென் போல்வார்க்கு
வச்சவடி வோவென்று வாழ்த்தினா - ளிச்சை

௫௩௪. வயிரத்தைக் கண்டாள் வயிரத்தா னெங்க
ளுயிருக்குச் சார்பென் றுரைத்தா - ளயர்வுடனே

௫௩௫. முத்தைக்கண் டாளிதுவேய் முத்தோவென் றுளயலா
ரொத்தைக்கண் டாயெனவே [2] யேசினா - ரத்தனையுந்

௫௩௬. காணச் செழுந்தென் கயிலாய மாமலையா
ணணிச்செம் பொன்முகரி யாற்றினான் - வாணி

௫௩௭. யரிபிரமர் போற்றுபுரி யாற்றூர்நன் னாட
னுரியதிருக் காளத்தி யூரான் - வரியளிகள்

---

௫௨௬. வண்சிலம்பு - வளவியமலை.

௫௨௮. மாலைகள் ஆடுகின்ற அரங்கு.

௫௩௩. ஓர்பாதியை - வலப்பாதியை.

௫௩௰-௫௪௦. இக்கண்ணிகளில் மலைமுதலிய தசாங்கங்கள் கூறப்படுகின்றன.

(பி - ம்.) 1 'வான்சிலம்பி' 2 'ஏகினார்'

௫௩௮. கூடிவிளை யாடுதிருக் கொன்றைச் செழுந்தாரான்
பாடியநால் வேதப் பரியினு - ஞடினரை

௫௩௯. யாதரிக்கு மொற்றைமருப் பஞ்[1]சந்தி யானையான்
மேதினியை யுண்ட விடைக்கொடியான் - மூதண்டஞ்

௫௪௦. சென்றதிரக் கம்பிக்குந் தெய்வ முரசுடையா
னன்றுதிரு நீலகண்ட ரானையான் - மன்றற்

௫௪௧. கரந்தையான் செங்கனகக் கல்லா லடியான்
சுரந்தவன்பர் நெஞ்சத் துணைவன் - வரந்தருவா

௫௪௨. னத்துவிதன் சுத்த [2]னருளாம்பெண் ணோர்பாகன்
வித்துவித மின்றி விளைவிப்பா - னந்தனைக்கு

௫௪௩. மான்பகுதி யாங்கார மாவிந்து நாதாந்தத்
தான்பகுதி யாயுயிரா யுள்ளுநீஇத் - தேன்பா

௫௪௪. யனந்தவித நாம னனைத்துலகும் பெற்றான்
[3] வனைந்த சராசரத்தில் வாழ்வா - னினைந்தடியார்

௫௪௫. பாடவிரந் திட்டான் பசியாற்றி னன்சந்தா
யோடியுழன் றன்புறம்புக் குள்ளானன் - வாடு

௫௪௬. முதலைவாய்ச் சேயழைத்தான் மூங்கைகவி கொண்டான்
குதிரைநரி யாக்கிக் கொடுத்தான் - மதுரையிலே

௫௪௭. கூனகற்றி னன்வெங் கொதிப்பகற்றி னனங்கி
தானகற்றி னன்கற்பந் தள்ளினு - னினர்களை

௫௪௮. யேடேற்றி வன்கழுவி லேற்றினன் கற்புனையைக்
கோடேற்றி நீற்றைக் குளிர்வித்தான் - வீடேற்றி

---

௫௪௩. மான் - மகத்தத்துவம். ௫௪௫. சந்தாய் - தூதாகி.

௫௪௬. சிதம்பரத்திலிருந்த சாதசன்மாவென்பவருடைய நூல்களைத் திருடிய பீமனென்பவன் அவராற் சபிக்கப்பெற்று ஊமையாகிப் பல இடங்களிலு மலைந்துவருந்தித் திருப்பருப்பதத்திருந்த உரோமசமுனிவர் கட்டளையின்படி இத்தலத்தையடைந்து சிவபெருமானை வழிபட்டு மூலத்தானத்திற்குத் தெற்கே யுள்ள சக்திக்ஷேத்திரத்தில் சிவலிங்க ப்ரதிஷ்டைசெய்து பூசித்து வாக்குண்டாகப்பெற்றுச் சிவபெருமானையும் ஞானப்பூங்கோதையையுந்துதித்து உய்ந்தனனென்பது புராணவரலாறு; ஷை ஸ்துதி மூகஸ்துதியென இக்காலத்து வழங்கும்.

௫௪௮. கோடு - கரை. நீற்றை - நீற்றறையை.

(பி - ம்.) [1]'அஞ்சத்தி யாஸ்திதியான்' [2]'அரிதாம்பெண்' [3]'அகத்த சராசரத்தி லாவான்'

ருசகூ. யிடேற்று வான்புழுக்க வீரகத் தன்பதியின்
மாடேற்று வான்கட்டு வாங்கத்தான் - கோடை

ருருo. வசந்தா டவிதழைத்த வாருய்ச் சிவந்த
1 பசந்தாடி யின்னரையின் பந்தி - யசைந்தாடப்

ருருக. பூவுலகெல் லாம்புகழப் பொற்பூவி னன்மாரி
தூவத் திருத்தேர்மேற் றோன்றுதலு - மாவலாற்

ருருஉ. கூட லொளிர்தோடிக் கும்பிட்டாள் போகாதே
2 நீடு மணித்தேரி னில்லென்று - டேடரிய

ருருங. வள்ளலே தெய்வ மலைக்கொழுந்தே மாமணியே
தெள்ளமுதே தேனே செழும்பாகே - யுள்ளத்

ருருச. தொளிவிளக்கே நான்மறைக ளோலமிடுங் குன்றே
தெளிபொருளே தொல்லைச் சிவனே - வெளிவெளியே

ருருரு. காலக் கடைத்தனியே கண்ணேயென் காட்சியே
மாலைத் திருக்கூத்தே வாரணமே - ஞாலமே

ருருசு. பல்லுயிர்க்குந் தாயே பசுபதியே 3பல்லுயிர்கள்
செல்லிடமே யெல்லோர்க்குஞ் செல்வமே - நல்லுறவே

ருருஎ. பாலே 4பழமேநூல் பாடும் பரங்கருணை
யாலே விளைவிளைவே யாதியே - மூலமே

ருருஅ. யாரா வமுதே யடியேன் மனமுணது
பாரா முகந்தனக்குப் பற்றுமோ - தீராமற்

ருருகூ. சார்ந்தாரைக் காத்தார்மெய்த் தன்மமோ வன்மந்தா
னோர்ந்தாரைத் தள்ளிவிட னீதியோ - சோர்ந்து

ருசுo. மழைத்தவிழி நீரிலே வாடினேன் பாரீ
ரழைத்தெமைவாழ் விக்கு மரசே - யுழைத்தடக்கை

ருசுக. யையரே யும்மைப்போ லாக மெலும்பானேன்
வெய்ய வடிசில் விடமானே - னையம்புக்

ருருo. சிவந்த - சிவந்தநிறமுள்ள அசைந்தாடு மாலைகள். பசந்தாடி - பச்சைநிறமுள்ள அசைந்தாடு மாலைகள். கரை - சாமரை.

ருருஉ. கூடல் - கூடற்சுழியிழைத்தலை.

ருசுக. ஐயம்புக்கு - பிச்சைக்குப் புகுந்து, ஐந்து பாணங்களுக்கு.

(பி - ம்.) 1'பசந்தாடியின் னிரையின்பந்தி' 2'நீடுதிருத் தேர்மேல்' 3'பல்லுயிருஞ் செல்லிடமே' 4'பழமே பரமே'

௫௬௨. கோடி யுழன்றே னுமையே நினைவானேன்
கூடி யணையாக் குணங்கண்டீர் - வீடி

௫௬௩. லலைப்பொன் முகரியிலே யாடுவீ ரிந்த
முலைப்பொன் முகரியிலே மூழ்கீர் - கலைத்தெளிவை

௫௬௪. வெண்பாவைக் கீந்தொருவன் வெண்பாவைக் கைக்கொண்
கண்பாவை துஞ்சக் கனிந்தருளீர் - பெண்பாவி [டீர்

௫௬௫. [1] யிவ்வேட னண்ணி யிணைவிழிமேல் வைத்தானு
மவ்வேடன் போலருளுக் காகாதோ - மெய்வேட

௫௬௬. ஞானப்பூங் கோதைக்கு நாயகரே யிப்பவனி
மானப்பூங் கோதையரை வாட்டாதோ - தேனக்கு

௫௬௭. வண்டார் குழலார் மணவாள ரேயுயிரை
வெண்டார் குழலாக்க வேண்டுமோ - தொண்டானோர்

௫௬௮. தாமபய மென்னச் சலதியிலே காத்தநீர்
காம பயமெனக்குக் கற்பித்தீர் - மாமைபயி

௫௬௯. லிச்சைத்தீ வெம்மை யிருக்கவே யென்னுளிந்தக்
கொச்சைத்தீ யைக்கையிற் கொண்டீரே - பச்சைநிற

௫௭௦. நீலிக் குறவான நிட்டூர மோகொன்றை
பாலிக்கி லீரிதென்ன பாவமோ - சாலவறம்

௫௭௧. பூண்டதிரு [2]மேற்பூச்சைப் பூசநினைந் தேனோதான்
[3] வேண்டுமணி மேனி வெதும்பவோ - வாண்டகையே

௫௭௨. யாண்டருளீ ரென்பானை யாண்டருளா தப்படியே
சேண்டரணி மாதர் திசைமாதர் - நீண்ட

௫௭௩. திரைமடவார் பூமடவார் தெய்வ மடவார்
வரைமடவார் நாக மடவார் - தரைமடவா

௫௭௪. ரெல்லாரு மால்கொண் டிறைவா வெனவிறைஞ்சச்
செல்லா டகக்கிரணத் தேரேறிக் - கல்லாவி

---

௫௬௪. ஒருவன் - நக்கீரர்.

௫௬௭. வெண்டு - மரங்களின் உள்ளீட்டைப்போக்கும் ஒருவகைநோய். தொண்டானோர் - திருநாவுக்கரசுநாயனார்.

௫௬௯. என்னுள் இருக்கவே. கொச்சை - இழிவு.

௫௭௧. நினைந்து ஏனோதான்.

௫௭௩. நாகம் - நாகருலகம்.

(பி - ம்.) 1 'இவ்வேட மன்றி' 2 'மேற்பூச்சு' 3 'வேண்டி'

௫௭௫. னத்தன் சதுமுகன்மா லாயிரங்[1]கண் ணுண்மணிமான்
சித்திர சேனன் சிவகோச - னத்திசிலை

௫௭௬. வேடன் சிலந்தியிரு மெல்லியலார் நக்கீரன்
சேட னடைந்த சிவபிரா - னுடல்

௫௭௭. விருதுகட்டுஞ் [2]சோதி விடங்கன்மால் வெள்ளை
யெருதுகட்டுங் காளத்தி யீசன் - சுருதித்

௫௭௮. திலகனபி ராமஞ் செறிவீதி தோறு
முலகறியப் போந்தா னுலா.

திருக்காளத்திநாதருலா முற்றிற்று.

விருத்தம்.

"மருப்படிக்கொண் டுழுமலையா ரெண்ணிறந்தார்
வயிற்புக்கு வருந்து நெஞ்சே
கருப்படிக்கா லருந்தியெனக் களித்தெழுபே
ரன்பினொடுங் கவின்கா ளத்திப்
பொருப்படிக்கீழ்க் கண்ணப்ப ரருளவேட்டம்
புரிகாற்பொன் னடியிற் பூண்ட
செருப்படிக்கீழ்ச் சிறுமணலாய்க் கிடவாத
தீவினைக்கென் செய்கு வோமே."

வெண்பா.

"சிலந்தியொடு காளனத்தி திண்ணர்தமை யாண்ட
நலந்திகழுங் காளத்தி நாதா - அலந்துஞ்
சகமயக்கந் தீரேனுன் றண்மலரை யுன்னி
அகமயக்கந் தீர அருள்."

---

௫௭௮. அபிராமம் - பேரழகு.

(பி - ம்.) 1 'சண்ணுன் கலைமான்' 2 'வீதி விடங்கனூர் வெள்ளை' 3 'அபி ராமன்'

திருக்காளத்திக்குரிய

தமிழ்ப்பிரபந்தச் செய்யுட்கள்

*திருக்காளத்திநாதர் இட்டகாமியமாலை

தருமந் தவஞ்சற் றறியாத வேடுவன் றன்செருப்பு
மருமுந்து வேணிக் கணிமா மலரவன் வாயுதகந்
திருமஞ் சனப்புனல் பல்லா லவன்மென்று தின்றதசை
யருமந்த போனக மன்றோநங் காளத்தி யப்பருக்கே.

திருக்காளத்திக்கோவை:—காப்பு.

சீர்க்கோவை சேர்தென் கயிலாயர்தம்மைத் தெரிந்தன்பினான்
மாற்கோவை யானு முரைத்திடவேபனி மால்வரைபோற்
கார்க்கோவை மேனியஞ் சந்திக்கணபதி கஞ்சமலர்த்
தார்க்கோவைத் தாளிணையே துணையாவந்து சந்திக்கவே.

திருக்காளத்திநாதர் கட்டளைக்கலிப்பா.

இருப்புக் காலினும் வன்காலென் காறின
மிரப்புக் காக நடக்கவென் றாலெந்தை
பொருப்புக் கால்வலஞ் செய்யென்று மேலவர்
புகன்றக் காலிது பொய்க்காலென் சொல்லுவேன்
செருப்புக் காலொற்றிச் செவ்வாய்ப் புனல்விட்டுச்
சென்னிப் பூப்பெய்து செங்கையி லூன்வைத்துக்
கருப்புக் கான்மட்டுந் தின்றா லெனநின்ற
கண்ணப் பன்பணி காளத்தி வாணனே.

திருக்காளத்திநாதர் பதிகம்.

பஞ்சனைய சிற்றடிப் பேரமர்க் கட்கொடிய
பாவையர் திறத்து மழலைப்
பன்மகார் தந்திறத் துந்தேக வபிமான
பாசநே சத்தி றத்தும்
விஞ்சுபல காலம்யான் பாழுக் கிறைத்தமன
வெப்பெலா மாறு மாறா
விரிதிரை சுருட்டுமணி யொளிவீசு பொன்முகரி
வெள்ளநீ ராடு வித்துத்
தஞ்சமா முன்றிருச் சேவையெனு மமுதசஞ்
சீவியுந் தந்த ளித்தாய்
தரையில்யா னினிவழுவி யுற்பவக் கொடியவெந்
தளையுறா வரம ளிப்பாய்
கஞ்சனுங் கஞ்சவிழி மஞ்சனுந் தேடக்
கனற்பிழம் பான வொளியே
காளத்தி மலைமேவு கருணைமலை யேதிருக்
கண்ணப்பர் காதன் மலையே.

இந்நூல் முற்றும் திருத்தமாகக் கிடைக்கவில்லை.
இதன் பின்னுள்ள பகுதி வரைந்த ஏடுகள் சிதைந்தேபோயின.

உ

கணபதி துணை

சங்கர நயினார் கோயில் சங்கரலிங்க உலா

பதிப்பாசிரியர்

மகாமகோபாத்தியாய, தாக்ஷிணாத்திய கலாநிதி
டாக்டர் உ. வே. சாமிநாதையர் அவர்கள்

மகாமகோபாத்தியாய
டாக்டர் உ. வே. சாமிநாதையர் நூல்நிலையம்
பெசன்ட் நகர், சென்னை-90

இப்புத்தகத்தில் அடங்கியவை

பக்கம்

1. முகவுரை — i—viii

2. சங்கர நயினார் கோயில் சங்கரலிங்க உலாவும் குறிப்புரையும் — 1—33

தலவிசேடம் முதலியன	1
சித்திரைத் திருவிழா	6
திருப்பள்ளியெழுச்சி முதலியன	7
திருவாபரணம் புனைந்தருளுதல்	7
உடன் வருவோர்கள்	11
திருத்தேரில் எழுந்தருளல்	13
இசைக் கருவிகள்	14
திருச்சின்னம்	15
குழாங்கள்	15
குழாங்களின் கூற்று	17
பேதை	19
பெதும்பை	21
மங்கை	22
மடந்தை	24
அரிவை	26
தெரிவை	28
தசாங்கம்	29
பேரிளம்பெண்	30
சித்திசாலைக் காட்சி	31
வடமலைப் பிள்ளையன் பணிகள்	32

3. சங்கர நயினார் கோயில் சம்பந்தமான செய்திகள் உள்ள நூற்பகுதிகளும், தனிப்பாடல்களும் — 33—38

4. ஏட்டுப்பிரதி ஒன்றில் வரையப் பெற்றிருந்தவை — 38

5. அரும்பத முதலியவற்றின் அகராதி — 39—40

கணபதி துணை

முகவுரை

திருநாவுக்கரசு நாயனார் தேவாரம்

திருச்சிற்றம்பலம்

காரேறு நெடுங்குடுமிக் கயிலா யன்காண்
　　கறைக்கண்டன் காண்கண்ணார் நெற்றி யான்காண்
போரேறு நெடுங்கொடிமே லுயர்த்தி னான்காண்
　　புண்ணியன்கா ணண்ணரும்பல் குணத்தி னான்காண்
நீரேறு சுடர்ச்சூலப் படையி னான்காண்
　　நின்மலன்கா ணிகரேது மில்லா தான்காண்
சீரேறு திருமாலோர் பாகத் தான்காண்
　　திருவாரூ ரான்காணென் சிந்தை யானே.

திருச்சிற்றம்பலம்

தெய்வங்களையும் அரசர்களையும் உபகாரிகளையும் ஆசிரியர்களையும் புகழ்ந்து புலவர்கள் பாடும் தமிழ்ப் பிரபந்தங்கள் பலவற்றுள் **உலா** என்பது ஒன்று. இது பாட்டுடைத் தலைவனது பவனியைச் சிறப்பித்துப் பாடுதலின் இப்பெயர் பெற்றது. தலைவன் உலாவருகையில், பேதைமுதற் பேரிளம்பெண் ஈறாக உள்ள ஏழு பருவத்துப் பொதுமகளிர் அவனை நயந்தாரென்னும் பொருளமையக் கலிவெண்பாவால் இயற்றப்பட வேண்டுமென்பது இதற்குரிய இலக்கணம்.

சங்கரலிங்க உலா என்பது பாண்டி நாட்டுச் சிவஸ்தலங்களுள் ஒன்றாகிய சங்கரநயினார் கோயிலில் எழுந்தருளியுள்ள சங்கரலிங்கமென்னும் திருநாமமுள்ள சிவபெருமான்மீது இயற்றப்பெற்றது. இது **வரராசை உலா** எனவும் வழங்கும். இதனை இயற்றிய ஆசிரியர் இன்னாரென்று தெரியவில்லை; இதன்கண் **காவை வடமலையப்பப் பிள்ளையன்** செய்த திருப்பணிகளைப் பற்றிய செய்திகள் கூறப்படுதலால், அப்பிள்ளையன் காலத்துக்கு இந்நூலாசிரியர் பிற்பட்டவர் என்பதுமட்டும் பெறப்படுகிறது. இந்நூல் **312** கண்ணிகளை உடையது.

இத்தலத்தில் சிவபெருமான்,

" ஒருபாற் புலித்தோ லுடைதயங்க மற்றை
ஒருபாற்பொன் னாடை யொளிர—ஒருபால்
மழுவு மொருபால் வளையுந் துலங்கத்
தழுவு முருவமைந்து "　　(**கண்ணி, 13—4**)

சங்கர நாராயணராக எழுந்தருளி யிருக்கின்றார். அவருக்குரிய அறுபத்து நான்கு மூர்த்தங்களில் சங்கர நாராயண மூர்த்தம் ஒன்று. அம்பிகையின் வேண்டுகோளுக்கிரங்கி அவர் இத்திருவுருவத்தோடு இத்தலத்தில் எழுந்தருளினர் என்பது புராண வரலாறு. இஃது இந்நூலிலுள்ள நான்காங் கண்ணி முதலியவற்றால் விளங்கும்.

> " கங்கா யமுனைச் சங்கமம் போலவும்
> **சங்கர நாரணர் சட்டகம் போலவும்**
> வெண்பாவு மாசி ரியமுமாய் விராஅய்ப்
> பண்பார் புறநிலை........." (யா. வி. 2, மேற்.)

என்னும் பழைய உதாரணச் செய்யுளில் மருட்பாவுக்கு இம் மூர்த்தம் உவமையாகக் கூறப்பெறுதல் இங்கே அறிதற்குரியது.

இத்தலத்திற்கு இந்நூலையன்றித் தமிழ்ப் புராணம் ஒன்றும், *அந்தாதி ஒன்றும் உள்ளன.

இந்நூலின்கண் இத்தல வரலாறுகள் பல அமைந்திருக்கின்றன. கௌரி பூசித்த செய்தி முற்பகுதி (4 - 16)யில் விரிவாகச் சொல்லப்படுவதோடு, பின்னும், "நேசிக்கு மன்பா னிறைகருணை யாவுடைத்தேன், பூசிக்கும் புன்னைவனப் பூங்கனியே" (143) எனவும் அமைக்கப்பட்டுள்ளது. இவ்வரலாறு இத்தலத்திலுள்ள சித்திரசாலையில் ஓவியமாகக் காட்டப்பெற்றிருந்த தென்பதை, "நீடுபுன்னைக், காவைநே சித்துவந்த கண்ணுதலை யாவுடைய, பாவை பூசித்தபடி பாரீர்" (284) என்பது தெரிவிக்கின்றது.

சங்கன், பதுமன் என்னும் மகாநாகர் இருவருள் ஒருவர் உண்மைப் பொருள் சிவபெருமானென்றும், மற்றொருவர் திருமாலென்றும் வாதித்துக் கொண்டிருந்து பின்னர் வியாழ பகவானது ஏவலால் வந்து இத்தலத்தில் தவஞ்செய்ய, இருவரும் ஒருவரென்பது அவர்களுக்குப் புலப்படச் செய்தற்கு இறைவர் சங்கர நாராயணத் திருவுருவத்தைக் காட்டியருளினர். இவ்வரலாறு முற்பகுதி (17 - 9) யிற் சொல்லப்பட்டிருப்பதன்றி, "சங்க பற்ப, நாகம் பரவவந்த நாதனூர்" (33) எனவும், குழாங்களின் கூற்றில், "பூத்த மதிவெதுப்பும் போதுசங்க பற்பரென, வாய்த்த வரவை வழுத்து மென்பார்" (140) எனவும், சித்திரசாலைக் காட்சியைப் பற்றிய செய்தியில், "இவ்வுலகிற் சங்கபற்ப ரென்னு மரவரசர்க், கவ்வுருவம் தந்த வருள் பாரீர்" (286) எனவும் அமைந்துள்ளது.

உக்கிரபாண்டியர் திருக்கோயிலமைத்தது (22 - 3, 287), ஓரந்தணனது பெண்பிறவியை இறைவர் மாற்றி முத்தியளித்தது (24), அகத்திய முனிவர்க்குப் பஞ்சாட்சர உபதேசம் செய்தது (26, 288), இந்திரகுமாரனாகிய சயந்தனுக்குக் காக்கைவடிவம் நீக்கியது (27), நாகசுனையில் வீழ்ந்திறந்த ஒரு வேடனுக்கு முத்தி அளித்தது (28), ஓரந்தணன் செய்த கோஹத்திப் பாவத்தைத் தீர்த்தது (29) முதலிய வரலாறுகளும் இந்நூலின் இடையிடையே காணப்படுகின்றன.

---

* இவ்வந்தாதி என்னால் மதுரைத் தமிழ்ச் சங்கத்திற் குறிப்புரை முதலியவற்றுடன் அச்சிடப்பட்டுள்ளது.

சிராத்தத்திற்காக அந்தணரொருவன் வைத்திருந்த பழத்தை உண்டத ஞற் சோழனொருவன் உற்றநோயை இறைவர் புற்றுமண்ணுகிய மருந்தை அளித்து நீக்கினர் (25.) இக்காலத்தும் இத்தலத்திற் புற்றுமண்ணை மருந்தாக உண்டு பிணிதீர்ந்து காணிக்கை அளித்துச் செல்வோர் பலர். இச்செய்தி இந்நூலில், "பூவலயம், வெம்பும் பிணிக்கு மெலியாது காணிக்கைச், செம் பொன் குவிக்குந் திருநாளில்" (37-8), "பொருந்தும் பெரும்பிணிக்கோர் புற்றி னிடத்து, மருந்து தரவந்தான் வந்தான்" (111), "கூருநோய், ஆற்று மருந்தளிப்பான்" (135-6), "புற்றிடத்து மண்மருந்தா .லெப்பிணியும், போ மருந்து மென்றுன்" (182) என்று பலபடியாகப் பாராட்டப்படுகின்றது.

இத்தலத்து மூர்த்தியின் திருநாமங்களுள் சங்கரர் (30, 180, 238, 246), வன்மீகநாதனர் (32), சங்கர நாராயணர் (34) என்பன இந்நூலில் வந் துள்ளன. அம்பிகையின் திருநாமம் கோமதியென வடமொழியிலும் ஆவுடைநாயகியெனத் தென்மொழியிலும் வழங்கும். ஆவுடைநாயகி யென் பது 'ஆவுடைத்தேன்' (30, 143), 'ஆவுடைய செந்தேன்' (104), 'ஆவுடைய வஞ்சி' (43), 'ஆவுடைய, பூங்கொம் பனையாள்' (163) என இந்நூலிற் பாராட்டப்பெற்றுளது. இத்தலத்தின் வேறு பெயர்களாகிய ராசை (34), சீராசை (87, 246, 262), வரராசை (184, 204, 296), கூழை (306) என்பவை இதன்கண் ஆளப்படுகின்றன. இராசை யென்பது ஸ்ரீராஜபுரம் என்பதன் மருஉவென்று தெரியவருகின்றது. இத்தலத்து விருட்சம் புன்னையாதலின் இது புன்னைவனம், *நாகவனமெனவும் வழங்கப் பெறும். இத் தலத்திலுள்ள தீர்த்தங்கள் பல. அவற்றுள் இதன்கண் தேவர்கள் திருத்தியமைத்த தேவதீர்த்தமும் (11), சங்கபற்பராற் காணப் பெற்ற நாகசுனையும் (28, 138, 151) † கூறப்படுகின்றன.

இந்நூலாசிரியர் சைவசமயாசாரியர் நால்வரிடத்தும் பேரன்பு பூண்ட வர். **திருஞானசம்பந்தமூர்த்தி நாயனரை**, "பொன்னிசைய மேவும் புகலியர் கோன்" (269), "தென்புகலி வேந்து" (278) என்பர். அவருடைய அருட் செயல்களுள் என்பைப் பெண்ணுக்கியதையும் (79, 154-5), பாண்டியனது கூனைநிமிர்த்ததையும் (278) எடுத்தாளுவார். அவர் அருளிச்செய்த தேவா ரத்தை, "சிந்தைமகிழ், தேம்பா கனையவிசைச் செந்தமிழ்" (78-9), "செஞ் சொன் முதுதமிழ்" (278) எனப் பாராட்டுவார். **திருநாவுக்கரசு நாயனரை**, "வேம்படிக்குக், கூடிப் பறிதலைவன் குண்டரிட்ட நீற்றறையைப், பாடிக் குளிர்வித்த பாவலன்" (79-80), "வன்புலையர், கற்றுணையாச் சேர்த்துக் கடற்படுத்த வஞ்செழுத்தும், நற்றுணையென் றேதினேன்" (278 - 9) என்பர். **சுந்தரமூர்த்திநாயனரை** "ஏடவிழ்ந்து, புள்ளை யழைக்கும் புனலின் முதலைவாய்ப், பிள்ளை யழைக்கும் பெருமான்" (80-81), "முற்றுலகும், அண்டத் தொகையு மருமறையும் போற்றுதிருத், தொண்டத் தொகைவகுத் தோன்" (279-80) என்பர். **தேவாரங்களை**, "தமிழ்மூவர் செஞ்சொ

* நாகம் - புன்னைமரம்.

† இத் தலத்தைப்பற்றிய பிற வரலாறுகளைச் சங்கரநயிஞர்கோயிலந்தா தியின் முகவுரையிற் காணலாம்.

லமுதம் " (55), " மதுரம், பழுத்ததமிழ் மூவரிசைப் பாட்டு " (74) என்று சிறப்பிப்பார். **மாணிக்கவாசகரை,** " வாதவூராளி " (75), " தெள்ளிய சொற், செம்பாவை நாவாற் றெளித்து வடித்ததிரு, அம்பாவை பாடியபே ரன்பினன் " (81-2), " பண்டுமன்றில், ஆடினேன் பூண்டெழுத வாய்ந்த துறை நானூறு, பாடினேன் " (280-81) என்றுகூறுவர். **திருவாசகத்தை,** " இன்செஞ்சொல் " (75) என்றும், " பைந்தமிழ் " (281) என்றும் பாராட்டுவார். நாயன்மார்களுள், **சேரமான் பெருமான் நாயனாரை,** " கூடலின் முக்கட் குழகன் வரவிட்ட, பாட லிசைபுனைந்த பார்த்திவன் " (83) என்பர். " மண்ணிடந்த மாலும் **வனசரனும்** மெய்யன்பாற், கண்ணிடந்து சாத்தவருள் கண்ணுதலோன் " (203) என்றவிடத்துக் **கண்ணப்ப நாயனார்** செயலைப் புலப்படுத்தி யிருக்கின்றனர்.

பிறதலச் செய்திகளிற் சில இதன்கண் வந்துள்ளன : " காவேந் தளித்தவந்தக் கண்ணுதலைத் தென்கமலைப், பூவேந்த வைத்த புகழோனும் " (84) என்று **முசுகுந்த சக்கரவர்த்தியைக்** கூறுமுகத்தால் திருவாரூர்த் தலச் செய்தியும், " நெல் வேலிவரை, மாமுத்தை வேண்டி வளர்த்தோனும் " (85) என்று **முழுதுகண்ட ராமபாண்டியனைக்** கூறுமுகத்தால் திருநெல்வேலித் தல வரலாறென்றும் இதன்கண் எடுத்தாளப்படுகின்றன. மதுரைப் பெருமான் திருவிளையாடல்களுள் திருமுகங் கொடுத்தது, " கூடலின் முக்கட் குழகன் வரவிட்ட, பாடலிசை " (83) என்றவிடத்தும், வளையல் விற்றது, " செங்கை வளை, அன்றணிந்த நீர் " (121-2) என்றவிடத்தும், கல்லானைக்குக் கரும் பருத்தியது, " மதன் விற்கரும்பைக் கல்லானைக், கன்றுபோ லின்றளித்தா லாகாதோ " (309) என்றவிடத்தும் குறிப்பிக்கப்பட்டுள்ளன.

" ஆவுடைத்தேன், பூசிக்கும் புன்னைவனப் பூங்கனியே " (143) என்ற விடத்துப் புன்னை வன மென்றதற்கேற்ப இறைவரைக் கனியாக உருவகம் செய்த இந்நூலாசிரியர் பின் அவரைத் தேனாக உருவகம் செய்து, " முக்கட் பசுந்தேறல், வந்திருக்கும் புன்னைவனம் " (214) என்று நயம்பெறக் கூறுகின்றார். மன்மதனுடைய ஆற்றலைப் புலப்படுத்துவதற் கெண்ணிய இவர், " அஞ்செழுத்தோன், பாதித் திருவுருவம் பச்சை கலந்துருகப், பேதித்தோன் " (118) என்று அவனைச் சொல்லியிருத்தல் பொருட்பொலி வோடு அமைந்துள்ளது.

இறைவருடைய தசாங்கங்கள் இந்நூலில் 261-ஆம் கண்ணி முதலிய வற்றிற் கூறப்பட்டுள்ளன.

இந்நூலிற் சொல்லப்படும் ஏழ்பருவ மகளிரும் பொதுமகளிரென்பதை, " மன்னர், இனம்போ லுதவமனத் தெண்ணிப் புதைத்த, தனம்போ லமைந்த தனத்தாள் " (155-6) எனப் பேதையையும், " முரசளிக்கும் வேலைமதன் மூவுலகும் வெல்ல, அரசளிக்க வந்தமட வன்னம் " (190) என மங்கையையும், " எழுவாரி வையத் தெவர்க்கு மதனால், வழுவாம லோது மடந்தை " (208), " பூவலரும், கொத்துத் தொடையல் குவலயத்தோ ராவியொடு, வைத்துச் செருகு மலர்க்குழலாள் " (211) என மடந்தை

யையும், "இளைஞ ரூபியினைத்து மூண்ணுமல், வெட்டியுடன் மீளும் விழிபிறுள்" (250), "கனிபிருந்த சொல்லியர்க்குக் காமா கமநூல், இனி திருந்து கற்பிக்கு மெல்லை" (260) எனத் தெரிவையையும் கூறுமுகத்தால் உய்த்துணர வைத்திருக்கின்றனர். அப்பருவ மகளிரது இயல்புகளை உரிய இடங்களில் ஏற்றவாறு புனைந்துள்ளார். அவர்களது பருவத்துக்கேற்ற விளையாடல்கள் பலவற்றை இதனுட் காணலாம். "தழைத்த கதிரெறிக்கும் தண்டரள வண்டல், இழைத்துவிளை யாட்டயரு மெல்லை" (161) எனப் பேதைப்பருவத்தில் சிற்றில் விளையாட்டும், பெதும்பைப் பருவத்தில் கழங் காடலும், மங்கைப் பருவத்தில் ஊசலாட்டும், மடந்தைப் பருவத்தில் யாழ் வாசித்தலும், அரிவைப் பருவத்தில் பொழில் விளையாட்டும், தெரிவைப் பருவத்திற் புனல் விளையாட்டும், பேரிளம்பெண் பருவத்தில் அம்மானை யாடலும் சொல்லப்பட்டுள்ளன. ஏழுபருவ மகளிரின் பிராய அளவு நூல்களிற் பலவாறாகக் கூறப்படும். இந்த உலாப் பிரதியின் பின்னர் எழுதியிருந்த * கட்டளைக் கலித்துறை ஒன்றிற் சொல்லப்பட்ட பிராய அளவு வருமாறு: ஏழு வரையிற் பேதை, ஒன்பது வரையிற் பெதும்பை, பன்னிரண்டு வரையில் மங்கை, பதினான்கு வரையில் மடந்தை, பதினெட்டு வரையில் அரிவை, இருபத்தொன்று வரையில் தெரிவை, முப்பத்திரண்டு வரையிற் பேரிளம்பெண்.

மாதர்களால் தலைவனிடத்தே தூதாக விடுக்கப்படுவனவாகப் புலனெறி வழக்கிற் பயிலும் பொருள்களுள், "ஏற்றமயல், விண்டுபசுந் தார்வாங்கி மீண்டுவரப் புன்னைவன, வண்டு களையழைத்து வம்மென்பார்" (136 - 7), "சுரும்பை யழைத்திதழி வாங்கிவரச், சொன்னாள் விடுத்தாள்" (239) என்று **வண்டும்**, "உண்டசுவை, அன்னத்தை நஞ்சென் றயராதே நாகசுனை, அன்னத்தைத் தூதுக் கழையுமென்பார்" (137 - 8) என்று **அன்னமும்** எடுத்தாளப்பட்டுள்ளன.

பிற தமிழ்நூல்களிற் காணப்படுதல்போலவே இதன்கண்ணும் தற் குறிப்பேற்ற 'அணி அமைந்த பலபகுதிகள் உள்ளன. இவ்வகையில் ஆசிரியர் சூரியன் உதயமானதை, "என் இறைவராகிய சிவபெருமான் மேல் அம்பெய்த மன்மதனை அவருடைய நெற்றிவிழியில் உள்ள எனது இனமாகிய அக்கினி அழித்தது; அதற்கிணங்க அம்மன்மதன் யானையாகிய இருளை நான் அழிக்கின்றேன் என்றதுபோல உதயமானுன்" (41 - 2) என்று சொல்லுகிறார்.

இறைவர் திருவாபரணங்களைப் புனைந்ததாக உள்ள பகுதியில், 'தன் விடம் சிவபெருமானது ஓருறுப்பாகிய திருக்கழுத்திற் றங்கி அழகு செய் வதை எண்ணிப் பாம்பானது தானும் ஓருறுப்பிற் பொருந்தி அழகுசெய்தது போலத் திருக்கரத்தில் திருக்காப்பணிந்தார்', 'இரண்டு பாம்புகள் தாம் விடத்தோடுள்ள பழியை நீங்குதற்கெண்ணி இறைவர் திருச்செவியில் இருப் பின் தேவாரங்களாகிய இனிய அமுதத்தைக் கவர்ந்து கொள்ளலாமென்று

* இதனை இப்புத்தகத்தில் 38-ஆம் பக்கத்திற் காணலாம்.

குழையாக வந்தது போலத் தோன்றத் திருக்குழை புனைந்தார்' (54 - 6), 'தங்களுடைய தலைவனாகிய சந்திரனை இறைவர் அணிந்த அன்பு கண்டு அம்முறைபற்றி, எம்மையும் அணிந்தருள்கவென்று நட்சத்திரங்கள் ஒழுங்காக வந்தனவென்று சொல்லும் வண்ணம் முத்துமாலையைப் பூண்டார்' (61 - 3), 'சந்திர சூரியர்களாகிய எங்களைக் கண்ணாகக் கொண்டீர்; ஆயினும் சந்திரனை மட்டும் முடியின்மீது அமைத்தீர்; என்னை மறந்தீர்; என்னையும் அவனைப்போலத் திருமுடிமேற் புனைந்தருள வேண்டுமென்று சூரியன் திருவடியைப் பிடித்து வேண்டுவதுபோலத் திருச்சிலம்பை அணிந்தார்' (66 - 8), 'முன்னொருகால் புரங்களை வெல்வதற்காக இறைவர் நம்மை வளைத்து வில்லாகக் கொண்டும் அவற்றை நகைத்தெரித்து விட்டமையால் நாம் பயனின்றி யொழிந்தேம்; இனி வேறொரு வகையிலேனும் உதவுவேமென மேருமலை நினைந்து அவ் வளைந்த உருவத்தோடே பணிசெய்ய வந்ததென்று சொல்லும்படியுள்ள திருவாசிகையைச் சேர்த்தினர்' (69 - 71) எனவரும் பகுதிகள் முதலியனவும், 'உமக்குள்ள இருதேவியாருள் கங்கையைமட்டும் சடையில் ஏந்தினீர்; என்னுடைய மகளாகிய உமையையும் அவ்வாறு செய்தருள்கவென்று வேண்டி ஏத்துதற்கு இமயமலை போந்தது போன்றது தேர்' (91 - 2), "'நாம் ஓரன்னமாகப் போயினமையாற் காணமுடியாத திருமுடியை இரண்டன்னமாக எழுந்துசென்றாற் காணலாம்' என்று பிரமன் நினைந்து அவ்வாறே வந்து முயல்வதுபோல இரண்டு சாமரைகள் இரட்டப்பெற்றன" (93 - 5), 'தலைவரைப் பிரிந்தவிட்டத்துச் சுடும் சந்திரனைக் கடியும்வண்ணம், மாதர்கள் இறைவர் சடைமேல் சந்திரனோடு இருந்த பாம்பிற்கு உணவாகக் காற்றை அளித்து விருந்தளிப்பது போல ஆலவட்டம் பணிமாறினர்' (95 - 7) என்பனவும் பிறவும் இவ்வகையைச் சார்ந்தனவே.

தெளிவு என்னும்பொருளில் தெள் (3) என்பதை இவர் அமைப்பர். தயவு (62), பகுந்த (180, 243), படியெடுப்பு (188), அருந்துபடி (308), செடாடவி (39) என ஒருமொழி தொடர்மொழிப் பிரயோகங்கள் சில இதில் வந்துள்ளன.

பலவகைச் சொற்பொருள் நயங்களும் அணியமைதிகளும் அமைய, 'ஓரேழ் பருவத் தொளிவளையார்—நேர்போதக், கண்ணுதலான் புன்னை நறுங் காவுடையா னோர்பாகத், தொண்ணுதலான் போந்த' உலாவைச் சிறப்பித்துப் பாடப்பெற்ற இந்நூல் எழுதியிருந்த சுவடி ஒன்று ஏறக்குறைய 40 வருடங்களுக்கு முன்பு திருநெல்வேலிப் பக்கத்துள்ள ஓரூரில் இருந்து வந்த **ஸ்ரீ முத்துக்குமாரசாமி பிள்ளை** என்பவர் மூலமாக எனக்குக் கிடைத்தது. வேறுபிரதி இதுகாறும் கிடைக்கவில்லை. ஆதலின் உள்ள பிரதியை வைத்துக்கொண்டு எழுதுவோரால் நேர்ந்த பிழையென்று தெரிந்தவற்றை நீக்கி ஆராய்ந்து இப்பொழுது, 'புன்னைப் பொதும்பரின்கீழ்ப் புற்றா டினிதமர்ந்த, முன்னைப் பொருளாம் முழுமுதல்வன்' திருவருளைத் துணைக்கொண்டு இந்நூல் வெளியிடப்பெற்றது.

இத்தலத்தின் சம்பந்தமாக யானறிந்த இரண்டு வரலாறுகள் உண்டு ; அவை வருமாறு :

1. * ஆறை அழகப்ப முதலியார் என்பவர் திருநெல்வேலியில் இருந்து ஆட்சிபுரிந்து வருகையில், சங்கரநயினர் கோயிலிலுள்ள நாயகரைச் செண்பகக்கண் பட்டரென்பவர் களவுசெய்து கொண்டு போய்த் திருவுத்தரகோச மங்கையில் அடகுவைத்துப் பொருள் வாங்கிக்கொண்டு சென்று விட்டனர். அம்மூர்த்தி அத்தலத்தில் இருப்பதனை அறிந்து, அக்காலத்து இராமநாதபுரத்தில் அரசாண்ட விஜய ரகுநாதசேதுபதிமன்னர் அம்மூர்த்தியை அத்தலத்துக்கோயிவில் எழுந் தருளுவித்துப் பூசை முதலியன நடத்திவரும்படி கட்டளையிட்டனர். சங்கர நயினர் கோயிலில் மூர்த்தி களவுபோன செய்தி ஆறை அழகப்ப முதலியா ருக்கு அறிவிக்கப்பட்டது. அவர் அதனை அறிந்து அம்மூர்த்தியை மீண்டும் இத்தலத்திற்குக் கொணரும் வரையிற் பாற்கஞ்சியையன்றி வேறுஉண்ப தில்லையென்ற நியமத்தோடிருந்தார். பின் உத்தரகோசமங்கையில் அம் மூர்த்தி இருப்பதையறிந்து அவரை எங்ஙனம் கொணர்வதென்று ஆலோ சித்து வந்தார். வருகையில் வடகரை ஸமஸ்தானத்தில் அப்பொழுது ஸ்தானுதிபதியாக இருந்தவரும், மிக்க புத்திவன்மையும் செந்தமிழ்ப்புலமை யும் உடையவருமாகிய பொன்னம்பலம்பிள்ளையென்பவர் அச்செயலை முடிக்கும் ஆற்றலையுடையவரென்று பலராலறிந்து அவரை வரவழைத்து, விக்கிரகத்தைக் கொணரவேண்டுமென்று இராமநாதபுரத்திற்கு அனுப்பி னர். அவர் அங்கேசென்றும் சிலநாள்வரையிற் சேதுபதி மன்னரைக் காணமுடியவில்லை ; காவடி யெடுத்து வருபவர்களைத் தடையின்றிப் பார்க் கும் வழக்கம் அம்மன்னர்க்கு உண்டென்பதை யறிந்து, தாமும் ஒரு காவடியை எடுத்துக்கொண்டு, உடன்வந்தவரை வாத்தியகாரர் முதலியவர் களாக வேடம் புனைவித்து அரண்மனைவாயிலில் நிற்கையில் சேதுபதி மன்னர் வந்தனர். அவரைக்கண்டவுடனே பொன்னம்பலம்பிள்ளை வினயத் துடன் அவரைப்புகழ்ந்து சில செய்யுட்களைச்சொல்லி மகிழ்வித்துத் தம்மை இன்னரென்று புலப்படுத்தி அவரால் உபசரிக்கப்பெற்று அங்கே சிலநாள் இருந்தனர். பின்னர், உத்தரகோசமங்கைக்குச்சென்று ஸ்வாமி தரிசனம் செய்துவரவேண்டுமென்று அம் மன்னரிடம் விடைபெற்றுச்சென்று அங்கே சங்கரநயினர் கோயில் நாயகர் இருப்பதையும், அவர் அங்கேவந்த வரலாற் றையும் அறிந்து, தாம் அவரை வினவியதாக, † 'புற்றிறங்கே' என்னும் வெண்பாவையும், அவர் விடைகூறியதாக, ‡ 'விள்ளுவமோ' என்னும் வெண்பாவையும் பாடிவைத்துக்கொண்டு மீண்டும் இராமநாதபுரம் சென்று சேதுபதிவேந்தர்முன் அவ்விரண்டு வெண்பாக்களையும் கூறினர். அவற்

* இவ் வரலாறு சொக்கம்பட்டிப் பாளையப்பட்டுச் சரித்திரம் — இரண் டாம் பாகத்திற் காணப்பட்டதாகும்.

† இதனை 38-ஆம் பக்கத்திற் காண்க.

‡ இதனை 38-ஆம் பக்கத்திற் காண்க.

றைக்கேட்ட மன்னர் பொன்னம்பலம்பிள்ளையினுடைய குறிப்பை அறிந்து உத்தரகோசமங்கையிலிருந்த விக்கிரகத்தைச் சங்கரநயினர் கோயிலுக்கு எழுந்தருளச்செய்வித்தனர். அவரிடம் விடைபெற்றுப் பொன்னம்பலம் பிள்ளை ஸ்வாமியுடன் புறப்பட்டார். அவர் சென்ற காரியத்தை நிறைவேற்றிக்கொண்டு வருவதையறிந்த ஆறை அழகப்பமுதலியார் திருமங்கலத்திற்கே வந்து நாயகரைத் தரிசித்து சங்கரநயினர் கோயிலுக்கு எழுந்தருளுவித்தார்.

2. தஞ்சைமாநகரில் மேலைவீதியில் சங்கரநாராயணர் கோயிலொன்றுளது. ஒருகாலத்தில் அந்நகரில் அரசாண்டிருந்த மகாராஷ்டிரமன்னர்களுள் ஒருவருடைய பெருந்தேவியார் இந்தச் சங்கரநயினர் கோயிலின் மகிமையையும், இத்தலமூர்த்தியைத் தரிசித்தோர் பிணிநீக்கம், மகப்பேறு முதலியன அடைதலையும் அறிந்து தாமும் இவரைத் தரிசிக்கவேண்டுமென்றெண்ணினர். அதனையறிந்த மன்னர் தக்க சிற்பிகளை இத்தலத்துக்கு அனுப்பி இங்குள்ள மூர்த்தியின் அமைப்பு முதலியவற்றை அறிந்துவரச் செய்து அங்ஙனமே ஒருகோயில் தஞ்சையில் எடுக்கச்செய்து, அதில் மூர்த்தியைப் பிரதிஷ்டை செய்வித்து, இங்கே நடப்பதுபோலவே நித்தியநைமித்திகங்கள் நடப்பித்துவந்தனர்.

இந்த உலாவைத் தமது '**சிவநேசன்**' பத்திரிகையில் வெளியிட்டுப் பல சிவநேசர்களும் தமிழன்பர்களும் படித்து இன்புறச் செய்வித்த பத்திராதிபர் ஸ்ரீமான் **ராம. கு. ராம. இராமசாமி செட்டியாரவர்களது** அன்புடைமை ஒருபொழுதும் மறக்கற்பாலதன்று.

இதனைப் பதிப்பிக்குங் காலத்து உடனிருந்து உதவியவர்கள் சென்னை, கிறிஸ்டியன் காலேஜ் தமிழ்ப் பண்டிதர் சிரஞ்சீவி வித்வான் **வி. மு. சுப்பிரமணிய ஐயரும்**, மோகனூர்த் தமிழ்ப்பண்டிதர் சிரஞ்சீவி **கி. வா. ஜகந்நாதையரும்** ஆவர்.

'தியாகராஜவிலாசம்'
திருவேட்டீசுவரன்பேட்டை,
சென்னை.
1—5—1933.

இங்ஙனம்,
வே. சாமிநாதையர்

குறிப்பு.—மேலேயுள்ள என் தந்தையாரவர்களுடைய முகவுரையால் இந்நூலைப்பற்றிய வரலாறுகள் நன்கு விளங்குமாதலால் நான் வேறு எழுதுவது மிகையாகும்.

S. கலியாணசுந்தரையர்,
20—2—44.

உ

கணபதி துணை

சங்கர நயினார் கோயிற்

சங்கரலிங்க உலா

தலவிசேடம் முதலியன

கலிவெண்பா

1. **பா**ர்தந்த பூங்கமலப் பண்ணவனும் வென்றிதரு
போர்தந்த நேமிப் புரவலனும்—ஏர்தந்த
2. நந்தா வளம்பெறுபொன் னாடு புரந்தளிக்கும்
தந்தா வளப்பூந் தருவரசும்—முந்தார்வத்
3. தெள்ளிருக்கு முண்மைநிலை தேர்ந்திருக்கு மேன்மேலும்
உள்ளிருக்கு மன்பா லுகந்திறைஞ்ச—வெள்ளித்
4. தவளப் பொருப்புத் தனிலிருந்த முக்கட்
பவளப் பொருப்பைப் பரவிக்—கவுரியன்பு
5. நாட்டிய சங்கர நாரா யணர்வடிவம்
காட்டி யருளுகென்க் கண்ணுதலும்—மோட்டுலகில்

குறிப்புரை

1. நேமி - சக்கரம். புரவலன் - திருமால்.

2. தந்தாவளம் - யானை; ஐராவதம். அரசு - இந்திரன். முந்து ஆர்வம்.

3. தெண்மை இருக்கும் - தெளிவு பொருந்திய; மைவிகுதி பெற்ற பண்புப் பெயரில் பகுதிப் பொருள் விகுதியாகிய மையை நீக்கி முதனிலையோடு மொழிகளைச் சேர்த்துக் கூறுவதும் மரபு; "தண்ணார் திருமஞ் சனமாடி" (45) என்பர் பின்னும்; "வருந்துநாய் நாவிற் பெருந்தகு சீறடி" (பொருந. 42); "கருவார் பொழில்", "கருவார் சோலை" (தே. பிரமபுரம், திருவாரூர்.) இருக்கும் - வேதமும். இருக்குமென்னும் பெயரெச்சங்கள் அன்பென்னும் பெயரைக்கொண்டு முடிந்தன.

1 - 3. பண்ணவனும், புரவலனும், அரசும், இருக்கும் இறைஞ்ச.

3 - 4. இறைஞ்ச இருந்த. கவுரி - உமாதேவியார். கைலையங்கிரியில் எழுந்தருளியுள்ள சிவபெருமானைப் பரவி.

5. சங்கரரும் நாராயணரும் கலந்த திருவுருவம்: 6-7, 13-6, 19, 34, 109, 142, 285-6-ஆம் கண்ணிகளைப் பார்க்க; "சீரேறு திருமாலோர்

6. மன்னிய புன்னை வனத்துளவோர் புன்னைநிழல்
தன்னி லிருந்து தவமியற்றின்—அன்ன

7. இருவடிவுங் காட்டுதுநா மென்றிசைப்பப் பச்சை
ஒருவடிவம் பெற்ற வுமைமான்—மருவிரிபூங்

8. காவாகிப் பூவுங் கனியு மளிப்பதற்கும்
கோவாகித் தீம்பால் கொடுப்பதற்கும்—ஆவுடைய

9. கோதையெனத் தன்னுமங் கூறுதற்கும் வானோரும்
மாத ரரம்பையரும் வம்மினென—மேதினியில்

10. தெய்வ மகளிரொடுந் தேவர் குழாத்தோடும்
அவ்வனத் தேகி யமர்ந்தருளிச்—செவ்விபெற

11. மன்றல் கமழ்குவளை வான்சுனையை வானோர்கள்
அன்று திருத்தி யருகமைப்ப—ஒன்றிய

12. சிந்தனை கூர்ந்துதவஞ் செய்து நெடுங்காலம்
வந்தனை செய்து வருநாளில்—எந்தை

பாகத்தான்காண் ", "திருமாலோர் பங்கத்தான்காண்" (தே. திருவாரூர், திருப்புத்தூர்) ; "தாழ்சடையு நீண்முடியு மொண்மழுவுஞ் சக்கரமும், சூழர வும்பொன்னுணுந் தோன்றுமால் - சூழும், திரண்டருவி பாயுந் திருமலைமே லெந்தைக், கிரண்டுருவு மொன்ரு யிசைந்து" (திவ். மூன்றுந்திருவந்தாதி, 63.) என - என்று உமாதேவியார் விண்ணப்பம் செய்ய.

4 - 5. கவுரி பரவி அருளுக என.

6. புன்னைவனம் - இத்தலத்தின் பெயர் ; புன்னை, தலவிருட்சம் : 18, 29, 31, 137, 143, 149, 162, 204, 214, 236, 283-4, 312.

7. காட்டுதும் - காட்டுவேம். கண்ணுதல் (5) காட்டுதுமென்று இசைப்ப (7) பச்சை வடிவம் பெற்ற உமை : 118, 163, 183.

8 - 9. ஆவுடைய கோதை : பசுக்களையுடைமையால் அம்பிகை ஆவுடைய நாயகியென்று திருநாமம் பெற்றனள் ; இது வடமொழியிற் கோமதியென வழங்கும் ; 30, 43, 104, 143, 163, 284, 303.

7 - 9. உமைமான், பூவும் கனியும் கொடுப்பதற்குக் காவாகும்படி தேவரையும், அபிஷேகத்திற்குப் பால் கொடுப்பதற்கும் ஆவுடை நாயகி யென்று தம்மைக் கூறுதற்கும் பசுக்களாகும்படி அரம்பையரையும் வம்மி னென்று கட்டளையிட்டு.

10. அவ்வனத்து - மேற்கூறிய புன்னை வனத்திற்கு. அமர்ந்து விரும்பி எழுந்தருளியிருந்து.

11. அங்கே உள்ள ஒரு சுனையைத் தேவர்கள் திருத்தி யமைக்க. ஒன் றிய - ஒன்றுபட்ட.

12. வந்தனைசெய்து - வழிபட்டு ; அம்பிகை வழிபட்டது : "நீடுபுன் னைக், காவைநே சித்துவந்த கண்ணுதலை யாவுடைய, பாவைபூ சித்தபடி பாரீர்" (283-4) என்பர் பின். அமர்ந்தருளி (10), கூர்ந்து தவம் செய்து வந்தனை செய்து வருநாளில்.

13. ஒருபாற் புலித்தோ லுடைதயங்க மற்றை
ஒருபாற்பொன் னுடை யொளிர—ஒருபால்

14. மழுவு மொருபால் வளையுந் துலங்கத்
தழுவு முருவமைந்து தானே—ஒழுகுமொளி

15. கான்ற விருவடிவுங் காணத்தா னோர்வடிவிற்
றோன்றியருள் செய்யத் தொழுதாங்கண்—ஆன்ற

16. பழைய வுருவின் படியுறைய வென்ன
அழகுதர நாளு மமர்ந்தோன்—முழுதும்

17. நிலைமைபெறு மெய்ப்பொரு ளேமியான் செங்கைக்
கொலைமழுவா னென்றுதம்மிற் கூறும்—மலைவொழியத்

18. தாமேவிச் சங்கபற்ப ரென்னுந் தடநாகம்
தேமேவு புன்னைவனஞ் சென்றுதொழப்—பூமேல்

19. இருவுருவு மொன்ற யிறைவிக் களித்த
திருவுருவங் காட்டியருள் செய்ய—இருநிலத்தோர்

20. தங்களுக்கு வேண்டுவன தந்தளிக்கு நல்வரமும்
அங்கவர்க்கு முத்தி யருள்வரமும்—எங்களுக்கு

21. மெய்ப்பொருளு மெம்மை விரும்பிப் பணிபவருக்
கெப்பொருளு மீக வெனவளித்தோன்—ஒப்பிலாப்

22. பண்டா ரணந்தேர் பராசத்தி சாபத்தாற்
சண்டாள னானவிண்ணோன் றனுணர்த்தக்—கண்டாய்ந்து

---

13. பொன்னுடை - பீதாம்பரம்; இது திருமாலுக்குரியது; "பொன் புனை யுடுக்கையோன்" (பரி. 15 : 8); "பொலம்பூ வாடையிற் பொலிந்து தோன்றிய, செங்க ணெடியோன்" (சிலப். 11 : 50-51.)

15. இருவடிவு - சங்கரநாராயணர் வடிவம்.

16. என்ன - என்று ஆவுடை நாயகி விண்ணப்பம் செய்ய.

18. சங்கபற்பர்-சங்கன், பத்மனென்னும் மகாநாகர் இருவர்; 20-21, 33, 140, 286; பற்பர் - பத்மர்; எதுகை: "பற்பநாபன்" **திருவாய்மொழி,** 2. 7 : 11.

17 - 9. உண்மைப் பொருள், சிவபெருமானென்றும் திருமாலென்றும் தம்முள் மாறுபட்டு வாதித்துக்கொண்டிருந்த சங்கன், பதுமனென்னும் மகாநாகர் இருவரும் வியாழ பகவானது ஏவலால் இங்கே வந்து தவம் செய்ய இருவரும் ஒருவரென்பது அவர்களுக்குப் புலப்படும்படி செய்தற்குச் சிவபெருமான் முன்பு ஆவுடை நாயகிக்குக் காட்டிய சங்கரநாராயணத் திருவுருவைக் காட்டியருளினரென்பது இத்தலபுராண வரலாறு.

21. என - என்று சங்கபற்பர் வரம் கேட்ப.

22. பராசத்தி - அம்பிகையின். விண்ணோன் - **மணிக்கிரீப**னென்னும் தேவன்; "மலைமகள் சாபந் தன்னாற் புலையனு மணிக்கிரீபன்", "பொருப் பிளங் கன்னி சாபம் பொருந்தலாற் புலைய னாகி, மருத்துணர் விரிந்த புன்னை வனத்துறை மணிக்கிரீபன்" **சங்கர. புராணம்,** உக்கிரன் வழிபடு சருக்கம், 23, 36.

23. செம்பொற் றடவரையிற் சேல்பொறித்த வேந்தமைத்த
அம்பொற் சினகரத்து ளன்றமர்ந்தோன்—வெம்பவங்கள்

24. ஆற்றி யறுதொழிலோ னன்பெறுத்த பெண்சனனம்
மாற்றியுயர் முத்தி வழங்கினோன்—போற்றும்

25. மறையோன் பொருளதனை வவ்வியபூம் பொன்னிக்
கிறையோன் பிணிதீர்த்த வெங்கோன்—குறையாத

26. வண்மைப் பொதியவரை மாமுனிக்கோ ரஞ்செழுத்தின்
உண்மைப் பொருளை யுணர்த்தினோன்—தண்ணாங்

---

23. வேந்து - உக்கிரபாண்டியன். கொற்கையை இராசதானியாகக் கொண்டு அரசாண்ட உக்கிரப் பெருவழுதி யென்னும் அரசன் நாள் தோறும் திருவாலவாய் சென்று ஸ்ரீ சோமசுந்தரக் கடவுளைத் தரிசித்துவரும் நியம முடையவன். ஒரு நாள் தரிசனம் செய்தற்கு இத்தலத்தின் வழியே செல்லுகையில் அவன் ஏறி வந்த யானை கீழே விழுந்தது. அப்பொழுது அரசன் ஒன்றும் தெரியாமல் திகைத்து நிற்கையில் மேற்கூறிய மணிக்கிரீப னென்பவன் வந்து பணிந்து, " அரசே, அடியேன் இவ்வனத்தைத் திருத்திக் கொண்டிருப்பவன். ஒரு புற்றை வெட்டுகையில் அவ்வெட்டினால் வாலற்றுப்போன பாம்பொன்று மேலே தோன்றியது. அதனைப் பரமசிவனுடைய திருவுருவமென்றே எண்ணுகிறேன் " என்று சொன்னான். அரசன் அங்கே சென்று பார்த்துக்கொண்டு நின்று, "மதுரைக்குச்செல்ல முடியவில்லையே" என்று வருந்தியபொழுது, " அரசே, நீ மதுரை சென்று அலையவேண்டாம்; அங்கயற்கண்ணியோடும் ஆலவா யமர்ந்த அண்ணல் இங்கு எழுந்தருளி யிருக்கின்றார். இவ்விடத்திலேயே தரிசனம் பண்ணிக்கொள்ளலாம் " என்று ஓர் அசரீரி உண்டாயிற்று. உடனே அவன் புன்னை மரத்தின் நிழலிற் புற்றினருகே ஒரு சிவலிங்கம் இருக்கக் கண்டு தரிசனம் செய்துகொண்டு திருக்கோயில் முதலியவற்றை அமைத்து அங்கே வாழ்ந்து வந்தானென்பது இத் தலபுராண வரலாறு; இதனை உக்கிரன் வழிபடு சருக்கத்தால் அறிய லாகும். கண்ணி, 110, 287 பார்க்க.

24. பிராமணன் ஒருவன் தன் மனைவியைப் புறக்கணித்த தீமையால் மறுபிறப்பில் **தக்கணை** யென்னும் பெண்ணாகப் பிறந்து **காலப** முனிவரேவலால் இத்தலத்தை அடைந்து தவம் செய்து பின்பு அந்தப் பிறவி நீங்கப் பெற்று முத்தியும் பெற்றான். இந்த வரலாறு இத்தல புராணத்திலுள்ள தக்கணை தவம்புரிந்த சருக்கத்தால் அறியப்படும்.

25. பொன்னிக்கிறையோன் - சோழன். உறையூரில் அரசாட்சி செய்துகொண்டிருந்த **வீரசேன**னென்னும் சோழன் ஓரந்தணன் வீட்டிற் சிராத்தத்திற்கு வைத்திருந்த பழத்தை அதனை அறிந்தும் பசி மிகுதியால் வாங்கியுண்டான். அந்தப் பாவத்தால் ஒருவகைப் பிணியுற்று இத் தலத்திற்கு வந்து சிவசன்மரென்னும் அந்தணரொருவர்பாற் 'பஞ்சாட்சர உபதேசம் பெற்றுச் சிவபெருமானை வழிபட்டுப் பிணியினின்றும் நீங்கப் பெற்றான். இவ் வரலாறு வீரசேனன் பிணிதீர்ந்த சருக்கத்தால் அறிய லாகும்; " பழுதிற், பொருந்து பெரும்பிணிக்கோர் புற்றி னிடத்து, மருந்து தரவந்தான் வந்தான்", "கூருநோய், ஆற்று மருந்தளிப்பான் ", "புற்றிடத்து மண்மருந்தா லெப்பணியும், போமருந்து மென்றான்" (111, 136, 182) என்பர் பின்னும்.

26. **அகத்தியருக்குப்** பஞ்சாட்சரத்தின் பொருளை உபதேசம் செய்தனர்; " ஆர வரைமுனிக்கோ ரஞ்செழுத்தி னுண்மைநிலை, தேர ...ரைத்த திறம்பாரீர் " (288.)

27. கடிகமழ் கற்பகப்பைங் காவேந்தன் மைந்தன்
கொடியுருவ மாற்றுங் குழகன்—படிமிசையில்
28. ஞான நெறியுதவு நாகசுனைப் பாலிறந்த
கானவனை யாளுங் கருணையான்—ஈனமுற
29. ஆவி னுயிர்செகுத்த வந்தணன்றன் புன்னைநறுங்
காவில் வழுத்தக் கதிகொடுத்தோன்—மேவரிய
30. சங்கரர் சங்கரி தற்பரை யாவுடைத்தேன்
பங்கரர் வேதப் பழம்பொருளார்—செங்கமலப
31. பாதனார் காதிற் பகரிருவர் சங்கீத
நாதனார் புன்னைவன நாதனார்—மூதரவில்
32. ஆடரியும் வேதாவு மன்றரியு மன்னமுமாய்
நாடரிய வன்மீக நாதனார்—நீடியபொன்
33. மாகம் பரவ மறைபரவச் சங்கபற்ப
நாகம் பரவவந்த நாதனார்—ஏகரெனும்

---

27. காவேந்தன் - இந்திரன். மைந்தன் - சயந்தன். கொடியுருவம் - காக்கையுருவம். சயந்தன் காக்கையுருவெடுத்துச் சீதையைக் கொத்திய தனால் இராமராற் கோபிக்கப்பெற்று மீண்டும் வந்து அவரடியில் வீழ்ந்து அருள் பெற்றான். பெற்றும் பழைய காக்கை வடிவம் நீங்காமையால் மிகுந்த நாணத்தையடைந்து இந்திரன் ஏவலால் இத்தலத்தை யடைந்து வழி பட்டு அவ்வடிவம் நீங்கினான்; இத் தல புராணத்துள்ள சயந்தன் வினை தீர்த்த சருக்கத்தால் இவ்வரலாறு அறியப்படும்.

28. நாகசுனை : மேற்கூறிய சங்கன், பத்மனென்னும் மகாநாக ரிருவ ரால் உண்டாக்கப்பட்ட சுனை ; 138, 151.

பசியினாற் சோர்வையடைந்த வேடனொருவன் நாகசுனையில் நீர் குடிக்க வந்து தவறி அதில் விழுந்து இறந்தான். அவன் ஒருநாள் இந்தத் தலத்தில் வசித்தமையாலும், நாகசுனை நீர் தீண்டப் பெற்றமையினாலும் முத்தியை யடைந்தான் ; இவ்வரலாறு கானவன் வீடுபெற்ற சருக்கத்தால் அறிய லாகும்.

29. கன்மாடனென்னும் அந்தணனொருவன் சமித்து, தருப்பை முதலி யன கொண்டு வருகையில் தன்னை எதிர்த்து வருத்தவந்த பசுவைத் தள்ள அது சேற்றில் விழுந்து அதிற் புதைந்து இறந்தது. அந்தத் தீவினையாற் பற்றப்பட்ட அவன் இத்தலத்தை அடைந்து நாக சுனையில் நீராடிச் சங்கர லிங்கத்தை வழிபட்டு அப்பழியினின்றும் நீங்கிச் சிவசாரூபத்தை அடைந்தா னென்பது கன்மாடச் சருக்கத்திலுள்ள கதை.

30. சங்கரர் : " சீராசைச் சங்கரனே " (246) என்பர்பின். ஆவுடைத் தேன் - ஆவுடை நாயகியை ; " ஆவுடைய செந்தேன் " (140.) பங்கு அரர்.

31. இருவர் - கம்பளர் அசுவதரருடைய. சங்கீத நாதனார் - இசை யொலியைக் கேட்பவர் ; நாதம் - ஒலி. மூதரவு - முதுமை அரவு.

32. ஆடு அரி - ஆடிய திருமால். அரியும் அன்னமும்-பன்றியும் அன் னப்பறவையும். வன்மீக நாதனார் - புற்றிடங் கொண்டார் ; " புன்னைப் பொதும்பரின்கீழ்ப் புற்றூ டினிதமர்ந்த, முன்னைப் பொருளான் " (162) என்பர் பின்.

32 - 3. பொன்மாகம் - தேவலோகம்.

34. நம்பரர் சங்கர நாரா யணராசை
அம்பரர் போற்றுமறை யாதியார்—கொம்பனைய

சித்திரைத் திருவிழா

35. முல்லை மகளிர் முலைக்கோடு பாய்ந்துழக்கும்
குல்லை யிடபக் கொடியேற்றி—வல்லை

36. ஒருமுகங் கொண்டுவம்மென் றும்பர்வர விட்ட
திருமுகமே யெங்கெங்குஞ் செல்ல—மருவிவந்து

37 மூவ ரிசைமுழங்க முப்பத்து முக்கோடி
தேவர் வணங்குந் திருநாளில்—பூவலயம்

38. வெம்பும் பிணிக்கு மெலியாது காணிக்கைச்
செம்பொன் குவிக்குந் திருநாளில்—தும்பையொடு

39. சித்திரைக் கங்கை யணியுஞ் செடாடவியான்
சித்திரைத் திங்கட் டிருநாளில்—நத்திச்

40. சிவந்தபதத் தாமரையைச் சேவித் துலகம்
உவந்ததிரு நாளி லொருநாள்—நிவந்திகலும்

41. எப்பகையு மில்லாத வென்னிறைமேல் வாளிதொட்ட
அப்பகையைத் தன்கிளையொன் றட்டதெனத்—துப்பின்

---

34. சங்கர நாராயணர்: "சங்கர நாரணனே" (**கூழையந்தாதி, 56.**) ஆசை அம்பரர் - திக்காகிய ஆடையை யுடையவர்; திகம்பரர்.

35. முல்லைமகளிர் - கோவியர்; முல்லை - முல்லைநிலம். குல்லை - திருத் துழாய். இடபக்கொடி, திருமாலாதலின் குல்லையிடபக் கொடியென்றார்; "அன்றெடுத்த கன்மாரிக் காக வருவிநெடும், குன்றெடுத்தவென்றிக்கொடி", "அங்கமலத் தானை யளிக்குந் திருவுந்தித், துங்கவிடை யானை", "ஆவி யனையபதி னொரு பிரங்கொம்பு, மேவி வளரும் விடைக்கொடியும்", "சோர விடைப் பாகன்" 98, 121, 264, 288-9.

37. மூவர் இசை - **திருஞான சம்பந்தமூர்த்திநாயனர்** முதலிய மூவரது தேவாரம்; "தமிழ் மூவர் செஞ்சொல்", "மதுரம், பழுத்ததமிழ் மூவரிசை, பாட்டும்" (55, 74); 79-81, 278-9-ஆங் கண்ணிகளைப் பார்க்க.

38. தங்கள் தங்களுடைய பலவகையான பிணிகளைத் தீர்த்துக்கொள் வதற்கு வந்து பலவகையான காணிக்கைகளைத் திருமுன் செலுத்திவிட்டு அன்பர்கள் செல்வது இத்தலத்தில் நிகழும் தொன்றுதொட்ட வழக்கம்.

39. சித்திரை - சித்திரம், ஆச்சரியம். சித் திரை கங்கை யெனப் பிரித்து அறிவு மயமாகிய கங்கை யெனலுமாம்; திரை - அலை. சித்திரைத் திங்கள் - சித்திரை மாதம்; சித்திரை மாதத்தில் இத்தலத்தில் விழா நடக்கும்; "தெண்ணிலா வேணி யார்க்குச் சித்திரைத் திங்க டன்னில், விண்ணவரி றைஞ்சி யேத்த விழாவினை நடத்தி னானே" (உக்கிரன் வழிபடு சருக்கம், 33.)

40. நிவந்து - தலையெடுத்து.

41. என் இறை மேல் - என் தலைவராகிய சங்கரர்மேல். வாளி - அம்பை. அப்பகையை - அந்த **மன்மதனை.** தன் கிளையென்றது நெற்றிக் கண்ணிலுள்ள நெருப்பை. துப்பின் - வன்மையையுடைய.

42. வெறிதரு மப்பகையின் வேழமெறிந் தென்னச்
செறிகதிரோன் வந்துதயஞ் செய்ய—நறியகுழல்

திருப்பள்ளியெழுச்சி முதலியன

43. வாய்ந்தமயி லாவுடைய வஞ்சியிளங் கொம்புடனே
தோய்ந்தமணப் பள்ளித் துயிலெழுந்து—சேர்ந்தததி

44. செய்யநறை நெய்யொடுபாற் றிங்கடலுண் கார்பவளத்
துய்யவரை பெய்வதெனச் சூழ்ந்தாட்ட—மையுலவு

45. விண்ணா றிழிந்து விரிசடைமேல் வீழ்ந்ததெனத்
தண்ணார் திருமஞ் சனமாடி—நண்ணும்

46. இறைவியொடு மாகமத்தி னெல்லை கடவாக்
குறைவில் பெரும்பூசை கொண்டு—முறையின்

திருவாபரணம் புனைந்தருளுதல்

47. தனதுவிட மோருறுப்பைச் சார்ந்துபற்றிக் கொண்ட
தெனவதனை யுள்ளத்தி லெண்ணிப்—பனகமும்

48. ஒப்பற்ற மற்ற வுறுப்பொன் றினைத்தானும்
கைப்பற் றியதென்னக் காப்பணிந்து—மெய்ப்படுத்தி

---

42. வெறி - மயக்கத்தை. அப் பகையின் வேழம்-மன்மதனது யானை யாகிய இருளை. செறிகதிரோன் - சூரியன்.

41 - 2. நெற்றிக் கண்ணாகிய நெருப்பு மன்மதனை எரித்தமையின், அதன் இனமாகிய சூரியன் அவன் யானையாகிய இருளை அழித்தற்கு வந்தாற்போலத் தோன்றினு னென்பது கருத்து; முச்சுடருள் அக்கினியும் ஒன்றாதல் பற்றிக் கிளை யென்றார்.

43. இளங்கொம்பு - இளங்கிளை. மலர்கள் பரப்பிய பள்ளியாதலின் மணப்பள்ளி யென்றார். ததி - தயிர்.

44. நறை - தேன். தயிர் முதலிய நாற்கடல்களை யுண்ட மேகம் பவழ மலையின்மீது அவற்றைச் சொரிந்தாற்போல. அவற்றால் அன்பர்கள் திரு மஞ்சனம் ஆட்ட. மை - மேகம்.

45. விண்ணாறு - ஆகாய கங்கை; எழுவாய்.

46. இறைவியொடும் - ஆவுடை நாயகியோடும். முறையின் - முறை மையினால்.

47 - 8. ஒருறுப்பை - கண்டத்தை. அதனை - அங்ஙனம் பற்றிக்கொண் டதனை. பனகமும் - பாம்பும். காப்பு - கையணி.

திருக்கரத்தில் அணியப்பட்ட காப்பு, தன்னிடத்திலுண்டாகிய விடம் இறைவனுடைய திருக்கழுத்தைச் சார்ந்துள்ளது, அதுபோல் ஒப்பற்ற மற்றோர் உறுப்பைத் தான் கைப்பற்ற வேண்டுமென்று எண்ணி ஒரு பாம்பு சூழ்ந்துகொண்டது போன்றது என்றபடி.

49. முன்ன மெனது திசை வேய்ந்தனை முற்றுமினிப்
பொன்னுலக மென்னையும் பூணுகநீ—என்னத்

50. திருவரையைச் சுற்றிவலஞ் செய்ததெனச் செங்கேழ்
மருவியபொன் ஞடை வணைந்து—திரிபதகை

51. வாணுதற்குந் தோளிணைக்குந் தோற்ற மதியரவம்
பூணுதற்கும் வேணி பொருந்துதற்கும்—நாணி

52. இறங்க விறைகண் டிடையணைத்த தென்னத்
திறங்கவினக் கச்சுடைவாள் சேர்த்தி—நிறங்கிளரும்

53. கஞ்சமல ரோன்செருக்காற் காணு முடியுலகத்
தஞ்சலித்த வன்பர்க் கருள்வலென—விஞ்சிப்

54. படருமொளி கான்றரத்னப் பத்தி யிழைத்துச்
சுடரு மணிமகுடஞ் சூட்டி—விடமார்

55. தமதுபழி நீக்கத் தமிழ்மூவர் செஞ்சொல்
அமுத முடன்பழகி யந்த—அமுதை

56. விரவக் கவரவந்து மேற்கொண்ட தென்ன
அரவக் குழைகா தணிந்து—பரவையெழு

57. மைவிடத்தை நீல மணியென்று செம்மணிகள்
அவ்விடத்தைத் தாமு மடுத்தவெனக்—கவ்வை

58. ஒலிதருநீர் வேலி யுலகம் புகழப்
பொலிதருபொற் கண்டசரம் பூட்டி—இலகும்

---

49 - 50. வேய்ந்தனை - ஆடையாக உடுத்தினை; திசையாடை; 34. பொன்னுலகம்: எழுவாய். திரிபதகை - கங்கையினுடைய.

எனக்குரிய திசையை ஆடையாக உடுத்த தேவரீர், என்னையும் அணிந்துகொள்ள வேண்டுமென்று பொன்னுலகம் வந்து இடையைச் சூழ்ந்தாற்போலப் பொன்னுடையை அணிந்து.

51. மதியும் அரவமும்.

52. இறங்க - மதியும் அரவமும் இறங்க. இறை - சங்கரர். இடை அணைத்ததென்ன - இடையிற் சேர்த்துக்கொண்டாற்போல. கச்சுக்குப் பாம்பும், உடைவாளுக்கு மதியும் உவமை.

53. கஞ்சமலரோன் காணு முடி - பிரமதேவன் காணாத திருமுடியை.

54. விடம் ஆர் - விஷம் நிரம்பிய.

55. தமிழ் மூவர் - சைவ சமயாசாரியர் மூவர்.

56. கவர - கவர்தற்கு. அரவக்குழை - பாம்பாகிய குண்டலத்தை.

55 - 6. அரவக்குழைகள், விடத்தோடு கூடிய தமது பழியை நீக்கிக் கொள்ளுதற்குத் தேவாரமாகிய அமுதத்தோடு பழகும்பொருட்டு வந்து தங்கினாற்போன்றன.

57 - 8. கவ்வை ஒலிதரு நீர்வேலி; கவ்வை ஒலி - பெருமுழக்கம். "கௌவை நீர்வேலி" (பு. வெ. 83.) கண்டசரம் - செம்மணியாலாகிய கண்டசரம். அது கண்டத்திலுள்ள விஷத்தை நீலமணியென்று எண்ணிச் செம்மணிகளும் வந்து தங்கினாற்போன்றது.

59. ஒருசுடரோன் செம்பவளத் தோங்குமிரு வெற்பில்
இருசுடராய் வந்துதித்தா லென்னப்—பொருவில்
60. உயர்கனக ரத்னத் தொளிவிட் டெறிக்கும்
புயவலயந் தோண்மேற் புனைந்து—துயல்வந்து
61. மின்ன மணியகல மீது நிலவுதரித்
தன்ன புரிநூ லமைத்தருளிச்—சென்னிமிசைத்
62. தம்மிறையை வைத்த தயவினாற் றாரகையும்
அம்முறைமை நோக்கி யணிகென்று—செம்மை
63. திருந்தும் படியொழுங்காய்ச் சேர்ந்தவெனச் செவ்வி
பொருந்துந் தரளவடம் பூண்டு—வருந்தமுடி
64. தாங்குதிசை யெட்டினையுந் தத்தம் பொறைநீக்கி
ஓங்குதுகி லாக வுடுத்தவென—வாங்கிப்
65. பணிக்குலங்கள் நல்கியவப் பங்கயக்கைக் கென்ன
மணிக்கடகஞ் செங்கை வயக்கி—இணக்கும்
66. மருவரைக்கச் சின்ற மணியொளிசூழ்ந் தென்னத்
திருவுதர பந்தனமுஞ் சேர்த்தி—இருவரையும்
67. கண்ணாகக் கொண்டாய் கலைமதிபோ லென்னையும்வே
றெண்ணாது வேணி யிருத்துகென—எண்ணும்

---

59. ஒரு சுடரோன் - சூரியன். 60. துயல்வந்து - அசைந்து.

59 - 60. வாகுவலயத்திற்குச் சூரியன் உவமை.

61. அகலம் - மார்பு. புரிநூல் - பூணூல். பூணூலுக்கு நிலவு உவமை; "பெருகொளிய செஞ்சடைமேற் பிள்ளைப் பிறையின், ஒரு கதிரே போந் தொழுகிற் றொக்கும் - தெரியின், முதற்கண்ணான் முப்புரங்க ளன்றெரித் தான் மூவா, நுதற்கண்ணான் றன்மார்பி னூல்" (அற்புதத்திருவந்தாதி, 32.)

62. தம்மிறை யென்றது பிறையை. தாரகை - நட்சத்திரங்கள். அணிக - அணிந்தருள்வீராக 63. சேர்ந்த : முற்று. செவ்வி - அழகு.

62 - 3. முத்துக்கு நட்சத்திரம் உவமை : "வரித்த தண்கதிர் முத்த தாகி யிம் மண்ணை யெனத்துணி முற்றமேல், விரித்த பந்தர் பிரித்த தாமென மீனெளிர்த்தன வானமே" (கம்ப. கைகேசி சூழ்வினை. 50); "உடுவாம் வெண்முத்த மொழுக்கி" (தக்க. 182.)

64. தத்தம் பொறை - தங்கள் தங்களுக்குரிய பாரத்தை. உடுத்த - உடுத்தின.

65. பணிக்குலங்கள் - பாம்புகள். மணிக்கடகம் - மாணிக்கக் கடகங்களை.

64 - 5. கடகத்திலுள்ள மாணிக்கங்கள், தமது பாரமாகிய திசைகளை ஆடையாக வாங்கி உடுத்திய கைகளுக்கு அட்டநாகங்கள் செலுத்திய காணிக்கைபோல இருந்தன.

66. உதரபந்தனம் - வயிற்றிற் கட்டிக்கொள்ளும் ஒருவகை அணி. இருவரையும் - சந்திரனும் சூரியனுமாகிய எங்கள் இருவரையும்.

67. இருத்துக என.

68. கருத்தாற் கதிரிரவி கால்பிடித்த தென்னத்
திருத்தாட் சிலம்பு திருத்தி—அரக்கன்

69. புயங்கொண்ட வெள்ளிப் பொருப்பொளிபாய்ந் தென்னத்
தயங்குங் கருப்பூரஞ் சாத்திப்—பயங்கொளமுன்

70. கோட்டிய மேருவட குன்றம் புரத்தைநகை
வீட்டியதென் றேதானும் வேறுபயன்—காட்ட

71. ஒருவா சிகையுருவா யோங்கிய தென்னத்
திருவா சிகையிலங்கச் சேர்த்தி—மருவும்

72. தனதுகலை யெஞ்ஞான்றுந் தாங்கியவா றுட்கொண்
டனையதொரு கைம்மா றளிப்பப்—புனிதன்

73. நிரந்தவுருத் தாங்கமதி நின்றதென வட்டம்
பரந்தநிலைக் கண்ணாடி பார்த்துத்—தெரிந்து

74. வழுத்து மொருநான் மறையு மதுரம்
பழுத்ததமிழ் மூவரிசைப் பாட்டும்—முழுத்தவன்பின்

---

68. கதிர் இரவி - கிரணத்தையுடைய சூரியன்.

66 - 8. கண்ணகைக்கொண்ட எங்க ளிருவரிற் சந்திரனை மட்டும் முடிமேல் அணிந்தீர்; என்னையும் அப்படியே அணிந்துகொள்ள வேண்டுமென்று திருவடியைப் பிடித்துக்கொண்ட சூரியனைப்போல விளங்கியது மாணிக்கச் சிலம்பு. அரக்கன் - இராவணன்.

69. கருப்பூரம் - பச்சைக் கருப்பூரம்; அதற்குக் கைலையின் ஒளி உவமை. பச்சைக் கருப்பூர மணிதல்: "காந்தி, திவளப் பொலிவதெனச் செந்திருமெய் யெங்கும், தவளக் கருப்பூரஞ் சாத்தி" (திருவாரூருலா, 66-7); "கற்பூரச், சுண்ணம் பனிநீரிற் றோயும் பசுங்களபம், விண்ணும் புவியும் விடா யாற்ற" (சொக்க. உலா. 59.)

70. மேருவட குன்றம் - மேருமலை; எழுவாய். புரத்தை - முப்புரத்தை. நகை - புன் முறுவல்.

71. வாசிகை - ஒருவகை மாலை; திருவாசிகை.

70 - 71. நம்மை வில்லாக வளைத்தும் இறைவன் நம்மைப் பயன்படச் செய்யவில்லை; அவரது நகை முப்புரங்களைச் சுட்டது; நாம் வேறு பயனைக் காட்டவேண்டுமென் றெண்ணி, மேருமலை ஒருவகை மாலையாக வந்து அவரைச் சார்ந்தது போன்றுள்ளது திருவாசிகை.

72. கலை - பிறையை. உட்கொண்டு - சந்திரன் எண்ணி. புனிதன் - சிவபெருமான்.

73. நிரந்த - நிரம்பிய.

72 - 3. சந்திரன் நம்முடைய கலையை எப்பொழுதும் இறைவன் தாங்கியிருத்தற்கு ஏதேனும் பிரதியுபகாரம் செய்யவேண்டுமென் றெண்ணி அவருடைய திருவுருவ முழுவதையும் தாங்குதற்கு வந்து நின்றாற் போன்றது நிலைக்கண்ணாடி.

74. மூவர் இசைப்பாட்டு - தேவாரம்.

75. அஞ்சலிசெய் வாதவூ ராளிதிரு வாசகத்தின்
செஞ்சொன் முழுதுஞ் செவிசாத்தி—நஞ்சமுண்ட

உடன்வருவோர்கள்

76. எந்தை யருளுக வென்று கனிக்குவலம்
வந்தவொரு கோட்டு மதகளிறும்—முந்துசமர்

77. பற்றியடு வெஞ்சூர்ப் பகைவே ரறத்தடிந்து
வெற்றிதரு செங்கைவடி வேலோனும்—முற்றுமன்பால்

78. வந்தனை செய்யும் வழிபாட் டினைத்தடுத்த
தந்தைதிருத் தாளெறிந்த தண்டியும்—சிந்தைமகிழ்

79. தேம்பா கனையவிசைச் செந்தமிழா லங்கத்தைப்
பூம்பாவை யாக்கிய பூசுரனும்—வேம்படிக்குக்

80. கூடிப் பறிதலைவன் குண்டரிட்ட நீற்றறையைப்
பாடிக் குளிர்வித்த பாவலனும்—ஏடவிழ்ந்து

81. புள்ளை யழைக்கும் புனலின் முதலைவாய்ப்
பிள்ளை யழைக்கும் பெருமானும்—தெள்ளியசொற்

82. செம்பாவை நாவாற் றெளித்து வடித்ததிரு
அம்பாவை பாடியபே ரன்பினனும்—பைம்புனல்சூழ்

83. கூடலின் முக்கட் குழகன்வர விட்டவொரு
பாட லிசைபுனைந்த பார்த்திவனும்—பீடுகெழு

75-6. வாதவூராளி - திருவாதவூரடிகள். எந்தை : அண்மை விளி. கனிக்கு - மாங்கனிக்கு. மதகளிறு - விநாயகமூர்த்தி.

77. சூர்ப்பகை - சூரனாகிய பகையை. அவன் மாமரமாகி நின்றமையின் வேரறத் தடிந்தென்றார் ; பரி. 5 : 4, பரிமேல்.

78. தண்டி - தண்டீச நாயனார்.

79. தேம்பாகு - வெல்லப்பாகினை. அங்கத்தை - என்பினை. பூசுரன் - திருஞான சம்பந்தமூர்த்தி நாயனார் ; 154-5ஆம் கண்ணி பார்க்க. வேம் படிக்கு - வேகும்வண்ணம்.

80. பறிதலை வன் குண்டர் - சமணர். நீற்றறை - சுண்ணாம்பறை. பாவலன் - திருநாவுக்கரசு நாயனார். ஏடு அவிழ்ந்து - பூமடல்கள் விரியப் பெற்று.

81. புள்ளை - வண்டுகளை. பெருமான் - சுந்தரமூர்த்தி நாயனார்.

82. செம் பாவை - செவ்விய பாட்டுக்களை. திரு அம்பாவை - திரு வெம்பாவையை ; திருவெம்பாவை திருவம்பாவையெனவும் வழங்கும். பாவைப் பாட்டென்று ஒருவகை இசைப்பாட்டு, பழைய நூல்களில் வழங் கும் ; அதனை நினைந்து இங்ஙனம் கூறினார்போலும். அன்பினன் - திருவாத வூரடிகள்.

83. கூடல் - மதுரை. முக்கட் குழகன் - சோமசுந்தரக் கடவுள். பாடல் - "மதிமலி புரிசை" என்னும் திருமுகப்பாசுரம். பார்த்திவன் - சேரமான் பெருமாணாயனார்.

84. காவேந் தளித்தவந்தக் கண்ணுதலைத் தென்கமலைப்
பூவேந்த வைத்த புகழோனும்—நாவேந்து
85. பாமுத் தமிழ்மூவர் பாடியநெல் வேலிவரை
மாமுத்தை வேண்டி வளர்த்தோனும்—தாமுற்றும்
86. ஆற்றுந் தவநெறியா லைம்புலனும் வென்றுகதி
ஏற்ற முனிவ ரெழுவோரும்—நீற்றொளியால்
87. ஆழ்ந்ததிருப் பாற்கடல்சீ ராசைதனக் கொத்ததெனச்
சூழ்ந்ததிருத்தொண்டத்தொகைப்பெருக்கும்—போந்திடவே
88. ஆர்த்தாக்கு மண்டத் தடுக்கையெல்லாம் பந்தாடிப்
பேர்த்தாடும் பூதப் பெரும்படையும்—கூர்த்தறிவால்
89. வானவ ரொக்க மகமியற்று வேதியரும்
தான சமயத் தலைவர்களும்—ஏனோரும்
90. எங்கு நெருங்கி யெழுநந்தி கைப்பிரம்பால்
அங்கங் கணியா யமைத்தருளக்—கங்கையொடும்
91. என்மானை யுஞ்சடைமீ தேந்துமென வேத்துதற்குப்
பொன்மா லிமயவரை போந்ததென—முன்னம்

---

84. காவேந்து - இந்திரன். கண்ணுதலை - ஸ்ரீதியாகேசரை. கமலை - திருவாரூர். புகழோன் - முசுகுந்த சக்கரவர்த்தி. கமலைப் பூ - திருவாரூராகிய தாமரைப்பூ: திருவாரூர் பூமிதேவியின் இதயகமலமாதலின் இங்ஙனம் கூறினர்; "மேதினிக், காதன் மங்கை யிதய கமலமா, மாதொர் பாகனு ராரூர் மலர்ந்ததால்" பெரிய. திருமலைச். 34.

85. நெல்வேலி வரை மாமுத்தை - திருநெல்வேலியில் மூங்கிலிற் றோன்றிய சிவபெருமானை. வேண்டி வளர்த்தோன் - முழுதுகண்ட ராம பாண்டியன். இவ் வரலாறு, திருநெல்வேலித் தலபுராணம், வேண்ட வளர்ந்த மகாலிங்க சருக்கத்தாலும், வேணுவன புராணம், வேண்ட வளர்ந்த சருக்கத் தாலும் விளங்கும்.

87. சீராசை - சங்கர நயினர் கோயில்; "சீராசைச் சங்கரனே", "நந்துதவழ் சீராசை நன்னகரும்" (246,262) என்பர் பின். இது இராச புரமென்பதன் மரூஉ.

86-7. தொண்டர் கூட்டத்திற்குப் பாற்கடல் உவமை; "அரந்தை தீர்க்கு மடியவர் மேனிமேல், நிரந்த நீற்றொளி யால்......பரந்த வாயிரம் பாற்கடல் போல்வது" (பெரிய. திருக்கூட்டச் சிறப்பு, 3); "மிக்க திரு நீற்று மெய்த்தொண்டர் வெள்ளவொளி, புக்கதிருப் பாற்கடலே போல் விளங்க" (சொக்க. உலா. 80); "புரமெ ரிந்து விழுந கைத்த புனித னன்ப ரெண்ணிலார், வரமி குந்த மேனி நீறு மறுகி லங்கு மொளிகள்பாற்,பரவை முன்பிரிந்த மெய்ப்ப தஞ்சலிக்க ணேயமே, விரவி வந்து காண வெங்கு மேவி ரேட லொக்குமே" (சிதம்பர. துன்மதச். 48.)

88. ஆக்கும் - உண்டாக்குகின்ற. ஆர்த்துப் பந்தாடி. கூர்த்த அறி வால் - மிக்க அறிவால்; கூர்த்து அறிவாலெனப் பிரித்து அறிவால் மிக் கெனப் பொருள் கொள்ளலுமாம்.

89. மகம் - யாகம்.

90. நந்தி : எழுவாய். அங்கங்கு - அவ்வவ்விடத்தில்.

91. என்மானையும் - என்னுடைய குமாரியாகிய உமாதேவியையும்.

திருத்தேரில் எழுந்தருளல்

92. பொலங்கிரியைச் சூழ்ந்த பொருப்பேழு தானை
இலங்குமணிப் பொற்றடந்தே ரேறி—அலங்கல்
93. முடியினிறை திங்கள் முடித்தனஃதே வெண்கண்
நெடிய கவிகை நிழற்றக்—கடிமலரோன்
94. ஓரோ திமமா யுணர்தற் கரியதெனை
ஈரோ திமமா யெழுந்தோங்கித்—தார்முடிக்கீழ்
95. மெய்விரையப் போவதுவும் மீள்வதுவும் போன்றவென
மைவிழியார் வெண்சா மரையிரட்டப்—பெய்தழலால்
96. காயு மதியைக் கடிவதற்குக் காண்சடைமேல்
வேயுரக முண்ண விருந்தளிப்ப—தேயுமெனப்
97. பூங்காவி யங்கட் புளகமுலை மாதரிரு
பாங்கால வட்டம் பணிமாறத்—தீங்கொழிய
98. அன்றெடுத்த கன்மாரிக் காக வருவிநெடுங்
குன்றெடுத்த வென்றிக் கொடி யோங்க—நன்றிதரு
99. பால ரிருவர் பகரா குவுமயிலும்
சீல ரிருவர் சிறைப்புள்ளும்—வேலையெழும்
100. பன்னிருவர் தேரும் பதினொருவர் வெள்ளேறும்
பொன்னுலகப் புத்தேள்வெண் போதகமும்—முன்னிருவர்

90-92. இமயமலை தேருக்கு உவமை. கங்கையைப்போல என் மகளையும் திருமுடிமேற் கொள்ள வேண்டுமென்று இமயமலை வந்ததுபோன்றுள்ளது தேர்.

93. வெண்கொற்றக் குடைக்கு முழுத் திங்கள் உவமை; "திங்களைப் போற்றுதும் திங்களைப் போற்றுதும், கொங்கலர் தார்ச்சென்னி குளிர்வெண் குடைபோன்றிவ், வங்க ணுலகளித்த லான்" (சிலப். 1 : 1-3.) என்ன - என்று எண்ண.

94-5. ஓர் ஓதிமமாய் - ஒற்றை அன்னப்பறவையாய். அரியதெனை - அரியது திருமுடியென்று. 'யாம் ஓர் அன்னப்பறவை வடிவங்கொண்டு தேடச் சென்றமையால் முடி காணப்படவில்லை' என்று நினைந்து பிரமதேவன் இரண்டு அன்னப்பறவைகள் வடிவங்கொண்டு வந்தாற்போல இருந்தன வெண்சாமரைகள்.

96-7. காயும் மதியை - தலைவனைப் பிரிந்தவிடத்துச் சுடும் சந்திரனை. ஆலவட்டம் - ஒரு விருது.

98. அன்று - கண்ணனாக அவதரித்த அக்காலத்தில். குன்று-கோவர்த்தனகிரியை. திருமாலாகிய இடபக் கொடி ஓங்க.

99. பாலர் இருவர் - விநாயகரும், முருகவேளும். ஆகு - பெருச்சாளி. சீலர் இருவர் - திருமாலும், பிரமனும். சிறைப் புள் - கருடனும் அன்னப் பறவையும். வேலை - கடலில்.

100. பன்னிருவர் - பன்னிரண்டு சூரியர். பதினொருவர் - ஏகாதச ருத்திரர். ஏறு - இடபம். புத்தேள் - இந்திரன். வெண்போதகம் - வெள்ளை யானை. இருவர் - அசுவினிதேவர்களாகிய மருத்துவர் இருவர்.

101. எண்மர் முதலோ ரிவர்மா னமுமநங்கன்
தண்மலயத் தென்றற் றடந்தேரும்—திண்மையுரம்

102. பெற்றதிசை வேந்தர் பிறங்க வவரவருக்
குற்றதிறல் வாகனமு மூர்ந்துவரப்—பொற்றொடி

103. மாத ரெழுவரும்பூ மாத ரிருவரும்வெண்
போதின் மடவர லும் போர்மகளும்—ஆதரவால்

104. ஏவுடைய் மைக்க ணெறிபூங் குழையுடைய
ஆவுடைய செந்தே னருகுவர—ஓவிலிசைக்

105. கின்னரர் கிம்புருடர் கேசரி னவசித்தர்
பன்னக வேந்தர் பணிகருடர்—முன்னடப்ப

இசைக் கருவிகள்

106. எண்ணத் தகுமா யிரங்கரத்தா லோர்வாணன்
வண்ணக் குடமுழவம் வாசிப்பத்—தண்ணுமை

101-2. எண்மர் -எட்டுவசுக்கள். இவர்தல் - விரும்புதல். மானம் - விமானம். அநங்கன் - மன்மதன். மலயம் - பொதியில் மலை. பிறங்க - விளங்க.

103. மாதவர் எழுவர் - அபிராமி முதலிய எழுவர். பூமாதர் இருவர்- பூமியாகிய மாது, தாமரைப்பூவில் எழுந்தருளியுள்ள திருமகள் என்னும் இருவரும். வெண்போதில் மடவரல் - கலைமகள். போர்மகள் - வீரலட்சுமி.

104. ஏ - அம்பு. மைக்கண்ணால் எறியப்படுகின்ற. ஆவுடைய செந்தேன் - ஆவுடைய நாயகி; "நிறைகருணை யாவுடைத் தேன்" (143.)

103-4. எழுவரும், இருவரும், மடவரலும், போர்மகளும், ஆவுடைய நாயகியின் அருகே வர.

105. நவசித்தர் - சத்தியநாதர் முதலிய ஒன்பதின்மர். பன்னக வேந்தர் - நாகவரசர். பணிகருடர் - பணிகின்ற கருடர்.

106. வாணன் - முப்புரத் தலைவர்களுள் ஒருவன்; "மூவெயில் செற்ற ஞான்றுய்ந்த மூவரி லிருவர் நின்றிருக் கோயிலின் வாய்தல், காவ லாளரென் றேவிய பின்னை யொருவனீ கரி காடரங்காக, மானை நோக்கி யோர் மாநட மகிழ மணிமுழா முழக் கவ்வருள் செய்த, தேவ தேவநின் றிரு வடி யடைந்தேன் செழும்பொழிற்றிருப் புன்கூரு ளானே" (தே. சுந்தர.); "மூன்றுபுரத் தொன்றி லரசுடை வாணன், மேருக் கிளைத்த தோளா யிரத் தொடும், எழுகடல் கிளர்ந்த திரள்கலி யடங்க, முகம்வே றிசைக்குங் குட முழா விரட்ட", "அருச்சனை விடாதங் கொருப்படு மூவரில், இருவரைக் காவல் மருவுத லீந்து, மற்றொரு வற்கு வைத்தநட மறிந்து, குடமுழ விசைப்பப் பெறுமரு ணல்கி" (கல். 25 : 31-4; 29 : 29-32); வாணாசுரனு மாம்; "போக்கு மாயவன் புணர்ப்பையும் மிருண்மலப் புணர்ப்பையுங் கடந்தெம்மைக், காக்கு நாயக னருச்சனை விடாதருட் கதியடைந் துளவா ணன், தாக்கு நேர்பட வாயிரங் கரங்களாற் றொம்மென முகந்தோறும், தாக்க வேறுவே றெழுகுட முழாவொலி தடங்கட லொலிசாய்ப்ப" (திருவிளை. திருமணப். 105.)

107. மிக்க முருடு விசித்ததுடி-பேரிகை
தக்கை தடாரி தகுதாளம்—கொக்கரி

108. தொண்டக மாதியாச் சொல்லிய பல்லியங்கள்
அண்ட முகடதிர வார்ப்பெடுப்பக்—கொண்ட

திருச்சின்னம்

109. அருவுருவ மாகிநின்ற னன்றிருவ ராகி
மருவுருவங் காட்டவந்தான் வந்தான்—உருகித்

110. தொழுதிசைப்ப மாமதுரைத் தொன்னகர்செல் லாது
வழுதி வணங்கவந்தான் வந்தான்—பழுதிற்

111. பொருந்தும் பெரும்பிணிக்கோர் புற்றி னிடத்து
மருந்து தரவந்தான் வந்தான்—திருந்துபுகழ்

112. மையிலகு கந்தரன் வந்தான்வந் தானென்று
செய்ய திருச்சின்னஞ் சேவிப்பத்—துய்ய

113. பணியரவப் பூணன் பவனிதான் செம்பொன்
மணிநெடு வீதி வரலும்—அணிபசும்பொன்

குழாங்கள்

114. ஆர்ந்த தருநாட் டரிவையரு நீளுரகர்
சேர்ந்ததிரு நாட்டுத் தெரிவையரும்—கூர்ந்திசையேழ்

115. செங்கை மகரயாழ் சேர்த்திசைக்கும் விஞ்சையர்தம்
மங்கையருங் கந்திருவ மாதரும்—அங்கணியாய்

---

107. முருடு - ஒரு வாத்தியம். துடி - உடுக்கை. கொக்கரி - ஒரு வாத்தியம்; இது கொக்கரை யெனவும் வழங்கும்.

109. அரு உருவம் ஆகிநின்றன் - சதாசிவமூர்த்தியாகிநின்றருளியவர். இருவராகி - சங்கரரும் நாராயணருமாகி. காட்ட - உமாதேவியாருக்கும் சங்கபற்பருக்கும் காட்ட.

110. வழுதி - உக்கிர பாண்டியன்.

111. புற்றினிடத்து மருந்து தர - வீரசேனனென்னும் ஒரு சோழவரசனுடைய பிணிநீங்குதற்குப் புற்றுமண்ணாகிய மருந்தைத் தர.

112-3. கந்தரம் - கழுத்து. துய்ய - தூய; தூய்மை யென்னும் பண்புப்பெயர் முதல்குறுகியும் வரும். பணி அரவம் - படத்தை யுடையதாகிய பாம்பு.

114. தரு நாடு - சுவர்க்கலோகம். உரகர்சேர்ந்த திரு நாடு - நாகலோகம்; அதுவும் இன்பத்திற்குரியஇடம்: "நாகநீ ணகரொடு நாகநாடதனொடு, போகநீள் புகழ்மன்னும் புகார்நகர்" (சிலப். 1 : 21-2.) கூர்ந்து - மிக்கு.

115. மகரயாழ் - மகரவீணை. விஞ்சையர் - வித்தியாதரர். அணியாய் - வரிசையாய்.

114-5. இசை யேழ் இசைக்கும்.

116. நின்று பரவ நெடுநீர்த் துணை தரங்கம்
துன்று பரவைநிலத் தோகையர்கள்—மின்றிகழும்
117. மஞ்சுலவு மேரு வரைமா னதவாவிச்
செஞ்சுடிகை யன்னத் திரளென்ன—அஞ்செழுத்தோன்
118. பாதித் திருவுருவம் பச்சை கலந்துருகப்
பேதித்தோன் சேனைப் பெருக்கென்னப்—போதுற்ற
119. தேனென்ன மாலிமயத் தேவி விழியையின
மானென்று வந்தசில மானென்னத்—தானமுற்றும்
120. காப்பத் திரண்ட களத்திருளைக் காரென்ன
வாய்ப்பத் திரண்ட மயிலென்ன—ஆர்ப்பளிசூழ்
121. அங்கமலத் தானை யளிக்குந் திருவுந்தித்
துங்க விடையானைச் சூழ்ந்து—செங்கைவளை
122. அன்றணிந்த நீரே யணியாது நீக்குவதென்
என்றியம்பா நின்ற வெனவிரங்கக்—குன்றவிற்போற்
123. பொன்பொலியச் செய்தாலப் பொன்வரைபோ லக்குழையீர்
என்பனபோற் கொங்கை யிணைபணைப்ப—அன்பருக்கே
124. ஏற்குமிமை யாமை யெமக்குமளித் தீரெனல்போல்
வேற்குநிக ரான விழிநோக்கப்—பாற்கரன்சூழ்
125. நீலமணி மேடையினு நீணிலா முற்றத்தும்
கோல மரகதச்செய் குன்றத்தும்—சாலவொளிர்
126. ஆணிக் கனகத் தணியா டரங்கத்தும்
மாணிக்கத் தூணிறுத்து மாடத்தும்—சேணுற்ற

116-7. பரவை - கடல். மேருவரை மானத வாவி - மேரு மலையிலுள்ள மானதப் பொய்கை. சுடிகை - உச்சிக்கொண்டை. அன்னத்திரள் - அன்னப்பறவையின் கூட்டம்.

118-9. பேதித்தோன் - மன்மதனுடைய. சேனைப்பெருக்கு - சேனையாகிய மகளிர் கூட்டம். போதுற்ற தேன் - திருமகள். இமயத்தேவி - ஆவுடைய நாயகியின். தானமுற்றும் - உலக முழுவதையும்.

120. இருளை - விடத்தை. ஆர்ப்பு அளி - ஆரவாரித்தலை யுடைய வண்டுகள்.

121. கமலத்தானை - பிரமதேவனை. திருவுந்தித் துங்க விடையானை உந்தியையுடைய திருமாலாகிய இடபத்தையுடையவனை ; உந்தி-கொப்பூழ்.

122. அன்று - மதுரையில் நீர் வளையல் விற்ற அக்காலத்தில். குன்றவில்போல் - வில்லாகிய மேருமலையைப்போல.

121-2. வளை இரங்க.

123. பொன் வரைபோல் - மேருமலையைக் குழைத்ததுபோல. பணைப்ப - பருப்ப. அன்பருக்கு - தேவர்களுக்கு.

124. பாற்கரன் - சூரியன்.

125. செய்குன்றம் - கட்டுமலை.

126. ஆடரங்கம் - நாடகசாலை.

127. தென்ற லுலவு சிறுசா ளரத்துமம்பொற்
குன்ற மனையநெடுங் கோபுரத்தும்—நின்றுதனி
128. ஆதிப் பொருளை யடிவணங்கி வெண்ணிலவார்
பாதிப் பிறையும் படர்சடையும்—சோதித்
129. திருமுகமு மெண்டோளுஞ் செம்பவள மெய்யும்
மருமலர்ப்பூங் கொன்றையணி மார்பும்—இருளெறித்துக்
130. காட்டுந் திருநீல கண்டமுங் கண்ணுதலும்
சூட்டுங் கனகச் சுடர்முடியும்—கோட்டு
131. நிலவு பரப்புதிரு நீற்றொளியுங் காதிற்
குலவு மரவக் குழையும்—உலவுமிரு

குழாங்களின் கூற்று

132. கண்ணுங் கருத்துங் களிகூர் தரநோக்காப்
பண்ணுங் கனியும் பணிமொழியீர்—கண்ணுதலான்
133. வந்துவார் பூண்முலைக்கு மைவிழிக்கும் பொன்னுமுத்தும்
தந்தவா றின்று தருமென்பார்—ஐந்தலரான்
134. தண்டவார் வில்லிற் றளராத நாவெனை
கொண்டவா றென்கொல் குறித்தென்பார்-ஒண்டொடியாள்
135. சேருமிடப் பாகமன்றிச் சென்றுவலப் பாகநின்று
பாருமென நோக்கும் படிசெய்வார்—கூருநோய்
136. ஆற்று மருந்தளிப்பா னுதலாற் காமநோய்
மாற்று மருந்தளிப்பான் வந்தென்பார்—ஏற்றமயல்

---

127. சாளரம் - பல்கணி.

128. பாதிப்பிறையும் படர்சடையும்: "ஆதிநீ யருளென் றமரர்கள் பணிய வலைகடல் கடையவன் றெழுந்த, பாதிவெண் பிறைசடை வைத்த வெம் பரமர் பாம்புர நன்னக ராரே", "பாதி வெண்பிறைப் பாகூ ரடிகளே" (தே.); "மதிப், பாதிவிடங் காகமடக்கண் பார்" (திருவாரூர் நான்மணி. 1.)

131. அரவக் குழை - பாம்பாகிய குண்டலம்.

133. வார்பூண் - கச்சை அணிந்த. பொன் - பசலை நிறம்; முத்து - கண்ணீர்த்துளி; "கதிர்முலைகண், மானக் கனகந் தருமலர்க் கண்கண்முத் தம்வளர்க்கும்" (திருச்சிற். 335.) இன்று தந்தவாறு தரும் என்பார். ஐந்து அலரான் - ஐந்து மலர்ப் பாணங்களையுடைய மன்மதன்.

134. தண்டவார் வில் - கருப்பந்தண்டாகிய நீண்ட வில். ஒண்டொடியாள் - ஆவுடைய நாயகி.

135. கூரும் நோய் - மிக்க நோயை.

135. இடப்பக்கத்தே சென்று தரிசித்தால் அம்பிகை அறிந்து சினத்தல் கூடுமென்பது கருத்து.

136. மருந்து - புற்று மண்ணாகிய மருந்தை. மாற்று மருந்து: மருந்து - பரிகாரம்; "மருந்தில் கூற்றம்" (புறநா. 3 : 12); "மற்றிந்நோய் தீரு மருந்தருளா யொண்டொடீ" (கலி. 60 : 18.) மயல் - காமமயக்கத்தை.

137. விண்டுபசுந் தார்வாங்கி மீண்டுவரப் புன்னைவன
வண்டு களையழைத்து வம்மென்பார்—உண்டசுவை
138. அன்னத்தை நஞ்சென் றயராது நாகசுனை
அன்னத்தைத் தூதுக் கழையுமென்பார்—முன்னிட்ட
139. வெற்றி தருஞ்சிலைக்கை வேடன் பகைமுடிக்க
நெற்றிவிழி யைத்தொழுது நில்லுமென்பார்—கற்றைநிலாப்
140. பூத்த மதிவெதுப்பும் போதுசங்க பற்பரென
வாய்த்த வரவை வழுத்துமென்பார்—ஏத்தியெதிர்
141. எங்கட் கரசே யிமையோர் பெருமானே
திங்கட் கொழுந்தணிந்த செந்தேனே—பங்கொருபாற்
142. செக்கச் சிவந்த செழுஞ்சுடரே மாலையொரு
பக்கத் திருத்தும் பழம்பொருளே—நெக்குருகி
143. நேசிக்கு மன்பா னிறைகருணை யாவுடைத்தேன்
பூசிக்கும் புன்னைவனப் பூங்கனியே—வீசும்
144. கலைமதியின் பாலிருப்பக் காத லுடையேம்
கலைமதிகொண் டேகல் கடனோ—சிலையின்
145. வரைநா ளுமக்கிருப்ப மற்றெமக்கே யென்று
வரைநாண் கவர்தல் வழக்கோ—உரையுமென

137. விண்டு - சொல்லி. வம் - வாரும்; "கதுமெனக் கரைந்து வம்மெனக் கூஉய்" (பொருந. 101) என்பதையும் அதனுரையையும் பார்க்க.

138. அயராது - நாம் வருந்ாதபடி.

139. வேள் தன் பகை.

140. சங்க பற்பரைத் தொழுதால், அவர்கள் சந்திரனை விழுங்கி விடுவார்களென்பது கருத்து.

141. திங்கட் கொழுந்து - பிறையை.

142. செக்கச் சிவந்த - மிகச்சிவந்த; "செக்கச் சிவந்த கழுநீரும்" (கலிங்கத். 54); "செக்கச் சிவந்த செழுஞ்சுடரைப் பேதமறப், பக்கத்தில் வைத்த பரிவினன்" (குறுங்குடி நம்பி உலா, 16-7.) மாலை ஒரு பக்கத் திருத்தும் பழம் பொருள் - சங்கர நாராயணர். நெக்கு - மனம் நெகிழ்ந்து.

143. ஆவுடைத்தேன் - ஆவுடைய நாயகி.

144. கலைமதி - கலைகளையுடைய சந்திரன். கலைமதி கொண்டு - ஆடையையும் அறிவையும் கைக்கொண்டு; கலை - பொதுமகளிர்க் குரிய அறுபத்து நான்கு கலைகளுமாம்; "எண்ணெண் கலையோ ரிருபெரு வீதியும்", "எண்ணான் கிரட்டி யிருங்கலை பயின்ற, பண்ணியன் மடந்தையர்" (சிலப். 13 : 167, 22 : 138-9); "யாழ்முத லாக வறுபத் தொருநான், கேரிள மகளிர்க் கியற்கையென் றெண்ணிக், கலையுற வகுத்த காமக் கேள்வி" (பெருங். 1. 35 : 84-6); மணிமேகலை, 2 : 18-32 ஆம் அடி முதலியவற்றாலும் இது விளங்கும்.

144-5. சிலையின் - வில்லினிடத்தே. வரைநாண் - வரையப்பட்ட நாணமாகிய குணத்தை.

146. ஊறுபட நெஞ்ச முடைவுபட வெவ்வாறு
வேறுபட மடவார் வேறொருத்தி—தேறித்

பேதை

147. தரியாது பூவையையுந் தாயரையும் விட்டுப்
பிரியா விளம்பருவப் பேதை—தெரியாது
148. சொன்மலையச் சொல்லுமுறை தோன்று விளங்கிள்ளை
தென்மலைய நீங்காச் சிறுதென்றல்—மென்மதுரக்
149. கண்டு படாத கரும்பு முகையவிழா
வண்டுபடாப் புன்னை வனத்தரும்பு—விண்டு
150. நிலவா மதிப்பிள்ளை நீள்வரையை விட்டுக்
குலவாத வாடைக் கொழுந்து—சுலவி
151. நடியாத பைந்தோகை நாக சுனையிற்
படியாத வோதிமப் பார்ப்பு—முடியாத
152. வானரசு நாடி மகமியற்றி ஞொருவன்
தான முனிவனிட்ட சாபத்தால்—ஆனமகம்
153. ஈட்டியு மெய்தா வியல்புபோற் கூடியும்
கூட்டி முடியாக் குழலினாள்—வாட்டியுயிர்
154. நீக்கா துலகை நெருக்கா துறவுருந்த
நோக்காது நோக்குபொது நோக்கினாள்—சேர்க்குமங்கம்
155. முன்ன முருவாய் முதுமறையோன் முன்வந்த
தென்ன விறந்தாங் கெழுமெயிற்றாள்—மன்னர்

---

146. மடவார் வேறுபடா நிற்க.

147. பூவை - நாகணவாய்ப்புள்.

148. மலைய - மாறுபட. மலையம் நீங்கா - பொதியின் மலையைவிட்டு நீங்காத.

149. கண்டு - கற்கண்டு. முகைஅவிழா அரும்பு, வண்டுபடா அரும்பு எனக்கூட்டுக. அவிழா - அவிழ்த்தெனப் பொருள்கொண்டு, அவிழ்த்து வண்டுபடா அரும்பெனலுமாம். விண்டு - ஆகாயம்; வெளிப்பட்டு எனலுமாம்.

150. நீள்வரை - மேருமலை; வாடை மேருமலையில் தோன்றுவ தென்பர்; "வேகவனல், கொட்டுமின வாடைக் கொழுந்தையஞ்சிப் பொன்வரையை, விட்டுவெள்ளி வெற்பை விரும்பியதும்" (243 -4) என்பர் பின்; "விண்டுமிரெ லாநடுங்க வாடைதரு மேருவினும்" (**சிவஞானயோகிகள் சரித்திரம்**, 8.) சுலவி - சுற்றி.

151. தோகை - மயில். ஓதிமம் - அன்னம்.

152. ஒருவன் - நகுடன். தானம் - முதலிடத்தைக் கொண்ட. முனிவன் - **அகத்திய முனிவர்.**

154. அங்கம் - என்பு.

155. மறையோன் **திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார்.**

156. இனம்போ லுதவமனத் தெண்ணிப் புதைத்த
தனம்போ லமைந்த தனத்தாள்—மனங்கூம்பப்
157. பூவையுரை கேட்டந்தப் பூவை யுரைபயிற்றிப்
பாவையுரை யென்று பகருவாள்—ஓவியத்தை
158. நானேற்ற பாங்கியென நாடியணி பூட்டவது
தானேற்றுக் கொள்ளாத் தகைமையால்—தேனேற்ற
159. அன்ன தொருபிழைகண் டன்புவையா துன்னொடினி
என்ன விளையாட் டெனமுனிவாள்—மின்னனையார்
160. காட்டுமொரு கஞ்சனையிற் கண்டதன்னை யாரென்று
கேட்டதன்கைப் பாவைதனைக் கேட்டழுவாள்—கூட்டித்
161. தழைத்த கதிரெறிக்குந் தண்டரள வண்டல்
இழைத்துவிளை யாட்டயரு மெல்லை—குழைத்தநறும்
162. புன்னைப் பொதும்பரின்கீழ்ப் புற்றூ டினிதமர்ந்த
முன்னைப் பொருளான் முழுமுதலான்—பின்னைப்
163. பொருமருங்கு லாவுடைய பூங்கொம் பனையாள்
ஒருமருங்கு பச்சை யொளியான்—இருமருங்கும்
164. ஆடகநீள் குன்றத் தகல்வா னளக்குமணி
மாடநெடு வீதியின்கண் வந்திடலும்—கூடிமணிப்
165. பந்துகழங் காடாது பாடாது பைந்தொடியார்
வந்து வணங்க வணங்கினாள்—எந்தை
166. வடிந்த திருக்குழையும் வண்பவளச் செங்கேழ்
படிந்த வடிவழகும் பார்த்தாள்—அடர்ந்தசடை
167. சூட்டுநதித் தண்ணந் துறையினிலென் பாவையைநீர்
ஆட்டு மெனலு மணங்கனையார்—நாட்டமுற்ற
168. பங்கை யகலாப் பராசத்தி போலுமொரு
மங்கையவ ளென்று மறுத்துரைத்துச்—செங்கையணைத்

---

157. பூவை - நாகணவாய்ப் புள்ளின். பயிற்றி - பாவைக்குக் கற்பித்து; பாவை: விளி. ஓவியத்தை - சித்திரத்தை.

158. அது - அந்தச் சித்திரமானது.

160 - 61. கஞ்சனை - கண்ணாடி. அதன் - அந்தப் பிரதிபிம்பத்தின். தரள வண்டல் இழைத்து - முத்தாகிய மணலாற் பாவை செய்து; இப் பாவை வண்டலம்பாவையென்று வழங்கும்; "வண்டற்பாவை" (ஐங்குறு. 124); "வாலிழை மடமங்கையர், வரிமணற் புனைபாவைக்கு" (புறநா. 11: 2-3); "வன்பாற் றிரண்முத்த வண்டலின் மேல்வரு மேதமஞ்சி" (தஞ்சை. 28.) எல்லை - காலத்தில்.

162. பொதும்பர் - சோலை; மரச்செறிவு. புற்றூ டினிதமர்ந்த முன்னைப் பொருளான் - வன்மீக நாதர்.

164. ஆடகநீள் குன்றத்து - மேரு மலையைப்போலவே.

167. நதித்துறை - கங்கைத் துறையில்.

168. பராசத்தி - ஆவுடைய நாயகியை. அவள் - அந்தக் கங்கை.

169. தாற்று பொழுதிலெங்கோ னம்பொனெடுந் தேர்செல்லும்
ஏற்றுசிலை நாண்வே ளிறக்கினான்—தோற்றரவிற்

பெதும்பை

170. கூர்க்கும் பொதுநோக்கங் கூர்த்துங்கூ ராததும்போற்
பார்க்கும் பெதும்பைப் பருவத்தாள்—சேர்க்குமங்கை
171. தண்ணிசையாழ் வாங்கித் தனியன்றி மாதருடன்
பண்ணிசையப் பாடாப் பசுங்கிள்ளை—பெண்ணொருபால்
172. தந்தவரை யோடும்மைத் தாங்கும் வரைக்கினமாய்
வந்தகிளை யென்று வரம்பெற்று—வெந்திறலால்
173. அன்று சிறையை யடுவெம் பகைமுடித்தும்
என்று நெடுவா னெழுந்தோங்கிச்—சென்றுதெறற்
174. கன்ன வரைகளிரண் டாரவரை யாமுளைத்த
என்ன வரும்பு மிளமுலையாள்—துன்னும்
175. இருசுடரும் போக்கா விருளென் றிருட்கார்
மருவிய தன்னகுழல் வாய்ப்பாள்—பெருகினைமைத்
176. தாங்குங்கொ லென்றுமுலை தாமரும்பிப் பார்ப்பதுகண்
டேங்குந் துடிநே ரிடையினாள்—நீங்கரிய
177. நாணமொடு கலனு நன்னித் திலவடமும்
பூண மனஞ்சிறிது பூணுவாள்—மாணிழையார்
178. ஆயமு மாமயிலு மன்னத் திளம்பெடையும்
தூய மடமானுஞ் சூழ்போதச்—சேயிழையாள்

---

169. தோற்றரவில் - தோற்றத்தில்.

170. கூர்த்தல் - கூர்மையுறுதல், மிகுதல். 171-4. நகில் வருணனை.

171 - 2. பெண்ணொருபாலைத் தந்தவரை - இமயமலை. தாங்கும் வரை - வெள்ளிமலை.

173. அடுவெம்பகை - இந்திரனை.

172 - 3. சென்று தெறற்கு வரம்பெற்று.

174. அன்ன - மேற்கூறிய.

172 - 4. தேவரீருக்குரிய இமயமலைக்கும், வெள்ளிமலைக்கும் நாங்கள் இனங்கள்; எங்களை மதியாமல் எம்முடைய சிறகுகளை அறுத்த இந்திரனை வெல்லுதற்கு வரம் தரவேண்டுமென்று மலைகளெல்லாம் தவஞ்செய்து பரம சிவனிடத்தே வரம்பெற்று இரண்டு மலைகளின் வடிவமாக முளைத்து மேல் நோக்கி யெழுந்தாற்போன்ற நகில்கள்.

175. வாய்ப்பாள் - பொருந்தியிருக்கப்பெற்றவள்; "வரையர மாத ரின் வாய்ப்பாள்" (குலோத். உலா. 189.)

176. அரும்பி - தோன்றி. துடி - உடுக்கையை.

177. நல் நித்தில வடமும்.

176 - 7. நீங்கரிய நாணம்: "பெண்பா லவர்கட் கணியாய்ப்பிரி யாத நாணும்" (சீவக. 1961.)

178. ஆயம் - மகளிர்கூட்டம்.

179. வட்டம் பெறும்பளிக்கு மண்டபத்து வந்திருப்ப
இட்டம் பெறவிணங்கு மேந்திழையார்—கட்டழகி
180. சங்கம் பகுந்தகுழைச் சங்கரர் சங்கரியார்க்
கங்கம் பகுந்த வருள்பாடிச்—செங்கை
181. மணிக்கழங் காடுக மென்ன வயங்கும்
அணிக்கிணங்கு கொங்கைமல ரன்னம்—பணிக்குமுக்கண்
182. மாமருந்து புற்றிடத்து மண்மருந்தா லெப்பிணியும்
போமருந்து மென்றூன் புகழ்ப்பாடித்—தாமத்
183. தசைந்த மணிக்குழைக ளங்குமிங்கு மாட
இசைந்த மணிக்கழங்கா டெல்லை—பசந்தகொடி
184. பங்கோன்கைச் சூலப் படையோன் வரராசை
எங்கோன் மணிமறுகி லெய்துதலும்—அங்குக்
185. கழங்காடல் விட்டுக் கரும்பனையா ரோடும்
வழங்காடல் வேற்கண் வணங்கிச்—செழுங்குதலை
186. மானனையீர் பங்கில் வனிதையெவள் செஞ்சடைமேற்
றேனனைய கோதையெவள் செப்புமென—மேனிவந்த
187. வேதத் தனிமுதல்வன் வீதி தனைக்கடந்து
போதத் தொடைமடக்கிப் போயினன்வேள்—வேதன்

மங்கை

188. படியெடுப்பா வைத்துப் படைப்பவழ கெல்லாம்
வடிவெடுத்து வந்ததொரு மங்கை—தொடிவளைக்கைக்

---

179. பெதும்பை வந்திருப்ப. இட்டம் - இஷ்டம். கட்டழகி : விளி.

180. சங்கத்தை வகிர்ந்து அமைத்த குழையையுடைய. அங்கம்பகுந்த- திருமேனியைப் பகிர்ந்து கொடுத்த: "பாகம் பகுந்து பவரையிருப்ப வேள் பகழிக், காகம் பகுந்தன் றளித்ததுவும்" (243 ; "பரிந்திடுநுங் கவிதைகளிற் பாதி பகுந்து", "தாங்கருமன் பொடுபகுந்து சாத்தினூர் தமிழ்மாலை" (திருவாலவாய். காரியார் நாரியார். 12, 14.)

181. கழங்கு ஆடுகம் - கழற்சிக்காயை ஆடுவோம். அன்னம் - பெதும்பை. பணிக்கும் - கட்டளையிடும்.

181 - 2. முக்கண் மாமருந்து - சிவபெருமான்; எப்பிணியும் போம். அருந்துங்கள். தாமம் - ஒளி.

184. வரராசை - இத் தலத்தின் பெயர்.

185 - 6. கரும்பை அனையார். வழங்கு ஆடல் வேல்கண் - ஆள் வழங்குதலை வெற்றிகொள்ளுகின்ற வேல்போன்ற கண்; "ஆள்வழக் கொழிய நீண்ட வணிமலர்த் தடங்கண்" (சீவக. 461) ; "ஆள்வழக் கறுத் திடு நெடுங்க, ணம்பரத்தியர்" (திருநாகைக். அதிபத்த. 10.) பங்கில் வனிதை எவள் - பங்கிலுள்ள இந்தப் பெண் யார்?

187. போத - செல்ல. வேள் போயினன்.

188. படியெடுப்பு - பிரதியை எடுத்தல்; படி - பிரதி; "படிச்சந்த மாக்கும் படமுள வோநும் பரிசகத்தே" (திருச்சிற். 78.) படியெடுப்பா.....

189. காவிக் கிளையைவென்ற கண்ணி யரவிந்தத்
தேவிக் கிளைய செழும்பூவை—தாவும்

190. முரசளிக்கும் வேலைமதன் மூவுலகும் வெல்லு
அரசளிக்க வந்தமட வன்னம்—விரைகமழ்பைங்

191. தாட்கொண்ட கஞ்சமுகை தன்னை வென்று வரணிய
நாட்கொண்ட வட்ட நகிலத்தாள்—வேட்கைபொர

192. வாளை மருட்டி வடிபூங் குழைதாவி
வேளை மருட்டும் விழியினாள்—நீளும்

193. படியிருந்த வேலை படிந்தமுகில் வந்து
குடியிருந்த தன்ன குழலாள்—தொடியின்

194. கழைபோற் றிரண்டு கவினுமருந் தோளாள்
இழைபோ லொடுங்கு மிடையாள்—உழைவிழியார்

195. தண்ணென் மதிசூழ்வன் டாரகைபோற் பாங்குவரப்
பெண்ணமுத மன்னாள் பெரிதுவந்து—வண்ணம்

196. பொருத்துநவ ரத்தினம் பொற்பா லிலங்கத்
திருத்துந் திருவூசல் சேர்ந்தாள்—வரித்தடங்

197. கண்ணொளி பாயக் கதிர்நீல வூசலென
நண்ணலு நோக்கி நகைமுகிழ்த்தாள்—வெண்ணிலவின்

198. அந்தண் ணகையொளிபாய்ந் தவ்வூச லாரநிரை
தந்தமணி யூசலெனத் தான்விளங்க—வந்துமறிந்

மங்கை : "தெரிவை மார்க்கொரு கட்டளை யெனச்செய்த திருவே", "சட்டகந் தன்னை நோக்கி யாரையுஞ் சமைக்கத் தக்காள்" (கம்ப. சித்திரகூட. 33, நாடவிட்ட. 38.) தொடி - கங்கணம். வளை - வளையல்.

189. காவிக் கிளை - கருங்குவளை மலரின் இனங்களை.

189 - 90. தாவும் வேலை - கடல். அளிக்கும் வேலையை முரசாக உடைய மதன்.

191. தாள் - தண்டு. கஞ்சமுகை - தாமரையரும்பு. வேட்கை - விருப்பம்.

192. வேளை - மன்மதனை.

193. வேலை படிந்த முகில் - கடலிற் படிந்த மேகம் ; எழுவாய்.

193 - 4. தொடியின் கழை - பூணையுடைய மூங்கில் ; தொடி, தோள் வளைக்கு உவமை.

194. உழை - மான்.

195. தாரகை - நட்சத்திரம்.

194 - 5. உழைவிழியார் பாங்குவர. மங்கைக்கு மதியும், தோழியர்க்கு நட்சத்திரமும் உவமை ; 'ஒண்ணுதன் மகளிர் தற்சூழத் தாரகை நடுவண் தண்மதிபோலச் செல்வாளென்பது' (இறை. 2, உரை.)

196. ஊசலைச் சேர்ந்தாள்.

197. பாய - பாய்தலால். 198. ஆர நிரை - முத்தின் வரிசை.

199. தோடியிரு கண்க ளொளிர்குழை யூசலிருந்
தாடி யசையவசைந் தாடுதலும்—பேடைமயில்
200. அன்னம்போன் மின்னு ரமையு மமையுமெனப்
பொன்னஞ் சிலம்பிரங்கல் போதாதோ—மின்னளகக்
201. காட்டுப் பொறிவண்டுங் கைவண்டும் போதுமெனக்
கேட்டுப் புலம்புவது கேளாதோ—வேட்டாடல்
202. இங்கொழிக வென்ன விசைந்தா டலையொழிந்தாள்
அங்குமகிழ் தந்திருக்கு மவ்வளவில்—பொங்குததி
203. மண்ணிடந்த மாலும் வனசர னு மெய்யன்பாற்
கண்ணிடந்து சாத்தவருள் கண்ணுதலோன்—எண்ணில்
204. சுரராசைப் பொற்பமைந்த தொன்னகர மன்ன
வரராசைப் புன்னை வனத்தான்—முரசவொலி
205. ஆர்ப்பவனி யெங்கு மதிர வரத்தூண்டும்
தேர்ப்பவனி சென்று தெரிசித்தாள்—கூர்ப்பக்
206. கலையாய் வளைநிறைநாண் கைவிட்டாள் செம்பொற்
சிலையான் மறுவீதி சென்றான்—உலையார்ந்த
207. வெங்கனலி லிட்ட மெழுகா மெனவெதும்பி
அங்க முருகி யயர்வுற்றாள்—வங்கத்

மடந்தை

208. தெழுவாரி வையத் தெவர்க்கு மதனூல்
வழுவாம லோது மடந்தை—முழுதும்
209. வடிவுபெறு மன்று மதன்சூட்ட வைத்த
முடியையிக ரான முலையாள்—படிமிசையோர்

---

200. அமையும் - போதும். என - என்று.

201. கை வண்டு - வளை.

202. என்ன - என்று தோழிமார் சொல்ல. மகிழ்தந்து - மகிழ்ந்து. பொங்கு உததி - கடல்.

203. மண் இடந்த - மண்ணைப் பெயர்த்தெடுத்த. வனசரன் - வேடராகிய **கண்ணப்பர்.**

204. சுரர் ஆசை பொற்பு - தேவர்களுடைய ஆசைக் கிடமாகிய அழகு. தொன்னகரம் - அமராவதி. வரராசையாகிய புன்னைவனம்.

204 - 5. முரசவொலியாகிய ஆர்ப்பு. அவனி எங்கும்.

206. கலையையும் ஆராயப்பட்ட வளையையும் நிறையையும் நாணையும் கைவிட்டாள்; ஆய் - ஆராய்ந்த; நிறை : "நிறையெனப் படுவது மறை பிற ரறியாமை" (கலி. 133 : 12) என்பர். செம்பொற்சிலை - மேருமலையாகிய வில்.

207. அங்கம் - உடம்பு. வங்கத்து - கப்பலை யுடையதாய்.

208. மதனூல் - மன்மதனுக்குரிய நூல்; "சாற்று மதனூ றலைகண்டும்", "மதனூல் விருத்தி" (சொக்க. உலா. 394, 449); "வெஞ்சினை யனங்க வேத முறைமையான் மேவி னுரே" (வி. பா. சம்பவச். 97); "கணிகையர் முகத்திற் கூறுங் காமனு கமங்கள்" (திருக்குற்றாலப். மந்தமாருதச். 41.)

210. ஆவிதனை யுண்ணாத வம்பொருநான் கல்லாத
காவிதனை வென்றகருங் கண்ணினாள்—பூவலருங்
211. கொத்துத் தொடையல் குவலயத்தோ ராவியொடு
வைத்துச் செருகு மலர்க்குழலாள்—உத்தரியப்
212. பொற்றனவெற் பன்ன புணர்முலையைத் தாங்குதலால்
மற்றுளதென் றோது மருங்குலாள்—சிற்றிடை
213. மின்னொத்த நல்யாழ் விறலியரும் பாங்கியரும்
தன்னொத்த வஞ்சியருந் தற்சூழ—முன்னாற்று
214. முந்திருக்குங் காணாத முக்கட் பசுந்தேறல்
வந்திருக்கும் புன்னை வனத்தெய்தி—இந்துநுதற்
215. பாங்கி யொருத்திதரப் பண்ணிசையப் பாடுதற்கு
வாங்கி மகரயாழ் வாசித்தாள்—பாங்கிருந்த
216. பூவைபசுங் கிள்ளையுடன் புட்குலங்க டாமிருந்த
காவை யகன்று கலந்துறையப்—பாவையும்
217. தம்மின மென்று தழீஇக்கொண் டனவென்ன
மைம்மலிவேற் கண்ணார் மறுத்துரைத்துச்—செம்மை
218. மகரயா ழின்னிசைக்கு வந்தன வென்று
பகர மனங்கனிந்து பைந்தேன்—நிகரின்றி
219. இன்னிசையாழ் பின்னா மிசைத்தா ளிசைப்பளவில்
முன்னிருவர் காணா முடிவிலான்—பொன்னிதழி

---

210. காவி - கருங்குவளைமலர்; காவிமலர் ஆவியை யுண்ணுமென்பது, " முழுநீலங், கொல்லுமத னம்பின் குணம் " (இரத்தினச். 11) என்பதனாலும் விளங்கும்.

211. தொடையல் - மாலை; தொடையலை ஆவியொடு வைத்துச் செருகுங்குழல்; செக்கச் சிவந்த கழுநீருஞ் செகத்தி லிளைஞ ராருயிரும், ஒக்கச் செருகுங் குழன்மடவீர் " (கலிங்கத். 54); " உருகுஞ்சுர ருயிருண்டன வுணர்வுண்டன வொழுகத், திருகுங்குழ லரமங்கையர் திறமின்கடை திறமின் " (தக்க. 13.) உத்தரியம் - உத்தரீயம்.

212. பொன் தனவெற்பு - மேருவை. மற்று: அசைநிலை. தாங்குதலால் உளதென்று கூறப்படு மருங்குல்; " கலைக்கீ ழகலல்குற் பாரம தாரங்கண் ணார்ந்திலங்கும், முலைக்கீழ்ச் சிறிதின்றி நிற்றன் முற் றாது " (திருச்சிற். 59.)

213. விறலியர் - விறல்பட ஆடும் மகளிர்; விறல் - மெய்ப்பாடு.

214. இருக்கும் - வேதமும். தேறலிருக்கும் புன்னைவனமென்பது ஒரு நயம்.

216. பூவை - நாகணவாய்ப்புள். காவை - சோலையை. புட்குலங்கள் கலந்துறைய. பாவை - மடந்தை.

215-6. பாங்கிருந்த பூவையுடன், பாங்கிருந்த கிள்ளையுடன்.

217. என்ன - என்று மடந்தை கூற.

217-8. வேற்கண்ணார் பகர.

219. இதழி - கொன்றை.

220. ஏந்துமிரு நான்குபுயத் தெம்மான் மணிமறுகிற்
போந்த பவனியெதிர் போய்ப்பணிந்தாள்—பாய்ந்தபொறிப்
221. பையா டரவப் பணியான் மழுவிருந்த
கையான் மணித்தேர் கடாவினன்—பெய்வளைக்கை
222. அஞ்சொலிளங் கிள்ளை யயர்ந்தா ளதுகண்டு
விஞ்சுகொடி மாட மிசைக்கொடுபோய்—வஞ்சியரப்
223. போதுதழல் கீழ்விரித்தாற் போன்ற மலரமளி
மீது கிடத்த வெதும்பினள்—சீதக்

அரிவை

224. குமுத மனையவிதழ்க் கோதைதிரை வேலை
அமுத மனைய வரிவை—திமிரமென
225. நெய்த்துச் சுருண்டு நெறித்துக் கடைகுழன்று
மைத்துத் திரண்ட மலர்க்குழலாள்—முத்த
226. வடங்கொண்டு கச்சறப் பூரித்து மார்பத்
திடங்கொண்ட கொங்கை யிணையாள்—விடங்கொண்டு
227. சேலைத் துரந்து திகழ்பூங் குழைதடவி
வேலைத் துரந்த விழியினள்—தாலமிசைத்
228. தேசழகு பெற்றமணித் தேர்த்தட்டுஞ் சேரினைஞர்
ஆசையும் போலகன்ற வல்குலாள்—வாசமலர்ப்
229. பொன்னைநிக ராக்கிப் புயலோ டியங்கியொளிர்
மின்னையுருக் கொண்டனைய மேனியாள்—பொன்னிலத்து
230. மாமகளிர் சூழ்ந்ததரு மங்கையென வாரிதிப்
பூமகளிர் சூழப் பொலிந்திருப்பாள்—காமர்
231. ஒருகமல மீதிரண் டுற்பலமுந் தேறல்
வருகுமுத மும்பூத்த வல்லி—திருவுருவம்
232. வாடாத செவ்வி மகளிரொடும் பூங்காவில்
ஏடார் மலர்கொய்ய வேகுதலும்—கோடிய

---

222. கிள்ளை - மடந்தை. வஞ்சியர் - தோழிமார்.

224. கோதை - மாலைபோல்வாள்; "கோட லெதிர்முகைப் பசுவீ முல்லை, நாறிதழ்க் குவளையோ டிடைப்பட விரைஇ, ஐதுதொடை மாண்ட கோதை போல, நறிய நல்லோள்" (குறுந்தொகை, 62.) திமிரம் - இருட்டு.

225. கடைகுழன்று - கடை சுருண்டு. மைத்து - கறுத்து.

227. துரந்து - செலுத்தி. தாலம் - பூமி.

228. தேசு - ஒளி; இயற்கை யழகுமாம்; பரி. 12 : 21.

228 - 9. மலர்ப்பொன்னை - திருமகளை. 230. தருமங்கை-இந்திராணி.

231. கமலம் முகத்திற்கும், இரண்டு உற்பலம் கண்களுக்கும், குமுதம் வாய்க்கும் உவமைகள்; உற்பலம் - கருங்குவளை; குமுதம் - செவ்வல்லி.

232. ஏடு - பூவிதழ். கோடிய - வளைந்த.

233. விற்றிகழ் வாணுதலி மென்சா யலுமொழியும்
சிற்றிடைதள் ளாடுந் திருநடையும்—கற்றறிய
234. வன்னக் கலாப மயிலும் வரிக்குயிலும்
அன்னக் குழாமு மருகுவரப்—பன்னும்
235. இனிய நரம்புளரு மின்னிசையா ழென்னப்
பனிமலர் வண்டுகள்பண் பாடக்—கனியுதவு
236. கொம்பர் மிசையிருந்த கொண்மூ முழவதிர
அம்பொதியத் தென்கா லசைத்ததளிர்—இம்பருற
237. வாவெனல் போலசைய மாதவிப் பந்தரின்கீழ்
ஏவனைய கண்ணா ளினிதிருந்து—தேவர்
238. பெருமானைச் சங்கரனைப் பெம்மானைப் பங்கில்
ஒருமானை வைத்தானை யுன்னித்—திருமானை
239. அன்னாள் சுரும்பை யழைத்திதழி வாங்கிவரச்
சொன்னாள் விடுத்தா டுயருற்றாள்—பொன்னனையார்
240. ஆற்றவு மாற்றா தயர்ந்துருகு மவ்வளவிற்
கூற்றமு மஞ்சுங் குரைகழலான்—மாற்றலர்
241. முப்புரமு நீற முகிழ்த்த திருநகையான்
எப்புவியும் போற்றமறு கெய்துதலும்—துப்பிதழி
242. சென்று தொழுதாள் செழுமதித் தீப்பொரு
தன்று நதியோ டணிந்ததுவும்—என்றுமொரு
243. பாகம் பகுந்து பரையிருப்ப வேள்பகழிக்
காகம் பகுந்தன் றளித்ததுவும்—வேகவனல்
244. கொட்டுமிள வாடைக் கொழுந்தையஞ்சிப் பொன்வரையை
விட்டுவெள்ளி வெற்பை விரும்பியதும்—விட்டு

---

233. வில் திகழ். நுதலியினது.

233-4. சாயல் முதலியவற்றிற்கு மயில் முதலியவை நிரனிறையாகக் கொள்ளப்படுவன.

236. கொண்மூ - மேகம். முழவு - மத்தளம்; "விண்ணதி ரிமிழிசை கடுப்பப் பண்ணமைத்துத், திண்வார் விசித்த முழவொடு" (மலைபடு. 2-3); "முகிலிசை யெனமுழா முரன்று விம்மவும்" (சூளா. நகரச். 6.) இம்பர் - இங்கே.

237. மாதவி - குருக்கத்தி. ஏவு - அம்பு.

239. சுரும்பை - வண்டை. தூது விடுத்தாள்.

240. கூற்றமும் அஞ்சும் குரைகழலான்: "கூற்றங் குமைத்த குரைகழற்கால்" (சிதம்பரச்செய். 8.) மாற்றலர் - பகைவர்.

241. நீற - பொடியாக. மறுகு - வீதியில். துப்பு - பவழம். இதழி - இதழையுடையாள்.

242. மதித்தீ - சந்திரனாகிய நெருப்பை. மதியை நதியோடணிந்தது.

243. பகுந்து - பகிர்ந்து. வேள் பகழிக்கு - மன்மத பாணத்திற்கு. அன்று அளித்தது.

244. பொன்வரையை - மேருவை.

245. மறந்தபடி யோவெளியேன் மற்றவையா லாவி
இறந்து படுவதனை யெண்ணீர்—சிறந்தமழ்ச்
246. செங்கரனே மிக்க திகம்பரனே சீராசைச்
சங்கரனே யென்று தளர்வுற்ருள்—அங்கரனும்
247. சோதி கடந்த சுடர்மணி மாளிகையின்
வீதி கடந்தகல வேறெருந்தி—காதல்

தெரிவை

248. உருவழகுஞ் செஞ்சொ லுரையழகும் பெண்மைத்
திருவழகும் பெற்ற தெரிவை—மருவிருந்த
249. மாலிகை வைத்து வகுத்துச் செருகுபசுஞ்
சோலையைவைத் தன்ன சுரிகுழலாள்—ஓலையின்மேல்
250. ஒட்டி யிளைஞ ருயிரனைத்து முண்ணுமல்
வெட்டியுடன் மீளும் விழியினுள்—வட்டநெடும்
251. பார்சொல்லக் கூடாப் பரப்பி னளவையும்
நேர்சொல்லக் கூடா நிதம்பத்தாள்—கார்செல்லும்
252. எட்டு வரையோ டிரண்டுவரை யுண்டென்வார்
கட்ட வமையாக் கனதனத்தாள்—மட்டவிழ்பூங்
253. காவிநீ ராடல்வேற் கண்ணி செழுங்கமல
வாவிநீ ராட மனம்வைத்தாள்—ஆவிநீர்
254. அன்னங் கிளிகளொடு மார்கலி யாரமுதம்
என்ன மடவரலு மெய்திஞள்—அன்னமொரு
255. கோடி படிந்தவெனக் கொங்கைக் குடங்கவிழ்த்தி
ஆடிய மாதருட னுடிஞள்—கூடகக்கை

---

245. அவையால் - மதி, வேள்பகழி, வாடையென்பவற்ருல்.

246. சீராசை - ஸ்ரீராசை; **சங்கரநயினர்கோயில்**; 262. அங்கு அரனும்.

247. சோதிகள் தந்த.

249. மாலிகை - மாலை. குழலுக்குச் சோலை உவமை; " அளக மலர்க்கா " (**சொக்க. உலா.** 321.) ஓலை - காதோலை.

252. எட்டுவரை - குலாசலம் எட்டு. வார் - கச்சு. அமையா - அடங்காத. மட்டு - மணம்.

253. காவி நீர் ஆடல் - கருங்குவளையின் தன்மையை வென்ற; ஆடல் - வெற்றி. வாவி - தடாகம்.

254. அன்னம் - அன்னப் பறவை. ஆர்கலி - கடல்.

255. படிந்த - படிந்தன. கொங்கைக்குடம் - கொங்கையாகிய குடத்தை. குடத்தை மிதப்பாகக் கொண்டு ஆடுதல் மரபு: " துங்க முலைப் பொற்குடங்கொண்டு தாநீர் நீந்தி விளையாடும் " (**மீ. பிள்ளைத்.** நீராடற். 6); " மானநீ ரரணஞ் சூழ்ந்த மன்னவ னுளத்தி னூடே;...கொங்கைக் குடத்தினு னீந்திப் புக்காள் " (**நைடதம்,** அன்னத்தைக். 16.)

256. அள்ளிநறுந் தெண்ணீ ரவர்கருந் தாரைதொறும்
வெள்ளிநெடுந் தாரையென வீசினாள்—கள்ளமுறும்
257. பைங்குவளை மீதிலிரு பங்கயம் பூத்தவெனப்
பொங்கு வளைக்கரத்தாற் பொத்தினாள்—இங்கொழிக
258. என்றார் நகைத்தா ணகைத்த விளநிலவாற்
குன்றா வனசங் குவிதரலும்—துன்று
259. கரையேறிப் பல்கலனுங் கைபுனைந்து மாலை
விரையேறு கூந்தன் மிலைந்து—பரிவாய்க்
260. கனியிருந்த சொல்லியர்க்குக் காமா கமநூல்
இனிதிருந்து கற்பிக்கு மெல்லை—தனிமுழங்கி

தசாங்கம்

261. விண்ணீர்ப் புயலுறங்கு வெள்ளருவித் தென்வரையும்
தெண்ணீர்ப் பொருனைத் திருநதியும்—பண்ணீர்மை
262. தந்து கொழிக்கத் தழைக்குந் தமிழ்நாடும்
நந்துதவழ் சீராசை நன்னகரும்—முந்திய
263. பேரா யிரந்துதிப்பப் பெற்ற மறைப்பரியும்
ஈரா யிரங்கோட் டிருங்களிறும்—சேர்தரும்
264. ஆவி யனையபதி னாறா யிரங்கொம்பு
மேவி வளரும் விடைக்கொடியும்—பூவார்
265. திருக்கொன்றைத் தாமமுந் தெய்வ முரசும்
பெருக்குதவா தாணையும் பெற்றோன்—செருக்கினால்
266. ஏகவனத் தான்செங்கை யேற்றவனத் தானறியா
நாகவனத் தான்பவனி நண்ணுதலும்—தோகையன்னார்

---

256. கருந் தாரை - கரிய கண்கள். 257. கண்ணைப் பொத்தினாள்.

258. வனசம் - தாமரை. 259. விரை - வாசனை. 260. நாலை.

261. தென்வரை - பொதியின்மலை ; " தென்மலை யிருந்த சீர்சான் முனிவரன் " (பு. வெ. சிறப்புப். 2) ; " தென்மலைச் சந்தும் " (சிலப். 8 : 19.) பொருனை - தாம்பிரபன்னிநதி.

262. நந்து - சங்கு.

263. களிறு - ஐராவணம் ; " நிரைநிரை, ஆயிரம் வகுத்த மாயிரு மருப்பின், வெண்ணிறச் செங்கண் வேழமும் " (**கோயிநான்மணி**. 4.)

264. ஆவி - உயிரை. பதினாறாயிரங்கொம்பு - நரகாசுரனாற் சிறையில் வைக்கப்பட்ட பதினாறுயிரம் இராச கன்னியரை. **செவ்வைச்சூடுவார் பாகவதத்தில்**, 10-ஆம் கந்தத்தில் நரகாசுரனைக்கொன்ற அத்தியாயத்திற் **கண்ணபிரான்** பதினாறுயிரம் இராச கன்னியரை மணந்த வரலாறு காணப்படும்.

265. தாமம் - மாலை.

266. ஏக அனத்தான் - ஒற்றை அன்னப்பறவையையுடைய பிரமன். கை ஏற்ற வல் நத்தான் - திருமால் ; நத்து - சங்கம். நாகவனம் - புன்னைவனம்.

267. சூழ்ந்துவரச் சென்று தொழுதா டொழுதவுடன்
ஆழ்ந்த விரகத் தழுந்தினாள்—வீழ்ந்தயர

268. ஆரிதழி திங்களணிந்தா னெடுமகன்றான்
தேரிளந் தென்றற் சிலையானும்—பேரிளம்பெண்

பேரிளம் பெண்

269. பொன்னிசைய மேவும் புகலியர்கோன் பாட்டிசையும்
இன்னிசையும் யாழி னெடுத்திசைப்பாள்—முன்னவன்பொற்

270. றாளாணை யைச்செலுத்துந் தன்மையா ளாண்மையினால்
வேளாணை யைச்செலுத்தா வீறுடையாள்—நாளும்

271. உறுதுயி றந்திலவென் றோர்ந்துமை தீட்டா
விறலயில்வே லன்ன விழியாள்—இறையொருபாற்

272. சேர்த்த திருப்பிறைதான் சேர்த்தற் கரிதென்று
கூர்த்து வனையாக் குழலினாள்—பேர்த்துடைந்தும்

273. ஏங்கியு நொந்துமெம்மை யேந்திய தென்றுதாம்
தாங்கிய வாரந் தருவதற்கும்—ஓங்கலெட்டும்

274. பொற்பழித்து விண்ணிற் பொருப்பின்மை யாற்பிலத்தும்
வெற்புளதோ வென்றாய்ந்து வெல்வதற்கும்—முற்றும்

275. கலைசாய்த்து நேரிட்ட கச்சினையுஞ் சாய்த்துத்
தலைசாய்த்து நோக்குந் தனத்தாள்—மலைசாய்த்து

276. வாரழகு பெற்றமுலை மாமங்கை யர்க்கரசி
பேரழகும் பேரற்பும் பெற்றுளாள்—சேரிளங்கால்

277. சுற்றத் திருந்து சுடரெறிக்கும் வெண்ணிலா
முற்றத் திருந்து முகிழ்நகையாள்—கற்றுணர்ந்து

278. தென்புகலி வேந்து செழியனுடற் கூனிமிர
முன்புகலுஞ் செஞ்சொன் முதுதமிழும்—வன்புலையர்

---

267. வீழ்ந்து அயர.

268. ஆர் - ஆத்தி. இளந் தென்றற்றேர் - இளந்தென்றலைத் தேராக வுடைய. சிலையான் - மன்மதன். சிலையான் திங்களணிந்தானெடும் அகன்றான்.

269. புகலியர் கோன் - சம்பந்தமூர்த்தியினது. முன்னவன் - சிவ பெருமானது. 270. வீறு - வேறொன்றற் கில்லாத அழகு.

271. மை - அஞ்சனம். இறை - இறைவன்.

272. கூர்த்து - ஆராய்ந்தறிந்து.

273. ஆரம் - முத்தமாலையை. ஓங்கல் - மலை. 274. பொற்பு - அழகு.

276. பேரற்பும் - பெரியஅன்பினையும். இளங்கால் - தென்றல்; "இளங்காற் றூதன்" (சிலப். 8 : 9.)

278. புகலிவேந்து - சம்பந்தமூர்த்தி ; புகலி - சீகாழி. செழியன் - கூன் பாண்டியன். புலையர் - சமணர்.

279. கற்றுணையாச் சேர்த்துக் கடற்படுத்த வஞ்செழுத்து
நற்றுணையென் றோதினோ னற்றமிழும்—முற்றுலகும்

280. அண்டத் தொகையு மருமறையும் போற்றுதிருத் [மன்றில்
தொண்டத் தொகைவகுத்தோன் சொற்றமிழும்—பண்டு

281. ஆடினோன் பூண்டெழுத வாய்ந்ததுறை நானூறு
பாடினோன் பாடிய பைந்தமிழும்—பாடியிரு

282. கொங்கை யசையக் குழையசையக் கோலவளை
அங்கைமிசை யம்மானை யாடுமென்றாள்—உங்களிலே

283. ஆட லமையு மமையுமென வோங்குசித்ர
கூடமிசைச் சென்று குலாவினாள்—நீடுபுன்னைக்

சித்திரசாலைக் காட்சி

284. காவைநே சித்துவந்து கண்ணுதலை யாவுடைய
பாவைபூ சித்த படிபாரீர்—பாவைதனுக்

285. கன்று வடிவமிரண் டாக விறைவனென்றாய்
நின்ற கருணை நிலைபாரீர்—சென்றுதொழ

286. இவ்வுலகிற் சங்கபற்ப ரென்னு மரவரசர்க்
கவ்வுருவந் தந்த வருள்பாரீர்—செவ்வேல்

287. அரசன் வழுதிபுரி யாலயமும் வானோர்
பரவு திருநகரும் பாரீர்—விரைகமழும்

288. ஆர வரைமுனிக்கோ ரஞ்செழுத்தி னுண்மைநிலை
தேர வுரைத்த திறம்பாரீர்—சோரவிடைப்

---

279. கல்துணையா - கல்லைத் துணையாக. அஞ்செழுத்து - பஞ்சாட்சரம். ஓதினோன்: திருநாவுக்கரசர்.

281. துறை நானூறு - திருச்சிற்றம்பலக் கோவையாரை. பாடினோன் - திருவாதவூரடிகள்.

283. ஆடல் அமையும் - அம்மானையாடுதல் போதும். சித்ர கூடம் - சித்திரங்கள் வரைந்திருக்கும் சாலை; இதனை, "எழுதெழி லம்பலம்", "எழுத்துநிலை மண்டபம்" (18 : 28, 19 : 53) என்பர் பரிபாடலில்.

283 - 4. புன்னைக் காவை - புன்னை வனத்தை.

284 - 8. சித்திரசாலையிலுள்ள இத் தலவரலாற்றைப் பற்றிய ஓவியக் காட்சி கூறப்படும்.

285. வடிவமிரண்டாக - சங்கர நாராயணராக.

286. அவ்வுருவம் - சங்கரநாராயண வடிவத்தை.

287. அரசனுகியவழுதி - உக்கிரப் பெருவழுதி.

288. ஆரவரை - சந்தனச் சோலைகளையுடைய பொதியின்மலை. முனிக்கு - அகத்திய முனிவருக்கு.

வடமலைப் பிள்ளையன் பணிகள்

289. பாகனுமை யாவுடைய பாவைதிருச் சந்நிதியில்
மாகமுயர் பொற்கம்ப மண்டபமும்—தோகையென

290. மாடகநல் யாழிசைத்து மாதர் நடம்புரிய
ஆடகத் தூணிரைத்த வம்பலமும்—சூடுமுடி

291. அண்ட ருறையு மகல்வான் முகடுரிஞ்சும்
கொண்டல் படியுநெடுங் கோபுரமும்—எண்டிசைநெல்

292. இட்ட களஞ்சியமு மேற்ற மடைப்பளியும்
வட்டநெடு வான்றோய் மணிமதிலும்—கட்டுகொடிப்

293. பொற்றடந் தேருமந்தப் பொற்றடந்தேர் மண்டபமும்
மற்றை நிருதிதிக்கு மண்டபமும்—முற்றவளம்

294. சேர்ந்தமணி வீதித் திருமடமும் பூந்தேறல்
வார்ந்தொழுகும் பூங்கா வனங்களும்—சார்ந்திலங்கு

295. கூலமணித் தெப்பக் குளமுமணி மண்டபமும்
சீல மறையோர் திருமனையும்—நீலமிடற்

296. றெந்தைவெள்ளிக் குன்றநடந் தேந்தவர ராசைதனில்
வந்ததன்ன வெள்ளிவரை வாகனமும்—புந்திமகிழ்

297. வெண்கதிர் வெள்ளிவெற் பன்னவிடை வாகனமும்
வண்கனகத் திந்திரவி மானமும்—ஒண்சுடர்

298. கொண்டுதிகழ் வெள்ளியங் கோளரி வாகனமும்
மண்டு திறற்பூத வாகனமும்—தொண்டருடன்

299. வானவர் போற்றுமொரு மண்டலவி மாவுமணி
ஆன வடமலை யாரமும்—ஞானவொளி

300. அன்னையுடை யாட்குரத்ன வங்கியு மெய்யன்பை
முன்னு மறுபத்து மூவரும்—மன்னுகுண

301. சீலனுயர் காவைத் திருமால் வடமலைபூ
பாலன் வகுத்த படிபாரீர்—ஞாலமிசை

302. இன்ன வளனும் புதுமையுமெங் குள்ளவென்
றன்னமனை யாளிருக்கு மந்நிலையில்—மின்னும்

---

289. மாகம் - ஆகாயம். தோகையென - மயில்போல.
290. ஆடகத்தூண் - பொற்றூண்களை. அம்பலம் - நாடகசாலை.
291 - 2. நெற்களஞ்சியமும்.
293. நிருதி திக்கு - தென்மேற்கு மூலை. முற்ற - முடிய.
294. தேறல் - தேன். 296. வெள்ளிவரை வாகனம் - கைலாய வாகனம்.
297. கனகத்து - பொன்னாலாகிய. 298. கோளரி - சிங்கம்.
300. உடையாட்கு - ஆவுடைநாயகிக்கு.
301. காவை காவனூரென்பதன் மரூஉவென்பர்.

303. மழுவலத்தா னுடைய மானிடத்தான் கொன்றை
முழுமலர்த்தார் வேணி முடித்தான்—எழுபரவை

304. ஆல மணிமிடற்று னம்பொன் மணிநெடுந்தேர்
கோலமணி வீதி குறுகுதலும்—நீலவிழி

305. சென்றாள் பணிந்து தியங்கினா ணெட்டுயிர்த்து
நின்றா ளயர்ந்தா ணிலைசோர்ந்தாள்—துன்றுபொழிற்

306. கூழைப் பதிவாழ் குழகனே கோட்டுமதிப்
பேழைச் சடைமவுலிப் பெம்மானே—ஏழையேற்

307. கம்புலி யார மழலாய்க் கொதியாமற்
பம்புமொலி யாவி பருகாமற்—கும்பமுனி

308. முன்னு மருந்து படியிந்த முந்நீரோ
டின்னுமருந் தென்ற லிசையாதோ—துன்னுபுகழ்

309. வென்றுபோ ராடிமதன் விற்கரும்பைக் கல்லானைக்
கன்றுபோ லின்றளித்தா லாகாதோ—இன்றனது

310. சின்னத் துடன்பகைத்தோன் சின்ன மெதிர்பிடித்தான்
என்னத் திருவுளத்துக் கேறாதோ—நின்னிதழித்

311. தாரே னுந் தாராத் தகைமையென்கொ லென்னவிவ்வா
றோரேழ் பருவத் தொளிவளையார்—நேர்போதக்

312. கண்ணுதலான் புன்னைநறுங் காவுடையா னோர்பாகத்
தொண்ணுதலான் போந்தா னுலா.

---

304. நீலவிழி - நீலவிழியையுடைய பேரிளம் பெண்.

306. கூழைப்பதி: சங்கரநயினார் கோயிலின் திருநாமங்களுள் ஒன்று. பேழைச்சடைமவுலி - பேழைப் பெட்டிபோலும் சடைமுடி; "பேழைச் சடையர் மயானத்துப் பெரிய பெருமா னடிகளே" (தே. சுந்தர. கடவூர் மயானம்); பேழை - ஒருவகைப் பெட்டி.

307. அம்புலி ஆரம் - சந்திரனும் முத்து மாலையும். ஒலி - கடலொலி. கும்பமுனி - அகத்தியமுனிவர். 308. அருந்து படி - உண்டபடியே.

307 - 8. முந்நீரோடு அம்புலியையும் ஆரத்தையும் அருந்தென்று கும்பமுனிக்குக் கூறல் உமக்கு இசையாதோ. கடலினையுண்டால் அம்புலியும் முத்தும் அதனொலியும் இராவென்றபடி. கடலிற்றோன்றுதலால் அம்புலியையும் உடன் கூறினார்.

309. விற்கரும்பைக் கல்லானைக்கு அன்றுபோல் நீர் அளித்தால் ஆகாதோ.

310. சின்னம் - சிவசின்னம், காளம் (குயில்.)

312. ஒண்ணுதல் - உமாதேவியார்.

உ

சங்கரநயினார் கோயில் சம்பந்தமான செய்திகள் உள்ள நூற்பகுதிகளும் தனிப் பாடல்களும்

பின்னே காட்டப்பெற்றுள்ள பல நூற்பகுதிகளும் தனிப் பாடல்களும், இத் தலத்திற் செய்யப்பெற்றுள்ள சில திருப்பணி வரலாற்றையும் வேறு சில வரலாற்றையும் தெரிவிக்கின்றன.

திருவருட்பாமாலைப் பகுதி

[இந்நூல் முன்பு ஊற்றுமலை ஸமஸ்தானத் தலைவராக இருந்த மருதப்பத் தேவர்மேல் கன்றுப்பூர்க் கவிராயர் இயற்றியது.]

கலிவெண்பா

1. மணிகொண்ட பொன்மதிலு மாளிகையுஞ் சூழக்
கணிகொண்ட ராசைக் கனியே—பணிகொண்ட
2 புற்றிடமும் வெள்ளிப் பொருப்பிடமும் பொய்தீர்ந்த
மற்றிடமும் வாழு மறைமுதலே—சொற்றெரிந்த
3. பாவுடையா னேவும் பழம்பொருளே பைங்கிளிநேர்
ஆவுடையா ளைப்புணரு மாதியே—காவிடங்கொள்
4. பொன்னு கமுநெடிய புன்னு கமுமிரண்டு
பன்னு கமும்படைத்த பானுவே—எந்நாளும்
5. நாக சுனையி னணைவார் வினையகற்றி
மாகமுற வைக்கு மகேசனே—சாகரத்தின்
6. உண்மருந்து கொண்மினென வும்பருக்கு மிம்பருக்கும்
மண்மருந்து நல்கும் வயித்தியனே—தண்மலிந்த
7. பாதி மதிச்சடையும் பைம்பொற் கிரீடமும்பொற்
றுதவிழ்ந்த கொன்றையும்பூந் தண்டுளவும்—சோதிதரும்
8, சங்கக் குழையுந் தனிமகர குண்டலமும்
செங்கைப் பணிலமொடு தீமழுவும்—தங்குமணிக்
9. கண்டிகையும் பாம்புங் கவுத்துவமும் பொன்னணியும்
புண்டரிக வீருரியும் பொற்றுகிலும்—கண்டுகண்டு
10. காரேறு வானிற் கவினிந் திரசாபம்
நேரே நிமிர்ந்தெழுந்து நின்றதென்ன—வாராத

11. விச்சை தரும்பவள மென்மலையும் பொன்மலையும்
பச்சை மலையுமொருப் பட்டதென்ன—அச்சுதனோர்
12. பாக முறலாற் பசுமையொடு செம்மையிரண்
டாகமுறுஞ் **சங்கரநா ராயணனே**—யோகமுறும்
13. பொங்கரவஞ் சூழ்ந்திறைஞ்சப் புற்றினிடத் தேயெழுந்த
சங்கரநா ராயணனே சம்புவே—எங்கள்குல
14. தெய்வமே யெவ்வுயிர்க்குந் தீரா வினை தீர்க்கும்
சைவமே **சீராசைச் சங்கரனே**—பொய்வினையேன்
15. ஆறு விடருற் றழைத்தாற் றிருச்செவிக்கங்
கேறுதோ வென்றெதிர்நின் றேத்தினேன்—ஆறுறும்
16. கற்றைச் சடையான் கணநா தரிலொருவன்
மற்றைச் சிவன்போல் வடிவாகிப்—பொற்றொடையார்
17. செக்கர்ச் சடையுந் திருநீறுங் கண்டிகையும்
தொக்க புயநான்காய்த் தோன்றியே—மிக்க
18. முறையிட் டவனுரென் முன்னுரையா யென்ன
இறையிட்ட மாய்நின் றிசைத்தான்—திறையிட்டுப்
19. பூவேந்தர் போற்றும் புலமைக் கரசான
பாவேந்தர் போற்றும் பலகலையும்—நாவேந்து
20. குன்றுப் புகழான் குவலயமெ லாமகிழும்
கன்றுப்பூர் வாழுங் கவிராசன்—என்றுதிரு
21. நாமம் படைத்துடையோ னென்றே னத்தனையும்
தாமம் படைத்தவர்முன் சாற்றவே—காமனுடல்
22. தீயழலாச் செற்றோன் றிருச்செவிகேட் டுக்குழைந்து
கூயவனை யிங்கே கொணர்தியெனத்—தாயனையான்
23. ஏவா முனம்வந் தெனைவா வெனவழைத்துத்
தேவாதி தேவன் றிருக்கொலுவில்—மேவும்
24. அயனொடுமா லிந்திர னு மண்டர்முனி வோரும்
சயசயவென் றேத்துஞ் சபையில்—முயலும்
25. நெருக்கொதுக்கிச் சன்னிதியி னேரே நிறுத்த
உருக்கியருட் பாடல்செய லுற்றேன்—பெருக்கெனவே
26. வீழ்ந்தே னெழுந்தேன் விழிநீர் பொழியவடி
தாழ்ந்தே னருளிற் றடைப்பட்டேன்—ஆழ்ந்தபணி
27. பூண்டவனே போற்றிமண்ணிற் புண்ணியனே போற்றியென்னை
ஆண்டவனே போற்றியென வாலித்தேன்—நீண்டசடை
28 **ஆவுடையாள்** பங்கா வருட்பார்வை காட்டியெனைக்
காவுடையா யென்றுகண்ணீர் காட்டினேன்—தேவர்க்.

29. கொருவா னவனிரங்கி யுன்வரவே தென்று
திருவாய் மலர்ந்தருளிச் செய்தான்—
* * * *

30. மற்றிடமுமின்றி மனையுங் கிடையாமற்
புற்றிடத்திற் போந்துகுடி புக்கிருந்தோம்
* * * *

31. ஏவுடையா ரிட்ட விருநாழி நெல்லையுநம்
ஆவுடையா ளுக்கென் றளந்துவிட்டோம்
* * * *

32. கண்டிதமாய்ச் செய்யுங் கவியறியோம் புற்றுமண்ணென்
றுண்டதனை யாங்கே யுவந்தெடுத்தே—உண்டை
33. அரைத்தரைத்துக் கைசலிப்ப **தாவுடைக்கு** வேலை
உரைத்தொழுக்க வேலைநமக் குண்டே—உரைத்துணநாம்
34. மண்ணைக் கொடுக்கினுங்கை வாசியுண்டென் பாரதனாற்
புண்ணைப் புரைகளைப் போக்குவிப்போம்—உண்ணவும்வே
35. றாதியமில் லாதா **வுடையாளு** நாமுமறப்
பாதியுடம் பானோம் பசுமைகாண்
* * * *

36. பண்டிதனு மென்றீர் பசிப்பிணிக்கு நீரெனக்கோர்
உண்டைமருந் தேனு முதவிடீர்
* * * *

37. ஏந்து சடையானை யெம்பெருமானைச் சிவனைச்
சாந்தமதி கங்கை தரித்தானை—ஆய்ந்தசிவ
38. **சங்கரனை ராசைத்** தனிப்பொருளை **யாவுடையாள்**
பங்கரனைத் தெண்டனிட்டன் பாகவே—அங்கருளிச்
39. செய்த படிக்குன் றிருக்கொலுவின் முன்வந்தேன்
வெய்ய கலியிருள்போய் விட்டதே.

வனச விடுதூது

[இந் நூல் ஊற்றுமலை ஸமஸ்தானத் தலைவராக இருந்த நவநீத கிருஷ்ணதேவர்மேல் கன்றுப்பூர்க் கவிராயர் இயற்றிய பிரபந்தம்.]

1. **சீராசை யாவுடைய தேவி**புணர் புன்னைவனத்
தாரார் சடைப்பரனுக் கன்புமிகப்—பேராது
2. மிக்கான பூசனைநை வேத்யமறைக் கட்டளையும்
எக்கால முந்தவறு தேநடத்தி.

சவ்வாது விடுதூது

[இந்நூல் வடகரை ஜமீன்தாராக இருந்த திரிகூட ராஜ கோபால துரையின்மீது பாடப் பெற்றது.]

—தையலொரு
பாகன் சிவாய்ப் பரனுக்குந் தென்கூழை
நாகசுனை யாவுடையா னுயகற்கும்.........
....
நடத்துமறைக் கட்டளைக்கோ.

சந்திரகலாமஞ்சரி

[இந்நூல் வடகரை ஜமீன்தாராக இருந்த பெரியசாமி செம் புலிச் சின்னணைஞ்சாத்துரையின் மாப்பிள்ளையாகிய பெரியசாமித் தேவர் மேல் கடிகைமுத்துப்புலவர் பாடியது.]

நறைக்கட் டளைக்குமலர் நாகவனத் தாற்கும்
அறைக்கட் டளைப்படியுண் டாக்கிச்—சிறக்கவே
ஆலயமு மண்டபமு மன்னசத்ர சாலையும்பூஞ்
சோலையுஞ் செய்த சுகிர்தவான்.

வடகரைச் சின்னணைஞ்சாத்துரை

பள்ளுப்பிரபந்தம்

[இதனை இயற்றியவர் கடிகைமுத்துப் புலவர்.]

திருமலையாண் டவர்தமக்குத் தினபூசை யொடுதேரும்
திருநாளு நடக்கவே கூவாய் குயிலே.
கருதுசொக்கர் சங்கரர் நெல்லையப்ப ருக்குமறைக்
கட்டளைகள் தழைக்கவே கூவாய் குயிலே.

பெரியசாமிச் சின்னணைஞ்சாத்துரை

விறலி விடுதூது

1. அன்னு ளறம்வளர்த்தா ளாதலினு லாவுடைத்தாய்
தன்னு யகனுமவ டானுமே—இந்நாளில்
2. இந்தத் தருமம்வளர்ந் தேற வெழுந்தருளி
வந்திருக்கு மம்பொன்மலை மாதினுக்கும்—இந்தணியும்
3. சங்கரலிங் கர்க்குந் தரும்பூ சனைநடத்திப்
பங்கயமு நீலோற் பலமலரும்—மங்காத்
4. தடங்களுஞ்செய் வித்தே தங்குதற்கங் கங்கே
இடங்கள் வெகுவசதி யென்ன—மடங்கள்பல
5. கட்டித் திருப்பணிகள் கட்டளைக ளர்ச்சனைகள்

மட்டற்ற பொற்பணிகள் வாகனங்கள்—கட்டுபரி
6. வட்ட முதலமைத்து வாய்த்தசிறு காலசந்திக்
கட்டளையே கோலா கலஞ்சிறந்த—குட்டமென
7. ஆவலுடன் செய்யுமன தன்பினு லாதிவிண்டு
தேவனிவ னன்றிநர சென்மமோ—பூவுலகில்
8. என்னப் பெரியோ ரெடுத்தியம்பும் பாக்கியவிற்
பன்னப் பிரபலஞ்சேர் பத்திமான்.

தனிப்பாடல்கள்

[பின்னுள்ளவை வடகரை ஸ்தானுபதியாக இருந்த பொன்னம்பலம் பிள்ளை இயற்றியவை.]

வெண்பா

1. புற்றெங்கே புன்னை வனமெங்கே பொற்கோயிற்
சுற்றெங்கே நாக சுனையெங்கே—இத்தனையும்
சேரத்தா னங்கிருக்கத் தேவநீ தான்றனித்தித்
தூரத்தே வந்ததென்ன சொல்.
2. விள்ளுவமோ சீராசை வீடுவிட்டுக் காடுதனில்
நள்ளிருளிற் செண்பகக்கண் ணம்பியான்—மெள்ளவே
ஆடெடுக்குங் கள்ளரைப்போ லஞ்சா தெமைக்கரிசற்
காடுதொறு மேயிழுத்தக் கால்.

கட்டளைக் கலித்துறை

3. காவிக் கலையிலை யோகப்ப லேறக் கடலிலையோ
ஆவிக்கு மீளப் பிறப்பிலை யோகல்வி லம்புதனை
ஏவிப் பிளப்பது போலே யிதமறி யாதவரைச்
சேவிப்ப ரோசிவ சங்கர ராசைச் சிவக்கொழுந்தே.

இந்நூல் எழுதப்பெற்றிருந்த ஏட்டுப் பிரதிகள் இரண்டனுள் ஒன்றன் முதலில் பின்னுள்ளவை வரையப் பெற்றிருந்தன :

கட்டளைக்கலித்துறை

பேதை தனக்குப் பிராயமு மேழு பெதும்பைக்கொன்ப
தோதிய மங்கைக்குப் பன்னிரண் டாகு மொளிர்மடந்தை
மாதருக் கீரே ழரிவை பதினெண் மகிழ்தெரிவைச்
சாதிமூ வேழெனும் பேரிள நாலெட்டுத் தையலர்க்கே.

போரணியும் வைவேற் புரவலரும் வாழிமிகு
சீரணியு மாவுடைய தேன்வாழி...........
...........சங்க ரேசருளி வாழி..................

வரராசை சுவாமி சங்கரலிங்கம்பேரில் உலா செங்கோட்டைத் தொப்பையா கவிராசரது. எடுத்தபேர் படிச்சுக் கொண்டு திரும்பக் கொடுத்துவிடவும். ஆவுடையம்மன் துணை.

அரும்பத முதலியவற்றின்

அகராதி

[எண் - கண்ணியின் எண்]

அகத்தியர்க்குச் சங்கர நாராயணர் பஞ்சாட்சரப் பொருளை உபதேசித்தது, 26, 288.
அகத்தியரால் இந்திரனது யாகம் முடியாமற் போனது, 151-3.
அடியார் காணிக்கை செலுத்தல், 38.
அம்பாவை - திருவெம்பாவை, 82.
அம்பிகைக்கு இறைவன் சங்கர நாராயணத் திருவுருவம் காட்டியது, 13-5, 19, 284-5.
அம்பிகையின் சாபத்தால் தேவனொருவன் புலியனானது, 22.
அம்பிகையின் பச்சையுருவம், 118.
அரம்பையர் பசுக்களாக வந்தமை, 8-10.
அளகக்காடு, 200-01, 249.
ஆயிரங்கரத்து வாணன் முழவம் வாசித்தல், 106.
ஆர்ப்பெடுப்ப, 108.
ஆவுடைய நாயகி, 8-9, 30, 43, 104, 144-63, 284, 303.
இந்திரன், 2.
இறைவன் காதில் இசைவாணர் இருவர் இருத்தல், 31.
ஈசனெழுதக் கோவை பாடினோர், 281.
உக்கிர பாண்டியன் இத்தலத்தில் கோயில் எடுப்பித்தது, 23, 110, 287.
உமை, 4.
எழுமுனிவர், 86.
கருப்பூரம், 69.
கல்லானைக்குக் கரும்பருத்தியது, 309.
கற்பூரம் சாத்துதல், 69.
காணிக்கைச் செம்பொன், 38.
காதிலிருவர் சங்கீத நாதனார், 31.
காமாகமநூல், 260.
காவை வடமலைப் பிள்ளையனார், 301.
கானவன் ஒருவனை இறைவன் ஆண்டது, 28.
குழலுக்குச் சோலை உவமை, 249.
கூழைப்பதி, 306.
கொக்கரி - ஓர் இசைக்கருவி, 107.
கொண்மூ முழவு, 236.
சங்கபற்பர், 18, 33, 140, 286.
சங்கபற்பர் சிவபெருமானும் திருமாலும் மெய்ப்பொருளென்று தம்முள் மலைந்தது, 17.
சங்கபற்பருக்கு இறைவன் சங்கர நாராயணத் திருவுருவங் காட்டியது, 19, 286.
சங்கபற்பருக்கு வரமளித்தது, 20, 21.
சங்கர நாராயணர், 5, 13-6, 19, 34, 109, 142, 285-6.
சங்கரன், 30, 246.
சந்திரனுக்குக் கண்ணாடி உவமை, 73.
சம்பந்தர், 155, 269.
சமயத்தலைவர், 89.
சயந்தனுக்கு இறைவன் காக்கை வடிவம் தீர்த்தது, 27.
சித்திரகூடம், 283.
சித்திரைத் திருநாள், 39.
சித்திரை மாதம், 39.
சின்னம், 310.
சிரார்சை, 87, 246, 262.
சுனையொன்றைத் தேவர் திருத்தியமைத்தது, 11.
செக்கச்சிவந்த, 142.
செடாடவி, 39.

தசாங்கம், 261-5.
தள்ளாடும், 233.
தாரை - கண், 256.
தியாகராச மூர்த்தி, 84.
திரிபதகை, 50.
திருஞான சம்பந்தமூர்த்தி நாயனார் என்பைப் பெண்ணாக்கியது, 155.
திருத்தொண்டர் கூட்டத்திற்குப் பாற்கடல் உவமை, 87.
திருமால், 1.
திருமால் பதினாறாயிரம் மனைவி மாரை யுடையவரென்பது, 264.
திருமாலாகிய இடபம், 35, 98, 121, 264.
திருமாலும் கண்ணப்ப நாயனாரும் கண்ணைச் சாத்தியது, 203.
திருமுகம் அனுப்புவோர், 36.
தெள் - தெண்மை, 3.
தென்வரை, 261.
தேர்ப்பவனி, 205, 220.
தேவர் சோலையாக ஆனது, 8-9.
நகுடன் வானரசு நாடி மகம் செய்தது, 152.
நவசித்தர், 105.
நாகசுனை, 28, 138, 151.
நாகவனத்தான், 266.
நாட்கொள்ளுதல், 191.
நீற-பொடியாக, 241.
நோய்க்கு மருந்தளிப்பான், 136.
பருந்து, 180, 243.
பச்சைக் கருப்பூரம் சாத்துதல், 69.
பச்சை யுருவம், 7, 118.
பசுவைக் கொன்ற பழியை ஓர் அந்தணனுக்குப் போக்கினது, 29.
படியெடுப்பு, 188.
பவனி, 205, 220.
பிரமதேவன், 1.
புகலியர்கோன், 269.
புற்றிடத்து மண்மருந்து, 25, 111, 136, 182.
புற்றடினிதமர்ந்தான், 162.
புன்னை நிழலில் அம்பிகை தவம் செய்தது, 12.
புன்னைவனம், 6, 18, 29, 31, 137, 143, 149, 162, 204, 214, 266, 283-4, 312.
பூணூலுக்கு நிலவு உவமை, 61.
பேழைச் சடை, 306.
பொது நோக்கு, 154.
மகரயாழ், 115, 215, 218.
மங்கையர்க்கரசி, 276.
மண்டல விழா, 299.
மதனூல், 208, 260.
மறையவன் பொருளை வௌவிய சோழனொருவனது பிணியை இறைவன் தீர்த்தது, 11, 136.
மாதர் எழுவர், 103.
மாலையொரு பக்கத்திருத்தும் பரம் பொருள், 142.
முசுகுந்தன் தியாகராச மூர்த்தியைப் பூமியிற் கொண்டுவந்தது, 84.
முப்பத்து முக்கோடி தேவர், 37.
மூவர், 37, 55, 74, 278-81.
மேரு, 150, 244.
மேருவரை மானதவாவி, 117.
மேருவரையில் வாடை பிறத்தல், 150, 244.
மேருவைச்சூழ்ந்த ஏழு மலைகள், 92.
வடமலையாரம், 299.
வடிந்தகுழை, 166, 192.
வராரசை, 184, 204, 246, 296.
வளையல் விற்ற திருவிளையாடல், 121-2.
வன்மீக நாதனார், 32, 162.
வேய்முத்தை வேண்டி வளர்த்தோன் ஒரு பாண்டியன், 85.



நூல் நிலையம்